July & Aug 1984

Tamil Arasu

தமிழரசு

Vem N84
N84-7
85349

திருவள்ளுவர் ஆண்டு 2015
ரக்தாக்ஷி — ஆனி 18

மாண்புமிகு முதல்வர் அவர்களை மாண்பு மிகு கேரள நீர்ப்பாசன துறை அமைச்சர் திரு எம். பி. கங்காதரன் சென்னையில் சந்தித்தார். அப்போது, மாண்புமிகு தமிழகத் தொழிலாள நலத்துறை அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம், அரசு தலைமைச் செயலாளர் திரு கே சொக்கலிங்கம் ஆகியோர் உடன் இருந்தனர்.

பூவிருந்தவல்லியில் நடைபெற்ற தேசிய வேளாண்மை இடுபொருள் இருவார விழாவில் (14-6-84) பங்கேற்ற மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு காளிமுத்து விவசாயப் பெருமக்களுக்கு இடுபொருட்களை வழங்கினார்.

அம்பத்தூர் தொழிற்பேட்டையில் (15-6-84) நிரந்தரப் பொருட்காட்சியொன்றை மாண்புமிகு சட்ட அமைச்சர் தலைமையில், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு ஆர். அருணாசலம் துவக்கி வைத்தார்.

காயிதே மில்லத் அவர்களின் 89-வது பிறந்த நாள் விழா, நெல்லை மாவட்டத்தில் அவர் பிறந்த ஊரான பேட்டையிலே நடை பெற்றது (10-6 84). மாண்புமிகு பாசனத் துறை அமைச்சர் திரு ஒய். எஸ். எம். யூசுப் தலைமையில், காயிதேமில்லத் அவர்களின் திருவுருவப் படத்தை மாண்புமிகு சுற்றுப்புறச் சூழல் துறை அமைச்சர் திரு எஸ். என். ராஜேந்திரன் திறந்து வைத்தார்.

தகுதிக்குத் தகுதி

இப்போது நுழைவுத் தேர்வை எதிர்க்கிறார்கள்; இதனால் யாருக்கு என்ன நன்மை?

ஆயிரம்-பத்தாயிரம் லட்சம் ரூபாய் என்று லஞ்சம் வாங்கினார்கள் என்றார்கள். இப்போது அதற்கு வழியே இல்லையே. நுழைவுத் தேர்வில் பதில்கள்தான் கொடுக்கப்படுகின்றன. கேள்விகள் இல்லை. அதில் சரியான பதிலை 'டிக்' செய்யவேண்டும். அதாவது கோடு போட வேண்டும். அவன் போடுகிற கோடு அவன் தனக்கே போட்டுக்கொள்கிற கோடு. யாரும் இதில் தலையிட முடியாது. சிபாரிசு பண்ண முடியாது. இதைத் தவறு என்று சொல்பவர்களும் நாட்டில் இருக்கின்றார்கள்,

இதை எதிர்த்தால் ஏழைகளுக்கு எப்படி விமோசனம் கிடைக்கும்?

இந்த அரசைப் பொறுத்தவரை தகுதியானவர்களுக்குத் தகுதியான இடம் இருக்கும்.

—மாண்புமிகு முதல்வர்



நுழைவுத் தேர்வை மகிழ்வோடு வரவேற்கிறேன்

"தொழிற் கல்லூரிகளிலும் மருத்துவக் கல்லூரிகளிலும் மாணவர்கள் சேர நுழைவுத் தேர்வு நடத்தப்படும் என்று தமிழக முதல்வர் அறிவித்து இருப்பதை மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்.

பிற்பட்ட சமூகத்தினிடமும், தாழ்த்தப்பட்ட சமூகத்தினரிடமும் எனக்கு மிகவும் அக்கறையுண்டு. இந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஏழையாகவும், பலவீனமானவர்களாகவும் இருந்து, அறிவாற்றல் உள்ளவர்களாக விளங்கினால் அப்படிப்பட்டவர்கள் முன்னுக்கு வர ஏற்பாடு செய்தால் பிற்பட்ட சமூகம் உயர்ந்த நிலைக்கு வரும்.

இந்த அடிப்படையில்தான் தமிழக முதல்வர் நுழைவுத் தேர்வு முறையை அறிவித்து இருக்கிறார் என்று நினைக்கிறேன்.

வேலூர் மற்றும் பாண்டிச்சேரி மருத்துவக் கல்லூரிகளில் நுழைவுத் தேர்வு நடந்து கொண்டு தானே இருக்கிறது? அதனால் நல்ல பலன் ஏற்படாமலா போய்விட்டது?

நேர்முகப் பேட்டி நடத்துபவர்கள் மனிதர்கள்தானே அவர்களும் சில சமயம் விறுப்பு, வெறுப்பு உணர்வுக்கு ஆளாக நேரிடும். இது நேர்முகப்பேட்டியில் கலந்து கொள்பவரைப் பாதிக்கக்கூடும்.

15ஆம் ஆண்டில் 'தமிழரசு'

'தமிழரசு' இதழ் தனது பதினாறாவது ஆண்டுப் பயணத்தை முடித்துப் பதினைந்தாவது ஆண்டில் அடி எடுத்து வைக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் கூறிக் கொள்கிறோம். எங்களுக்கு தொடர்ந்து ஆதரவளித்துவரும் எழுத்தாளர்கள், விளம்பரதாரர்கள், வாசகர்கள், முகவர்கள் ஆகியோருக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2015
ரக்தாக்ஷி — ஆனி 18
மலர் : 15 இதழ் : 1
1-7-1984

நுழைவுத் தேர்வு முறையால் பிற்பட்ட மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பது தவறு. தகுதிக்கு உரிய இடம் தரக்கூடாதா? பல மாநிலங்களில் இருபோன்ற நுழைவுத் தேர்வு நடத்தப்படுகிறது; சிலர் குறிப்பிடுவதுபோல் பிற்பட்ட மாணவர்களுக்கும், கிராமப்புற மாணவர்களுக்கும் என்று இம்முறையில் அங்கெல்லாம் கூடுதல் மதிப்பெண் தெவும் தருவதில்லை. அப்படி மதிப்பெண் தருவது முறைகேட்டை அதிகரிக்கச் செய்யாதா?

மாண்புமிகு கல்வி அமைச்சர் **திரு. சே. அரங்கநாயகம்**

இந்த நிலை நுழைவுத்தேர்வு முறையில் ஏற்பட வழி இல்லை. மாணவனின் விடைத்தாளை கம்ப்யூட்டர் திருத்தும் என்பதால் தகுதிப்படிதான் மதிப்பெண் கிடைக்கும்.

மேலும் முன்பு இருந்ததைப் போலவே நுழைவுத்தேர்வு முறையிலும் இட ஒதுக்கீடு பின்பற்றப்பட இருக்கிறது. இந்நிலையில் கிராமப்புற மாணவர்கள் நன்றாகப் படித்தால் அவர்களுக்கு உரிய இடம் கிடைத்துவிடும்.

நுழைவுத்தேர்வு முறையை ஆட்சேபிப்பவர்களை அரசியல் ரீதியில் பார்க்கப்போனால் அவர்கள் பிற்பட்ட மக்கள் நலத்திலோ, அவர்களுடைய நிலையை உயர்த்துவதிலோ அக்கறை கொண்டவர்கள் அல்ல என்பது தெளிவு ஆகிறது.

அவர்களுடைய பேச்சைக் கேட்டால் கிராமத்தவர் கிராமத்திலேயே அமுந்திக்கிடக்க வேண்டியதுதான்!

திரு.எம். பக்தவத்சலம்
முன்னாள் முதல்வர்.

நுழைவுத் தேர்வால் பாதிப்பா?

பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் நேர்முகப் பேட்டிக்குப் பதிலாக நுழைவுத் தேர்வு முறையைத் தமிழக முதல்வர் அறிவித்து இருக்கிறார்.

முன்பு இருந்ததை விட இது நல்ல முறை. இதிலே கருத்து வேறுபாட்டிற்கு இடமில்லை.

நேர்முகப் பேட்டியில் வேண்டியவர், வேண்டாதவர் என்ற பாரபட்சம் ஏற்படச் சாத்தியம் உண்டு.

அதனால் ஏற்படும் பாதிப்பு எப்போதும் இருந்து வந்தது. ஆனால் நுழைவுத் தேர்வில் கலந்து கொண்டு எழுதும் மாணவர்களின் அறிவுத்திறனைச் சோதிக்கும் வகையில் வினாக்களுடன் அவற்றிற்கு உரிய விடைகளும் தரப்படும் என்றும் அந்த விடைதான் கம்ப்யூட்டர் மூலம் திருத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இது அறிவுக்கு முதலிடம் ஏற்படுத்தும்.

நுழைவுத் தேர்வு முறையால் பிற்பட்டோர் பாதிக்கப்படுவார்கள் என்று சிலபேர் சொல்கிறார்கள்.

பிற்பட்டோருக்கு இப்போதுள்ள இட ஒதுக்கீட்டுச் சலுகை நுழைவுத் தேர்வு முறையிலும் பின்பற்றப்படும் என்று உறுதி அளிக்கப்பட்டுள்ளது. அப்படி இருக்கையில், பிற்பட்டோர் பாதிக்கப்படுவார்கள் என்று சொல்வது எப்படிச் சரியாகும்?

பிற்பட்டோரில் பலர் இன்று நல்ல வசதியுடன் வாழ்கிறார்கள். அப்படி இருந்தும் அவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகையைப் பயன்படுத்த முனையும்போது அதே பிற்பட்டோரில் ஏழ்மைநிலையில் உள்ளவர்கள் கதி என்னாவது?

நானும் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன்தான். எங்கள் குடும்பத்தில் 2 தலைமுறைகளாகவே எல்லோரும் பட்டதாரிகளாக இருந்து வருகிறார்கள். நாங்களும் எங்களுக்கு வழங்கப் பட்டுள்ள சலுகையைப் பயன்படுத்திக் கொண்டால் அது எப்படிச் சரியாகும்?

பன்னிரெண்டாம் வகுப்பில் தேர்வு எழுதி அதற்கான மதிப்பெண்கள் பெற்றுவிட்ட பிறகு மீண்டும் ஒரு எழுத்துத்தேர்வு எதற்கு என்று கேட்பவர்களுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புவது - இந்தக் கேள்வி முறை வேறு; நுழைவுத் தேர்வில் பின்பற்றப்பட உள்ள கேள்விமுறை வேறு என்பதுதான்.

பள்ளிகளில் மாணவர்கள் எழுதும் விடைத்தாள்களைப் பலபேர் திருத்துகிறார்கள், அதனால் மதிப்பெண்களில் வித்தியாசம் ஏற்பட இடமுண்டு.

ஆனால் நுழைவுத் தேர்வு முறையில் கேள்வியுடன் பதில்கள் தரப்பட்டு இருக்கும். சரியான விடை எது என்று கண்டுபிடித்து 'டிக்' அடிப்பது மட்டுமே தேர்வு எழுதும் மாணவனின் வேலை! இந்தவிடைத்தாளை கம்ப்யூட்டர் திருத்தும் எனப்படுவதால் ஏறுமாறாக மதிப்பெண் கிடைக்க இடமில்லை.

நுழைவுத் தேர்வுமுறையால் கிராமங்களில் வாழும் பிற்பட்ட மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று சிலர் கூறுகிறார்கள். அவர்களுடைய நலனுக்காகத் தமிழக முதல்வர் வருடாந்திர வருமானம் 9 ஆயிரம் ரூபாய் என்ற முறையை அறிவித்தார். அப்போது அவர்கள் அதை எதிர்த்தது ஏன்?

கிராமத்தில் வாழும் நபரின் வருவாய் மற்றும் அவர் ஈடுபட்டிருக்கும் தொழில் ஆகியவற்றைக் கொண்டே அவர் பிற்படுத்தப்பட்டவரா என்று தீர்மானிக்க வேண்டும் என்பதே என்னுடைய கருத்து. அவருக்குத்தான் பிற்பட்டோருக்குரிய சலுகை தரப்படவேண்டும்.

சிலர் அறிவித்துள்ள போராட்டம் வெறும் அரசியல் அடிப்படையிலான போராட்டமே தவிர உண்மையான பிரச்சினைகளுக்கான போராட்டம் அல்ல.

புதிய நுழைவுத் தேர்வு முறையின் காரணமாக எவ்விதப் பாதிப்பும் ஏற்பட இடமில்லை.

திரு. சி. சுப்பிரமணியம்
(முன்னாள் மத்திய அமைச்சர்)

நுழைவுத் தேர்வால் நன்மை

நுடப்புக் கல்வி ஆண்டில் இருந்து தொழில் பயில் கல்லூரிகளில் சேரும் மாணவர்களுக்கு நுழைவுத்தேர்வு நடத்துவது என்று தமிழக அரசு உத்தேசித்து இருப்பதைத் திராவிடர்கழகம் மற்றும் தி.மு.க.தலைவர்கள் கடுமையாக ஆட்சேபித்து இருக்கிறார்கள்.

காங்கிரஸ் ஆட்சி காலத்திலிருந்தே தொழில் பயில் கல்லூரிகள் அல்லது அரசுப் பணிகளில் சேர பின்பற்றப்பட்டுவரும் நேர்முகப் பேட்டி முறை பல்வேறு நிர்வாகச் சீர்கேடுகளுக்கும் இடமளித்திருப்பதை யாரும் மறுக்க முடியாது.

ஆட்சியில் அமர்ந்திருக்கும் அரசியல் கட்சியைப் பொறுத்து அதில் வித்தியாசம் இருக்கும்.

மிகச் சிறந்த மாணவர்களைத் தவிர மற்றவர்கள் தொழில் பயில் கல்லூரிகளிலும், அரசின் முதல் மற்றும் இரண்டாம் பணி நிலைகளிலும் சேர எந்தெந்த முறைகள் எல்லாம் கையாளப்படுகிறது என்பது தெரிந்த விஷயம்.

நேர்முகப் பேட்டி முறையால் ஏற்படும் நிர்வாகச் சீர்கேடுகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க நுழைவுத் தேர்வு முறையைக் கொண்டு வருவதுதான் அரசுக்கு உள்ள ஒரே வழி ஆகும். இதில் இரண்டு கருத்துக்களுக்கு இடம் இருக்க முடியாது.

இது நீண்டகாலமாக எதிர்பார்த்து இருந்த சீர்திருத்தம் ஆகும்.

உயர் அதிகாரிகளின் குழந்தைகள் மற்றும் பணக்காரர்கள், அரசியல் கட்சியினர் ஆகியோர் இந்த ஒதுக்கீடு செய்யப்படும் கோட்டாவில் அதிகபட்ச இடத்தை எடுத்துக்கொள்வதற்கு இடமளிக்காமலும் பெரிய நகரங்கள் மற்றும் கிராமங்களிலிருந்து ஆஜராகும் மாணவர்களுக்கிடையே உள்ள இடைவெளி மிகக் குறைந்த அளவே உள்ளவாறு குறைப்பதற்கும் இந்த முறை வழிவகுக்கும்.

சட்டசபை வாக்குவாதத்தில் கல்வி அமைச்சர் அரங்கநாயகம் பேசுகையில் பின்தங்கிய வகுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டுவரும் 50 சதவிகித ஒதுக்கீடு கோட்டா முறை மிகத் தீவிரமாகப் பின்பற்றப்படும் என்று உறுதி அளித்துள்ளார்.

நுழைவுத் தேர்வு கம்ப்யூட்டர் மூலம் மதிப்பிடப்பட்டு முடிவுகள்

சிறந்த முறை

தகுதியின் அடிப்படையில் மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு நுழைவுத் தேர்வு மூலம் தேர்ந்தெடுப்பதுதான் சிறந்த முறையாகும். இந்த நுழைவுத் தேர்வுமுறை, சுலபமாக மாணவர்கள் எளிதில் புரிந்துகொண்டு தேர்வில் வெற்றி பெற ஏதுவாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்ற உண்மையையும் குறிப்பிடத்தான் வேண்டும்.

— திரு ஜி.ஆர். தாமோதரன்,
கல்வி நிபுணர்

அறிவிக்கப்படும் என்று பத்திரிகைகள் வாயிலாக அறிய முடிகிறது. கம்ப்யூட்டர் முறைப்படி விடைத்தாள்கள் திருத்தப்படும் என்று முதல்வர் உறுதி அளித்துள்ளார்.

அகில இந்திய பின்தங்கிய மக்கள் அமைப்பின் தலைவர் என்ற முறையில் பின்தங்கியவகுப்பினருக்குப் பொருளாதார முறையை (வருட வருமானம் ரூ. 9 ஆயிரம் என்பதை) செயல் படுத்துமாறு தமிழக முதல்வரைக் கேட்டுக் கொள்கிறேன்.

நுழைவுத் தேர்வு முறை என்ற சீர்திருத்த முறையை மருத்துவ, பொறியியற் கல்லூரிகளுக்குக் கொண்டு வருவதை மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதில் நீதி, நேர்மை இருக்க வேண்டும் என்று விரும்பும் ஒவ்வொருவரும் வரவேற்பார்கள்.

திரு இ. பி. ராயப்பா,
ஐ.ஏ.எஸ்.,
முன்னாள் தலைமைச் செயலர்.

* யுகம் யுகமாக இருந்து வருவதாகக் கூறப்படும் ஏற்பாடுகளை நாம், திருத்தி அமைக்க விரும்புகிறோம். மமதை மலைக்கு வேட்டு வைக்கிறோம். நம்மீது சிறு சிறு துண்டுகள் சிதறி விழுந்து, மண்டையைப் பிளக்கின்றன என்றால், நாம் வைத்த வேட்டு, மலையைப் பிளந்து வருகிறது என்று பொருள்! மலையைப் பிளக்கும் காரியத்தில் இறங்கி விட்டு, மலர் தலைமீது விழும் என்று எதிர்பார்க்க முடியாதல்லவா!

—பேரறிஞர் அண்ணா

நம்பிக்கை நட்சத்திரம்

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தில் ஏற்படும் பலன்கள் கல்லின் மேல் எழுத்தாக இருப்பதை, ஏற்கெனவே பல ஆய்வுகள் புலப்படுத்தியுள்ளன. இப்பொழுது மதுரையில் உள்ள காந்தி கிராமப் பல்கலைக் கழகம் நடத்திய ஆய்வும் இதை மெய்ப்பித்துள்ளது.

ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் தலைவர் டாக்டர் பி. எஸ். நாகராஜன் தலைமையில், அந்தப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த திரு என். நாராயணசாமி, திரு ஆர். தண்டபாணி ஆகியோர் இந்த ஆய்வை 6 கிராமங்களில் நடத்தினர்.

ஆய்வு புலப்படுத்தும் ஆணித்தரமான உண்மைகள் :—

* சத்துணவுத் திட்டத்தால் கிராமப்புறப் பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை அதிகமாகியுள்ளது.

* சத்துணவுத் திட்டத்தில் கிராம மக்கள் மிகுந்த அக்கறை செலுத்துவதோடு, தங்களது குழந்தைகளின் எதிர்காலம் இந்தத் திட்டத்தால் சிறப்பாக அமையும் என்று நம்புகிறார்கள்.

* முதியோருக்கு உணவளிப்பதை மக்கள் வரவேற்கின்றனர்.

* குழந்தைகளிடையே சமத்துவ மனப்பான்மை வளர்ந்து வருகிறது.

விண்வெளி சாதனை பயணச்

முதல் அட்டைச் செய்தி

தமிழகம் பாராட்டுகிறது

மலிஷேவ், ஸ்த்ரெகலோவ் ஆகிய இரு சோவியத் விண்வெளி வீரர்களுடன் இந்திய விமானி ராகேஷ்சர்மா எப்ரல் 3இல் சோவியக் நாட்டிலிருந்து சோயூஸ்டி-11 என்ற விண்வெளிக் கலத்தில் புறப்பட்டு, புறவெளியில் ஏற்கெனவே மூன்று சோவியத் விண்வெளி விமானிகளுடன் பூமியை வலம் வந்து கொண்டிருந்த சல்யூத்-7விண்வெளி நிலையத்துடன் இணைந்து, பிறகு சோயுஸிலிருந்து சல்யூத்திற்கு மாறிச் சென்று, அங்கு விஞ்ஞான ஆராய்ச்சிகள் புரிந்து 11.4.'84 மாலை 4.19 மணிக்கு வெற்றிகரமாக பூமியில் வந்திறங்கினார். அந்தச் சாதனையைப் பாராட்டி அவருக்கும் விண்வெளியில் பறப்பதற்குத் தயாராக இருந்த இந்திய வீரர் ரவீஷ்மல்ஹோத்ரா அவர்கட்கும் தமிழக அரசின் சார்பில் வரவேற்பும் பாராட்டும், விருந்தும் 4.6.84 அன்று சென்னையில் வழங்கப்பட்டன.

விண்வெளிவீரர்களை விமான நிலையத்தில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அரசு அலுவலர்கள், அரசியல் பிரமுகர்கள், என்.சி.சி. மாணவ மாணவியர் ஆகியோர் வரவேற்றனர்.

விண்வெளி வீரர்கள் ஆளுநர் மாளிகையில் ஆளுநர் குடும்பத்தினராலும், முதல்வர் குடும்பத்தினராலும் வரவேற்கப்பட்டனர்.

விண்வெளி வீரர்கட்கு, மாலையில் வள்ளுவர் கோட்டத்தில் வரவேற்புக் கூட்டம் மேத்கு ஆளுநர் திரு. எஸ்.எல்.குரானா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைமைச் செயலர் திரு கு. சொக்கலிங்கம் இ.ஆ.ப., வரவேற்புரை நிகழ்த்தினார். சென்னையில் உள்ள ரஷ்ய நாட்டுத் தூதுவர் பாராட்டுரை வழங்கினார்.

நினைவுப் பரிசுகளை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர்.. இந்திய விண்வெளி

வீரர்கட்கு வழங்கிச் சிறப்புரை யாற்றுகையில் குறிப்பிட்ட தாவது:

''விண்வெளி வீரர்களுக்கு இப் பொழுது அளித்து வரும் பாராட்டை இன்னும் சிறப்பாக அளிக்க விரும்பியிருந்தோம். ஆனால் போதுமான கால அவ காசம் இல்லாததால் இது இயல வில்லை. இந்த விண்வெளிப் பய ணத்தின் மூலம் அமரர் நேருவின் கனவு நனவாகி இருக்கிறது. இந்தப் பெருமையை இந்தியா வுக்கு வழங்கிய பொதுவுடை மைப் பூங்காவான ரஷ்யாவின் உதவியை எண்ணிப் பெருமைப் படுகின்றேன்.

"இந்த அறிவியல் முயற்சிக்கு நேருவழியில் நின்று உதவிய பிரதமர் இந்திராகாந்தி அவர் கட்கு நாடு நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறது. அறிவி யல் மேம்பாட்டில் தமிழகத்துக்கு உள்ள ஆர்வத்தை, திறமையை வெளிப்படுத்தவும் இந்தப் பாராட்டு விழா உதவி இருக் கிறது''

சர்மா ஐதராபாத்தில் தொடர்பு லவத்திருந்தவர். மல்ஹோத்ரா சிறிது காலம் தாம்பரத்தில் பணியாற்றியவர்.

''இந்த விண்வெளிப் பயணத் தின் மூலம் இந்தியாவுக்குச்சரி நிகர் பெருமை கிடைக்க காரண மாக இருந்த விண்வெளி வீரர் களைப் பாராட்டுகிறேன்'' என் றார்.

பாராட்டுக்கு நன்றி தெரிவித்து மல்ஹோத்ரா பேசுகையில், "விண் வெளிப் பயணச் சாதனை பாரத நாட்டு மக்களின் அனைவரின் சாதனையாகும்'' என்றார்.

பாராட்டுக்கு நன்றி தெரி வித்து ராகேஷ்சர்மாபேசுகையில், "விண்வெளியில் இருந்தபடி இந்தி யாவைப் பார்த்தபோது ஏற் பட்ட மகிழ்ச்சியை இன்று அளித்த வரவேற்பிலும் காண்கிறேன். விண்கலத்தில் இருந்து மற்றொரு விண்கலத்திற்கு மாறிய நேரத் தில் இந்தியாவைக் காண முடிந் தது. இந்துமாக் கடலையும், கன்னியாகுமரியையும், இலங்கைப் பகுதிகளையும், இமயமலையை யும், அடர்த்தியான அசாம் காடு களையும் பார்க்க முடிந்தது. நான் பார்த்த காட்சிகளை என் னுடைய வாழ்நாளில் மறக்க முடி யாது'' என்றார்.

விழா இறுதியில் செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. நா. கிருஷ்ண பாரதி இ.ஆ.ப.,நன்றி கூறினார்.

துவக்கத்தில் இந்திய விண்வெளி வீரர்கள் தாம்பரத்திலிருந்து வள்ளுவர் கோட்டம் வரை திறந்த ஜீப்பில் வந்தனர். மக்கள் இரு பக்கத்தி லும் மகிழ்வோடு இருந்து வர வேற்றனர்.

வள்ளுவர் கோட்டத்தில் விண் வெளிவீரர் தம்பதியர்கள் தமிழக வருகையின் நினைவாக மரங் களை நட்டனர்.

இரவு தமிழக அரசின் சார்பில் சென்னை ராஜாஜிமண்டபத்தில் நடைபெற்ற விருந்தில் விண்வெளி வீரர்கள் கலந்து கொண்டனர். செல்வி சொர்ணமுகி நாட்டிய நிகழ்ச்சியைக் கண்டு ரசித்தனர் விண்வெளிவீரர்கள். விண்வெளி வீரர்களின் குடும்பத்திற்கு நினை வப் பரிசுகள் வழங்கப்பட்டன. இந்திய விண்வெளி வீரர்களின் தமிழக வருகை வரலாற்றில் சிறப்பு மிக்க நிகழ்ச் சியாகும் என்றால் மிகையாகாது.

அ. மருது

தமிழர்களின் அறியாமை

"தமிழர்கள் கல்வி வாய்ப்பு களைப் பெற வேண்டுமென்ப தற்காக அண்ணாமலைப் பல் கலைக் கழகத்தைத் தோற்று வித்து வளர்த்து வருகின்ற முத்தையாச் செட்டியார் அவர் களின் குடும்பத்தைப் பாராட்ட வேண்டும். செட்டிநாட்டரசரின் திறமை, தகுதி, பண்பு, ஒழுக் கங்களைப் பற்றி இங்கே எடுத்துக் கூறினார்கள். செட்டிநாட்டர சரின் குடும்பத்தை எண்ணிப் பார்த்தால், இப்படிப்பட்ட பணி களைச் செய்துதான் தங்களை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்ற நிலையில் அவர்கள் இல்லை. தமிழ் மொழிக்காக மத்திய அரசையே எதிர்த்துப் போராடினார். தமிழ் இசைக்காக அவர் பாடுபட்டார். எத்த னையோ எதிர்ப்புகளுக்கிடையே யும் அவர் தமிழிசையை வளர்த் தார்'' என்று 16.6.84 அன்று சென்னைகலைவாணர் அரங்கில், நகர மக்கள் சார்பில் சென்னை ஷெரீப் அவர்கள் கூட்டியஇரங்கற் கூட்டத்தில், மறைந்ததமிழிசைக் காவலர் டாக்டர் ராஜா சர் முத்தையாச்செட்டியார் அவர் களுக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் புகழாரம் சூட்டினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட் டார்:

''சில நாட்களுக்கு முன் முத்தையாச்செட்டியார் எனக்கு டெலிபோன் செய்தார். 'என்ன' என்று கேட்டேன்; 'இந்தி மறுபடியும் வரப்போகிறது தயாராக இருங்கள்' என்றார். அவருக்கு என்ன தேவை? உடல் நிலை இடங்கொடாது என்றிருந் தாலும் தமிழ்மீது அளவிட முடியாத பற்றுக் கொண்டிருந் தார். 27 வயதில் சென்னை மாநக ராட்சியின் முதல் மேயரானார். அவரது பணிக்காக மாநகராட்சி வளாகத்தில் சிலை வைக்கப்படும்.

''அவருடைய டிரஸ்ட்டை அரசாங்கமே ஏற்றுக் கொள்ள வேண்டும். என்று சிலர் சொன் னார்கள். நான் முதலமைச்சராக இருக்கும் வரை அதைச் செய்ய மாட்டேன் என்று கூறினேன். இப்படிப்பட்டவர்கள் பற்றி புத்தகம் எழுத வேண்டும். பிற் பட்ட சமூகத்திற்கு இடம் ஒதுக்கி வைத்து இருக்கிறோம். பிற்பட்ட சமூகத்தில் தகப்பன் என்ஜினியர், மகன் டாக்டர், பேரன் வழக் கறிஞர். வசதி மிக்கவர்கள்தான் பெறுகிறார்கள். இன்னொரு பிற்பட்ட சமூகத்தில் தந்தை வண்டி இழுக்கிறான். அவனு டைய மகனும் வண்டி இழுக்கும் நிலையில் இருக்கிறான். இத்த கைய நிலையை முத்தையாச் செட்டியார் ஏற்றுக்கொள்ள வில்லை. வசதியில்லாத-பிற்பட்ட வர்களுக்குக்கல்வி அறிவுகிடைக்க வழி செய்ய வேண்டும் என்ற கருத்தை முத்தையாச் செட்டி யார் கொண்டிருந்தார்".

சென்னை ஷெரீப் திருமதி சரோஜினி வரதப்பன், அண்ணா மலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு சை.வே. சிட்டிபாபு, தொழிலதிபர் திரு டி. சி. கோத்தாரி, முன்னாள் தமிழக முதல்வர் திரு. எம். பக்தவத்சலம், டாக்டர் வி. வைத்யசுப்ரமணி அய்யர், டாக்டர் எம்.வி.எம். அழகப்பன், மாண்புமிகு உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி பு. ரா. கோகுலகிருஷ்ணன், மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு க. இராசாராம், தமிழக சட்ட மன்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு ஹாஜாசெரீப், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் ஆகி யோர், மறைந்த டாக்டர் ராஜா சர் முத்தையாச் செட்டியாரின் பணிகள் குறித்து நினைவு கூர்ந்தார்கள்.

படமும் செய்தியும்

தமிழ்நாடு சட்டமன்ற மேலவைத் தலைவர் டாக்டர் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்களின் 79வது பிறந்தநாள் விழா 26.6.84ல் சென்னை மியூசிக் அகாடமியில் நடைபெற்றது. எம். ஜி. ஆர். அவர்கள், சிலம்புச் செல்வருக்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார். அவர் எழுதி, தூங்கொடி பதிப்பகம் வெளியிட்ட "விடுதலைப் போரில் தமிழகம்" என்னும் நூல் அரசுடைமையாக்கப்பட்டதற்குரிய ஆணையையும்-நூல் யமைக்காக ஒரு இலட்ச ரூபாய்க்குரிய காசோலையையும் சிலம்புச் செல்வரிடம் அளித்தார் மாண்புமிகு முதல்வர்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் தலைமையில், மாண்புமிகு சத்துணவுத் துறை அமைச்சர் திரு ஆர். சௌந்தரராஜன் அவர்கள் முன்னிலையில் 24.6.84ல் கடற்கரை கலைவிழா-குடும்ப நல விழா சென்னையில் நடைபெற்றது. நாடகம், இசை நிகழ்ச்சி நடைபெற்றன.

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் பத்திரப் பதிவுத் துறை

பத்திரப் பதிவுத்துறை 1834ஆம் ஆண்டில் கிழக்கிந்தியக் கம்பெனி காலத்தில் ஏற்படுத்தப்பட்டது. இத்துறை 1864ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் தேதியில் ஒரு தனித் துறையாக உருவாக்கப்பட்டது. ஆனால், பத்திரப் பதிவுத்துறைத் தலைவர் என்ற பெயருடன் இவ்வலுவலகம் 1871ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. 113 ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கிவரும் இத்துறை, முக்கியமாக 1908ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டத்தை (மத்தியச் சட்டம் 16/1908) செயல்படுத்தி வருகிறது. பொதுமக்களின் சொத்துக்கள் தொடர்பான உரிமைப் பத்திரங்களைப் பாதுகாக்கிறது. உழவர்கள் உட்பட பொதுமக்களுக்குப் பத்திரப்பதிவுத் துறை வழங்கும் 'வில்லங்கச் சான்றிதழின்' அடிப்படையிலேயே கடன் வழங்கப்படுகிறது.

பல்வேறு வகைச்சட்டங்களை நிருவகித்தல்.

1908ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தைத் தவிர, பின்வரும் சட்டங்களின் நிருவாகமும் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது:

(அ) 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டம் (1.12.80 முதல்).

(ஆ) தமிழ்நாடு 1975ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டம்

(இ) தமிழ்நாடு 1961ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம்

(ஈ) 1972ஆம் ஆண்டு வணிகம் அல்லாத நிறுவனங்கள் சட்டம் (1.7.81 முதல்)

(உ) 1955ஆம் ஆண்டு இந்து திருமணங்கள் சட்டம்

(i) 1954 ஆம் ஆண்டு சிறப்புத் திருமணங்கள் சட்டம்

(ii) 1936ஆம் ஆண்டு பார்சி திருமணம், திருமண விலக்குச்சட்டம்

(iii) 1872ஆம் ஆண்டு இந்தியக் கிறித்துவத் திருமணங்கள் சட்டம்
1969 ஆம் ஆண்டு பிறப்பு, இறப்புச்சட்டம்

(ஊ) 1932ஆம் ஆண்டு இந்தியக் கூட்டாண்மைச் சட்டம்

(எ) 1886ஆம் ஆண்டு பிறப்பு, இறப்பு மற்றும் திருமணங்கள் சட்டம் (1886ஆம் ஆண்டு மத்திய சட்டம்)

(ஏ) 1961ஆம் ஆண்டு வரதட்சிணைத் தடுப்புச் சட்டம்

— இச்சட்டங்கள் அன்றி ''ஆவணம் எழுதுவோர் உரிமம் வழங்கும் விதிகள்'' மற்றும் ''ஆவண நகல்கள் எழுதும் உரிமம் வழங்கும் விதிகளையும்'' நிருவகிக்கிறது.

இத்துறை காணும் சட்டங்களை நோக்குங்கால், கீழ்க்கண்டவாறு ஒரு மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை பொதுமக்களுக்குச் சேவை செய்து வருகிறது என்பது புலனாகும்.

குழந்தை பிறந்தவுடன் பிறப்பு பதிவு செய்தல்.

பின்னர் கல்லூரிப் படிப்பிற்கும் மேற்படிப்பிற்கும் கடன் பெற விரும்பினால் ஈடு ஆவணங்கள் பதிவு செய்தல்.

இந்து திருமணச்சட்டம் அல்லது தனித் திருமணச் சட்டம் ஆகிய வைகளின்கீழ் திருமணங்களைப் பதிவு செய்தல் அல்லது திருமணங் களை நடத்தி வைத்தல்.

பெண்கள் திருமணங்கள் செய்ய விரும்பும்போது வரதட்சணைக் கொடுமையால் தாமதமானால் அதற்குக் காரணமானவர்களின் மீது வரதட்சணைத் தடைச் சட் டத்தின்கீழ் நடவடிக்கை எடுத்தல்.

சிறுபான்மை சமுதாயமானபார்சி மக்களுக்குத் திருமணம் செய்யவும் தேவையானால் விவகாரத்து செய் வதற்கும் உதவுதல். இந்திய கிறித் துவத் திருமணச் சட்டத்தின் கீழ் திருமணங்களைப் பதிவு செய்த லும், பதிவுகளைப் பாதுகாத்தலும்.

முதல் தலைமுறையிலிருந்து இரண் டாவது தலைமுறைக்கு வரும் போது அந்த குழந்தை பெரியவ ராகும்போது அவருக்குரிய 'பிது ரார்ஜித சொத்துக்களைப் பொறுத்து ஆவணங்களைப் பதிவு செய்தல், அவைகளுக்கு நகல் வழங்குதல்.

சிறு துளி பெருவெள்ளம் என்ற முதுமொழிக்கேற்ப சேமிப்புப் பழக் கத்தை மக்களிடையே ஊக்குவிக்க சீட்டு நிதி நிறுவனங்களைப் பதிவு செய்தல், சீட்டுச் சந்தாதாரர்களின் பணத்தை ஒழுங்காக வழங்க உதவு தல்.

சமூக, பொருளாதார, சமய மற் றும் பொழுதுபோக்கு சங்கங்களை தமிழ்நாடு சங்கங்களின்சட்டத்தின் படி பதிவு செய்தலும், நிருவகித் தலும்.

கூட்டு வணிகச் சட்டத்தின்கீழ் வியாபார நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

வயோதிக காலத்தில் சொத்துக் களைப்பொறுத்து ஏற்பாடு செய்ய இரகசியமாக உயில்களைப் பாது காத்தல், உயில் ஆவணங்களைப் பதிவு செய்தல்

மனிதன் இறந்து விட்டால் அதன் பதிவையும் செய்கிறது.

இந்திய முத்திரைச் சட்டம்.

(அ) 1.12.'80 முதல், வருவாய் வாரியம் கலைக்கப்பட்டது. பதிவுத் துறைத் தலைவர் முக்கிய வருவாய் கட்டுப்பாட்டு அதிகாரியாக நியமிக்கப்பட்டு, வருவாய் வாரியம் ஆற்றிய பணிகளை ஆற்றி வருகிறார். பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்தில் தனியாக ஒரு பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

(ஆ) மேற்படி சட்டமும் மற்ற சட்டங் களும் பதிவுத்துறையால் நிருவகிக்கப்படுவ தால் துணைப் பதிவுத் துறைத்தலைவர் தரத் தில் ஒரு சட்ட அலுவலர், பணியாளர் களுடன் 1.8.'81 முதல், பதிவுத் துறை அலு வலகத்தில் நியமிக்கப்பட்டு, பணிபுரிந்து வரு கிறார்.

(இ) முத்திரைச் சட்டத்தின்கீழ் கட்ட டங்களின் அங்காடி மதிப்பினை நிர்ணயிப்ப தற்காக உதவி நிருவாகப் பொறியாளர் பணி புரிந்து வருகிறார்.

(ஈ) முத்திரைத்தாள் விற்பனையாளர் களை நியமிக்கும் அதிகாரம் வட்டாட்சி யருக்குப் பதிலாக மாவட்டப் பதிவாளர் களுக்கு 10.11.'82 நாள் அரசாணைப்படி வழங்கப்பட்டுள்ளது.

(உ) சொத்துக்கள் மதிப்பு நிர்ணயித்து வழிகாட்டிப் பதிவேடுகள் 1981ல் தயாரிக்கப் பட்டன. இந்தச் சந்தை மதிப்பின் மாற்றத் தால் கீழ்க்கண்டவாறு அரசுக்கு முத்திரைத் தீர்வை வருவாய் கிடைத்துள்ளது.

1980 —81	ரூ 53.96 கோடி
1981 —82	ரூ 64.98 கோடி
1982 —83	ரூ 74.42 கோடி
1983 —84	ரூ 90.22 கோடி

(ஊ) அனைத்து சார்பதிவகங்களிலும், நீதித் துறை சார்பற்ற முத்திரைத்தாள்களும், நீதி மன்றக் கட்டணவில்லைகள், நீதிமன்ற முத் திரைத் தாள்களும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

(எ) முத்திரைத் தாள்கள் கிடைக்கப் பெறாமல் ஆவணங்கள் எழுதுவது நடைபெறக் கூடாது என்பதற்காக அடமானம், கிரையம், தானசெட்டில்மெண்டு, பரிவர்த்தனைபோன்ற முக்கிய ஆவணங்களை வெற்றுத்தாளில் எழுதி பதிவுக்குத் தாக்கல் செய்யும்போது முத்திரைக் கட்டணத்தைப் பணமாக வசூலித்து இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 41ன்படி சான்று செய்யவும் சார்பதிவாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.



சீட்டு நிதிகள் சட்டம்.

சீட்டு நிதி கூடுதல் இயக்குநர் துணைப் பதிவுத்துறை தலைவர் தரத்தில் பணி யாற்றுகிறார். சீட்டு நிதி ஆய்வு அதிகாரி சென்னையில் உள்ளார். சீட்டு நிதிகள் மற்றும் சங்கங்கள் சட்டங்களை நிருவகிக்க 41 சார் பதிவாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(அ) 1982-83ஆம் ஆண்டின் இறுதியில் மொத்தம் 19,001 சீட்டு நிதிகள் இயங்கின. 1979-80ஆம் ஆண்டு இறுதியில் மொத்தம் 10,668 சீட்டு நிதிகள் இருந்தன. 1982-83ஆம் ஆண்டின் இறுதியில் சீட்டு நிதி நிறுவனங்கள் பதிவாளரிடம் மொத்தம் 21.74 கோடி ரூபாய் பிணைய வைப்புத் தொகையாக இருந்தது. 1979-80ஆம் ஆண்டின் இறுதியில் இத்தொகை ரூ.12.53 கோடியாக இருந்தது.

(ஆ) சீட்டு நிதியில் சேருபவர்களின் நல னைப் பாதுகாக்கும் பொருட்டு சட்டப்படியான விதித்துறை களுடன் கூடிய 1982ஆம் ஆண்டு மத்தியச் சீட்டு நிதிகள் சட்டத்தை மத்திய அரசு 13.4.'84 முதல் இம் மாநிலத்தில் செயலுக்குக் கொண்டு வந்துள்ளது. இச்சட்டம் தமிழ்நாடு 1961ஆம் ஆண்டு சீட்டு நிதி நிறு வனங்கள் சட்டத்திற்குப் பதிலாகச் செயல்படும்.

தமிழ்நாடு சீட்டு நிறுவனத்தின் தோற்றம்.

1956ஆம் ஆண்டு நிறுவனங்களின் சட் டத்தின் கீழ் 11.1.1984 ஆம் நாளன்று பதிவு செய்யப்பட்டுள்ள சீட்டு நிறுவனம், சீட்டுக் களை வெளியிடுவதற்கான தொடக்க ஏற்பாடு களைச் செய்துவருகிறது. இந்நிறுவனம் தொடங்கும் சீட்டுகளில் பொதுமக்கள் அரசுப் பணியாளர்கள், ஓரளவு அரசுத் தன்மை வாய்ந்த பணியாளர்கள் ஆகியோர் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

பதிவுத்துறையில் முன்னேற்றம் :

(அ) பதிவத்துறை நிர்வாகத்தினைச் செம்மைப்படுத்து பெரிய பதிவு மாவட்டங் களைப் பிரித்து, கூடுதல் மாவட்டங்கள் ஏற் படுத்தப்படுகின்றன. 1980-81ல் 40 பதிவு மாவட்டங்களே இருந்தன. இரண்டு இரண் டாக ஒவ்வொரு ஆண்டும் பதிவு மாவட்டங்கள் திறக்கப்பட்டு, 1983-84ல் மொத்தம் 46 பதிவுமாவட்டங்கள் உள்ளன.

(ஆ) இதனைப் போன்றே 1980-81ஆம் ஆண்டில் நம் மாநிலத்தில் 435 சார்பதிவகங் கள் இருந்தன. 1981-82ல் 15 சார்பதிவகங் களும்; 1982-83ல் 30 சார்பதிவகங்களும்; 1983-84ல் 30 சார்பதிவகங்களும் திறக்கப்பட்டு தற்போது 510 சார்பதிவகங்கள் தமிழ்நாட் டில் உள்ளன. மூன்று ஆண்டுகளில் 75 சார் பதிவகங்கள் திறக்கப்பட்டுள்ளன. தற்போது பத்திரப் பதிவு கிளை அலுவலகங்கள் உட்பட 556 பத்திரப் பதிவு அலுவலகங்கள் உள்ளன. இந்தப் பதிவகங்களில் பல, பொதுமக்களின் நன்மையைக் கருதி மலைப் பகுதியிலும், கிரா மங்களிலும் கூட திறக்கப்பட்டுள்ளன. 1984-85ஆம் ஆண்டில் 4 புதிய சார்பதிவகங்கள் திறக்கப்படும்.

(இ) சிறந்த நிருவாக நலனுக்காக 1982 முதல், பதிவுத் துறை நான்கு மண்டலங் களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மண்டல மும் ஒவ்வொரு துணைப் பதிவுத் துறைத் தலைவரின் கீழ் இயங்கி வருகின்றது.

(ஈ) கூடுதல் சீட்டு இயக்குநர், சட்ட அலுவலர், முதுநிலைக் கணக்கு அலுவலர் உதவி நிர்வாகப் பொறியாளர் மற்றும் துணை காவல் கண்காணிப்பாளர் (கண்காணிப்புப் பிரிவு) பணியில் உதவி செய்கிறவர்.

(உ) சார்பதிவகங்களில் கணக்குகளைத் தணிக்கை செய்ய 24 மாவட்டப் பதிவாளர் களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(ஊ) பத்திரங்களின் நகல்களை விரைவில் அளிக்க 15 நகல் எடுக்கும் இயந்திரங்களும் மற்றும் 42 தட்டச்சுகளும் சில அலுவலகங் களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும்

இதனைப் படிப்படியாக விரிவாக்கக் கருதப் பட்டுள்ளது.

(எ) பகுதி II திட்டத்தின் கீழ் இள நிலை உதவியாளர்கள் புதிதாக நியமிக்கப்படு கின்றனர். வேலைப்பளு மிகுவதால் பொது மக்களின் பணிக்கு ஊறு நேரக்கூடாதுஎன்னும் கருத்தில் இத்துறையில் பன்னெடுங்காலமாகத் தற்காலிகப் பிரிவு எழுத்தர்கள் எனும் ஒரு பிரிவினர் பணி செய்து வருகின்றனர். இவர் களின் பணி நிரந்தரம் அற்றது. ஆதலின், ஓய்வு ஊதியத்திற்கு இவர்கள் உரியவர்கள் அல்லர். ஆனால் இளநிலை உதவியாளர்களின் பணிக்கு ஒத்த பணியினை இவர்கள் செய் வதைக் கருத்தில் கொண்டு, மற்றைய அரசு ஊழியர்கள் பெறும் பயன் அனைத்தும் இவர்கள் பெறும் பொருட்டு, 329 தற்காலிக தகுதி வாய்ந்த பிரிவு எழுத்தர்கள் பதவிகளை அரசு இளநிலை உதவியாளர் பதவியாக உயர்த்தியுள்ளது. இன்னும் 130 தகுதியற்ற தற்காலிகத் (எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு பெறாத) பிரிவு எழுத்தர்கள் பணிபுரிகின்றனர்.

(ஏ) ஒரு சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவணங்களை ஒழுங்குபடுத்த ஆவண எழுத் தர் ஒருவரும், முக்கியமான மேற்படி ஆவ ணங்களைப் பாதுகாக்க இரவுக் காவலர் ஒரு வரும் நியமிக்கப்பட்டு வருகின்றனர். இந் நிலையில் ஒரு சார்பதிவகம் அடக்கமான அலு வலகம் ஆகிறது.

(ஐ) தொலைபேசிகள், ஊர்திகள், பொது மக்கள் உட்கார நாற்காலி முதலியவை வழங் கப்படுகின்றன.

ஆவணங்கள் எழுதுவோர் உரிம விதிகள் :

விதிகளின் கீழ் 31.12.83 ஆம் நாள்வரை வழங்கப்பட்டுள்ள உரிமங்களின் விவரம் வரு மாறு:

மாநில உரிமங்களின் எண்ணிக்கை	1,211
மாவட்ட உரிமங்களின் எண்ணிக்கை	4,756
துணை மாவட்ட உரிமங்களின் எண்ணிக்கை	3,221
மொத்தம்	9,188

மொத்தம் ரூ. 7,59,950 உரிமக் கட்டண மாக வசூலிக்கப்பட்டுள்ளது.

இந்த சில ஆண்டுகளுக்குள் பொதுமக்க ளுக்குத் தொண்டு செய்யும் சிறந்த துறை யாகப் பதிவுத்துறை செயல்பட்டு வருகிறது.

கடலிலிருந்து மின்விசை உற்பத்தி

கடலில் பொதிந்திருக்கும் சக்தியைப் பயன்படுத்தி மின் விசை உற்பத்தி செய்யும் சாத்தியப்பாடு பற்றிய ஓர் அறிக்கையை, சோவியத் விஞ்ஞானப் பேரவையின் கடல் இயல் கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகளின் குழு ஒன்று லெனின் கிராடில் வெளியிட் டுள்ளது.

உலக மாக்கடல்களிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு 100 மில்லி யன் / மில்லியன் கிலோவாட் மின்சக்தியை உற்பத்தி செய்ய முடியுமென்று அவர்கள் மதிப் பிடுகின்றனர். கடல் நீர் ஆழத் தின் பல்வேறு நிலைகளிலும் வெப்பநிலை வேறுபடுகிறது. இந்த வேற்றுமை அலைகள், கடல்-எழுச்சி, ஆற்று நீர் கடலில் கலக்கும் இடத்தில் ஏற்படும் அழுத்த வேறுபாடு, கடலில் ஏற்படும் நீரோட்டம் முதலிய சக்திகளைப் பயன் படுத்தி மின்விசையை உற்பத்தி செய்யலாம் என்பது விஞ்ஞானி களின் கருத்து.

—சோவியத் செய்தி நிலையம்

ரயில் பெட்டித் தொழிற்சாலைக்கு நவீன கம்ப்யூட்டர்

பெரம்பூர் இணைப்பு ரயில் பெட்டித் தொழிற்சாலையில் 4-ஆம் தலைமுறையைச் சேர்ந்த பெரிய கம்ப்யூட்டர் ஒன்றை வாங்கியிருக்கிறார்கள்.

புள்ளி விவரச் சேகரிப்பு மற் றும் தகவல் தொடர்பு பிரிவை நவீனப்படுத்த இந்தத் தொழிற் சாலை இந்தக் கம்ப்யூட்டரை வாங்கியிருக்கிறது. தேவை யான விவரங்களைக் கேட்பவர், ஆலையில் வெகு தொலைவில் இருந்தாலும் அவர் முன் நிற்கும் ஒலித்திரையில் அந்த விவரங் கள் விழும். இப்படி இந்த ஆலையின் நாலாபக்கத்தில் உள்ள ஒலித்திரைகளோடு இணைக்கப்பட்டுள்ள இந்த அதி நவீன கம்ப்யூட்டர் இங்கு ஏற்கெனவே பயன்படுத்தப்பட்டு வந்த 2-ஆம் தலைமுறைக் கம்ப்யூட்டருக்கு ஒய்வு அளித் துள்ளது.

மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர்
திரு இராம. வீரப்பன்

சமூக வனவளர்ச்சியும் பயனும்

மனித குலத்தின் நலனுக்கென இயற்கை அளித்த அருட் கொடை களில் காடுகள் முக்கியமானவை களாகும்.

''அகிலும் தேக்கும் அழியாக் குன்றம்
அழகாய் முத்துக்குவியும் கடல் கள்
முகிலும் செந்நெலும் முழங் கும் நஞ்சை
முல்லைக் காடுமணக்கும் நாடு''

என்ற பாவேந்தர் பாரதிதாசனின் பாடல் தமிழ்நாட்டின் இயற்கை வளத்தையும் காட்டுவளத்தையும் சிறப்பித்துக் கூறுகிறது.

நாட்டில் மக்கள் பெருக்கம் வளர வளர, நாகரிக வளர்ச்சி யின் பெயரால், நகர வளர்ச்சி யின் பெயரால், தொழில் வளர்ச் சியின் பெயரால் காடுகள் கடந்த காலங்களில் கண் மூடித்தனமாக அழிக்கப்பட்டுவிட்டன.

கடந்த நூற்றாண்டு ஆரம்பத் தில் இந்தியத்துணைக்கண்டத்தில் மொத்த நிலப்பரப்பில் 37 விழுக் காடு அளவிற்குக் காடுகள் இருந் தன; அவைகள் வளமான காடு களாகவும் இருந்தன; ஆனால் இன்று 23 விழுக்காடுதான் இந் தியாவில் காடுகள் இருக்கின்றன. அதுவும் தமிழகத்தில் 16 விழுக் காடுதான். அவற்றில் கணிசமான அளவு வளமற்ற வறண்ட காடு கள்; 10 விழுக்காடுதான் வள மிக்க உருப்படியான காடுகளா கத் தேறும் என்ற அவல நிலை யில் தமிழகமுள்ளது.

ஒரு நாட்டின் ஆரோக்கியமான பொருளாதார வளர்ச்சிக்கு அந்த நாட்டின் மொத்த நிலப்பரப்பில் குறைந்தது 33 விழுக்காடு அளவு, காடுகளாக இருக்க வேண்டும் என்பது அறிவியல் அறிஞர்கள் கண்ட முடிவு. இந்தக் குறைந்த பட்ச அளவிற்கும் மிகக் குறை வாக நம்நாட்டில் காடுகள் இருந் ததால், நம்நாட்டின் காட்டு வளத்தினை விரிவுபடுத்துவதற் கும், இருக்கும் காடுகளின் வளத் தைப் பெருக்குவதற்கும் அரசும் அறிஞர்களும் தீவிர சிந்தனையு டன் செயல்பட முனைந்தனர்.

இதன் விளைவாக 1952ஆம் ஆண்டில் இந்திய தேசிய திருத் திய வனக்கொள்கை உருவாக் கப்பட்டது. அதன்படி வளமி ழந்த, ஒதுக்கக் காடுகளிலும் அதற்கு அப்பாலே உள்ள அரசு நிலங்களிலும் கிராம நலக் காடு கள் (Farm Forestry) எழுப்பு வதென இந்தியப் பேரரசு முடிவு எடுத்தது.

இந்தக் கொள்கையைப் பின் பற்றி, சில மாநில அரசுகள், கிராம நலக் காடுகளை உருவாக்கும் முனைப்பில் ஈடுபட்டன. அவை அங்கும், இங்கும் சாலை யோரங்களிலும், கால்வாய்க் கரைகளிலும், சிறு அளவில் மரங் களை நட்டன. பல மாநிலங் களில் இந்தத் திட்டம் வெறும்

கொள்கை அளவிலும் எழுத்தளவிலுமிருந்தது; செயல்படுத்தப்படவில்லை. ஆனால், தமிழக அரசு, கிராம நலக்காடுகள் எழுப்பும் திட்டத்தை 1960 ஆம் ஆண்டிலே முறையாவும், சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் செயல்படுத்தியது.

பொதுப்பணித்துறை, வருவாய்த் துறை இதர துறைகளின் பொறுப்பிலிருந்த ஏரி குளங்களிலும் இதர ஊரக புறம் போக்கு நிலங்களிலும் காடுகளிலும் கிராமநலக் காடுகள் வெற்றிகரமாக எழுப்பப்பட்டன. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியிலே இவ்விதம் கிராம மக்கள் நலனுக்காக நாட்டுப் புறங்களில் உற்பத்தி செய்யப்பட்ட ஊரகக் காடுகளின் (Community Forest) பரப்பளவு 41,561 எக்டேர் ஆகும். 1973 ஆம் ஆண்டில் (National Commission on Agriculture) தேசிய வேளாண்மைக் குழு அரசுக்கு அனுப்பிய தன்னுடைய இடைக்கால அறிக்கையில் சமூக வனவியல் திட்டத்தின் அவசியத்தை வலியுறுத்தியது.

இந்தத் திட்டத்தின் சிறந்த அம்சங்களாவன: அரசுக்குச்சொந்தமான காலிநிலங்கள், புறம்போக்குகள், காடுகள், கால்வாய்கள், சாலையோர நிலங்கள், இருப்புப் பாதை நிலங்கள் போன்ற வெற்று நிலங்களிலெல்லாம், அந்தந்தக் கிராம மக்களுக்குப் பயன்தரும் மரங்களை நட்டு, புத்தம் புதுக் காடுகளை உருவாக்க வேண்டும், இப்பணியில் கிராம மக்களை முடிந்த மட்டும் முழுமையாக ஈடுபாடு கொள்ளச் செய்ய வேண்டும்; சாகுபடிக்குத் தகுதியற்ற தனியார் நிலங்களில், பயன்தரும் மரம் நட்டுத் தோப்புகளை உருவாக்க உதவ வேண்டும்.

தேசிய வேளாண்மைக் குழுவின் மேற்கண்ட பரிந்துரையைப் பின்பற்றி இந்திய அரசு சமூக வனவியல் திட்டத்தைச் செயல்படுத்த மாநில அரசுகளை வலியுறுத்தி வந்தது. எனவே மாநில அரசுகள் இத்திட்டத்தைச்செயல்படுத்த முன்வந்தன. வெளிநாட்டுப் பொருளாதார உதவியுடன் இத்திட்டத்தை அமல்படுத்த பல மாநில அரசுகள் முனைந்தன.

தமிழ்நாடு அரசும் சமூக நலக் காடுகள் வளர்ப்புத் திட்டம் ஒன்றினைத் தயார் செய்தது. மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் தனித்த ஆர்வத்தாலும், தளராத உழைப்பினாலும், சலியாத முயற்சியாலும் சமூக வனவியல் திட்டத்திற்கான பொருளாதார உதவிக்கு வழிவகை காண்பப்பட்டது. இத்திட்டத்திற்குப் பொருளாதார உதவி தர அனைத்துலக சுவீடன் வளர்ச்சி நிறுவனம் முன் வந்தது. இந்த உதவியைப் பயன்படுத்தி தமிழக அரசும் 1981 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சமூக வனவியல் திட்டத்தைச் செயல்படுத்தியது.

இந்தத் திட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னரே சுமார் இருபது ஆண்டுக் காலத்தில் தமிழக வனத்துறை கிராம நலக் காடுகள், வனவிரிவாக்கக் காடுகள் உற்பத்தி செய்தல் எனும் திட்டங்களின் மூலம் 1.75 லட்சம் எக்டர்கள் பரப்பளவில் கிராம நலக் காடுகளை உருவாக்கியுள்ளது.

இவ்விதம் அனுபவ முதிர்வும், செயல் திட்ட வடிவமைப்பும் ஏற்கெனவே கொண்டிருந்தது தமிழ்நாடு வனத்துறை, இந்த முன் அனுபவம் காரணமாக, இந்தியாவிலேயே மிகப் பெரிய திட்டமாகிய 'அகவுதி' (SIDA) உதவி பெற்ற இந்த சமூக வனவியல் திட்டத்தினைச் செயல்படுத்துவதில் எழுந்த இடர்ப்பாடுகளையும் சிரமங்களையும் தமிழ்நாடு வனத்துறை இலகுவாகச் சமாளிக்க முடிந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

அனைத்துலக சுவீடன் வளர்ச்சி நிறுவனத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள தமிழ்நாடு சமூக வனவியல் திட்டம், வடிவமைப்பில் மட்டுமல்லாது, பொருளாதார ரீதியிலும் இந்தியாவிலேயே மிகப்பெரிய திட்டம்.

இந்தத் திட்டம் 1981 முதல் 1991 முடிய பத்தாண்டுகளில் செயல்படுத்தப்படும். மொத்த நிதி ஒதுக்கீடு ரூ. 108 கோடி. முதல் கட்டமாக, முதல் ஐந்தாண்டிலும், இரண்டாவது கட்டமாக மீதி ஐந்தாண்டிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. முதல் கட்டமாக 1981 முதல் 1986 முடியவுள்ள ஐந்தாண்டுக்கு இத்திட்டம் செயல்பட மொத்தம் ரூபாய் 45 கோடி நிதி ஒதுக்கீடு பெற்றுள்ளது.

இத்திட்டத்தின்படி முதல் ஐந்தாண்டுக் காலத்தில் 1,76,450 எக்டர் பரப்பளவுள்ள ஊரகக் காடுகளும் (Block Planting) 6075 கி.மீ. நீளமுள்ள சாலை நிழல் மரங்கள், கால்வாய் மரங்கள், இருப்புப் பாதை மரங்கள் (Strip Planting) எழுப்பப்படவிருக்கின்றன. தவிரவும், கிராமப்புற மக்களுக்கு ஊக்குவிப்பு மர வளர்ச்சித் திட்டத்தின் மூலமும் வனவிரிவாக்கத் திட்டத்தின் மூலமும் தங்கள் நிலங்களிலும் வீட்டுக் கொல்லைகளிலும் நடுவதற்கு இலவசமாகவும், மலிவு விலையிலும் சேர்ந்து வழங்கப்படவிருக்கும் மரக்கன்றுகள் எண்ணிக்கை சுமார் ஐந்து கோடியாகும்.

இம்மாபெரும் திட்டத்தினைச் செயல்படுத்தும் பாங்கினை ஆய்வு செய்து கண்காணிக்கும் பொறுப்பு (Monitoring) வனத்துறைக்கும், அரசுக்கும் தொடர்பில்லாத வெளி நிறுவனங்களிடம் (External agencies) ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதாவது (1) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை (2) காந்தி கிராம, கிராமிய பல்கலை கழகம், (3) அண்ணா நிருவாகக் கல்லூரி, சென்னை (4) பாரதியார் பல்கலைக் கழகம் (5) பாரதிதாசன் பல்கலைக் கழகம் ஆகிய சுதந்தரமாகச் செயல்படும் கல்வி நிலையங்கள் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டுள்ளன. இந்த நிறுவனங்கள் எவ்வித விருப்பும் வெறுப்புமின்றி, சுதந்தரமாகவும், அச்ச உணர்வின்றியும் செயல்படும் தன்மையதாகும். இது போன்ற ஏற்பாடு இந்திய துணைக்கண்டத்தில் இதுபோல செயல்படுத்தப்படும் எந்தப் பெரிய திட்டத்திலும் கிடையாது என்பது இத்திட்டத்தின் சிறப்பான அம்சமாகும்.

சமூக வனவியல் என்றால் என்ன? மக்கள் ஒத்துழைப்புடன் ஊர்ப்புறங்களிலுள்ள காலி நிலங்களிலெல்லாம் மரங்களை நட்டு வளர்ப்பதும், அதில் வரும் பலன்களையும் வளங்களையும் ஊர் மக்களுக்கே கிடைக்கச் செய்வதுமாகும்.

கிராம மக்களுக்குத் தேவையான உழவுக் கருவிகள், பசுந்தாளுரங்கள், விறகு, சிறுதடிகள் மற்றும் மரங்களில் கிடைக்கும் கனிகள், கொட்டைகள், மாப்பட்டைகள், எண்ணெய்வித்துக்கள் கால்நடைகளுக்குத் தேவையான தீவனம் போன்ற எண்ணிறந்த மர வளங்களை கிராமமக்களுக்கு அவர்கள் குடியிருக்கும் ஊர்ப்புறங்களிலேயே கிடைக்கச் செய்வதற்காக உற்பத்திசெய்யப்படும் காடுகளைத்தான் ஊரகக்காடுகள் என்கிறோம்.

நாட்டுப்புறங்களிலும், பட்டி தொட்டிகளிலும் வாழ்கின்ற வேளாண்மைக் குடி மக்களுக்கும், இதர நலிந்த மெலிந்த பிரிவினராகிய, சமுதாயத்தின் பெரும்பான்மையினரின் நலன்களையும் தேவைகளையும் நிரப்பவிருப்பதால் இந்தக் காடுகள் சமூக நலக்காடுகளென்னும் காரணப் பெயரைக் கொண்டுள்ளன. இந்தக் காடுகளின் சொந்தக்காரரும் நிருவகிக்கும் எஜமானரும் சம்பந்தப்பட்ட ஊர் மக்கள்தான்; ஆம், சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றங்கள்!

இத்தகைய சமூக நலக்காடுகளின் திட்டத்தின் தலையாய குறிக்கோள்களாவன :—

மேலே கூறியவாறு கிராம மக்களின் தேவைகளுக்கேற்ற மரங்களை ஊர் புறம்போக்கு நிலங்களிலும் இதர அரசு நிலங்களிலும் நட்டு, கிராம மக்கள் ஒத்துழைப்புடன் ஊரகக் காடுகளை உற்பத்தி செய்வது.

இந்தக் காடுகளில் கிடைக்கும் மர வளங்களை, கிராம மக்களுக்குச் சம அளவில் கிடைப்பதற்கான பணிகளைச் செயல்படுத்துவது.

வேளாண்மைக்கு ஒவ்வாத நிலங்களிலும், கிணற்றுக் சுரைகள் வரப்புகள், பண்ணை, வீடுகளைச் சுற்றியுள்ள காலியிடங்கள் போன்ற தனியார் நிலங்களில் மரங்கள் நடுதல், குறுகிய கால மரப் பயிர் சாகுபடி செய்தல் அதற்குத் தேவைப்பட்ட மரக் கன்றுகளை விநியோகம்செய்தல், அவைகளைப் பயிர் செய்வதற்கான தொழில்நுட்ப அறிவினை உதவுதல் இதுபோன்ற வன விரிவாக்கப்பணிகள் மேற்கொள்ளுதல்.

நாட்டுப் புற ஏழை, எளிய கிராமவாசிகட்குக் கூடுதல் வேலைவாய்ப்புகளை உண்டாக்கித் தருதல்.

இத்தகைய கிராம மக்கள் மேம்பாட்டுப் பணிகள் தமிழக வனத்துறையினரால் 1981-ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு மூன்றாண்டுகள் நிறைவு பெறவிருக்கின்றன. இந்த மூன்றாண்டுகளில் 2.5 இலட்சம் எக்டர் பரப்பளவுள்ள ஊரகக் காடுகள் உருவாக்கப்பட்டுள்ளன. வன விரிவாக்கப் பணிகளின் பலன்கள் 5,000 கிராமங்கட்குக் கிடைத்துள்ளன. பல லட்சக்கணக்கான கிராம மக்கட்கு வேலைவாய்ப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. மற்றும் குடும்பங்கட்கு கிராம சமூக நல ஊழியர் வேலை கொடுக்கப்பட்டுள்ளன. இவைகள் சிறிய அளவு சாதனைகள் என்று சொல்ல முடியாது.

தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம்:

தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் 1.8.74ல் தோற்றுவிக்கப்பட்டது. முந்திரி, உயர்ரக யூகலிப்டஸ், சவுக்குத் தோட்டங்களை வனத்துறையிடமிருந்து, 1974ல் எடுத்துக் கொண்டது. 1982-83ல் இக்கழகம் 2,107 எக்டேர் பரப்பில் கலப்பின ரக யூகலிப்டஸ் மரங்களையும், 771 எக்டேர் பரப்பில் முந்திரித் தோட்டங்களையும் பயிராக்கியது. 1982-83ல் 1,19,550 டன் கலப்பின ரக யூகலிப்டஸ் மரங்களை, இக்கழகம், தொழிற்சாலைக்கு வழங்கியது. இக்கழகம் 1982ல் இதுவரை இல்லாத அளவுக்கு 1,802.857 டன் முந்திரியைச் சேகரித்துள்ளது.

கலப்பின யூகலிப்டஸ் மரம், முந்திரி, காடுபடு சிறு பொருட்கள், அரக்கு முதலியவற்றை விற்பனை செய்ததன் மூலமாக, இக்கழகம் ரூ. 193.51 லட்சம் வருவாய் ஈட்டியுள்ளது. 1983-84-ல் 2,100 எக்டேர் பரப்பில் கலப்பினரக யூகலிப்டஸ் மரங்களையும், 1,200 எக்டேர் பரப்பில் முந்திரித் தோட்டங்களையும் இக்கழகம் வளர்க்கக் கருதியுள்ளது. மேலும் தற்போதுள்ள முந்திரி விளைச்சலை அதிகரிக்கும் பொருட்டு, முந்திரி பயிராகும் 4,000 எக்டேர் பரப்பில், மும்மரத்தோட்டக் கலைப் பணிகளை (Intensive Cultural Operaion) மேற்கொள்ளும்.

இந்தத் திட்டப்பணிகள் அதற்கான குறிக்கோள்களை எய்தும் ரீதியிலும், மன நிறைவளிக்கும் வகையிலும் செயல்படுத்தப்படுகின்றனவா என்று ஆய்வு செய்வதற்காக 'அசுவநி' ஆய்வுக் குழுமம் (SIDA Review Mission) தமிழ்நாட்டிற்கு ஆறு திங்களுக்கொருமுறை வருகை தந்து தீவிர ஆய்வுகளை மேற்கொண்டு ஆய்வு அறிக்கைகளை அரசுக்கும் கொடுக்கின்றது.

அத்துடன் கடந்த பிப்ரவரி (84) திங்களில் 'அசுவநி' ஆய்வுக் குழு இயக்குநர்கள் தமிழ்நாட்டிற்கு வருகை தந்தனர். இந்தக் குழுவில் 'அசுவநி' தலைமை இயக்குநர் சுவீடன் அரசின் முன்னாளைய அமைச்சரொருவர், சுவீடனரசின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தொழில் சங்கத் தலைவர்கள் 'அசுவநி' (சீடா) உயர்மட்ட அதிகாரிகள் அங்கம் வகிக்கின்றனர்.

தமிழகத்திலே பின் தங்கிய இராமநாதபுரம் மாவட்டத்திலும் வளர்ச்சியுற்ற மதுரை மாவட்டத்திலுமுள்ள சமூக நலக் காடுகள் பணிகளை இந்தக் குழுவினர் தணிக்கை செய்து, திட்டப் பணிகளை ஆய்வு செய்தனர். தணிக்கை முடிந்த பின், பத்திரிகையாளர்களுக்குப் பேட்டி கொடுத்தபோது இந்தக் குழுவின் தலைவர் திரு அண்டர்ஸ்போர்சி என்பவர், (Andreforsse) சமூக வனவியல் திட்டம் முழு மனநிறைவளிக்கும் வண்ணம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படுகிறது என்று மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

கிராமப்புறங்களில் நிலவி வரும் கால்நடைத் தீவனம், எருத்தழை, விறகு போன்ற அத்தியாவசியத் தேவைகளின் பற்றாக் குறைகளைப் போக்க இத்திட்டத்தின் வாயிலாக நல்லதொரு முயற்சி மேற்கொள்ளப் படுகிறது.

ஆண்டுக்குச் சுமார் ஆயிரம் படித்த இளைஞர்கட்குக் கிராமச் சமூகநல ஊழியர் வேலை கொடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டப் பணிகள் பெரும் வனக்குத்தகைதாரர் மூலம் நிறைவேற்றப்படாமல் கிராம மக்களைக் கொண்டு செயல் படுத்தப்படுவதால் கிராம மக்களுக்கு வேலை வாய்ப்புகள் விரிவு படுத்தப்பட்டுள்ளன.

இயற்கை வள அழிவினால் ஏற்பட்டுள்ள சுற்றுப்புறச் சூழல் அழிவினைத் தடுக்கவும், ஏற்கெனவே அழிந்து சிதைந்து வரும் இயற்கை வளத்தினை மீட்கவும் இத்திட்டம் துணை புரிகிறது.

தேயிலைத் தோட்டக் கழகம்.

வனத்துறையிடமிருந்து 1976ல் சுமார் 945 எக்டேர் தேயிலைத் தோட்டத்தை எடுத்துக் கொண்டு, தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் தோற்றுவிக்கப்பட்டது. படிப்படியாக அமைந்த திட்டத்தின்கீழ், கூடுதல் பரப்பில், மேற்கொண்டும் தேயிலையைப் பயிராக்கியுள்ளது.

தற்போது 2,394 எக்டேர் பரப்பில் தேயிலை பயிராகிறது. 1982-83ல் இக்கழகம், தேயிலைத் தூள் முதலியவற்றை விற்பனை செய்வதன் மூலம் ரூ. 495 லட்சம் வருமானம் ஈட்டும். வருவாய் தொடர்பான செலவுகள் சுமார் ரூ. 566 லட்சமாகும். 1983ல் சுமார் 100 எக்டேர் பரப்பில் தேயிலை பயிரிடப்படும். தேயிலைத்தோட்டங்களில் 1982-83ஆம் ஆண்டிற்கான தேயிலைத் தளிர் உற்பத்தி 11,524 டன் ஆகும். தற்போது ஆண்டொன்றுக்குச் சராசரியாக 27 லட்சம் கிலோ கிராம் தேயிலைத் தூள் தயார் செய்யப்படுகிறது.

இக்கழகம், 30.9.1982ஆம் நாளிலிருந்து அமெரிக்கா, சுவிட்சர்லாந்து, கனடா போன்ற வெளி நாடுகளுக்கு நேரடியாகத் தேயிலையை ஏற்றுமதி செய்யத் தொடங்கியுள்ளது. இதுவரை ரூ. 9,38,342 மதிப்புள்ள 45,020 கி.கி. தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

கூடலூரிலுள்ள சேரங்கோட்டில் ஒன்றும், குன்னூரிலுள்ள டைகர் ஹில்ஸில் (Tiger Hills) ஒன்றுமாக, மொத்தம் இரண்டு தேயிலைத் தொழிற்சாலைகள் உள்ளன. சேரம்பாடியில் மேலும் ஒரு தொழிற்சாலை ரூ. 1.40 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது.

1982 டிசம்பர் வரையில் 2,325 ஸ்ரீலங்கா நாடு பெயர்த்தோர் குடும்பத்தினருக்கு இக்கழகத்தில் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்ப்பண்பாடு தழைத்தோங்குகிறது!

மாண்புமிகு கல்வி அமைச்சர்
திரு. செ. அரங்கநாயகம்

அன்னைத் தமிழ் வளரவும், ஆக்கப்பணிகள் மிளிரவும் அரசு வகுத்துவரும் தமிழ்த் திட்டங்கள் வேண்டிய வெற்றிக் கனிகளை நல்கி வருகின்றன.

தமிழ் வளர்ச்சியையும் பண்பாட்டுச் செழுமையையும் பல்வேறு நிலைகளில் ஒருமுகப்படுத்தி நிலையான செயற்பாட்டுக்குத் துணைசெய்யும் வகையில் மாண்புமிகுபுரட்சித்தலைவர்தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறை என்னும்பெயரில் ஒரு புதியதுறையையே 'தலைமைச் செயலகத்தில் தொடங்கியிருப்பது, தமிழ்நாட்டு மக்கள் நெஞ்சில் நின்று நிலைக்கும் பெருஞ்செயலாகும். இப்புதிய செயலகத்துறையில், தமிழ் வளர்ச்சி இயக்ககம், மொழிபெயர்ப்புத் துறை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தமிழ்ப் பழங்கலை இயக்ககம், தொல்பொருள் ஆய்வுத் துறை, அகர முதலித் திட்டத்துறை ஆகியவை கொண்டு வரப்பட்டுள்ளன. இத்துறைகள் ஆற்றிவரும் பணிகள் சுருக்கமாக இங்கே விளக்கப்படுகின்றன.

ஆட்சிப் பணிகள் அனைத்தும் தமிழ்:

தமிழ் ஆட்சி மொழியாக அறிவிக்கப்பட்டபின் தமிழ்நாட்டு அரசு அலுவலகங்களில் தமிழிலேயே ஆணைகள், மடல் போக்கு வரவுகள் அனைத்தும் நடைபெறத் தகுந்த கலைச் சொற்களைப் படைத்து நடைமுறைப் படுத்தப்படுவதைத் தமிழ் வளர்ச்சித்துறை நேரில் கண்காணித்து வருகிறது. பொது மக்களுக்கும், அரசுக்கும் தமிழ் மொழியே தொடர்பு மொழியாக அமைய வேண்டுமென்னும் நடைமுறையால் கண் கட்டப்பட்டிருந்த பொது மக்களுக்கு நல்லொளி கிட்டியுள்ளது. இதனால் அரசின் செயற்பாடுகளையும் அன்றாட நடைமுறைகளையும் நேரடியாக மக்கள் புரிந்து கொள்கிறார்கள்.

அலுவலக நடைமுறை மொழியாகத் தமிழ் பயன்படும் வகையில் அரசுத் துறைகளுக்குரிய நடைமுறை நூல்கள், விதிகள், விதித் தொகுப்புகள் போன்றவற்றைத் தமிழ் வளர்ச்சித்துறை வழங்குகிறது. ஆட்சிச் சொல்லகராதி, சிறப்புச் சொல் துணையகராதி போன்றவற்றையும் அச்சிட்டுள்ளது. மாவட்ட நிலை அலுவலர்களின் கருத்தரங்குகளை ஆங்காங்கே நடத்தி ஆட்சி மொழிச் செயலாக்கத்திற்கு இத்துறை வழிவகுத்து வருகிறது.

நலிந்த தமிழ்ப் புலவர்க்கு உதவித் தொகை வழங்கல், தமிழக வரலாற்றை முறையாக வரைதல், சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசளித்தல், நூலாசிரியர்களுக்கு நூல் வெளியீட்டு உதவி அளித்தல் ஆகிய பல துறைகளிலும் தமிழ் வளர்ச்சியியக்ககம் நற்பணி ஆற்றி வருகிறது.

மூவாண்டு முனைப்புத் திட்டம்

• திரு. க. ராமசாமி, மாண்புமிகு முதலமைச்சர் ஜூலை 1983 முதல் தமிழ்வளர்ச்சி இயக்ககத்தின் பரிசினை, ஜூலை 1983 முதல் தமிழ்வளர்ச்சி இயக்ககத்தின் மூலம் பெறுதல்.

தொடங்கியதன் வாயிலாக, அரசு அலுவலகங்கள் அனைத்தும் முழுமையாகத் தமிழிற் செயற்படும் வகையில் முடுக்கப்பட்டிருப்பது தமிழ் வளர்ச்சித் துறையின் சீரிய செயல்களுள் ஒன்றாகும்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்:

உலகெங்கும் தமிழ்வளர்ச்சிக்கு உறுதுணை புரியவும் உலகளாவிய நிலையில் தமிழ் நலம் காக்கவும், வளர்க்கவும், உயர்நிலை ஆராய்ச்சிக்கு வழி வகுக்கவும் இந்நிறுவனம் பல துறைகளின் பலகணியாக அமைந்துள்ளது. ஓலைச்சுவடி ஆய்வு முதல் கண் மருத்துவம் வரை பல்துறை நூல்களையும், இலக்கியத் திறனாய்வு முதல் பண்பாடு, இலக்கியம், வரலாறு உள்ளிட்ட கருத்தரங்குகள் வரை ஆய்வு நூல்களையும், வேற்று நாட்டார் சில நாட்களில் ஆங்கிலம் வாயிலாகத் தமிழ் கற்றுக் கொள்ளப் புதிய அறிவியல் முறையைத் தழுவி அமைக்கப்பட்ட ஒலிச் சுருள்களையும், தொல்காப்பிய உரை விளக்கங்களையும் இத்துறை வெளியிட்டு வருகிறது.

அதியமான் பகுதியில் அருங்கலை ஓவியம் :

பழந்தமிழர் வாழ்ந்த வரலாற்றை ஆய்ந்து அளவிடுவது தொல்பொருள் ஆய்வுத் துறையாகும். பழைய எழுத்துக்களில் உள்ள கல்வெட்டுகளும் ஓலைச் சுவடிகளும், செப்புப் பட்டயங்களும் தொல்பொருள் கருவூலங்களாகும். மூவேந்தர் அரண்மனைகள், வரலாற்றுக்கு முந்தைய மக்களின் கருவிகள், கடலுள் மறைந்த நாகரிகப் பொருள்கள் போன்றவற்றை வரலாற்றுப் புதையலில் கண்டெடுத்து மாசு போக்கித் தூசு துடைத்து மீள்பார்வைக்கு நமக்கு மீட்டுத் தருவதும் தொல்பொருள் ஆய்வுத் துறையின் பணியேயாகும்.

வள்ளல் அதியமான் வாழ்ந்த தருமபுரி மாவட்டத்தில் மகாராசக்கடை என்னும் சிற்றூரையடுத்த குன்றில் 2,000 ஆண்டுகளுக்கு முன் வரையப்பட்ட வெள்ளை வண்ண ஓவியங்களையும் பழைய தமிழ் எழுத்துச் சொற்றொடர்களையும் அண்மையில் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

பழங்கலையும் பண்பாடும்:

ஒரு மாநிலத்து மக்களின் வாழ்வோடும் உணர்வோடும் பழக்க வழக்கங்களோடும் ஊறிப் பரிமளிக்கும் பண்பாட்டுக் கதிர்கள் சிற்றூர்களில் அரும்பி மலர்ந்து நாடெல்லாம் நறுமணம் பரப்புகின்றன. நாட்டுப்புறப் பழங்கலைகளும் பண்பாட்டுக் கூறுகளும் நலிந்து போகாமல் அவற்றின் பொலிவுக்கு வலிவூட்டும் ஊற்றுக்கால்காத் திருக்குறளாரை இயக்குநராகக் கொண்ட தமிழ்ப் பழங்கலை இயக்ககம் திகழ்கிறது.

ஒரு நாட்டின் இரண்டு விழிகளான வரலாறும், மொழியும் பழுதுபட்டாலும், பண்பாட்டுச் செழுமைதான் காலூன்றி எத்தகைய வறட்சியையும் தாங்கிக் கொண்டு மக்களினத்தை இனங்காட்டும் வல்லமை வாய்ந்தது. அந்த நிலையில் பழங்கலை இயக்ககம் பண்பாட்டியலைக் காத்து வரும் பணியேற்றுள்ளது.

அன்னைத் தமிழுக்கு அகரமுதலி :

மொழியின் நலங்காக்கும் சட்ட நூலாக இலக்கணங்கள் அந்நாளில் எழுதப்பட்டன. இக்காலத்தில் அகராதிகள் அப்பணியை ஆற்றுகின்றன. மொழி ஞாயிறு பாவாணர் அகராதிக்கு 'அகரமுதலி' என்ற தூய தமிழ்ப் பெயரிட்டார்.

சொல்லுக்குச்சரியானபொருள் விளக்கம் தருவது அகரமுதலியின் நோக்கம். சொல்லின் திருத்தமான வடிவத்தைக் காட்டுவதும், அச்சொல் எப்படிப் பிறந்தது என்று விளக்கும் வேர்ச்சொல் வரலாறு கூறுவதும், தமிழுக்கும் திராவிட மொழிகளுக்கும் உள்ள உறவை நிலைநாட்டுவதும் பாவாணர் அகரமுதலியின் தனிப் பண்புகளாகும்.

தமிழிலுள்ள கொச்சை வடிவங்களுக்குச் செந்தமிழ் வடிவமும் வேற்றுமொழிச் சொற்களுக்குத் தனித் தமிழ் வடிவமும் காட்டுவதால் இதற்குச் செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகரமுதலி என்று பெயரிடப்பட்டது.

இத்துறையின் அகரமுதலி வண்ணப்பட விளக்கங்களுடன், தமிழில் இதுவரை சேர்க்கப்படாத மூன்றிலக்கம்சொற்களைப் புதிதாகச் சேர்த்துப்பன்னிரண்டு மடலங்களாக வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது. முதல் மடலில் முதற் பகுதி, வரும் செப்டம்பர்த் திங்கள் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளன்று வெளிவரவிருக்கிறது.

நலம் விளைக்கும் மொழிபெயர்ப்பு :

அரசின் நடைமுறைகள் ஆங்கிலத்திலேயே நடைபெற்று வந்ததால் ஆங்கிலத்தில் கூறப்பட்ட செய்திகளை உடனுக்குடன் தமிழ்ப்படுத்துவது இன்றைய நிலையில் பெருந்தேவையாகும். அப்பணியைச் செவ்வனே செய்ய மொழிபெயர்ப்புத் துறை தலைமைச் செயலகத்தில் இயங்கி வருகிறது.

மெத்த வளரும் புத்தம் புதிய கலைகளும் அவை தழுவிய அரசாங்கச் செய்திகளும் தமிழுக்குப் புதியவையாயினும் அவற்றைப் பழுதற எல்லோர்க்கும் விளங்கும் எளிய நடையில் தெளிவும் செப்பமும் மிளிர தமிழ்ப்படுத்துவதும் இத்துறையின் பணியாகிறது.

மொழி பெயர்ப்பது அரிய செயல். எத்தகு வல்லுநரையும் தொடராட்சிகள் மயக்கி விடும். மரபறிந்து மொழி பெயர்ப்பது மொழிபெயர்ப்பாளரின் தனித் திறன். எந்தப் பள்ளியிலும். கல்லூரியிலும் அவற்றைப் பெற முடியாது. மொழி பெயர்ப்புத் துறையிலேயே பல்லாண்டு ஊறித் திளைத்து ஊற்றம் பெற்றாக வேண்டும் என்ற உணர்வோடு இத்துறையும் இயங்குகிறது.

எங்கும் எதிலும் என்றும் தமிழ் என்ற இலக்குடன் இத்துறை பணியாற்றி வருவதோடு மொழியும் பண்பாடும் செழுமையுற்றுத் திகழ்வதற்கான செயல்களையும் மேற்கொண்டுள்ளது.

தமிழ்ச் செயலகத்தில் தமிழுக்கு ஏற்றம்

தமிழ் வளர்ச்சித்துறை, மொழிபெயர்ப்புத் துறை, பழங்கலை இயக்ககம், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகர முதலி, தொல்பொருள் துறை ஆகிய 6 துறைகளின் பொறுப்பையும் கவனிக்கத் தனியாகச்செயலர் ஒருவரை நியமித்துள்ளது அரசு. இதன் மூலம், தலைமைச்செயலகத்தில் தமிழுக்கு ஏற்றம் அளிக்கப்பெறுகிறது. டாக்டர் அவ்வை நடராசன் அவர்கள் தமிழ் வளர்ச்சி,பண்பாட்டுத் துறையின் செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

''வெள்ளையர் ஆட்சிக் காலத்திலிருந்து எந்த அரசும் சாதிக்காத வகையில் தமிழுக்கு இத்தகைய ஏற்றத்தை மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவரின் அரசு அளித்திருப்பது பாராட்டுக்குரியது'' என்று முத்தமிழ்க் காவலர் திரு கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

சிறு துறைமுகங்களின் சாதிய பணிகள்

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்
திரு சு. முத்துசாமி

தமிழ்நாடு வங்காள விரிகுடா, பாக் இடுகடல், மன்னார் வளைகுடா இந்துமாக் கடல், அரபிக் கடல் நெடுக கிழக்கு, தெற்கு, மேற்காக 1,000 கிலோ மீட்டர் நீளத்திற்கு இடையீடில்லாத கடற்கரையைப் பெற்றுள்ளது. இந்தியாவில் இதுபோன்று முப்புறமும் கடல் சூழ்ந்த மாநிலம் வேறெங்கும் இல்லை. இதுவே தமிழகத்தின் தனிச் சிறப்பு எனக் கூறலாம். சென்னையிலும் தூத்துக்குடியிலும் பெரிய துறைமுகங்கள் உள்ளன. இவை மைய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குபவை.

கடலூர், நாகப்பட்டினம் ஆகிய நடுத்தரத் துறைமுகங்களும், இராமேசுவரம், பாம்பன், கீழக்கரை, கன்னியாகுமரி, வாலிநோக்கம், குளச்சல் ஆகிய சிறு துறைமுகங்களும் தமிழ்நாட்டில் உள்ளன. இவை அனைத்தும் தமிழக அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகின்றன.

கடலூர் துறைமுகம் :

இந்தத் துறைமுகத்தில் முக்கியமாக ஏற்றுமதி ஆகும் பொருட்கள் இரும்புக்கனி மற்றும் பொதுச் சரக்குகள், இறக்குமதியாகும் சரக்குகள் உரம் மற்றும் பொதுச் சரக்குகள் ஆகும். 1980-81ல், 1.38 இலட்சம் டன், 1981-82ல்1.69 இலட்சம் டன், 1982-83ல் 2.33 இலட்சம் டன், 1983-84-ல் 1.3 இலட்சம் டன் சரக்குகள் இத்துறைமுகத்தில் கையாளப்பட்டிருக்கின்றன. மற்ற ஆண்டுகளைவிட இந்த நான்காண்டுகளில் கணிசமான அளவுக்குச் சரக்குகள் கையாளப்பட்டிருக்கின்றன என்பது பெருமைக்குரியதாகும்.

சரக்குகளை அடுக்கி வைப்பதற்காக 2,000 டன் கொள்ளளவு கொண்ட இரண்டு சரக்குக் கொட்டகைகள் கட்டப்பட்டுள்ளன. மாற்றுச் சரக்குக் கொட்டகையும் கட்டப்பட்டுள்ளது. இந்தத் துறைமுகத்தின் நீண்ட நாளைய தேவையான ஒரு புதிய கிடங்குக் கொட்டகை ரூ. 1 இலட்சம் செலவில் இப்பொழுது கட்டப்பட்டு வருகிறது. திருட்டுகளைத் தடுப்பதற்காகத் துறைமுகத்தைச் சுற்றிலும் அலைவாய் எல்லைச் சுற்றுச் சுவரொன்று ரூ. 8.19 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது. வலுவூட்டப் பெற்ற கான்கிரீட்டிலான சரக்குக் கையாளப்படும் மேடையின் கீழ், பாறாங்கற்களாலான நீர்த்தடை அமைப்பதற்கு ரூ. 20 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

உந்து விசையற்ற இரு 50 டன் எஃகு சரக்குப் பரிசல்களும், அதே அளவுள்ள ஒரு தண்ணீர் எஃகுப் பரிசலும் ரூ. 9 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளன.

1981-82-ல் துறைமுக உபயோகத்திற்காக 10 டன் திறனுள்ள ஒரு நடமாடும் பாரந்தூக்கி ரூ. 11.12 இலட்சத்திற்கு வாங்கப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம் துறைமுகம் :

இந்தத் துறைமுகத்தில் முக்கியமாக ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள் வெங்காயம் மற்றும் பொதுச்சரக்குகள்; இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் கோதுமை மற்றும் பொதுச்சரக்குகள் ஆகும். 1980-81ல் 41,722

டன்; 1981-82ல் 69,228 டன்; 1982-83ல் 48,871டன், 1983-84ல் 1,11,418டன்சரக்குகள் இத்துறைமுகத்தில் கையாளப்பட்டுள்ளன. இது தவிர, இந்தத் துறைமுகத்தின் வாயிலாக சிங்கப்பூருக்குச் சென்று வருகின்ற பயணிகள் போக்குவரவும் நடைபெறுகிறது. 1980-81-ல் 6281 பயணிகள், 1981-82ல் 6508 பயணிகள், 1982-83ல் 3528 பயணிகள், 1983-84-ல் 3510 பயணிகள் சென்று வந்துள்ளனர்.

இராமேசுவரம் துறைமுகம் :

இங்கு ஆண்டுதோறும் ஒரு இலட்சத்திற்கும் அதிகமாகப் பயணிகள் போக்குவரவு நடைபெறுகிறது. இது மட்டுமின்றி சாஸ்திரி பண்டாரநாயகா உடன்படிக்கையின் அடிப்படையில் இலங்கையிலிருந்து இந்தியா திரும்பும் தாயகம் திரும்புவோர் இந்தத் துறைமுகம் வழியாகவே வருகின்றனர்.

1980-81ல் 1,76,346 பயணிகள், 1981-82ல் 1,83,568 பயணிகள், 1982-83ல் 2,11,667 பயணிகள், 1983-84-ல் 1,50,155 பயணிகள் இத்துறைமுகத்தின் வாயிலாகச் சென்று வந்துள்ளனர். இதில் தாயகம் திரும்பியோர் எண்ணிக்கையும் அடங்கும்.

இந்த ஆண்டில் பயணிகள் போக்குவரத்தில் ஏற்பட்ட குறைவுக்குக் காரணம் அண்மையில் இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரமே யாகும்.

கப்பல்களைக் கரையோரமாக நிறுத்துவதற்காக ஒரு நிலையான - வலுவூட்டப்பெற்ற - கான்கிரீட்டிலான கப்பல் அணையும் மேடை ரூ. 107 இலட்சம் மதிப்பீட்டில் கட்டும் பணி விரைவில் துவக்கப்படும். மேலும் பலவசதிகள் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பாம்பன் துறைமுகம் :

இது ஒரு சிறு துறைமுகம். இங்குள்ள பாம்பன் கால்வாய் வழியாகக் கலங்கள் வழிகாட்டப்படுகின்றன. 1980-81-ல் 50 கலங்களும், 1981-82-ல் 50 கலங்களும், 1982-83ல் 57 கலங்களும், 1983-84-ல் 68 கலங்களும் வழிகாட்டப்பட்டுள்ளன.

இத்துறைமுகத்தில் ரூ. 2.50 இலட்சம் செலவில் பாம்பன் கால்வாய் வழியாகக் கலங்கள் இரவில் சரியாகச் செல்வதற்கென விளக்குகள் பொருந்திய மிதவைகள் அமைக்கும் பணி விரைவில் முடிவுறும்.

குளச்சல் துறைமுகம் :

இங்கிருந்து இல்மனைட் என்னும் மணல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. இந்த ஏற்றுமதி இப்பொழுது கணிசமான அளவில் முன்னேறி உள்ளது. 1980-81-ல் 12,500 டன்னாக இருந்தது 1983-84-ல் 58,297 டன்னாக உயர்ந்துள்ளது. இந்தத் துறைமுகத்தை மேம்பாடு செய்வதற்காக, பொறியியல் பொருளாதார ஆய்வின்படி ரூ. 245 இலட்சம் செலவில் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதற்படியாக 90 மீட்டர் நீளத்திற்கு வலுவூட்டப் பெற்ற கான்கிரீட்டிலான படகு அணையும் மேடை ஒன்று 1984-85-ல் ரூ. 67.14 இலட்சம் செலவில் அமைக்கப்பட உள்ளது.



வாலிநோக்கம் துறைமுகம் :

அண்மையில் அரசு வாலிநோக்கத்தை ஒரு சிறு துறைமுகமாக அறிவிப்புச் செய்துள்ளது. இதன் அடிப்படையில் ரூ. 75 இலட்சம் செலவில் துறைமுகப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இங்குக் கிடைக்கும் உப்பு மற்றும் மற்ற பண்டங்களை மேற்கு வங்கம் மற்றும் அயல்நாட்டுச் சந்தைகளுக்காக ஏற்றுமதி செய்யும் நோக்கத்துடன் வலுவூட்டப் பெற்ற கான்கிரீட்டிலான ஒரு படகு அணையும் மேடை, உத்தேசிக்கப்பட்டுள்ள துறைமுக வளாகத்திற்கான இடத்தைப் பண்படுத்தும் பணி, மற்றும் அந்த இடத்திற்கு அணுகுசாலை அமைக்கும் பணி ஆகியவை தற்சமயம் நடைபெற்று வருகின்றன.

கன்னியாகுமரித்துறைமுகம் :

அனைத்துக்கும் சிகரமாக இந்தக் காலகட்டத்தில் ஒரு சிறப்பான நிகழ்ச்சி இத்துறையில் நடைபெற்றுள்ளதை ஈண்டுப் பெருமையுடன் குறிப்பிடலாம். அதாவது கன்னியாகுமரியில் கடல் நடுவே அமைக்கப்பட்டுள்ள விவேகானந்தர் நினைவுப்பாறைக்குப் படகுப்போக்குவரவினை நடத்திக்கொண்டிருந்த விவேகானந்தா கேந்திரத்தினர் அங்கு ஏற்பட்ட சில பிரச்சினைகள் காரணமாக 1981ஜூலை 20-ஆம் நாளன்று நிறுத்தி விட்டனர். இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் மற்றும் மேல்நாடுகளிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள் இந்தப் படகுப் போக்குவரவு நின்றுபோன காரணத்தினால் விவேகானந்தர் நினைவுப் பாறைக்குச் சென்று வருகின்ற வாய்ப்பில்லாமல் ஏமாந்து போயினர்.

அனைத்து இந்திய சுற்றுலாப் பயணிகள் நலன் கருதி இந்தப் படகுப் போக்குவரவைத் தொடர்ந்து நடத்திட அரசு விரும்பி, அவ்வாறே இந்தப் போக்குவரவு தமிழக அரசின் கட்டுப்பாட்டுக்குக்கொண்டுவரப்பட்டு 2-10-81 முதல் தமிழ்நாடு துறைமுகத் துறையால் நடத்தப்பட்டு வருகிறது. 30-4-1984 வரை 25,64,886 பார்வையாளர்கள் இதன் மூலம் விவேகானந்தர் நினைவுப் பாறைக்குச்சென்று திரும்பியுள்ளனர். இதன் மூலம் ரூபாய் 45,80,666 படகுக் கட்டணமாக அரசுக்கு வருவாய் கிட்டியுள்ளது.

ஆதிதிராவிடர்க்கு உதவும் சிறப்பு உள்ளடக்கத் திட்டம்

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்
திரு. எம். விஜயசாரதி

தமிழ்நாடு அரசு ஆதிதிராவிடர்களின் சமூக - பொருளாதார முன்னேற்றத்திற்காகப் பல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. ஒவ்வொரு துறையும் அதன் வரவு செலவுத் திட்டத்தில் ஆதிதிராவிடர் நலனுக்காக ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலவிட வேண்டும் என வரையறை செய்யப்படுகிறது. இம்மாதிரி வரையறை செய்யும் திட்டமே சிறப்பு உள்ளடக்கத் திட்டமாகும். இத்திட்டம் தமிழ்நாட்டில் 1980-81ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்:

ஆறாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் இம்மாநிலத்தில் உள்ள 9 இலட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்கு மேல் வர உதவுதல்.

ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்குத் தேவையான குடிநீர், கல்வி, மின்வசதி, இணைப்புச் சாலை போன்ற வசதிகளைச் செய்து தரல்.

இம்மாநிலத்தில் உள்ள ஆதிதிராவிடர் மக்களில் பெரும்பாலோர் விவசாயக் கூலிகளாகவும், சிறு விவசாயிகளாகவும் உள்ளனர். எனவே, இவர்களின் முன்னேற்றம் கருதி, பல திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

வேளாண்மை இடுபொருட்கள் 25 சதவிகித மானியத்தில் சுமார் 5 இலட்சம் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. பயிற்சிவழி தொடர்புத் திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கு நவீன விவசாய முறைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. மைய அரசு அளிக்கும் சிறப்பு நிதி உதவியிலிருந்து கடைமடைப் பகுதிகளில் உள்ள ஆதிதிராவிடர்களுக்குச் சொந்தமான நிலங்களுக்குக் கிணறுகள் அமைத்துத் தரப்படுகின்றன.

தமிழ்நாடு குழாய்க் கிணறுக் கழகத்தின் மூலம், ஆதி திராவிடர்களுக்குச் சொந்தமான நிலங்களைக் கண்டுபிடித்து அந் நிலங்களுக்குக் குழாய்க் கிணறுகள் அமைத்துத் தரப்படுகின்றன. உபரி நிலங்களை எடுத்து வழங்கும் திட்டத்தின்கீழ் அளிக் கப்படும் நிதி உதவியைப் (ஒரு எக்டேருக்கு ரூ. 1,000) பெறு பவர்களில் சுமார் 40 சதவிகிதம் ஆதிதிராவிடர்கள் ஆவர்.

கால்நடை வளர்ச்சித் திட் டத்தைப் பொறுத்தவரை பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களில் ஆதிதிராவிடர்களின் உறுப்பினர் களின் எண்ணிக்கை 18%ஆக உயர்த் தப்பட்டுள்ளது. சரியாக இயங் காத ஆதிதிராவிடர் பால் கூட்டு றவுச் சங்கங்களுக்குப் புத்துயிர் அளிக்கவும், அவைகளைப் பால் சேகரிக்கும் தடங்களில் அமைக்க வும் நடவடிக்கைகள் எடுக்கப்படு கின்றன. கறவை மாடுகள் வழங்க அளிக்கப்படும் மானியம் 33 1/3 சதவிகிதத்திலிருந்து 50 சதவிகி தம் ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கால்நடை வளர்ச்சித் துறை யில் கால்நடைகளுக்குத் தேவை யான மருத்துவ வசதியும், அதிக இலாபம் தரும் உயர் இனக்கால் நடைகள் வழங்கவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின் றன. ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பயன்பெறும் 600 குடும்பங்களில் சுமார் 300 குடும்பங்கள் ஆதிதிராவிடர் களாக இருக்க வேண்டும் என அறிவுரைகள் வழங்கப்பட்டுள் ளன. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் ஆதிதிராவிடர்களுக்குப் பாசனக் கிணறுகள் அமைக்கவும், உழவு மாடுகள் வாங்கவும் நிதி உதவி அளிக்கப்படுகிறது.

சிறப்பு உள்ளடக்கத் திட்டத்திற் கான மத்திய சிறப்பு நிதியில் ஆதிதிராவிடர்களின் பொருளா தார மேம்பாட்டுத் திட்டங்கள்:

வேளாண்மைத் தொழில் ஆண்டு முழுவதும் ஆதிதிரா விடர்களுக்கு வருவாய் அளிப்ப தாக இல்லை. எனவே, அவர் களை நிரந்தரமாக வறுமைக் கோட்டினைக் கடக்கச் செய்ய அவர்களது தொழில் முறையை மாற்றியமைப்பது அவசியம் என்று உணரப்பட்டது. ஆதி

திராவிடர் வீட்டு வசதி மேம் பாட்டுக்கழகத்தின் மூலம் மத்திய அரசு அளிக்கும் மத்திய சிறப்பு நிதி இதற்காகச் செலவிடப்பட்டு வருகிறது.

ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்த தொழில் முனைவோர்க்கு ஊக்கம் தரத்தக்க வகையில் எல்லா முயற்சிகளும் மேற்கொள் ளப்படுகிறது. சுயவேலைவாய்ப் புக்கான கிராமப்புற இளைஞர் பயிற்சித் திட்டத்தின்கீழ் ஆங் காங்கே அவர்களுக்குப் பயிற்சி யளிக்கவும் ஏற்பாடு செய்யப்படு கிறது. 1980 முதல் 1983 டிசம்பர் வரை இம்மாநிலத்திற்கு மத்திய அரசு ரூ. 38.56 கோடி மத்திய சிறப்பு நிதியுதவி அளித் துள்ளது.

பல்வேறு கூட்டுத் திட்டங்கள் தொழில் கூட்டுறவுகள் மற்றும் இதுபோன்ற பல திட்டங் களுக்குச் சிறப்பு மத்திய நிதி யிலிருந்து உதவியளிக்கப்படு கிறது. அவற்றுடன் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு நூற்பாலைகள், கல்லுடைக்கும் கூடங்கள், தரை விரிப்பு நெசவுத் தொழில்கள், செங்கல் தொழில் கூட்டுறவுகள், பனைப்பொருட்கள் உற்பத்தி நிலையங்கள், பாய் முடையும் மையங்கள், பனை ஓலை மற்றும் கோரைப்பொருள் தொழில்கள், தோல் பதனிடும் நிலையங்கள், கிராமப்புற நூற்பு மையங்கள், நேபாளி நெசவு மையங்கள் ஆகியவை அடங்கும். அவற்றில் கீழ்க்கண்ட முக்கிய மான கூட்டுத் திட்டங்கள் குறிப் பிடத்தக்கவை:

கைத்தறி மற்றும் துணி நூல்துறை

இத்துறையின் வாயிலாக அநேக திட்டங்களைச் செயல் படுத்த அரசு அனுமதியளித்துள் ளது. இத்திட்டத்தின் வாயி லாக 5151 ஆதிதிராவிடர்கள் பயன் பெறுவர்.

கைத்தறித்துறை மூலம் செயல் படுத்தப்படும் அனைத்துத் திட் டங்களுக்கான திட்டத்தொகை ரூ. 2096.07 இலட்சம் ஆகும். இதில் ரூ. 546.52 இலட்சம் மத்திய சிறப்புநிதியுதவியிலிருந்து மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

தொழில் மற்றும் வணிகத்துறை

இம்மாநிலத்திலுள்ள தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பல் வேறு திட்டங்களை இத்துறை செயல்படுத்தி வருகிறது. இத்துறைபல தொழில்கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பல்வேறு வேலை வாய்ப்புகளை உருவாக்கி 3484 ஆதிதிராவிடர்களைப் பயனடைய செய்துள்ளது. அவைகளில் முக் கியமான தொழில்கள் வருமாறு:

செங்கல் உற்பத்தித் தொழில் சங்கங்கள், பாலிதீன் பைகள் செய்யும் தொழில்கள், தீப் பெட்டித் தொழில்கள், கயிறு உற்பத்தி ஆகிய தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். திட்டத் தொகை ரூ. 167.1510இலட்சம். மத்திய சிறப்பு நிதியுதவி ரூபாய் 76.2310 இலட்சம்.

கதர் மற்றும் கிராமத்தொழில்

இம்மாநிலத்தில் கதர் மற்றும் கிராமத் தொழில் வாரி யத்தின் மூலம் ஆதிதிராவிடர் களுக்கு வேலை வாய்ப்பு அளிக் கும் வகையில் அநேகக் கதர் கிராமத் தொழில்கள் துவக்கப் படடுள்ளன. காலணித் தொழி லாளர் 1,000 பேருக்கு இலவச மாக பங்க் கடைகள் வழங்குதல், கிராம நூற்பு மையங்கள், நேபாளி நூற்பு மையங்கள் மற்றும் இதைச் சார்ந்த தொழில்கள், தமிழ்நாடு பனைப் பொருட்கள் இணையத்தின் மூலம் பனை மற்றும் பனை இலைப் பொருட்கள் உற்பத்தி வளாகங்கள் உருவாக்குதல், பாய் முடையும் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல் ஆகிய இதுபோன்ற திட்டங்கள் இவ்வாரியத்தின் பெரும் திட்டங்களுள் அடங்கும். 1,500 ஆதிதிராவிடர்கள்வேலை வாய்ப்புப்பெறும் வகையில் கை யினால் காகிதம் உற்பத்தி செய் யும் 15 கூடங்களை இவ்வாரியம் அமைத்து வருகிறது. தோல் தொழில் வளாகங்கள் மற்றும் காலணி உற்பத்திக் கூடங்கள் ஆகியவை மற்றும் பெருந்திட் டங்களாகும்.

மொத்த திட்டத் தொகை ரூ363.31லட்சம். மத்திய சிறப்பு நிதியிலிருந்து மானியம் ரூபாய் 356.325 லட்சம். வேலை பெறும் ஆதிதிராவிடர்களின்எண்ணிக்கை 12,860.

கூட்டுறவுத் துறை:

இத்துறையில் கல் உடைக்கும் சங்கம் மற்றும் உழைப்பாளர் குத்தகைச் சங்கம் அமைப்பதில் அரசு தனிக்கவனம் செலுத்து கிறது. இச்சங்கங்கள் மூலம் ஆதிதிராவிடர்கள் ஆண்டு முழு வதும் வேலை பெற்றுப் பயனடை கிறார்கள்.

திட்டங்களின் மொத்த செலவு ரூபாய் 239.06 இலட்சம். இதில் மத்திய சிறப்பு உதவி நிதியில் மானியம் ரூபாய் 172.7575 இலட்சம். இதன் மூலம் பயன் பெறும் ஆதிதிராவிடர்கள் 3192 பேர் ஆவர்.

பால் மற்றும் பண்ணை வளர்ச்சி:

தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர் களுக்கென்று இதுவரை 365 பால் கூட்டுறவுச்சங்கங்கள் அரசு ஏற்படுத்தியுள்ளது. நிதி மற்றும் கருவிகள் போதாமையால் இச் சங்கங்களில் சில, சரியாக இயங்க முடியாமல் உள்ளன. தேவைப் பட்ட சங்கங்களுக்கு முதலீடு மற்றும் கருவிகள் வாங்க, மத்திய சிறப்பு உதவி நிதியிலிருந்து பண உதவி அளிக்கப்பட்டு வருகிறது. இவ்வுதவி மூலம் இச்சங்கங்கள் இலாபத்துடன் செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றன.

கறவை மாடுகள் வாங்க ஆதி திராவிடர்களுக்கு அளிக்கப்படும் மானியம் 33•1/3 சதவீதத்திலி ருந்து 50 சதவீதமாக்கப்பட்டுள் ளது. இம்மானியம் (1) ஒருங்கி ணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட நிறுவனங்கள் (2) ஆதிதிராவிடர் நலநிதி (3) பால் உற்பத்தி பால் பண்ணை வளர்ச்சித் துறை மூலம் ஆதிதிராவிடர் களுக்கு அளிக்கப்படுகிறது. இம் மானியம் மேற்கண்ட நிறுவனம் துறை மூலம் 25 சதவீதம் முதல் 33.1/3 சதவீதம் வரை மட்டும் அளிக்கப்படுகிறது. மீதி மானி யம் மத்திய சிறப்பு உதவி நிதி யிலிருந்து அளிக்கப்பட்டு ஒவ் வொரு ஆதிதிராவிடரும் மொத் தம் 50 சதவீத மானியம் பெற வகை செய்யப்படுகிறது.

கால்நடைத் துறை:

நடப்பு 1983-84-ஆம் ஆண்டில் கால்நடைத் துறை மூலம் கீழ்க் கண்ட திட்டங்கள் செயல்படுத்த திட்டமுள்ளது. இத்திட்டங் களுக்கான செலவில் 50 சதவீதம் மத்திய சிறப்பு நிதியிலிருந்து வங்கிக் கடனாகப் பெறப்படு கிறது.

	பயன் பெறும் ஆதிதிராவிடர்கள்
செம்மறியாடு உற் பத்தித் திட்டம்	1500
தீவன உற்பத்தித் திட்டம்	800
கறி, கோழி உற்பத்தித் திட்டம்	200

நகர வளர்ச்சித் திட்டங்கள்:

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச் சித் திட்டத்தின் மூலம் அநேகக் குடும்பம் சார்ந்த சுயவேலை வாய்ப்புத் திட்டம் கிராமங் களில் செயல்படுத்தப்படுகிறது. ஆனால் இவ்வகைத் திட்டங்கள் நகரங்களில் உள்ள ஆதிதிரா விடர்களுக்கு இல்லை. ஆயினும் 2 அல்லது 3 நகரங்களில் ஆதி திராவிடர்களுக்குச் சுயவேலை வாய்ப்புத் திட்டத்திற்கான உதவி செய்யப்பட்டுள்ளது.

உதாரணமாக, கடலூர் நகரத்தில் கள்ளச் சாராயம் உற்பத்தி செய்த 93 ஆதிதிராவிடர்களை வழி திருப்பி, ஒவ்வொருவருக்கும் 2 கறவை மாடுகள் வழங்கப்பட்டு சுயவேலை அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஆதிதிராவிடர்களுக்குப் பலவிதமான திட்டங்களுக்கு இது வரை ரூ.8.28 இலட்சம் மத்திய சிறப்பு உதவி நிதியிலிருந்து அளிக்கப்பட்டது. கூடிய வரை அனைத்துக் குடும்பங்களும் ஒன்றிற்கு மேல் தொழில் திட்டம் பெற்றுள்ளன. மொத்தத்தில் 216 பேர் அடங்கிய 93 குடும்பங்களும் பயன்பெற வழி செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்த நகரத்தில் 260 ஆதிதிராவிடர்களுக்குச் சைக்கிள் ரிக்ஷா வண்டிகள் ரூ. 3.90 லட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

சென்னையில் 31 இந்து ஆதிதிராவிடர்களுக்கு மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்ஷா வண்டிகள் மத்திய சிறப்பு நிதி உதவி மூலம் வழங்கப்பட்டுள்ளது. சென்னையில் ஆதிதிராவிடர்களுக்குப் பரிசோதனைச்சாலையில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

கூட்டுக்கிராம வளர்ச்சித் திட்டம்:

மாநிலத்தில் பின்தங்கிய 15 வட்டாரங்களில் கூட்டாக உள்ள கிராமங்களில் வாழும் 15,000 ஆதிதிராவிடர் குடும்பங்கள் பொருளாதார மேம்பாடடைய சகல உதவிகளும் செய்யப்பட்டு வருகின்றன.

இங்கு ஊரகத் தொழில்கள் ஏற்படுத்தப்பட்டு குடும்பத்தில் ஒருவருக்கு ஆண்டு முழுவதும் வேலை கிடைக்கும். இவை தவிர ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

ஆதிதிராவிடர்கள் நிலங்களுக்குக் குழாய்க் கிணறுகள்:

ஆதிதிராவிடர்களுடைய நிலங்கள் பாசன வசதி பெறும் பொருட்டு இந்நிலங்களுக்குக் குழாய்க் கிணறுகள் அமைத்துக் கொடுக்கும் திட்டம் தமிழ்நாடு குழாய்க் கிணறுகள் கழகத்தில் செயலாக்கப்படுகிறது. இத்திட்டம் செங்கற்பட்டு, தென்னார்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம் ஆகிய ஐந்து மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. மூன்று ஏக்கருக்குக் குறைவாக நிலமுடைய ஆதிதிராவிடர்களின் நிலங்கள் அடுத்தடுத்து இருந்தால் இந்நிலங்களில் ஒன்றில் குழாய்க்கிணறு அமைத்துக் கொடுக்கப்படும்.

இத்திட்டத்தின் குழாய்க் கிணறு அமைக்கத் தேவைப்படும் தொகையில் 50 சதவிகிதம் மானியமாகவும் 25 சதவிகிதம் குறியீட்டுக்கடனாகவும் தாட்கோ வழங்குகிறது. மீதி 25 சதவிகிதம் வங்கிகள் கடனாக அளிக்கின்றன. முடிக்கப்பட்ட குழாய்க் கிணறுகள் பயன் பெறும் ஆதிதிராவிடர் பாசனச் சங்கத்திடம் பராமரிக்க ஒப்படைக்கப்படுகின்றன.

30-9-83 முடிய தமிழ்நாடு குழாய்க் கிணறுக் கழகம் 262 குழாய்க் கிணறுகளை ரூ. 379.5 இலட்சம் செலவில் உருவாக்கத் திட்டமிடப்பட்டு 63 கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. தஞ்சாவூர் மாவட்டத்தில் 8 குழாய்க் கிணறுகள் நிறைவு பெற்றுள்ளன. இதுவரையிலும் ரூ. 56.72 இலட்சம் மானியமாகவும் குறியீட்டுக் கடனாகவும் செலுத்தப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் பெண்கள் பயன் பெறுவது:

இவ்வாண்டு கீழ்க்கண்ட திட்டங்களில் பயன் பெறுபவர் 50% ஆதிதிராவிடர் பெண்களாக இருக்க வேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளது.

கால்நடைத் துறை மூலம் செம்மறியாடு உற்பத்தித்திட்டம், கறிக்கோழி உற்பத்தித்திட்டம், மாட்டுத்தீவன புல் உற்பத்தித் திட்டம்

பால்மாடுகள் திட்டம்— பால் பண்ணை ஆணையாளர் மூலம்

நகர ஆதிதிராவிடர் மேம்பாட்டுத் திட்டம் தாட்கோ.

குறியீட்டுக் கடன் (மார்ஜின் மணி) இருவழிகளில் பயன் தருகிறது. (1) வங்கிக்கடன் பொறுப்பின் பளுவைக் குறைக்கிறது. இத்திட்டத் தொகையில் 25 சதவிகிதம் குறியீட்டுக் கடனாக அளிக்கப்படுகிறது. (2) தாட்கோ அளிக்கும் குறியீட்டுக் கடனுக்கு 4 சதவிகித வட்டி (ஆண்டுக்கு), சில ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தலாம். வங்கிகளுக்கும் ஆதிதிராவிடர்களுக்கும் ஒரு இணைப்பாக தாட்கோ செயல்படுகிறது. தாட்கோ 77,498 ஆதிதிராவிடர்களுக்கு ரூபாய் 446.65 இலட்சமும் குறியீட்டுக்கடனாகவும், 61944 ஆதிதிராவிடர் வேலை வாய்ப்புப்பெறும் தொழிற்கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 7081 இலட்சமும் வழங்கியுள்ளது. இத்திட்டங்களுக்குத் தேவைப்படும் மீதித்தொகை வணிக மற்றும் கூட்டுறவு வங்கிகள் மூலம் பெறப்பட்டன.

கால்நடை கணைக் காத்திருவோம்

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்
திருமதி கோமதி சீனிவாசன்

தமிழகத்தின் கிராமப் பொருளாதாரம் வேளாண்மை மற்றும் அத்துடன் இணைந்த செய்வினைகளையுமே பெரிதும் சார்ந்துள்ளது. தமிழகம் பெருமளவு கால்நடைச் செல்வத்தைக் கொண்டுள்ளதால், கால்நடை பராமரிப்பு, பொருளாதார மேம்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கிறது.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் இயங்கும் தமிழக அரசு. கடந்த நான்கு ஆண்டுகளில் கால்நடை வளர்ச்சியில் மகத்தான முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. செயற்படுத்தப்பட்ட பல்வேறு முன்னேற்றத் திட்டங்களின் பயனாக, கிராமப்புற மக்களின் வறுமை நிலையைக் குறைக்க வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

ஆவின் வளர்ப்பு:

ஆவின வளர்ப்பில் செயற்கை முறை கருவூட்டல் பணிகளுக்கான வசதிகளை அதிகரிக்கச் செய்து, அதன் மூலம் பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன், ஏற்கெனவே இயங்கி வந்த 7 தீவிர கால்நடை வளர்ச்சித் திட்டங்களுடன் மேலும் 3 திட்டங்கள் கூடுதலாகத் துவக்கப்பட்டன. இதுபோன்று ஏற்கெனவே இயங்கி வந்த 57 கேந்திர கிராம வட்டாரங்கள் தவிர, மேலும் 5 வட்டாரங்கள் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டன. இந்த 3 தீவிர கால்நடை வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதன் பலனாக, ஆண்டு ஒன்றுக்கு 3 கோடி ரூபாய் தரம் உயர்த்தப்பட்ட கன்றுகள் மூலமாகக் கிடைக்கிறது. மற்றும் 2,70,00,000 லிட்டர் பால் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது.



செயற்கை இனக் கருவூட்டல் பணியில் நவீன உத்தியான உறைவிந்து முறை சமீப ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க வீதத்தில் தமிழகத்தில் விரிவாக்கப்பட்டுள்ளது. பால்வளத்தைச் சாரா தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் ரூ. 117.31 இலட்சம் செலவில் 7 இலட்சம் இனப்பெருக்க ஆவினங்களை உள்ளடக்கும் வகையில் 400 கால்நடை மருத்துவ நிலையங்களிலும், ஒருங்கிணைந்த கிராமப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 173 நிலையங்களிலும், வறட்சி நிவாரணப் புணித் திட்டத்தின்கீழ் தர்மபுரி மாவட்டம் முழுதும் முறை புகுத்தப்பட்டுள்ளது. இத்தொழில் நுட்பம், பால் உற்பத்தியில் சிறந்த காளைகளின் விந்தைக் கொண்டு நாட்டினக்கால்நடைகளின் தரம் உயர்த்த, அதன் மூலம் வரும் ஆண்டுகளில் அதிக பால் உற்பத்தி பெற, பெரிதளவில் பயன்படுகிறது.

ஆவின வளர்ச்சிக்கு அத்தியாவசியமான கிடேரிகளை விநியோகிக்கும் நோக்குடன் ரூ. 19.72 இலட்சம் செலவில் இரு கிடேரி உற்பத்தி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு, ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இது வரை 97 கிடேரிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. மேலும், ரூ. 1.77 இலட்சம் செலவில் பால் மற்றும் உழைப்பு வர்க்கத்தைச் சார்ந்த ஒங்கோல் இனக் கால்நடை வளர்ப்பு நிலையம் ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது.

தாய்-மகள் பால்கொடுக்கும் அளவை ஒப்பிட்டு, முர்ரா காளைகளின் ஆற்றலை ஆய்வு செய்யும் திட்டமொன்று ரூ. 37.15 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் பால் வளத்திற்குத் தேவையான ஆற்றல் மிக்க முர்ரா இனக் காளைகள் தேர்ந்தெடுக்கப்படும்.

செம்மறியாடு, வெள்ளாடு வளர்ச்சி:

ஆடுகளுக்குப் குடற்புழு நீக்கம் மூலம் இறைச்சி அதிகரிக்கும் 1980-81ல் ரூ. 3.75 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்விதம் குடற்புழு நீக்கம் செய்யப்படுவதால் ஆடுகள் நோயின்றி திடகாத்திரமாக இருப்பதுடன் ஆண்டொன்றுக்கு இரண்டு கிலோ இறைச்சி எடை அதிகரிப்பதற்கு ஏதுவுண்டு. மொத்தத்தில் ஆண்டு ஒன்றுக்குக் கூடுதலாக ரூ.87.12 இலட்சம் மதிப்புள்ள 3.96 இலட்சம் கிலோ இறைச்சி உற்பத்தி செய்யப்படும்.

இது தவிர, தமிழகம் முழுவதிலுமுள்ள 54.75 இலட்சம் செம்மறி ஆடுகளுக்கு நோய் நீக்கம் செய்யும் திட்டமொன்று கடந்த ஆண்டுகளில் ரூ. 51.93 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் சிறந்த தரமுள்ள இறைச்சி, தோல் மற்றும் கம்பள உற்பத்திக்குத் தடையாக இருக்கின்ற உண்ணிகள், குடற்புழுக்கள் ஆகியவை ஒழுங்கான வரையறுக்கப்பட்ட இடைவெளியில் நீக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ், ஆட்டின் இறப்பு பெருமளவில் தடுக்கப்பட்டதுடன் விவசாயிகளுக்குக் கூடுதல் நிகர லாபம் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இம்மாதிரி குடற்புழு நீக்குவதன் மூலம் ஆடு ஒன்றுக்கு ரூபாய் 20 கூடுதல் வருமானம் பெற இயலும்.

ஆடு வளர்ப்பைத் தொழிலாகக் கொண்ட நலிந்த பிரிவினருக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் அளிக்கும் வகையில் கடந்த நான்காண்டுகளில் 704 ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் கூடுதலாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வேலையற்ற கிராமப்புற இளைஞர்கள் ஆடு வளர்ப்பைத் தொழிலாகக் கொண்டு, வேலைவாய்ப்புகளை உருவாக்கிக் கொள்ளும் வகையில் ஆடு பராமரிப்பில் குறுகிய காலப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுகாறும் 800 இளைஞர்கள் பயிற்சி பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

வெள்ளாடு வளர்ப்புக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, புதுக்கோட்டையில் வெள்ளாடுவளர்ப்புப் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை 122 தெல்லிச்சேரி கிடாக்களும்; 89 ஜமுனாபாரி கிடாக்களும் இனவிருத்திக்காக விற்கப்பட்டன. இராமேஸ்வரம் தீவில் [illegible] வெள்ளாடுகளின் தரத்தை உயர்த்துவதில் ஊக்கமளிக்கும் பொருட்டு ஆளுக்கொரு கிடா வீதம் 50 பேருக்கு 50% மானியத் தொகையில் ஜமுனா பாரி வெள்ளாட்டுக் கிடாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

கோழி வளர்ப்பு:

கோழி நோய் கண்டறியும் ஆய்வுக் கூடம் ஒன்று ஈரோட்டில் ரூ. 2.77 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளது. கோழிகளில் பரவும் நோய்களைக் கண்டறிந்து, நோய்த் தடுப்புப் பணிகளை மேற்கொண்டு, கோழி இழப்பினால் ஏற்படும் பெரும் சேதத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை இக்கூடம் மேற்கொண்டிருக்கிறது.

பன்றி வளர்ப்பு:

பன்றி வளர்ப்பு இன்னமும் சமுதாயத்தில் மிகவும் நலிந்த பிரிவினராலேயே பராமரிக்கப்படுவதால், அவர் தம் பொருளாதார நிலையை உயர்த்தும் பொருட்டு பன்றி வளர்ப்பில் தனிக்கவனம் செலுத்தப்பட்டுள்ளது. வடஆர்க்காடு, சேலம், செங்கல்பட்டு மாவட்டங்களிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட 125 பேருக்கு, ஆளுக்கொரு ஆண் பன்றி வழங்கப்பட்டுள்ளது. பன்றியின உற்பத்தித் திட்டத்தின்கீழ் 100 பன்றிப் பிரிவுகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பசுந் தீவன வளர்ப்பு:

பால் உற்பத்தி அதிகரிப்பதற்கான கலப்பினக் கால்நடை மேம்பாட்டுத் திட்டங்களின் வெற்றி பசுந்தீவன உற்பத்தியையே சார்ந்துள்ளது. ஆகவே, மானிய மளித்தும், பல்வேறு திட்டங்களின் மூலமும் பசுந் தீவன உற்பத்திக்கான பெருமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஏற்கெனவே இயங்கி வந்த 4 பசுந் தீவன உற்பத்தி நிலையங்கள் தவிர, கடந்த நான்கு ஆண்டுகளில் கூடுதலாக 4 நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. கடந்த ஆண்டில் மட்டும் 46.88 இலட்சம் புல்நறுக்குகள் உற்பத்தி செய்யப்பட்டு, 34.13 இலட்சம் புல்நறுக்குகள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. 11.84 இலட்சம் டன் தீவனப் பயிர் விதைகளும் உற்பத்தி செய்யப்பட்டன. கூடுதல் பசுந்தீவனம் உற்பத்தி செய்யப்படுவதன் மூலம் கூடுதல் பால் உற்பத்தி செய்யப்படுகிறது.

கால்நடை மருத்துவப் பணிகள்:

கால்நடை பராமரிப்புத் திட்டங்களின் வெற்றி, போதுமான நோய் நீக்கப் பணிகள் அளிப்பதையும் சார்ந்துள்ளது. இதனைக் கருத்திற் கொண்டு, கடந்த நான்கு ஆண்டுகளில் 80 புதிய கால்நடை மருத்தகங்களை அரசு திறந்திருப்பதுடன், 18 மருத்தகங்கள் மருத்துவமனைகளாகவும், 9 மருத்துவமனைகள் பிரதம மருத்துவ நிலையங்களாகவும் உயர்த்தப்பட்டுள்ளன. தமிழகத்தில் கால்நடைநோய் நீக்கப் பணிகளுக்காக ஒவ்வோராண்டும் செலவிடப்படும் தொகை பிற மாநிலங்களில் செலவிடப்படும் தொகையை விடக் கூடுதலானது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கால்நடைகளிடையே பெரும் சேதத்தை உண்டு பண்ணும் கொடிய வெக்கை நோயை முற்றிலும் ஒழிக்கும் பொருட்டு ரூ. 4.27 இலட்சம் செலவில் மேலும் 3 வெக்கை நோய் மாவட்டக் குழுக்களும்; ரூ. 4.41 இலட்சம் செலவில் 3 வெக்கை நோய் சோதனைச் சாவடிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கால்நடைகளின் உள் பகுதிகளைப் படமெடுத்து, தக்க சிகிச்சையளிக்கும் நோக்குடன், முதன் முதலாக மதுரையில் ரூ. 3.30 இலட்சம் செலவில் ஒளி ஊடுருவிக் கதிர் இயக்கப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

கால்நடைகளிடையே பெரும் சேதத்தை உண்டாக்கும் பிறிதொரு நோயான கோமாரி நோயைத் தடுக்கும் திட்டம் ஒன்று 1980-81ல் ரூ. 7.40 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்பட்டு, தடுப்பூசிகள் போடப்படுவதன் மூலம் விலை மதிப்புள்ள ஆவினங்கள் உயிர்ச் சேதத்திலிருந்து பாதுகாக்கப்படுகின்றன.

கால்நடை மருத்துவப் பணிக்கான தரமுள்ள மருந்துகளைத் தயாரிக்கும் பொருட்டு ரூ. 16.14 இலட்சம் செலவில் 1980-81ல் புதிய 'மருந்து தயாரிக்கும் நிலையம்' ஒன்று நிறுவப்பட்டது.

மருத்துவ நிலையங்களுக்குத் தேவையான மருந்துகளை வாங்கி சரியான சமயத்தில் விநியோகிப்பதில் உள்ள இடர்ப்பாடுகளை நீக்கும் நோக்குடன் 1980-81ல் ரூ. 2.00 இலட்சம் செலவில் 4 மருந்துக் கிடங்குகள் ஏற்படுத்தப்பட்டன.

தமிழகத்தில் மறையவிருந்த நாய் இனங்களான ராஜபாளையம் மற்றும் கோம்பை இனங்களைப் பாதுகாக்கும் பொருட்டு 1980-81ல் ரூ. 0.50 இலட்சம் செலவில் சென்னை நகரில் சைதாப்பேட்டை கால்நடை மருத்துவமனையில் நாய் வளர்ப்புப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டு, பொதுமக்களுக்கு நாய்க்குட்டிகள் விற்கப்படுகின்றன.

இராணிப்பேட்டையில் இயங்கி வரும் கால்நடைநோய்த் தடுப்பு மருந்து உற்பத்தி நிலையத்தின் பல்வேறு பிரிவுகள் கடந்த 4 ஆண்டுகளில் விரிவாக்கப்பட்டு, கூடுதலான தடுப்பு மருந்துகள் தயாரிக்கப்பட்டு, தமிழகத்தின் தேவை பூர்த்தி செய்யப்படுவதுடன், அண்டை மாநிலங்களுக்கும் தேவைக்கேற்ப விற்கப்படுகின்றன.

சிறப்புக் கால்நடை உற்பத்தித் திட்டம்:

இத்திட்டத்தின்கீழ் கன்று வளர்ப்பிலும், ஆடு, கோழி மற்றும் பன்றி வளர்ப்புப் பிரிவுகள் நிறுவுவதிலும் சிறு குறுநில விவசாயிகள் மற்றும் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு உதவியளிக்கப்படுகிறது. கடந்த நான்காண்டுகளில் இத்திட்டங்களின் கீழ் ரூ. 87.92 இலட்சம் மானியமாக அளிக்கப்பட்டு, 8,556 ஆடுவளர்ப்புப் பிரிவுகளும்; ரூ. 20.32 இலட்சம் மானியமாக அளிக்கப்பட்டு 564 கோழி வளர்ப்புப் பிரிவுகளும், ரூ. 1.44 இலட்சம் மானியம் வழங்கப்பட்டு 100 பன்றியின வளர்ப்புப் பிரிவுகளும் ஏற்படுத்தப்பட்டன. கன்று வளர்ப்பின் கீழ் 18,380 கன்றுகள் சேர்க்கப்பட்டு, ரூ. 150.65 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டது. இத்திட்டங்களினால் 1651 தாழ்த்தப்பட்ட குடும்பங்களும், 2618 பெண்களும் பயனடைந்துள்ளனர்.

ஆடு உற்பத்தித் திட்டம் தமிழகத்தில் முன்னேற்றமும், பெரும் சாதனையையும் அடைந்துள்ளது. இதனை, "ஆடுகள் வளர்ச்சியில் தமிழ்நாடு முன்னோடியாக உள்ளது" மற்றும் "ஆடுகள் வளர்ப்பு விவசாயிகளுக்குப் புதிய தொழிற்பாதையை வகுத்துள்ளது" என்ற தலைப்புகளின்கீழ் முறையே "குருசேத்ரா" மற்றும் "கூட்டுறவுச் செய்திகளின் சாரம்" என்னும் செய்தி இதழ்களில் வெளியான கட்டுரைகள் விளக்கும். மேலும் மத்திய அரசு மற்றும் உலக வங்கி நிபுணர்கள் ஆகியோரும் இம்மாநிலத்திற்கு வருகையளித்தபோது பெரிதும் பாராட்டியுள்ளனர்.

ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்:

இத்திட்டத்தின்கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ. 8.59 இலட்சம் மானியத்தில் 744 கறவை மாடுகளும்; ரூ. 18.52 இலட்சம் மானிய செலவில் 1504

வேலை மாடுகளும், வழங்கப்பட்டன. ரூ. 14.59 இலட்சம் மானிய செலவில் 1311 ஆடு வளர்ப்புப் பிரிவுகளும்; 0.65 இலட்சம் செலவில் 65 கோழி வளர்ப்புப் பிரிவுகளும்; ரூ. 0.16 இலட்சம் செலவில் 65 பன்றியின வளர்ப்புப் பிரிவுகளும் ஏற்படுத்தப்பட்டன. மொத்தத்தில் இத்திட்டத்தால் 3689 பழங்குடியினர்கள் பயன் அடைந்துள்ளனர்.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்:

இத்திட்டம் நீலகிரி மாவட்டத்தில் மட்டுமே செயல்படுகிறது. கடந்த 4 ஆண்டுகளில் 4 ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் 415 ஆடு வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு, 5884 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 40 பன்றி வளர்ப்புப் பிரிவுகளும் நிறுவப்பட்டுள்ளன.

மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்:

இத்திட்டத்தின்கீழ் சிறு-குறு விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் பொருட்டு கன்று மானியத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. கடந்த 4 ஆண்டுகளில் மட்டும், 1500 கன்றுகளுக்கு ரூ. 25.31 இலட்சம் மானியமாக அளிக்கப்பட்டுள்ளது.

வழட்சி நிவாரணப் பணித்திட்டம் :

இத்திட்டத்தின்கீழ் தர்மபுரி, இராமநாதபுரம் மாவட்டங்களில் 430 ஆடு வளர்ப்போர் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. 2606 கறவை மாடுகள் வழங்கப்பட்டன மேலும், கடந்த நான்கு ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தும் பொருட்டு, ரூ. 97.63 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதுதவிர, ரூ. 10.51 இலட்சம் செலவில் இராமநாதபுரம் மாவட்டம் முழுமையும் உறை விந்து முறை இனவிருத்தியின்கீழ் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வறட்சி மற்றும் வெள்ளநிவாரணப் பணிகள்:

1981-82 மற்றும் 1983-84 ஆண்டுகளில் தமிழகத்தைத் தாக்கிய கடும் வறட்சியினால் ஏற்பட்ட வைக்கோல் பற்றாக்குறையைத் தீர்க்கும் பொருட்டு, 3,79,803 மாடுகளுக்கு, கிலோ ஒன்றுக்கு 7 முதல் 15 காசு வீதத்தில் 12,738 மெட்ரிக் டன் வைக்கோல் விநியோகிக்கப்பட்டது. மேலும், ரூ. 123.60 இலட்சம் செலவில் கோமாரிநோய்த்தடுப்பு மருந்து வாங்கப்பட்டு 5,94,809 மாடுகளுக்குத் தடுப்பூசிகள் போடப்பட்டதன் மூலம், நோய் தாக்காதவாறு பாதுகாக்கப்பட்டன.

மேலும் கடந்த ஆண்டில் ஏற்பட்ட வெள்ளத்தினால் உண்டான கால்நடை இழப்பை ஈடுசெய்யும் விதத்தில் அரசு 5 லட்சத்திற்கு ஒப்புதல் அளித்து, அதற்கான நிவாரணப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, செயல்படுத்தப்படுகின்றன.

சிறப்பு மத்திய உதவித் திட்டம்:

முற்றிலும் ஆதி திராவிடர்கள் மட்டும் பயன்பெறும் வகையில் ரூ. 50.28 இலட்சம் செலவிலான புதிய திட்டத்திற்கு அரசு கடந்த ஆண்டில் ஒப்புதலளித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஆடு உற்பத்தித் திட்டம், பசுந்தீவன உற்பத்தித் திட்டம் மற்றும் இறைச்சி இனக் கோழி உற்பத்தித் திட்டம் ஆகியவை செயல்படுத்தப்பட்டு 50% மானிய செலவில் ஆடு மற்றும் கோழி வளர்ப்புப் பிரிவுகள் அமைத்துக் கொடுக்கப்படுகின்றன. இதுவரை, 1700 ஆதி திராவிடர்கள் பயனடைந்துள்ளனர். இதில் 50 சதவீதத்தினர் பெண்டிர் ஆவர்.

மேற்கண்டுள்ள கால்நடை பராமரிப்புத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டதன் பயனாக, பசு மற்றும் எருமைப் பால் உற்பத்தியில் உயர்வு ஏற்பட்டுள்ளது கண்கூடு.

1977-78ல் 1.888 கிலோகிராம் மற்றும் 2.534 கிலோகிராம் பெறப்பட்ட பசு மற்றும் எருமையின் தினசரி சராசரி பாலின் அளவு முறையே 82-83ல் பசு ஒன்றுக்கு 2.12 கிலோகிராம் ஆகவும் எருமை ஒன்றுக்கு 2.94 கிலோகிராமாகவும் உயர்ந்துள்ளது.

1977-78ல் கிடைக்கப்பெற்ற மொத்தப் பால் உற்பத்தியாகிய 1.68 மில்லியன் டன், 1982-83ல் 1,788 மிலியன் டன்னாகவும் உயர்ந்துள்ளது. மேலும், 1977-78ல் 682 மில்லியனாகயிருந்த முட்டை உற்பத்தி 1982-83ல் 898 மில்லியனாகவும் உயர்ந்துள்ளது.

உற்பத்தியில் உயர்வு பெற்றது மட்டுமின்றி, கடந்த 4 ஆண்டுகளில் ஆடு, கோழி மற்றும் பன்றி வளர்ப்புப்பிரிவுகளும், கறவைமாடுகள் வழங்கப்பட்டதன் பயனாகவும் 13,206 பேர் நேரிடையான வேலை வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர். இது தவிர ஏராளமான மறைமுகமான வேலை வாய்ப்புகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

சமுதாயத்தின் நலிந்த பிரிவினரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் வருங்காலங்களில் மேலும் மேலும் சிறந்த திட்டங்களைச் செயல்படுத்த அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

- நாகரீக மென்பதன் பொருள் விலங்கினங்களை விட மனிதன் குறைவாக வேலை செய்து அதிகப் பயன் அடைவது தான்.
- சமுதாயத்திற்கு உழைக்க வேண்டும் என்ற ஆர்வத்திலுள்ள மாணவர்கள், கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள பாமர மக்களுக்கு அறிவு புகட்ட வேண்டும்.
- மகிழ்ச்சியூட்டுவது, புதிய எண்ணங்களைத் தூவுவது, பழைய கருத்துக்களை மாற்றுவது, பண்பு தருவது, செயல் புரியும் திறன் அளிப்பது என்பன போன்ற பயன்களைப் பெறுவதற்கே படிக்கிறோம்!
- நாட்டிலே மறுமலர்ச்சி ஏற்பட்டு விட்டது; தமிழ்மொழி உணர்ச்சியும், தமிழ் மக்கள் உணர்ச்சியும் இனிப்பிரிந்து வாழமுடியாது; தென்றலும், புயலும் ஒன்று சேர்ந்து விட்டன.
- பண்டையமுறையில் தேவையானவற்றைத் தெரிந்து எடுத்துப் போற்றத் தவறக் கூடாது. அதுபோலவே தேவையற்றனவற்றைத் தள்ளிடவும் தயங்கிடக் கூடாது!



மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் கீழ் இயங்கி வருகின்ற இந்த அரசு, முன்னுதாரணத்திற்கு உரிய பல வகையில் திகழ்ந்து வருகிறது என்பது மிகைப்பாடில்லாத மெய்ப்பாடாகும்.

வக்ஃபு வாரியம் என்பது இஸ்லாமிய அறநிலையத் துறையாகும். மசூதிகள், தர்க்காக்கள் ஆஷூர்கானாக்கள் போன்றவற்றின் சொத்துக்களைப் பாதுகாப்பதும், கண்காணிப்பதும், ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தால் அதை மீட்பதும் வக்ஃபு வாரியத்தின் தலையாய பணிகளாகும்.

மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர்

திரு. யா. சை. மு. யூசுப்

இத்துறையில் தமிழக அரசு எவ்வாறு செயல்படுகிறது? இதை நான் சொல்வதைவிட இந்த அரசுக்கு எதிரணியில் உள்ள முஸ்லீம் எம். பி. ஒருவர் சமீபத்தில் நாடாளுமன்றத்தில் பேசியுள்ளதைக் கேளுங்கள்:

"மேற்கு வங்க அரசும் அதைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசும் எந்தக் காலவரையறையும் இல்லாமல், நிரந்தரமாக எந்தக்காலத்திலும் ஆக்கிரமிக்கப்பட்ட வக்ஃபுச் சொத்துக்களை மீட்பதற்குரிய முறையில் சட்டங்கள் இயற்றி இருக்கின்றன. இத்தகைய சட்டங்களை மற்ற மாநில அரசுகள் செய்ய வேண்டுமென்ற ஒரு சுற்றறிக்கையை மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அனுப்ப வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்."

இந்த அரசோடு கொள்கை ரீதியாக வேறுபட்டவர்கள்கூட அரசின் ஆக்கபூர்வமான பணிகளைப் பாராட்டுகின்றார்கள் என்றால் அதற்குக் காரணம் புரட்சித் தலைவர் அவர்களே ஆவார்.

இஸ்லாமிய சமுதாயத்திற்கென இந்த ஆட்சியின் எட்டாண்டுக்காலச் சேவை குறிப்பிட்டுச் சொல்லத்தக்கதாகும்.

இருபத்தைந்து ஆண்டுக்கால வக்ஃபு வாரிய வரலாற்றில் வக்ஃபு வாரியத்திற்கெனச் சொந்த அலுவலகக் கட்டடம் இல்லாமல் வாடகை இடத்திலேயே இருந்து வருகிறதுஎன்பது பரிதாபமான நிலையாகும். அந்நிலையை மாற்றி, வக்ஃபு வாரியத்திற்கெனச் சொந்தக் கட்டடம் ஒன்றை எழுப்ப நிலம் வாங்கப்பட்டுள்ளது. வரைபட ஒப்புதலோடு விரைவில் கட்டடம் கட்டி முடிக்கப்படவிருக்கிறது.

இடந்தும், நலிந்தும், தகர்ந்தும் கிடக்கின்ற மசூதிகளைச் செப்பனிட்டு மராமத்துப் பார்க்கும் வகைக்கு, இதற்கு முந்தைய அரசு மானியமாக ஆண்டுதோறும் மூன்று இலட்சமே கொடுத்து வந்துள்ளது.

ஆனால் புரட்சித் தலைவரின் அரசு அதை ஒவ்வொரு ஆண்டும் ஐந்து இலட்சமாக உயர்த்தித் தந்துள்ளது மட்டுமல்லாமல் இந்த மராமத்துப் பணிக்காக விசேஷமாக ஒரு கோடி ரூபாய் வழங்கி, இந்தியாவில் எந்த மாநிலமும் ஆற்ற முன்வந்திராத பெரும் உதவி புரிந்து, இறை இல்லங்களைப் பாதுகாக்கத் துணை புரிந்துள்ளது.

அது மட்டுமல்லாமல் மராமத்துப் பணிக்கு வழங்கப்படும் ரூ. 5,000 போதுமானதல்ல என்று கருதி, இதை இரட்டிப்பாக-ரூ. 10,000 ஆக வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதுவரை ரூ. 5,000 வீதம் 940 வக்ஃபுகளுக்கு 45 இலட்ச ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இச்செயல் வக்ஃபுகளின் மேம்பாடு



வரைகுறைச் செயல்பாடும் வக்ஃபு வாரியம்

அனைத்து சாலைகளும் அஞ்சலகத்தை நோக்கியே!

உங்கள் பணத்தை 6 ஆண்டுகளில் இரட்டிப்பாக்குங்கள்

தேசீய சேமிப்புப் பத்திரம்

6-வது வெளியீட்டில் முதலீடு செய்யுங்கள்

ஒவ்வொரு ரூ.100 -ம் ரூ.201.50 ஆக மாறக்கூடிய

உங்கள் பணத்திற்கு நல்ல வட்டியும் பாதுகாப்பும் அளிக்கிறது இப்பத்திரம் ரூ.10, 50, 100, 500, 1000, 5000 மதிப்பில் கிடைக்கும். முதலுக்கும், வட்டிக்கும் வருமான வரி சலுகை உண்டு!

அயல் நாட்டில் வாழும் இந்தியர்களுக்கு 13% வட்டி அளிக்கிறோம்!

தொடர்பு கொள்க:
இயக்குநர்,
சிறு சேமிப்புத் துறை,
143, அண்ணா சாலை, சென்னை-600 002
அல்லது அருகிலுள்ள அஞ்சலகங்கள்.

DSPR-504/83-SP

வக்ஃபு வருவாய் வளர்ச்சிக்காக தமிழக அரசின் நீண்ட காலக் கடனுதவி மூலம் சிதம்பரத்தில் உருவாக்கப்பட்டுள்ள தங்கும் விடுதி

களுக்குத் தமிழக அரசின் தயாள தாராள மனப்பான்மையை இஸ்லாமியர்கள் உணரக் கூடுமைப் பட்டிருக்கிறார்கள்.

வக்ஃபுகளில் செம்மையான மராமத்துப் பணிக்கு உதவுவதோடு மட்டுமல்லாமல் வக்ஃபுகளின் வருமானம் பெருக்கவும் இந்த அரசு நீண்டகாலத்தவணையில் மத்திய அரசின் உதவியோடு ஒவ்வொரு வக்ஃபுக்கும் இலட்சக் கணக்கில் கடன் வழங்கி வருகிறது.

இதனால் திருமண மண்டபங்கள், கடைகள், விடுதிகள், கட்டடங்கள் ஆங்காங்கே கட்டப்பட்டு வருகின்றன.

இதுவரை இவ்வகைக் கடனுதவியாக மத்திய, மாநில அரசுகள் வழங்கிய 86 லட்ச ரூபாயினால் 35 வக்ஃபுகள் நல்ல முறையில் பயனடைந்துள்ளன. இதில் 27 வக்ஃபுகள் மட்டும் மாநில அரசின் உதவியைப் பெற்று முன்னேற்றமடைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஒவ்வொரு ஆண்டும் கல்வி ஊக்கத் தொகையாக மத்திய வக்ஃபு கவுன்சிலிடமிருந்து மாணவர்களுக்குப் பண உதவி செய்யப்படுகிறது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக-முத்தாய்ப்பாகத் தமிழக அரசு இஸ்லாமிய சமுதாயத்திற்குச் செய்து வரும் அளப்பரிய சேவையை இங்கே குறிப்பிடுவது நலம் என்று கருதுகிறேன்

இஸ்லாமிய மார்க்க வல்லுநர்களான ''உலமாக்கள்'' எனப்படுவோரும், இஸ்லாமிய மார்க்கத்தின் முதன்மையான சேவகர்களான 'மூ அத்தின்' எனப்படுவோருக்கும் தமிழக அரசு ஓய்வூதியம் மாதந்தோறும் ரூ. 250 வழங்கி வருவது தெரிந்ததே! இது இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அற்புதமான திட்டம் என்பது மட்டுமல்லாது மலேஷியா, பாகிஸ்தான் போன்ற இஸ்லாமிய நாடுகளில்கூட இது போன்ற திட்டம் அமல்படுத்தப்படவில்லைஎன்பது உற்று நோக்கத் தக்கதாகும்.

500 பேர்களுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருந்த இவ் ஓய்வூதியத்தை இவ்வாண்டு முதல் 600 பேர்களுக்கு வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இஸ்லாத்திற்கும் இஸ்லாமிய சமுதாயத்திற்கும் பாடுபட்டவர்களை கவுரவிப்பதிலும் கண்ணியப்படுத்துவதிலும் இந்த அரசு முன்னுதாரணமாக விளங்கி வருகிறது.

மாவட்டங்களுக்கு தேசியத் தொண்டாற்றியவர்களின் பெயர்களைச் சூட்டும் திட்டத்தில் தஞ்சை மாவட்டத்தை மூன்றாகப் பிரித்து, நாகப்பட்டினத்தைத்தலைநகராகக்கொண்ட பகுதிக்கு கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களின் பெயர் சூட்டப்படவிருக்கிறது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் திருவாழ்க்கைச் சரிதமான ''சீறாப்புராணத்தை' இயற்றிய உமறுப்புலவர் அவர்களின் நினைவாக அவர் பிறந்த எட்டையபுரத்தில் சுமார் 4 இலட்ச ரூபாய் செலவில் நூல் நிலையம் ஒன்று நிறுவப்படும் வகையில் எல்லா வேலைகளும் பூர்த்தியாகி உள்ளன.

அதேபோல் சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர் அவர்கள் பிறந்த ஊரான நாகர்கோயில் கோட்டாறில், அவர்களின் நினைவாக, நினைவு மணி மண்டபத்திற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளதையும் இங்கே நினைவுபடுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

நாகர்கோவில் இடலாக்குடியில் சதாவதானி செய்குத்தம்பிப் பாவலரின் நினைவு மண்டபம் கட்டும் இடத்தைப் பார்வையிட்டும், சமாதியில் மலர்மாலை வைத்தும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் மரியாதை செலுத்தினார்கள். (29-4-84)

பிலிப்ஸ்

தோற்றத்தில் எல்லா பல்புகளும் ஒன்றுதான்.



ஆனால், பிலிப்ஸ் எனும்போது தரம் பளிச்சிடும்.

தரத்திற்கு உறுதி தருவது இப்பெயர். நீடித்திருக்கும் பளிச்சிடும் வெளிச்சம் தரும் பல்பினைப் பெறவும் இப்பெயர் சொன்னால் போதும். உங்கள் பணத்திற்குத் தகுந்த மதிப்பு தருவதும் இதுவே.
பிலிப்ஸ் பல்புகள். எமது பெயர் கொண்டவை உமது சோதனையில் வெல்லும்.

PEL-1294

பிலிப்ஸ் ஐம்பது ஆண்டுகளுக்குப் மேலாக இந்திய வீடுதோறும் விளங்கும் நம்பகமான பெயர்

தாய் சேய் நலம் காப்போம்

குழந்தை நலமே குடும்ப நலம் என்பார்கள். குழந்தைகள் உடல் நலத்துடன் உற்சாகமாக இருந்தால் குடும்பத்திலும் மகிழ்ச்சி நிலவுகிறது.

சிறுவயது முதலே குழந்தைகள் நோய் நொடியின்றி வளர்ந்திட நாம் கண்ணும் கருத்துமாக இருந்திட வேண்டும். இதில் தாயின் பங்கு மிக முக்கியமாக விளங்குகிறது.

பொதுவாக, தாய் சேய் நலமானது, வளமான சமுதாயத்துக்கு வழிகோலுகிறது எனலாம். இந்த நல்ல நோக்கத்தோடு, சென்னை மாநகராட்சியின் மருத்துவர்கள் மற்றும் மருத்துவத் துணைப் பணியாளர்களுக்கு 'யுனிசெப்' ஆதரவில், ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியின் குழந்தை மருத்துவத்துறை ஒரு பயிற்சியை நடத்தியது. அதுதான் 'குழந்தை நலப் பராமரிப்புப் பயிற்சி' யாகும்.

1984 மே முதல் ஜூன் 16 முடிய இந்தப் பயிற்சியில் 240 பேர் கலந்து கொண்டனர்.

இந்தப் பயிற்சியின் உடனடி நோக்கம், தாய்மைப் பேறு குறித்தும் குழந்தை நலம் குறித்தும் மாநகராட்சி நலத்துறை மூலம் சமுதாயத்திற்கு உணர்த்துவதாகும்.

இதன் நீண்ட கால நோக்கம், இதில் பயிற்சி பெற்றோர் தொடர்ந்து இப்பணியில் ஈடுபடுவதன் மூலம், தாமே பிறரைப் பயிற்றுவிக்கும் திறமை பெறுவது ஆகும்.

இதன் இறுதி நோக்கம், சமுதாயம் முழுவதும் குழந்தை நலனைப் பேணும் முறைகளை அறிந்து அவற்றைப் பயன்படுத்துவது ஆகும்.

குழந்தைகள் நோய்வாய்ப்படுவதற்கும், இறந்து போவதற்கும் முக்கிய காரணம் என்ன? சத்துணவின்மையால் வரும் வயிற்றுப் போக்கும், நோய்த் தொற்றுமேயாகும். சத்துணவின்மை காரணமாக அதிகமாகப் பரவி வரும் தீர்க்க முடியாத நோய்களுக்கு, அண்மைக் காலத்தில் விஞ்ஞானத் தொழில் நுட்ப ரீதியாகத் தீர்வு கண்டுள்ளனர். இது குறித்து அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய சில விதி முறைகளும் வகுக்கப்பட்டுள்ளன.

- வயிற்றுப் போக்கால் நோய் வாய்ப்பட்டு இறப்பதை வெகுவாகக் குறைக்க, நீர் வற்றா வண்ணம் வாய்வழி நீர் அளிக்கும் சிகிச்சை.

- காசநோய், தொண்டை அடைப்பான், கக்குவான் இருமல் இரண ஜன்னி, தட்டம்மை இவை குழந்தையைத் தாக்காமலிருக்கத் ஊசிகள், மருந்துகள் அளித்தல்.

- தாய்ப்பால் ஊட்டுவதை ஊக்குவித்தல்.

- சரியான கட்டி ஆகாரத்தை குழந்தையின் வளர்ச்சிக்கேற்ப அறிமுகப்படுத்தல். ஊட்டச் சத்து அதிகரித்தல்.

- குழந்தைகள் வளர்ச்சியைத் தாய்மார்கள் கண்காணித்தல்.

- குழந்தைப் பேற்றுக்கிடையே போதிய இடைவெளி.

- பெண்கள் கல்வி

குடும்பத்தில் தாயின் பங்கு முக்கியமானது. தாய்க்கு அறிவூட்டுவது, குடும்பம் முழுமைக்கும் அறிவூட்டுவதாகும். தாய்மைக் கல்வியானது குழந்தை நலத்திற்கு மிக இன்றியமையாததாகும். இது 'தேவையான நுட்பத்தைக் குடும்பத்திற்கு அளித்தல்' என்னும் முக்கிய நோக்கத்தை நிறைவேற்றுவதாகும்.

தாய்க்கும், குடும்பத்திற்கும், சமுதாயத்திற்கும் இந்த நலச் செய்தியைப் பரப்புவதற்கு, நலத்துறையில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் புதிய பயிற்சி தேவை.

எல்லோரும் விரும்பும் எகானமி மாடலுக்கு நிகராக இப்பொழுது ஒரு புதிய சாலிடெர் TS33E !

சாலிடெர் TS 32E, எல்லோரும் விரும்பி வாங்கும் ஜனதா மாடலாக திகழ்ந்தது. இதற்கு நிகராக இப்பொழுது தனிச் சிறப்பு வாய்ந்து, உங்கள் ரசனைக் கேற்ப எழிலான அமைப்பு கொண்ட சாலிடெர் TS 33E ஒரு அற்புத படைப்பு.

எளிதாக நகரக்கூடிய இரண்டு ஷட்டர்கள், பகட்டான பாலிஸ்டைரின் முகப்பு, நேர்த்தியான கன்ட்ரோல்கள் போன்ற சிறப்பான அம்சங்கள் அடங்கியது சாலிடெர் TS 33E.

அதுமட்டுமின்றி விஷன் இன்டர்மீடியட் ஃபிரிகுவன்ஸியில் (VIF) கண்டுள்ள முன்னேற்றத் தினால் செய்தி வாசிப்பவரின் கண் இமைகள் கூட துல்லியமாக தெரியும் படத்தோற்றம். படம் மேலும் கீழுமாக ஓடாமலிருக்க பிரத்யேக ஆட்டோமாடிக் 'ஒலி தடுப்பு' அமைப்பு.

மேலும் இதிலுள்ள 4 வாட் ஆம்ப்ளிஃபையர் வெளீரான ஒலியை அளிக்கிறது. தொலைதூர இடங்களுக்கென இதில் கூடுதலாக ஒரு ஹை-கெய்ன் ஆன்டெனா அமைப்பு பொருத்தப் பட்டுள்ளது. வீசிஆர், டேப்ரெக்கார்டர் போன்றவற்றுக்கு பிரத்யேக அமைப்பு உள்ளது.

இத்தகைய முற்போக்கான அம்சங்களை மிக சிக்கனமாக உங்களுக்கு அளிக்கிறது TS 33E. எப்பொழுதாவது சர்வீஸ் வசதி தேவைப்பட்டால் உடனடியான பராமரிப்பு உண்டு.

ரூ. 325 மிச்சம்
உள்ளடங்கிய
வோல்டேஜ் ஸ்டெபிலைஸர்

சாலிடெர்
-தொல்லையில்லாத் தொலைக்காட்சி

நூல் நயம்

தோட்டக்காட்டினிலே...

(ஆசிரியர்கள்: மலரன்பன், மாத்தளை சோமு, மாத்தளை வடிவேலன், வெளியீடு: மாத்தளை தமிழ் எழுத்தாளர் ஒன்றியம், மாத்தளை, கிடைக்குமிடம்: 95, மெயின்ரோடு, மண்ணச்சநல்லூர் திருச்சி மாவட்டம், விலை ரூ.7.50 பக்கம்: 98)

''1939ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை இந்த நாட்டிற்காக 'தோட்டக் காட்டினிலே' இறுதி மூச்சுவரை உழைத்து உழைத்துத் தம்மைச் சுரண்டிச் சொகுசுகண்ட வர்க்கத்தினரின் அடக்குமுறைக்கும், அட்டூழியத்திற்கும் எதிராக அவ்வப்போது குரல்கொடுத்தும், கொடி உயர்த்தியும், போராடி அவர்களின் துப்பாக்கிகளுக்குப் பலியாகி உயிர் நீத்த தோட்டத் தொழிலாளர் தோழர்களுக்கு இச்சிறுகதைத் தொகுதி சமர்ப்பணமாகிறது...'' என்ற குறிப்புடன் இச் சிறுகதைத்தொகுதி ஆரம்பமாகிறது.

இத்தொகுதியில் உள்ள ஒன்பது கதைகளும் மலரன்பன், மாத்தளை சோமு, மாத்தளை வடிவேலன் ஆகியோரால் சுவையுற எழுதப்பட்டுள்ளன.

சிறுகதைகள், இலங்கை மலையக வாழ்க்கையைச் சித்திரிக்கின்றன. அங்கு உழைப்பைச் சிந்தும் தோட்டத் தொழிலாளர்களை அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்றன. கதாசிரியர்கள் தாங்கள் கண்ட, கேட்ட, பழகிய நிகழ்ச்சிகளை எழுத்து வடிவமாக்கி, சிறந்த சிறுகதைத் தொகுப்பாக வெளியிட்டிருக்கிறார்கள். இதிலுள்ள சிறுகதைகள் இலங்கைத் தமிழ் இதழ்களில் வெளிவந்தவையாகும்.

சிந்தனைக் கோவை

(ஆசிரியர்: சக்தி சீனிவாசன், வெளியீடு: அல்லயன்ஸ்கம்பெனி, அஞ்சல் பெட்டி எண்: 617, மயிலாப்பூர், சென்னை-4. விலை ரூ. 4.50. பக்கம்: 64)

பயனுள்ள சிந்தனைகளின் தொகுப்பாக இந்நூல் விளங்குகிறது. மானம் காக்க உதவுவது ஆடை; மனம் காக்க உதவுவது சிந்தனை' என்று ஆசிரியர் அழகாகக் குறிப்பிடுகிறார்.'

வெற்றியின் திறவுகோல் திறமையே, செயலே சிறப்பை அளிக்கும், எத்தனை கோடி இன்பம், அன்பு எதை எதிர்பார்க்கிறது? வீரத்துடன் எதிர்த்து தீரத்துடன் போராடு!.. இப்படிப் பல தலைப்புகளில் நம் சிந்தனைக்கு விருந்தூட்டும் பலப் பல கருத்துக்களை ஆசிரியர் நூல் முழுவதும் தெரிவிக்கிறார். வெற்று அலங்காரம் இல்லாமல் வாழ்க்கைக்கு வழிகாட்டக்கூடிய வளமுள்ள கருத்துக்களை மணிகளாகக் கோத்து, மாலையாகக் கட்டியிருக்கிறார். மாணவர் மட்டுமல்ல, பெரியவர்களும் இந்நூலைப் படித்துப் பயன் பெறலாம்.

—பி. வி. ஜி.

நாமே அவற்றை நன்கு தெரிந்து கொள்ளவும், குழந்தை நலத்துறையில் இதுவரை-இன்று வரை கண்டுள்ள முன்னேற்றங்களை அறிந்து கொள்ளவும், நாம் செய்ய வேண்டிய தொண்டின் எல்லையை வரையறுக்கவும், தம் மனப்பான்மைகளை மாற்றிக் கொள்ளவும், அறிவும் திறமையும் பெறவும் இத்தகைய பயிற்சி இன்றியமையாததாகிறது.

சென்னையைப் பொறுத்த மட்டில், நல்ல நல அமைப்பு உருவாகியுள்ளது. மாநகராட்சியில் மட்டும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட நலப்பணியாளர்கள் உள்ளனர். மேலும் 11 ஒருங்கிணைந்த நகர்ப்புறக் குழந்தைகள் வளர்ச்சித் திட்டங்களும் இயங்கி வருகின்றன. இவற்றுள் 3, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியின் மேற்பார்வையில், மாநகராட்சியில் 150 கோட்டங்களில் 40-ல் இயங்குகின்றன.

பயிற்சி அளிக்கப்பட்ட 240 பேர்களும் மாநகராட்சியின் மருந்தகங்கள், குழந்தை நலமையங்கள், நல மையங்கள் இவற்றைச் சேர்ந்தவர்கள், மேலும், களப்பணியாளர்களாகிய துப்புரவு ஆய்வாளர்கள், நலக்கண்காணிப்பாளர்கள், அடிப்படை நலப் பணியாளர்கள் ஆகியோரும் இதில் அடங்குவர்.

சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில், 16-6-84 அன்று நடந்த நிறைவு விழாவில், பயிற்சி பெற்ற 240 பேர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பெற்றன.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச்.வி. ஹண்டே அவர்கள் தம் சிறப்புரையில், 'இந்தப் பயிற்சியின் விளைவாகச் சமுதாயத்துக்கு லாபம் கிடைத்திருக்கிறது என்று சொல்லலாம். குழந்தை நலனில் ஆர்வம் உள்ளவர்களுக்குத் தரப்படும் இந்தப் பயிற்சியைத் தமிழ்நாடு முழுக்க விரிவுபடுத்த வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்.

விழாவில் சென்னை மாநகராட்சிச் சிறப்பு அலுவலர் திரு. கே. சந்திரகுடன் இ. ஆ. ப. சென்னை மாநகராட்சி ஆணையர் திருமதி. சாந்தஷீலா நாயர் இ.ஆ.ப., ஸ்டான்லி மருத்துவக் கல்லூரிப் பேராசிரியையும், இந்தப் பயிற்சியின் அமைப்பாளருமான டாக்டர் பி. சந்திரா, மக்கள் நல்வாழ்வுத் துறை ஆணையர் மற்றும் செயலாளர் திரு. ஆர். சண்முகம், இ.ஆ.ப., ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் பி.நடராஜன், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத் தலைமை சமுதாய வளர்ச்சி அலுவலர் திரு. எம். ஸ்வரூப், சென்னை மாநகராட்சி மருத்துவ அலுவலர் டாக்டர் எம். சுவாமிநாதன் ஆகியோர், தாய் சேய் நலம் பற்றி விளக்கம் தந்தனர்.

மருத்துவர்கள், மற்றும் மருத்துவத் துணைப் பணியாளர்கள் ஆகியோருக்கு அளிக்கப்பட்டுள்ள இந்தப் புதிய பயனுள்ள பயிற்சியானது, செம்மையான முறையில் சமுதாயத்தைச் சென்றடையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை!

—பி. வி. கிரி

மதுரை மாவட்டத்தில் புதிய நூற்பு ஆலை

அ. மருதவிநாயகம்



தமிழ்நாட்டில் ஏற்கெனவே உள்ள 12 கூட்டுறவு நூற்பு ஆலைகளும் கைத்தறி நெசவாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக 3.17 லட்சம் கதிர்களில் மாதம் ஒன்றுக்குப் பல ரகங்களில் 75,00 பேல்கள் பருத்தி நூல் உற்பத்தி செய்து கொண்டு வருகின்றன.

தமிழக அரசு ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேலும் புதிய ஐந்து கூட்டுறவு நூற்பு ஆலைகளை தர்மபுரி மாவட்டத்தில் ஊத்தங்கரையிலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கியிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் எட்டயபுரத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் கமுதியிலும், மதுரை மாவட்டத்தில் தேனியிலும் கட்டுவதற்கு அனுமதி அளித்தது.

தமிழகத்தின் 17 கூட்டுறவு நூற்பு ஆலைகளிலும் தேனி கூட்டுறவு நூற்பு ஆலை ஒன்றுதான் அடிப்படையிலேயே பருத்தி உற்பத்தி செய்யும் விவசாயிகளின் நன்மைக்காகவே ஏற்படுத்தப்பட்டுள்ள ஆலையாகும்.

அங்கத்தினர்களின் பொருளாதார மேம்பாட்டுக்காகவும், பருத்தி உற்பத்தியினைப் பெருக்குவதற்காகவும், ஆலையில் நூல் உற்பத்தி, சாயம் போடுதல், தறிபோடுதல் போன்ற எல்லா வகையான நூல், துணி உற்பத்தியினையும் செய்து அதற்காகப் பருத்தி உற்பத்தியாளர்கள் மற்றவர்களிடமிருந்து பஞ்சு வாங்கி எல்லா வகையான நூல்களையும் நெசவாளர்களுக்கும் மற்றவர்களுக்கும் கொடுப்பது இந்த கூட்டுறவு நூற்பு ஆலையின் நோக்கங்களில் ஒன்றாகும். இவ்வாலை 25,000 கதிர்கள் கொண்டு இயங்கும்.

இந்த ஆலை மதுரை தேனி நெடுஞ்சாலையில், தேனியிலிருந்து 9 கி.மீ. தூரத்திலும், ஆண்டிப்பட்டியிலிருந்து 8 கி.மீ. தூரத்திலும், வைகை அணையிலிருந்து 6 கி.மீ. தூரத்திலும் உள்ள கண்டமனூர் விலக்கு என்று கூறப்படும் இடத்தில் அமைந்துள்ளது.

ஆலையினை நிறுவுவதற்கான முதலீடு ரூ. 714 லட்சமாகும். இதில் 50 சதவிகிதம் தமிழ்நாடு அரசின் பங்காகும்; மீதம் 50 சதவிகிதம் இன்டஸ்ட்ரியல் க்ரெடிட் அண்ட் இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பரேஷன், இன்டஸ்ட்ரியல் டெவலப்மென்ட் பாங்க் ஆப் இந்தியா, இன்டஸ்ட்ரியல் பைனான்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா ஆகிய மூன்று நிறுவனங்களும் சேர்ந்து வழங்கும் நீண்ட காலக் கடனாகும்.

மொத்த முதலீடான ரூ. 714 லட்சத்தில், அங்கத்தினர்களிடமிருந்து பெறப்பட வேண்டிய பங்குத் தொகை, ரூ. 35 லட்சம் ஆகும். அங்கத்தினர் பங்குத் தொகையில் இதுவரை ரூபாய் 9.25 லட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது. அங்கத்தினர்களிடமிருந்து பெறப்பட வேண்டிய பங்குத் தொகை தவிர, தமிழ்நாடு அரசின் பங்கு, கடன் வழங்கும் நிறுவனங்களின் நீண்ட

காலக் கடன் தொகை முழுமையாகப் பெறப்பட்டாகிவிட்டது. இது தவிர, தமிழ்நாடு அரசின் 'சிப்காட்' நிறுவனத்திடமிருந்து இவ்வாலைக்கு ரூ. 15 லட்சம் மானியமாக விரைவில் கிடைக்கும்.

தமிழக அரசு இந்த ஆலையின் பல்வேறு கட்டடங்களைக் கட்டுவது பற்றித் தீர்மானம் செய்யப் 'பணிக்குழு' ஒன்றை அமைத்துள்ளது. அந்தக் குழு, ஆலையின் கட்டுமானத்திற்கு திருவாளர்கள் சி.ஆர். நாராயண ராவ் (கன்சல்டன்ட்) பிரைவேட் லிமிடெட் சென்னை அவர்களை ஆலையின் திட்டம், வரைபடம் முதலியன தயார் செய்வதற்கான சிற்பியாக நியமனம் செய்துள்ளது.



பஞ்சுக் கிட்டங்கி ரூ. 6.60 இலட்சம்மதிப்பீட்டில்மே '83லும் தற்காலிக அலுவலகமும், கிட்டங்கியும் ரூ. 90,000 திட்ட மதிப்பீட்டில் மார்ச் 1983லும் முடிவடைந்து, ஏப்ரல் 1983முதல் தேனியில் வாடகை இடத்தில் இயங்கிக் கொண்டிருந்த அலுவலகம் புதிய அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது.

இரும்பு டிரஸ்கள், ஏ. சி. சீட்., கூரை ஆகிய பணிகளைத் தமிழ் நாடு அக்ரோ இன்ஜினீயரிங் அண்டு சர்வீஸ் கூட்டுறவு இணையம் ரூ. 36 இலட்சம் செலவில் வேலை செய்தது. ஆலையின் கட்டுமானப் பணியில் 'புளோரூம் பிரிபரேட்டரி பிரிவுகள் முழுவதும் முடிவடைந்துள்ளன. இதரப் பிரிவுகளும் முடியும் நிலையில் உள்ளன.

ஆலையின் நிர்வாக அலுவலகக் கட்டடம் ரூ. 10,15,139 செலவில் கட்டப்பட்டு முடிவடையும் நிலையில் உள்ளது.

புதிய கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்கு எல்லாவிதமான இயந்திரங்கள் வாங்குவதற்காக தமிழக அரசால் மத்திய இயந்திரங்கள் வாங்கும் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழுவின் பரிந்துரையின்படி இதுவரை ரூபாய் 416.55 லட்சங்கள் பெறுமானமுள்ள இயந்திரங்கள் வாங்கப்பட்டுள்ளது.

பெரும்பான்மையான இயந்திரங்கள் புளோரூம் இயந்திரம் முதல், நூற்புப் பகுதி இயந்திரங்கள் வரை இந்தியாவில் தலை சிறந்த நூற்பு ஆலை இயந்திரம் என்று கருதப்படும் லட்சுமி ரைட்டர் இயந்திரங்கள் லட்சுமி மிஷின் ஒர்க்ஸ், கோவையிடமிருந்து வோர்ஸ்டாஸ் கம்பெனி மூலமாக ஆலைக்கு வரங்கப்பட்டுள்ளன. இந்தக் கம்பெனியின் இயந்திரங்கள் சுவிட்சர்லாந்து நாட்டுடன் கூட்டுத் தயாரிப்பு என்பதாலும் தலை சிறந்ததாகக் கருதப்படுகின்றன.

ஆலையில் 124 அடிக்கு ஆழ்துளைக் கிணறுகள் இரண்டு தோண்டப்பட்டுள்ளன. அந்தக் கிணறுகளில் 34 அடியிலேயே நல்ல தண்ணீர் வேண்டிய அளவு கிடைக்கிறது. ஒரு கிணற்றில் ஒரு மணி நேரத்திற்கு 1,200 கேலன் தண்ணீர் கிடைக்கிறது. ஆலைக்குப் போதுமான தண்ணீர் இந்த இரண்டு கிணறுகளிலிருந்தும் கிடைக்கிறது.

தமிழ்நாடு மின்சார வாரியத்தினின்றும் உயர் மின் அழுத்தம் 1,500kvA ஆலைக்கு அனுமதிக்கப்பட்டு அதற்கான பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஆலையின் முழு மின்சாரத் தேவைக்கு மாற்று ஏற்பாடாக 625 கிலோ வாட் டீசல் ஜெனரேட்டர் ஒன்றும், 325 கிலோ வாட் டீசல் ஜெனரேட்டர்கள் இரண்டும் வாங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆலையின் இடத்தில் தென்னை, வேம்பு, போகன்வில்லா, பூகலிப்டஸ், மாங்கன்று, பலா மரங்கள் ஏறத்தாழ 1,000 நடப்பட்டுள்ளன.

ஆலையின் திட்ட அறிக்கையின்படி ஆலையில் 612 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கப்பெறும். இதில் 225 சிலோன் அகதிகளுக்கும், 225 ஆதிதிராவிடர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கப்படும். மீதம் உள்ள 162 தொழிலாளர்களும் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக வேலைக்கு அமர்த்தப்படுவார்கள்.

* இடைத்தரகர்களிடம் இருந்து பருத்தி விவசாயிகள் விடுதலைபெற இந்த ஆலை அமைக்கப்பட்டுள்ளது.
* ஆதிதிராவிடர்களுக்கும், தாயகம் திரும்பியோருக்கும் அதிக அளவில் வேலை வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.
* சமூகப் பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கியுள்ள ஆண்டிப்பட்டி வட்டாரத்தில் ஆலை அமைந்துள்ளது.

* தேனி கூட்டுறவு நூற்பாலையின் பரப்பளவு 42.64 ஏக்கர்
* ஆலை அமைந்துள்ள பகுதி பருத்தி நூல் உற்பத்திக்கு ஏற்ற கோயம்புத்தூர் பகுதி போன்று சீதோஷ்ண நிலை உடையது.
* திருப்பூர், தேனி பருத்திச் சந்தைகள் தமிழகத்தில் சிறப்பு வாய்ந்தவை
* முதலீட்டில் உற்பத்தி துவங்குவதற்கு முன் ரூ. 30 இலட்சம் கிடைத்துள்ளது.
* தீ போன்ற விபத்துக்களிலிருந்து பாதுகாக்க இன்ஷுரன்ஸ் கம்பெனிகளின் ஆலோசனைப்படி ஆலை அமைக்கப்பட்டுள்ளது.
* திட்ட அளவீட்டிற்குள் ஆலைப் பணி முடிக்கப்பட்டுள்ளது.
* கூட்டுறவுத் துறையில் உள்ள நூற்பாலைகளில் இது தலை சிறந்ததாகத் திகழும்.

மின் பணிகள் 6-2-84 அன்று துவங்கப்பட்டுள்ளன. பிரிபரேட்டரி பிரிவின் இயந்திரங்கள் பொருத்தும் பணி 2-3-'83 அன்று துவங்கப்பட்டது.

ஆலையின் அலுவலர்களைக் கவனிப்பதற்கென மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை ஆலையின் தலைவராகக் கொண்ட நிர்வாகக் குழு ஒன்றினை, கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநர் அவர்கள் நியமனம் செய்துள்ளார்.

ஆலையின் தலைவராக திருமதி வி. சந்திரலேகா இ.ஆ.ப. அவர்களும், நிர்வாக இயக்குநராக திரு ஜே. ராஜமாணிக்கமும் பணியாற்றி வருகிறார்கள். இந்த ஆலையின் உற்பத்தி, திட்ட காலத்திற்கு முன்னதாக சோதனை முறையில் தொடங்கப்பட்டுள்ளது. விரைவில் முழு உற்பத்தியைத் துவக்க இருக்கிறார்கள்.

இயற்கை எழில் சூழ்ந்த பின்தங்கிய ஆண்டிபட்டி வட்டாரத்தில் அமைந்துள்ள இவ்வாலை தமிழகத்தின் சிறந்த ஆலைகளில் ஒன்றாகத் திகழும் என்பதில் ஐயமில்லை!

அலை கடலோரம் அழகிய குடியிருப்புகள்

பல்லவர், சோழர் காலத்தில் எளிய மீனவ மக்களுக்கு, எழில் மிகு மாடிக் குடியிருப்புகளைக் கட்டித் தரும் நோக்குடன், தமிழ் நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், பல திட்டங்களைச் செயலாற்றி வருகின்றது.

இந்தத் திட்டப் பகுதியில் ஏற்கெனவே 276 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. தற்போது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஒப்புதல் அளித்ததிட்ட வரைபடத்தின்படி 'அட்கோ' உதவியுடன் 216 குடியிருப்புகள் ரூ. 33.00 இலட்சம் செலவில் கட்டத் திட்டமிடப்பட்டு, தற்போது 120 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

1974-ஆம் ஆண்டு சோதனை முறையில் இத்திட்டப் பகுதியில் கட்டப்பட்ட 90 குடியிருப்புகள் கடற் காற்றினால் பாதிக்கப்பட்டு, மக்கள் குடியிருக்கத் தகுதியற்ற அளவில் பழுது பட்டு விடவே, அக்குடியிருப்புகளை இடிப்பதற்கு ஆணையிடப்பட்டது. அக்குடியிருப்புக்களை அகற்றி விட்டு அந்த இடத்தில் மீதமுள்ள 96 குடியிருப்புகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. ஒரு குடியிருப்பின் மதிப்பு சுமார் 18.000 ரூபாய் ஆகும். மேலும் 'அட்கோ' நிதி உதவியுடன் ரூபாய் 53.41 இலட்சம் செலவில் 312 குடியிருப்புகள் கட்டுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பகுதியில் உள்ள ஒரு குடியிருப்பின் கட்டடப் பரப்பு 21.06 சதுர மீட்டர்கள் ஆகும். ஒவ்வொரு குடியிருப்பும் ஒரு பொது அறை, சமையல் பகுதி கழிப்பிட வசதியுடன் கூடிய குளியல் அறை கொண்டதாக இருக்கும். ஒவ்வொரு குடியிருப்பிற்கும் தண்ணீர், குழாய் மூலமாக, மேல்நிலைத் தொட்டிகளில் இருந்து வழங்கப்படும்.

இக்குடியிருப்புகளில் வசிக்கும் மீனவ மக்களுக்கு மாத வாடகை எவ்வளவு தெரியுமா? ரூ. 22 தான்!

குடிநீர் வசதிக்காக இப்பகுதியில் 16 அடி விட்டமுள்ள கிணறு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. வெளிப்புறத் தண்ணீர்க் குழாய் வசதிகள் ரூபாய் 0.50 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

குடியிருப்புகளில் இருந்து வெளியேறும் கழிவு நீர், சீரான முறையில் வெளியேற ரூ. 0.30 இலட்சம் செலவில் உட்புற, வெளிப்புறக் கழிவு நீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டு, முக்கிய சாலைகளில் செல்லும் கழிவு நீர்க் கால்வாய்களுடன் இணைக்கப்பட்டுள்ளன.

எந்த இடம் என்று ஊகிக்க முடிகிறதா?

சென்னை மயிலாப்பூர், அகில இந்திய வானொலி நிலையத்துக்கு எதிரில் உள்ள டொம்மிங் குப்பம் தான் அந்த வடப்பகுதி என்று வரலாறு கூறுகிறது.

இந்தத் தகவலை, 6.6.'84 அன்று தமிழ் நாடு குடிசைப் பகுதி மாற்றுவாரியத்தின் சார்பில் நடந்த குடியிருப்புகள் திறப்பு விழாவின் போது தெரிந்து கொள்கிறோம்.

இந்த டொம்மிங்குப்பத்தில் 120 குடியிருப்புகள் திறந்து வைக்கப் பெற்றன. 408 குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

சென்னை மாநகராட்சி 131வது வட்டத்தில், சுமார் 90 மனைப்பரப்பளவில், வங்கக் கடலோரமாக அமைந்துள்ளது தான் டொம்மிங்குப்பம்.

கடலோரப் பகுதிகளில் பெரு மளவில் எவ்வித வசதியுமின்றி கடலரிப்பினால் பாதிக்கப்படும் நிலையில் வசித்து வரும் ஏழை

ஏசுநாதர் இருதயம்

ஏசம்மையாரை

இயேசுக்கு இருதயம் உருவாக்கப்பட்டு கொண்டிருக்கிறபோது, ஒரு தேவதூதன் வந்து, ஒரு கத்தியை அவரிடம் கொடுத்தான். அதுவரை, ஒரு கத்தியை அவர் பார்த்ததே கிடையாது. அதை வாங்கி, அவர் தன் கையிலே வைத்துக் கொண்டார். அதுவரை, அவர் அதை அறிந்ததே கிடையாது. அதை வாங்கி, தன் கையிலே வைத்துக் கொண்டார். அதுவரை, அவர் அதை அறிந்ததே கிடையாது. அதை வாங்கி, தன் கையிலே வைத்துக் கொண்டார். அதுவரை, அவர் அதை அறிந்ததே கிடையாது. அதை வாங்கி, தன் கையிலே வைத்துக் கொண்டார்.

இதற்கு முன், ஏசுவுக்கு இருதயம் ஏசு பயன்படுத்தப் படவில்லை. ஒரு தேவதூதன் வந்து, ஒரு கத்தியை அவர் கையிலே கொடுத்தான். ஒரு தேவதூதன் வந்து, ஒரு கத்தியை அவர் கையிலே கொடுத்தான். ஒரு தேவதூதன் வந்து, ஒரு கத்தியை அவர் கையிலே கொடுத்தான். இதுவரை, ஏசு தன் இருதயத்தை பயன்படுத்தவில்லை. ஏசுவுக்கு இருதயம் இருந்தது. ஆனால், அதை அவர் பயன்படுத்தவில்லை. ஏசு தன் இருதயத்தை

பேரறிஞர் அண்ணாவின் இதயம் கவர்ந்த இடமல்லவா? இந்தக் காரணத்தினாலேயே 'அறிஞர் அண்ணா சுற்றுலா வளாகம்' என அப்பகுதிக்குப் பெயரிட்டிருக்கிறது அரசு.

சிதம்பரத்திற்குக் கிழக்கே 16வது கிலோ மீட்டரில் உள்ள மூவாயிரம் ஏக்கர் உப்பங்கழி பகுதியே பிச்சாவரம். கண்டமரம், சுரப்புன்னை மரம், ஆங்காங்கே சில தில்லைமரம் ஆகியவை நீர்ப்பரப்பின்மேலே நின்றிருக்கும் இங்கே. திட்டுத் திட்டாகக் காணப்படும் இந்த மரக்கூட்டங்கள் யாவும் ஒரே நாளில் பிறந்தவைபோலப் பத்தடிக்கு உட்பட்ட உயரத்துடனேயே காணப்படுகின்றன. ஆனால், அவற்றின் வயதோ நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு மேலிருக்கும்!.

ஆங்கிலத்தில், 'மாங்குரோவ்' காடுகள் எனக் குறிப்பிடப்படும் 18 வகை சுரப்புன்னை மரங்கள் உள்ள காடுகள் உலகிலேயே இங்கு தான் மிக அரிதாகக் காணப்படுகின்றன. இது பற்றித் தாவர இயல் ஆராய்ச்சியாளர் மேற்கொண்ட ஆய்வுகள் தொடர்ந்துகொண்டிருக்கின்றன.

பிச்சாவரத்திலிருந்து கிழக்கே 5 கிலோ மீட்டர் தூரம் நீர்வழியே சென்றால் நாம் கடலைக் காணமுடியும். இடைப்பட்டதெல்லாம் இயற்கை வளம் மிகுந்த அந்த வனப் பகுதிதான்; நீர்ப்பகுதிதான்.

1978ஆம் ஆண்டில் இப்பகுதியைச் சுற்றுலா மையமாக ஆக்கத் தமிழக அரசு மேற்கொண்ட முயற்சிகள் முற்றுப்பெற ஐந்தாண்டுக் காலம் பிடித்ததென்றால், இந்தத் தாமதத்திற்குக் காரணம் உண்டு. உப்பங்கழியோரத்தில் கட்டடம் எழுப்பவேண்டும்; கலவைகள் கலந்திட உப்புத் தண்ணீர் உதவுமோ? எனவே இங்கிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கிள்ளையிலிருந்து நல்ல தண்ணீர் கொண்டு வரப்பட்டது. கரையில், லாரிமூலம் கொண்டு வந்து இறக்கப்படும் செங்கல், சிமெண்ட் போன்றவை சிறு படகு மூலமே தூர உள்ள தீவில் கட்டப்பட்ட சுற்றுலாப்

பயணிகள் தங்கும் விடுதிப் பணிகளுக்காகக் கொண்டுசெல்லப்பட வேண்டும். இதற்கிடையில் அங்கே மரங்களை வெட்டலாகாது, கட்டடங்களை எழுப்பலாகாது என்றெல்லாம் தெரிவித்துக் கொண்டிருந்த மத்திய அரசுக்கு முறைப்படி விவரம் தெரிவித்து அவர்கள் முரண்படாதிருக்கச் செய்யவும்வேண்டும். இவ்வாறான காரணங்களினாலேதான் இச் சுற்றுலா மையம் திறக்கப்படுவதிலே சிறிது கால தாமதம் ஏற்பட்டது.

'முயற்சி திருவினை ஆக்கும்' அல்லவா?

16.6.'84ல், இந்த பிச்சாவரம் பகுதியில் 'அறிஞர் அண்ணா சுற்றுலா வளாகம்' திறப்பு விழா இனிதே நடைபெற்றது.

இக்கரையில், பேரறிஞர் அண்ணா சிலையருகே ஒரு சிற்றுண்டிச்சாலை அமைத்திடவும், சுமார் ஒன்றரை கி.மீ. தொலைவிலுள்ள அக்கரையில் சுற்றுலாப் பயணியர் தங்கும் அறைகள் கட்டிடவும் என இதுவரை 22½ இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இப்பகுதியிலுள்ள மீனவர்களுக்கென 100 இலவசக் குடியிருப்புகள் கட்டித்தரப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் பிச்சாவரம் பகுதியை இன்னும் மேம்படுத்துவதற்காக ஏழு இலட்சம் ரூபாய் செலவில் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

மாண்புமிகு மீன்துறை அமைச்சர் திரு. கே.கலைமணி முன்னிலையில், மாண்புமிகு

செய்தி-சுற்றுலா மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் தலைமையில், மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு ச.இராமச்சந்திரன் திறந்து வைத்த அறிஞர் அண்ணா சுற்றுலா வளாகத்தில் 6 தனிக்குடில்களும் 2 இளைஞர்விடுதி பொதுப் படுக்கை அறைகளும், உணவகமும், படகுக் குழாமும் கட்டப்பட்டுள்ளன. இளைஞர் விடுதி பொதுப் படுக்கை அறை ஒன்றுக்குப் பத்துப் படுக்கை வீதம் போட்டிருக்கிறார்கள்.

தனி அறைக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 35 வாடகை; இளைஞர் விடுதி பொது அறைப் படுக்கைக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 5 வாடகை.

தமிழ்நாடு அரசு சுற்றுலாத்துறை-தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஆகியவற்றின் சார்பிலே நடைபெற்ற இந்த வளாகத் திறப்பு விழாவிற்கு முன்னதாகப் பிச்சாவரத்தில் கரகஆட்டம்போன்ற கலைநிகழ்ச்சிகளெல்லாம் நடைபெற்றன. பின்னர், விழாவிற்கு வருகை தந்திருந்தோரை, வரவேற்ற தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு க.பாலசுப்பிரமணியம் எம்.எம்.ஏ., "இந்த சுற்றுலா வளாகம் சிறப்படைய இப்பகுதி மக்கள் பெருமளவில் ஒத்துழைப்புத் தர வேண்டும்'' என்றார்.

மீன்துறை துணை இயக்குநர் திரு. நடராசன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.வி.வி. சுவாமிநாதன், திரு கே.ஆர். கணபதி, மேலவை உறுப்பினர் திரு ஏ.பி. சிவராமன் ஆகியோர் உரையாற்றினர். இந்த விழாவில் முக்கிய விருந்தினராக வந்து கலந்து கொண்டனர் திரு. ரோடர் என்ற ஜெர்மனிய தம்பதிகள்; அவர்கள் தங்களது பெண்குழந்தைக்கு 'சீதா' என்று பெயர் வைத்து, தமிழகத்தின் மீது தமக்குள்ள அன்பை வெளிப்படுத்திக் கொண்டுள்ளனர். திருமதி. ரோடர் பேசுகையில் ''கல்வி, பண்பாடு, கலாச்சாரம் இவற்றோடு இணைந்தாற்போலச் சுற்றுலாவை வளர்த்துவரும் தமிழ்நாடு அரசுக்கும், அரசின் இப்படிப்பட்ட நல்ல முயற்சிகளுக்கும் எங்கள் பாராட்டுக்கள்'' என்றார்.

அந்த அம்மையாரின் ஆங்கில உரையைச் சுற்றுலாத் துறை இயக்குநரும், அலுவலால் செயலருமான திரு இரா.கிருபாகரன், இ.ஆ.ப. தமிழில் மொழி பெயர்த்தார்.

மாண்புமிகு மீன்துறை அமைச்சர் திரு. க.கலைமணி பேசுகையில்: ''முதன் முதலில், தன்னிகரற்ற தலைவர் பெயரால் திறக்கப்

4-வது அட்டைச் செய்தி

படும் சுற்றுலா வளாகம் இதுவே, இந்த அரசு வந்த பிறகுதான் சுற்றுலாத்துறை மக்களோடு தொடர்புடையதாக, இந்தியாவிலேயே முன்னோடித் துறையாக விளங்கி வருகிறது'' என்றார்.

திரு. தேவேந்திரன் என்பார், தன்னிடம் பெயர் சூட்டக் கொடுத்த பெண் குழந்தைக்கு 'மணிமேகலை' என்று பெயரிட்ட மாண்புமிகு செய்தி-சுற்றுலா மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன், அங்கே மரக்கன்று நட்டார். பின்னர் பேரறிஞர் அண்ணா படத்தைத் திறந்து வைத்துப் பேசிய அவர் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

''பேரறிஞர் அண்ணா அவர்கள், இந்த பிச்சாவரம் பகுதியைச் சுற்றுலா மையமாக்க விரும்பினார்கள். அந்த விருப்பத்தை நிறைவேற்றி வைக்கும் வகையில் இங்கே ஒரு சுற்றுலா வளாகத்தை உருவாக்கி, பேரறிஞர் அண்ணா அவர்களின் பவள விழா ஆண்டிலேயே, அவர்கள் பெயராலேயே இதைத் திறந்து வைப்பதில் நாங்கள் பெருமகிழ்ச்சி கொள்கிறோம். இந்தப் பகுதியில் மிக அரிதாகக் காணப்படும் சுரப்புன்னை மரங்களை வேறு யாரும் வெட்டாமல்-தாமும் வெட்டாமல் இங்குள்ள மக்கள் பாதுகாக்க வேண்டும். மிக விரைவிலேயே இந்தச் சுற்றுலா வளாகம் உலகப் புகழ் பெற்றதாக மாறவிருக்கிறது. அதற்கேற்ற 'மாஸ்டர் பிளான்' ஒன்று தமிழ்நாடு அரசால் விரைவில் தயாரிக்கப்படும்''.

மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு ச.இராமச்சந்திரன், சுற்றுலா வளாகக் குடில்கள், இளைஞர் விடுதி, உணவகம், படகுக் குழாம் ஆகியவற்றைத் திறந்து வைத்துப் பேசியதாவது:

''அரசு மூலம் அமைக்கப்படும் சுற்றுலா மையங்களில் விளையாடுமிடம், விஞ்ஞானக் கூடம், வியாபார நிலையம் போன்றவற்றைத் தனியார் நிறுவனங்களே உருவாக்க முன்வர வேண்டும். அப்படிச் செய்வோருக்கு மத்திய அரசு வரிவிலக்குச் சலுகை தரலாம். இதனால் மிகுந்த அன்னியச் செலாவணி வர மார்க்கமுண்டு. ஏற்றுமதி மூலம் பெருத்த வருவாய் ஈட்டித் தரும் தொழில் என்றே சுற்றுலாத் துறையையும் கருதி மத்திய அரசு இதற்கான சலுகைகளை இன்னும் அதிகமாக்க முன் வர வேண்டும்.''

விழா முடிந்தபின், அமைச்சர்களால், நலிந்தோர்க்குக் கடன் வழங்குதல் திட்டத்தின் மூலம் ஊரக வளர்ச்சித்துறை சார்பில் 16 பேருக்குக் கறவை மாடுகளும், 46 பேருக்கு மீன் வலைகளும், 7 பேருக்கு டயர் வண்டிகளும், 7 பேருக்குத் தொழிற்கடன்களும் வழங்கப்பட்டன.

இவைகளின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 3,08,000 ஆகும்.

விழா முடிவில் சுற்றுலா வளர்ச்சிக் கழக நிர்வாக இயக்குநர் திரு நை.கோவிந்தன், இ.ஆ.ப.நன்றி கூறினார்.

நிகழ்ச்சித் தொகுப்பு:

பி. எல். ராஜேந்திரன்.

இரும்பு மனிதர் மறைவு

வலகத்திலுள்ள வளர்ச்சி மன்றக் கூடத்தில் மாவட்டத்திலுள்ள மகளிர் மன்றங்களைச் சேர்ந்த தாய்மார்கள் - குறிப்பாக இஸ்லாமியத் தாய்மார்கள் பேரளவில் கலந்து கொண்ட குடும்ப நலத் திட்டக் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. வீ. மணிவண்ணன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு வந்திருந்தோரை திருமதி மணிக் கொடி வரவேற்று உரையாற்றினார்.

சிறப்புரையாற்றினார் தமிழ்நாடு அரசு இரண்டாம் செயலாளர் திரு டி. வி. அந்தோணி அவர்கள்.

குடும்பநலத் துறை இயக்குநரும், அரசு அலுவல் வழிச் செயலாளருமான திரு து. முருகராசு, குடும்பநலத் துறை துணை இயக்குநர் திரு கே. இராதாகிருஷ்ணன் ஆகியோரும் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அன்று மதியம் தர்மபுரி மாவட்ட அனைத்து அரசு அலுவலர் சங்கப் பிரதிநிதிகள் கூட்டம் மேற்படி மண்டபத்திலேயே நடந்தது. இக்கூட்டத்தில் அரசு இரண்டாம் செயலாளர் திரு டி. வி. அந்தோணி அவர்கள் '58 வயதில் ஓய்வு பெறும் அரசு ஊழியர்கள் திட்டமிட்டுக் குடும்பத்தை அமைத்துக் கொள்வது குறித்து' விரிவாக விளக்கி உரையாற்றி அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர், குடும்ப நலத் துறை இயக்குநர் மற்றும் அலுவல் வழி அரசுச் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். அரசு ஊழியர் சங்கங்களைச் சார்ந்தோர், 1985 ஆம் ஆண்டைத் திட்டமிட்ட குடும்ப ஆண்டாக வெற்றிகரமாக நிறைவேற்ற எல்லாவிதமான ஒத்துழைப்பையும் நல்குவதாக உறுதி கூறினர்.

அன்று மாலை அனைத்து அரசு அலுவலர்களும் ஊழியர்களும் கலந்து கொண்ட மாபெரும் குடும்ப நல ஊர்வலம் தர்மபுரியிலுள்ள அரசு அவ்வையார் மகளிர் மேல்நிலைப் பள்ளியிலிருந்து புறப்பட்டது. குடும்பநலத் திட்டம் குறித்த எழுச்சிமிகு இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டோர் குடும்ப நல மொழிகளைக் கொண்ட அட்டைகளையும் கைகளிலேந்தி முழக்கமிட்ட வண்ணம் வந்தனர்.

உணர்வு பூர்வமான இந்த ஊர்வலத்தால் பல்லாயிரக்கணக்கான மக்கள்-அன்று நடந்த தர்மபுரி சந்தைக்கு வந்த பல்லாயிரக்கணக்கான கிராம மக்கள் குடும்ப நலத் திட்டம் குறித்து விளக்கம் பெற்றனர். இந்த ஊர்வலம் நான்கு ரோடு சந்திப்பில் - பேரறிஞர் அண்ணா அவர்களது சிலை அருகே வந்தபோது அரசு உயர் அலுவலர்கள் கண்டு களித்து ஊர்வலத்தினருக்கு உற்சாக மூட்டினர்.

தர்மபுரி விளையாட்டு அரங்கை ஊர்வலத்தினர் அடைந்ததும், மாவட்ட ஆட்சித் தலைவர் வீ. மணிவண்ணன் தலைமையில் '1985 ஆம் ஆண்டு திட்டமிட்ட குடும்ப ஆண்டு உறுதி மொழி ஏற்பு விழா' நடைபெற்றது. தர்மபுரி மாவட்டக் கடைநிலை ஊழியர் சங்கத் தலைவர் திரு. மதலைமுத்து வரவேற்புரையாற்றினார்.

தலைமையுரையாற்றிய மாவட்ட ஆட்சித் தலைவர், எழுச்சிமிக்க ஊர்வலத்தை நடத்திய அத்தனை பேருக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் குடும்ப நலத் திட்டத்தின் சீரிய கொள்கையை அரசு ஊழியர்கள் பின்பற்ற எல்லா உதவிகளையும் செய்ய அரசு தயாராக உள்ளது என்றும் கூறினார்.

அடுத்து அரசு கடைநிலை ஊழியர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் திரு. துளசிங்கம் பேசுகையில் குடும்ப நலத் திட்டத்தை வெற்றியுறச் செய்ய புரட்சிகரமான அணுகுமுறை பின்பற்றப்பட்டு வருகிறது என்றார். அவரைத் தொடர்ந்து பேசிய தமிழ்நாடு அரசு அலுவலர் கழகத்தின் (சி&டி) மாவட்டத் தலைவர் திரு சோமசுந்தரம், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாவட்டத் தலைவர் திரு. அப்துல் சுபான் ஆகியோர், உறுதி மொழி ஏற்கும் அரசு ஊழியர்கள் நிச்சயமாகக் குடும்பநலத் திட்டத்தைப் பின்பற்றுவார்கள் என உறுதி கூறினார்கள். பின் உரையாற்றிய குடும்பநலத் துறையின் துணை இயக்குநர் திரு கோ. இராதாகிருஷ்ணன் அவர்கள் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்திச் சாதனை ஏற்படுத்தி வரும் நாம், மக்கள் தொகைப் பெருக்கம் ஏற்படக் காரணமாகிச் சோதனைக்குள்ளாகி விடக் கூடாதென்றும், வீடு தோறும் ஆண்டுக்காண்டு பிள்ளை பெற்றால் நாடு தாங்காது என்றும் கூறினார்.

இவ்விழாவில் கலந்து கொண்ட சட்டமன்ற உறுப்பினர்கள், 'பொதுமக்களும் அரசு ஊழியர்களைப் போலவே 1985 ஆம் ஆண்டைத் திட்டமிட்ட, குடும்ப நல ஆண்டாகக் கடைப்பிடிக்க வேண்டுமென்று' கேட்டுக் கொண்டனர்.

அடுத்து உரையாற்றிய அரசு இரண்டாம் செயலாளர் திரு.டி. வி.அந்தோணி அவர்கள், உறுதி மொழி ஏற்ற அரசு ஊழியர்கள் அதைச் செயல்படுத்துவதில் கண்ணும் கருத்துமாக இருந்து வெற்றி தேடித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

பின், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் தர்மபுரி மாவட்டத் தலைவர் திரு அப்துல் சுபான் 1985 ஆம் ஆண்டு குழந்தை பெற்றுக்கொள்ளமாட்டோம் என்ற உறுதி மொழியைப் படிக்க, விழாவில் கலந்து கொண்ட அத்தனை அரசு அலுவலர்களும் ஊழியர்களும் உறுதி மொழி ஏற்றனர்.

சிறுசேமிப்புத் திட்டம், குடும்ப நலத்திட்டம் ஆகியவற்றில் கடந்த ஆண்டு சிறப்பாகப் பணியாற்றியவர்களுக்கு குடும்பநலத் துறை இயக்குநர் மற்றும் அலுவல்வழி அரசுச் செயலாளர் திரு. து.முருகராசு இ.ஆ.ப.அவர்களும், அரசு இரண்டாம் செயலாளர் திரு.டி.வி.அந்தோணி அவர்களும் பரிசுகளை வழங்கினார்கள். தர்மபுரி மாவட்டக் குடும்பநல விளம்பர அலுவலர் திரு இராமச்சந்திரன் நன்றி கூறி உரையாற்றினார். கடைசியில் அரசு ஊழியர்கள் நடத்திய ''குறையல்ல ... நிறை' என்ற குடும்ப நல நாடகம் அனைவரையும் கவர்ந்தது.

தொகுப்பு :
எஸ். முத்துராமலிங்கம்

குளிர்ச்சி மூலம் அறுவைச் சிகிச்சை

மருத்துவத்தில் குளிர்ச்சியைப் பயன்படுத்தி, நோய்களைக் குணப்படுத்தும் முறை நெடுங்காலத்திற்கு முன்பே மருத்துவர்களுக்குத் தெரிந்திருந்தது. புராதன கிரேக்க நூல்களில் இது பற்றிய குறிப்புகள் உள்ளன; இதைப் பயன்படுத்தும் முறைகளை ஹிப்பாக்ரட்டீசும் தம் நூல்களில் விளக்கியுள்ளார்.

உடலில் நோய் கண்ட இடத்தை மட்டும் உறைய வைப்பதற்கான சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பின், இந்த முறையில் புதிய சாத்தியப்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இந்தச் சாதனத்தைக் கொண்டு உடலின் மேற்பரப்பில் மட்டுமல்லாமல், உட்புறத்தில் உள்ள உறுப்புகளையும் உறைய வைத்துச் சிகிச்சை செய்ய முடியும்.

இந்த முறையைக் கையாள்வதால் அறுவைச் சிகிச்சையை மிகத் திறம்படவும் விரைவாகவும் செய்ய முடிகிறது. இதனால் உடலில் நோய் கண்ட இடத்தைச் சுற்றியுள்ள ஆரோக்கியமான திசுக்கள் சேதமடைவதில்லை. அறுவைச் சிகிச்சை செய்யும்பொழுது இரத்தமும் வீணாவதில்லை.

சோவியத் யூனியனில் உக்ரேனிய விஞ்ஞானப் பேரவையில் குறைந்த-வெப்ப பௌதிக, தொழில் நுட்பக் கழகம் இந்தச் சாதனத்தைத் தயாரித்துள்ளது. மூளை அறுவைச் சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் இத்தகைய சாதனத்தை மருத்துவர்கள் பெரிதும் போற்றுகின்றனர். உலோகத்திலான அறுவைச் சிகிச்சைக் கருவிகளைவிட இது அதிகம் திறமை வாய்ந்ததாகும். காக்காய் வலிப்பு, மூளையில் தோன்றும் கட்டிகள் முதலிய நோய்களை இந்தச் சாதனத்தைக் கொண்டு குணப்படுத்த முடிதும். இந்தச் சாதனத்தை எளிதில் கையாள முடியும் என்பதுடன், அறுவைச் சிகிச்சை செய்யப்பட்ட இடத்தில் வடுவும் இருப்பதில்லை.

தீராத எக்ஸிமா போன்ற சரும நோய்களைக் குணப்படுத்தவும் இந்தச் சாதனம் பயன்படுகிறது.

சோவியத் செய்திக் கட்டுரைகள்.

—செ. மு. பசீர்,
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர், (பொறுப்பு).
கன்னியாகுமரி மாவட்டம்

தமிழ்நாடு அரசு சுற்றுலாத் துறை கன்னியாகுமரியில், ரூ. 5 இலட்சம் செலவில் இளைஞர் விடுதி ஒன்றைக் கட்டியுள்ளது.

மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் இந்த இளைஞர் விடுதியை கன்னியாகுமரியில் 25-5-84 அன்று திறந்து வைத்தார்.

''இன்று இங்கு திறக்கப்பட்ட இளைஞர் விடுதி தமிழ்நாட்டில் ஒன்பதாவது இளைஞர் விடுதியாகும். இந்த இளைஞர் விடுதி உலக அளவில் புகழ் பெற்றதாக உள்ளது. இன்று திறக்கப்பட்ட இளைஞர் விடுதி 34 படுக்கைகள் கொண்டது. மேலும் 8.5 லட்ச ரூபாயில் 50 படுக்கைகள் கொண்ட விடுதியும், 1.5 லட்சரூபாயில் 16 படுக்கைகள் கொண்ட ஒரு விடுதியும் விரைவில் கட்டப்படவுள்ளன. உல்லாசப் பேருந்தில் கன்னியாகுமரி வருகிறவர்கள் இரவில் படுத்து காலையில் குளித்துச் செல்ல வசதியாக நவீன சத்திரம் ஒன்று 2.5 லட்சம் ரூபாயில் கட்டப்படவிருக்கிறது'' என்று மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

கன்னியாகுமரியை நவீனப் படுத்துவதற்குத் தமிழ்நாடு அரசு இப்போது ஒரு கோடி ரூபாய் செலவில் பல திட்டங்களைச் செய்து கொண்டிருக்கிறது.

இந்த இனிய விழாவிற்குத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. க. பாலசுப்பிரமணியம் தலைமை வகித்தார். கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. எல். கே. திரிபாதி, இ.ஆ.ப. முன்னிலை வகித்தார்.

விழாவின் துவக்கத்தில் சுற்றுலாத்துறை இயக்குநர் திரு. இரா. கிருபாகரன் வரவேற்றுப் பேசினார். இறுதியில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக நிர்வாக இயக்குநர் திரு. என். கோவிந்தன் நன்றி கூறினார்.

நாகர்கோவில் நாகராஜா கோவில் திருமண மண்டபம்.

அறநிலையத் துறையின் சார்பில், நாகர்கோவில் அருள்மிகு நாகராஜா திருக்கோவிலில் ரூ. 7 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள திருமண மண்டபத்தை மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் 25—5—84 அன்று திறந்து வைத்தார்.

இந்த விழாவிற்கு மாண்புமிகு மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமை யேற்றார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமது உரையின்போது குறிப்பிட்டதாவது:

''மூன்றாண்டுகளுக்கு முன்னர் இந்தத் திருமண மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு—இன்று கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ளது. இந்த மண்டபம் திருமணத்திற்கு மட்டுமல்லாமல் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தும் அரங்கமாகவும் செயல்படும். ரூபாய் 7 இலட்சம் செலவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சுசீந்திரம் கோவில் திருப்பணி முடியும் கட்டத்தில் உள்ளது. விரைவில் குடமுழுக்கு விழா நடைபெறும். தேவஸம் போர்டு நடத்திவரும் குழித்துறை தேவி குமாரி பெண்கள் கல்லூரியில் ரூபாய் 2½ இலட்சம் செலவில் கட்டப்பட்டு வரும் கட்டடத்தில் திறப்பு விழாவும் விரைவில் நடைபெறும்.

"இப்பணிகள் நிறைவேற்றிய பின்னர், சுசீந்திரம் கோவில் தெப்பக்குளம் ரூ. 2 இலட்சம் செலவில் தூர் எடுக்கப்படும். கன்னியாகுமரி அருள்மிகு பகவதியம்மன் கோவிலில் குமரித்தாய்க்கு ராஜ கோபுரம் கட்டப்படும். தமிழகத்தின் உயர்வையும், பண்பாட்டையும், கலையையும் உலகிற்கு எடுத்துக்காட்டும் வகையில் இந்த ராஜகோபுரம் விளங்கும்.''

விழாவில் 100 கைத்தறி நெசவாளர்களுக்குத் தொழில் செய்ய நாகர்கோவில் பாரத வங்கியின் மூலம் வழங்கப்பட்ட ரூ. 4 இலட்சம் கடனுதவியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கன்னியாகுமரியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள இளைஞர் விடுதியைத் திறந்து வைக்கிறார்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

தமிழரசு
16-7-1984 75 காசு
திருவள்ளுவர் ஆண்டு 2015
ரக்தாக்ஷி — ஆடி 1
தமிழரசு
Licence No. TN/MS(C)/PP:23
பதிவு எண். M. 8676

THE THENI COOPERATIVE SPINNING MILLS LTD (MILL) • THENI-626531 • (191)

தமிழகத்தில் நிறுவப்பட்டுவரும்
முதல் பருத்தி விவசாயிகள் ஆலை

தேனி கூட்டுறவு நூற்பாலை லிமிடெட்.

தேனி-626531, மதுரை மாவட்டம்.

பருத்தி விவசாயிகளே!

ஆலையில் பங்கு மூலதனம் எடுத்துப் பருத்தி விவசாய மேம்பாட்டிற்கும், விற்பனைக்கும், புதுப்பாதை அமைத்திடுவீர்!

சமூக-பொருளாதார தொழில் ரீதியாகப் பின் தங்கியுள்ள ஆண்டிபட்டிப் பகுதியின் கூட்டுறவுத் தொழில் வளர்ச்சிக்குக் கூடித் துணை நிற்பீர்!

கி. ராஜமாணிக்கம் எம்.ஏ.,
மாவட்ட வருவாய் அலுவலர்/நிர்வாக இயக்குநர்

வி. சந்திரலேகா, இ.ப
மாவட்ட ஆட்சியர்/தலை



புதிய மாவட்டங்கள் மலருகின்றன!

"மாவட்ட நிர்வாகத்தை மேலும் பயனுள்ளதாக்குவதற்கென மாநிலத்தில் உள்ள சில பெரிய மாவட்டங்களைப் படிப்படியே பிரிக்கும் முடிவை அரசு எடுத்துள்ளது. இதன்படி இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்ட இராமநாதபுர மாவட்டம் என்றும், சிவகங்கையைத் தலைமையிடமாகக் கொண்ட பசும்பொன் முத்துராமலிங்கர் மாவட்டம் என்றும், விருதுநகரைத் தலைமையிடமாகக் கொண்ட காமராஜர் மாவட்டம் என்றும் பிரிக்கப்படும்" என்று மேதகு ஆளுநர் திரு எஸ்.எல்.குரானா அவர்கள் சட்டமன்றக் கூட்டு அவையில் 13.2.1984ல் ஆற்றிய உரையில் குறிப்பிட்டார்கள்.

திருநெல்வேலி, மதுரை, தஞ்சை வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, திருச்சி ஆகிய மாவட்டங்களும் நிருவாகவசதிகளை முன்னிட்டுப் பிரிக்கப் பெறும் என்றும், புதிய மாவட்டங்களின் பரப்பளவு, உள்ளடங்கும் வட்டங்கள், அங்கு ஏற்படுத்தப்பட வேண்டிய வசதிகள் ஆகியவற்றைக் குறித்து வல்லுநர் குழு ஆராய்ந்து அறிந்து அரசிற்குப் பரிந்துரைகள் செய்யுமென்றும், அதன் பின்னர் அரசு தக்கபடி ஆராய்ந்து ஏற்ற வகையில் முடிவெடுத்து அந்த முடிவுகளைப் படிப்படியாக நிறைவேற்றும் என்றும் அந்த உரையில் மேதகு ஆளுநர் தெரிவித்தார்.

ஆளுநர் உரைக்குப் பின்னர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்தக் கருத்தை வலியுறுத்திச் சட்டமன்றத்தில் உரையாற்றினார்.

தமிழக அரசின் இரண்டாவது செயலாளர் திரு டி.வி. அந்தோணி அவர்களைத் தலைவராகவும், திரு ஏ.பத்மநாபன், இ.ஆ.பு, திரு என். ஹரிபாஸ்கர், இ.ஆ.ப. ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட குழு, மார்ச் 30 ஆம் நாளன்று இராமநாத புரம், சிவகங்கை ஆகிய ஊர்களுக்கும் 31 ஆம் நாளன்று விருதுநகருக்கும் சென்று ஆய்வு நடத்தித் தனது அறிக்கையை அரசுக்குச் சமர்ப்பித்தது.

1910 ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய வட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு சிவகங்கை, இராமநாதபுரம் ஜமீன் பகுதிகளுடன் சேர்க்கப்பட்டு, பழைய மதுரை மாவட்டத்தின் ஒரு பகுதியாகத் தற்போதைய இராமநாதபுரம்மாவட்டம் இருந்தது. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து கலபமாகத் தொடர்பு கொள்ளக்கூடிய மத்திய பகுதி போன்ற அம்சங்களை ஆய்ந்து பார்த்து மதுரை நகரமே, இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைநகரமாக அந்நாளில் தேர்ந்தெடுக்கப்பட்டது.

மக்களுக்கு சிறந்த நன்மைகள் சீக்கிரம் கிடைத்திட, நிருவாக வசதிகளை முன்னிட்டு-'இந்த இராமநாதபுரம் மாவட்டம் மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப்படுகிறது.

மேதகு ஆளுநர் அவர்கள் அறிவித்ததுபோல் விருதுநகரைத் தலைமையிடமாகக் கொண்ட காமராஜர் மாவட்டம், சிவகங்கையைத் தலைமையிடமாகக் கொண்ட பசும்பொன் முத்துராமலிங்கர் மாவட்டம், இராமநாதபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்ட இராமநாதபுரம் மாவட்டம் ஆகியவை ஜூலை 15,16,17 ஆகிய நாட்களில் மலர்கின்றன.

அடை சொல்லும் செய்தி

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2015
ரக்தாக்ஷி — ஆடி 1
மலர் : 15 16-7-1984 இதழ் : 2



புதிதாக அமைக்கப்படும் 3 மாவட்டங்களையும் காட்டும் படம்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆறு வட்டங்கள் கொண்ட இரு கோட்டங்கள் இருக்கும்.

விருதுநகர், அருப்புக்கோட்டை, திருச்சுழி ஆகிய பகுதிகள் கொண்ட அருப்புக்கோட்டைக் கோட்டம், சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர், இராஜபாளையம் ஆகிய பகுதிகள் கொண்ட சிவகாசிக்கோட்டம் காமராஜர் மாவட்டத்தில் அடங்கும்.

இராமநாதபுரம், இராமேஸ்வரம், திருவாடானை ஆகிய பகுதிகள் கொண்ட இராமநாதபுரம் கோட்டம், பரமக்குடி, முதுகுளத்தூர், கமுதி ஆகிய பகுதிகள் கொண்ட பரமக்குடிக் கோட்டம் இராமநாதபுரமாவட்டத்தில் அடங்கும்.

சிவகங்கை, இளையான்குடி, மானாமதுரை ஆகிய பகுதிகளைக் கொண்ட சிவகங்கைக் கோட்டம், தேவகோட்டை, திருப்பத்தூர், காரைக்குடி ஆகிய பகுதிகளைக் கொண்ட தேவகோட்டைக் கோட்டம் பசும் பொன் முத்துராமலிங்கர் மாவட்டத்தில் அடங்கும்.

காமராஜர் மாவட்டத்தின் பரப்பளவு 4,223 சதுர கிலோ மீட்டர், மக்கள் தொகை 13.40 இலட்சம். பசும்பொன் முத்துராமலிங்கர் மாவட்டத்தின் பரப்பளவு 4,136 சதுர கிலோ மீட்டர்: மக்கள் தொகை 9.73 இலட்சம். இராமநாதபுர மாவட்டத்தின் பரப்பளவு 4,216 சதுர கிலோ மீட்டர்; மக்கள் தொகை 10.19 லட்சம்.

புதிதாக உருவாகும் காமராஜர் மாவட்டத்தின் அமைப்புக்கான தனி அலுவலராகத் திரு எல்.என்.விஜயராகவன், இ.ஆ.ப., பசும் பொன் முத்துராமலிங்கர் மாவட்டம் அமைப்புக்கான தனி அலுவலராகத் திரு நரேஷ் குப்தா, இ.ஆ.ப.நியமிக்கப்பட்டுள்ளனர்.

மூன்று மாவட்டங்களிலும் குடியிருப்பு வசதித் திட்டம், குடிநீர் விநியோகத் திட்டம் ஆகியவை மேற்கொள்ளப்படுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இராமநாதபுரம் மாவட்டத்திற்குத் தலைநகரம் இல்லாதிருந்த குறை, இந்தப் புதிய மாவட்ட அமைப்பினால் போக்கப்படுவதுடன், புதிய உத்வேகத்துடன் வளர்ச்சிப் பணிகள் நடைபெற வழியேற்பட்டுள்ளது என்பதில் ஐயமில்லை.

புதிய மாவட்டங்கள் சில தகவல்கள்—

* இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இதுபோன்று ஒரு மாவட்டத்தின் தலைநகரம் வேறொரு மாவட்டத்தில் அமைந்திருக்கும் நிலை இருந்திருக்க முடியாது.

* மிகவும் பின்தங்கிய மாவட்டமாக இராமநாதபுரம் மாவட்டம் இருந்ததால், அது நல்ல முறையில் வளர்ச்சி பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் தற்போது அது மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப்படுகிறது.

* 1984-85 நிதி ஆண்டுக்கு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ. 1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

* ஹட்கோ, எல்.ஐ.சி. போன்ற நிறுவனங்களிடமிருந்து நிதி உதவி பெற்று வீட்டு வசதி வாரியப் பணிகளுக்காக காமராஜர் மாவட்டத்திற்கு ரூ. 80 லட்சம், பசும் பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்திற்கு ரூ. 194 லட்சம், இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ரூ. 83 லட்சம் செலவிடப்படும்.

* குடிநீர் வசதிக்காகப் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்திற்கு ரூ. 40.6 லட்சம், காமராஜர் மாவட்டத்திற்கு ரூ. 25 லட்சம், ஒதுக்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பெரிய கண்மாயின் கொள்ளளவை அதிகப்படுத்தி நன்னீர் வசதி செய்வதற்கு ரூ. 1.17 லட்சம் செலவிடப்படுகிறது.

* புதிய மாவட்ட அமைப்பினை ஒட்டி இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி புதிய வருவாய்க் கோட்டமாக அமைகிறது.

* மூன்று மாவட்டத்திற்கும் உரிய தனி அலுவலர்களின் அலுவலகங்கள் மதுரையில் சிறிது காலத்திற்கு இயங்கும்; ஓராண்டுக் காலத்திற்குள் அந்தந்த மாவட்டத் தலைநகரங்களில் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகங்கள் இயங்கும்.

* இரண்டாண்டுக் காலத்திற்குள் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகக் கட்டடங்கள் முழுமையாகக் கட்டி முடிக்கப்பெறும்.

* மாவட்ட ஆட்சியாளர் அலுவலகங்கள் அமைப்பதற்காக காமராஜர் மாவட்டத்திற்கு ஏறக்குறைய 40 ஏக்கர் நிலத்தையும், இராமநாதபுர மாவட்டத்திற்கு 50 ஏக்கர் நிலத்தையும், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்திற்கு 135 ஏக்கர் நிலத்தையும் அரசு வழங்கியுள்ளது.

காமராஜர் பெற்ற மகிழ்ச்சி

முருகமசிவாயம்

முதலமைச்சராகக் காமராஜ் கோலோச்சி வந்த காலம்.

கடைக்காரர்கள் தூது

தமிழ்நாடு குடியிருப்பு மற்றும் வாடகைக் கட்டுப்பாடு (திருத்த) மசோதா செலக்ட் கமிட்டியின் பரிசீலனைக்கு விடப்படுகிறது.

செலக்ட் கமிட்டி சிபாரிசுகள் சட்டசபையில் அறிவிக்கப்படுகின்றன. வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்திலிருந்து கடைகளுக்கு "விலக்கு" அளிக்கப்படும் என்பதும் திருத்த மசோதாவில் ஒரு ஷரத்து; செலக்ட் கமிட்டியின் சிபாரிசு!

கடைகளுக்கு வாடகைக்கட்டுப்பாடு இல்லை, கடை உரிமையாளர் தமது இஷ்டம்போல் வாடகையை நிர்ணயிக்கவும் காலி செய்யவும் உரிமை பெறுகிறார்கள். திருத்த மசோதாவின் விளைவு இது.

கடைக்காரர்கள் அதிர்ச்சி அடைகின்றனர். 'திடும்' எனக் கடையைக் காலி செய்யச் சொன்னால், வாடகையை உயர்த்தினால் என்ன ஆகும்?

கடைக்காரர்கள் வர்த்தக சபையினர் பலரும் ஒன்று கூடுகின்றனர். அழுகும் பொருள் வியாபாரிகள் சங்கத் தலைவர், எஸ். சூரியநாராயணன் தலைமையில் ஒரு தூதுக்குழு, முதலமைச்சர் காமராஜரைச் சந்திக்கிறது.

கடைக்காரர்களது அச்சத்தைப் புரிந்து கொள்கிறார் காமராஜ்.

"சரி! மொத்தமாக எல்லாக் கடைகளுக்கும் கட்டுப்பாடு போடறது சரியில்லே. மாதம் ரூபாய் இருநூறு வாடகையும் அதற்கும் கீழ் உள்ள கடைகளுக்கு சட்டப்படி பாதுகாப்பு கொடுத்திடறேன். ரூபாய் இருநூறுக்கு மேற்பட்ட பெரிய கடைகளுக்கு விதிவிலக்கு கொடுக்கலாம், திருப்திதானே!" கேட்கிறார், காமராஜ்.

"ரொம்பத் திருப்தி! மசோதா நாளைக் காலை சட்டசபையில் விவாதத்திற்கு வருகிறது. நாளைக்கே சட்டம் ஆயிடுமே?" —தூதுக்குழுவினர், கவலையைத் தெரிவிக்கின்றனர்

"அது தெரியும்ங்கறேன். நாளைக்கு வரட்டும். இருநூறு ரூபாய் வரையிலுள்ள கடைகளுக்கு, கட்டுப்பாடு உண்டு. அதற்கும் மேலேதான் விலக்கு உண்டுன்னு ஒரு திருத்தம் — சர்க்கார் தரப்பிலிருந்து திருத்தம் சேர்த்துட்டாப் போச்சு! கவலைப்படாதீங்க! நான் பார்த்துக்கறேன்".

நன்றி தெரிவித்து விட்டு தூதுக்குழுவினர் எழுந்து விடைபெற்றுச் செல்ல முனைகின்றனர்.

கண்ட்ரோலை எதிர்ப்பதா?

"கொஞ்சம் உட்காருங்க! 'கண்ட்ரோல் கூடாது. கட்டுப்பாடு வேண்டாம்' என்று கூப்பாடு போடறீங்களே! இப்ப உங்களுக்கே, 'கண்ட்ரோல்

கட்டுப்பாடு' அவசியம்னு புரியுது இல்லே! சரி, போயிட்டு வாங்க!''

கரம் கூப்பி விடை கொடுக்கிறார் காமராஜ்.

காமராஜரின் அனுபவ அறிவுக் கூர்மையைக் கண்டு, வியாபாரிகள் துதுக்குமூவினர் பிரமித்துப் போகின்றனர்.

குமுறும் இளைஞன்

காமராஜரது வாழ்வில் மற்றுமோர் நிகழ்ச்சி! முதலமைச்சராகத் தாம் பதவி ஏற்றது குறித்து அவரே சந்தோஷப் பட்டுக் கொண்ட நிகழ்ச்சி.

ஒரு நாள், கோட்டையில் நிருபர்கள், முதலமைச்சர் காமராஜரைச் சந்தித்துவிட்டு வெளியே வருகிறோம்.

அப்போது, வெளியில் ஓர் இளைஞன், முகத்தைக் கைகளினால்தாங்கியபடியே, குமுறிக் கொண்டு இருப்பதைக் காண்கிறேன்.

''என்ன? ஏன்'' என்று கேட்கிறேன்.

அந்த வாலிபன் கூறியதைக் கேட்டதும் பதைப்புடன் முதலமைச்சர் காமராஜ் அறைக்குள் ஓடுகிறேன், வாலிபனையும் பிடித்து இழுத்துக் கொண்டு!

''என்னா?'' கனிவுடன் கேட்கிறார்.

உடன் வந்த வாலிபனைப் பார்த்து ''என்ன, விஷயம், எந்த ஊரு? என்ன பேரு? என்ன படிக்கிறே?'' என்கிறார்

வாலிபன் கதறி விடுகிறான்.

''அழாதேப்பா? என்ன சங்கதி சொல்லு! எதுவானாலும் சொல்லு'' —தட்டிக் கொடுக்கிறார் காமராஜ்.

ஸ்காலர்ஷிப் ரத்து

இளைஞனது வாய் குளறுகிறது. கோவையாக வார்த்தைகள் வெளிப்படவில்லை.

இளைஞனது 'இக்கட்டு' என்ன என்பதை விளக்குகிறேன்.

அந்த இளைஞன், ஒரு கல்லூரியில் பி.எஸ்ஸி. பட்டப்படிப்பு—

அன்னையுடன் காமராஜர்

முதலாண்டு படிக்கிறான். பிற்பட்டோர் ஸ்காலர்ஷிப் கிடைத்தது. இப்போது முதலாண்டு இறுதித்தேர்வு நடக்கப்போகிறது. ஹால் டிக்கட்டுகள் கொடுக்கப்பட்டு விட்டன. இந்தச் சமயம், இந்த இளைஞனது ஸ்காலர்ஷிப் ரத்து செய்யப்பட்டு விட்டது. காரணம், ''அவன் ஜாதி பிற்பட்ட வகுப்பு இல்லை'' என்று கண்டுபிடிக்கப்பட்டு உள்ளதாம். எனவே, ஏற்கெனவே சர்க்கார் கொடுத்த இரண்டு டெர்ம் சம்பள உதவித் தொகையைத் திருப்பித் தர வேண்டும்.

அதோடு டெர்ம் சம்பளத்தையும் அந்த மாணவனே கட்டியாக வேண்டும். அப்போதுதான் பரீட்சை எழுத ஹால் டிக்கட் கொடுக்கப்படும். இந்த இளைஞனிடம் பணம் ஏதுமில்லை. பரீட்சை எழுத முடியாது. மேலும் படிக்கவே இயலாது.

இந்த நிலையிலிருந்து விடுபட வேண்டும். பரீட்சை எழுத வேண்டும். மேலே தொடர்ந்து படிக்க வேண்டும். முதலமைச்சர் காமராஜ் அவனைக் காப்பாற்ற வேண்டும்.

இதுதான் அந்த இளைஞனது இக்கட்டு! கஷ்டம்!

பொறுமையாகக் கேட்டுக் கொள்கிறார் காமராஜ். துடிப்புடன் நிமிர்ந்து உட்காருகிறார்.

அது எப்படி முடியும்?

டெலிபோனை எடுக்கிறார் ''கிருஷ்ணையா (தனி உதவியாளர்) உடனே, இங்கே வாங்கோ!.. வேண்டாம்.. உடனே எஜுகேஷன் செக்ரட்டரியையும், ஹரிஜன் வெல்பேர் டைரக்டரையும் இங்கே வரச் சொல்லுங்க! உடனே வந்தாகணும்!''

காமராஜ் அழைப்பிற்கிணங்க அதிகாரிகள் வந்து விட்டனர்.

''இந்தப் பையனுக்குப் படித்தாகணும், ஹால் டிக்கட் கொடுக்கச் சொல்லுங்க!''

கட்டளையிடுகிறார், காமராஜ்.

'அந்தப் பையனுடைய ஜாதி பிற்பட்டோர் பட்டியலில் இல்லிங்கஸ்காலர்ஷிப்கொடுப்பதற்கு வழியே இல்லையே''-அதிகாரிகள் தங்களது இயலாமையைத் தெரிவிக்கின்றனர்.

''சட்டப்படி முடியாதென்று சொல்றீங்க! அப்படித்தானே? சரி! முதல்லே இந்தப் பையனுக்கு எப்படி ஸ்காலர்ஷிப் கொடுத்தீங்க? அது எந்தச் சட்டப்படி?''

''ஜாதிப் பெயரில் ஒரு எழுத்து மயக்கம். அதனாலே அவனும் பிற்பட்ட ஜாதின்னு தப்பாக நினைச்சு ஸ்காலர்ஷிப் சாங்க்ஷன் ஆயிட்டுது. இப்பத் தப்பைக் கண்டு புடிச்சிட்டோம்!''

''தப்பாக நினைச்சு கொடுத்திட்டிங்க! தப்பைக் கண்டு பிடிச்சு நிறுத்திவிட்டீங்க. படிப்பு நடுவிலே அந்தப் பையன் என்ன செய்வான்? எங்கே பணம் புரட்டுவான்? தப்புன்னு அவனிடம் பணத்தைத் திருப்பிக் கேட்கறீங்க? நீங்கள் தப்பாகக் கொடுத்ததற்கு என்ன பரிகாரம் செய்வது?

''சரி சொல்றேன் கேட்டுக்குங்க! இந்தப் பையனுக்கு உடனே ஹால் டிக்கட் கிடைக்க ஏற்பாடு பண்ணுங்க!''—காமராஜ் கண்டிப்பு இது.

''அதெப்படி முடியும் இந்தப் பையனைப் போலவே பலபேர் இருக்கிறார்களே?'' - அதிகாரிகள் திகைக்கின்றனர்.

சட்டத்தை மாற்றி விடுவோம்!

''அப்படியா? இந்தப் பையன் ஒருத்தன் என்னைப் பார்த்துச் சொன்னான். அதனால் அவனைப் போலத் திண்டாடும் எல்லாப் பசங்களுக்கும் நன்மையாகப் போச்சுது...

''முடியாதா? சட்டத்தை மாற்றி விடுவோம்! இந்தப் பையனைப் போல பாதிக்கப்பட்ட எல்லாப் பையன்களுக்கும் ஹால் டிக்கெட் கொடுக்கச் சொல்லுங்க! உதவிச் சம்பளம்-அதான் ஸ்காலர்ஷிப் கொடுக்கக் கூடாது என்று நீங்க கண்டு பிடிச்ச தப்பைப் பத்திக் கவலைப்படாதீங்க, C.M's oral order படி ஸ்காலர்ஷிப் தொடரட்டும்! File அனுப்புங்க. Ratify செய்து (முன் தேதியிலிருந்து ஸ்காலர்ஷிப் கிடைப்பதற்கான) ஆர்டர் பொட்டுடறேன்.''

அதிகாரிகள் விடைபெற எழுந்து விட்டனர்.

''உட்காருங்க! வெள்ளைக்காரன் காலத்தில் பியூராக்ரசி (அதிகாரவர்க்கம்) இட்டதே சட்டம். அதற்கு மேல் கேட்க கூடவோ, முறையிடவோ முடியாது. ஆனால் இப்போது நடப்பது நம்ம சர்க்கார், சுதந்திர சர்க்கார். இது டெமாக்ரசி (ஜன நாயக ஆட்சி). ஜனங்களைப் பொதுவாகப்பாதிக்கும் இப்படிப்பட்ட விஷயங்களை எங்களை—சுதந்திர சர்க்கார் மந்திரிகளைக் கலந்து முடிவு செய்யுங்க. ஜனங்களுக்கு ஏற்றபடி சட்டம் இருக்கணும், அப்படியில்லே மாத்திடலாம். மாத்தியாக வேண்டும். இதுதான் டெமாக்ரசி! இதை மனசில வைச்சுகிட்டு நிர்வாகம் பண்ணுங்க!''—விடை கொடுக்கிறார் காமராஜ்.

''தம்பி! கவலைப்படாதே! ஹால் டிக்கட் வந்துடும். நன்றாகப்படி.''

மகிழ்ச்சிப் பூரிப்பில் திளைத்திருந்த மாணவனைத் தட்டிக் கொடுத்து அனுப்புகிறார் காமராஜ்.

''சுதந்திரம் வந்தாச்சு! சிலபேர் மந்திரியாக வாய்ப்பு கிடைச்சுது. நானும் முதலமைச்சராக ஆயிட்டேன்! ஏண்டா இப்படி பதவி வகிக்கிறோம்னு சிலநேரம் தோணுது. பதவின்னு இருக்கிறதால்தானே இந்தமாதிரி ஏழைப் பையனுக்குப் படிக்க வழி செய்ய முடிகிறது. பதவி வகிப்பதிலும் சந்தோஷம்தான்! நல்லது செய்ய முடிகிறதே!''

தமக்குத்தாமே கூறிச் சந்தோஷப்பட்டுக் கொள்கிறார் முதலமைச்சர் காமராஜர்.

ரஷ்யாவில் குழந்தைகளுடன் காமராஜர்

செயல் அரசு :

அதிகம் படிக்காத காமராஜ் ஆட்சியில் மிக அதிகம்பேர் படிக்கும் வாய்ப்புக் கிட்டியது.

மக்களுக்கு வசதியாக, சட்டம் இயங்க வேண்டும் என்று மக்களுக்கு ஏற்றபடி சட்டங்களைத் திருத்தினார். புதிய சட்டங்களையும் போட்டார் காமராஜர்.

பெருந்தலைவர் காமராஜ் வழியில், மக்கள் திலகம், புரட்சித் தலைவர் முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். ஆட்சித் தேரினை நடத்திச் செல்கிறார்.

காமராஜ் பிறந்த நாளினை ஆண்டுதோறும் அரசாங்க விழாவாகக் கொண்டாடும் தமிழக அரசு காமராஜரின் நல்ல எண்ணங்களையும் செயல்படுத்திடும் செயலரசாக விளங்குகிறது மகிழ்ச்சிக்கு உரியதாகும்.

பாராட்டுக்குரிய பசும்பொன்னார்

தேவருக்கு நாம் செய்யும் ஒரே கடமை அவருடைய ஆத்மா சாந்தி அடைய நாம் எடுத்துக் கொள்ளும் ஒரே பணி-தேவருடைய புனிதமான உள்ளத்தில் உறைந்து கிடந்த எண்ணங்களை நிறைவேற்றுவது தான்.

—பேரறிஞர் அண்ணா

தந்தை பெரியார் அவர்களால் பெரியார் என்று பாராட்டப்பட்டவர் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் ஆவார். பி.கே. மூக்கையாத்தேவர் பொன்விழா மலரில், தந்தை பெரியார் அவர்கள் எழுதியுள்ள கட்டுரையில், "பெருமைமிக்க பெரியார் முத்துராமலிங்கத்தேவர்" என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

* * * *

"பசும்பொன் தேவர் பேசினால், தமிழ் அன்னையே பேசுவதாக நான் நம்புகிறேன். தேவரின் திருவாயில் அமர்ந்து கொண்டு என் தமிழ் அன்னை பேசுகிறாள்" என்று சொல்லித் தமிழ்ப்பெரியார் திரு. வி. க. அவர்கள் தேவரைக் கட்டித் தழுவிக் கொள்வது உண்டு.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் தம்முடைய நிலங்களை எல்லாம், அவற்றைக் குத்தகைக்கு எடுத்துப் பயிரிட்டுக் கொண்டிருந்த விவசாயிகளுக்கே கொடுத்து விட்டார். பசும்பொன் தேவர் மறைந்ததும் திரு. முக்கையாத்தேவர் தம் தலைவரின் பெயரால், அவர் நினைவாகக் கல்லூரிகளைக் கட்ட முன்வந்தார். அப்போது அந்த விவசாயிகளை அணுகி "தேவர் நினைவாகக் கல்லூரிகளைத் தொடங்க ஏதாவது உதவி செய்ய இயலுமா?" என்று கேட்டார். அந்த விவசாயிகள் தாங்கள் பெற்றிருந்த நிலங்களை எல்லாம் அவர் ஆரம்பிக்க நினைத்த கல்லூரிக்கே அளித்துவிட முன்வந்தார்கள்.

இளைஞர்களின் மறுமலர்ச்சித் திட்டம்!

வேலையின்மை என்ற ஏக்கத்தை மாற்றி - சுயபலத்தில் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு-படித்த - வேலையில்லாத இளைஞர்களுக்கு - அரசின் சுயவேலை வாய்ப்புத் திட்டங்கள் பெரிதும் பயன்படுகின்றன. இந்த வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் பல இளைஞர்கள் வரலாறு படைக்க முன்வருகிறார்கள். இராமநாதபுர மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தினால், தான் படன்பெறுவதைப் பேட்டியின்போது பெருமையுடன் கூறினார்.

"உங்கள் பெயர்?"

"ஆர்.பாஸ்கரன்".

"உங்கள் சொந்த ஊர்?"

"சிவகாசி"

"நீங்கள் எதுவரை படித்திருக்கிறீர்கள் ?"

"நான் ஒரு பி.ஏ.பட்டதாரி, எனது வயது 23".

"எந்த ஆண்டு படிப்பை முடித்தீர்கள்?"

"1981ஆம் ஆண்டு."

"இதுவரை வேலை எதற்கும் முயற்சி செய்யவில்லையா?"

"படித்து முடித்ததிலிருந்து வேலைக்கு முயற்சி செய்து வந்தேன். வேலை எதுவும் கிடைக்கவில்லை."

"சுயமாகத் தொழில் தொடங்கலாம் என்ற முடிவுக்கு நீங்கள் எப்படி வந்தீர்கள்?"

"வேலை தேடிக் கிடைக்காததால், ஏதாவது சுயமாகத் தொழில் செய்து முன்னேறலாம் என்ற முடிவுக்கு வந்தேன். அதன் விவரங்களை அறிந்து தொழில் தொடங்க அப்ளிகேஷன் போடலாம் என்று தீர்மானித்து, கடந்த ஆண்டு நவம்பர் 11ஆம் நாள் மதுரையிலுள்ள இராமநாதபுர மாவட்டத் தொழில் மையத்திற்குச் சென்றேன். அங்கு பொது மேலாளர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களை நேரில் சந்தித்து எனது முடிவைத் தெரிவித்து உதவுமாறு கேட்டபோதுதான், இந்தியப் பிரதமரின் சுயவேலை வாய்ப்புத்திட்டம் பற்றிய விவரங்களும், தமிழக அரசின் தொழில் துறையின் மூலமாக இத்திட்டத்திற்கான அனைத்து ஏற்பாடுகள் செய்யப்படுவதும், தெரியவந்தது. அதன்பின் உடனடியாக அங்கேயே ஒரு விண்ணப்பத்தை எழுதிப் பொதுமேலாளரிடம் கொடுத்து விட்டு வந்தேன்".

"உங்கள் விண்ணப்பத்தின் மீது நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டுக் கடன் வழங்கப்பட்டதா?"

"நான் விண்ணப்பம் செய்து சரியாக 15 தினங்கள் கழித்து, நவம்பர் 25ஆம் தேதியன்று நேர்முகத்தேர்வு நடந்தது. எனது தொழிற்கூடம் பற்றிய விவரங்கள் சரியாகப்பட்டதால், அடுத்த 15 தினங்களில் அதாவது டிசம்பர் 9-ந் தேதி என்க்கு சிவகாசி இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மூலமாக ரூ. 25,000 கடன் தொகை வழங்கப்பட்டது. நான் விண்ணப்பித்த ஒரு மாதக்காலத்திற்குள் எனக்குத் தேவையான கடன் தொகை வழங்கப்பட்டது."

"கடன் உதவிபெற்று நீங்கள் என்ன தொழிலைத் தொடங்கினீர்கள்?"

"நான் வண்ணப் புகைப்படம் எடுக்கும் தொழிற்கூடம் துவங்கியுள்ளேன்.

"இந்தத்தொழிலில் உங்களுக்கு ஆர்வம் எப்படி வந்தது?"

"சிவகாசியில் வண்ண அச்சுத் தொழிற்கூடங்கள் அதிகமான அளவில் உள்ளன. தயாரிப்பாளர்களின் பொருட்களுக்கான வடிவமைப்புகளுக்கு இதுவரை ஓவியர்கள் வண்ண ஓவியங்களையே வரைந்து வந்தார்கள். தற்போதுள்ள நவீன முன்னேற்றத்தில், வண்ண ஓவியங்களுக்குப் பதில் வண்ணப் புகைப்படங்களைத் தங்கள் ஓவியங்களில் இணைத்து விரைவாகவும், நல்லமுறையில்



டி. பி. எஸ். சுந்தரநாதன்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
இராமநாதபுரம் மாவட்டம்

எழுதித் தருகிறார்கள். இது போன்ற தேவைகளுக்கு வண்ணப் புகைப்படப் பிரதிகள் அதிக அளவில் தினமும் தேவைப்படுகின்றன என்பதை அறிந்து கொண்டேன். மேலும் எனது தந்தையார் திரு. கே.ரவீந்திரன் அவர்கள் ஒரு ஓவியர். அவரது ஓவியச்சாலையைப் பார்த்து வந்தபோது எனக்குப் புகைப்படக்கலையில் ஆர்வம் வந்தது. அதோடு அவரிடமும் சிறிதுகாலம் பயற்சி பெற்றுச் சென்னையிலும் இதற்கெனத் தனிப்பயிற்சி பெற்றேன். இந்த அடிப்படையில்தான் நான் இந்த வண்ணப் புகைப்படத் தொழில் கூடத்தைத் துவங்கியுள்ளேன்''.

''உங்களைத் தவிர இத் தொழிற்கூடத்தில் இன்னும் எத்தனைப் பேர் வேலை செய்கின்றனர்?''

''3 பேர்கள் வேலை செய்கின்றார்கள். இரண்டு மூன்று ஆண்டுகளில் தொழில் வளர்ச்சி அடைந்ததும், 10 பேர்களுக்கு மேல் என்னால் வேலைவாய்ப்புத் தரமுடியும் என்று நம்புகிறேன்.''

''இதில் மாதமொன்றுக்கு வருமானம் எவ்வளவு கிடைக்கும்?''

''மாதத்திற்குச் சுமார் ரூ.1000 வரை கிடைக்கும். தொழில் விரிவானதும் வருவாயும் அதிகரிக்கும்.''

சிவகாசி பால்கரனிடம் உரையாடியபோது அந்த வாலிபரிடம் தன்னம்பிக்கை இழையோடி நிற்பதை அறிய முடிந்தது. வேலை கிடைக்காததால் மனம் தளராது சுயமாக வேலை வாய்ப்பை உருவாக்கிக் கொண்ட அவரது முயற்சி பெருமைக்குரியது. இராமநாதபுரம் மாவட்டத்தில் இவரைப்போன்ற பல இளைஞர்கள் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தில் பயன்பெற்று முன்னேறி வருகிறார்கள்.

படித்த வேலையில்லாத இளைஞர்களின் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் 2,000 இளைஞர்களுக்கு உதவி புரிய இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆர்வமுள்ள 15,157 நபர்கள் விண்ணப்பம் செய்திருந்ததில் 6,676 பேர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் 2,056 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களுக்கு ரூ. 2,41,25,500 கடன் தொகை வழங்க, வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டது. மேற்கண்ட தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் 1137 பேர்களுக்கு 31.3.84 வரை வங்கிகளால் ரூ.1,42,57,000 கடனாக ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

வ. உ. சீயும் - சிவாவும்.

வ.உ.சிதம்பரம் பிள்ளையும், சுப்பிரமணிய சிவாவும் முதலில் திருச்சிச் சிறைக்கு கொண்டு செல்லப்பட்டனர். சில காலத்திற்குப் பின் வ. உ. சி. கோயமுத்தூர் சிறைக்கு மாற்றப்பட்டார். அங்கு செக்கு இழுக்கும் உள்பட பல கடினமான வேலைகள் செய்தார்! சிவம் திருச்சிச் சிறையில் கம்பளி ரோமம் வெட்டியும், கேழ்வரகு மாவு அரைத்தும் பல கஷ்டமான வேலைகளில் ஈடுபட்டார். இதனால் இவருக்கு உடம்பில் பெரு வியாதி பீடித்தது. திருச்சிச் சிறையில் 8வது நட்டார். அது ஓர் அரசும்-வேம்பும் சேர்ந்து வளர்ந்திருந்தது. அந்த பெரிய விருட்சமாகி அங்கில்லையாம். ஜோடி மரங்கள் இப்போது சேலம் சிறைக்கு வியாதியின் காரணமாக சிவம் சேலம் சிறையிலிருந்த போது மாற்றப்பட்டார். ''சச்சிதானந்த சிவம்'' என்ற தான் இவர் நூலை எழுதி முடித்தார்.

சிவாவின் இறுதி ரயில் பயணம்

தொழுநோயின் காரணமாக சுப்பிரமணிய சிவாவை ரயிலில் பிரயாணம் செய்யத் தடை செய்து இதற்கான உத்தரவு 1824 ஜனவரியில் பிறப்பித்தது ஆங்கில அரசு. அது முதல் சிவம் தனது குதிரை வண்டியிலும், மாட்டு வண்டியிலும் பிரயாணம் செய்தார். மதுரையில் தங்கியிருந்தபோது சிவத்திற்கு உடம்பு 1925 ஜூலை 21ஆம் தேதி மோசமாக இருக்கவே, அவர் பாப்பாரபட்டிக்கு அடுத்த பாரதபுரம் செல்லத் துணிந்து விட்டார். தனது ஆப்த நண்பரான ஸ்ரீ சுந்தர பாரதியிடம் ஏதோ ரகசியம் சொல்ல, இருவருமே பிரயாணத்திற்குத் தயாராகினர். 22-ஆம் தேதி மதுரை பாலம் ஸ்டேஷனுக்கு இரு வரும் வந்துபினாட்பாரத்தில் காத்திருந்தனர். வண்டி அங்கு ஒரிரு நிமிடங்கள் தான் நிற்கும். முடியவில்லை. சிவத்தால் வண்டியில் ஏற சொல்ல அவர் சிவாவை குண்டுக் கட்டாகத் தூக்கி ரயில் பெட்டிக்குள் போட்டார். சிரமப்பட்டு சுந்தரபாரதியின் உதவியுடன் பாப்பாரபட்டிக்கு வந்து சேர்ந்து விட்டார். மறுநாள் ஜூலை 23-ஆம் தேதி அதிகாலை மறைவெய்தினார்.

—ரகமி

திருஞான சம்பந்தர் இசை விழா

பழம்பெரும் சமயமாகிய சைவமும் பழம்பெரும் தமிழ் மொழியும் வேறு வேறு அல்ல. தமிழர் பண்பாடு இசைத் தமிழையும், இயற்றமிழையும், நாடகத் தமிழையும் போற்றி வளர்த்தது. திராவிட நாகரிகமும் தமிழர் பண்பாடும் சரித்திர எல்லைக்கு அப்பாற்பட்டதாக 'இப்பண்பாடு என்று பிறந்ததோ' என்று எவரும் அறிய முடியாத பழம் பெருமையைக் கொண்டுள்ளதாக இருக்கிறது.

இதனை விளக்கிடும் வகையில் திருஞானசம்பந்தர் இசை விழா திருக்கழுக்குன்றத்தில் 15-6-'84 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

விழாவைத் துவக்கி வைத்த மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் பேசுகையில்,

''திருக்கழுக்குன்றத்தில் இசை விழா நடப்பது மிகவும் பொருத்தமானது. நால்வரைப் பற்றி எத்தனை பேருக்குத் தெரியும்? நால்வரைப் பாராட்டிப் பேசுபவர்களுக்கே அவர்கள் பற்றித் தெரியவில்லை. அவருடைய இசை பல ஆண்டுகளுக்கு முன்னரே பாராட்டப்பட்டது.

''திருமறைகள்தான் தமிழைப் பாதுகாக்கின்றன. தமிழை அடைமொழியோடு அழைத்தது திருஞானசம்பந்தர் காலத்தில் தான். பழங்கால இலக்கியங்களை நாம் பாதுகாக்கவில்லை. தமிழ் இசை மேடையிலே முழங்க வேண்டும். புதிய உணர்வோடு புதிய ஆராய்ச்சியில் நாம் ஈடுபட வேண்டும். தேவாரம், திருவாசகம் மக்கள் மத்தியில் பரவ வேண்டும். ஆன்மீக அடிப்படையில் சொல்லப்பட்ட கருத்துக்கள் சாகாவரம் பெற்றவை, பழமை என்று பலவற்றை நாம் புறக்கணித்து விட்டோம். ஆன்மீகம், பண்பாளனாகவும் சிறந்த மனிதனாகவும் உருவாக உதவுகிறது.

''இரண்டு தாளத்துடன் 16 வயது வரை நாடு முழுவதும் சுற்றித் தமிழையும்சமயத்தையும் வளர்த்தவர் திருஞானசம்பந்தர். அரவது விழா தமிழ்ச் சமுதாய விழாவாக அமைய வேண்டும்'' என்று கூறினார்.

சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் குறிப்பிட்டதாவது :

''நால்வர் பாடிய இந்தத் திருத்தலத்தில் கலந்து கொண்டு உரையாற்றுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இசை அறிஞர்கள் தமிழ்ப்பாட்டைப் பாடி அதன் மூலம் தமிழை வளர்க்க வேண்டும். பள்ளிகளில் தேவாரப் பாடல்களைச் சொல்லித் தர வேண்டும். இசை மையங்கள் ஏற்படுத்த வேண்டும்''

விழாவிற்கு, அறநிலையத் துறை ஆணையாளர் திரு. கு. ஆளுடையப்பிள்ளை, இ.ஆ.ப, தலைமை வகித்தார்.

கலைமாமணிகள் செம்பனார் கோவில் சகோதரர்கள் திரு முத்துக்குமாரசாமி, திரு வைத்தியநாதன் ஆகியோரின் நாதசுர இசை நிகழ்ச்சியுடன் விழா தொடங்கிற்று.

செங்கற்பட்டு சட்டமன்ற உறுப்பினர் திரு ஆனூர் கோ. செகதீசன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

விழா குறித்த அறிக்கையை டாக்டர் சேலம் எஸ். செயலட்சுமி படித்தார். மாம்பாக்கம் திருக்குறள் பீடம் சிவத்திரு குருபழனி அடிகளார், இயல், இசை, நாடக மன்றச் செயலர் நடிகமணி டி. வி. நாராயணசாமி, சென்னை நகர செரீப் திருமதி சரோஜினி வரதப்பன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

நால்வர் விழாக்கள் நடந்தாலும், திருஞானசம்பந்தர் விழா இசை விழாவாகச் சிறப்பாக நடைபெற்றது, திருக்கழுக்குன்றத்திற்கு ஒரு தனிச் சிறப்பைத் தந்தது என்றால் மிகையாகாது.

—அ. மருதவிநாயகம்

தாயகம் திரும்புவோரும் அவர்களது மறுவாழ்வும்

இந்திய மக்கள் அதிலும் குறிப்பாக நம் தமிழக மக்கள் நம்முடைய அண்டைய நாடுகளான பர்மா மற்றும் வியட்நாமில் பல ஆண்டுகளுக்கு முன்பாக வியாபாரம மற்றும் தொழில் காரணமாகக் குடியமர்ந்து நல்ல செல்வாக்கான நிலையில் வாழ்ந்து வந்தனர். பின்னர் 1963 -ல் பர்மா அரசின் திட்டத்தின் கீழ், பர்மாவில் குடியேறிய தமிழர்கள் நம் நாட்டிற்குத் திரும்பி வந்தனர். மேலும் வியட்நாமில் போர்மூண்டு, பின்பு வியட்நாமிய அரசின் ஆணைப்படி வியட்நாமியரல்லாத மற்ற அனைவரும் வெளியேற்றப் பட்டனர். இவ்வாறு பர்மா மற்றும் வியட்நாமிலிருந்து இந்தியர்கள் திரும்பி வந்து கொண்டிருக்கும் போது, இந்தியாவிலிருந்து இலங்கையில் தோட்டத் தொழிலில் வேலை செய்யச் சென்ற ஏராளமான தமிழர்களையும் வெளியேற்ற இலங்கை அரசு தீர்மானித்தது. எனவே பர்மா, வியட்நாம் மற்றும் இலங்கையிலிருந்து இந்தியா திரும்பிய அனைத்து மக்களுக்கும் மறுவாழ்வு அளிப்பது இந்திய அரசின் இன்றியமையாத கடமையாகி விட்டது. பர்மாவிலிருந்து இதுவரை, தமிழ்நாட்டிற்கு 1,44,283 நபர்கள் திரும்பியுள்ளனர். மேலும் வியட்நாமிலிருந்து 2055 நபர்களைக் கொண்ட 501 குடும்பங்கள் திரும்பி வந்துள்ளன. பர்மா மற்றும் வியட்நாமிலிருந்து திரும்பியோருக்கு 30-11-83 முடிய, அரசு கீழ்க் குறிப்பிட்டவாறு மறுவாழ்வு வசதி செய்து கொடுத்துள்ளது.

பர்மா

திட்டங்கள்	குடும்பங்கள்
வணிகக் கடன் ...	42,721
நிலக்காலனித் திட்டம்	375
கூட்டுறவு நூற்பாலைகள்	134
வேலைவாய்ப்பு நிறுவனம் மூலம் வேலைவாய்ப்புப் பெற்றவர் ...	5,505
முதியோர் உதவித்தொகை	182
மொத்தம்	48,917
வீட்டுக்கடன்	19,520
வியட்நாம்	
வணிகக்கடன் ...	416
வீட்டுக்கடன்	25

இலங்கையில் நாடற்ற இந்தியர்கள் 9.75 இலட்சம் பேரின் வருங்கால குடியுரிமைப் பிரச்சினை குறித்து, இந்தியா-இலங்கை பிரதமஅமைச்சர்கள்1964-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டனர். குடும்பத்தில் இயல்பாக ஏற்படும் உறுப்பினர்கள் எண்ணிக்கையின் அதிகரிப்புடன் 5.25 இலட்சம் பேர்களை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு இந்தியா குடியுரிமை வழங்கவும், குடும்பத்தில் இயல்பாக ஏற்படும் அதிகரிப்புடன் 3 இலட்சம் பேர்களைத் தன்னிடமே வைத்துக் கொண்டு ஸ்ரீலங்கா குடியுரிமை இலங்கை அரசு வழங்கவும் வேண்டுமென அதில் முடிவு செய்யப்பட்டது. சாஸ்திரி-சிரிமாவோ ஒப்பந்தம் எனப்படுகிற 1964-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் எஞ்சிய 1.50 இலட்சம் பேர்கள் எதிர்காலத்தில் எங்கு வசிக்க வேண்டுமென்பதைப் பின்னால் ஒரு தேதியில் முடிவு செய்வதென விட்டு வைக்கப்பட்டது.

இந்த 1.50 இலட்சம் பேர்களுக்கு இந்தியாவும், ஸ்ரீலங்காவும் முறையே 75,000 பேர்கள் வீதம் குடியுரிமை வழங்குவதற்கு வகை செய்கின்ற இரண்டாவது ஒப்பந்தம் ஒன்றில் 1974, ஜூன் திங்களில் இந்தியா, ஸ்ரீலங்கா பிரதம அமைச்சர்கள் இருவரும் கையெழுத்திட்டனர். ஆக மொத்தம் 6 இலட்சம் பேர்கள் இரண்டு ஒப்பந்தங்களிலும் கணக்கிடப்பட்டவர்கள் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அனுப்பப்பட வேண்டியவர்கள் ஆவர். இந்த 6 இலட்சம் பேர்களும் இந்தியா வந்து சேரும் முன் இவர்கள் குடும்பத்தில் இயல்பாக ஏற்படும் அதிகரிப்புடன் சேர்த்து ஆக மொத்தம் தாயகம் திரும்புவோர்களின் எண்ணிக்கை சுமார் 8 இலட்சம் அளவில் இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு 1964 லிருந்து இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோர்கள் தலைமன்னாரிலிருந்து இராமேஸ்வரத்திற்குக் கப்பல் மூலம் வந்து சேருகிறார்கள். தற்சமயம் அமலிலுள்ள நாணயமாற்று விதிப்படி அவர்களுடைய சொத்துக்களையும், பொதுச் சேமநல நிதியையும் ஒய்வு நிதிப்பணத்தையும் அவர்கள் இந்தியாவிற்குக் கொண்டு வரலாம். இவ்வாறு தாயகம் திரும்பியவர்களில் பெரும்பான்மையோர் பற்றுக் கோடற்றவர்களாகவும் ஆதரவற்ற நிலையில் இருப்பதாலும் இவர்களை இடைக்கால முகாமில் தங்க வைப்பது அவசியமாகிறது. கும்மிடிபூண்டியில் இடைக்கால முகாம் ஒன்று பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியோருக்காக 1964 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டு 18 ஆண்டுகளாகச் செயல்பட்டு வந்தது. சமீபத்தில் பர்மாவிலிருந்து தாயகம் திரும்புவோர் எவரும் இல்லாததால் இம்முகாம் அரசின் ஆணைப்படி மூடப்பட்டு விட்டது. இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோரைத் திட்டமையங்கள் அல்லது தொழில் மையங்களுக்கு அனுப்பப்படும் வரை தங்க வைப்பதற்காக இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மண்டபம் என்ற இடத்தில் ஒருமுகாமும், திருச்சிராப்பள்ளியில் கொட்டப்பட்டு என்ற இடத்தில் ஒரு முகாமும் செயல்பட்டு வருகின்றன. இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோர் ரூ. 10,000-க்கு மேற்படாமல் சொத்துடைமைகளைக் கொண்டு வருபவர்கள் இந்த முகாம்களில் அனுமதிக்கப்படுகின்றனர். மண்டபம் முகாமில் 639 தங்கும் இடங்களும் கொட்டப்பட்டு முகாமில் 360 தங்கும் இடங்களும் உள்ளன. இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோருக்கு கண்டியிலுள்ள இந்திய உதவித் தூதுவர் அவரவர்கள் குடும்ப அட்டையில் பரிந்துரை செய்துள்ளதற்கிணங்கப் பல்வேறு தொழில்களுக்கு அனுப்பப்படுகின்றனர். அல்லது வணிகக்கடன் அளிக்கப்படுகிறார்கள்.

மேலும் இலங்கையிலிருந்து 5,000 ரூபாய்க்கு மேற்படாத மதிப்புடைய சொத்துடைமைகளைக் கொண்டு வருபவர்களுக்கு இடைத்தங்கல் முகாம்களில் அவர்களின் குடும்ப அங்கத்தினர் எண்ணிக்கையைப் பொறுத்து ரொக்கப்படியும், மலிவு விலையில் கிலோ 57 காசு வீதம் அரிசியும் வழங்கப்படுகிறது. இவ்வாறு வழங்கப்படும் ரொக்கப்படி தமிழக அரசினால் சமீபத்தில் உயர்த்தப்பட்டு மாதம் ஒன்றிற்கு ரூ. 110 முதல், குடும்ப அங்கத்தினர்கள் எண்ணிக்கையைப்பொறுத்து வழங்கப்படுகிறது. 5அங்கத்தினர்கள்கொண்ட குடும்பத்திற்கு ரூ. 357.50 வழங்கப்படுகிறது. ஐந்து அங்கத்தினர்களுக்கு மேற்பட்ட குடும்பத்திற்குக் கூடுதலாக உள்ள ஒவ்வொரு வயது வந்தவரும், சிறுவரும் (12 வயதிற்குட்பட்டவர்கள்) ரூ. 82.50 மற்றும் ரூ. 27.50 முறையே மாதந்தோறும் பெறத் தகுதியுள்ளவர்கள்.

திருச்சிராப்பள்ளியில் உள்ள தாற்காலிக முகாமில் இலங்கையிலிருந்து திரும்பியோர்களுக்கு மருத்துவச் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இலங்கையிலிருந்து திரும்பியோர் இராமேஸ்வரம் துறைமுகத்தில் வந்து சேருகின்றனர்.

வணிகக்கடன் திட்டம்

இலங்கையிலிருந்து தாயகம் திரும்புபவர்களில் தகுதியானவர்களுக்கு முதல் தவணையாக 3,000 ரூபாயும், இரண்டாவது தவணையாக 2,000 ரூபாயும் மொத்தம் ரூ. 5,000 சிறு வியாபாரம் செய்து சம்பாதிக்க வணிகக் கடனாக வழங்கப்படுகிறது. முதல் தவணையாக வழங்கப்பட்ட ரூ.3,000 வணிகக்கடனை தக்க முறையில் பயன்படுத்தியோருக்கு மட்டுமே ரூ. 2,000 இரண்டாவது தவணையாக வழங்கப்படுகிறது. கடன் வழங்கப்பட்ட நான்காவது ஆண்டிலிருந்து 12 ஆண்டுகள் சம அளவில் இக்கடனைத் திரும்பச் செலுத்துதல் வேண்டும். 30-11-83 முடிய 70,269 குடும்பங்களுக்கு வணிகக்கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 119.93 இலட்சம் அரசு செலவு செய்துள்ளது.

வீட்டுக்கடன் திட்டம் (அம்சம் 10)

வணிகக்கடன் உதவி தவிர, தாயகம் திரும்பியோருக்கு வீடுகள் கட்டிக்கொள்ளக் கடன் வழங்கப்படுகிறது. நகர்ப்புறங்களில் வீடுகள் கட்டிக்கொள்ள 8,000 ரூபாயும், கிராமப்புறங்களில் வீடுகள் கட்டிக் கொள்ள 4000 ரூபாயும் கடனாக மூன்று தவணைகளில் வழங்கப்படுகிறது. 30-11-83 முடிய இவ்வாறு வீட்டுக்கடன் 30,425 குடும்பங்கட்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்காக அரசு இதுவரை ரூ. 82.84 இலட்சம் செலவிட்டுள்ளது.

தாயகம் திரும்பியோருக்குச் சலுகை விலையில் அரிசிவழங்கப்படுகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த ஆரல்வாய்மொழியில் உள்ள கூட்டுறவு நூற்பாலையில் இலங்கையிலிருந்து திரும்பியோர் பணியாற்றுகின்றனர்.

விவசாயக் குடியிருப்புத் திட்டம்

தாயகம் திரும்புபவர்களில் உழைக்கக் கூடிய - வேளாண்மையில் அனுபவம் உள்ள இந்தியாவில் சொந்தமாக நிலம் இல்லாத குடும்பங்கள் இத்திட்டத்தின்கீழ் குடியமர்த்தப்படுகின்றனர். இவ்வாறு குடியமர்த்தப்படும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 3 ஏக்கர் நிலம் இனாமாக வழங்கப்படுகிறது. நிலத்தைப் பண்படுத்தவும், பாசனக்கிணறு வெட்டவும், மாடு விதை மற்றும் உபகரணங்கள் வாங்கவும், பயிரிடவும் ரூ. 6,850 வரை விவசாயக் கடன் அளிக்கப்படுகிறது. கடன் வாங்கிய மூன்றாவது ஆண்டிலிருந்து எட்டு ஆண்டுகளில் சம அளவாகக் கடனைத் திரும்பக் கொடுக்க வேண்டும். இதுவரை 30-11-83 முடிய 2,161 குடும்பங்கட்கு இவ்வித உதவி அளிக்கப்பட்டுள்ளது.

தாயகம் திரும்புவோர் கூட்டுறவு மற்றும் அயிவிருத்தி வங்கித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் தாயகம் திரும்பியோரை வேலைக்கு அமர்த்திக் கொள்ளும் நிறுவனங்களுக்கு அவ்வாறு வேலைக்கு அமர்த்திக் கொள்ளும் குடும்பம் ஒன்றுக்கு ரூ.25,000 வரை கடனாக வழங்கப்படுகிறது. இத்தொகை 10 சதவிகித வட்டியில் ஆறு ஆண்டுகளில் திரும்பச் செலுத்தப்பட வேண்டும். இவ்வாறு வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஆறுமாத காலம் பயிற்சி பெற வேண்டும். பயிற்சிக் காலத்தில் மாதம் ஒன்றிற்கு ரூ. 82.50 உதவிப்பணமாக வழங்கப்படும். அவர்கள் குடும்பத்திலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பொறுத்துக் காப்பு நிதி ரூ. 40 முதல் ரூ. 150 வரை 7 நபர்கள் கொண்ட குடும்பத்திற்கும், 7 நபர்கட்கு மேல் உள்ள குடும்பங்களில் 7 நபர்கட்கு மேல் ஒவ்வொரு நபருக்கும் தலா ரூ. 10 வீதமும் வழங்கப்படுகிறது. அவர்களுக்குத் தற்காலிக இடவசதிக்காகக் குடிசைப்பணம் ரூ. 500 மலிவு விலையில் அரிசி கிலோ 57 காசு-வீதமும் அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலம் முடிந்தவுடன் வங்கியுடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படியான ஊதியத்தில் நிரந்தரமாக்கப்படுகிறார்கள். ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு மட்டுமே இவ்வாறு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது.



ஸ்ரீவில்லிபுத்தூர் நூற்பாலையில் இலங்கையிலிருந்து திரும்பியோர் பணியாற்றுகின்றனர்.

கூட்டுறவு நூற்பாலை

இத்தொழில் திட்டத்தின்கீழ் தாயகம் திரும்பியோருக்குத் தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலைகளில் வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது. கைத்தறித் திட்ட இயக்குநரால் நிர்ணயிக்கப்பட்டபடி ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு மட்டுமே வேலை அளிக்கப்படுகிறது. நூற்பாலையில் வேலைக்கு அமர்த்தப்படும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் மத்திய அரசு ரூ. 20,000 கடனுதவி அளிக்கிறது. அவர்களுக்கு ஆறுமாத காலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் இவர்களுக்கு உதவிப்பணம், படிப்பணம் மற்றும் மலிவு விலையில் அரிசி வழங்குதல் போன்ற மத்திய அரசின் உதவிகள் அனைத்தும் வழங்கப்படுகின்றன. பயிற்சி முடிவுற்றவுடன் அவர்கள் பணிபுரியும் ஆலைகளில் உள்ள சம்பள விகிதத்தில் நிரந்தரமாக்கப்படுகிறார்கள்.

சுயவேலைவாய்ப்பு திட்டம்

இத்திட்டத்தின்கீழ் குடியமர்த்தப்படும் தாயகம் திரும்பியோருக்கு வணிகக்கடனாக அளிக்கப்படும் ரூ. 5,000 ஒரே தவணையில் அனுமதிக்கப்பட்டு, தேசிய மயமாக்கப்பட்ட ஏதாவது ஒரு வங்கியில் வைப்புநிதியாக ஏழு ஆண்டுகளுக்குச் செலுத்தப்படுகிறது. அதை ஏழு ஆண்டுகள் கழித்து 10,000 ரூபாயாகப் பெறலாம். அந்த வங்கி தாயகம் திரும்பியவருக்கு, நலிவுற்றோருக்குவழங்கும்கடனுக்குரிய 4.5 சதவீத வட்டியில் ஆறுமாத இடைவெளியில் மூன்று கறவை மாடுகள் ரூ. 7,500-க்கு வாங்க ஆவன செய்யப்படும். அந்தக் கடனை ஐந்து ஆண்டுகளில் திரும்பச் செலுத்தவேண்டும். கடன் தொகையில் மூன்றில் ஒருபங்கு தொகை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்களுக்குத் தீவிர கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அரசு மானியமாக வழங்கப்படும். ஏழு ஆண்டு கழித்து ரூபாய் 10,000 ரொக்கமாகக் கிடைப்பதுடன் மூன்று மாடுகளும் சொந்தமாகும்.

வேலைவாய்ப்பு நிறுவனங்கள் மூலம் வேலை வாய்ப்புகள்

வேலைவாய்ப்பு நிறுவனங்கள் மூலம் அமர்த்தப்படும் வேலைகளுக்குத் தாயகம் திரும்பியோருக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. நிரந்தரமான பணிகளில் தேவையான இடங்களில் தாயகம் திரும்பியோருக்குக் கல்வித் தகுதியில் விதி தளர்த்தப்படுகிறது.

மாநிலத்தில் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்படும் பணிகளுக்கு மனுச் செய்வதற்காகப் பணம் செலுத்துவதிலிருந்தும் தேர்வுக் கட்டணம் செலுத்த வேண்டியதிலிருந்தும் விலக்கு அளிக்கப்படுகிறது. தாயகம் திரும்பியோரது குழந்தைகள் எட்டாவது வரை கல்விபெற்று தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர விரும்பினால் முன் தொழிற்பயிற்சி நிலையங்களில் கட்டணம் ஏதும் பெறாமல் பயிற்சி அளிக்கப்படுகிறது. முன்பயிற்சி முடிந்தவுடன் மாநிலத்திலுள்ள பல்வேறு தொழிற்பயிற்சி நிலையங்களில் அனுமதிக்கப்படுகிறார்கள். அவர்கள் தகுதிக்கேற்பப் பல்வேறு தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறார்கள்.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு வழங்கப்பட்டுள்ள சாகுபடி நிலங்கள்.

30-11-83 முடிய தாயகம் திரும்பிய 87,957 குடும்பங்களுக்குக் கீழ்க்கண்டவாறு மறுவாழ்வு உதவிகள் அளிக்கப்பட்டுள்ளன:

திட்டங்கள்	குடியமர்த்தப் பட்ட குடும்பங்கள்
1. நீலகிரி தேயிலைத் தோட்டம்	2,326
2. கன்னியாகுமரி ரப்பர்த் தோட்டம்	285
3. ஆனைமலை சின்கோனாத் திட்டம்	125
4. நிலக்குடியிருப்புத் திட்டம்	2,161
5. மாநிலப் பண்ணைக் கழகம்	791
6. சொந்த நிலம் வாங்கி வேளாண்மைசெய்யும் திட்டம்	149
7. கொடைக்கானல் வேளாண்மைத்திட்டம்	117
8. கூட்டுறவு நூற்பாலைகள்	2,668
9. தாயகம் திரும்புவோர் கூட்டுறவு மற்றும் அபிவிருத்தி வங்கித் திட்டம் ...	4,236
10. வணிகக்கடன்	70,269
11. சுயவேலைவாய்ப்புத் திட்டம் தேசிய நூற் பாலைக்கழகம்மற்றும் பால்பண்ணை	260
12. பிறமாநிலங்களிலுள்ள திட்டங்கள்	4,570
மொத்தம்	87,957

தாயகம் பெயர்ந்தோருக்காக அமைக்கப்பட்டுள்ள வியாசர்பாடி வீட்டுவசதித் திட்டம்.

இவ்வாறு இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்குப் பல திட்டங்களில் மறுவாழ்வு அளிக்கப்பட்டதைத் தவிர தற்போது மேலும் பல புதிய திட்டங்களை அமல் படுத்த மைய அரசு அனுமதி அளித்துள்ளது. சில திட்டங்கள் தமிழக அரசு மற்றும் மைய அரசின் பரிசீலனையில் உள்ளன. அவை வருமாறு :

பால்பண்ணைத் திட்டம்

சேலம் மாவட்டத்திலுள்ள தம்மநாயக்கன்பட்டி, இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சாத்தூர் மற்றும் குன்றக்குடி ஆகிய இடங்களில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோரைக் குடியமர்த்தி,அவர்களுக்குப் பால்பண்ணைத் திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பளித்து நிரந்தரமான மாத வருமானம் கிடைக்கச் செய்வதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இத்திட்டத்திற்கு மைய அரசு அனுமதி அளித்துள்ளது.

தம்மநாயக்கன்பட்டியில் 100 குடும்பங்களும், சாத்தூரில் 100 குடும்பங்களும் குன்றக்குடியில் 50 குடும்பங்களும் குடியமர்த்தப்பட்டு ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ. 5,000 வணிகக்கடனாக வழங்கப்படும். இத்தொகை தேசீயமயமாக்கப்பட்ட ஏதாவதொரு வங்கியில் வைப்புத் தொகையாகச் செலுத்தப்பட்டு மேலும் அதிகத்தொகை வங்கி மூலம் கடனாக வழங்கப்பட்டு, ஒவ்வொரு குடும்பத்திற்கும் அரையாண்டு இடைவெளிக்கு ஒருமுறை 3 கறவைமாடுகள் வீதம் வழங்கப்பட்டு, நிரந்தர வேலைவாய்ப்பும் வருமானமும் கிடைக்க வழி வகுக்கப்படுகிறது.

இத்துறை மற்றும் வங்கி மூலம் வழங்கப்படும் கடன்தொகை சுலபத் தவணைகளில் அவர்களிடமிருந்து வசூலிக்கப்படும். கடன் தொகை முழுதும் செலுத்திய பின் கறவை மாடுகள் அவர்களுக்கே சொந்தமாவதுடன் வங்கியில் செலுத்தப்பட்ட வைப்புத்தொகையும் அதன் மீதான வட்டியும் சேர்த்து 7 வருடங்களுக்குப் பின் அவர்களுக்கு ரூபாய் 10,000 கிடைக்கவும் வழி செய்கிறது. இத்திட்டத்தின் கீழ் குடியமர்த்தப்படும் குடும்பங்களுக்கு வணிகக்கடன் ரூ. 5,000 வியாபாரம் செய்யும் இடத்திற்கான கடன் ரூபாய் 1,000 வீட்டுக்கடன் ரூ. 8,000, மற்றும் குடிசை இனாம் ரூ. 5,000, ஆகிய உதவிகள் வழங்கப்படுகின்றன. இவை தவிரஇக்குடும்பங்களுக்கு ரொக்கப்படியும் மலிவு விலையில் அரிசியும் 3 மாத காலம் வரை வழங்கப்படும்.

கோவில்பட்டியிலுள்ள தீப்பெட்டித் தொழிற்சாலையில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு வேலை வாய்ப்பளித்தல்.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய குடும்பங்களில் 40 குடும்பங்களுக்குத் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கோவில்பட்டி தீப்பெட்டித் தொழிற்சாலையில் நிரந்தரமான வேலை வாய்ப்பளித்தலே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இத்திட்டத்திலும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ.5,000 வணிகக் கடனாக வழங்கப்பட்டு, தீப்பெட்டித்தொழிற்சாலையில் கூட்டுறவுச் சங்கத்தில் மூலதனமாகச் செலுத்தப்படும். இச்சங்கம் ஒவ்வொரு குடும்பத்திலும் 2 பேருக்கு நிரந்தர வேலை நபருக்கும் ரூ. 250 குறைந்தபட்ச ஊதியமாகக் கிடைக்கும். கூட்டுறவுச் சங்கத்திற்கு வேலைவாய்ப்பளிக்கப்படும் ஒவ்வொரு நபருக்கும் ரூ. 50 வீதம் பயிற்சிக்கட்டணமாக 6 மாதம் வரை அளிக்கப்படும். இவ்வாறு வேலைவாய்ப்பளிக்கப்படும் குடும்பங்களுக்கும் ரூ. 5,000 வணிகக்கடன், ரூ. 8,000 வீட்டுக்கடன் மற்றும் குடிசை இனாம் ரூ. 500 வழங்கப்படும். இச்குடும்பங்களுக்கும் 6 மாத காலம் வரை ரொக்கப்படியும் மலிவு விலையில் அரிசியும் கிடைக்கும். இத்திட்டம் 1983-84, 1984-85-ல் அமல் நடத்தப்படும்.

மின்விசை பொருத்திய சைக்கிள் ரிக்ஷா வழங்குதல்

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய 100 குடும்பங்களுக்கு மின்விசை பொருத்திய சைக்கிள் ரிக்ஷா வழங்கி வேலைவாய்ப்பளிப்பதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இவ்வாறு வேலைவாய்ப்பளிக்கப்படும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ. 5,000 வணிகக்கடனும் ரூ. 1,000 வியாபாரம் செய்யும் இடத்திற்கான கடனும் வழங்கப்பட்டு, இத்தொகையை ஏதாவதொரு தேசீயமயமாக்கப்பட்ட வங்கியில் வைப்புத் தொகையாகச் செலுத்தி மேலும் அதிகக் கடன் வசதி பெற்று மின்விசை பொருந்திய சைக்கிள் ரிக்ஷா பெற்றுத் தரப்படும். இத்துறை மற்றும் வங்கியின் மூலம் வழங்கப்படும் கடன் தொகையைச் சுலபத் தவணைகளில் திருப்பிச் செலுத்த வேண்டும். அவ்வாறு முழுத்தொகையும் திருப்பிய பின் வழங்கப்பட்ட மின்விசை பொருந்திய சைக்கிள் ரிக்ஷா அவர்களுக்குச் சொந்தமாகிவிடும். மேலும் வங்கியில் செலுத்தப்பட்ட வைப்புத் தொகையும் அதற்கான வட்டியும் சேர்த்து பின்னர் ரூ. 10,000 அக்குடும்பங்களுக்கு வழங்கப்படும். இவ்வாறு வேலைவாய்ப்பளிக்கப்படும் குடும்பங்களுக்கும் வணிகக் கடன் ரூ. 5,000, வியாபாரம் செய்யும் இடத்திற்கான கடன் ரூ. 1,000 வீட்டுக்கடன் ரூ. 8,000 மற்றும் குடிசை இனாம் ரூ. 500 ஆகிய உதவிகள் வழங்கப்படும். இக்குடும்பங்கட்கும் ஒரு மாத காலத்திற்கு ரொக்கப்படியும், மலிவு விலையில் அரிசியும் வழங்கப்படும். இத்திட்டம் 1983-84 மற்றும் 1984-85-ஆம் ஆண்டுகளில் அமல் நடத்தப்படும்.

மைய அரசின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ள திட்டங்கள்

ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட பால்பண்ணைத் திட்டத்தினைக் கீழ்க்கண்ட 13 இடங்களிலும் செயல்படுத்தி இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் சுமார் 1150 குடும்பங்களைக் குடியமர்த்தி வேலைவாய்ப்பளிக்கத் திட்டங்கள் தீட்டப்பட்டு மைய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன.

இவ்வாறு வேலைவாய்ப்பளிக்கப்படவிருக்கும் குடும்பங்களுக்கும் ஏற்கெனவே பால்பண்ணைத் திட்டத்தில் குடியமர்த்திய குடும்பங்களுக்கும் உள்ளதுபோல் அனைத்து உதவிகளும் கிடைக்கும். இத்திட்டம் மைய அரசின் ஒப்புதல் பெறப்பட்டபின் 1983-84, 1984-85-ல் செயல்படுத்தப்படவிருக்கிறது.



தாயகம் திரும்பியோருக்கு, வழங்கப்பட உள்ள மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்ஷாக்கள்.

திருச்செங்கோட்டில் அம்பர் சர்க்கா திட்டத்தின் கீழ் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய குடும்பங்களைக் குடியமர்த்தல்

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய 30 குடும்பங்களைக் குடியமர்த்தி அம்பர் சர்க்கா வழங்கி, சுயவேலைவாய்ப்பும் நிரந்தர வருமானமும் கிடைக்கச் செய்தலே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இத்திட்டத்திலும் ரூ. 5,000 வணிகக்கடன் வழங்கி தேசீயமயமாக்கப்பட்ட வங்கியில் வைப்புத்தொகையாகச் செலுத்தப்பட்டு மேலும் கடன் வசதி பெறப்பட்டு அம்பர் சர்க்கா பிரிவிற்கு வேண்டிய கருவிகள் மற்றும் இயந்திரங்கள் வாங்கித் தரப்படும். திருச்செங்கோடு காந்தி ஆசிரமம் இதற்கான பயிற்சியை அளிப்பதுடன் தயாரிக்கப்பட்ட ஆடைகளை அங்காடியில் விற்பனை செய்யும் உதவியையும் நல்கும். இத்துறை மற்றும் வங்கி மூலம் அளிக்கப்படும் கடன் தொகைகள் சுலபத் தவணைகளில் திரும்பப் பெறப்படும். அவ்வாறு கடன் தொகை முழுவதும் செலுத்தப்பட்ட பின் அம்பர் சர்க்கா பிரிவு அவர்களுக்கே சொந்தமாவதுடன் வைப்புத் தொகை மற்றும் அதன் மீதான வட்டியும் சேர்த்து ரூ. 10,000 அளிக்கப்படும். இக்குடும்பங்களுக்கும் வணிகக் கடன் ரூ. 5,000 வீட்டுக்கடன் ரூ. 8,000, மற்றும் குடிசை இனாம் ரூ. 500, ஒருமாத காலத்திற்கு ரொக்கப்படி மற்றும் மலிவு விலையில் அரிசி வழங்கப்படும். இத்திட்டமும் மைய அரசின் ஒப்புதலுக்குப் பின் 1984-85-ல் செயல்படுத்தப்படவிருக்கிறது.

மதுரை மாவட்டம் டி. கல்லுபட்டி கிராமத்தில் நேபாளி தறிநெசவு நிலையத் திட்டத்தின் கீழ் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய குடும்பங்களைக் குடியமர்த்தி வேலை வாய்ப்பளித்தல்

இத்திட்டத்தின் மூலம் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய 25 குடும்பங்களுக்குத் தலா ரூ.5,000-ம் வணிகக் கடனாக வழங்கி டி. கல்லுப்பட்டி கிராமத்திலுள்ள காந்திநிகேதன் ஆசிரமத்தில் வைப்புத்தொகையாகச் செலுத்தப்படும். இந்த ஆசிரமம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு நேபாளியத் தறியும் அதற்கான மூலப்பொருட்களையும் வழங்கும். மேலும் இந்த ஆசிரமம், இலங்கை



மீன்பிடித்தொழிலுக்கு ஒரு தனி அமைச்சகம் ஏற்படுத்தப்பட்டு, மீனவர்களுக்கு மானியம் வழங்கி, மீன்பிடி தொழிலை ஊக்குவிக்கும் பணியை மேற்கொண்டுள்ளது. மீனவர்கள் மீன்பிடிக்கும் கருவிகளை வாங்கிட, 1.50 இலட்சம் வரையில் கடன் வழங்கப்படுகிறது. மீன்பிடித்தொழிலுக்கு ஒரு மாதத்திற்கு ரூ. 5,000 வரை கடன் வழங்கப்படும். ரூ. 8,000 வரை கடன், மற்றும் ரூ. 500 ஒரு வருட காலம் ஆகியவை வழங்கப்படுவதுடன் ஆறு மாத காலம் வரை வட்டி தள்ளுபடியும் மானிய விலையில் அரிசியும் கிடைக்க வழி செய்யப்படும்.

மேற்கூறிய இடங்களைத் தவிர இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் ஒரும் பங்களைக் ஒரு யாழ் மாவட்டத்தி மறுவாழ்வளிக்க இடம் ஒரு பிரிவு ஒன்றை இடங்களும் தமிழக அரசின் பரிசீலனையில் உள்ளன.

ஒரு யாழ்த் தமிழ் படனிருக்கும் ஒரு பங்களா

ஒரு நாளுக்கு ஒரு ரூபாய் வீதம் 365 நாட்கள் சேமிப்பு

ஒரு ரூபாய் வீதம் 365 நாட்கள் சேமிப்பு ரூ. 365

ஏற்கெனவே இயங்கிவரும் சுற்றுலா அலுவலகங்களை வலுப்படுத்துவதோடு குறைந்த பட்சம் இளநிலைஉதவியாளர்கள் போன்ற பதவிகள் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக 1983-84 ஆம் ஆண்டு வரவுசெலவு கணக்கில் ரூ. 70,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

களப்பணி ஆற்றும் சுற்றுலா அலுவலர்கள் சுற்றுலாத்துறை மேற்கொள்ளும் மேம்பாடு, விளம்பரம் மற்றும் திட்டப்பணிகள் செயலாக்கத்தில் மிக முக்கிய பங்கேற்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். மாவட்ட அளவில் அவர்கள் மாவட்டஆட்சியர், பிற துறை அலுவலர்கள், பயண முகவர்கள் போன்றவர்களோடு சுற்றுலா வளர்ச்சிப் பணிக்காக இணைந்து செயலாற்ற வேண்டியுள்ளது. அவர்கள் பயன்மிக்க முறையில் செயலாற்ற வேண்டுமானால், சுற்றுலாத் தொழிலில் ஏற்பட்டு வரும் நவீன மாறுதல்கள், வளர்ச்சிகள் ஆகியவற்றை நன்கு அறியச் செய்ய வேண்டுவது மிக அவசியமாகிறது. அதற்காக அவர்களுக்குப் புத்தறிவுப் பயிற்சி அளிக்கத் தீர்மானிக்கப்பட்டது. இத்திட்டத்தின் ஒரு அங்கமாக முதல் அணி சுற்றுலா அலுவலர்கள் 1983 அக்டோபர் திங்கள் வட இந்தியாவில் புதுதில்லி, ஆக்ரா, சண்டிகர், சிம்லா, ஜெய்ப்பூர் ஆகிய இடங்களுக்குப் பயிற்சிப் பயணம் சென்று வந்தனர்.

சுற்றுலாத் துணைவர்கள்:

சற்றுலா வளர்ச்சிக்கு உறுதுணையாகப் போதுமான சுற்றுலாத் துணைவர்கள் இருப்பது

இன்றியமையாதது. முக்கியமாக வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு இவர்கள் உதவி அவசியம் தேவை. ஆனால் தஞ்சை, மதுரை, திருச்சி, கன்னியாகுமரி போன்ற தென் மாவட்டங்களில் அத்தகைய வசதி இதுவரை செய்யப்படாமலேயே இருந்தது. இந்தக் குறையைப் போக்க இவ்வரசு சென்ற 1983 மார்ச்சு திங்களில் சுற்றுலாத் துணைவர்கள் பயிற்சித் திட்டம் ஒன்றினை நடத்தி 24 சுற்றுலாத் துணைவர்களுக்குப் பயிற்சி அளித்தது ஒரு முக்கிய சாதனையாகும்.

மேம்பாடு, விளம்பரம்:

பயண எழுத்தர்கள், பத்திரிகையாளர்கள், சுற்றுலா முகவர்கள் போன்றவர்களை விருந்தினராக வரவேற்று உபசரித்து நமது சுற்றுலாசிறப்புமிக்கஇடங்களைச் சுற்றிக்காட்டி அனுப்பிவைப்பது நமது மாநிலத்திற்குச் சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் ஈர்க்க வகைசெய்யும் மற்றொரு முக்கிய வழியாகும். அப்படி வந்து செல்பவர்கள் அவர்களுடைய நாட்டில் வெளிவரும் பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள் ஆகியவற்றில் நமது சுற்றுலாச் சிறப்புமிக்க இடங்களை அந்த அந்த நாட்டில் வாழும் மக்கள் காணவேண்டும் என்ற அவாவினைத் தூண்டும் வகையில் கட்டுரைகள், சிறு குறிப்புகள், புகைப்படங்கள் முதலியவற்றை வெளியிடுகிறார்கள். வானொலி, தொலைக்காட்சிகள் ஆகியவற்றிலும் சிறப்பு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்கிறார்கள். இத்தகைய ஏற்பாடு அங்குள்ளவர்கள் தமிழகம் வரப் பெரிதும் உதவுகின்றது.

எனவே தமிழக அரசு, இந்திய அரசு சுற்றுலாத்துறை ஏர் இந்தியா, இந்தியன் ஏர்லைன்ஸ் பயண முகவர்கள், ஓட்டல்கள் பிற தென்மாநிலங்கள் ஆகியவர்களின் ஒத்துழைப்புடன் முதன் முதலில் ''தென்னகம் நோக்கி'' என்ற திட்டத்தின்கீழ் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து 60, பயண எழுத்தர்கள், பத்திரிகையாளர்கள், புகைப்படக்காரர்கள் ஆகியோரை நமது விருந்தினராக வரவேற்று உபசரித்து தென்னிந்தியாவில் உள்ள சுற்றுலாச் சிறப்புமிக்க இடங்களை அவர்களுக்குச் சுற்றிக்காட்டி அனுப்பி வைத்தது. அதன் தொடக்க விழா 1977ஆம் ஆண்டு சென்னையில் தமிழகச் சுற்றுலாத்துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த விழாவில் நமது

கலாசாரம் மற்றும் சுற்றுலாச் சிறப்பிடங்கள் ஆகியவை பற்றி ஒரு கருத்தரங்கமும் ஏற்பாடு செய்யப்பட்டது. அவ்விழாவில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்கள் பங்கு கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள். இதனால் தென்னகத்திற்கு வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்தது. எனவே இந்தத் "தென்னகத்தை நோக்கி" என்னும் திட்டம் மீண்டும் 1979, 1980ஆம் ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டது. தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட இத்திட்டத்தினால் தென்னகத்திற்கு வரும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை சுமார் 20%உயர்ந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதேபோல உள்நாட்டுப் பத்திரிகையாளர்களும் தமிழகத்தைச் சுற்றிப்பார்க்க ஏற்பாடு செய்யப்படுகிறது. அண்மையில் திருமனோஜ்தாஸ் என்பவர் தமிழகம் முழுவதும் சுற்றிப் பார்க்க ஏற்பாடு செய்யப்பட்டது. இவர் பல்வேறு பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுத இருக்கிறார். அவ்வப்போது தமிழகம் வரும் அயல்நாட்டுப்பயண முகவர்களுக்கும் வரவேற்பளித்து உபசரிக்கப்படுகிறது. இப்படிச் செய்வதால் நமது வெளிநாட்டுச் செலாவணி செலவழிக்காமல் இவர்கள் மூலம் அவர்களுடைய நாட்டில் தமிழகத்தின் சுற்றுலாச் சிறப்புகளுக்கு நல்ல விளம்பரம் கிடைக்கிறது.

பயனுள்ள சுற்றுலா வெளியீடுகள் கொண்டுவருதல் மற்றொரு சிறந்த சுற்றுலா மேம்பாட்டு விளம்பரச் சாதனையாகும். எனவே, ஆண்டொன்றிற்குச் சுமார் ரூ. 3 இலட்சம் முதல் ரூ.4 இலட்சம்வரை செலவில் பல வகைச் சுற்றுலா வெளியீடுகளைக் கொண்டு வந்து அவற்றை வெளி நாடுகளில் உள்ள இந்தியச் சுற்றுலா மற்றும் ஏர் இந்தியா அலுவலகங்கள் மூலம் அங்குள்ளவர்களுக்கு விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

இடைவிடாத மேம்பாட்டு முயற்சியில் பல்வேறு பத்திரிகைகளில் வெளியிடப்படும் விளம்பரம் முக்கிய அங்கம் வகிக்கிறது. அத்தகைய மேம்பாட்டுப் பணியில் குறிப்பாக வட மாநிலங்களில் சிறந்த பத்திரிகைகளில் வண்ண விளம்பரம், சாதாரண விளம்பரம் செய்வதால் அங்குள்ளவர்கள் தமிழகம் காண வருகின்றனர்.

விழாக்கள், பொருட்காட்சிகள்:

ஆண்டுதோறும் மலைவாசத் தலங்களில் கோடைவிழாவும் முக்கிய சுற்றுலா மையங்களில் பொங்கல் சுற்றுலா விழாவும் கொண்டாடப்படுகிறது. கடந்த சனவரியில் நடந்த பொங்கல் விழாவின்போது மாமல்லபுரத்தில் மீனவர்களுக்கான கட்டுமரப் படகுப் போட்டி நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டது. இத்தகைய விளையாட்டுப்போட்டி நடத்தப்படுவது இதுவே முதல் முறையாகும்.

கடந்த மார்ச்சு திங்களில் தேரழுந்தூரில் கவிச்சக்கரவர்த்தி கம்பனுக்கு அரசு எடுத்த விழாவில் சுற்றுலாத்துறை பங்கு கொண்டு நூலகத்திற்குப் புத்தகங்கள் வழங்கியதோடு பொம்மலாட்டக் காட்சி ஒன்றிற்கும் ஏற்பாடு செய்தது. இத்தகைய விழாக்களுக்கு வெளநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் அழைக்கப்பட்டு சிறப்பாக உபசரிக்கப்படுகிறார்கள்.

மதுரையில் நடக்கும் பொங்கல் விழாவின்போது, அங்கு வருகை தந்துள்ளவெளிநாட்டுப்பயணிகள் அருகில் அலங்காநல்லூரில் நடக்கும் மஞ்சு விரட்டு வீர விளையாட்டைக் காண அழைத்துச் செல்லப்படுகிறார்கள்.

தமிழகத்தின் மிக முக்கியமான பொங்கல் விழாவினையொட்டி கடந்த 11 ஆண்டுகளாகத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஆண்டுதோறும் சென்னையில் சனவரி-பிப்ரவரி மாதங்களில் அகில இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை அரசின் ஆதரவுடன் நடத்தி வருகிறது. தமிழகத்தின் பிற முக்கிய நகரங்களில் நடத்தப்படும் அரசு பொருட்காட்சிகளில் சுற்றுலாத்துறை பங்கு கொண்டு சுற்றுலாத்துறையின் சாதனைகளை அரங்குகள், ஒலி, ஒளிக் காட்சி மற்றும் பொம்மலாட்டக் காட்சிமூலம் விளக்குகிறது.

அண்மையில் சென்னையில் நடந்து முடிந்த 11வது அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் சுற்றுலாத் துறை நூதனமாக அமைத்த ஒலி ஒளி மற்றும் பொம்மலாட்டக் காட்சி ஆயிரக்கணக்கான மக்களின் பாராட்டுதலைப் பெற்றது.

சுற்றுலாத்துறையும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் வெளி மாநிலங்களிலும் தில்லியிலும் நடைபெறும் அனைத்திந்திய மற்றும் அனைத்து நாட்டுப் பொருட்காட்சிகளில் பங்கு கொண்டு தமிழகத்தின்சுற்றுலாச் சிறப்புகளை விளக்கும் வகையில் அரங்குகள் அமைத்து நமது சுற்றுலாச் சிற்பச் சிறப்பிடங்களுக்கு நல்ல விளம்பரம் பெற்று வரு

கிறது.

தற்போது சென்னையில் பொருட்காட்சி நடத்தப்பட்டு வரும் தீவுத்திடலில் நிலையான பொருட்காட்சிக்குத் தேவையான ஆதாரக் கூறுகளை ஏற்படுத்தும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் முதல் கட்டமாக அங்கே இவ்வாண்டு நிலையான திறந்த வெளி உணவகம் திறக்கப்பட்டுள்ளது. கூவம் ஆற்றின் குறுக்கே இருபுறமும் போய் வர ஏதுவாக மூன்று பாலங்கள் கட்டவும், குடிநீர் வசதிக்காகவும் 1983-84ஆம் நிதி ஆண்டில் ரூ.10 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட பாங்கில் நாளும் பெருகி வரும் சுற்றுலா வளர்ச்சிப் பணிகளைக் கவனித்து வரும் சுற்றுலாத்துறையின் வரவு செலவு 1975-76ஆம் ஆண்டில் ரூ. 22.7 இலட்சமாகும். ஆனால் 1983-84ஆம் ஆண்டில் இந்த வரவு செலவு ரூ. 180 இலட்சத்தினை எட்டி உள்ளது என்பது சுற்றுலாத்துறை ஆற்றிவரும் பல்வேறு சாதனைகளை எடுத்துக் காட்டும் ஒரு அளவுகோலாகும்.

எந்த ஒரு திட்டமிட்ட முன்னேற்றப் பணிக்கும் உண்மையான முறையில் தேவைக்கேற்ற வகையில் திட்டங்கள் தீட்ட அடிப்படையில் புள்ளி விவரங்கள் தேவைப்படுகின்றன. இதனை உணர்ந்த அரசு 1981ஆம் ஆண்டில் சுற்றுலாத்துறையில் புள்ளி விவரப் பிரிவினை ஏற்படுத்தி தேவையான புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சிக்காகச் செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 72.26 இலட்சம்தான். ஆனால் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கீடுசெய்யப்பட்டமொத்தத் தொகை ரூ. 493 இலட்சமாகும். இதிலிருந்து சுற்றுலா வளர்ச்சியில் அரசின் சாதனை நன்கு விளங்கும்.

பெருந் திட்டம்:

மைய அரசு சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளத் தக்க அனைத்துலக முக்கியத்துவம் வாய்ந்த மூன்று மையங்களைத் தேர்ந்தெடுக்கும்படி கேட்டுக் கொண்டதற்கிணங்க தமிழக அரசு மாமல்லபுரம், இராமேசுவரம், கன்னியாகுமரி ஆகிய மூன்று இடங்களைப் பரிந்துரைத்துள்ளது. அதேபோல மலைவாசத் தலங்களின் ராணி எனப் போற்றப்படும் உதகமண்டலத்தின் மேம்பாட்டிற்காகவும் உலகவங்கியிடம் கடன் பெற வழி செய்யுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட நான்கு இடங்களின் சுற்றுலா மேம்பாட்டிற்காக வல்லுநர்களை கொண்டு கடந்த நான்கு ஆண்டுகளில் தொலைநோக்குப் பெருந்திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் கூறப்பட்டுள்ளபணிகள் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

மாமல்லை பெருந்திட்ட மதிப்பீடு ரூ. 5.83 கோடியாகும்.

இராமேசுவரம் பெருந்திட்ட மதிப்பீடு ரூ. 28 கோடியாகும்.

நாளும் வளரும் சுற்றுலாத் துறை:

கன்னியாகுமரி பெருந்திட்ட மதிப்பீடு ரூ. 16 கோடியாகும்.

உதகமண்டலம் பெருந்திட்ட மதிப்பீடு ரூ. 28 கோடியாகும்.

பயண வட்டம்:

பயண வட்டங்கள் என்ற அடிப்படையில் திட்டமொன்றினைத் தீட்டுமாறு மைய அரசு கேட்டுக் கொண்டது. எனவே, 1980-85 சுற்றுலாத் திட்டம் என்ற பெருந் திட்டம் ஒன்றினைக் கீழ்க்கண்ட பயண வட்டங்களைத் தழுவி வல்லுநர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டு மைய அரசுக்கு அனுப்பப்பட்டது.

1. சென்னை -மாமல்லபுரம்-திருக்கழுக்குன்றம் - காஞ்சிபுரம்-திருச்சி-தஞ்சை-புதுக்கோட்டை, மதுரை - இராமேசுவரம் -கன்னியாகுமரி - குற்றாலம் - திருவனந்தபுரம்.

2. சென்னை - கிருஷ்ணகிரி-ஒகேனக்கல் - ஏர்க்காடு -கோயம்புத்தூர் - உதகமண்டலம் -முதுமலை - மைசூர் - பெங்களூர்.

இராமேசுவரம் - மதுரை - கொடைக்கானல்-புதுக்கோட்டை திருச்சி - தஞ்சை - மாமல்லபுரம் - சென்னை.

இந்தப் பயண வட்டங்களில் தமிழகத்தில் உள்ள 18 இடங்களில் தேவையான அடிப்படை வசதிகளையும் பிற சுற்றுலா வளர்ச்சிப் பணிகளையும் மேற்கொள்ள ரூ. 70 கோடி தேவையென அப்பெருந்திட்டத்தில் மதிப்பீடு செயயப்பட்டுள்ளது. இத்திட்டம் மாமல்லை, இராமேசுவரம், கன்னியாகுமரி, உதகமண்டலம் ஆகிய இடங்களையும் உள்ளடக்கியுள்ளது. இந்த நான்கு இடங்களின் மேம்பாட்டிற்கெனத் தனித்தனியே மேம்பாட்டுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அவை படிப்படியாக நிறைவேற்றப்படுவதால் இவை நீங்கலாக மீதமுள்ள 14 இடங்களின் மேம்பாட்டிற்காக ரூ. 34.5 கோடி இதில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது எனக் கூறலாம்.

குடத்திலிட்ட விளக்கு:

தமிழகத்தில் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த வேறு பல இடங்கள் இன்னும் குடத்திலிட்ட விளக்காகவே இருக்கின்றன. பிச்சாவரம், ஆவுடையார் கோயில், மனோரா, ஒகேனக்கல் போன்ற இத்தகைய இடங்களின் மேம்பாட்டிற்காக நிதி நிலைக்கேற்ப படிப்படியாக வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புதுமையான திட்டம்:

உள்ளூர் மக்களிடையே சுற்றுலா உணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடனும் உள்ளூர் சுற்றுலாவை ஊக்குவிக்கவும் மாவட்டத்திற்கு இரண்டு மையங்கள் என்ற விகிதத்தில் 30 இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவ்விடங்களில் அந்தப் பகுதி போக்குவரத்துக் கழகங்களின் உபரி நிதியிலிருந்து அடிப்படை வசதிகள் செய்து தரும் திட்டம் ஒன்றும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழகம் தவிர வேறெந்த மாநிலத்திலும் இத்தகைய புதுமையான திட்டம் மேற்கொள்ளப்படவில்லை.

புதுக்கோட்டை மாவட்டத்தில் சித்தன்னவாசல், பெரியார் மாவட்டத்தில் பவானி, ஆடுதுறை, திருச்சி மாவட்டத்தில் சுங்கை கொண்ட சோழபுரம், கோயம்புத்தூர் மாவட்டத்தில் திருமூர்த்தி மலை, திருநெல்வேலி மாவட்டத்தில் பாபநாசம் ஆகிய ஐந்து இடங்களை மாவட்ட உலாத்தலங்களாக மேம்பாடு செய்யும் பணிகள் 1983-84ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன. அந்த அந்தப் பகுதி போக்குவரத்துக் கழகங்கள் வழங்கும் நிதியைத் தவிர சுற்றுலாத் துறை மையம் ஒன்றிற்கு ரூ. 2 இலட்சம் வீதம் செலவு செய்ய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

சிறப்புப்பணிகள் சில:

பல்வேறு மையங்களில் அவ்விடங்களின் தேவைக்கேற்றவகையில் தமிழக அரசு சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள பாங்கினை விளக்கும் சிறப்புப்பணிகள் சிலவற்றை இங்கே குறிப்பிடுவது மிக அரவசியமாகும்.

கடல்மல்லை எனப்பல்லவர்கள் காலம் முதல் போற்றப்படும் கலைமணம் கமழும் மாமல்லைபுரம் அனைத்துலகப் புகழ்பெற்ற ஒரு சுற்றுலா மையமாகும். அங்கே திறந்தவெளி அருங்காட்சியகம் ஒன்று அமைத்து அதன் வாயிலாக அங்கு வரும் சுற்றுலாப் பயணிகள் அனைவரும் தமிழகத்தின் பழம்பெரும் கலாசாரப் பண்பாட்டுப் பாரம்பரியத்தை நேரில் கண்டு உணர்ந்து கொள்ளும் வகையில் திட்டம் தீட்டப்பட்டு செயல் படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக ரூ.68 இலட்சம் ஆகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இராமேசுவரம் செல்லும் பயணிகள் யாவரும் மண்டபம் வழியாகவே செல்லவேண்டி இருப்பதால் அங்கு வருவோர் குறைந்த செலவில் இரவு தங்கிச் செல்ல முகாம்கள் அமைக்க முடிவு செய்யப்பட்டு, அதற்காக ரூ. 42.75 இலட்சம் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதில் 1983-84ஆம் ஆண்டிற்கு ரூ. 5 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.



கன்னியாகுமரி வருவோரில் பெரும்பாலோர் பேருந்துகளில் வந்து ஒரே நாளில் திரும்பி விடுகின்றனர். அத்தகைய சுற்றுலாப் பயணிகள் தங்கி ஓய்வு பெறவும் இளைப்பாறவும், பேருந்துகளை நிறுத்தவும் வசதி செய்து தரும் நோக்கத்துடன் அங்கே ஓய்வுக் கூடம் கட்டத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது சுற்றுலாத்துறையின் பங்காக இதற்கு 1983-84ஆம் ஆண்டில் ரூ. 5 இலட்சம் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் பொழுதுபோக்கு வசதிகள் செய்து தரும் திட்டத்தின் ஒரு அங்கமாக ரூ. 15 இலட்சம் செலவில் அங்கே திறந்தவெளி கலை அரங்கம் கட்டவும் திட்டம் தீட்டப்பட்டு அதற்காக 1983-84ஆம் ஆண்டில் ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

உதகமண்டலத்தில் உள்ள தொட்டபெட்டா நீலகிரிமலைத் தொடரில் உயர்ந்த சிகரம். அங்கிருந்து உதகை நகர்ப்பகுதிக்கு இரும்புக் கயிறு வழி (Rope way) மூலம் சுற்றுலாப் பயணிகள் வர ஆய்வு அறிக்கை பெறப்பட்டு பணி செய்ய முறைப்படுத்துவது பற்றி தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பரிசீலித்து வருகிறது.

மேலும் உதகையில் சுற்றுலா வளர்ச்சிக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருத்துரைகள் அளித்துள்ளார்கள். அந்த அடிப்படையில் இதுவரை ரூ.69.5

இலட்சம் மதிப்புள்ள பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

நீர்விளையாட்டுப் போட்டிகள் :

நீர்விளையாட்டுப் போட்டிகளுக்கும் மலையேறுதலில் ஊக்கம் அளிக்கவும் தனிக்கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. கீழ்க் கடற்கரையோர நெடுஞ்சாலையில் சென்னைக்கும் மாமல்லபுரத்திற்கும் நடுவில் உள்ள முட்டுக்காடு இயற்கையெழில் கொண்ட ஈடு இணையற்ற வனப்புமிகு இடமாகும். அங்குள்ள உப்பங்கழியில் உல்லாசப்படகு, நீர் சருக்கு, பாய்மரப் படகு (Wind Surfing) போன்ற பொழுதுபோக்கு வசதிகளுக்கு அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அங்கே தேவையான பூங்கா, உணவகம், உடைமாற்ற அறைகள், சிறுவர்கள் பூங்கா போன்ற மற்ற வசதிகள் செய்யவும் திட்டம் தீட்டப்பட்டு வருகிறது.

சென்னைக்கு அருகாமையில் உள்ள செம்பரம்பாக்கம் ஏரியில் பாய்மரப் படகுப் போட்டி ஒன்று ராயல் சென்னை யாட்சிங் சங்கத்தின் (Royal Madras Yatch Club) ஒத்துழைப்புடன் சென்ற ஏப்ரல் திங்களில் நடத்தப்பட்டது.

மே மாதத்தில் கொடைக்கானலில் மலை வளங் காண மலையேறுதலுக்கு (Trekking) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாணவர் நாட்டு நலப்பணித் திட்டத்தோடு இணைந்து, ஆசிரியர் புத்தறிவுப் பயிற்சித் திட்டத்தின்கீழ் உதகை ஏரியை அழகுபடுத்தும் திட்டமும் கோத்தகிரி இளைஞர் விடுதிக்கான பணிகளும் மாணவ மாணவியரின் நல்லுழைப்போடு நடைபெற்று வருகின்றன.

ஆண்டுதோறும் அரசு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு பங்கு மூலதனமும் கடனும் அளித்து உதவி வருகிறது. 1983-84ஆம் ஆண்டில் ரூ. 71.4 இலட்சம் பங்கு மூலதனமாகவும் ரூ. 20 இலட்சம் கடனாகவும் கொடுக்கப்பட்டுள்ளது. அதோடு சுற்றுலாத்துறையின் திட்டப் பணிகள் பெரும்பாலும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலமாகவே நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் :

அரசு மேற்கொண்டுள்ள சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் இரு கூறுகள் கொண்டவை. ஒன்று மேம்பாடு, விளம்பரம் மற்றும் திட்டமிட்ட வளர்ச்சிப் பணிகள் அடங்கியது. இதனைச் சுற்றுலாத் துறை நிறைவேற்றி வருகிறது. மற்றொன்று, வியாபார ரீதியில் செயல்படுத்தப்பட வேண்டிய பணிகளாகும். இந்தப் பணிகளை நிறைவேற்றவே அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1971ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. அப்போது ஐந்து சுற்றுலா மாளிகைகளை மட்டுமே கொண்டு தனி நிறுவனமாக (Private Limited) ஆரம்பிக்கப்பட்ட இக்கழகம் பத்தாண்டுகளில் வளர்ந்து பொது நிறுவனமாக (Public Limited). இப்போது மாறியுள்ளது. இதன் தற்போதைய பங்கு மூலதனம் ரூ. 2.26 கோடிகளாகும். இது தவிர மேலே குறிப்பிடப்பட்டது போல் மானியமும் கடனும் வழங்கப்படுகிறது. 1971-72ஆம் ஆண்டில் அதன் வரவு செலவு (Turn Over) ரூ. 4.5 இலட்சமே. அது படிப்படியாக வளர்ந்து 1981-82ஆம் ஆண்டில் ரூ 201.17 இலட்சமாகவும் 1982-83ஆம் ஆண்டு ரூ. 300 இலட்சமாகவும் உயர்ந்துள்ளது.

அரசின் பொறுப்பில் இருந்த ஐந்து சுற்றுலா மாளிகைகளைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்

தக் கழகம் இன்று 14 'ஓட்டல் தமிழ்நாடு' விடுதிகளை முக்கிய சுற்றுலா இடங்களில் நிறுவி நிருவகித்து வருகிறது. சுற்றுலா வளர்ச்சியில் ஏற்பட்டு வரும் நவீன மாறுதல்களுக்கேற்ப இந்த ஓட்டல்கள் யாவும் ''ஓட்டல் தமிழ்நாடு'' என்ற பொதுப் பெயரில் இயங்கி வருகின்றன. இந்த ஓட்டல்கள் யாவும் நவீன முறையில் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் கடற்கரை வளாகம், குடில்கள், பெருவழி தங்கும் விடுதிகள் மதுரை, கோவை ஆகிய இடங்களில் உள்ள 3 நட்சத்திர ஓட்டல்களும் அடங்கும்.

1971ஆம் ஆண்டு 253 படுக்கை வசதிகள் கொண்ட விடுதிகளை மட்டுமே தன்வசம் கொண்டிருந்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இன்று மொத்தம் 1463 படுக்கை வசதிகளைக் கொண்டு சுற்றுலாப் பயணிகளுக்குச் சிறப்பான சேவை செய்து வருகிறது.

சிக்கன தங்குமிட வசதி:

சாதாரண, நடுத்தர மற்றும் இளைஞர்களின் தேவைகளையும் அவர்களது பொருளாதார நிலையையும் கருத்தில்கொண்டு இளைஞர் விடுதிகளையும் எல்லா முக்கிய சுற்றுலா இடங்களிலும் கட்டி, குறிப்பாக இளைஞர்கள் மலையேறுதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளில் ஊக்கமும் உற்சாகமும் கொள்ளும் வகையில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இந்த இளைஞர் விடுதிகள் மாமல்லை, ஏரிக்காடு, உதகமண்டலம், மண்டபம், முதுமலை, இராமேசுவரம் ஆகிய இடங்களில் ஏற்கனவே திறக்கப்பட்டு விட்டன. பிற இடங்களில் இளைஞர் விடுதி கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் நடந்து வருகின்றன. இதில் கோடிட்டுக் காட்ட வேண்டிய அம்சம் தேசிய இளைஞர் சமூக சேவை சங்கம் அதனுடைய பயிற்சியின் ஒரு அங்கமாக கோத்தகிரியில் இளைஞர் விடுதி ஒன்றினைக் கட்ட இருப்பதாகும்.

குறைந்த வருவாய் உள்ளவர்களிடையே சுற்றுலா உணர்வை ஏற்படுத்தி ஊக்குவிக்கும் நோக்கத்தோடு ஆரம்பிக்கப்படும் மற்றொரு திட்டம் மாமல்லையில் ஏற்படுத்தப்பட்டுள்ள தங்குமுகாம் ஆகும்.

அங்குள்ள கடற்கரை வளாகத்தில், புதிய குடில்கள், நீச்சல் குளமும் புதிதாகக் கட்டப்பட்டுள்ளன. இங்கே மாநாடுகள், சுருத்தரங்குகள் நடத்தத் தனி மண்டப வசதியும் உண்டு. மற்ற இடங்களிலும் மாநாடு நடத்தும் வசதி செய்யப்பட்டுள்ளது.

போக்குவரத்து :

ஆரம்பத்தில் 2 சொகுசுப் பேருந்துகளே பெற்றிருந்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம், தற்போது ஒரு சிறிய சொகுசுப் பேருந்து, குளிர் சாதன வசதி கொண்ட சொகுசுப் பேருந்துகள் உள்பட 20 சொகுசுப் பேருந்துகளைப் பெற்றுள்ளது. இக்கழகத்தின் பிரிவில் ஏற்பட்டுள்ள இன்னொரு சிறப்பான முன்னேற்றம், அண்மையில் குளிர்சாதனம் கொண்ட 5 டாட்சன் சீருந்துகளை இறக்குமதி செய்ததும், 3 அம்பாசிடர் சீருந்துகளை வாங்கி இருப்பதும் ஆகும்.

போக்குவரத்தைப் பொறுத்த வரையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பல விதங்களில் நாட்டில் முன்னோடியாகத் திகழ்ந்து பல சாதனைகளைச் செய்துள்ளது.

ஒரு வாரம், இரண்டு நாள்கள், ஒருநாள் என்று பல வகையான சுற்றுலாப் பயணங்களைத் தனது சொகுசுப் பேருந்துகள் மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் நடத்தி வருகிறது. இதனால் தென்னிந்தியா, தமிழகம், சென்னைக்கருகாமையில் உள்ள இடங்கள், சென்னையில் உள்ள சிறப்பிடங்கள் ஆகியவற்றைத் தமிழகம் வரும் சுற்றுலாப்பயணிகள், எளிதில், குறைந்த செலவில், நிறைந்த வசதிகளுடன் குறுகிய கால அளவில் பார்த்து மகிழ முடிகிறது.

எனவே, உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளிடையே இந்தப் பயணத் திட்டங்கள் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. மாநில அரசு நடத்திவரும் சுற்றுலா வளர்ச்சிக் கழகங்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஒன்றுதான் நாட்டிலேயே முதன்முதலாகத் தனது சுற்றுலாப் பயணங்களுக்கு பயணச் சீட்டுகளை விற்க சிங்கப்பூரிலும், கோலாலம்பூரிலும் முகவர்களை நியமித்துள்ளது. இது மிகவும் பெருமைப்படக் கூடிய சாதனையாகும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மற்றொரு சாதனை, கடந்த 11 ஆண்டுகளாக அரசு உதவியுடன் அது சென்னையில் நடத்தி வரும் அகில இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியாகும். புதுடில்லியில் நடக்கும் அனைத்துலக மற்றும் தேசியப் பொருட்காட்சியைத் தவிர வேறெங்கும் இத்தகைய சிறந்த பொருட்காட்சி நடத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பயணிகளும்—வசதிகளும்:

தமிழக அரசு மேற்கொண்டு செயல்படுத்தி வரும் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் காரணமாக தமிழகம் வரும் வெளிநாட்டு, உள்நாட்டுச் சுற்றுலாப்பயணிகள் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது. 1976ஆம் ஆண்டு தமிழகம் வந்த வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் 1·35 இலட்சம், உள்நாட்டு பயணிகள் 247.07 இலட்சம். 1982ஆம் ஆண்டு வெளிநாட்டுச் சுற்றுலா பயணிகள் வருகை 2.29 இலட்சமாகவும், உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வருகை 370 இலட்சமாகவும் உயர்ந்துள்ளது. இது ஏழாண்டுகளில் தமிழகம் வரும் இருவகைச் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கையிலும் முறையே 69.6 மற்றும் 49.8 சதவிகிதம் உயர்ந்துள்ளதைக் காட்டுகிறது.

முக்கிய இடங்களிலெல்லாம் தங்குமிட வசதி செய்து தரப்படுகிறது.

பொருட்காட்சி, ஓட்டல்கள், திட்டப்பணிகள் நிறைவேற்றம், சுற்றுலாப் பயண ஏற்பாடு செய்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளில் ஆயிரக்கணக்கானோருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுகிறது.

சுற்றுலா முக்கியம் வாய்ந்த நகரங்களில் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான தகவல்கள் அரசு நிறுவியுள்ள சுற்றுலா அலுவலகங்கள்— செய்தி நிலையங்கள் மூலம் கிடைக்கிறது. சுற்றுலாத் துணைவர்கள் இவ்விடங்களில் இருக்கிறார்கள்.

கைவினைப் பொருள் தொழில் ஊக்கம் பெற்று வருகிறது.

கலைஞர்கள், ஓவியர்கள் போன்ற பல தரப்பட்ட விற்பன்னர்கள் ஊக்கமும் ஆக்கமும் பெறுகின்றனர். பொருட்காட்சியில் அவர்களுடைய திறமையைக் காட்ட சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது.

அதேபோல, கிராமியக் கலைகளும் ஊக்கமும் ஆக்கமும் பெற்று வருகின்றன.

மீனவ மகளிர் நலம் பெற மேலான பணிகள்

மீனவ சமுதாயத்தில் ஆண்கள் தான் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றனர். ஆனாலும் பிடித்த மீன்களை விற்பனை செய்வது, அவற்றைச் சுத்தம் செய்து பாதுகாப்பது, கருவாடு தயாரிப்பது போன்ற முக்கியமான பணிகளில் ஈடுபடுவதன் மூலம் பெண்களின் பங்கு அதிக முக்கியத்துவம் வகிக்கிறது.

குடும்பப் பொறுப்பு தவிர மீன் வியாபாரத்தின் மூலம் சமூகப் பொருளாதாரத்தில் இவர்களுடைய ஒத்துழைப்பினைப் பார்க்கும்போது மீனவச் சமுதாயத்தின் ஒருங்கிணைந்த முன்னேற்றம் பெரும்பாலும் மீனவ மகளிரின் முன்னேற்றத்திலேயே அடங்கியிருப்பதாகக் கூறலாம். இந்தக் கருத்துதான், தமிழ்நாடு மீன்வளத்துறையில் பெண்களின் முன்னேற்றத்திற்கென ஒரு பிரிவைத்தோற்றுவிக்கக் காரணமாக அமைந்தது.

சமுதாய முன்னேற்றப்பணியில் மீனவ மகளிருடைய ஈடுபாட்டை அதிகப்படுத்த, 1981ஆம் ஆண்டு ஜூலை மாதம், மீனவ மகளிர் விரிவாக்கப்பணி தமிழ்நாடு அரசு மீன்வளத்துறையின் ஒரு பிரிவாக ஏற்படுத்தப்பட்டது.

முதன் முதலில் இப்பணிக்காக சென்னையில் திருச்சினாங்குப்பம், திருநெல்வேலி மாவட்டத்தில் தருவைக்குளம், தஞ்சை மாவட்டத்தில் கரையூர்த்தெரு ஆகிய மூன்று மீனவர் கிராமங்களில், மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டன. இவை இன்று நல்ல முறையில் இயங்கி வருகின்றன.

1982ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் உணவு விவசாயக் கழகத்தின் வங்காள விரிகுடா திட்டத்தோடு அரசு மீன்வளத்துறையும் இணைந்து மீனவ மகளிருக்கர்கு ஒரு பயிற்சித் திட்டத்தை ஏற்று நடத்தியது. இதில் செங்கை மாவட்டத்தில் 6 கிராமங்களில் இருந்தும் திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு கிராமத்தில் இருந்தும் 23 மீனவப் பெண்கள் பங்கேற்றனர்.

அரசில் உள்ள பல்வேறு துறைகள் குறித்தும் மற்றும் தன்யார் நிறுவனங்கள், வங்கிகள் அவற்றின் மூலம் மக்களுக்குக் கிடைக்கும் நன்மைகள் சுகாதாரம், சத்துணவு, குடும்ப நலம் சமூக விழிப்புணர்ச்சி, சமூக அமைப்பு குறித்தும் அவர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டது.

பிறகு, செங்கை மாவட்டத்தைச் சார்ந்த 6 கிராமங்களிலும் மீனவ மகளிர் விரிவாக்கப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மீன்துறையைச் சார்ந்த இருவரும் உணவு விவசாயக் கழகத்தைச் சார்ந்த இருவரும் விரிவாக்கப பணியாளர்களாக உதவி இயக்குநர் (மீனவ மகளிர் விரிவாக்கப் பணி) மற்றும் சமூகப் பொருளாதார நிபுணர் மேற்பார்வையில் செயல்பட்டு வருகின்றனர். மேலும் கிராம அளவில் மேற்கொண்ட பயிற்சி பெற்ற பெண்கள், கிராமத்தின் சார்பில் இப்பணிக்காக உதவி புரிந்து வருகின்றனர். 1983-ஆம் ஆண்டில் மீனவ மகளிர் விரிவாக்கப்பணி மேலும் பல கிராமங்களுக்கு விரிவாக்கப்பட்டுள்ளது.

மீனவமகளிர் விரிவாக்கப்பணியின் மூலம் மீனவ கிராமங்களில் ஆற்றப்பட்டுள்ள பணிகள் வருமாறு:-

மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள்:

சென்னை, செங்கல்பட்டு, திருநெல்வேலி, தஞ்சாவூர் மாவட்டங்களில் உள்ள மீனவ கிராமங்களில் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் 173 அமைக்கப்பட்டுள்ளன.

கடன் உதவி:

மீன் வியாபாரத்திற்காக முதலீடு செய்ய வசதியற்ற பெண்களுக்கு ரூ. 200 முதல் ரூ. 700 வரை 8 கிராமங்களில் யுனைடெட் கமர்சியல் வங்கி, சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா ஆகியவற்றின் மூலம் குறைந்த வட்டி விகிதத்தில் (4%) கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

முதியோர் கல்வி:

மகளிர் தொண்டு நிறுவனத்தின் மூலம் பனையூர்க்குப்பம் என்னும் கிராமத்தில் முதியோர் கல்வித்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதனால் 80 பெண்கள் பயனடைந்துள்ளார்கள்.

சேமிப்பு:

மீனவப் பெண்களிடையே சேமிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த மத்திய அரசின் தேசிய சேமிப்பு நிறுவனத்தின் மூலம் 6 கிராமங்களில் ஐந்தாண்டுத் தொடர் வைப்புக் கணக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பெண்கள் அதனை மகிழ்ச்சியுடன் ஏற்றுள்ளார்கள்.

குழந்தைகள் காப்பகம்:

சேவா சமாஜம் என்னும் தனியார் நிறுவனத்தின் உதவியுடன் இரண்டு கிராமங்களில் குழந்தைகள் காப்பகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மீன் வியாபாரத்திலும் வேறு தொழில்களிலும் ஈடுபட்டுள்ள மீனவத் தாய்மார்களுடைய குழந்தைகள் நல்ல முறையில் பாதுகாக்கப்படுகிறார்கள்.

ஆரம்பப்பள்ளி:

செம்மஞ்சேரிக் குப்பத்தில் பள்ளி வசதிக்காக உணவு மற்றும் விவசாயக் கழகத்தின் மூலம் கட்டிடம் கட்டித் தரப்பட்டு, திருப்போரூர் பஞ்சாயத்து யூனியன் மூலம் ஆரம்பப்பள்ளி செயல்படுகிறது.

கூடுதல் வருவாய் ஈட்டும் திட்டம்:

நைலான் வலை பின்னுதல் மூலம் வருவாய் ஈட்டும் திட்டத்தில் செம்மஞ்சேரி, பட்டிப்புலம் ஆகிய குப்பங்களில் ஆர்வமுள்ள 8 பெண்கள் ஈடுபட்டுப் பயன் பெறுகின்றனர்.

சமூகக் கூடங்கள் அமைத்தல்:

மூன்று கிராமங்களில் உணவு மற்றும் விவசாயக் கழகத்தின் மூலம் சமூகக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மீன்களை ஏற்றிச் செல்ல வாகன வசதி:

பிடித்த மீன்களைக் கடைகளுக்கு எடுத்துச் சென்று

* மீனவ மகளிர் – சிறுசேமிப்புத் திட்டத்தில் பங்கு பெற ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

* குறைந்த வட்டிக்கு வங்கியிலிருந்து மூலதனக் கடன் பெறுகிறார்கள்.

* கூடுதல் வருவாய் பெறுவதற்காக ஓய்வுநேரக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவ மகளிர்.

விற்பனை செய்வதற்காக இயந்திரம் பொருத்தப்பட்ட மூன்று சக்கர வண்டிகள் செம்மஞ்சேரிக் குப்பத்தில் உள்ள மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஊனமுற்ற ஆண்கள், குழந்தைகளுக்குத் தேவையான துணைச் சாதனங்கள், மகளிர் தொண்டு நிறுவனம் மூலம் வழங்கப்பட்டுள்ளன.

சத்துணவு மற்றும் சுகாதாரக் கல்வி:

பொதுச் சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துத் துறையின் மூலம் 3 கிராமங்களில் சத்துணவு குறித்தும் செயல் விளக்கமும் பாடங்களும் நடத்தப்பட்டுள்ளன.

குடும்ப நல முகாம்கள்:

ஒவ்வொரு ஆண்டும் எல்லா மீனவ கிராமங்களிலும் குடும்ப நலத் துறையின் மூலம் குடும்ப நல முகாம்கள் நடத்தப்படுகின்றன.

சுயவேலை வாய்ப்புத் திட்டம்:

மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாகப் பயிற்சி பெற்ற பெண்களுக்குத் தையல் இயந்திரங்கள் அளிப்பது மூலமாகவும் மற்றும் தமிழ்நாடு மீன்

* பயிற்சி பெற்ற மீனவ இளம்பெண்கள் தொடர்புப் பணியாளராகப் பணியாற்றுகிறார்கள்.

வளர்ச்சிக் கழகத்தினரால் நடத்தப்படும் மீன் உணவகங்களில் படித்த பெண்கள் வேலைக்கு அமர்த்தியதன் மூலமாகவும் அவர்களுக்கு வருவாய் கிடைக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்கள் ஒத்துழைப்புப் பயிற்சி முகாம்:

மகளிர் தொண்டு நிறுவனத்தின் மூலம் நடத்தப்பட்ட பொது மக்கள் ஒத்துழைப்புப் பயிற்சி முகாம்களில் மீனவ மகளிர் பங்கேற்க வாய்ப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது.

முறை சாராக் கல்வி வசதி:

தமிழக அரசின் கல்வித் துறைப்பிரிவின் மூலம் நகரின் மீனவக் குடியிருப்புப் பகுதிகளில் 28 கல்வி மையங்கள் ஏற்படுத்தப் பட்டு, அதில் 28 படித்த மீனவப் பெண்கள் ஊக்குநராகப் பணி புரியும் வேலைவாய்ப்பும் ஒரு மையத்திற்கு 30 பேர் என்ற வீதத்தில் மீனவ மகளிருக்குக் கல்வி வசதியும் கொடுக்கப்பட்டுள்ளது.

சென்னையில் புதிய மெழுகு ஆலை

சென்னையை அடுத்துள்ள மணலியில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை நிறுவனம், (மதராஸ் ரீபைனரீஸ் லிமிடெட் நிறுவனம்) புதிதாக மெழுகு ஆலை ஒன்றை 78 கோடி ரூபாய் செலவில் உருவாக்கியுள்ளது. இந்த மெழுகு ஆலையின் உற்பத்திச் சக்தி, ஆண்டுக்கு 20 ஆயிரம் டன் மதிப்பீடு.

தீக்குச்சி தயாரிப்புக்கு மெழுகு, இரண்டு வகை பாரபின் மெழுகு ஆக மொத்தம் 3 வகை மெழுகுகளை இந்த ஆலை உற்பத்தி செய்கிறது.

இரண்டு பாரபின் மெழுகு வகைகள், ஜவுளி வகைகள், மெழுகுவர்த்தி, அழகு சாதனப் பொருட்கள், தார்பாலின் துணி, மெழுகுக் காகிதம், பூட்பாலிஷ் முதலியவற்றைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையின் மெழுகு பிரித்தெடுக்கும் பிரிவில் கிடைக்கிற எண்ணெய் நிரம்பிய மெழுகு, புது ஆலையின் மூலப் பொருளாகும். ஒருவகை திரவத்தைப் பயன்படுத்தி, அந்த மூலப் பொருளிலிருக்கும் எண்ணெய் இந்தப் புது ஆலையில் அகற்றப்படுகிறது.

எண்ணெய் தோய்ந்த மெழுகுடன் அந்தத் திரவத்தை முதலில் கலந்து அதை 10 டிகிரி சென்

கிறார்கள். அதன் காரணமாக கிரிஸ்டல் (Crystal) உருவத்தில் மெழுகு தயாராகிறது.

அதையடுத்து இரண்டு கட்ட வடிகட்டிகள் மூலம் அந்த மெழுகு பிரித்தெடுக்கப்படுகிறது. மீதி கிடைக்கிற கரைசல் திரவம் மீண்டும் பயன்படுத்தப்படுகிறது.

திரவத்திலிருந்து வடிகட்டப்பட்ட கிரிஸ்டல் வடிவ மெழுகு, களிமண்ணுடன் கலக்கப்பட்டு, நிறம் அகற்றப்படுகிறது. மற்றொரு பகுதியில் மெழுகிலிருந்து நாற்றம் அகற்றப்படுகிறது.

பின்னர் வார்ப்படப் பிரிவுக்கு பாரபின் மெழுகு அனுப்பப்பட்டு, கட்டிகளாக வார்க்கப்பட்டு, கோணிப்பைகளில் நிரப்பப்படுகிறது.

இந்த ஆலையில் தயாராகிற மெழுகு வகைகள் அனைத்து நாட்டுத் தரத்திற்கு இணையான

பிணி அகற்றும் ஊமத்தை

ஏ. ஆர். என். துரைராஜ்

இது எங்கும் பயிராகக் கூடிய செடி. இதன் காய் உருண்டையாகவும், இதன் மீது முட்கள் அடர்ந்தும் இருக்கும். இதன் விதை சுர சுரப்பாக இருக்கும். இதில், கருஊமத்தை; பொன்னூமத்தை; அடுக்கூமத்தை; மருஊமத்தை என நான்கு வகைகள் உண்டு. அடுக்கு என்றால், பூவுக்குள் பூ அடுக்கினாற்போல் இருக்கும். வெள்ளைப் பூ பூக்கும் ஊமத்தை எங்கும் கிடைக்கும். அக்கால, சித்த மருத்துவர்கள் இந்த ஊமத்தையின் செடியிலுள்ள இலை, காய், பூ, விதை, மூலம் (வேர்) ஆகிய அனைத்தும் கொண்டு, மருத்துவம் பார்த்திருக்கிறார்கள்.

தீரும் வியாதி:

இரைப்பு, மூச்சடைப்பு, கோழை, கீழ்வாயு, எலும்பு வீக்கம், கட்டிகள் ,கட்டிகளினால் வலி, காது வலி, காதில் உள்ள ரணம், சுவாசம், பெருமூச்சு, நாசம், வாயு, வீக்கம், புழுவெட்டு, நரம்புச் சிலந்தி, வெறிநாய்க்கடி வெள்ளை, அக்கி, சூதக வயிற்று வலி, நீர்த்தாரை, எரிவு, கன்னம், முகம், காது இவை குடைச்சல் நீர் அடைப்பு, வாதநோய், பிளவை, கண்டமாலை, விஷநீக்கம், கரப்பான், சிரங்கு, சதை வளருதல், ஒழுகும் ரணங்கள் முதலியன குணமாகும்.

கட்டிகள்:

தேவையான ஊமத்தை இலையைக் கொண்டு வந்து, கொஞ்சம் விளக்கெண்ணெய் எடுத்து ஊற்றி வதக்கி, கட்டிகளின் மீது வைத்துக் கட்ட அவை பழுக்கும். தொடர்ந்து 2 நாள் செய்து வர பழுத்து உடைந்துவிடும். பிறகு 2, 3 தடவை இதே மாதிரி செய்யும் பட்சத்தில் கட்டி இருக்கும் இடம் தெரியாது.

முதலில் கொஞ்சம் ஊமத்தை இலையை எடுத்து, அம்மியில் வைத்து, பிறகு மூன்று கோழி முட்டையை உடைத்து, வெண் கருவை மட்டும் எடுத்து அந்த இலை மீது ஊற்றி நைய அரைத்து, பிறகு கட்டியின் மேலே தொடர்ந்து பூச வேண்டும். மறுநாள் காலையில், முன்பு பூசியதைச் சுத்தமாகக் கழுவிவிட்டு, மறுபடியும், தொடர்ந்தாற்போல் செய்துவரும் பட்சத்தில் கட்டி உள்ளே அமுங்கிவிடச் சாத்தியமாகிறது.

இலையை வதக்கி ஒற்றடமிட, கீழ்வாயு, எலும்புவீக்கம், கட்டி

களினாலுண்டாகும் வலி, பால் கட்டிக் கொள்வதாலுண்டாகும் நோய் ஆகியவை தணியும்.

கட்டி, வீக்கம், குத்தல் வலி நீங்க:

போதுமான இலையுடன் சாடி (அல்லது) தேன் விட்டு அரைத்துக் கொதிக்க வைத்து இறக்கி, இளஞ்சூட்டினால் கட்டிகள் மேற்பூச, நாளடைவில் கட்டிகள் கரையும். வீக்கத்தின் மீது பூச, வீக்கம் குறையும். வலி, குத்தல் உள்ள இடங்களில் பூச வலியையும், குத்தலையும் நிறுத்தும்.

குறிப்பு:

இதனால் மயக்கம் உண்டானால், மிளகு அல்லது சோம்புடன் தேன் கலந்து குடிநீராகக் கொடுக்க வேண்டும்.

கரப்பான் குணமடைய:

ஊமத்தை இலை, நெருஞ்சி இலை, ஊமத்தைப் பூக்கள், குப்பைமேனி இலை ஆகிய இந்த நான்கையும் சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு, வகைக்கு ஐம்பது மில்லி சாறு எடுத்து வைத்துக் கொள்ளவேண்டும். பின், சுத்தமாக இருக்கும் கடாயில் எல்லாச் சாறுகளையும் விட்டு, விளக்கெண்ணெய் 50 மில்லி ஊற்றி அடுப்பில் வைத்துக் காய்ச்சி, தைலப்பதத்தில் வரும் சமயம் இறக்கிச் சேமித்து வைத்துக் கொண்டு, ஒரு தேக்கரண்டி எண்ணெய்யில் ஓர் அவுன்ஸ் பசுவின் பால் ஊற்றி அருந்தவும். குழந்தைகளுக்கு என்றால் அரைத் தேக்கரண்டி எண்ணெய்யோடு ஓர் அவுன்ஸ் பசுவின் பால் ஊற்றிக் கொடுக்கலாம். காலை, மாலை கொடுக்க வேண்டும். பேதி காணலாம் ஆனால் பயம் வேண்டாம் காய்ச்சப்பட்ட தைலத்தை மட்டும் எடுத்து கரப்பான், ரணம் மீது மேலே தடவி வரலாம்.

புழு வெட்டு:

புழுவெட்டுக் காரணமாக சிலருக்குத் தலையில் சொட்டை விழும். புருவங்களில் முடி வளராது. ஊமத்தங்காயில் உள்ள பிஞ்சுக் காயை எடுத்து அம்மியில் வைத்து அதன் மீது வெந்நீர் ஊற்றி மைபோல் அரைத்துக் கொண்டு அதன் விழுதை, சொட்டை இருக்கும் பகுதியிலும் புருவங்களில் காணும் பகுதியிலும் நாள் தவறாமல் பூசி வந்தால் சொட்டை நீங்கி முடி வளரத் தொடங்கும்.

திருத்தப்பட்ட சுரங்கப் பாதுகாப்புச் சட்டம்

18 வயதுக்குட்பட்டவர்களை "அபாயகரமான சுரங்கங்களில், வேலைக்கு அமர்த்தக்கூடாது என்று திருத்தப்பட்ட சுரங்கப் பாதுகாப்புச் சட்டம் கூறுகிறது.

இச்சட்டம் 31.5.84 முதல் அமலுக்கு வந்துள்ளது.

ஊமத்தை இலையை, 8 கிராம் எடுத்து, சுத்தம் பார்த்து அம்மியில் வைத்து இடித்து, ஒரு மண் சட்டியில் இட்டு, ஒரு படி தண்ணீர் ஊற்றி நன்றாகக் காய்ச்சி ஆறிய பிறகு இளஞ் சூட்டுடன் ஒத்தடம் கொடுக்கும் பட்சத்தில் வீக்கம், எலும்பு, மூட்டு வலி ஆகியவை நீங்கி நலம் பெறலாம்.

நாய்க் கடிக்கு:

இந்த இலையின் சாற்றை (1 முதல் 3 துளி) கரும்புச் சாற்றிலாவது பனை வெல்லத்தில் இட்டாவது அருந்தச் சொல்லவும். பிறகு, பால்சாதம், மோர்சாதம் கொடுக்க வெறி நாய்க்கடியின் நஞ்சு அகலும்.

குறிப்பு:

மூன்று நாட்களுக்கு மேல் கொடுக்க வேண்டாம். இதற்குப் பத்தியம்; உப்பு, புளி, கட்டாயம் நீக்க வேண்டும்.

விஷம் நீங்க:

எலி, நரி மற்றும் பல கொடூரமான ஜந்துக்கள் கடித்தால் உடனே கீழ்க்கண்ட முறையைக் கையாளலாம்.

ஊமத்தம் வேர் 4 கிராம், அதன் வித்து 4 கிராம், இவைகளை அம்மியில் வைத்து, பசுவின்பால் விட்டு அரைத்துக் கலக்கி அருந்த, மேற்படி விஷங்கள் நீங்கும்.

சுண்ணாம்புடன் ஊமத்தை இலைச்சாறு விட்டு அரைத்துக் கடிவாயில் அடிக்கடி பூச, நாய்க் கடி உள்ள விஷம் நீங்கும்.

இந்த இலைகளின் சாற்றை 5 முதல் 10 துளி வரை நாளுக்கு நாள் அதிகப் படுத்தி, தயிரில் விட்டு அருந்த, நாளடைவில் வெள்ளை நோய் நீங்கும்.

இந்த இலையினுடைய சாற்றை (1 முதல் 2 துளி வரை) காதில் விட வேண்டும். 3 நாட்களுக்குச் செய்தால், சாது வலி தீரும். வீக்கமுள்ள இடங்கள் இருந்தாலும், தடவலாம்.

தேவையான இலையையும், பூவையும் சுத்தம் பார்த்து ஒரு மண் சட்டியில் இட்டு, வதக்கி எடுத்து, வீக்கம் உள்ள இடங்களில் ஒத்தடம் தொடர்ந்து கொடுத்து வந்தால் வீக்கம் தணியும்.

போதுமான இலையையும், பூவையும் சமமாக எடுத்து, சுத்தம் செய்த அம்மியில் வைத்து அரைத்து, சாறு பிழிந்து வைத்துக் கொண்டு சில துளிகள் காதில் விட, காதில் உள்ள ரணம், வலி ஆகியவை நீங்கும்.

சுவாசம், பெரு மூச்சு, வாயு கோளாறுகள் நீங்க:

தேவைப்பட்ட இலையைக் கொண்டு வந்து, சுத்தம் பார்த்து நிழலில் உலர்த்திய பிறகு, சுத்தம் செய்த அம்மியில் வைத்து இலேசாக அரைத்து, அத்தூளைச் சேமித்து வைத்துக் கொள்ளவும். நமக்குத் தேவையானபோது அகலமான ஒரு கரண்டியில் நெருப்பு வைத்துக் கொஞ்சம் தூளைப் போடவும், புகை வரும். அப்புகையை மூக்குப் பக்கமாக உள்ளுக்கு இழுத்தால் சுவாசம், பெரு மூச்சு ஆகியவற்றில் தொடர்ந்து காணும் கோளாறுகள் நீங்கும். இந்த இலையைத் தணலில் வதக்கி ஒத்தடம் கொடுக்க வாயு சம்பந்தமான சிரமம், கட்டிகள், வீக்கம் யாவும் நீங்கும்.

இரைப்பு:

தேவைப்பட்ட இலையை உலர்த்திப் பொடி செய்து, 10 கிராம் அளவில், உள்ளுக்குச் சாப்பிட்டு, வெந்நீர் இளஞ்சூடாக அருந்தி, சிறிது சர்க்கரை வாயில் போட்டுக் கொள்ளலாம். இந்த விதமாகத் தொடர்ந்து 3 நாட்கள் 20 கிராம் 30 கிராம் என அதிக அளவில் சாப்பிட, நாளடைவில் இரைப்புக் குணமாகும்.

எலும்பு மூட்டு, வீக்கம், வலி, நரம்புச் சிலந்தி, வெளி மூலம் ஆகியவை குணமாக:

தேவையான இலை, அரிசி மாவு இவ்விரண்டையும் ஒர் அளவாக எடுத்துக் கொஞ்சம் நீர் விட்டு அரைத்துக் களி போல் வேக வைத்துக் கிளறி எடுத்துக் கொள்ளவும். இக்களியை எடுத்து எலும்பு மூட்டுகள், மூட்டுவலியினால் உண்டாகும் வீக்கம், வலி தருகின்ற கட்டிகள், வெளிமூலம் ஆகியவற்றில் போடலாம். நரம்புச் சிலந்தி என்ற நோய்க்கு இந்தக்களி மிக நன்று:

குறிப்பு:

(ரணம் உள்ளவர்கள் போடலாகாது)

அக்கி:

கொஞ்சம் இலையைக் கொண்டு வந்து அரைத்து, எருமை வெண்ணெய்யில் குழைத்து அக்கியின் மேல் தடவி வர, ரணங்கள் நீங்கும். தொடர்ந்து தடவி வந்தால், ரணங்கள் பட்டுப்போய் ஆறிப் போகும்.

நீர் அடைப்பு:

மூல வாயுவினால் சிலருக்கு நீரடைப்பு வருவதுண்டு. அதனை நிவர்த்தி செய்ய இந்த எளிய முறையைக் கையாளலாம்:

தேவையான இலையைக் கொண்டு வந்து, வெதுப்பி அந்த இலைக்குச் சமமாக ஏலரிசி சேர்த்து அம்மியில் வைத்து நீர் விட்டு அரைத்து, அரைத்த விழுதை அடிவயிற்றில் பற்றுப் போட வேண்டும். இந்த விதமாகச் செய்து வந்தால் நீர் அடைப்பு குணமாகும்.

சூதக வயிற்று வலி, நீர்த்தாரை எரிவு, முகம், கன்னம், காது குடைச்சல் ஆகியவை குணமாக:

43 கிராம் சிதைத்த விதையுடன் விளக்கெண்ணெய் 2 ஆழாக்குச் சேர்த்து 7 நாட்கள் தொடர்ந்து அரைத்தரைத்து வெயிலில் வைக்க வேண்டும். 8 ஆம் நாள் அவற்றை எடுத்து வடித்து, அடி வயிற்றில் தடவ, சூதக வயிற்று வலி, நீர்த்தாரை எரிவு நீங்கும். கன்னம், முகம், காது ஆகியவற்றில் காணும் குடைச்சலுக்கும் தடவ, நன்மை பயக்கும்.

பிளவை, கண்டமாலை நீங்குவதற்கு:

தேவையான, ஊமத்தையினுடைய காய்களைக் கொண்டு வந்து, பசுவின் சாணத்தில் போட்டு வதக்கி, பிறகு அடுப்பில் வைத்துக் காய்ச்சி இறக்கி, பின் நசுக்கி வில்லைபோல் தட்டி, சிறிது விளக்கெண்ணெய் எடுத்து வில்லையில் தடவி பிளவை, கண்டமாலை முதலிய வீக்கங்களில் வைத்துக்கட்ட அவை நலமாகும்.

வாதநோய்:

தேவையான, ஊமத்தம் இலைகளைக் கொண்டு வந்து சுத்தம் பார்த்து அந்த இலைகளுக்குத்

தகுந்த சாராயத்தை ஊற்றி 10 நிமிடம் ஊறவைத்துப் பிறகு எடுத்து வாதவலியினால் அவதிப் படுகிறவர்கள் அந்த நோய் காணப்படும் இடத்தில் தொடர்ந்து 3 நாள் வைத்துக் கட்ட, வலி நீங்கும்.

சிரங்கு, ரணம், பிளவை, சதை வளருதல், ஒழுகும் ரணங்கள், ஆகியவை குணமாக:

ஊமத்தை இலைச் சாற்றை, தேங்காய் எண்ணெய்யுடன் கலந்து, காய்ச்சி, சாறு ஓரளவுக்குச் வண்டிய பின் மயில் துத்தத்தைப் பொடித்து, எண்ணெய்யில் சேர்த்துக் காய்ச்சிப் பதத்தில் வடித்து வைக்கவும். ஊமத்தைச் சாறு 875 கிராம், தேங்காய் எண்ணெய் 350 கிராம், மயில்துத்தம் 43½ கிராம் இருக்க வேண்டும்.

மேல் பூச்சாக உபயோகிக்கவும். கீழ் வடியும் காதில் சில துளிகள் விடலாம்.

முக்கியக் குறிப்பு: (இந்த எண்ணெய்யை உள்ளுக்குச் சாப்பிடக் கூடாது)

வாதமறும் பித்த மயக்கமறு
மாநிலத்திற்
நீதி கரப்பான் சிரங்கசலுங் -
கோதாய்கேள்!
மாமத்த மாகும் வறட்சியெல்
லாம்போகும்
ஊமத்தங் காய்க்கென் றுரை
(அகத்தியர் குறிப்பு)

பொருள்:

இதனால் வலிநோய், கரப்பான் கழலை, சொறி இவை நீங்கும், மயக்கமும், வெறிநோயும் உண்டாகும்)

சத்து:

ஊமத்தை சண் தாரையைப் பெருக்கும்.

கருஊமத்தை

இது ஊமத்தையைவிட மிகுந்த வன்மையுள்ளது. சுக்கிலத்தையும், பாதரசத்தையும் கட்டும். உடலுக்கு அழகைத் தரும். பெரு நோய், வியர்வை, தினவு, முனி சுரம் இவைகளைப் போக்கும்.

கருஊமத்தன் இலை ரசம் 420 கிராம், தேங்காயெண்ணெய் 840 கிராம் இந்த இரண்டையும் சேர்த்துக் காய்ச்சி, ரசம் சுண்டும் தறுவாயில் ஓமத்தூள் 35 கிராம் கூட்டி, மெழுகுப்பதத்தில் வடிகட்டி, அதில் கற்பூரம் 35 கிராம் பொடித்துக் கரைத்துப் பூசி, வெந்நீர் விட்டுத் தேய்க்க, குத்தல் குடைதல் போம்.

பொன்னூமத்தை

புண் கிரந்தி நாள்பட்டகிராணி, கருப்பாதிசாரம், பித்த சுரம், நீங்கா விட சுரம், அதிசாரம் முதலியவற்றைப் போக்கும் குணம் இதற்கு உண்டு.

மருளூமத்தை

குளிர்காய்ச்சல், ஜலக்கோவை அற்பவீரியமுள்ள இடங்கள், அக்கினி மாந்தம், வாததோஷம் இவை நீங்கும்.

குறிப்பு:

மருளூமத்தைக் காய், மற்ற ஊமத்தங்காய்களைவிட உருவத்தில் சிறியதாயும் நீண்டும் இருக்கும். உருண்டிராது. நீண்டு, கறுத்துச் சனத்திருக்கும். விதைகளும் சிறியவை.

பண்புகள்:

இதன் இலை, பூ, விதை ஆகியவை மயக்கத்தைத் தரும். அதிகமாக, வெறும் வயிற்றில் சாப்பிடும் பட்சத்தில் தொண்டை வறட்சி, தலை சுற்றல், நடை மாறுதல், கண்பார்வை மங்குதல், பயித்தியம் போல் இருப்பது, சுவாசம் குறைத்தல் முதலிய மாறுபட்ட குணங்களை உண்டாக்கி உயிருக்கு ஆபத்து விளைவிக்கும். இதன் விஷம் உடலில் இருக்கும் வரை கண்விழி விலாத்திருக்கும். எனவே, இதற்கு மாற்று என்ன செய்யலாம்?

இதற்கு முறிவு:

ஊமத்தையால் உண்டான நஞ்சிற்கு, தாமரைக் கிழங்கை, புளித்ததண்ணீர் விட்டு அரைத்து நோய் வன்மைக்குத் தக்க அளவு தர வேண்டும். நீலி வேர்ப்பட்டையை மேற்சொன்ன வகையில் அரைத்து உண்ண, முறியும். வாந்திக்குக் கொடுத்து வாந்தியான பிறகு அழிஞ்சில் வேர் பட்டையை எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்து, நஞ்சு வன்மைக்குத் தக்க அளவு சாப்பிட்டாலும் நஞ்சுத் தன்மை குறையும்.

முறிவுக்கு

போமே ஊமத்தை புசித்தால்
மரைக்கிழங்கைத்
தேமேவு காடிவிட்டுத் தின்னப்
போம்-ஆமவுரி
வேராகும் வாந்தி விழவருந்தி
வெள்ளழிஞ்சில்
வேருணச் சாற்றிலரைத் துண்.

—(அகஸ்தியர் விஷப் பிரதி)
விஷ திரட்டு

இவ்வாறு அரியதொருமருத்துவப் பொருளாக ஊமத்தை விளங்குகிறது.



பூனை

மாணவர் பக்கம்

சிறு வயதிலிருந்தே ஆங்கில 'ரைம்'களைப் படித்து, நாம் பூனைகள் மீது அளவற்ற அன்பு செலுத்தி வருகின்றோம். குரங்கிடம் அப்பம் தந்து ஏமாந்த இரண்டு பூனைகளின் கதையை நாம் படித்துப் பரவசமடைந்துள்ளோம்.

'பூனை போல இருந்து கொண்டு காரியம் செய்கின்றான்' என்று சாதுவாக இருந்துகொண்டு விஷமம் செய்பவர்களை நாம் குறிப்பிடுகின்றோம். பூனை என்றாலே நமது நினைவுக்கு வருவது எலிகள்தாம். வீட்டில் தொல்லையாக இருந்துவரும் எலிகளை ஒழித்துக்கட்டி, நமக்கு நிம்மதியைப் பூனைகள் தருகின்றன.

பூனையிடம் கவனமும் அன்பும் மிக முக்கியம். பூனை ஒன்று நம்மிடம் இருந்தால், அவற்றின் குட்டிகளையும்'நேசிக்க நாம் கற்றுக் கொள்ள வேண்டும். பூனைகளுக்கு அதிக அளவில் பால் செலவாகும். ஆயினும் பூனைக்குட்டிகளுக்குப் பிறந்த முதல் இரண்டு மாதத்தில் தாய்ப்பால்தான் தேவை. தாய்ப்பால் பூனைக்குட்டிகளுக்கு நோய் எதிர்ப்புச் சக்தியை அளிக்கின்றது என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

5 வாரங்களுக்குப் பின்னர் இவற்றுக்குத் திட உணவு தரலாம். ஒரு நாளில் மூன்று அல்லது நான்கு முறை உணவு தர வேண்டும். வெண்ணெய் அல்லது பால், காட்லிவர் ஆயில் சில சொட்டுகள், கால் 'டீ' ஸ்பூன் கால்சியம் பவுடர், ஈஸ்ட் வடிவத்தில் வைட்டமின் 'பி' ஆகியவை தொடர்ந்து தரப்பட வேண்டும்.

வளர்ந்த பூனைகளுக்கு நாள்தோறும் இரண்டு முறை உணவு வழங்கினால் போதுமானது. எடைக்குத் தக்கபடி பவுண்டுக்கு ஒரு அவுன்ஸ் என்று உணவு வழங்கப்படவேண்டும்.

பூனையின் உடலை வருடுவது மிகவும் மகிழ்ச்சி தரக்கூடியது. இவற்றைப் பிரஷ் கொண்டு சுத்தம் செய்யாது போனால், வயிற்று நோய் பூனைகளைத் தாக்கும். தூசி காற்று பொடிகளைப் பயன்படுத்தி ஒட்டுண்ணிகளிடமிருந்து பூனைகளைப் பாதுகாக்க வேண்டும். டிடிடி-யைப் பயன்படுத்தக் கூடாது. டிடிடி பூனைகளுக்கு ஆபத்து விளைவிக்கக்கூடியது.

தொந்தரவில்லாமல் வாழ, பாதுகாப்பான மூலையொன்று பூனைக்குத் தேவை. பெரிய மரப் பெட்டி அல்லது வலுவான கூடை இதற்கு ஏற்றது. தரைக்கு மேல் இவற்றை அமைத்துத் தருவதால் பாலும் காலியாகாது. அந்தம் பக்கத்தார் புகாரும் இராது!

பூனை பசி மறந்து, கண்ணில் நீர் தெறிக்க வாந்தியெடுத்தாலோ, வேறு எந்த உடல் நலக்குறைவைக் காட்டினாலோ உடனடியாகப் பிராணி மருத்துவரைக் கலந்து ஆலோசிக்க வேண்டும்.

பூனை தனது காதுகளைச் சுரண்டிக்கொண்டோ, தலையை உலுக்கிக் கொண்டோ இருந்தால் அது 'காங்கர்' எனும் நோயினால் அவதிப்படுவதாக நிச்சயித்துக் கொள்ளலாம். புறக்கணித்தால், பூனைக்குக் காது கேளாமல் போகும்.

பூனை மிகவும் மெல்லிய உணர்வுகளைக் கொண்டது. சத்தம் அல்லது தொந்தரவுகளினால் இவை சுலபமாகப் பாதிக்கப்படுகின்றன. பூனையின் கழுத்தில் ரிப்பன் போன்ற எதையும் கட்டக்கூடாது. கழுத்தைப் பிடித்துப் பூனைகளைத் தூக்கக் கூடாது. சரியான முறையில் கையாண்டால் பூனைகள் நம்முடனும், நமது குழந்தைகளுடனும் எப்போதும் விளையாடிக் கொண்டிருக்கப் பிரியப்படும். நமது அன்பு மற்றும் பரிவைப் பிரதிபலிக்கும் குணம் பூனைகளுக்கு உண்டு.

பூனை இருக்கும் வீட்டில் அழகும் களிப்பும் நிலவுகின்றன. வீட்டிலுள்ள குழந்தைகளை இவை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்கின்றன. எலித்தொல்லை உள்ள இடங்களில் பூனைக்கு வரவேற்பு அதிகம். எனவே எலிகளை விரட்ட நமது வீடுகளில் பூனை அவசியம். எனினும், பூவைப் பாதுகாப்பதுபோல, பூனைகளை நாம் சரியான முறையில் பாதுகாக்க வேண்டும்.

—இந்திய அரசு பத்திரிகைத் தகவல் அலுவலகம்.

⊕⊕⊕⊕⊕⊕⊕⊕⊕⊕⊕⊕⊕⊕⊕⊕⊕⊕

நீண்ட பயணம்!

சூரியனை நோக்கி மணிக்கு 60 மைல் வேகத்தில் ஒரு காரில் பிரயாணம் செய்தால் நீங்கள் சூரியனைச் சென்றடைய 176 ஆண்டுகள் ஆகும். —தினாத.

கலைக்கதிர்

⊕⊕⊕⊕⊕⊕⊕⊕⊕⊕⊕⊕⊕⊕⊕⊕⊕⊕

திருக்குறள் படி

—பல்லவன்

சிறுபொழு தேனும்
குறள்படிப்பாய்-அதனால்
சிந்தனை வளம்பெற்று
உரம் பெறுவாய்!

தோன்றிய நூற்களில்
புகழொடு தோன்றும்.
தேன்தமிழ் குறளிதைத்
திசையெலாம் ஏந்தும்!

குறுகிய உணர்வினைக்
குறள்நெறி சாய்க்கும்!
இருள்மிகு உளங்களில்
திருவிளக் கேற்றும்!

முயற்சியை ஊக்கியே
திருவினை யாக்கும்!
அயர்ச்சியைப் போக்கியே
அறிவினைச் சேர்க்கும்!

எவ்வழி நல்வழி
என்பதைச் சொல்லும்!
அவ்வழி நம்வழி
அறவழி செல்வோம்!

கி.பி. 2ஆம் நூற்றாண்டு பானை ஓடுகள்

தமிழ்ப் பல்கலைக் கழகம் கல்வெட்டியல் துறையின் தொல்லியல் பிரிவு கடந்த இரு மாதங்களாக தஞ்சைக்கருகில் உள்ள வல்லம் கோட்டைப் பகுதியில் அகழ்வாராய்ச்சி செய்த தில் வல்லத்தின் பழமையைப் பற்றிய சில புதிய செய்திகள் கிடைத்துள்ளன. கி.பி. இரண்டு அல்லது மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழி (அல்லது பிராமி) எழுத்தில் எழுதிய சில பானை ஓடுகள் கிடைத்துள்ளன. இதே காலத்தைச் சேர்ந்த தட்டையான, வரிகளுள்ள கூரை ஓடுகளும் கிடைத்துள்ளன. இந்த ஓடுகள் சோழர் காலத்தில் வழக்கொழிந்து விட்டன என்று தெரிகிறது. கிறித்துவுக்கு முந்தைய காலத்தைச் சேர்ந்ததாகக் கருதப்படும் எழும்பு அம்பு முனைகள் சில தமிழ்நாட்டில் முதன் முதலில் இங்கு தான் கிடைத்துள்ளன.

விளையும் பயிர்

தஞ்சாவூர், மன்னார் சரபோஜி கல்லூரியில் பி.காம்., இறுதியாண்டு பயிலும் திரு இராம. ஜெயராமன் கதை, கட்டுரை எழுதுவதில் மிகுந்த ஆர்வம் காட்டுகிறார். இவரது எழுத்துக்கள் சில பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. ஓவியம் வரைவதிலும் திறமைமிக்க இவர், பல பரிசுகளையும் பெற்றுள்ளார்.

[illegible] அறிவுக் கதைகள்

ஸ்பெஷலிஸ்டுகளைச் செய்தவர் [illegible] ரெனிலெக் எனும் [illegible].

'ஷைப்பு' [illegible] கண்டுபிடித்தவர் அமெரிக்காவைச் [illegible].

இங்கிலாந்தின் [illegible] கண்டுபிடித்து எழுதியவர் [illegible].

சீனாவின் முந்தைய [illegible] காதே.

உலகின் மிகப்பெரிய [illegible] கூடம் நியூயார்க்கில் உள்ள [illegible] கிளிண்டன் உயர்நிலைப் [illegible]

'புயல் கடல்' என்னும் [illegible] பெரிய கடல், சந்திர [illegible] உள்ளது.

சுகின் என்ற திரகம் சூரிய[illegible] விட 9,000 மடங்கு அதிக [illegible] முடையது.

[illegible] எழுதும் எழுத்து[illegible] எழுதுகிறார்கள் [illegible] யர்கள்.

[illegible]

[illegible] பெயர்.

முதன் முதலாக [illegible] கொண்டுவந்தவர் கி.பி. [illegible] பொயலைன் என்னுமிட[illegible] [illegible] பொயலைன்தான் [illegible] [illegible] ஆரம்பித்தார்கள்.

உலகின் மிகப்பெரிய [illegible] இருக்கையில் உள்ள [illegible] என்னும் பெயர் பெற்ற [illegible] யாகும்.

இந்தியாவின் தேசிய [illegible] விலங்கு [illegible] பெயர் பெற்றது. இதனை [illegible] விலங்கு.

[illegible] திருத்தில் [illegible] எழுத்துக்கள் உள்ளன.

—ச. பிரபாக[illegible]

(பொறியியல்) [illegible] அறிவியல்முதுகலை [illegible] கல்[illegible] [illegible] தஞ்சாவூர் [illegible]

PHILIPS

பிலிப்ஸ்

தோற்றத்தில் எல்லா பல்புகளும் ஒன்றுதான்.



ஆனால், பிலிப்ஸ் எனும்போது தரம் பளிச்சிடும்.

தரத்திற்கு உறுதி தருவது இப்பெயர். நீடித்திருக்கும் பளிச்சிடும் வெளிச்சம் தரும் பல்பினைப் பெறவும் இப்பெயர் சொன்னால் போதும். உங்கள் பணத்திற்குத் தகுந்த மதிப்பு தருவதும் இதுவே.
பிலிப்ஸ் பல்புகள். எமது பெயர் கொண்டவை உமது சோதனையில் வெல்லும்.

PEI-1284

பிலிப்ஸ் நூற்று ஆண்டுகளுக்கும் மேலாக இந்திய வீடுதோறும் விளங்கும் நம்பகமான பெயர்

சைக்கிள் பந்தயத்தில் தங்கப் பதக்கம் பெற்றவர்!

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு துறையில் ஆசை இருப்பது இயல்புதானே?

எழுத்தில், பேச்சில், விளையாட்டில், ஓவியத்தில் இப்படிச் சிறந்து விளங்க வேண்டும் என்று கனவு காண்பவர்களும், அந்தக் கனவு நனவாகாதா என்று ஏங்குபவர்களும் ஏராளம் உண்டு.

முயன்றால் முடியாதது எதுவும் இல்லை!

ஆர்வமும் முயற்சியும் உழைப்பும் இருந்தால் எதிலும் வெற்றி பெறலாம்.

செல்வி சுகுமாரிக்கு ஆர்வமெல்லாம் சைக்கிள் பந்தயத்தில்! ஆம். அதிலே சிறந்து விளங்கி, தமிழ்நாட்டுக்குப் பெருமை தேடித்தர வேண்டும் என்பதுதான் இவரது கனவெல்லாம்.

1984 ஜூன் திங்கள் 8, 9 தேதிகளில், சென்னை மருத்துவக் கல்லூரி மைதானத்தில், மாநில அளவிலான சைக்கிள் சாம்பியன் போட்டி ஒன்று நடந்தது. இந்தப் போட்டியைத் தமிழ்நாடு சைக்கிள் சங்கம் நடத்தியது.

இந்தப் போட்டியில்தான் செல்வி எஸ். சுகுமாரி கலந்து கொண்டு, 3000 மீட்டர் சைக்கிள் பந்தயத்தை 5 நிமிடம் 20.5 நொடிகளில் முடித்து முதல் பரிசான தங்கப் பதக்கத்தைப் பெற்றார். அது மட்டுமல்ல, 1600 மீட்டர் சைக்கிள் பந்தயத்திலும், 1000 மீட்டர் சைக்கிள் பந்தயத்திலும் இரண்டாவது இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கங்களைப் பெற்றார். 25 கிலோ மீட்டர் மெரீனா கடற்கரைச் சாலைப் பந்தயத்திலும் இரண்டாவதாக வந்து வெள்ளிக் கோப்பையைப் பரிசாகப் பெற்றார்.

சென்னை மாநகராட்சி வருவாய்த்துறையில் பணியாற்றும் செல்வி சுகுமாரிக்கு வயது 21. இந்த இளம் வயதில் இவர் உலகநாடுகள் பலவற்றில் நடந்த சைக்கிள் பந்தயங்களில் கலந்து கொண்டு பரிசுகள் பெற்றுள்ளார்.

''1978லிருந்தே நான் இம்மாதிரியான போட்டிகளில் கலந்து கொண்டுள்ளேன். சைக்கிள் பந்தயத்திற்கென்றே தனி சைக்கிள் உள்ளது. ஆனால் அப்போது நான் சாதாரண சைக்கிளை ஓட்டி 4வதாக வந்தேன். அதுதான் நான் கலந்து கொண்ட முதல் போட்டி. பிறகு நடந்த பல பந்தயங்களில் 3வதாக வந்தேன். அதிலிருந்து தொடர்ந்து முயற்சி செய்தேன். வெற்றியும் பெற்றேன்'' என்று கூறும் செல்வி சுகுமாரி 1979ல் ஐதராபாத்தில் தேசிய அளவில் நடந்த சைக்கிள் பந்தயங்களில் கலந்து கொண்டார். 1979ல் ஜபல்பூரில் தேசிய அளவில் நடந்த சைக்கிள் பந்தயத்தில் கலந்து கொண்டு, 1 தங்கம், 2 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களைப் பெற்றார். ராஜஸ்தானிலுள்ள பிகானீரில் தேசிய அளவில் நடந்த போட்டியிலும் இவர் கலந்து கொண்டார்.

1980ல் கேரளாவில் தென் மண்டலங்களுக்கான போட்டியில் 2 வெள்ளிப் பதக்கங்களையும், ஒரு வெண்கலப் பதக்கத்தையும் பெற்றார். 1982ல் பம்பாயில் நடந்த போட்டியில் 2 வெள்ளிப்பதக்கங்கள், ஒரு வெண்கலப் பதக்கம், 1982 ஏப்ரலில் பாங்காக்கில் நடந்த அனைத்துலக ஏசியன் சைக்கிள் சாம்பியன்ஷிப் போட்டியில் கலந்து கொண்டு 5வது இடத்தைப் பெற்றார். இதே ஆண்டில் இலண்டனில் உலகச் சாம்பியன்ஷிப் போட்டியில் கலந்து கொண்டுள்ளார், இதே ஆண்டில் டெல்லியில் நடந்த போட்டியில் 2 வெள்ளிப் பதக்கங்கள், ஒரு வெண்கலப் பதக்கம் பெற்றார். 1983ல் பிலிப்பைன்ஸில் உள்ள மணிலாவில் நடந்த 11வது ஏசியன் சைக்கிள் சாம்பியன்ஷிப் போட்டியில் கலந்து கொண்டார்.

''சைக்கிள் ரேசுக்கென்றே தனியாகச் சைக்கிள் உள்ளது. அதன் விலை சுமார் 7000 ரூபாய். இந்தச் சைக்கிள்களை மேலை நாட்டிலிருந்தே தருவிக்க வேண்டியிருக்கிறது. அதனால் செலவு அதிகம் பிடிக்கிறது. அதன் உதிரி உறுப்புகளின் விலையும் மிக அதிகமாக உள்ளது. ஆகவே நம்நாட்டிலேயே அம்மாதிரியான சைக்கிள்களைத் தயாரித்தால் எவ்வளவோ நன்றாக இருக்கும்'' என்று கருத்துத் தெரிவிக்கும் செல்வி சுகுமாரிக்கு, சொந்தத்தில் ஒரு நல்ல ரேஸ் சைக்கிளே இல்லையாம்!

—பேட்டி 'கிரிஜா'.

கோதுமையின் சிறப்பும் பயன்களும்

டாக்டர் இராசம்மாள் பா. தேவதாஸ்
இயக்குநர், அவினாசிலிங்கம் மனை இயல் கல்லூரி கோயம்புத்தூர்.

உலகில் பெருமளவில் பயன்படுத்தப்படும் தானியங்களுள் முக்கியமான ஒன்று கோதுமையாகும். ஐரோப்பா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ரஷியா ஆகிய நாடுகளிலும், நம் நாட்டில், பஞ்சாப், ஹரியானா, உத்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் குறிப்பாகவும் வடஇந்தியா முழுவதிலும் பொதுவாகவும் கோதுமை அதிகமாக உபயோகிக்கப்படுகிறது. குளிர்ப்பிரதேசங்களில் கோதுமை பெருமளவு பயிர்செய்யப்படுவதால் அந்நாடுகளில் வாழும் மக்கள் அனைவரும் கோதுமையினால் செய்யப்படும் ரொட்டி, அடை, சப்பாத்தி போன்ற உணவுகளைத்தான் அதிக அளவில் உண்கிறார்கள்.



கோதுமையின் அமைப்பு:

ஒவ்வொரு கோதுமை மணியிலும் தவிடு (Bran) முளைக்கரு (Germ) என்டோஸ்பெர்ம் (Endosperm) எனப்படும் நடுவிலுள்ள மாவுப்பகுதி (Aleurone Layer) என்னும் தவிடுப்பகுதி என்ற நான்கு முக்கியப் பாகங்கள் உள்ளன.

தவிடு:

தவிடு தானியத்தின் வெளிப்பகுதியிலுள்ள மரக்கலர்ப் பகுதியாகும். இது தானியத்தில் பன்னிரண்டு சதம் உள்ளது. அதிக அளவில் செல்லுலோசும், தாது உப்புக்களும் நிறைந்துள்ள பகுதி இது. 'பி' இன வைட்டமின்களும் சில தாதுஉப்புக்களும் இதில் உள்ளன.

(Aleurone Layer) :

தானியத்தின் தவிட்டுப்பகுதிக்கு அடுத்தபடியாக அமைந்துள்ள இது ஒரே ஒரு செல் (cell) வரிசையால் ஆனது. இதில் புரதச் சத்து அதிகமாக உள்ளது. பாஸ்பரஸ் என்னும் தாது உப்பும் உள்ளது.

மாவுப்பகுதி: (Endosperm)

மாவுப்பகுதி தானியத்தில் 85 சதவிகிதமாகும். மாவுப்பொருளும் புரதச் சத்துக்களும் நிறைந்த இது தானியத்தின் 'எரிபொருள்' சேமிப்பு நிலையம் (Store house energy) எனப்படும்.

முளைக்கரு (Germ) :

தானியத்தின் கீழ்ப்பகுதியில் முளைக்கரு அமைந்துள்ளது. தானியத்தில் 1 அல்லது 2 சதம் முளைக்கரு ஆகும். முளைவிடும் தானியத்தின் உயிர்நாடியும் இதுவே. (Heart of the grain) இதில் ஒரு தாவரம் வளருவதற்குத் தேவையான எல்லாச் சத்துக்களும் காணப்படுகின்றன. புரதச்சத்து, மாவுச்சத்து, தையாமின் மற்றும் பலவகை 'பி' இன உயிர்ச்சத்துக்கள், கொழுப்பு, உயிர்ச்சத்து 'இ' இரும்புச்சத்து போன்றவையும், இப்பகுதியில் உள்ளன.

Scutelleum:

இந்தப் பகுதி தானியத்தின் மாவுப்பகுதியையும், முளைக்கருவையும் பிரிக்கிறது. இது தானியத்தின் ஒரு பகுதியானாலும், இதில் பெருமளவு தயாமின் என்னும் 'பி' இன உயிர்ச்சத்து உள்ளது.

கோதுமையிலுள்ள சத்துப் பொருட்கள் சக்தி (கலோரிகள்)

100 கிராம் கோதுமை மாவு 350 கிலோ கலோரி சக்தியினைத் தருகிறது. மாவுப் பொருள் உடலில் ஜீரணிக்கும்போது கலோரி கிடைக்கிறது.

புரதச் சத்து:

புரதச்சத்து பெருமளவு தானியத்தின் மாவுப்பகுதியில் உள்ளது. கோதுமையின் வகையைப் பொறுத்து புரதச்சத்து மாறுபடுகிறது. கடினமான கோதுமை வகைகளில் 12 விருந்து 15 சதவிகிதம் வரை புரதச்சத்து உள்ளது. ஆனால் மிருதுவான கோதுமை வகைகளில் 8விருந்து 11 சதவிகிதம் வரையிலும் புரதச்சத்து உள்ளது. கோதுமை மாவில் 'Gluten' எனப்படும் புரதம் பெருமளவில் உள்ளது. இதில் gliadin, glutenin எனப்படும் இருவகைப் புரதங்கள் உள்ளன. இவை பொதுவாக நீரில் கரையாது. நீரில் கரையும் புரதங்களான albumin, globutin போன்ற வகைகள் கோதுமை மாவில் குறைவான அளவில்தான் உள்ளன. குளூட்டன் (gluten) என்னும் புரதம் கோதுமை மாவை நீர்விட்டு நன்கு பிசைந்தால் ரப்பர் போன்ற இழுபடும் தன்மையுள்ள ஒரு பொருளாகக் கிடைக்கும். அரிசிமாவு, சோள மாவு போன்றவற்றில் இத்தகு இழுபடும் தன்மையுள்ள குளூட்டன் கிடைக்காது. ஆகவேதான் பூரி, ரொட்டி, பிஸ்கட் போன்ற தயாரிப்புகளுக்கு மைதா மாவை உபயோகிக்கிறார்கள். மைதா மாவு தவிடு நீக்கி மாவு பிசைந்து நொதித்தலுக்கு வைக்கப்படும்பொழுது கார்பன் - டை-ஆக்ஸைடு வெளிவரும். அப்பொழுது மாவு தனது கொள்ளளவில் அதிகமாகும். அது சமயம் இந்த gluten வலைபோன்று விரிந்து கொடுக்கும். கூட்டடுப்பில் (backing oven) வைக்கப்பட்டு சூடு செய்யப்படும் பொழுது இந்த வாயு (Co 2) மேலும் விரிவடைந்து ரொட்டி, பன் போன்ற பொருள்கள் மிருதுவாக இருப்பதற்குக் காரணமாகிறது.

கோதுமைப்புரதத்தில் (Lysine) லைசின் எனப்படும் முக்கியமான அமினோ அமிலம் குறைவாக உள்ளது. ஆகவே தற்சமயம் மைதாவில் லைசின் அமினோ அமிலத்தைச் சேர்த்து அதை ரொட்டிக்கு உபயோகிக்கிறார்கள்.

கொழுப்புச் சத்து (Fat)

கோதுமை மாவில் கொழுப்புச் சத்து 1.7 சதவிகிதம் தான் முளைக்கருப்பகுதியிலிருந்து கிடைக்கிறது.

மாவுச்சத்து (Carbo hydrate):

முழு கோதுமை மாவில் 72 சதவிகிதம் மாவுச்சத்து உள்ளது.

உயிர்ச்சத்துக்கள் :

பெரும்பாலும், தயாமின், ரைபோபிளேவின், நயசின் போன்ற 'பி' இன உயிர்ச்சத்துக்கள் கோதுமை மாவில் உள்ளன. ஆனால் மைதா மாவில் குறைவாகக் காணப்படுகின்றது. கரோட்டின் என்னும் உயிர்ச்சத்து 'ஏ' பொருளும் முழுக் கோதுமையில் ஓரளவு உள்ளது.

தாது உப்புக்கள் சுண்ணாம்புச்சத்து :

கோதுமை மாவில் சுண்ணாம்புச்சத்து, 100 கிராம் அளவில் 40 மில்லி கிராம் உள்ளது. ஆனால் மைதாவில் அது 20 மில்லி கிராம் தான் உள்ளது. கோதுமை பொதுவாகவே சுண்ணாம்புச்சத்து குறைவான ஒரு உணவுப் பொருள் ஆகும்.

இரும்புச்சத்து:

முழு கோதுமையில் இரும்புச்சத்து கணிசமாக உள்ளது (11.5 மி.கி. / 100 கி)

பாஸ்பரஸ்:

கோதுமை மாவில் அதிக அளவு பாஸ்பரஸ் உள்ளது.

பைட்டேட்:

பைட்டேட் என்னும் பொருள் தவிட்டில் அதிகமாக உள்ளது. அது சுண்ணாம்புச் சத்து, இரும்புச்சத்து போன்றவை உடலில் நன்கு பயனாவதைத் தடுக்கிறது. ஆகவே கோதுமையின் முழுப்பயன் கிடைப்பதற்குப் பைட்டேடை நீக்க வேண்டும். அட்டவணையில் பலவிதக் கோதுமைப் பொருட்களிலுள்ள சத்துக்களைக் காணலாம்.

அட்டவணை

பலவித கோதுமைப் பொருட்கள்.
(100 கிராமில் உள்ளவை).

உணவு Foodstuff	சக்தி (Kcal)	புரதம் (g)	கொழுப்பு (g)	சுண்ணாம்புச் சத்து (mg)	இரும்பு (mg)	கரோட்டின் (ug)	தயாமின் (mg)	ரைபோபிளேவின் (mg)
ரவை (Wheat ravai)	348	10.4	0.8	16	1.6	...	0.12	0.03
புழுங்கல் கோதுமை (Bulgar wheat)	346	8.2	1.6	37	4.9		0.74	1.11
முழுகோதுமை பச்சையாக (Wheat whole)	346	11.8	1.5	41	4.9	64	0.45	0.17
கோதுமைமாவு (Wheat flour)	341	12.1	1.7	48	11.5	29	0.49	0.29
மைதாமாவு (Maida flour)	348	11.0	0.9	23	2.5	25	0.12	0.07
கோதுமை முளை (Wheat germ)	397	29.2	7.4	40	6.0	...	1.40	0.54

கோதுமையின் உபயோகங்கள்:

முழுகோதுமையைப் பெரும்பாலும்யாரும் அரிசியைச் சமைப்பது போன்று அப்படியே உபயோகப்படுத்துவதில்லை. பொதுவாக கோதுமை அரைக்கப்பட்டு மாவாகவோ ரவையாகவோ பயன்படுகிறது. ரோலர் மில் மூலம் பல்வேறு பகுதிகளாக அரைக்கப்பட்ட கோதுமை கிடைக்கிறது. அரைத்தலின்போது ஜீரணித்தலுக்குக் கடினமான செல்லுலோஸ் உமிப்பகுதிகள் நீக்கப்பட்டு மாவுகிடைக்கிறது. ஒரு குறிப்பிட்ட அளவு கோதுமையிலிருந்து எவ்வளவு மாவு கிடைக்கிறது எப்பதை Extraction Rate என்று கூறுகிறார்கள். அதிகமான Extraction Rate என்றால் பெருமளவு தவிடு இருக்கிறது என்று அர்த்தம். மாவின் நிறமும் மாறுபட்டு, Brown நிறமாக இருக்கும். Extraction Rate குறைவாக இருந்தால் மாவு வெண்மையாகவும், தவிடுப்பகுதி குறைவாகவும் இருக்கும். அடுமனைத் தொழிலுக்குப் பெரும்பாலும் அதிக வெண்மையானமாவைத் தேர்ந்தெடுக்கிறார்கள். புல்கர் கோதுமை எனப்படுவது முதலிலேயே ஆவியில் வேக வைக்கப்பட்ட முழுங்கல் கோதுமையாகும்.

மாவு என்பது ஒரு பொதுவான வார்த்தை. கோதுமை மாவில் தவிடு அதிகமாகவும், மைதாவில் தவிடு குறைவாகவும் இருக்கும். முழுகோதுமை பகுதிகளாக அரைபடும் பொழுது கோதுமை ரவை (சம்பா ரவை) கிடைக்கிறது. அதுவே மேலும் தவிடு நீக்குவதற்கு முறையாக அரைக்கப்பட்டால் வெள்ளை ரவை கிடைக்கிறது.

கோதுமையில் சுண்ணாம்புச் சத்து குறைவாக இருப்பதால், கோதுமை மாவுடன் கால்சியம் கார்பனேட் சேர்த்துச் சத்துமிகச் செய்கிறார்கள். தவிட்டுப் பகுதியில் தாமிரக் புரதச்சத்து அடங்கியுள்ளது. ஆகவே அரவை மில்லில் பிரிக்கப்படும் தவிடு பகுதியைத் தற்சமயம் மாவுடன் சேர்த்து உபயோகிக்க முயன்று வருகிறார்கள். மேலும் தவிட்டில் உள்ள செல்லுலோஸ் மலச்சிக்கலைத் தவிர்க்க உதவுகிறது.

மைதா மாவு ரொட்டி, பன், கேக், பிஸ்கட் மற்றும் பலவகை அடுமனைப் பதார்த்தங்கள் செய்வதற்கும், கோதுமை மாவு, பூரி, சப்பாத்தி, பரோட்டா போன்றவை செய்வதற்கும், மாக்கரோனி (Macaroni) ஸ்பகட்டி (Spaghetti) நூடில்ஸ் (Noodles) சேமியா போன்றவை செய்யவும், ரவை, உப்புமா, கேசரி, பாத், கிச்சடி, பொங்கல் இன்னும் பலவகை கார இனிப்பு வகைப்பொருட்கள் செய்வதற்கும் பயன்படுகின்றன. அரிசியை விட அதிக அளவு புரதம் உள்ள கோதுமை நம் தினசரி உணவிலும் பள்ளிகளிலும், வளர்ச்சித் திட்டங்களிலும் உள்ள ஊட்ட உணவு சத்துணவுத் திட்டங்களிலும் பயன்படுத்துவது நல்லது.

1. பருப்பு புல்கா (சப்பாத்தி)

தேவையான பொருட்கள் :

பாசிப்பருப்பு	...	125 கிராம்
கோதுமைமாவு	...	150 கிராம்
வெண்ணெய்	...	30 கிராம்
மிளகாய்த்தூள்	...	ருசிக்கேற்ற அளவு
மஞ்சள்பொடி	...	ஒரு சிட்டிகை
உப்பு	..,	தேவையான அளவு
கொத்துமல்லித்தழை		ஒரு சிறிது
வெங்காயம்	...	1
பச்சைமிளகாய்	...	1
எண்ணெய்	...	தேவையான அளவு

செய்முறை :

1. பருப்பை நன்கு கழுவிவிட்டு 15 நிமிடம் ஊறவைக்கவும்.
2. மஞ்சள் தூள் உப்பு கலந்துபருப்பை இளஞ்சூட்டில் சிறிது நீரில் நன்கு வேகவைக்கவும்.
3. வெங்காயம், பச்சை மிளகாய், கொத்துமல்லித்தழை போன்றவற்றைப் பொடிப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும்.
4. வெந்து உலர்ந்த பருப்பின் மீது நறுக்கிய வெங்காயம், மிளகாய் கொத்துமல்லி போன்றவற்றையும் மிளகாய்த் தூளையும் சேர்க்கவும்.
5. கோதுமை மாவைச் சலித்து நன்கு நீர் விட்டு மாவாகப் பிசைந்து கொள்ளவும்.
6. வெண்ணெய், உப்பு போன்றவற்றையும் சேர்த்துப் பிசையவும்.
7. பிசைந்த மாவைச் சிறு உருண்டையாகப் பிரித்துக் கொள்ளவும்.
8. உருண்டைகளைத் தட்டிக்கொண்டும் ஒவ்வொரு உருண்டையின் நடுவிலும் ஒரு தேக்கரண்டி அளவு பருப்புக் கலவையை வைத்து மூடவும்.
9. மூடிய உருண்டையை சப்பாத்திப் பலகையின் மேல் வைத்து நன்கு உருட்டித் தேய்த்துக் கொள்ளவும்.
10. சூடான தோசைக் கல்லில் எண்ணெய் தடவி அதில் தேய்த்துப் புல்காக்களை, இரண்டு புறமும் தங்க நிறம் வரும்வரை வேகவைத்து எடுத்துப் பரிமாறவும்.



2. கோதுமை ரவை அல்வா:

தேவையான பொருட்கள் :

கோதுமை ரவை	200 கிராம்
சர்க்கரை அல்லது வெல்லம்	150 கிராம்
பால்	200 மில்லி லிட்டர்
நீர்	200 மில்லிலிட்டர்
உலர்ந்த திராட்சை	10 கிராம்
முந்திரிப் பருப்பு	20 கிராம்
ஏலக்காய்	2
நெய் அல்லது எண்ணெய்	50 கிராம்

செய்முறை:

1. சர்க்கரையுடன் பாலையும், நீரையும் கலந்து கொதிக்க விட்டுச் சர்க்கரைப் பாகைத் தனியாக எடுத்து வைக்கவும்.
2. நெய்யில் கோதுமை ரவையை நன்கு வறுத்தெடுக்கவும்.
3. தங்கநிறமாக ரவை வந்தவுடன், காய்ச்சி வைத்த பாகை அதனுடன் சேர்க்கவும்.
4. உலர்ந்த திராட்சை, முந்திரி, ஏலக்காய்ப் பொடி ஆகியவற்றையும் கலந்து இளம் சூட்டில், நீர் வற்றும் வரை கிளறிக் கொண்டே வேக வைக்கவும். கால்மணி நேரமாவது நன்கு கிளற வேண்டும்.
5. ஹல்வாவை நெய் தடவிய தட்டில் ஊற்றி தேவையான அளவு வெட்டி பரிமாறவும்.

கோதுமை சாம்பார் சாதம்

பொருட்கள்	எடை கி.	அளவு மி.லி.	கலோரிகள் கி.க.	புரதம் கி.
கோதுமை ரவை	60	96	208	7.1
துவரம் பருப்பு	20	24	67	4.4
பீன்ஸ்	10	...	16	0.7
முருங்கைக்கீரை	25	...	23	1.7
உப்பு, கடுகு	ருசிப்படி			
எண்ணெய்	½ தேக்கரண்டி			
தண்ணீர்	1100 மி.லி.			

செய்முறை :

1. துவரம் பருப்பை 2 கப் தண்ணீரில் வேக வைக்கவும்.
2. பருப்பு வெந்தவுடன் நறுக்கிய பீன்ஸ், முருங்கைக் கீரை ஆகியவற்றையும் சேர்த்து வேக வைக்கவும்.
3. கோதுமை ரவையை வேக வைத்துக் கொள்ளவும்.
4. கோதுமை ரவையுடன், பருப்புக் கலவையையும் உப்பையும் சேர்க்கவும்.
5. வாணலியில் எண்ணெய் விட்டுக் காய்ச்சி கடுகைச் சேர்த்துத் தாளிக்கவும்.

கோதுமை இனிப்புப் பொங்கல்

பொருட்கள்	எடை கி.	அளவு மிலி.	கலோரிகள் கி.க	புரதம் கி.
கோதுமை ரவை	50	80	173	5.9
கடலைப்பருப்பு	25	50	93	5.2
வெல்லம்	20	...	77	...
நிலக்கடலை	5	...	28	1.5
தண்ணீர்	1100 மி.லி.			

செய்முறை:

1. கடலைப்பருப்பை வேக வைக்கவும்
2. வெந்தவுடன் அதில் கோதுமை ரவையையும் பொடி செய்த வெல்லத்தையும் சேர்க்கவும்.
3. ரவை வெந்தவுடன் நன்றாகக் கிளறி அடுப்பிலிருந்து இறக்கவும்.
4. பொடி செய்து வறுத்த நிலக்கடலையை கோதுமைப் பொங்கலுடன் கலக்கவும்.

கோதுமை காய்கறி சாதம்

பொருட்கள்	எடை கி.	அளவு மி.லி.	கலோரிகள் கி.க.	புரதம் கி.
கோதுமை ரவை	60	96	208	7.2
துவரம் பருப்பு	20	24	67	4.4
கேரட்	30	...	15	0.3
பீன்ஸ்	20	...	32	1.4
முட்டைக்கோஸ்	25	...	7	0.5
எண்ணெய்	½ தேக்கரண்டி			
தண்ணீர்	1400 மி.லி.			

செய்முறை:

1. பருப்பை வேக வைக்கவும்.
2. பருப்பு வெந்தவுடன் கேரட், பீன்ஸ், முட்டைக்கோஸ் ஆகியவற்றைச் சேர்த்து வேக வைக்கவும்.
3. ரவையைத் தனியாக வேக வைக்கவும்.
4. வெந்த ரவையுடன் பருப்பு, காய்கறிக் கலவையைச் சேர்த்துக் கிளறவும்.
5. வேண்டிய அளவு உப்பைச் சேர்க்கவும்.
6. தாளித்து இறக்கவும்.

வேலைவாய்ப்பு

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்
திரு எம். விஜயசாரதி

தொழில் நுட்பம் அறிந்தவர்களுக்கும், உடல் ஊனமுற்றவர்களுக்கும், தொழில்நீதியில் தகுதி பெற்றவர்களுக்கும் உரிய தனி வேலைவாய்ப்பகங்கள் ஐந்து உட்பட இம்மாநிலத்தில் முப்பத்தொன்பது வேலைவாய்ப்பகங்கள் உள்ளன.

உடல் ஊனமுற்றோருக்கான தனி வேலைவாய்ப்பகம்:

உடல் ஊனமுற்றோரின் தனிப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு பிரிவாக நான்கு பிரிவுகளைக் கொண்ட தனி வேலைவாய்ப்பகம் ஒன்று சென்னையில் செயல்பட்டு வருகிறது. உடல் ஊனமுற்றவர்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்காக மத்திய அரசிடமிருந்து முழு உதவி பெற்று கோயம்புத்தூரிலுள்ள வேலைவாய்ப்பகத்தில் தனிப்பிரிவு ஒன்று அமைக்கப்பட்டது.

வாழ்க்கைத் தொழிலுக்கு வழிகாட்டுதல்:

வாழ்க்கைத் தொழிலுக்கு வழிகாட்டும் பிரிவுகள் புதுக்கோட்டை, தருமபுரி ஆகிய மாவட்ட வேலை வாய்ப்பகங்களில் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது எல்லா மாவட்டங்களிலும் வாழ்க்கைத் தொழிலுக்கு வழிகாட்டும் பிரிவுகள் உள்ளன.

1959ஆம் ஆண்டு பதவி காலியிடங்களை கட்டாயமாக வேலைவாய்ப்பகத்திற்குத் தெரிவித்தல் சட்டத்தைச் செயற்படுத்துதல்.

30.9.1982ஆம் நாள் நிலவரப்படி இச்சட்டத்தின் செயல் வரம்பின் கீழ்மொத்தம் 13,186 நிறுவனங்கள் இருந்தன. 30.9.1983ஆம் நாள் நிலவரப்படி 14,111 நிறுவனங்கள் உள்ளன. வேலைவாய்ப்பகங்களுக்குத் தெரிவிக்கப்பட்ட பதவி காலியிடங்களின் எண்ணிக்கையும், பின்னர், இந்நிறுவனங்களில் நிரப்பப்பட்ட பதவிக்காலியிடங்களின் எண்ணிக்கையும் வருமாறு:

1959ஆம் ஆண்டு வேலைவாய்ப்பகங்கள் (வேலைக் காலி இடங்களைக் கட்டாயமாக அறிவித்தல்) சட்டம் - அமலாக்கப்பட்ட விவரங்கள்.

1.1.1982 முதல் 31,12.1982 வரை அறிவிக்கப்பட்ட காலி இடங்கள் 88,800. நிரப்பப்பட்ட காலி இடங்கள் 64,681

1.1.1983 முதல் 30.8.1983 வரை அறிவிக்கப்பட்ட காலியிடங்கள் 60,277. நிரப்பப்பட்ட காலி இடங்கள் 52,381

வேலைவாய்ப்பற்றோர் இடருதவித் திட்டம்:

ஐந்தாண்டுகளுக்கும் மேலாக வேலைவாய்ப்பகப் பதிவேடுகளில் பெயரைப் பதிவு செய்துள்ளவர்களும், பெற்றோரின் மாத வருமானம் ரூ. 2,000க்குக் குறைவாக உள்ளவர்களுமான படித்த வேலைவாய்ப்பு அற்றவர்களுக்கு இடருதவித் தொகை வழங்கும் அரசின் திட்டம் 1.7.1980லிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டில் (காலண்டர்) எய்திய சாதனை தொடர்பான விவரங்கள் வருமாறு:

வேலையற்றோர் உதவித் திட்டம்

31.12.1983 அன்று நிலவரப்படி பயனடைந்தவர்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1.7.1980 முதல் 31.12.83 வரை பயனடைந்த தகுதி வாய்ந்தவர்கள் என்று அடையாளப்படுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை—49,555.

பரிசீலனை செய்து ஒப்பளிப்பு அளிப்பதற்காக வட்டாட்சியர்களுக்கு அனுப்பப்பட்ட பூர்த்தியான விண்ணப்பங்களின் எண்ணிக்கை —29,993.

வட்டாட்சியரால் அனுமதி அளிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை —20,648.

டிசம்பர் 1983 வரை பயனடைந்த தகுதி வாய்ந்தவர்என அடையாளப்படுத்தப்பட்ட பார்வையிழந்தவர்களின் எண்ணிக்கை —335.

பரிசீலனை செய்து ஒப்பளிப்பு அளிப்பதற்காக வட்டாட்சியர்களுக்கு அனுப்பப்பட்ட பார்வையற்றோர்களின் பூர்த்தியான விண்ணப்பங்களின் எண்ணிக்கை —335.

வட்டாட்சியரால் அனுமதி அளிக்கப்பட்ட பார்வையற்றோர் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை—82.

1980-81, 1981-82, 1982-83 மற்றும் 1983-84ஆம் ஆண்டுகளுக்கான செலவு குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

ஆண்டு	செலவு ரூபாய் இலட்சத்தில்
1980—81	22.04
1981—82	75.29
1982—83	81.58
1983—84 (டிசம்பர் 1983வரை)	39.59

சுயவேலை வாய்ப்பு:

தேசிய வேலைவாய்ப்புப் பணி நிறுவனத்தின் கடமைகள் விண்ணப்பதாரர்களைப் பதிவு செய்து நியமனம் செய்வதுடன் முடிந்து விடக்கூடாது; ஆனால் சுய வேலைவாய்ப்புக்கு வழிகாட்டுதல், பயிற்சியளித்தல், விண்ணப்பதாரர்களைத் தயார் செய்தல் ஆகியவற்றையும் கவனிக்கவேண்டும் என்பது தற்போது பெரிதும் உணரப்பட்டு வருகிறது. மத்திய அரசிடமிருந்து முழு உதவிபெற்று கடந்த ஆண்டில் வேலூரிலுள்ள வேலை வாய்ப்பகத்தில் தனி வேலைவாய்ப்புப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இப்பிரிவில் உள்ள வேலை வாய்ப்பு அலுவலர் சுயவேலையில் விருப்பம் உள்ள நபர்களுக்கு அறிவுரையும் வழியும் காட்டுவார்; இதற்கு வேண்டிய வங்கி உதவியும் ஏற்பாடு செய்கிறார்.

கிராம இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் தொழில் பயிற்சி நிலையங்களிலும் இவற்றைப் போன்ற ஏனைய நிறுவனங்களிலும் பயிற்சி பெற்ற அனைவருக்கும் சுயவேலை வாய்ப்பு முயற்சிகளை மேற்கொள்வதற்காக நிதி உதவி அளிக்கும் புதிய இயக்கத்தின் பயனாக சுயவேலைவாய்ப்பு பெருகியுள்ளது.

மாவட்ட ஆட்சியரின் தலைமையின்கீழ் இதற்கென அமைக்கப்பட்ட பணிக்குழுவானது இப்பயிற்சியாளர்களுக்கு தேர்முகத் தேர்வு ஒன்றினை நடத்தி தகுதியுள்ளவர்களின் பெயர்களை வணிக வங்கிகளுக்கு அனுப்பி நிதி உதவி வழங்குமாறு பரிந்துரை செய்கிறது. இந்நிதி உதவி ரூ.3,000 முதல் ரூ10,000 வரை வழங்கப்படுகிறது. கிராம இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 31.3.1983ஆம் நாள் வரையில் தொழில் பயிற்சி நிலையங்களில் பயிற்சிபெற்றுள்ள 10,031 பேருள் இதுவரையில் 6,500 பேர் ஏற்கெனவே தேர்வு செய்யப்பட்டு வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளனர். இது வரையில் 2,000க்கும் மேற்பட்டவர்களுக்கு 1 கோடி ரூபாய் வரையில் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

குடும்பத்தில் ஒருவருக்கு வேலை வாய்ப்புத் திட்டம்:

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க பொதுவாக நிலவும் வேலையில்லாப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முயற்சியில் ஒரு பகுதியாக குடும்பத்தில் ஒருவருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டத்தினை இந்த அரசு ஏற்கனவே ஒரு கொள்கையாக ஏற்றுக் கொண்டுள்ளது. கிராமங்களில் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்கள் குறித்து மாநில அளவில் ஆய்வு நடத்தியதில் சுமார் 15 இலட்சம் பேர் சுயவேலைவாய்ப்பிற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர் என்று தெரிய வருகிறது.

அரசு, பொதுத்துறை நிறுவனங்களில் வேலைவாய்ப்பு நிறுவனம் அனுப்பியவர்களிலிருந்து வேலைக்கு ஆள் எடுக்கும்போது ஏனையத் தகுதிகள் சமமாயிருப்பின் வேலையில்லாக் குடும்பங்களிலிருந்து வருபவர்களுக்குச் சலுகை கொடுக்கவேண்டுமென்ற அரசு சமீபத்தில் ஆணை வெளியிட்டுள்ளது. வேலை வாய்ப்பில்லாக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதற்கான சான்றிதழை வருவாய்த்துறை வழங்கும்.

இம்மாநிலத்திலுள்ள அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பணிகளையும் படிப்படியாகக் கணக்கீட்டுப் பொறி மயமாக்குவதென அரசு திட்டமிட்டுள்ளது. சென்னை வட்டாரத்திலுள்ள ஐந்து வேலை வாய்ப்பு அலுவலகங்களின் பணிகளைக்கணக்கீட்டுப் பொறிமயமாக்குவதற்காக 1984-85ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 6.5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஏனைய இடங்களிலும் அடுத்த ஆண்டுகளில் இப்பணி மேற்கொள்ளப்படும்.

தொழிற்பயிற்சி நிலையங்கள்:

இம்மாநிலத்தில் மகளிருக்கென்று தனியாக 3 தொழிற்பயிற்சி நிலையங்கள் இருப்பது உட்பட மொத்தம் 35 தொழிற்பயிற்சி நிலையங்கள் உள்ளன. அவற்றில் பயில்வோரின் எண்ணிக்கை 14,272 பேர். 1982ஆம் ஆண்டில் 8,264 மாணவ, மாணவியர் சேர்க்கப்பட்டிருக்க, 1983ஆம் ஆண்டில் 9,189 மாணவ, மாணவியர் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

1983 - 84இல் கோயம்புத்தூர், மதுரை, வட சென்னை ஆகிய இடங்களில் உள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் மூன்றாவது முறை மாற்றுப் பணியை அரசு கொண்டு வந்தது. 1984-85ல் சேலத்திலுள்ள தொழிற் பயிற்சி நிலையத்தில் மூன்றாவது முறை மாற்றுப்பணியைக் கொண்டு வரத்தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனால், மேலும் 200 மாணவ மாணவியர் சேர்த்துக் கொள்ளப்படுவர். இதன் பொருட்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தொழிற்பயிற்சி நிலையங்களில் நவீன இயந்திரங்கள், சாதனங்களை அமைக்க வேண்டியதன் பொருட்டு, 1984-85ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1961ஆம் ஆண்டு தொழில் பழகுவோர் சட்டத்தின் கீழ் தொழில் பழகுவோர் பயிற்சி:

இச்சட்டத்தின்படி, தொழில் பழகுவதற்காக மாநிலத்தொழில் பழகுவோர் குழுவால் அனுப்பப்படுகிறவர்களுக்குத் தொழிலதிபர்கள் பயிற்சி அளிக்கவேண்டும். தொழில் பழகும் காலம் தொழிலைப் பொறுத்து 6 மாதத்திலிருந்து 4 ஆண்டுகள் வரை உள்ளது. பயிற்சியில் தேறிய பின்னர் அதற்கான தேசியச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

பல்வேறு தொழிற் பயிற்சி நிறுவனங்களில் தொழில் பழகுதல் தொடர்பான பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இவை அருகாமையிலுள்ள தொழிற்சாலைகளில் பயிற்சி பெறும் தொழில் பழகுவோரின் தொழில் நுட்பக்கல்வித் சேவையை நிறைவு செய்கிறது. 1983-84ல் ஒசூரில் தொழில் பழகுதல் தொடர்பான பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டது. இதனையும் சேர்த்து இம்மாநிலத்தில் தற்போது மொத்தம் 9 தொடர்புப் பயிற்சி நிலையங்கள் உள்ளன.

வாழ்க்கைத் தொழில் உயர்பயிற்சித் திட்டம் :

இத்திட்டம், ஐக்கிய நாட்டு வளர்ச்சித் திட்டம், அனைத்து நாடுகள் தொழிலாளர் நல நிறுவனம் ஆகியவற்றின் உதவியுடன் சில தொழிற் பயிற்சி நிலையங்களில் செயலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில், இத்திட்டம், அம்பத்தூர், கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் செயலாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் பணிபுரியும் தொழில் நிறுவனங்கள் இத்திட்டத்தைப் பெரிதும் பாராட்டியுள்ளன. இத்திட்டம், மதுரையிலுள்ள தொழிற் பயிற்சி நிலையத்தில் விரைவில் செயலாக்கப்படும்.

தமிழ்நாடு கிராமப்பகுதி இளைஞர் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ், கிராமப் பகுதி இளைஞர்களுக்குப் பொறியியல் தொழில்களிலும், பொறியியல் சார்ந்த தொழில்களிலும், 28 தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. கடந்த ஆண்டுகளில் இத்திட்டத்தின்கீழ் பயிற்சி பெற்றவர்கள் புதிய திட்டத்தால் பயனடைந்துள்ளனர்.

அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம்:

தமிழக அரசு நிறுவனமான அயல் நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம் 1956ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்ட ஒரு நிறுவனமாக, 1978ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30ஆம் நாளன்று நிறுவப்பட்டது.

இந்நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம், ரூ. 50 இலட்சமாகும். செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 10 இலட்சமாகும். அந்நிறுவனத்தின் முக்கிய நோக்கங்கள் வருமாறு:

பயிற்சி பெற்ற, ஓரளவு பயிற்சி பெற்றவர்களுக்கு அயல் நாடுகளில் வேலை வாய்ப்பித் தருதல்.

அயல்நாடுகளில் பணியாற்றும் பணியாளர்கள் அனுப்பும் வருவாயைத் தக்கவாறு முதலீடு செய்தல்.

இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் கூட்டுத் தொழில் நிறுவனங்களை நிறுவுதல்.

இந்தியப் பொருள்களின் ஏற்றுமதியை மேம்படுத்துதல்.

தற்போது, பணியாளர்களுக்கு அயல்நாடுகளில் வேலை வாங்கித் தரும் பணியை இந்நிறுவனம் தீவிரமாகக் கவனித்து வருகிறது. அயல் நாடுகளில் வேலை பெற விரும்பும் பணியாளர்களை இந்நிறுவனம் பதிவு செய்து கொள்கிறது. 31.12.1983ஆம் நாளன்றுள்ளபடி, இந்நிறுவனத்தில் பதிவு செய்து கொண்டுள்ளவர்களின் எண்ணிக்கை 18,069 பேர் ஆகும்.

இந்நிறுவனம் ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஈராக், லிபியா தெற்கு ஏமன் ஆகிய நாடுகளுக்கு இதுவரையில் 926 பேரை அனுப்பியுள்ளது. அவர்கள் மூலமாக இந்தியாவிற்கு அந்நியச் செலாவணி வகையில் ஒவ்வோர் ஆண்டும் ரூ. 1.75 கோடி கிடைப்பதாக மதிப்பிடப்படுகிறது.

"தமிழரசு"

சந்தா விவரம்

தமிழ் இதழ்—

ஓர் ஆண்டிற்கு ரூ. 18/-

அரையாண்டிற்கு ரூ. 9/-

விவரங்களுக்கு :

சர்குலேஷன் மானேஜர்,
"தமிழரசு"
சென்னை - 600 002.

சுப்பிரமணிய சிவா வாழ்க்கைக் குறிப்புகள்

தொகுத்தது : ரகமி

ஜூலை 23 சுப்பிரமணிய சிவா நினைவு நாள்

பெயர்: சுப்பிரமணியன்.
பிரபலமான பெயர்கள் : சுப்பிரமணிய சிவம், "சிவா"

தந்தை : பி. ஆர். ராஜம் ஐயர். தாயார் : நாகலட்சுமி அம்மாள் (எ) நாகம்மாள்.

பிறந்த இடம் : மதுரை மாவட்டம் 'பெத்தலை கொண்டா' எனப்படும் வத்தலக்குண்டு.

பிறந்த ஆண்டு : 1884 அக்டோபர் 4. (தாரண வருஷம் புரட்டாசி 20-ஆம் நாள்;)

பெற்றோர்களால் இடப்பெற்ற பெயர் : 'சுப்பராமன்' (எ) சுப்பிரமணியன்.

உடன் பிறந்தவர்கள் : வைத்தியநாத சர்மா என்ற ஒரு தம்பி, தைலாம்பாள், ஞானாம்பாள் என்ற இரு சகோதரிகள். (இந்த இரு சகோதரிகளுக்கு முன் ஒரு ஆண் குழந்தை பிறந்து இறந்து விட்டதாம்.)

1885—1892 :

குடும்பநிலை காரணமாக குழந்தை சுப்பிரமணியன் தனது 6 வயது வரையில் தன் தாயாருடன் அய்யம்பாளையத்தில் கிராம மணியம் வேலை பார்த்து வந்த பாட்டனார் அனந்தய்யர் வீட்டில் வசித்ததோடு, அங்கு திண்ணைப் பள்ளியில் கல்வி பயின்றார்.

1893 :

சுப்பிரமணியனின் 9ஆம் வயதில் உபநயனம் நடந்தது. பின்னர் பெற்றோர்களுடன் மதுரைக்குச் சென்றார்.

1894—1895:

மதுரை கட்டுச் செட்டி மண்டபத்திலுள்ள பள்ளியிலும் சேதுபதி உயர்நிலைப் பள்ளியிலும் கல்வி பயின்றார்.

1895—1898 :

குடும்பத்தில் மேலும் வறுமையின் காரணமாக ராஜம் ஐயர் தனது குடும்பத்தோடு திருவனந்தபுரம் சென்று அங்கு 'ஊட்டுப்புரை' மூலம் ஜீவித்தனர். மகன் சுப்பிரமணியன் அங்குள்ள ஹைஸ்கூலில் சேர்க்கப்பட்டார்.

சுப்பிரமணிய சிவாவின் மூன்று விதமான தோற்றங்கள்

தாடி மீசையின்றி

ஸ்வதந்தராநந்தர்

தாடி மீசையுடன்

சிவா — தனது ஆன்மீகத் தோழர்களுடன்

1899:

பள்ளியில் படிக்கும்போதே 15 வயதான சுப்பிரமணியனுக்கும் 9 வயதான சிறுமி மீனாட்சிக்கும் திருமணம் நடந்தது.

1900: திருவனந்தபுரத்திலிருந்த மாணவன் சுப்பிரமணியன் தனது பள்ளி நண்பர்களுடன் கோயமுத்தூரிலுள்ள டவுன் ஹைஸ்கூலிலும் புதியமைக்கேல் காலேஜிலும் மெட்ரிகுலேஷன் வரை படித்தார். பள்ளியில் மாணவர்களுடனும் ஆசிரியர்களுடனும் வாக்குவாதங்களிலும் வீண் கலாட்டாக்களிலும் ஈடுபட்டார். முரட்டு சுபாவமுள்ள தோழர்களுடன் நெருங்கிப் பழகிய சுப்பிரமணியனுக்கு முகத்தில் மீசை வைத்துக் கொள்ளும் பழக்கமேற்பட்டது.

1900 ஜூன்:

கோடை விடுமுறைக்கு திண்டுக்கல்லிலுள்ள உறவினர்களிடம் சென்ற சுப்பிரமணியன், அங்கு 'சுப்பையா ஸ்வாமிகள்' என்ற ஸ்ரீஓத ஸ்வாமிகளை தரிசித்து நெருங்கிப்பழகினார். ஸ்வாமிகள் ஒரு சித்தராவார்.

1901 :

படிப்பு முடிந்த சுப்பிரமணியன், உறவினர்கள் சிபாரிசின் பேரில் சிவகாசி போலீஸ் சூப்ரெண்ட்டெண்ட் ஆபீஸில் மாதம் 10 ரூபாய் சம்பளத்தில் வேலையில் சேர்ந்தார். ஒரே ஒருநாள் உத்தியோகம் பார்த்தார்; அவ் வேலையை ராஜினாமா செய்து விட்டு மீண்டும் திருவனந்தபுரத்திற்கே சென்றார்.

1902 :

திருவனந்தபுரம் கொட்டாக்கரை சட்டம்பி நவநீதகிருஷ்ணய்யரிடம் குஸ்தி, சிலம்பம், மற்றும் பல வித்தைகளை நன்கு பழகி ஊரிலுள்ளவர்களை வம்புக்கு இழுத்து அவர்களிடம் குஸ்தி, அடி, உதையில் ஈடுபட்டார்.

1903 :

ஸ்ரீசதானந்த ஸ்வாமிகளுடன் பழக்க மேற்பட்டது. ஸ்வாமிகள், சுப்பிரமணியன் என்ற பெயருடன் 'சிவம்' என்ற பெயரையும் சேர்த்து 'சுப்பிரமணிய சிவம்' என்று கூப்பிட்டு வந்தது; நாளடைவில் இவர் 'சிவம்' என்றும் சிவா என்றும் அழைக்கப்பட்டார். சுப்பிரமணிய சிவமும் திருவனந்தபுரத்தில் ''தர்ம பரிபாலன சமாஜம்'' என்ற ஸ்தாபனத்தை நிறுவி, அதன் மூலம் ஆன்மீக விஷயங்களைப் பரப்பினார்.

1906 : ஏப்ரல் :

திருவனந்தபுரத்தில் ஆரிய சமாஜத்தைச் சேர்ந்த தாகூர்சாவின் சொற்பொழிவினால் சிவத்திற்கு நாட்டுப் பற்றும், சுதந்திரப் பற்றும் மேலிட்டது. தமது 'தர்ம பரிபாலன சமாஜம்' மூலம் பல இளைஞர்களை ஒன்று சேர்த்து சுதந்தரப் போராட்டத்தில் பெரிதும் ஈடுபட்டார். ஆங்கிலேய ஆட்சியாளர்களை எதிர்த்துப் பிரசங்கங்கள் செய்த இவரை சமஸ்தான அதிகாரிகள் திருவனந்தபுரத்தை விட்டு வெளியேற்றினர்.

1906 அக்டோபர்:

துத்துக்குடியில் ''சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி'' நிறுவப்பட்டு, இதற்கு வ.உ. சிதம்பரம் பிள்ளை செயலாளராக நியமிக்கப்பட்டார்.

1907 :

வடஇந்தியாவில் வங்காளப் பிரிவினைத் தகராறு, சுதேசிகள் நாட்டு வெடிகுண்டுகளைத் தயாரித்து ஆங்கிலேயர்கள் மீது வீசியடித்துக் கொல்வது, விபின்சந்திரபால், மற்றும் லோக மான்ய திலகரின் பிரசங்கங்கள் ஆகியவை சிவாவை உற்சாகப்படுத்தி விழிப்படையச் செய்தன. ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக ஊர் ஊராகப் பிரசங்கங்கள் செய்யத் தொடங்கினார்.

1907 :

திருநெல்வேலி மாவட்டத்தில் வ.உ. சிதம்பரம் பிள்ளை ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராகப் பிரச்சாரம் செய்த சமயத்தில், தூத்துக்குடியில் சுப்பிரமணிய சிவம், வ.உ.சிதம்பரம் பிள்ளையையும் மகாகவி சுப்பிரமணிய பாரதியையும் சந்துத்தல். சிவாவின் பிரசங்கங்களைக் கேட்ட கவி பாரதி அவரை ''என் வீர சிவாஜியே!'' எனச்சொல்லி, கட்டித்தழுவிப் பாராட்டினார்.

1907 :

சிவாவின் தந்தை ராஜம் ஐயர் காலமானார்.

1907 நவம்பர்:

சென்னை கடற்கரையில் பிரஸிடென்சி காலேஜுக்கு எதிரில் விபின் சந்திரபால் பிரசங்கம் நிகழ்த்திய இடத்திற்கு சிவா 'திலகர் கட்டம்' எனப் பெயரைச் சூட்டினார்.

1907 டிசம்பர்:

சூரத் காங்கிரஸ் மாநாட்டில் லோகமான்ய திலகரின் தலைமையிலான தீர்மானங்களைச் செயல்படுத்த வ. உ. சிதம்பரம் பிள்ளை, மகாகவி பாரதியார் மற்றும் பலருடன் சிவாவும் பெரிதும் பாடுபட்டார்.

1908 ஜனவரி 9:

திருநெல்வேலிப் பகுதிகளில் 'சுதேசி ஆதரவு' பற்றிப் பிரசாரங்கள் செய்தார்.

ஜனவரி 12:

சுயராஜ்ஜியம் அடைவதற்கான பிரசாரங்களைச் செய்ததோடு அதற்கான தொண்டர்கள் படையை அமைத்து, அவர்களுக்குப் பயிற்சியும் தந்தார்.

ஜனவரி 13 :

அம்பாசமுத்திரம், கல்லிடைக்குறிச்சி, சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர், தென்காசி, திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் சுதேசியம் பற்றிப் பிரசாரம் செய்தார்.



பிப்ரவரி.

சிவம், தமது வங்காள நண்பரும் சிட்டகாங்கைச் சேர்ந்தவருமான சந்திர வார்க்கர் என்ற தலைவருடன் தூத்துக்குடிக் கடற்கரையில் நிகழ்த்திய பிரசங்கங்களில் 'வெள்ளையனே வெளியேறு!' என்பது குறிப்பிடத்தக்கது.

பிப்ரவரி 17 :

தூத்துக்குடிக் கடற்கரையில் வ. உ. சி. யும் சிவாவும் இணைந்து 'சுயராஜ்ய சங்கம்' ஏற்படுத்தி, சுதேசி இயக்கத்தை தீவிரப்படுத்தினர். இதில் குருநாதய்யரும் இடம்பெற்றிருந்தார்.

பிப்ரவரி 19, 21, 23:

சுயராஜ்ய சங்கத்திற்கு ஆங்கிலேயர்களால் ஏற்படும் ஆபத்துக்களைத் தடுத்து முறியடிக்கத்தயாராக இருக்க வேண்டிய அவசியத்தைப் பற்றி சிவா பிரசங்கங்கள் செய்தார்.

பிப்ரவரி 24, 25, 26:

லாலாலஜ்பத்ராய், அஜீத்சிங் இவர்கள் மீது ஆங்கிலேய அரசு அநீதியாக நடந்து கொண்டிருப்பதை வ. உ. சி. யும் சிவாவும் தீவிரமாகக் கண்டித்தனர்.

பிப்ரவரி 28:

தூத்துக்குடியில் ஆங்கிலேயர்கள் நடத்தி வந்த ''கோரல் காட்டன் மில்ஸ்'' தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தபோது, தொழிலாளர்களின் கூட்டத்தில் வ. உ. சி. யும், சிவாவும் பேசினர். இந்தக் கூட்டங்களுக்கு ஆங்கிலேயர்கள் தடை உத்தரவு போட்டனர். தடையை மீறி ஒரு கூட்டம் தூத்துக்குடிக் கடற்கரையிலும் மற்றொரு கூட்டம் தனியார் வீடு ஒன்றிலும் ரகசியமாக நடந்தன. சிவம் இரண்டிலும் கலந்து கொண்டார்.

பிப்ரவரி 29:

திருநெல்வேலி ஜில்லா மாஜிஸ்டிரேட் சுமார் 30 பேர்கள் அடங்கிய ஆங்கிலேய இந்தியப் பிரமுகர்களிடம் நடத்திய பேச்சு வார்த்தையில் ஆங்கிலேய ஆட்சியை எதிர்த்து நடப்பவர்கள் மீது கிரிமினல் நடவடிக்கைகள் எடுக்கப் போவதைப் பற்றி மாஜிஸ்டிரேட் எச்சரிக்கை விடுத்ததை எதிர்த்து, வ. உ. சி. யும் சிவாவும் ஆட்சேபணை செய்தனர்.

மார்ச்சு 1, 3 :

தூத்துக்குடிக்கடற்கரையில் வ. உ. சி யும், சிவாவும் சுயராஜ்ஜியம் பற்றி நீண்ட பிரசங்கங்கள் செய்த பின்னர் மூவாயிரம் பேர்களுக்கு மேல் கூடியிருந்த ஜனத்திரளில் ''உங்களுக்குத் தேவை சுயராஜ்ஜியமா ஆங்கிலேய ஆட்சியா'' என்றதற்கு, மக்கள் ''சுயராஜ்ஜியமே தேவை!'' எனக் குரல் கொடுத்தனர்.

மார்ச்சு 4, 5, 6, 7:

தூத்துக்குடியில் நடந்த கூட்டத்தில் சிவா, மார்ச்சு 9-ஆம் தேதி விபின் சந்திரபால் சிறையிலிருந்து விடுதலையாகி வரும் நாளை வெகு விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்ததோடு, 'சுயராஜ்ஜியம்' என்ற பெயரில் ஒரு பத்திரிகையையும் வெளியிட ஏற்பாடு செய்தார்.

மார்ச்சு 8:

மார்ச்சு 9-ந் தேதி நடக்க இருக்கும் ஊர்வலம் மற்றும்பொதுக்கூட்டத்திற்கு தடை உத்தரவு போடப்பட்டு அதற்கான உத்தரவு வ. உ. சி. சிவா, இருவரிடமும் பட்டுவாடா செய்யப்பட்டது.

மார்ச்சு 9:

திருநெல்வேலி கோர்ட்டில் வ. உ. சி. யும், சிவாவும் ஆஜரானார்கள்.

மார்ச்சு 10:

மறுபடியும் திருநெல்வேலி கோர்ட்டில் வ.உ.சியும் சிவாவும் ஆஜரானார்கள்.

மார்ச்சு 12:

திருநெல்வேலிஜில்லா மாஜிஸ்டிரேட் விஞ்ச் துரை முன்பு வ. உ. சி. யும் சிவாவும் ஆஜராயினர். ''பரிபூர்ண சுயராஜ்ஜியம் நமது பிறப்புரிமை! அதனை அடைந்தே தீருவோம்! வந்தே மாதரம்!'' என கோஷமிட்டதை அடுத்து இருவரும் கைது செய்யப்பட்டு பாளையங்கோட்டைச் சிறைக்கு அனுப்பப்பட்டனர்.

மார்ச்சு 13:

வ. உ. சி., சிவா, இருவரையும் கைது செய்ததனால் திருநெல்வேலி முழுவதும் கலவரம் மூண்டது. இதனை அடக்க போலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 4 பேர்கள் தலக்திலேயே மாண்டனர்.

மார்ச்சு 15 முதல் ஜூன் 30 வரை:
வ. உ. சி., சிவா இவர்கள் மீது வழக்குகள் போடப்பட்டன. விசாரணை நடந்தது.

ஜூலை 7 :

நீதிபதி பின்ஹே வ. உ. சிதம்பரம்பிள்ளைக்கு தீவாந்தர தண்டனையும், சுப்பிரமணிய சிவாவிற்கு 10 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும் விதித்துத் தீர்ப்புக்கூறினார்.

நவம்பர் 4:

சென்னை உயர்நீதிமன்றத்தில் தண்டனை குறைப்பு.

1908—1912 நவம்பர் 2 :

சுப்பிரமணிய சிவம் சிறைத்தண்டனையை அனுபவித்த பின்னர் விடுதலையானார்.



1912 நவம்பர் :

சிறையிலிருந்து வெளிவந்த சிவம், மனைவி மீனாட்சியுடன் சென்னை மயிலாப்பூரில் தங்கியிருந்தார்.

1913 ஏப்ரல்:

சென்னையில் சிவம் ''ஞானபானு'' என்ற மாதப் பத்திரிகையைத் தொடங்கி ஆசிரியராக இருந்தார். மனைவி மீனாட்சி அம்மாள் நிர்வாகியாக இருந்தார்.

1915 மே 15 : சிவாவின் மனைவி மீனாட்சி அம்மாள் காலமானார்.

1916 :

சிவா, ''பிரபஞ்சமித்திரன்'' என்ற வாரப் பத்திரிகை தொடங்கி, அதில் 'நாரதர்' என்ற புனை பெயரில் கட்டுரைகளை எழுதி வந்தார்.

1919 :

'இந்திய தேசாந்திரி' என்ற வாரப்பத்திரிகையைத் தொடங்கிய சிவத்தின் உடல், நோய் வாய்ப்பட்டதனால் சென்னை திருவல்லிக்கேணியில் தங்கினார்.

1920 :

சென்னையில் டிராம்வே தொழிலாளர்கள் நடத்திய வேலை நிறுத்தத்தில் சிவம் தொழிலாளர்களுக்காக ஓயாமல் உழைத்தார். மதுரை 'ஹார்வி மில்' வேலை நிறுத்தத்தில் பிரபல தொழிற்சங்கத் தலைவர்களான ஸ்ரீஜார்ஜ், ஜோஸப் வேண்டுகோளின்படி சில நாட்கள் மதுரையில் தங்கினார்.

1920 ஆகஸ்டு:

கல்கத்தாவில் லாலாலஜ்பதிராயின் தலைமையில் நடந்த ஒத்துழையாமை இயக்கம் சம்பந்தமாக நடைபெற்ற விசேஷ காங்கிரஸ் மகாசபைக்கு பிரதிநிதியாகச்சென்றுவந்தார். ஆம்பூரில் நடைபெற்ற 'கிலாபத்' மாநாடு, விழுப்புரம்அரசியல் மாநாடு ஆகியவற்றுக்குச் சென்று உரையாற்றினார். தவிர புதுக்கோட்டை சமஸ்தானத்திற்கெதிராக அங்குடவுன் ஹாலில் நடைபெற்ற கூட்டத்தில் பேசினார்.

1921 ஜனவரி 14 :

சந்நியாசியைப் போல காஷாய உடையைத் தரித்த சிவம் அன்று முதல் ''ஸ்வதந்திரானந்தர்'' என்ற பெயரையும் பூண்டார்.

1921 அக்டோபர் 28:

ராஜ நிந்தனை காரணத்திற்காக சிவம் இரண்டாம் முறையாகக்கைதாகி மதுரை ஜில்லா நீதிபதி முன் ஆஜர் செய்யப்பட்டார்.

1921 நவம்பர் 17 முதல் 1922 ஜனவரி 12 வரை:

வழக்கில் விசாரணைகள் நடந்து 2 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும், ரூ. 500-அபராதமும் விதிக்கப்பட்டன. அபராதம் செலுத்தத்தவறினால் மேலும் 6 மாதங்கள் கடுங்காவல் தண்டனை எனத்தீர்ப்புக் கூறப்பட்டது. பின்னர் ''சிவம்' உறுதிமொழி எழுதிக்கொடுத்ததின் பேரிலும், அவருடைய உடல் நிலையின் காரணமாகவும் எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலை செய்யப்பட்டார்.

1922 ஜூன்

காசியில் சிவாவின் தாயார் நாகலட்சுமி அம்மாள் காலமானார்.

1922 நவம்பர் 27:

'சிவம்' மூன்றாம் முறையாகக் கைதாகி ஜாமீனில் விடுதலை பெற்றார்.

1923

சாத்தூரில் நடைபெற்ற அரசியல் மாநாட்டில் கலந்து கொண்டார்.

1923 ஜூன் 22:

பாப்பாரப்பட்டியில் சிவம் பாரதமாதாகோவிலுக்கு அஸ்திவாரக்கல்லைதேசபந்து சித்தரஞ்சன் தாஸ் தலைமையில் நாட்டினார்.

1923 செப்டம்பர்:

சேலத்தில் நடைபெற்ற 29வது தமிழ்மாகாண மாநாட்டில் கலந்து கொண்டார் சிவம்!

1923 அக்டோபர்:

'சிவா' கிருஷ்ணகிரி, பாப்பாரப்பட்டி, கோயம்புத்தூர், மற்றும் பல இடங்களுக்குச் சென்று சுதேசிய பிரசாரத்தில் பெரிதும் ஈடுபட்டார்.



1924 ஜனவரி:

சிவாவின் உடலில் வந்துள்ள தீராத வியாதியைக் காரணம் காட்டி அவரை ரயிலில் பிரயாணம் செய்யக் கூடாதென்று தடைவிதித்து அதற்கான உத்தரவையும் அவரிடம் அளித்தனர்.

ஜூலை

திருவல்லிக்கேணி கடற்கரையில் அவர் நிகழ்த்திய இரு பிரசங்கங்களில் ஆட்சேபகரமான விஷயங்கள் கலந்திருப்பதாகக்காரணம் காட்டி சிவாவின் மீது அரசாங்கம் வழக்குத்தொடர்ந்தது.

செப்டம்பர் 11:

திருவல்லிக்கேணியில் 'சிவம்' தான் தங்கியிருந்த இருசப்ப கிராமணிதெருவிற்கு அருகாமையிலுள்ள விளையாட்டு மைதானத்தில் ''கவி பாரதியாரின் நினைவு நாளை'' வெகு சிறப்பாகக் கொண்டாடினார்.
அக்டோபர் - நவம்பர்
சென்னை எழும்பூர் கோர்ட்டில் சிவம் ''போல்ஸியம்'' என்பதைப்பற்றி விவாதித்தார். மீண்டும் கைதாகி ஜாமீனில் வந்து வழக்காடினார்.

1925 ஏப்ரல்:

சிவம் ஈரோடு, பவானி, உடுமலைப்பேட்டை, தாராபுரம், பழனி, திண்டுக்கல், சோழவந்தான் மார்க்கமாக மாட்டுவண்டிகளில் பிரயாணம் செய்து மதுரையை வந்தடைந்தார். இச்சமயம் அவருடைய உடல்நிலை சரியில்லாமல் அவதிப்பட்டார்.

1925 மே:

மதுரையில் ''இந்தியாவின் சுதந்தர யுத்த தினம்'' கொண்டாடினார்.

1925 ஜூலை 22:

சிவாவின் உடல்நிலை மிக மோசமாகிவிடவே மதுரையிலிருந்து, பாப்பாரப்பட்டியைஅடுத்த பாரத புரத்திற்குத் தமது ஆப்த நண்பர் திரு. சுந்தரபாரதியுடன் வந்து சேர்ந்தார்.
ஜூலை 23:

பாரத நாட்டின் சுதந்தரத்திற்காகத்தன்னையும் தன் வாழ்நாளையும் அர்ப்பணித்துக் கொண்ட சுப்பிரமணியசிவம் 1925 ஜூலை 23 வியாழக்கிழமை விடியற்காலை 5 மணிக்கு மறைவெய்தினார். அப்போது அவருக்கு வயது 41.

ஆதாரங்கள்:

சுதேசமித்திரன்; ஹிந்து; தினமணி; சிவா குடும்பத்தைச் சேர்ந்த திரு.சபாபதி சர்மாவின் குறிப்புகள்; இந்திய-சோவியத் கலாச்சாரக் கழகம் அரூர், வெளியிட்டுள்ள ச.ரா. இராமாநந்தன் தொகுத்த ''சிவாவின் கடிதங்கள்'', ஆவணக்காப்பக வெளியீடான, 'Tinnevelly Riots Conspiracy And Ashe Murder' நூல் குறிப்புகள்).

பொது நம்பகங்களும் அறக்கட்டளைகளும்

ஆசிரியர்: சோ. சேசாசலம், பி.ஏ., பி. எல்.

வெளியீடு : சபாநாயகன் பதிப்பகம்

கிடைக்குமிடம்: புனிதா இல்லம், சி. 413, பெரியார் நகர் சென்னை-600 082.

விலை ரூ. 7. பக்கம் : 176

'அறஞ்செய விரும்பு' என்று ஔவைப் பாட்டி அறிவுரை பகர்ந்த காலத்திற்கு முன்பிருந்தே தர்ம கைங்கர்யங்களில் ஈடுபடும் பழக்கம் - பண்பு தமிழகத்தில் இருந்து வருகிறது. அகில இந்திய அளவில் ஆய்ந்து பார்த்தால்-வேதகாலத்திலேயே அறக்கொடைகள் இருந்து வந்துள்ளன. பிறருக்கு உதவ வேண்டும் என்ற பெருநோக்கத்தாலும், பாவத்தைப் போக்க வேண்டும் என்ற பயத்தாலும் அறக்கொடைகள்-அறக்கட்டளைகள் உருவாக்கப்பட்டன.

அறக்கட்டளைகளும் பொது நம்பகங்களும் எவ்வாறு உருவாகின என்பதை ஆய்வு முறையிலும் - அவற்றைப் பாதுகாப்பதற்குரிய வழி முறைகள் - சட்ட ரீதியான அனுமதிகள் ஆகியவை குறித்தும் விரிவாக எளிய இனிய நடையில் இந்நூலாசிரியர் எழுதியிருக்கிறார்.

'இந்து சமயம் மற்றும் அற நம்பகங்களைப் பற்றிய முழுமையான ஒரு சட்டத் தொகுப்பை-இதுவரை இந்திய நாடாளுமன்றம் மேற்கொள்ளவில்லை' என்று நூலாசிரியர் தெரிவித்திருப்பதிலிருந்து-தான் எடுத்துக்கொண்ட பொருளைக் குறித்து - மிக நுட்பமாக அவர் ஆய்வு செய்துள்ளமை புலப்படுகிறது.

மடங்களும் மகந்த்களும் செயல்படுவதற்குரிய விதி முறைகள், நம்பகங்கள் அமல்படுத்தப்படும் முறைகள் ஆகியவை குறித்தும் விரிவாகத் தெரிவித்திருக்கிறார்.

இந்து சமயக் கட்டளைகள் பற்றி மட்டுமின்றி முகம்மதிய சமயக் கட்டளைகள் பற்றியும் எழுதியுள்ள நூலாசிரியர், கட்டளைகளுக்கும் இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கும் உள்ள தொடர்பையும் - தொடர்பில்லா நிலையையும் படிப்போர் மனத்தில் பதியும்படி தெரிவித்திருக்கிறார்.

நூலாசிரியர் ஒரு வழக்கறிஞரின் நெறி நின்று பல்வேறு மாநில நீதிமன்றங்களில் நடைபெற்ற வழக்குகளைச் சான்று காண்பித்திருப்பது சுவையாக உள்ளது.

சட்டக் கல்வியைத் தமிழில் படிக்க விரும்பும் ஆர்வலர்களுக்கு இந்நூல் நல்வழி காட்டியாக விளங்குகிறது என்று சொல்லலாம்.

—எஸ். எஸ். சுந்தரம்

அண்ணாவின் கதை இலக்கியம்

ஆசிரியர்: டாக்டர் இரா.சேது

வெளியீடு: பூம்புகார் பிரசுரம், 63 பிராட்வே, சென்னை-108

விலை : ரூ.15-90 பக்கம் : 336

"20 ஆம் நூற்றாண்டுச் சமுதாய மறுமலர்ச்சிக்கு அண்ணாத்துரையின் சிறுகதை, புதினங்களின் கொடை" என்னும் தலைப்பில் ஆய்வு செய்து, டாக்டர் பட்டம் பெற்ற இந்நூலாசிரியர் தமது ஆய்வு நூலை 'அண்ணாவின் கதை இலக்கியம்' என்ற தலைப்பில் நூலாக வெளிவரச் செய்திருக்கிறார்.

அண்ணா அவர்கள் சிறந்த சிறுகதை ஆசிரியர் - புதின ஆசிரியர் என்பதும் - சமுதாய சீர்திருத்த நோக்கத்தில் தமது எழுத்தோவியங்களை உருவாக்கினார் என்பதும் உலகறிந்த செய்திகள். ஆனால் அவை ஆய்வு முறையில் -சான்றுகளுடன் தெரிவிக்கப்படும்போது நமக்கு பிரமிப்பு ஏற்படுகிறது.

சிறுகதைகளிலும், புதினங்களிலும் அண்ணா தெரிவித்துள்ள சமுதாய சீர்திருத்தக் கருத்துக்கள் - பெண் உரிமை பேணப்படல் வேண்டும் என்ற கொள்கை ஆகியவற்றை மிக நுட்பமாக ஆய்வு செய்து தெரிவிக்கிறார் நூலாசிரியர்.

கலை கலைக்காகவே என்று பொதுவாகச் சிலர் சொல்வதுண்டு. ஆனால் கலை மக்களுக்காக என்ற புதிய கொள்கை அண்மைக்காலத்தில் ஏற்பட்டுள்ளது. அதைப் போலவே கதை - பொழுது போக்கிற்காக என்று சிலர் கருதுவதுண்டு; ஆனால் கதை - போதனை புரிவதற்காக என்பதைத்தான் உலகு ஒப்புக் கொள்கிறது. சீர்திருத்த நோக்கம் இல்லாத கதைகளில் கூட - அன்பின் வலிமை - நட்பின் உயர்வு போன்ற ஏதேனும் ஒரு கொள்கை - நீதியாகச் சொல்லப்படுவதுண்டு. எனவே கதை கதைக்காக மட்டுமல்ல -போதனைக்காக! இந்தக் கொள்கை அண்ணா அவர்களின் நெஞ்சில் வேரூன்றியுள்ள செய்தினய ஆய்வு முறையில் நூலாசிரியர் தெரிவித்துள்ளார்.

கதைகளின் உட்பொருளில் மட்டுமல்ல - தலைப்புகளில் கூட அண்ணா பல்வேறு உத்திகளைப் புகுத்தியுள்ளார் என்பதை நூலாசிரியர் தெளிவாக்கியிருக்கிறார். பாத்திரங்களுக்கு அவர் சூட்டும் பெயர்களின் பொருத்தம் குறித்தும் வியந்து போற்றியிருக்கிறார்.

சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களை அடிப்படையாக வைத்து அண்ணா கதைகளை எழுதியமைக்குரிய காரணங்களையும் பின்புலங்களையும் ஆய்வு செய்யமுற்பட்ட நூலாசிரியர் - தமிழகத்தின் இரு நூற்றாண்டு வரலாற்றைப் படிப்போரின் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறார்.

பல மொழிகளில் தோன்றிய மறுமலர்ச்சிகளையும் தமிழ்இலக்கியத்தில் ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சியையும் ஒப்பியல் முறையில் எடுத்துக் காட்டி, அண்ணா அவர்களால்தான் அந்த மறுமலர்ச்சி தமிழ் இலக்கியத்தில் ஏற்பட்டது என்பதைச் சான்றுகளுடன் நிறுவியுள்ளார்.

அண்ணா - கதையை எப்படித் தொடங்குகிறார், எப்படி முடிக்கிறார் என்பது குறித்தும்சொல்லியுள்ள ஆய்வுரை - படிப்போர்க்கு இன்பம் பயக்கிறது. அண்ணாவின் கதைகளில் 60 விழுக்காடு பின்னோக்கு முறையிலே அமைந்துள்ளன என்பதையும் விளக்கியுள்ளார். அண்ணாவின் எழுத்து நடை, காலத்திற்கேற்ப மாறி வந்துள்ள செய்தியைப் படம் பிடித்துக் காட்டுகிறார். மொத்தத்தில் அண்ணாவின் கதை ஆற்றலையே ஓர் ஓவியமாக்கியுள்ளார் நூலாசிரியர் என்று கூறலாம்.

அண்ணாவின் கதைகள், கட்டுரைகள். மேடைப் பேச்சு ஆகியவற்றிலிருந்து பற்பல நறுக்குகளை ஆங்காங்கே கொடுத்திருக்கும் நூலாசிரியர், பற்பல நூலாசிரியர்களிடமிருந்து மேற்கோள்களைக் காட்டியிருப்பது பாராட்டுக்குரியது.

பின் இணைப்பு என்ற பகுதியில் அண்ணாவின் சிறுகதைகள் புதினங்கள் - நூல்கள் ஆகியவற்றின் பட்டியல்களை விரிவாகத் தொகுத்து வெளியிட்டிருப்பது பயனுள்ள - பாராட்டுக்குரிய பணியாகத் திகழ்கிறது. நூலாசிரியரின் உழைப்பு - பக்கத்துக்குப் பக்கம் காட்சி தருகிறது. இனிய நடை நூலுக்கு மேலும் சிறப்பூட்டுகிறது.

சொர்க்கத்தில் இயேசுவின் சீடர்கள் (ஒரு பேட்டி)

ஆசிரியர் : மா. சேஷையா

வெளியீடு : மாணிக்கம் பதிப்பகம், 73, மந்தைவெளித் தெரு, சென்னை-600 028

விலை ரூ. 20 பக்கம் 216

இயேசுவின் சீடர்கள் பன்னிருவரில் ஒருவரை நீக்கி ஏனைய பதினொருவரின் வாழ்க்கை வரலாற்றை இந்நூல் தெரிவிக்கிறது.

வாழ்க்கை வரலாற்றைக்கட்டுரையாக வழங்கும் பாணியிலிருந்து விலகி பேட்டி முறையில் எழுதியிருக்கும் புதிய உத்தி, சுவை நல்குகிறது.

பல்வேறு அரிய தகவல்களையும் செய்திகளையும் ஆங்காங்கே உரையாடலின் வாயிலாகத் தெரிவித்திருக்கிறார் நூலாசிரியர். இயேசுவின் சீடர் பன்னிருவரில் மூன்று ஜோடிப்பேர் சகோதரர்கள் என்னும் செய்தி இதுவரை சாதாரணமாகப் பலரும் அறிந்திராத செய்தி ஆகும்.

பைபிள் என்னும் வேத நூலின் கருத்துக்களையும், இயேசுவின் பொன் மொழிகளையும் இந்நூலில் பற்பல இடங்களில் வழங்கியிருக்கிறார் நூலாசிரியர். கிறிஸ்துவ சமயத்தைச் சாராதவர்களும் விரும்பிப் படிக்கும் வகையில் 'மதப்பிரச்சாரமின்றி அருட் செயல்கள் குறித்தே இந்நூல் எடுத்தோதுகிறது. இனிய எளிய நடை நூலின் தனிச் சிறப்பாகும், வரலாற்று நிகழ்ச்சிகளையும் புராணம் எனக் கருதப்படும் பழைய நிகழ்ச்சிகளையும் படிப்போர் மனத்தில் பதியும்படி எழுதியிருக்கும் நூலாசிரியர் பாராட்டுக்குரியவர்.

— தமிழ்ப்பித்தன்

மலரும் பூக்கள்

ஆசிரியர் : ரா. பொன்ராசன்

வெளியீடு : பாவலர் இல்லம், குன்றக்குடி-623 206

விலை : ரூ. 5. பக்கம் 68

நாளைய தலைமுறைகளான இன்றைய குழந்தைகள் ஆடிப்பாடி மகிழ்வதற்கேற்ற எளிய இனிய பாடல்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

முதல் எதிரி சோம்பல், அதை மறந்து விடாதே அறிவிருப்

தமிழ்நாட்டில் 83 புதிய தொழில் நிறுவனங்கள்

1984 மே மாதத்தில் தமிழ்நாட்டில் பொதுத்துறை நிறுவனங்கள் 11, தனியார் நிறுவனங்கள் 72 தொழில் தொடங்குவதற்குப் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றின் மூலதனங்கள் முறையே ரூ. 363 லட்சம், ரூ. 686.51 லட்சம் ஆகும். பொதுத்துறை நிறுவனங்களில் ஒன்று ஏறக்குறைய ரூ 150 லட்சம் முதலீட்டில் தொடங்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

-இந்தியப் பத்திரிகைத் தகவல் அலுவலகம்

போன் உழைப்பதற்குப் பயப்படமாட்டான்-எந்தச் சூழல் இருந்த போதும் சிறந்த மனிதர் தங்கள் இதயத்தாலே உயர்ந்து நிற்பர் என்பன போன்ற கருத்துக்கள் ஒவ்வொரு பாட்டிலும் உள்ளன.

மொத்தம் 42 பாடல்கள் உள்ளன. எல்லாப் பாடல்களுமே கவிஞரின் குழந்தை உள்ளத்தைப் பிரதிபலிக்கின்றன. பள்ளிக் குழந்தைகள் படித்துப் பயன்பெற வேண்டிய நல்லநூல், இந்த மலரும் பூக்கள்.

ஒன்று நீ ஒன்றே ஒன்று

ஆசிரியர் : கவிஞர் முருகுவண்ணன்,

வெளியீடு : தமிழ் நெறி மன்றம் 8, துளசிங்க முதலி தெரு, சென்னை-600 011,

விலை : ரூ 2 பக்கம் : 28

ஒன்று எனத் தொடங்கி ஒன்றே என முடியும் இந்நூலில், 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற திருமூலர் வாக்கினை நினைவுபடுத்தும் வண்ணம் 'ஒன்று நீ ஒன்றே ஒன்று' என்று தத்துவக் கருத்துக்களை இலைமறை காய் போன்று இனிய நடையில் எடுத்தியம்புகிறார், கவிஞர்.

இந்நூலுக்குப் பன்மொழிப் புலவர் கா.அப்பாத்துரையார், திரு நா.நா. முருகவேள் மற்றும் பல அறிஞர் பெருமக்கள் அணிந்துரை நல்கியுள்ளனர்.

— பி.வி.ஜி.

சுப்பிரமணிய சிவம் எழுதிய நூல்கள்

- சச்சிதானந்த சிவம்
- மோக்ஷ சாதன ரகஸ்யம்
- ராமாநுஜ விஜயம்
- சங்கர விஜயம்
- ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் சரித்திரமும் உபதேசங்களும்
- விவேகானந்தரின் சரித்திரமும் உபதேசங்களும்
- கெட்டாஜி வீரத்தின் பதிப்பிரபு
- அருள் மொழிகள்
- வேதாந்த ரஹஸ்யம்
- பக்தி நிதி [illegible]

நுழைவுத் தேர்வுமுறையே சிறந்தது!

ஆ. சட்டநாதன்
பிற்பட்டோர் நலக் குழுவின்
முன்னாள் தலைவர்

நுழைவுத் தேர்வு, நகர்ப்பகுதிகளில் வாழும் மாணவர்களுக்கும் உயர் சாதி மாணவர்களுக்கும் மட்டுமே பயன்னிக்கும்; கிராமப் பகுதிகளில் வாழும் மாணவர்களுக்கும், பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கும் பயனளிக்காது என்று கூறப்படுகிறது. மாதிரி (Sample Survey) அடிப்படையில் உரிய முறையில், மாணவர்களின் கருத்தைக் கேட்டறிந்தால் கூட மேற்கூறிய இக்கண்டனம் தவறான வாதமாகும் என்பது வெளிப்படையாகத் தெரியவரும்.

ஐம்பது ஆண்டுகளாகத் தேர்வுகளின் வாயிலாகவும் நேர்முகத் தேர்வுகளின் வாயிலாகவும் மாணவர்களைத் தேர்ந்தெடுத்ததன் மூலம் பெறப்பட்ட அனுபவத்தைக் கொண்டு பார்த்தால், நன்முறையில் நடத்தப்படும் தேர்வு முறையானது, மாணவர்களின் திறமையைச் சோதிப்பதற்கு, நேர்முகத் தேர்வு முறையைக் காட்டிலும் சிறந்த முறையாகும் என்று நான் கூறுவேன்.

நேர்முகத் தேர்வில், தேர்வு நடத்துபவர்கள் மாணவர்களின் திறனைப் பல கோணங்களிலிருந்தும் மதிப்பிடுகின்றனர். தேர்வு நடத்துவோரில் ஒருவர் செய்த மதிப்பீட்டிற்கும், பிறிதொருவர் செய்தமதிப்பீட்டிற்கும் இடையே 50%முதல் 80% வரை மதிப்பெண்களில் வேறுபாடு காணப்படுகிறது. இத்தகைய இனங்களில் ஒரு நியாயமான முறையைக் கடைப்பிடிப்பது, நாம் கருதுவதற்கு மாறாக மாணவர்களுக்கு அதிக அளவில் பாதகம் விளைவிக்கலாம்.

நேர்முகத் தேர்வு நடத்துவோர் குழுவில் அங்கம் வகிப்போரைத் தனித்தனியாகவும் மொத்தமாகவும் பணம், சலுகை, அரசியல் செல்வாக்கு, சொந்த சாதி உணர்வு ஆகியவற்றால் ஈர்த்து விடலாம். நேர்முகத் தேர்வில் அளிக்கப்படும் மதிப்பெண்கள் ஒருசில மாணவர்களுக்கு உயர்த்தப்படுகின்றன என்பதும் எழுத்துத் தேர்வில் நன்முறையில் எழுதிய, நன்முறையில் நடத்தப்படும் நேர்முகத் தேர்வில் நன்முறையில் பதில் அளித்த மாணவர்களுக்குங்கூட பாதகம் விளையும் அளவிற்கு ஒரு சில மாணவர்களுக்கு ஆதரவு காட்டப்பட்டுள்ளது என்பதும் பொதுவான கண்டனமாகும்.

நேர்முகத் தேர்வுக் குழுவில் இடம் பெறும் உறுப்பினர்களில் ஒருவர் அல்லது இருவர் ஒரு மாணவருக்கு ஆதரவு அளிப்பது என்று தீர்மானித்திருந்தால் அம்மாணவருக்கு அதிக மதிப்பெண்களை அளிக்கலாம். அல்லது ஒரு மாணவருக்கு ஆதரவு காட்டக் கூடாது என்று தீர்மானித்துவிட்டால் தொடக்கத்திலேயே கடினமான கேள்விகள் ஒன்றிரண்டைக் கேட்பதன் மூலம் அம்மாணவரை அதைரியப்படுத்தி அவருக்கு அதிக மதிப்பெண்கள் அளிக்காமல் இருக்கலாம் என்பதை என்னுடைய சொந்த அனுபவத்திலிருந்து உறுதியாகக் கூறுகிறேன்.

பொதுவாக கிராமப் பகுதிகளைச் சேர்ந்த அல்லது பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு நேர்முகத் தேர்வின் போது பல இடர்ப்பாடுகள் உள்ளன என்பதைக் கருதிப் பார்க்க வேண்டும். இம்மாணவர்கள், நகர்ப்பகுதிகளையும் உயர் சாதியையும் சேர்ந்த மாணவர்களைப் போன்று தங்களுடைய தோற்றம் (Personality) முதலிய தனிப்பட்ட இயல்புகளை வளர்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள். அம்மாணவர்களின் பொது அறிவு சராசரியாகக்குறைவாகவே இருக்கும். அம்மாணவர்கள் தங்களது கருத்தை வெளியிடும், அதிலும் குறிப்பாக ஆங்கிலத்தில் வெளியிடும் திறன் மிகவும் குறைவே. தொழில் நுட்பப் பாடங்களில் கூட இம்மாணவர்களின் அறிவு, புத்தகங்களின் வாயிலாகப் பெற்ற அறிவுதான். இவர்கள் நேரடியாகக் கவனிப்பதன் மூலமும் அனுபவத்தின் மூலமும் அறிவு பெற அதிக வாய்ப்பில்லை. சாதாரணமாக இம்மாணவர்கள் ஏனைய மாணவர்களைக் காட்டிலும் மிகவும் பயந்த சுபாவம் உடையவர்களாவர். இக்குறைபாடுகளைத்தேர்வு நடத்துவோர் கருணையுடன் அணுகவேண்டுமென்று எதிர்பார்ப்பது முறையானதுமல்ல; நேர்மையானதுமல்ல; இதுதான் ஊழலுக்கு வழி வகுக்கிறது.

சரியான விடையைக் கண்டறியும் முறை (Objective Type) யிலான தேர்வுத் தாள்கள் முக்கியமாக மேல்நிலைப்பள்ளித் தேர்வுக்குரிய பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கலாம். ஆனால், கிராமப் பகுதிகளைச் சேர்ந்த, பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களிடையே காணப்படும் குறையை நிவர்த்தி செய்ய கிராம, உயிரியல், தொழில்நுட்ப வியல், வேளாண்மை ஆகியவை குறித்து அவர்கள் எந்த அளவிற்குத் தெரிந்துள்ளார்கள் என்பதைச்சோதிக்க அவை குறித்துச் சில கேள்விகளைக் கேட்கலாம்.

தேர்வு முறையானது இயன்ற அளவிற்குத் தெளிவாக இருக்க வேண்டும். அளிக்கப்பட்ட தகவலை அடிப்படையாகக் கொண்டே 'கணக்கிடுபொறி' அட்டவணையிடப்பட்ட தேர்வு முடிவுகளை அளிக்க இயலும். பிறிதொரு விடைத்தாளை அளிப்பதன் மூலம் தேர்வு நடத்துபவர்களை வசப்படுத்துவது அல்லது கணக்கிடு பொறிக்கு இறுதியாக அளிக்கப்படும் தகவலைத் தயாரிக்கும் எழுத்துப் பணியாளரை வசப்படுத்துவது என்ற முறையின் மூலம் மட்டுமே இத்தேர்வு முறையில் தலையிட முடியும். இத்தகைய தலையீடு ஏற்படாவண்ணம் உறுதி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

Licence No. TN/MS(C)/PP-23
பதிவு எண். M. 8676


1-8-1984 75 நயா.

காமராஜர் மாவட்டம்

கர்மவீரர் காமராசரின்பிறந்த நாளான 15.7.84 அன்று, அவர் பெயரால் அமைந்திடும் 'காமராசர் மாவட்டம்' அமைப்புப் பணிகளின் தொடக்கவிழா சிறப்புற நடைபெற்றது.

காமராசர் பிறந்த ஊரான விருதுநகரில் உள்ள கே.வி.சாலா உயர்நிலைப்பள்ளிவிளையாட்டுத் திடலில், தியாகி சங்கரலிங்கனார் அரங்கில் இவ்விழா தமிழக அரசின் சார்பில் நிகழ்வுற்றது.

விழாவையொட்டி - விருதுநகர் இது வரை இல்லாத அளவிலே விழாக்கோலம் பூண்டிருந்தது. எங்கு பார்த்தாலும் பல வண்ணக் கொடிகள் பகந்தளிர்த்

தோரணங்கள், வண்ண விளக்குச் சரங்களாலேயே வகையுற அமைக்கப்பட்டிருந்த அலங்கார வளைவுகள், வாழ்த்துச் சுவரொட்டிகள் காணப்பட்டன.

'சத்துணவளிக்கும் சரித்திர நாயகனே வருக!'... 'குடும்பத்திற்கு ஒரு வீடுதரும் புரட்சித் தலைவரே வருக!'..'முதியோர்க்கும் உணவுதரும் முதல்வரே வருக!'.. 'அண்ணாவின் இதயக் கனியே வருக!'...'தன்னிறைவுத் திட்டம் கண்ட தலைவரே வருக!' -என்பன போன்ற வாசகங்கள் கொண்ட பதாதைகள் பல, விருதுநகரெங்கும் வீதிக்கு வீதி கட்டப்பட்டிருந்தன.

மேதகு தமிழ்நாடு ஆளுநர், திரு. எஸ்.எல்.குரானா, மாண்புமிகு முதல்வர் டாக்டர் திரு.எம்.ஜி.ஆர்., மாண்புமிகு இந்தியப் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ஆர்.வெங்கட்ராமன், ஆகியோர் பங்கேற்றுச் சிறப்பித்த 'காமராசர் மாவட்டம்' அமைப்புப் பணிகள் தொடக்க விழா-காமராசர் பிறந்த நாள் விழா அன்று காலை 9 மணியளவில் விருதுநகர் தனுஷ்கோடி குழுவினரின் நாயன இசையோடு தொடங்கியது.

அதைத் தொடர்ந்து-ஏழைகளின் தோழர், பாட்டாளிகளின் கூட்டாளி, பச்சைத் தமிழர் என்றெல்லாம் புகழப்பெற்ற காமராசரின் வாழ்க்கை வரலாற்றுச் சம்பவங்களை விளக்கும் வில்லுப்பாட்டு இசை நிகழ்ச்சியும் நடை பெற்றது. இதில் பங்கேற்ற சிவகாசி காந்திமதி, இராணி, ஈஸ்வரி குழுவினர் தம் திறமையால் பார்வையாளர்களாலே பெரிதும் கவரப்பட்டனர்.

காமராசரின் வாழ்விலே நடந்த சம்பவங்களை உலகறியச் செய்யும் 'பெருந்தலைவர் காமராசர் வாழ்க்கை வரலாற்றுப் புகைப்படக் கண்காட்சி'யொன்றை, இவ்விழாவை யொட்டி, மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. செ.அரங்கநாயகம் திறந்து வைத்தார்.

செய்தித்துறை துணை இயக்குநர் திரு.வி.டி.வீரப்பன் முன்மொழிய மக்கள் தொடர்பு அலுவலர் திரு. சு.மீ. சண்முகசுந்தரம் வழிமொழிய- மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ.அரங்கநாயகம் தலைமையில் கருத்தரங்கம் தொடங்கியது.

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.எஸ்.குருமூர்த்தி இ.ஆ.ப., வரவேற்புரையாற்றினார். அப்போது அவர், ''72 ஆண்டுக்கால மாக இருந்துவரும் இராமநாதபுரம் மாவட்டம் பிரிக்கப்படுவது நிர்வகிப்பை எளிதாக்கி, இப்பகுதி மக்களை ஏற்றம்பெறச் செய்யும் பொருட்டேயாகும்'' என்று குறிப்பிட்டார்.

விழாத் தொடக்கவுரையாற்றிய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எச்.வி. ஹண்டே: ''காமராசரைப் போன்ற ஒரு தலைவர் தோன்றியிராவிட்டால் தமிழகம் மட்டுமல்ல; இந்தியாவே பல சங்கடங்களைச் சந்திக்கவேண்டியிருந்திருக்கும். சென்னை மாகாணப் பிரிவினையின் போது, நிஜலிங்கப்பா பிரகாசம் போன்ற டில்லியில் இருந்த தலைவர்களெல்லாம் ஒன்றும் புரியாமல் விழித்தபோது தக்க வழிகளைச் சொல்லிப் பேருதவி புரிந்த பெருமை காமராசருடையது. தமிழகம் தொழில் வளம் மிகுந்ததாக இருக்க அவர் பெரு முயற்சி எடுத்துக்கொண்டார். இந்தியப் பிரதமர்களாக இருவர் பதவிபெற அவரே மூல காரணமாக இருந்தார். இப்படிப்பட்ட பெருந்தலைவர் காமராசர் பெயரால் இந்த மாவட்டம் அமைக்கும் மாண்புமிகு தமிழக முதல்வரை நாடே வாழ்த்து

கிறது'' என்றெல்லாம் கூறிப் பாராட்டினார்.

'மக்கள் நோக்கில் காமராசர்' என்ற பொதுத்தலைப்பில்நடந்த கருத்தரங்கில் - 'செயல்வீரர்' என்ற தலைப்பில் பேசிய திரு. ப.நமசிவாயம் - ''இந்த மாவட்டிலே பிறந்த ஒரு வியாபாரி, கண்ணியத்தையும் கட்டுப்பாட்டையும் நாணயத்தையும் அடக்க விலைக்கே விற்றுப் பெருமை கொண்டிருக்கிறார்; அவரே காமராசர். நேருவுக்குப் பிறகு இந்தியா சிதைந்து போகும் என்றெல்லாம் எழுதிய வெள்நாட்டுப் பத்திரிகையாளர்கள் வியக்கும்படி இந்தியாவைக் காத்த தனித் திறமையாளரான அவர் பெயரால் மாவட்டம் காணும் தமிழக முதல்வர், வரலாற்றிலே தனி இடம் பெறுகிறார்'' என்றார்.

'ஏழை பங்காளர்' என்ற தலைப்பின்கீழ் பேசிய திரு.செங்கோட்டை ஜனார்த்தனம் -''ஒரு கொள்கையைச் சரியாகப் பரப்ப வேண்டுமானால் முதலில் அதை நாமே கடைப்பிடித்துக் காட்ட வேண்டும் என்று கூறிய, காந்தியடிகளின் வழி நடந்தவர் காமராசர் அவரைத் தந்தையார் காமாட்சி என்று அழைத்தார். தாய் காமராஜ் என்று அழைத்தார்; நாடு கர்மவீரர் என்று அழைத்தது. தன்னலம் கருதாத அந்தத் தனிப் பெரும் தலைவனின் பெயரால், அவர் பிறந்த நாளான இன்று மலர்கிற இந்த மாவட்டம், அவருடைய புகழைக் காக்கும்; இதனை உருவாக்கும் தமிழ்நாடு முதல்வருக்கு மென்மேலும் பெருமை சேர்க்கும்'' என்று தன் உரையில் தெரிவித்தார்.

'நாட்டுப் பற்றில் உயர்ந்தவர்' என்னும் தலைப்பில் பேசுகையில் திருமதி அனந்தநாயகி குறிப்பிட்டதாவது: ''கடைசி வரை திருமணம் கூட செய்து கொள்ளாமல் இந்த நாட்டுக்காக உழைப்பதே தன்னுடைய இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்த தலைவர் காமராஜர். எங்களையெல்லாம் உருவாக்கிய அவர், தமிழகம் தொழில்துறையில் தலை நிமிரத் தட்டுப்பாடில்லாமல் மின்சாரம் வேண்டும்; நீர்ப்பாசனம் வேண்டும் என்று கண்டுபிடித்து அதன் அடிப்படையிலேயே திட்டங்களைத் தீட்டினார். அகில இந்தியாவிலேயே எங்கும் இல்லாதபடி பத்தாவது வரை இலவசப் படிப்புத் தந்து, சீருடை தந்து இந்த நாட்டிலுள்ள ஏழை எளிய மக்களைக் காத்த அவர் பெயரால் மாவட்டம் அமைவது தமிழினத்திற்கே பெருமை சேர்ப்பதாகும்.''

'பண்பாளர்' என்ற தலைப்பில் திரு. வலம்புரிஜான் எம்.பி.பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''விருதுபட்டி என்றிருந்த இந்த ஊரிலே விழுந்த விதை என்றாலும், விந்தியத்திற்கப்பாலும் தன் விழுதுகளை இறக்கியது. இத்தகைய பெருமை மிக்க காமராசர் பிறந்த இந்த ஊர் தான் பெயரிலேயே விருதைக் கொண்ட விருதுநகர் ஆயிற்று. எனக்கு எதையும் பேசப் பிடிக்காது; செய்யத்தான் பிடிக்கும் என்று அடிக்கடி கூறும் அவர் எதையும் சுருக்கமாகத்தான் பேசுவார். ஆனால் சுருக்கென்றதைக்கும் வித்தில் பேசும் சூத்திரம் தெரிந்தவராக இருந்தார். அவர் பேச்சில் பாதரசப் பள



பளப்போ வசந்தகால வசீகரமோ இருந்ததில்லை; உறுதி இருந்தது. உண்மை இருந்தது. அரசியல் பிரச்னைகளில் சிலபேர் வழுக்கிக் கொண்டே போவதைப் பார்த்து விளக்கெண்ணெய் கூட வெட்சப்படும்; 1931ல் முதன்முதலாக மேடையேறிப் பேசத் தொடங்கிய காமராசரோ, மனதில் பட்டதைப் பளீரெனச் சொல்லி விடும் பக்குவம் பெற்றிருந்தார். அவர் பெயரால் எடுக்கப்படுகிற இந்த விழா, கறுப்பு மலருக்கு ஒரு சிவப்பு ரோஜா சிறப்புற எடுக்கும் விழா!''

கருத்தரங்கின் முடிவாக, 'அரசியல் அறிஞர்' என்ற தலைப்பின் கீழ் திரு.ஆலடி அருணா எம்.பி. பேசியதாவது:

''தனக்கெனி வாழாத் தன்னிகரற்ற தலைவராம் காமராசர் பெயரிலே தனி மாவட்டம் அமைத்துப் பெருமை கொள்கிறது தமிழக அரசு. அவர் பெயரால் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் கண்ட பெருமையும் இந்த அரசுக்கு உண்டு. காட்சிக்கு எளியவராயிருந்த காமராசர், அரசியல் மேதை மூதறிஞர் என்றெல்லாம் பாராட்டப்பட்ட ராஜாஜியையே பல பிரச்னைகளில் வெற்றி கண்டவரென்றால், இது ஒன்றேபோதும் அவரது அரசியல் மேதையை அவனிக்கு உணர்த்த. ஜனநாயக சோஷலிசத்தில் பெரும் பற்றுக் கொண்டிருந்த அவர், தமிழ்நாட்டிலே மட்டுமல்ல; இந்தியாவிலே தனி மனித ஆதிக்கம் ஏற்பட்டு விடக் கூடாதென்பதில் கவனமாக இருந்தார். ஜனநாயகத்தைக் காத்தார். அவர் பெயரால் இன்று மலரும் இந்த மாவட்டம் எல்லா வளமும் பெற வாழ்த்துகிறேன்.''

மாண்புமிகு கல்வியமைச்சர் திரு.செ.அரங்கநாயகம் தமது தலைமை உரையிலே தெரிவித்த கருத்துக்கள் பின்வருமாறு:

''ஆளும் கட்சியைச் சேர்ந்தோர், எதிர்க்கட்சித் தலைவருக்கு விழா எடுப்பதென்பது, இந்த ஆட்சிக்கு முன்பு இருந்ததில்லை. இன்றைய அரசின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், இன்று மலரும் இந்தப் புதிய மாவட்டத்திற்கு பெருந்தலைவர் காமராசர் பெயரை வைக்கிறாரென்றால், இது இந்த அரசின் நாகரிகத்தை, அரசியல் பண்பாட்டைக் காட்டுவதாகும். ஒன்பதாண்டுக் காலம் தமிழக முதல்வராக இருந்த காமராசர் அவர்கள், ஏழைக்குக் கல்விக்கண் திறந்த ஏந்தலாக வாழ்ந்தார். காமராசரின் அத்தகைய நினைவுகளை - கனவுகளைச் செயல்படுத்தும் விதத்திலேதான், நடைமுறைப்படுத்தும் விதத்திலேதான் இன்னாரய தமிழக முதல்வர் அவர்களும் ஆட்சி நடத்தி வருகிறார் என்பதை உலகறியும். தமிழ்ச்சமுதாயம் ஏற்றம் பெறத் தன் வாழ்நாளையே அர்ப்பணித்த காமராசரின் புகழ் இந்த மாவட்டம் அமைவதன் மூலம் இன்னும் வளரும்-வலுப்பெறும்.''

— இவ்வாறு மாண்புமிகு கல்வியமைச்சர் பேசினார்.

காலை நிகழ்ச்சிகளின் முடிவில் செய்தித்துறை இயக்குநர் திரு. சி.என். கிருஷ்ணபாரதி இ.ஆ.ப. நன்றி கூறினார்.

மாலை நிகழ்ச்சிகள்:

காமராசர் மாவட்ட அமைப்புப் பணிகள் தொடக்க விழாவின் மாலை நேர நிகழ்ச்சிகள் 15.7.84 மாலை 3 மணியளவில் தொடங்கின.

சுப்பையா நாடார் அரசினர் மேல்நிலைப் பள்ளியிலிருந்து ஊர்க்காவல் படையினர், என்.சி.சி., சாரணர் மாணவ, மாணவியர் பங்கேற்ற மாபெரும் ஊர்வலமொன்று மாலை நிகழ்ச்சிகளின் முதல் கட்டமாகத் தொடங்கியது. கரக ஆட்டம் சிலம்பாட்டம் அலங்கார வண்டிகளெல்லாம் உடையதாகச் சீருடை அணிந்த சின்ன அரும்புகள் பல்லாயிரவர் நடத்திய அந்தச் சிங்கார ஊர்வலம் 4 மணியளவில், கே.வி. சாலா உயர்நிலைப்பள்ளி விளையாட்டுத் திடலில் அமைந்திருந்த தியாகி சங்கரலிங்கனார் அரங்கு வந்து சேர்ந்தது.

அதன் பின், கலைமாமணி திரு. நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன் குழுவினர் நாயன இசை மழை பொழியலாயிற்று.

7 மணியளவில் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம் வரவேற்புரையோடு புதிய மாவட்ட அமைப்புப் பணிகள் தொடக்க விழா - காமராசர் பிறந்தநாள் விழா நிகழ்ச்சிகள் தொடங்கின.

முதலாவதாகப் புதிய மாவட்ட அமைப்புப் பணிகள் குறித்த விவர அறிக்கையைத் தமிழக அரசின் தலைமைச் செயலர் திரு கு.சொர்கலிங்கம் இ.ஆ.ப. படித்தார்.

''மிகப் பெரிய மாவட்டமான இராமநாதபுரம் மாவட்டத்தை எப்படிப் பிரிப்பது, என்ன பெயர் வைப்பது என்று நாங்களெல்லாம் குழம்பிக்கொண்டிருந்த நேரத்தில், மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள்தான் இதை மூன்று

மாவட்டங்களாகப் பிரிக்கலாம் என்றும், காமராசர், ராமநாதபுரம், பசும்பொன்முத்துராமலிங்கம் பெயர்களை இந்த மாவட்டங்களுக்குப் பெயராக வைக்கலாமென்றும் ஆலோசனை கூறியுதவினார். இன்று இந்த மாவட்டம் அமைவதன் மூலம் இப்பகுதி மக்கள் தங்கள் குறைகளை-கோரிக்கைகளை - தேவைகளைத் தெரிவிக்க மாவட்ட ஆட்சித் தலைவரைத் தேடி வெகுதூரம் மதுரைக்குச் செல்லவேண்டிய தொல்லை அடியோடு நீக்கப்படுகிறது ''என்று மாண்புமிகு உணவமைச்சர் தமது வரவேற்புரையில் குறிப்பிட்டார். ''பச்சைத் தமிழர் என்று தந்தை பெரியாரால் போற்றப்பட்ட, கல்லூரி சென்று படிக்காவிட்டாலும், மக்களை-மக்கள் பிரச்னைகளை மிக நன்றாகப் படித்திருப்பவர் காமராசர் என்று பேரறிஞர் அண்ணாவால் பாராட்டப்பட்ட காமராசரின் பெயரை அவர் பிறந்த இம்மாவட்டத்திற்கு வைப்பது மிகப்பொருத்தமானது'' என்றும் அவர் தனது பேச்சில் குறிப்பிட்டார்.

பின்னர்-மேதகு தமிழக ஆளுநருக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு எஸ். குருமூர்த்தி இ.ஆ.பவும், சிறப்பு வருவாய் ஆணையர் திரு ஏ. பத்மநாபன் இ.ஆ.ப. மாண்புமிகு தமிழக முதல்வருக்கும், மாண்புமிகு இந்தியப் பாதுகாப்பு அமைச்சருக்கு மாவட்டத் தனி அலுவலர் திரு எல். என். விஜயராகவன், இ.ஆ.ப.வும் விழாக்குழு சார்பில் மாலைகள் அணிவித்தனர். மாவட்டப் பிரிவினை நினைவுப் பரிசுகள் வழங்கினர்.

விழாத் தலைமையேற்று மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு. திரு.எஸ்.எல். குரானா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''இந்தியாவின் மிகப் பெரிய தலைவர்களில் ஒருவரான காமராசரின் பெயரால் இந்த மாவட்டம் அமைவது வரவேற்கக்கது. எளிமையும் பெருமையும் உடைய காமராசர் இந்த விருதுநகரிலே பிறந்தாலும், சென்னையில் வளர்ந்து, டில்லிவரை சென்று தன் புகழை நிறுவியவர். அவர் சிறந்த தேசபக்தராகத் திகழ்ந்தார். காந்தியாரின் மென்மையும் படேலின் உறுதியும் நேருவின் திறமையும் அவருக்கிருந்தது.

''தொழில் வளம் மிக்கதாகத் தமிழகத்தை மாற்றிக் காட்டிய காமராசர் பெயரால் இந்த மாவட்டத்தை அமைத்துள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்களை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

''பெரிய மாவட்டங்களை இப்படிப் பிரித்து சிறிய மாவட்டங்களை உருவாக்குவதன் மூலம் எளிதில் மக்களோடு தொடர்பு கொண்டு அவர்கள் பிரச்னைகளைத் தீர்க்கமுடியும்; நிர்வாகச் சிக்கல்களும் நீங்கும். மிகப் பின் தங்கிய இந்த மாவட்டத்தின் வளர்ச்சிப்பணிகள் ஓங்கும். குறைபாடுகள் நீங்கும். அதற்காக இந்த அரசு பெரும் முயற்சி எடுத்துக் கொள்ளும் என்கிற நம்பிக்கை எனக்குண்டு.''

விழா மேடையில், கர்மவீரர் காமராசர் படத்தைத் திறந்து வைத்து, மாண்புமிகு இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் பேசுகையில் — ''மிகச் சிறந்த பல பண்புகளைப் பெற்றிருந்த காமராசரோடு முப்பதாண்டுக் காலத்திற்கு மேலாக நெருங்கிப் பழகியவன் நான். அவர் இந்த நாட்டுக்குச் செய்த தொண்டு சரித்திரத்திலே பொறிக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை. இந்த மாவட்டத்தைப் பிரிக்க அவர் முதல்வராயிருந்த காலத்திலேயே முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. என்றாலும் முற்றுப்பெறவில்லை. காமராசரின் எண்ணங்களை - திட்டங்களைச் சிறப்பாக நிறைவேற்றி வரும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் திரு எம்.ஜி.ஆர். அவர்களை நான் பெரிதும் பாராட்டுகிறேன் ''என்று குறிப்பிட்டார்.

அடுத்து காமராஜ் தேசியக் காங்கிரஸ் கட்சி சார்பில் பேசிய திருமகு ஏ.எஸ். பொன்னம்மாள் எம்.எல்.ஏ. ''இராமராஜ்யம் அமையவேண்டும் என்று காந்தியார் விரும்பினார். அதைச் செயல்படுத்த காமசாரர் முயன்றார். இன்று அந்த முயற்சி சிறப்புறச் செயற்படுத்தப்பட்டு வருவதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பாராட்டுகிறேன்'' என்றார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் உரையாற்றிய திரு. எஸ். ஏ. பெருமாள்-''இந்த மாவட்டப் பிரிவினை மூலம் நமது நீண்ட காலக்கனவு நிறைவேறி வருகிறது. எல்லாவிதச் சலுகைகளையும் பெற அரசு மேற்கொள்ளும் நற்காரியங்களுக்கு எங்கள் கட்சி துணை நிற்கும்'' என்று குறிப்பிட்டார்.

முற்போக்கு முஸ்லிம் லீக் கட்சி சார்பில் திரு.செங்கம் ஜப்பார், கிறிஸ்தவ ஐக்கிய நாயக முன்னணி சார்பில் திரு. பிரான்சிஸ் ரயான், திராவிடர் கழகம் சார்பில் திருவாரூர் திரு.தங்கராசு, சுதந்திர போராட்ட வீரர்கள் சார்பில் திரு தனுஷ்கோடி ராஜா, காமராஜ் காங்கிரஸ்சார்பில் திரு.கே. பாரமலை எம்.எல்.ஏ. இந்தியதேசியக் காங்கிரஸ் கட்சி சார்பில் திரு. பழநி யாண்டி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் பொதுச்செயலர் திரு. ப.உ. சண்முகம் ஆகியோர், காமராசர் மாவட்டம் துவக்குவதை வரவேற்று வாழ்த்திப் பேசினார்கள்.

காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு குமரி அனந்தன் எம்.எம்.ஏ., பேசுகையில்-''மறைந்த சரித்திர நாயகனின் பெயர் என்றும் மறையாதிருக்க வேண்டும் என்கிற கருத்திலே இந்தக் காமராசர் மாவட்டத்தை அமைத்துள்ள மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு எங்கள் மாவட்டத்தின் சார்பிலும், கட்சியின் சார்பிலும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்த மாணவர் தனிப்பயிற்சித் திட்டம் பெரிதும் வரவேற்கத்தக்கதாகும். பெருந்தலைவர் காமராசர் மட்டும் இன்று இருந்திருந்தால், ஏழை எளியவர்க்கு உதவும் இந்த மகத்தான திட்டத்தைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்திருப்பார்!'' என்றார்.

மாண்புமிகு சட்டமேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி. பேசியதாவது:

''பெருந்தலைவர் காமராசர், தொண்டராக இருந்து தலைவராகி, தலைவர்க்கெல்லாம் தலைவரானவர். அதேபோல் விருதுப்பட்டி என்ற இந்த ஊர், விருதுநகராகி, இப்போது காமராசர் மாவட்டமாக உயர்வடைந்திருக்கிறது. காமராசர் சந்நிதானத்தில் எல்லாக் கட்சித் தலைவர்களும் வந்திருக்கிறார்கள். இதிலே ஒன்றுபடாதவர் தமிழராக இருக்க முடியுமா?

''ராமநாதபுரத்தை இரு

மாவட்டங்களாகப் பிரிக்க எடுத்த முயற்சியில் காமராசர் தோற்று விட்டதாக இங்கே ஆர்.வி.பேசுகையில் குறிப்பிட்டார். அவராலேயே முடியாததைச் செய்த மாண்புமிகு தமிழக முதல்வரைப் பாராட்டுகிறேன். சரித்திரப் பிரசித்திபெற்ற இந்நிகழ்ச்சியில் பங்கேற்றதை என் வாழ்நாளில் நான் பெற்ற பெரும் பேறாகக் கருதுகிறேன்''.

காமராசர் மாவட்டம் அமைப்புப் பணிகளைத் தொடங்கி வைத்தும் மாணவர் தனிப்பயிற்சித் திட்டத்தைத் துவக்கிவைத்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் திரு.எம்.ஜி.ஆர். அவர்கள் விழாப் பேருரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது

''ஆட்சிப் பொறுப்பிலிருந்தாலும் சரி; கட்சித் தலைமை ஏற்றிருந்தாலும் சரி; எந்த ஒரு மனிதனும் தனிப்பட்ட வகையில் நிர்வாகம் பண்ணிவிட முடியாது. மக்கள் கூட்டம், அறிஞர் ஆதரவு, இளைஞர் எழுச்சி அத்தனையும் ஒன்றுபட்டால்தான் நாம் வெற்றி காணமுடியும். பெருந்தலைவர் காமராசர் வெற்றி அந்த வகையிலேதான் அமைந்தது.

''மூன்று நான்கு ஆண்டுகளுக்கு முன்னால், இராமநாதபுரம் மாவட்டப் பிரதிநிதிகள் என்னை வந்து பார்த்து இந்த மாவட்டம் பிரிக்கப்படவேண்டியது பற்றி வலியுறுத்தினார்கள்; பொறுமையாக இருங்கள் என்றேன், இப்போது பிரிக்கப்பட்டிருக்கிறது.

''ஒருவர் இருக்கும்போது கருத்துக் கூறுவது வேறு; அவர் மறைந்த பிறகு அவரைப் பற்றிச் சிந்தித்துப் பார்ப்பது வேறு. பெருந்தலைவர் காமராசர் மீது நான் பெருமதிப்பு வைத்திருந்தேன்; அவரும் என்னிடம் அன்பு காட்டினார். அவரைப்பற்றி நான் எப்போதாவது தவறாகப் பேசியிருந்தால், இங்கே மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.

''காமராசர் பெயரால் புது மாவட்டம் கண்டதற்காக இங்கே எல்லோரும் என்னைப் பாராட்டினார்கள்; பூவோடு சேர்ந்த நாரும் மணம்பெறும் என்பதைப் போன்றதே அது என்பதை உணர்கிறேன்.

''ஏழைகள் படிக்க வேண்டும் முன்னேற வேண்டும் என்றெல்லாம் கருதியவர் காமராசர்; ஆதலாலேயே அவர் பிறந்த இந்த நல்ல நாளில் மாணவர் தனிபயிற்சித் திட்டத்தைத் தொடங்கி வைத்தேன். தேர்வில் தோல்வி கண்ட மாணவர்கள் டுடோரியல் கல்லூரி சென்றால் அங்கே ஏராளமாகப் பணம் வாங்கப்படுகிறது. அதனால் அப்படிப்பட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் பொருளாதாரத்தில் பின் தங்கிய வகுப்பு ஏழை மாணவர்கள் இந்த மையத்தில் மீண்டும் படித்துத் தேர்ச்சி பெறலாம். இப்படி ஆயிரம் மையங்கள் திறக்கப்படும்; ஒவ்வொரு மையத்திற்கும் ரூ. 4,500 செலவிடப்படும்.

''காமராசர் இன்றிருந்தால் இத்திட்டத்தை வரவேற்று ஆனந்தக் கண்ணீர் வடிப்பார் என்று இங்கே தெரிவித்தார்கள். இதுவே எனக்குப் போதுமானது. இன்று புதிதாக மலரும் காமராசர் மாவட்டத்தின் வளர்ச்சிப் பணிகள் மிகவேகமாக நடைபெற விருக்கின்றன.''

— இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசினார்.

விழா முடிவில், வருகை தந்தோர்க்கு நன்றி தெரித்து மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு.இராம. வீரப்பன் அவர்கள் பேசுகையில் — ''இந்தப் புதிய மாவட்ட அமைப்பு விழாவில் 22 கட்சியைச் சேர்ந்தவர்கள் அழைக்கப்பட்டு பங்கேற்று உள்ளனர். அவர்களுக்கெல்லாம் நன்றி. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா இருவரது உள்ளமும் ஒருசேர அமையப் பெற்ற மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவர் அவர்களை இந்த நற்பணிக்காக நாடே பாராட்டிப் பெருமை கொள்கிறது; வாழ்த்தி மகிழ்கிறது'' என்று குறிப்பிட்டார்.

விழா மேடையில் காமராசரின் தமக்கையார் திருமதி நாகம்மையார் கவுரவிக்கப்பட்டார். அரசு அவருக்கு உதவிப் பணமாக மாதம் ஆயிரம் ரூபாய் அளிக்குமென அறிவிக்கப்பட்டது.

விழா நிகழ்ச்சிகளின் பின், நடனமணி சென்னை சித்ரா குழுவினரின் நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சித் தொகுப்பு :
இல. இராசேந்திரன்

பூத்து மணக்கும் சிவகங்கை

யோகி சுத்தானந்த பாரதியார்

மங்கள மான சிவகங்கை — இந்த
மாநிலம் போற்றும் சிவகங்கை
சிங்க மறக்குலத் தேவர் புரக்கச்
சிறந்து விளங்கும் சிவகங்கை!

புலவர் போற்றும் சிவகங்கை — யோக
புங்கவர் வாழ்த்தும் சிவகங்கை
கலை மணக்கும் சிவகங்கை — நல்ல
கல்வி செழித்த சிவகங்கை!

வையத்தில் வாழ்வாங்கு வாழும் வகையை
வகுத்த வள்ளுவக் கோட்டமிதே
கையிற் கனியென யோகவிஞ் ஞானத்தைக்
காத்தறி வூட்டும் சிவகங்கை! — அருள்
பூத்து மணக்கும் சிவகங்கை!

விசும்புயர் நேதாஜி வீரப் புகழினை
வீறிட்ட வீர மறவர் மணி
பசும்பொன் முத்துராம லிங்கமா வட்டமெனப்
பார்புகழ் ஓங்கிட வாழியவே!—சிவகங்கை
பைந்தமிழ் ஊற்றென வாழியவே!

[17-7-'84-ல் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் அமைப்பு விழாவில் பாடியது.]

இராமநாதபுரம் மாவட்டம்

இலை 16 ஆம் நாள் இராமநாதபுரம் நகரம் விழாக் கோலம் கொண்டிருந்தது. எங்கு பார்த்தாலும் தோரணங்கள்! பதாதைகள்! மக்களின் அகமும் முகமும் மலர்ச்சி பெற்றிருந்தன. புதையல் கிடைத்தது போன்ற மகிழ்வு அவர்களிடம் நிரம்பியிருந்தது. தலைநகரம் தங்களுக்குக்கிடைத்து விட்டதை எண்ணிப் பெருமகிழ்வு கொண்ட மக்கள் - சேதுபதி அரங்கில் நடைபெற்ற மாவட்ட அமைப்பு விழாவுக்கு வெள்ள மெனத் திரண்டு சென்றனர்.

அவர்களது ஆர்வத்தை,கொல் லங்குடி கருப்பாயி அம்மாளின் நாட்டுப் பாடல் முழக்கம் எதிரொலித்தது.

அதன் பின்னர் நடந்த இராம நாதபுரம் நடராசன் குழுவினரின் நாயன இசை நிகழ்ச்சி ஒரு புதிய சூழ்நிலையை உருவாக்கியது.

தமிழ்ப் பண்பாட்டுத் துறைச் செயலர் டாக்டர் ஔவை து. நடராசன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சி இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதன் மூலம் இந்தப் பகுதி மக்கள் எல்லையில்லா மகிழ்ச்சிஅடைகின்றனர்.''

தொல்பொருள் ஆய்வுத்துறையினர் உருவாக்கியிருந்த கண்காட்சியை மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் திறந்து வைத்தார். அவர் குறிப்பிட்ட தாவது:

''தென்பாண்டி நாட்டில்இராமநாதபுரம் புகழ் பூத்த பகுதியாகத் திகழ்ந்திருக்கிறது -திகழ்ந்து வருகிறது. வீரமும் விவேகமும் இந்த மண்ணில் பொங்கிப் பெருகியுள்ளன''.

கருத்தரங்கிற்குத் தலைமை ஏற்ற மாண்புமிகு முன்னாள் நீதிபதி திரு மு.மு. இஸ்மாயில் அவர்கள் தெரிவித்தார்:

''இராமநாதபுர மாவட்டம் தேசிய ஒருமைப்பாட்டில் சிறந்த மாவட்டம் ஆகும். சேதுபதி மன்னராக இருந்த இந்தப் பகுதியில் சீதக்காதி என்னும் முஸ்லீம் பிரமுகர் அவருக்கு நண்பராக அமைச்சராக - ஆலோசகராக இருந்திருக்கிறார்.''

'தமிழ் வளர்த்த சேதுபதி' என்னும் தலைப்பில் உரையாற்றிய திரு சோம. லெ. குறிப்பிட்டார் :

''சேதுபதிகள் தமிழ் வளர்த்தவர்கள் - தமிழை வளர்ப்பதில் சேதுபதிகளின் மனைவிகளுக்கும் பங்கு உண்டு. மதுரையில் 4 ஆம் தமிழ்ச் சங்கத்தைத் தொடங்கிய பாண்டித் துரைத் தேவர்,சேதுபதி குடும்பத்தைச் சேர்ந்தவர்.

''கவி பாரதி மதுரையில் வேலை பார்த்த பள்ளி, சேதுபதி மன்னர்களின் பள்ளி என்பது குறிப்பிடத்தக்கதாகும். தமிழ்ப் புலவர்களுக்கு சம ஸ்தானம் அளித்தனர்சேதுபதி மன்னர்கள்''

'வள்ளல் சீதக்காதி' என்னும் பொருளில் உரையாற்றிய டாக்டர் அப்துல்லா குறிப்பிட்ட தாவது :

''சேது நாட்டில் 7 ஆண்டுப் பஞ்சம் ஏற்பட்டபோது வீட்டில் உள்ள நெல்லை எல்லாம் அள்ளித் தந்தார் வள்ளல் சீதக்காதி. செத்தும் கொடை கொடுத்தார் சீதக்காதி என்று புகழ் பெற்றார். தனக்கென வாழாதவர் அவர்.''

'கலை வளர்த்த முகவை' என்னும் தலைப்பில் உரையாற்ற வந்த புலவர் கல்யாண சுந்தரம், 'தலைமை நகர் தந்த தனிநாயம்- தமிழ்நாட்டு' அமைச்சர்களின் முதல் நாயகம்' என்று மாண்புமிகு முதல்வரைப் பாராட்டும் பாடலுடன் தொடங்கி, மக்கள் மன்றத்தில் மகிழ்ச்சி அலையை உருவாக்கிவிட்டார்.

''சேதுபதி மன்னர்கள் நாடகக் கலையை வளர்த்தனர். மற்போர்க் கலையை வளர்த்தனர். இசைக் கலையை வளர்த்தனர்'' என்று குறிப்பிட்டார் அவர்.

அடுத்து, புலவர் முஸ்தபா உரையாற்றுகையில், ''இந்தப் பகுதி தேசிய உணர்வு மிக்கவர்கள் வாழ்ந்த பகுதியாகும். இங்கு புதிய புதிய தொழிற்சாலைகள் ஆயிரம் ஆயிரம் பெருக வேண்டும். அதற்கு அரசு துணை இருக்க வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

அடுத்து, 'வீரம் விளைந்த நிலம்' என்னும் பொருளில் உரையாற்றிய திரு ந.ரா. முருகவேள்,

''இயல்பாகவே வீரம் செறிந்த நாடு இது. அதனால்தான் இது மறவர் நாடு எனப் பெயர் பெற்றது'' என்று தெரிவித்தார்.

அடுத்துப் பேசிய திரு முனியாண்டி, 'இந்த மாவட்டம் மனித குலத்தின் சொர்க்கமாகத் திகழும் என்பது உறுதி' எனக் குறிப்பிட்டார்.

பிற்பகலில் ஊர்க்காவல் படை, என். சி. சி., சாரணர் படை, கிராமியக் கலைஞர்கள், பொது மக்கள் பங்கேற்ற ஊர்வலம் அன்ட்ரூஸ் பெண்கள் உயர் நிலைப் பள்ளியிலிருந்து புறப்பட்டு, நீதிமன்றத் திடலை அடைந்தது. மக்கள் எழுச்சியுடன் இந்த ஊர்வலத்தில்கலந்து கொண்டனர்.

பிற்பகல் 5 மணியளவில் தொடங்கப் பெற்ற ஷேக் சின்ன மௌலானா குழுவினரின் நாயன இசை, பொது மக்களின் உள்ளத்தில் மகிழ்ச்சியை நிறைத்தது.

அதன் பின், இராமநாதபுர மாவட்டம் அமைப்புப் பணிகள் தொடக்கவிழா தொடங்கியது. அமைப்புக் குறித்த அறிக்கையை திரு கு. சொக்கலிங்கம் இ.ஆ.ப. படித்தார்.

''இந்நாள், வரலாற்றில் ஒரு பொன்னாள்''என்று குறிப்பிட்ட அவர் - இராமநாதபுர மாவட்டத்தின் வளர்ச்சிப் பணிகள் பற்றிய புதிய திட்டங்களை எடுத்துரைத்தார்.

வரவேற்புரை ஆற்றிய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு, எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டார் :

''இராமநாதபுர மாவட்டத்து மக்கள் தங்களுக்கெனத் தலைநகரம் ஒன்று இல்லாமல் பல்லாண்டுக் காலமாகத் தொல்லைகளை அனுபவித்து வந்திருக்கிறார்கள். புதிய மாவட்டப் பிரிவினைகளின் வாயிலாக இந்தத் தொல்லைகள் நீங்குகின்றன.''

விழாவுக்குத் தலைமை ஏற்ற மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்:

''இன்று முதல் இராமநாதபுர மாவட்டம் வலிவு பெறுகிறது. இதன் மூலம் மாவட்டம் விரிவாக வளர - பரவலாக வளர- வளமாக வளர - வசதி ஏற்படுகிறது. மாவட்டங்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகள்இனி விறுவிறுப்பாகவும் - சுறுசுறுப்பாகவும் நடைபெறும்.

''1910-ஆம் ஆண்டுக்கு முன்னர் இராமநாதபுரம் மாவட்டம் இல்லை. மதுரை மாவட்டம் உண்டு; நெல்லை மாவட்டம் உண்டு; அவற்றில் இருந்து எடுத்த பகுதிகளைக் சேர்த்து உற்பத்தி செய்யப்பட்டதுதான் இராமநாதபுர மாவட்டம். அன்று வசதி குறுகி இராமநாதபுர மாவட்டம் உருவாகியது. இன்றும் வசதி குறுகி அது மூன்றாகப் பிரிக்கப் படுகிறது.

''மாவட்டங்கள் பிரிக்கப்பட்டால் ரத்த ஆறு ஓடும். பிணமலை குவியும்-பீரங்கி வெடிக்கும்-துப்பாக்கி பேசும் என்றெல்லாம் சொல்லப்பட்டது. அது போன்ற பிரச்சினைகள் ஏற்படாதபடி - ஒரு வம்புமில்லாமல் புரட்சித் தலைவர் முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் இராமநாதபுர மாவட்டத்தை மூன்று மாவட்டங்களாகப் பிரித்துள்ளார்.

''இராமநாதபுரத்தை சேதுபதிகள் பலர் ஆண்டிருக்கின்றனர். 1859 முதல் 1903-க்கு இடைப்பட்ட காலத்தில் ஆண்டவர் பாஸ்கர சேதுபதி ஆவார். அவர் தான் விவேகாநந்தரைஅமெரிக்காவுக்கு சமயப் பிரச்சாரம் செய்வதற்கு அனுப்பி வைத்தார். அது குறித்து விவேகாநந்தரே குறிப்பிட்டிருக்கிறார்.

''சேதுபதி மன்னர்கள், தமிழை வளர்த்தனர்; இசைக் கலையை வளர்த்தனர்; நாட்டியக்கலையை வளர்த்தனர்; வீரத்துக்கு மதிப்பளித்தனர். புலவர்களை ஆதரித்தனர்.''

அடுத்து உரையாற்றிய திரு ஆர். மார்க்கபந்து பேசுகையில் ''இத்தலை காலம் இரவல் தலைநகரைக் கொண்டிருந்த இந்த மாவட்டத்திற்கு இப்போதுதான் சுதந்திரம் கிடைத்திருக்கிறது- பின் தங்கிய சமுதாயத்திற்கு நன்மை செய்யக் கருதித்தான் இந்த மாவட்டப் பிரிவினைகள் நடைபெற்றிருக்கின்றன'' என்று குறிப்பிட்டார்.

தமிழ்நாடு முஸ்லீம் லீக் கட்சியைச் சேர்ந்த திரு செய்குதம்பி உரையாற்றுகையில், ''31 லட்சம் மக்கள் இந்த மாவட்ட அமைப்பினால் மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருக்கிறார்கள்'' என்று தெரிவித்தார்.

பின்னர், பாஸ்கர சேதுபதியின் திருவுருவப்படத்தை மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சி. திறந்து வைத்தார்.

இராமநாதபுர மாவட்டத்தின் பல்வேறு திட்டப்பணிகளை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். தொடங்கிவைத்தார்.

மாவட்ட வளர்ச்சிப் பணிகளுக்காக ரூ. 25 ஆயிரம் ரூபாய் நிதியை, சேதுபதி மன்னர் பரம்பரையைச் சேர்ந்த இந்திரா தேவி நாச்சியார், மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் அளித்தார்.

சீதக்காதி அறக் கட்டளையின் சார்பில் மாவட்ட வளர்ச்சிப் பணிக்காக 25 ஆயிரம் ரூபாயை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் அளித்தார் திரு ரஹ்மான்.

பின்னர், லெனின் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த கூத்தகுடி திரு எஸ். சண்முகம் உரையாற்றுகையில், குறிப்பிட்டதாவது:

''டாக்டர் என்ற பட்டம் பெற்றதற்கு ஏற்ப, நமது முதல்வர் அவர்கள் மாவட்டப் பிரிவினையை எந்த விதமான வேதனையும் இல்லாமல் முடித்து வைத்திருக்கிறார். வெள்ளையர் ஆட்சியில் 37 ஆண்டும், நம்மவர் ஆட்சியில் 37 ஆண்டும் கடந்த பிறகு இன்று இந்த மாவட்டம் தலைநகரைப் பெற்றிருக்கிறது.''

அடுத்து, இந்தியக் குடியரசுக் கட்சியைச் சார்ந்த திரு ஆ. சக்திதாசன் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

''மூன்று மாவட்டங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் உருவாக்கியிருப்பதன் வாயிலாக வேலை வாய்ப்புகள் பெருகுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது''

அடுத்து, நாடாளுமன்ற உறுப்பினர் திரு எம். எஸ். கே. சத்தியேந்திரன் உரையாற்றும் போது குறிப்பிட்டார்:

நான்காவது தமிழ்நாடு சம்பள ஆணைக்குழு

'கூவம் இல்லம்', ஆடம்ஸ் சாலை, சென்னை-2.

அறிவிப்பு

தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட நான்காவது தமிழ்நாடு சம்பள ஆணைக்குழு சென்னை-2, ஆடம்ஸ் சாலையிலுள்ள 'கூவம் இல்லத்தில்' இயங்கி வருகிறது. துறைத் தலைவர்களுக்கும், அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் சங்கங்களுக்கும் தனித்தனியாக வினாத் தொகுப்புகள் அனுப்பப் பட்டு விட்டன. பொதுமக்களும், இவ்வினாத் தொகுப்புகள் கிடைக்கப்பெறாத பணியாளர் சங்கங்களும் எழுத்து மூலமாக, நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம். சம்பள ஆணைக்குழுவின் பரிசீலனைக்கு பொதுமக்களும் ஆலோசனைகள் ஏதேனும் இருப்பின் அனுப்பிவைக்கும்படி வேண்டப் படுகின்றனர். வினாத் தொகுப்பிற்கான பதிலை ஆணைக்குழுவின் அலுவலகத்திற்கு, 1984 ஆகஸ்ட் திங்கள் 16-ம் நாளோ அல்லது அதற்கு முன்னரோ அனுப்பி வைக்கப்படவேண்டும்.

சம்பள ஆணைக்குழு முன் நேர்முக சாட்சியம் அளிக்க விரும்பும், பொதுமக்கள், பணியாளர் சங்கங்கள் தங்களுடைய பெயர்களை 1984 ஆகஸ்ட் திங்கள் 10-நாள் அல்லது அதற்குமுன், சம்பள ஆணைக்குழு அலுவலகத்தில் பதிவு செய்துகொள்ளலாம். பதிவு செய்துகொள்ளப் படுபவர் மட்டுமே பின்பு அறிவிக்கப்படும் ஒரு குறிப்பிட்ட நாளில் நேர்முக விசாரணைக்கு அழைக்கப்படுவர்.

எம்.ஏ. கௌரிசங்கர்
உறுப்பினர்-செயலாளர்

DIPR 35092 84 ASP

''1910-ல் இராமநாதபுர மாவட்டம் அமைந்தது என்று குறிப்பிட்டனர். 74 ஆண்டு கழித்து இன்று அலுவலகம் கிடைத்துள்ளது. என்றோ நடந்திருக்க வேண்டும்! இன்று நடந்தது குறித்து மகிழ்ச்சி; நன்றி!'

அடுத்து, கிறிஸ்துவ ஜனநாயக முன்னணியைச் சேர்ந்த திரு தெளபண்ட் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்:

''மாவட்ட வளர்ச்சிக் குழுவினரும் ஆட்சியாளரும் இந்த மாவட்ட வளர்ச்சி குறித்துக் கூறிய கருத்துக்கள் உடனடியாக நிறைவேற்றப்பட முடியாவிட்டாலும், ஒரு கெடு நிச்சயித்து அதற்கு வழி வகை காண வேண்டும்''.

அடுத்து உரையாற்றிய திரு க. சுப்பு குறிப்பிட்டார்:

''பெயர் அளவில் மாவட்டமாக இருந்தது, இன்றுதான் முழு மாவட்டமாக வடிவம் பெற்றுள்ளது. எல்லாரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது; எல்லார் சார்பிலும் நன்றி''.

பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில், திரு எஸ். ஆண்டித் தேவர், எம். எல். ஏ. உரையாற்றுகையில், ''புதிய மாவட்டங்களின் அமைப்புகளினால் நிதி ஆதாரம் பெருகும்; நிர்வாகம் சீராக இருக்கும்; நேரடியாக இருக்கும்'' என்று தெரிவித்தார்.

அடுத்து சட்டமன்ற உறுப்பினர் திரு டி. இராமசாமி உரையாற்றுகையில் குறிப்பிட்டார்:

''1967-ல் அண்ணாவின் ஆட்சியிலேயே இந்தப் பிரச்சினை தலை காட்டியது. 1973-ல் அது விசுவ ரூபம் எடுத்தது. 1977-ல் பிரச்சனை வந்தது. சம்பந்தப்பட்டவர்களிடம் 40 மணி நேரம் பேசினார் புரட்சித் தலைவர். 'அவசரமாக இருங்கள்; காலம் வரும்' என்று அன்று சொன்னார். இன்று அந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி ஏற்பட்டுவிட்டது.''

(தொடர்ச்சி 41-ஆம் பக்கம்)

நுழைவுத் தேர்வு அவசியமே...!

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்
திரு எம். ஆர். கோவேந்தன்

நுழைவுத் தேர்வைப்பற்றி பல்வகையான கருத்துக்கள் கூறப்பட்டு வருகின்றன. நுழைவுத்தேர்வு முறையைத் தீவிரமாக எதிர்ப்பவர்களின் வாதத்தைச் சீர்தூக்கிப் பார்த்தால் அவர்களின் கருத்துக்களில் சிறிதளவும் நியாயம் இல்லை என்பதும், தனிப்பட்ட நபர்களின் அரசியல் ஆதாயத்திற்காக அவை சொல்லப்படுகின்றன என்பதும் நன்கு விளங்கும்.

நுழைவுத் தேர்வு முறையை எதிர்ப்பவர்களில் பெரும்பாலோர் இம்முறை பிற்படுத்தப்பட்ட கிராமப்புற மாணவர்களை வெகுவாகப் பாதிக்கும் என்ற தவறான கருத்தை மக்கள் மத்தியில் பரப்ப முயன்று வருகிறார்கள். அத்தகைய பொய்ப்பிரச்சாரத்திற்குச் சரியான விளக்கம் அளிக்கவேண்டியது பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் என்ற முறையில் எனது கடமை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள், நலிந்த, பிற்படுத்தப்பட்ட கிராமப்புற மக்களுக்குச் சலுகைகள், வேலை வாய்ப்புகள், கல்வி வசதி ஆகியவை அதிகமாகக் கிடைக்க வேண்டும் என்பதற்காகப் பல நல்லதிட்டங்களைச் சிந்தித்துச் செயல்படுத்தி வருகிறார்கள்.

ஏழை, எளிய, கிராமப்புற விவசாயிக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்காக வருமான உச்ச வரம்பை ரூ. 9 ஆயிரம் ஆக நிர்ணயித்து அரசாணை கொண்டுவந்தபோது சிலர் அதையும் எதிர்த்தார்கள்.

கருணாநிதி அவர்கள் இதைப்பற்றிக் கூறும்போது ரூ. 8999க்கும் ரூ.9001க்கும் இடையில் இரண்டு ரூபாய்தான் வித்தியாசம் இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்து அதனால் இந்த உச்சவரம்பை எதிர்ப்பதாகச் சொல்லுகிறார். வரம்பு என்று வைத்தால் ஒவ்வொரு ரூபாயையும் சணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது ஒரு அடிப்படை உண்மை. அதை அவர் நினைத்துப் பார்க்கவில்லை போலும்! வரம்பை மீறியே பழக்கப்பட்டவர்கள் இந்த வரம்பையும் நினைத்து பயப்படுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

கிராமப்புறத்து மக்களுக்காக ரூ.220 கோடியில் தன்னிறைவுத் திட்டம், ரூ. 133 கோடியில் சத்துணவுத் திட்டம் நிறைவேற்றியதோடல்லாமல், பிற்படுத்தப்பட்டவர்களுக்கான இட ஒதுக்கீட்டை 31 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக உயர்த்தியவர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்கள்.

இதைத்தவிர பிற்பட்டோர் நலத்துறையைப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையாக மாற்றம் செய்து, அதற்கென்று தனியாக ஒரு அமைச்சரையும் நியமித்தார்கள். பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த சட்டம் பயின்ற இளம் வழக்கறிஞர்களுக்குப் பயிற்சி கொடுப்பது, வங்கித் தேர்வுகளை நல்லமுறையில் எழுதி வெற்றிபெறப் பயிற்சி வளர்ச்சியிலும் நல்வாழ்விலும் டாக்டர் புரட்சித்தலைவர் கொண்டுள்ள தீவிர அக்கறையைக் காட்டும்.

இந்த ஆண்டு நுழைவுத் தேர்வு முறை கொண்டுவரப்பட்டதற்கான காரணத்தைச் சற்று நினைத்துப் பார்க்கவேண்டும்:

நேர்முகத் தேர்வு முறையில் ஏற்பட்ட சில தவறுகளால் ஆண்டுதோறும் பலரும் புகார்கள் கூறவும், நீதி மன்றம் செல்லவும் நேரிட்டது. முந்தைய தி.மு.க. ஆட்சிக்காலத்தில் நேர்முகத் தேர்வுக்கு வராதவர்களுக்குக் கூட மருத்துவக் கல்லூரியில் இடம் கொடுப்பது, வேண்டியவர்களுக்கு அதிக மதிப்பெண்கள் கொடுப்பது, வேண்டாதவர்களின் மதிப்பெண்களைக் குறைப்பது போன்ற முறைகேடுகளையெல்லாம் அறிந்திருக்கும் மக்கள் தற்போது எழுப்பிடும் குற்றச்சாட்டுகளை வைத்துக் கழக அரசையும் தவறாகக் கருதிவிடக் கூடாது என்கின்ற நிலைமையில் கல்வியாளர்கள், நிபுணர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து விவாதித்த பின்னர்தான் இந்த நுழைவுத் தேர்வு முறை கொண்டுவரப்பட்டுள்ளது.

பல்வேறு கல்வி நிறுவனங்களிலும், மற்ற மாநிலங்களிலும், மருத்துவம், பொறியியல் போன்ற தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் பொதுவாக மூன்று முறைகளில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

1. நேர்முகத் தேர்வு மூலம் தேர்ந்தெடுப்பது,

2. பிளஸ் டூ மதிப்பெண்களின் அடிப்படையில் மாணவர்களைத் தேர்ந்தெடுப்பது.

3. நுழைவுத் தேர்வின் மூலம் தேர்ந்தெடுப்பது.

நுழைவுத் தேர்வு முறை பிற்படுத்தப்பட்ட கிராமப்புற மக்களைப் பாதிக்குமா?

நுழைவுத் தேர்வால் பிற்படுத்தப்பட்டவர்களும், கிராமப்புற மாணவர்களும் பாதிக்கப்படுவார்கள் என்று கூறுகின்ற எவரும் எந்த வகையில் ஏற்படும் என்று விளக்கவில்லை.

''இப்போது பாதிப்பு தெரியாது 20 ஆண்டுகளுக்குப் பிறகுதான் தெரியும்'' என்று கூறுபவர்கள் அதற்கான காரணத்தைக் கூறவில்லை. ஏற்கெனவே பிற்படுத்தப்பட்டவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள 50 சதவீத இட ஒதுக்கீடும் தாழ்த்தப்பட்டோருக்கான 18 சதவீத ஒதுக்கீடும் இப்போதும் அவர்களுக்குத் தான் கிடைக்கும். இதைத்தவிர பொதுப் போட்டிக்காக (ஓப்பன் காம்பெட்டிஷன்) உள்ள 32 சதவீதத்திலும் அவர்கள் கணிசமான அளவில் வெற்றி பெற வாய்ப்புள்ளது.

பிற்படுத்தப்பட்டவர்களிலேயே வசதியும் வாய்ப்பும் உள்ள ஒரு சிலர் தொடர்ந்து இச்சலுகையைப் பெற்று வருவது நுழைவுத் தேர்வின் மூலம் நிறுத்தப்பட்டுவிடும் என்பதுதான் உண்மை.

நுழைவுத் தேர்வு பற்றி மாணவர் கழகம் சமீபத்தில் நடத்திய ஆய்விலும் 100க்கு99 கிராமப்புற மாணவர்கள் இதை வரவேற்றுள்ளனர் என்ற செய்தி உண்மை நிலையை விளக்கும்.

நேர்முகத் தேர்வு முறையில்தான் கிராமத்திலிருந்து வரும் மாணவர்கள் அதிகமான அளவில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எழுத்துத் தேர்வுகளையே எழுதிப் பழக்கப்பட்டுள்ள, கூச்ச சுபாவமுடைய கிராமப்புற மாணவர்கள், நேர்முகத் தேர்வில் சரிவரபதில் சொல்ல முடியாமல் திணறுகிறார்கள். அதேசமயம் நகர்ப்புற மாணவர்கள் நல்ல முறையில் பதில் கூறி விடுவார்கள். எனவே, ''நுழைவுத் தேர்வு'' முறைதான் கிராமப்புற மாணவர்களுக்கு அதிக அளவில் வாய்ப்பளிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த முறை திடீரென புதிதாகக் கொண்டு வரப்பட்டுள்ளதா?

இந்த முறை புதிதானது அல்ல. ஏற்கெனவே சென்ற ஆண்டுவரை கர்நாடகத்தில் இருந்து வந்தது. அதை எதிர்த்து கர்நாடக மாநில உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, நுழைவுத்தேர்வு வைத்தது சரியே என்று தீர்ப்பு கூறப்பட்டுள்ளது.

ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகம், காசி இந்துப் பல்கலைக் கழகம், அகில இந்திய மருத்துவக் கல்வி நிறுவனம், ஐ.ஐ.டி., வேலூர் கிறிஸ்துவ மருத்துவக் கல்லூரி, டில்லி, மணிபால், பாண்டிச்சேரி, ஜிப்மர் மருத்துவக்கல்லூரி ஆகிய இடங்களிலும் நுழைவுத் தேர்வு முறை பின்பற்றப்பட்டு வருகிறது.

மேல்நிலைப்பள்ளிகளில் ஒரு எழுத்துத் தேர்வு எழுதி வெற்றி பெறும் மாணவர்களுக்கு மீண்டும் ஒரு எழுத்துத்தேர்வு அவசியமா?

மேல்நிலைப் பள்ளிகளில் குறிப்பிட்ட பாடங்களில் மட்டும்தான் தேர்வு நடத்தப்படுகிறது. ஆனால் நுழைவுத்தேர்வு முறையில், மாணவனின் பொது அறிவு, அவன் படிக்க விரும்பும் துறையைப் பற்றிய அறிவு முதலியவை சோதிக்கப்படுகின்றன.

மேலும் பள்ளித் தேர்வுகளில் விடைத்தாட்களைப் பலர் திருத்துவதால் மதிப்பெண்கள் வித்தியாசப்பட வாய்ப்புள்ளது. ஆனால் நுழைவுத் தேர்வில் விடைகள் கம்ப்யூட்டர் மூலம் மதிப்பிடப்படுவதால் கம்ப்யூட்டர் தவறு நடப்பதற்கு இடமில்லை.

உலகம் முழுவதிலும், பல துறைகளிலும், கம்ப்யூட்டர் பயன்படுத்தப்பட்டு சிறப்பான வெற்றியைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் கம்ப்யூட்டரையே நம்ப முடியாது என்று கூறும் இவர்களுடைய கருத்து விந்தையானது.

நேர்முகத் தேர்வில் ஒருவர் செய்யும் மதிப்பீட்டிற்கும் மற்றொருவர் செய்யும் மதிப்பீட்டிற்கும் மதிப்பெண்களில் 50 முதல் 80 சதவிதம் வரை வேறுபாடு இருந்து வருவதாக நிபுணர்கள் கூறுகிறார்கள்.

பணம், செல்வாக்கு, அதிகாரம் ஆகியவை நேர்முகத்தேர்வில் அதிகமாகப் பயன்படுத்தப்படுவதாகக் குறை கூறுகிறார்கள். ஆனால் நுழைவுத் தேர்வு மூலம் கம்ப்யூட்டர் மூலம் மதிப்பீடு செய்து உண்மையிலேயே திறமைமிக்க மாணவர்களைத் தேர்வு செய்ய முடியும்.

''நேரடித் தேர்வில் ஊழல் நடந்துவிட்டது'' என்று பொய்க் குற்றச்சாட்டு கூறி மக்களைத் திசைதிருப்பி ஆதாயம் தேடுவதற்கு நுழைவுத் தேர்வு முறையில் வாய்ப்பில்லை என்பதால் குறிப்பிட்ட சிலர் இதை எதிர்க்கிறார்கள். உண்மையில் பிற்படுத்தப்பட்ட கிராமப்புறத்து மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருக்கும் இந்த நுழைவுத் தேர்வு முறையை அரசு கைவிடாது.

இம்முறையில் பிற்படுத்தப்பட்ட மற்றும் கிராமப்புறத்து மாணவர்கள் அதிக அளவில் பயனடைவார்கள் என்பதாலும், ஏழை பணக்காரன் வித்தியாசமின்றி மாணவர்களுக்கு உரிய வாய்ப்பு அளிக்கப்படும் என்பதாலும் கிராமப்புற மாணவர்களுக்குப் பாதிப்பில்லாமல் தேர்வு நடத்தப்படவிருக்கிறது என்பதாலும் மக்கள் இம்முறையை முழுமனதோடு வரவேற்பார்கள் என்று உறுதியாக நம்புகிறேன்.

வேளாண்மையைப் பெருக்குவதற்கு, விதைகள், உரம், பூச்சிக் கொல்லி மருந்து வழங்குவதற்கும், வேளாண்மை விளக்கப் பண்ணைகள் வைப்பதற்கும் 1984-85வது ஆண்டிற்கு ரூ. 27,35,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது.

தோட்டக்கலையை வளர்ப்பதற்குக் கோவை மாவட்டத்திற்கு ரூ.7.017 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டப் பணிகள்:

கோவை மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டப்பணிகளை நிறைவேற்ற ரூ.168 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. '84 ஏப்ரல் திங்களில் ரூ. 12.57 லட்சம் மானியம் வழங்கப்பட்டு இருக்கிறது.

நீர்ப்பாசன மேம்பாட்டுத் திட்டத்திற்காகப் பொள்ளாச்சி பொதுப்பணித்துறைக்கு ரூ.1.42 லட்சமும், உடுமலைப்பேட்டை பொதுப்பணித்துறைக்கு ரூ. 45 லட்சமும், பரம்பிக்குளம் ஆளியாறு பொள்ளாச்சி பொதுப் பணித்துறைக்கு ரூ. 120.31 லட்சமும், பரம்பிக்குளம், ஆளியாறு, திருப்பூர் பொதுப்பணித்துறைக்கு ரூ. 100.74 லட்சமும், தாராபுரத்திற்கு ரூ. 50 லட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

நிதி ஒதுக்கீடு:

காடுகளைப் பாதுகாக்கவும், காட்டுப் பகுதிகளில் மரங்களை வளர்க்கவும், தேக்கு, சந்தன மரம், காகிதக்கூழ் தயாரிக்கப் பயன்படும் மரங்கள் ஆகியவற்றை வளர்ப்பதற்காகவும் கோவை வனக்கோட்டத்திற்கு ரூ. 7.98 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

சமூக நலக் காடுகள்:

சமூகநலக் காடுகளைவளர்த்து சமுதாயச் சொத்தைப் பெருக்கவும், அதன்மூலம் எரி சக்திக்கான விறகுகளைப் பெருக்கவும், சமூக நலக் காடுகள் வளர்ச்சித் திட்டம் வனத்துறையால் செயல்படுத்தப்படுகிறது. இதற்காகக் கோவை மாவட்டத்திற்கு ரூ. 15.25 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

ஊரக வளர்ச்சிக்காக நிதி ஒதுக்கீடு:

கிராமப்புறங்களில் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்கு கோயம்புத்தூர் கோட்டத்திற்கு ரூ. 30.58 லட்சமும், பொள்ளாச்சிக் கோட்டத்திற்கு ரூ. 21.68 லட்சமும், பல்லடம் கோட்டத்திற்கு ரூ. 22.21 லட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

மின் இணைப்புப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு:

மின் இணைப்புப் பணிகளுக்கு மின்இணைப்புத் தருவதற்காக உடுமலைப் பேட்டைக் கோட்டத்திற்கு ரூ.30 லட்சமும், நெகமம் கோட்டத்திற்கு ரூ. 25 லட்சமும், பொள்ளாச்சிக் கோட்டத்திற்கு ரூ.25 லட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

குடிநீர் வழங்க:

நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காகக் கோவை சிறப்புக்குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ரூ. 124.53 லட்சமும், கோவை நகர்ப்புற குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ரூ. 40.65 லட்சமும், கோவை ஊரகக் குடிநீர் திட்டத்திற்கு ரூ. 98.02 லட்சமும், உடுமலைப்பேட்டை ஊரகக் குடிநீர்த்திட்டத்திற்கு ரூ. 149.587 லட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

சிறுசேமிப்பு வசூல் பணிகள்:

கோவை மாவட்டத்தில்நடப்பு ஆண்டில் சிறுசேமிப்பு ரூ. 685 லட்சம் வசூலிக்க தமிழக அரசால் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஏப்ரல் '84 திங்களில் ரூ. 139.68 லட்சம் மொத்தம்

வசூலாகியிருக்கிறது. இதில் நிகர வசூல் ரூ. 34.63 லட்சம். கோவை மாவட்டத்தில் 147 நிலையான முகவர்களும், 278 பெண் முகவர்களும் சிறுசேமிப்பு வசூல் செய்கின்ற முகவர்களாகச் செயல்பட்டு வருகிறார்கள்.

உடல் ஊனமுற்றோர்களுக்கு மூன்று சக்கர வண்டிகள்:

உடல் ஊனமுற்றவர்களுக்கு நடப்பு ஆண்டில் கோவை மாவட்டத்தில் மூன்று சக்கர வண்டிகள் 20 வழங்கப் பட இருக்கின்றன.

பிற்படுத்தப்பட்டோர் மேம்பாடு:

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலம் கோவை மாவட்டத்தில் மாணவ, மாணவியர்களுக்கு 1984-85வது நிதியாண்டில் உபகாரச் சம்பளம் வழங்க ரூ. 35,57,500 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. சீருடை வழங்குவதற்காக ரூ.46,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. பிற்படுத்தப்பட்டோருக்கு வீட்டு மனை வழங்குவதற்காக ரூ. 3 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சீர்பரம்பரை இனத்தவருக்கு விவசாயக் கிணறுவெட்ட கடன் வழங்க ரூ.40,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

கிராமப்புறங்களில் பொதுக்கழிப்பிடங்கள்:

1982-83 நிதியாண்டில் ரூ. 30.587 லட்சம் செலவில் 213 வருவாய்க் கிராமங்களில் பொதுக் கழிப்பிடங்கள் கட்டி முடிக்கப்பட்டன. 1983-84 நிதியாண்டில் ரூ. 30.587 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 214 வருவாய்க் கிராமங்களில் பொதுக்கழிப்பிடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு, 167 வருவாய்க் கிராமங்களில் பொதுக்கழிப்பிடங்கள் கட்டிமுடிக்கப்பட்டு உள்ளன. எஞ்சியுள்ள 47 வருவாய்க் கிராமங்களில் பொதுக்கழிப்பிடங்கள் கட்டிமுடிக்கப்பட இருக்கின்றன. நடப்பு ஆண்டில் விட்டுப்போன 31வருவாய்க் கிராமங்களில் புதிய பொதுக் கழிப்பிடங்கள் கட்டும் வேலைகள் நடைபெற்றுவருகின்றன.

பட்டினிச் சாவைத் தடுக்க

பட்டினிச் சாவைத் தடுப்பதற்காகத் தலா ரூ. 100 வீதம் 120 பேர்களுக்கு மொத்தம் ரூ.12000 வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

பாரதப் பிரதமரின் புதிய 20 அம்சத் திட்டப் பணிகள்:

கோவை மாவட்டத்தில் புதிய 20 அம்சத் திட்டத்தின் கீழ் புதிதாக 5857.50 எக்டேர் பரப்பிற்குப் பாசனம் வழங்கவும், 43,340 டன் பயிறு வித்துக்கள் உற்பத்தி செய்யவும், 92,000 டன் எண்ணெய் வித்துக்களை உற்பத்தி செய்யவும், 12,000 குடும்பங்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நிதி உதவி செய்யவும், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 15 லட்சம் உழைப்பு தினங்களைப் பெருக்கவும், 825 ஏக்கர் உபரி நிலத்தைப் பட்டா செய்து தரவும், 6957 ஆதிதிராவிடர்களுக்கு நிதி உதவி செய்யவும், 29 குடிநீர் வசதியற்ற கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கவும், 3850 ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனை வழங்கவும், 1650 வீடுகள் கிராமப்புறங்களில் கட்டித்தரவும், 1100 பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு செய்து தரவும், 40,89,000 மரங்களை நடவும், 550 எரிசாணவாயு அடுப்புக்கள் அமைத்துத்தரவும், 37,400 பேருக்கு குடும்பநல அறுவைச் சிகிச்சை செய்யவும், 6 வயதிலிருந்து 14 வயதுக்குட்பட்ட 12067 பேருக்கும், 30,360 முதியவர்களுக்கும் கல்வி வசதி தரவும், இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.



சாண எரிவாயுக்கலன் அமைக்கும் திட்டம் :

கோவை மாவட்டத்தில் 1500 சாணஎரிவாயுக்கலன்கள்அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 121 கலன்கள் கட்டிமுடிக்கப்பட்டன. 483 கலன்கள் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

சரடிமடையில் ஆரம்பச்சுகாதார நிலையம் :

சரடிமடையில் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுவதற்காக ரூ.10,000 நிதியினைத் தொண்டமுத்தூர் ஊராட்சி ஒன்றியம் செலுத்தியுள்ளது. இக்கட்டடத்தை எழுப்புவதற்கு 5 ஏக்கர் நிலத்தையும் ஒதுக்கீடு செய்வதாகத் தெரிவித்துள்ளது.

ஆதிதிராவிட நலத்துறைப்பணி

20 ஆதிதிராவிட நலப்பணிகள் நடத்துவதற்கு ரூ. 6,82,500, மாணவர்களுக்குச் சீருடை வழங்குவதற்காக ரூ. 2,09,000, உபகாரச் சம்பளம் வழங்குவதற்காக ரூ. 16,95,000, 7 மாணவியர் விடுதிகள், 13 மாணவர் விடுதிகள் ஆகியவற்றைப் பராமரிப்பதற்காக ரூ. 14,57,000, சமுதாய நலக்கூடங்கள் கட்டுவதற்காக ரூ. 57,500 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

பேரூராட்சிகளில் தன்னிறைவுத் திட்டப்பணிகள் :

1982-83 நிதியாண்டில் 10 பேரூராட்சிகளில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 230 வேலைகள் ரூ. 36,60,000 செலவிலும், 1983-84 நிதியாண்டில் 19 பேரூராட்சிகளில் 412 வேலைகள் ரூ. 36- லட்சம் செலவிலும், நிறைவேற்றி முடிக்கப்பட்டன. நடப்பு ஆண்டில் எஞ்சியுள்ள 27 பேரூராட்சிகளில் தலா ரூ. 2.92 லட்சம் செலவில் தன்னிறைவுத் திட்டப்பணிகளை நிறைவேற்றுவதற்கு நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் 143 குடிநீர் விநியோகப் பணிகள் 21,22,150- செலவிலும், 54 பாலங்கள் அமைக்கின்ற பணிரூ. 8,99,000 செலவிலும் 283 வடிகால் கட்டுகின்ற பணி ரூ.41,33,450 செலவிலும், 11ஆதிதிராவிட காலனி குடியிருப்புக்குப் பாதையமைக்கின்ற பணி ரூ. 1,43,000 செலவிலும் ஆக மொத்தம் 577 பணிகள் ரூ. 81 லட்சம் செலவிலும் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட இருக்கின்றன.

அனைத்து எலக்ட்ரானிக் அடுப்பங்கரைக்கு கொண்டுவா!

உங்கள் பணத்தை 6 ஆண்டுகளில்
இரட்டிப்பாக்கலாம்
தேசீய சேமிப்புப் பத்திரம்
6-வது வெளியீட்டில் முதலீடு செய்யுங்கள்



ஆவலோடு
ரூ.100 -ம்
ரூ.201-50
ஆக
பெருகிறது!

உங்கள் பணத்திற்கு நல்ல வட்டியும் பாதுகாப்பும் அளிக்கிறது தேசீய சேமிப்புப் பத்திரம் ரூ.10, 50, 100, 500, 1000, 5000 மதிப்பில் கிடைக்கும். முதலீடும், வட்டிக்கும் வருமான வரி சலுகை உண்டு!

அரசு வாடகை வாரமும் இந்தியர்களுக்கு 13% வட்டி அளிக்கிறார்!

மேலதிக விவரங்கள் :
தபால்தலை,
சிறு சேமிப்புத் துறை,
143, அண்ணா சாலை, சென்னை-600 002
அல்லது அருகிலுள்ள அஞ்சலகங்கள்.

DPR-5009/83-EP

'பனி மனிதன்' உண்டா?

இமயமலையில் 'பனி மனிதன்' இருப்பதாகக் கூறுகிறார்களே அது உண்மையா? 'இல்லை!' என்கிறார் மலை ஆராய்ச்சி நிபுணர் ஒருவர். அவர் பெயர் வாதிம் ராஸோவ், இவர் சோவியத் மலை ஆராய்ச்சி நிபுணர். அவர் இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் ''பனி மனிதன்'' என்று ஒன்றுமே இல்லை என்று நிரூபிக்கத் தாம் தயாராக இருப்பதாகக் கூறினார்.

''எவரெஸ்ட்'' சிகரத்தை எட்டிய ஹிலேரி குழுவினர் நடத்திய ஆராய்ச்சிகளிலிருந்து, பனிக் கட்டியில் பதிந்த மற்றப் பிராணிகளின் அடிச் சுவடுகள் மீது வெயில் படும்பொழுது, அவை 'பனி மனிதன்' அடிச் சுவடுகள் எனப்படுபவை போன்ற வடிவத்தைப் பெறுகின்றன என்பது தெரிந்தது. இமயமலையிலும் சரி, அதை அடுத்துள்ள பாமிர் மலையிலும் சரி, பனி மனிதனின் எலும்புக் கூடோ, அல்லது தனிப்பட்ட எலும்புகளோ கூடக் கண்டெடுக்கப்படவில்லை. எந்தப் பிராணியும் தன் போன்ற இனக் கூட்டத்துடன் சேர்ந்துதான் வாழும் என்று உயிரியலாளர்கள் கூறுகின்றனர். அவ்விதம் பனிமனிதர்கள் வாழும் இடங்களின் அடையாளங்கள் எதுவும் காணப்படவில்லை.

''பனி மனிதனை'' நேரில் கண்டதாகக் குறிப்பிடுவது வெறும் கற்பனையே. மலையேறிகளோ, சுற்றுலாப் பயணிகளோ அல்லது வேட்டைக்காரர்களோ பனி மனிதனைக் கண்டதில்லை. பனி மனிதன் இருப்பதாகக் கூறுவோர், இவை பழைய கற்கால ஆதி மனிதனின் மிச்ச சொச்சங்கள் என்கின்றனர்; இந்த ஊகம் தவறானதாகும்.

''மனித இனம் தான் அடைந்த ஆதாயம் எதையும் கைவிட்டதில்லை, பழைய கற்கால மனிதர்களில் ஒரு பகுதியினர், தங்கள் வாழ்வுக்குத் தேவையான கல் கருவிகள் தயாரிக்கும் முறையைத் திடீரென்று மறந்து விட்டு வன விலங்குகளின் வாழ்க்கை முறைக்குத் திரும்பி விட்டனர் என்பது நம்ப முடியாதது.

''பரிணாம முறைக்கு இது முற்றிலும் மாறுபட்டதாகும். ஒரு கூட்டம் அல்லது சில கூட்டங்கள் இவ்விதம் பின் நோக்கிச் சென்றால், அவை வாழ்க்கைப் போராட்டத்திற்கான முக்கிய சக்தியை இழந்து அழிந்து போயிருக்கும். கற்கால மனிதர்கள் உயிரியல் காரணங்களால் மட்டுமின்றி, சமூக வளர்ச்சியினாலும் நாகரிக மக்களாக மாறினார்கள் என்பதையும் மறந்து விடக் கூடாது''

இவ்வாறு அந்த நிபுணர் கருத்து தெரிவித்துள்ளார்.

மாணவர் பக்கம்

அரும்புகளுக்கு வேண்டுகோள்!

பள்ளிக்குச் செல்லும் பிள்ளைகளே
பண்பினை நாளும் கொள்ளுங்களே
கள்ளமில்லாத உள்ளங்களே-நீங்கள்
கடவுளின் புதிய வடிவங்களே!

நல்லதை நித்தமும் எண்ணுங்களே
நியாயத்தின் பக்கம் நில்லுங்களே
வல்லமை கொண்டு வாழுங்களே-நீங்கள்
வாக்கினில் நேர்மை சேருங்களே!

கற்றதற் கேற்ப உதவுங்களே
கல்வியில் சிறந்து உயருங்களே
வெற்றிப் பாதை நாடுங்களே-உம்மைப்
பெற்றவர் மகிழ்ச்சி பேணுங்களே!

— காஞ்சி கிருஷ்ணமணி

விளையும் பயிர்..

கன்னியாகுமரி மாவட்டம் தூத்தூர் புனித பூதாக் கல்லூரியில் பி.எஸ்.சி. பயிலும் மாணவர் எம். ஸாஹிர்ஸா. இவர் கதை, கட்டுரை, கவிதை எழுதுவதில் ஆர்வங் காட்டுகிறார். நாடகங்கள் பலவற்றிலும் நடித்துப் பாராட்டுகள் பெற்றுள்ள இவர் கூட்டங்களிலும் பேசி வருகிறார். ''என்னுடைய பொழுதுபோக்கு, சமூகத் தொண்டு'' என்று மகிழ்ச்சியுடன் கூறுகிறார் இவர்.

விட்டான். 1982 கோடையில் அஜெர்பைஜான் அரசமருத்துவக் கல்லூரிக்கு நடைபெற்றபுகுமுகத் தேர்வில் அவன் சிறப்பாக வெற்றி பெற்றான்.

கோஸ்தியா ஒன்றரை வயதில் எழுதக் கற்றுக் கொண்டான்; இரண்டு வயதில் படிக்கக் கற்றுக் கொண்டான். மூன்று வயதில் வரலாறு, பூகோளம் முதலியவற்றில் பொது அறிவைப் பெற்றான். அதே வயதில் ஆங்கிலம் கற்றுக் கொள்ள அரம்பித்தான்; நான்கு வயதில் கணிதம், உயிரியல், ரசாயனம் முதலியவற்றில் அடிப்படை ஞானத்தைப் பெற்றான்; ஐந்து வயதில் ஒரு செகண்டரிப் பள்ளியில் முதல் வகுப்பில் சேர்ந்தான்; இரண்டே ஆண்டுகளில் நான்கான்டு ஆரம்பக் கல்வியைப் பூர்த்தி செய்தான். 12 வயதில் மெட்ரிக்குலேஷன் சான்றிதழைப் பெற்றான்; 13 வயதில் மருத்துவக் கல்லூரி மாணவன் 'கார்னட்'ப் பெற்றான்.

தங்கள் மகனைப்பற்றி அவன் பெற்றோர்கள்:

"சின்னஞ் சிறு குழந்தையாக இருக்கும்போதே அவன் அறிவுக் கடலில் மூழ்கி எழுந்துவிட்டான். கோஸ்தியாவின் வெற்றிகளைக் கண்டு இப்போது நாங்கள் ஆச்சரியப்படுவதில்லை. ஆனால் மற்றவர்களால் இதை நம்ப முடியவில்லை.

"கோஸ்தியாவின் நினைவாற்றல் அசாதாரணமானது.எனினும், பெற்றோர்கள் மட்டும் பயனுள்ள முறையில் உதவினால் எந்தக் குழந்தையுமே தன்து வயதுக்கு மீறிய அறிவாற்றலைப் பெற்றி ருக்க முடியும் என்பதை எங்கள் சொந்த அனுபவத்திலிருந்து கூற முடியும்.

"உதாரணமாக, கோஸ்தியாவின் தங்கை இரினா இவனைப் போல இயல்பாக அவ்வளவு திறமையுடையவள் என்று கூற முடியாவிட்டாலும், அவளும் இரண்டு வயதில் எழுத்துக்களைக் கற்றுக் கொண்டாள்; மூன்று வயதில் படிக்கத் தெரிந்து கொண்டாள்.

"கோஸ்தியாவுக்கு ஒரு வயது நடக்கும்போது அவனது வியக்கத் தக்க நினைவாற்றலைப் பற்றித் தெரிந்து கொண்டோம். இது தற்செயலாகவே நடைபெற்றது. ஒரு நாள் நாங்கள் நண்பர் வீட்டிற்குச் சென்றிருந்தோம். அவர்களுடைய ஆறுவயதுமகனான் தனது அகர வரிசைக் கட்டைகளைத் தரையெல்லாம் பரப்பிப் போட்டிருந்தான், அவனுடைய தாய் அவனைக் கடிந்து கொண்டாள். உடனே அவன் உரத்த குரலில் எழுத்தை உச்சரித்தவாறு ஒவ்வொரு கட்டையாக எடுத்துப் பெட்டிக்குள் அடுக்கிக் கொண்டிருந்தான். அப்போது கோஸ்தியாவும் அங்கு இருந்தான்.

மறுநாள் காலையில் கோஸ்தியா விழித்தெழுந்ததுமே, முதல் நாள் இரவுதான் கற்றுக்கொண்ட சில எழுத்துக்களை உச்சரிக்க ஆரம்பித்தான். இதைக் கண்ட நாங்கள் உரிய காலத்திற்கு முன்னதாகவே அவனுக்கு அகர வரிசைக் கட்டைகளை வாங்கி கொடுத்துவிட்டோம்".

—நன்றி: 'சோவியத்நாடு

இந்தச் சிறுவனுக்குப் பதின்மூன்று வயதுதான் ஆகிறது!

அவனிடத்தில் எத்தனைத் திறமைகள் வெளிப்படுகின்றன!

ஆம். அவன் ஒரு 'சகலகலா வல்லவன்' ஆக விளங்குகிறான்!

பெற்றவர்களும் மற்றவர்களும் புகழும் பெரும் 'மேதை'யாகத் திகழ்கிறான் அவன்!

அவன் யார்?

அவன்தான் பதின்மூன்று வயதிலேயே மருத்துவ மாணவனாகி விட்ட கோஸ்தியா!

ஆம். அவன் பெயர் கோஸ்தியா. சோவியத் நாட்டைச் சேர்ந்த சிறுவன்.

இதோ அவனைப் பற்றிய 'விந்தை' வரலாறு!

கோஸ்தியா பதின்மூன்று வயதிலேயே மருத்துவ மாணவனாகி

கிருஷ்ணா நதி நீர்த் திட்டப்பணிகள்

ஆர். சடகோபன்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
செங்கல்பட்டு மாவட்டம்

சென்னை நகர மக்களின் நெடுங்காலப் பிரச்சனையான குடி நீர்ப்பிரச்சனைக்குத் தீர்வு காணும் பொருட்டு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களின் முயற்சியால் ஆந்திர மாநில அரசும், தமிழ்நாடு அரசும் சேர்ந்து நிறைவேற்றும் கிருஷ்ணா நதி நீரைச் சென்னைக்குக் கொண்டு வரும் பணியின் முதல் கட்டப்பணிகள் தொடக்கமாகிவிட்டன. நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு கால்வாய் வெட்டும் பணிகள் தொடங்கப் பெற்றுள்ளன.

செங்கல்பட்டு மாவட்டம் எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் சென்னை திருப்பதி கொசஸ்தல ஆறுபாலம் சாலையில் பெரிய பாளையத்தை அடுத்து சுமார் 12 கி.மீட்டரில் உள்ள தாமரைக் குப்பம்என்னும் இடத்தில்தான் வியக்கத்தக்க வகையில் மிகப் பெரிய அளவில் கால்வாய் வெட்டும் பணி நடைபெறுகிறது. சென்னை திருப்பதி கொசஸ்தல ஆறு சாலையில் இருந்து 2.2கி.மீ. தூரத்தில் தமிழ்நாடு எல்லை ஆரம்பமாகும் (ஜீரோ பாயிண்ட்) இடத்தில்இருந்து மிகப் பெரிய அளவில் முதல் கட்டப்பணியான கால்வாய் வெட்டும் பணிக்கு, பெரிய புல்டோசர் இயந்திரங்கள் 4 வேலை செய்கின்றன.

கால்வாய் 10 மீட்டர் ஆழமும் மேல் அகலம் 10 மீட்டரும் கீழ் அகலம் 6½ மீட்டரும் இருக்கும். கால்வாயில் 3½ மீட்டர் உயரம் வரை தண்ணீர் வரும். ஆந்திர அரசு நமது மாநில எல்லையில் வினாடிக்கு 1000 கன அடி நீர் தரும். இந்தத் தண்ணர், கால்வாய் மூலம் ஊத்துக்கோட்டை வழியாக ஆரணியாற்றில் சிமெண்ட் கான்கிரீட்டிலான புதை கால்வாய் (Syphon) மூலம் 25 கி.மீ. உள்ள பூண்டி நீர்த் தேக்கத்தில் சேர்க்கப்படும்.

தமிழ்நாடு எல்லையிலிருந்து பூண்டி வரை முதல் கட்டமாக, கால்வாய் வெட்டும் வேலை ரூ 12 கோடியில் நடைபெறுகிறது. தினந்தோறும் ஏராளமான ஆட்கள் கால்வாய் வெட்டும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். கால்வாய் அமைப்பதற்காக 220 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது.

கால்வாய் திறந்த கால்வாயாக இருப்பதால் மண் சரியாமல் இருப்பதற்காக கால்வாயின் இரு பக்கங்களிலும் அடிப்பகுதியிலும் கான்கிரீட் சிமெண்ட் ஸ்லாப்புகள் போடப்படும். இந்த சிமெண்ட் ஸ்லாப்புகள் ஊத்துக்கோட்டையில் 2 இடத்திலும், உதப்பையில் ஒரு இடத்திலும், பூண்டியில் ஒரு இடத்திலும் செய்யப்படுகின்றன.

ஆரணி ஆற்றின் குறுக்கே தண்ணீர் கொண்டு செல்ல சிமெண்ட் கான்கிரீட்டிலான புதைகால்வாய் அமைக்க ரூ. 70 லட்சம் செலவாகும். பூண்டியிலிருந்து செம்பரம்பாக்கத்திற்கு 25.கி.மீ தூரம் கால்வாய் அமைக்க ரூ.11 கோடி செலவிடப்படும்.

இரண்டாவது கட்டமாக பூண்டி நீர்த்தேக்கம் ,செம்பரம்பாக்கம் ஏரி, புழல் ஏரி முதலியவற்றின் கரைகள் 2 அடி உயர்த்தப்படும். இதனால் ஏரிகளில் நீர் மட்டம் 2 அடி உயரும். பூண்டி நீர்த்தேக்கக் கரையை 2 அடி உயர்த்த ரூ. 6 கோடியும் ,புழல் ஏரிக்கரையை உயர்த்த ரூ.2கோடியும், செம்பரம்பாக்கம் கரையை உயர்த்த ரூ. 3 கோடியே 30 லட்சமும் செலவிடப்படும்.

ராமன்சேரி என்னும் இடத்தில் நீர்த்தேக்கம் கட்டி பூண்டி ஏரியில் உள்ள நீர் அங்கு கொண்டு போய் விடப்படும். காலியான பூண்டி ஏரியில் கிருஷ்ணா நதி நீரைத் தேக்கி வைக்கப்படும்.

கொசத்தலைவாயல், திருத்தண்டலம் முதலிய இடங்களில் ரிசர்வாயர் கட்டி நீரைத் தேக்கி, கடைசியாக ரெட்ஹில்ஸ் நீர்த் தேக்கத்தில் சேர்க்கப்படும்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் இதற்கு முன்பு பூண்டி நீர்த் தேக்கத்தைத் தவிர பெரிய திட்ட வேலைகள் செய்ததில்லை. அதனால் கால்வாய் வெட்டும் வேலைக்குச் சேலத்திலிருந்து ஆட்கள் வரவழைக்கப்படுகின்றனர்.

செங்கையில் செம்மையான பணிகள்...

செங்கல்பட்டு மாவட்டம், லத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அம்மனூர் கிராமத்தில் ஆதிதிராவிடர் வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் ரூ. 40 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட சமூக நலக் கூடத்தை 25-4-84 அன்று மாண்புமிகு பொதுப்பணி மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் திரு எஸ். ஆர். இராதா அவர்கள் திறந்து வைத்தார். அவ்வமயம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நலிந்த பிரிவினருக்கு 200 கறவை மாடுகளையும் வழங்கினார்.

லத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள செய்யூரில், தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் ரூ.70 ஆயிரம் மதிப்பீட்டில் 2 அறைகள் கொண்ட பள்ளிக் கட்டடம் ஒன்றும், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் ரூ. 70 ஆயிரம் மதிப்பீட்டில் 2 அறைகள் கொண்ட கூடுதல் பள்ளிக் கட்டடம் ஒன்றும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அதை மாண்புமிகு பொதுப்பணி மற்றும் வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு எஸ்.ஆர். இராதா அவர்கள் திறந்து வைத்தார்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 336 பேர்களுக்கு ரூ. 2 இலட்சத்து 86 ஆயிரம் மானியத்தில் கறவை மாடுகள் வழங்கப்பட்டன. 64 பேர்களுக்கு ரூ. 49 ஆயிரத்து 500 மானியத்தில் உழவு மாடுகள் வழங்கப்பட்டன. 84 பேர்களுக்கு ரூ. 1 லட்சத்து 9 ஆயிரத்து 500 மானியத்தில் ஆடுகள் வழங்கப்பட்டன.

சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 94 பேர்களுக்கு ரூ. 59 ஆயிரம் மானியத்தில் சடன் வழங்கப்பட்டது. இதில் 73 பேர் ஆதிதிராவிடர்.

மதுராந்தகத்தில் தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையத்தின் சார்பில் தமிழக ''அக்ரோ உரம் சில்லரை விற்பனை நிலையம்'' துவக்க விழாவும் இதே நாளில் நடைபெற்றது.

மாண்புமிகு பொதுப்பணி மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் உரவிற்பனையைத் துவக்கி வைத்தார்.

''மிளகாய் அதிக விளைச்சல் உள்ள காலங்களில் விவசாயிகள் குறைந்த விலையில் விற்று நட்டமடையாமலிருக்க அரசே மொத்தமாக விவசாயிகளிடம் மிளகாய் வாங்கி தூளாகச் செய்ய அரசு உத்தேசித்து மிளகாய்த்தூள் ஆலை ஆரம்பிக்க திட்டம் உள்ளது'' என்று தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையத் தலைவர் திருலியாகத் அலிகான் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

—ஆர். சடகோபன்

தொழுநோய் நிறுவனங்களுக்கு அரசு உதவிகள்

தொழுநோயினைத் தடுப்பதிலும், குணப்படுத்துவதிலும், ஆக்கப் பூர்வமான சேவைகள் செய்வதில், அதுவும் குறிப்பாகச் சமுதாயத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சேவை செய்வதில் அரசின் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருக்கும் வகையில் தனியார் சேவை நிறுவனங்கள் ஈடுபடுவதை அரசு ஊக்கப்படுத்தி வருகிறது.

இந்த நூற்றாண்டு முடிவதற்குள், தொழுநோயின் ஒழிப்பதற்குரிய நடைமுறையை வகுப்பதற்கு, இந்திய அரசு தொழுநோய் ஒழிப்பதற்கான கண்காணிப்பு, அது சம்பந்தப்பட்ட கல்வியினைப் போதித்தல், மருத்துவம் ஆகிய பணிகளில் ஈடுபட்டிருக்கும் தனியார் சேவை நிறுவனங்களுக்கான உதவி முறைகளின் விதிகளைத் தளர்த்தியுள்ளது. இதன்படி இப்பணியில் பணிபுரிவோருக்கான ஊதிய உயர்வு அளித்தல், மருந்துகளின் விலை, தொழுநோய் சம்பந்தமான பணிகளுக்கான மற்றச் செலவுகள் ஆகியவைகளுக்காக அளிக்கப்படும உதவித் தொகை அதிகரிக்கப்படும்.

தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தின்கீழ் கணக்கெடுத்தல், நோய் தொடர்பான கல்வி போதித்தல், மருத்துவ சேவை செய்தல் ஆகிய பணியினை ஏற்று நடத்தவும், தளர்த்தப்பட்ட விதிகளின்படி உதவி பெறவும் விரும்பும் சேவை நிறுவனங்கள் இது குறித்த முழு விவரங்களைப் பெற, சென்னை-600 006ல் உள்ள மருத்துவம் மற்றும் குடும்ப நலத்துறை இயக்குநருக்கு எழுதலாம்.

மலைவாழ் மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சி

தமிழ்நாடு அரசு ஆற்றிவரும் அரிய திட்டங்களின் மூலம் நகர்ப்புறத்திற்கு மட்டுமில்லாமல் நாட்டுப்புறத்திற்கும் சாதனைகள் குவிகின்றன. நடுத்தர மக்கள் மட்டுமின்றி ஏழை எளிய மக்களும் பயன்பெறுகின்றனர். ஆதிதிராவிட மக்களும் ஏற்றம்பெறும் வகையில் திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

மக்கள் அரசைத்தேடி வந்து கோரிக்கை வைத்த காலம் மாறி, தமிழ்நாடு அரசே வீடுதேடிச் சென்று வசதிகளையும் வாய்ப்புகளையும் தருகின்ற காலம் வந்துள்ளது. இந்த வகையில்தான் சேலம் மாவட்டம் கல்ராயன் மலையிலுள்ள 18,000 மலைசாதி மக்களுக்குப் பல்வேறு புரட்சிகரமான திட்டங்கள் தீட்டப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 1981ஆம் ஆண்டுமுதல் தோட்டக் கலைத்துறை இங்கே செயல்பட்டு வருகிறது.

மாபெரும் பழப்பண்ணை

சின்னகல்ராயன் மலையில் 1000 ஏக்கர் பரப்பளவில் மாபெரும் பழப்பண்ணை தோட்டக் கலைத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 1981ஆம் ஆண்டு 400 ஏக்கரில் பழக் கன்றுகள் பயிரிடப்பட்டுள்ளன. மா, கொய்யா, சப்போட்டா, ஆரஞ்சு, அன்னாசி, எலுமிச்சை மற்றும் இதர பழப்பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன. மீதியுள்ள 600 ஏக்கரில் இன்னும் இரண்டு ஆண்டில் பழப்பயிர்கள் பயிரிடப்பட்டுவிடும். இப்பழப் பண்ணை அமைப்பதற்கு நிலச் சீர்திருத்தம் செய்தல், பயிர்நடவு செய்தல், தண்ணீர் ஊற்றுதல், பயிர்ப் பராமரிப்பு ஆகிய வேலைகளைச் செய்வதற்காக நாள்தோறும் 100 ஆண்களும், 100 பெண்களும் வேலையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மாதிரி வாழைப் பண்ணை

வாழைப் பண்ணை 100 ஏக்கரில் பயிரிடத் திட்டமிடப்பட்டு, தற்பொழுது 40 ஏக்கரில் தேன், வாழை, நமரன், பூவன் பச்சை நாடன் ஆகிய வாழை ரகங்கள் பயிரிடப்பட்டுள்ளன. ஏக்கருக்கு 800 கன்றுகள் வீதம் மொத்தம் 32,000 வாழைக் கன்றுகள் பயிரிடப்பட்டுள்ளன. ஏக்கர் ஒன்றிற்கு ஆண்டுக்குச் சுமார் ரூ. 4000 இலாபம் கிடைக்கும்.

நோயற்ற, தரமான வாழைக் கன்றுகளை உற்பத்திசெய்து, மலைசாதி மக்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும், பயிரிடுவதற்காக வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். மலைசாதி மக்களுக்கு வேலை வாய்ப்பளிப்பதும், வேளாண்மையை மேம்படுத்துவதும் இத்திட்டத்தின் சீரிய நோக்கமாகும்.

காய்கறி உற்பத்தித் திட்டம்

50 ஏக்கர் பரப்பளவில் காய்கறி விதை உற்பத்தி செய்யப்

ம. அரிகிருஷ்ணன்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
சேலம்.

பட்டு வருகிறது. தரமான நோயற்ற விதைகளை அனைத்துப் பகுதி மக்களுக்கும் வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

மேற்கண்ட திட்டங்களினால், வீணாக உள்ள அரசு புறம்போக்கு நிலங்களை உரிய முறையில் பயன்படுத்துதல், மலைசாதி மக்களை விஞ்ஞான முறையில் வேளாண்மையில் ஈடுபடச் செய்தல் ஆகிய நோக்கங்களும் நிறைவேறுகின்றன.

மாதிரி காபித் தோட்டம் :

தமிழ்நாட்டில் முதலாவதாக ஏர்க்காடு மலையில் மட்டும்தான் காபி பயிரிடப்பட்டு வந்தது 1982ஆம் ஆண்டு சின்ன கல்ராயன் மலையில் (கருமந்துறை) காபி பயிர்செய்வதற்காக 250 ஏக்கர் நிலத்தைத் தமிழ்நாடு அரசு தோட்டக் கலைத்துறையிடம் ஒப்படைத்தது. கடந்த 8 மாதங்களுக்கு முன்பாக 15 ஏக்கரில் காபி பயிர் நடவு செய்யப்பட்டுள்ளது. இதில் 27,000 காபிச் செடிகள் நடப்பட்டுள்ளன. சின்ன கல்ராயன் மலையின் உயரம் 900 மீட்டர் ஆகும். இந்த உயரத்தில் உள்ள சீதோஷ்ண நிலை காபிச்செடி நன்கு வளர்வதற்கு ஏற்றதாகும். காபிச்செடி 2500 அடி முதல் 4000 அடி உயரம் வரை நன்கு வளரும். ரொபஸ்டா (Robusta) சென்ராமன் (Senraman) ஆகிய இருவகைக் காபிச் செடிகள் பயிரிடப்பட்டுள்ளன. காபிச்செடி வளர, நிழல் தருவதற்காக 10,000 வாழைக்கன்றுகளும், 10,700 கல்யாண முருங்கையும், 2,700 சில்வர்ஓக்கும், 1,300 கமலா ஆரஞ்சும் பயிரிடப்பட்டுள்ளன. மீதியுள்ள 235 ஏக்கரில் காபி பயிரிட நிலச் சீர்திருத்த வேலை நடைபெற்று வருகின்றது. 100 ஆண்களும் 100 பெண்களும் இதன்மூலம் நாள்தோறும் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர். இதில் இரண்டாவது கட்டமாக 25 ஏக்கரில் காபிச் செடி பயிரிடுவதற்கான நடவு வேலையை 18.5.'84 அன்று சேலம் கோட்ட வளர்ச்சி அலுவலர் திரு. நா. விவேகானந்தன் தொடங்கி வைத்தார்.

காபிச் செடி நடவு செய்யப்பட்ட 5 ஆண்டுகள் பலன் தருகின்றது. சுமார் 50 ஆண்டுகள் வரை காபிச்செடி பலன் அளிக்கும். 5 அல்லது 6 அடி உயரத்திற்குமேல் இச்செடிகள் வளராதவாறு வெட்டி விடப்படும். 50 ஆண்டுகளில் இச்செடிகளை அகற்றிவிட்டுப் புதிய செடிகள் பயிரிடப்படும். ஏக்கர் ஒன்றுக்கு 500 கிலோவரை காபிக்கொட்டை கிடைக்கும். இதன் மூலம் ஏக்கருக்கு ரூ.7500 வரை லாபம் அடையலாம்.

நிதி ஒதுக்கீடு

மாபெரும் பழப்பண்ணை அமைக்க 3 ஆண்டுகளுக்கு ரூ 45 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. காபி பயிரிட, ஆண்டுக்கு ரூ.2.5 இலட்சம் மற்றும் வாழை பயிரிட ஆண்டுக்கு ரூ. 2.5 இலட்சம் வீதம் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. காய்கறி பயிரிட, ஆண்டுக்கு 1.5 இலட்சம் வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குடிநீர் மற்றும் பாசன நீர்

தோட்டக் கலைத்துறையில் வேலையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்குக் குடிநீர் வசதியளிக்க, குடிநீர் வடிகால் வாரியம் ஆழ் துளைக் கிணறு அமைக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளது. காபிச் செடிக்கு நீர் பாய்ச்சுவதற்காக ரூ. 65,000 செலவில் கிணறு வெட்டப்பட்டு வருகிறது.

சுசிவுநீர்க் குட்டை

சின்ன கல்ராயன் மலையில் சுசிவு நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டுள்ளது. ஆண்டுக்கு மூன்றுமுறை இந்த நீர்த்தேக்கத்தில் நீர் நிரம்புகிறது. இந் நீர் மாபெரும் பழப் பண்ணை மற்றும் வாழைப் பண்ணைக்குப் பயன்படுத்தப்படுகிறது. இங்கு ஆண்டு மழையளவு 847.56 மி.மீட்டர் ஆகும். நீர் பிடிப்புப் பரப்பு 12.90 ஏக்கர்.

சேலம் மாவட்டத்துல் சின்ன கல்ராயன்மலை, பெரிய கல்ராயன்மலை, பச்சைமலை, அரூத்துமலை, கொல்லிமலை,



ஏர்க்காடு மலை, சேர்வராயன் மலை ஆகிய மலைகளில் மலைச் சாதி மக்கள் வாழ்கின்றனர்.

மலைசாதி விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்குக் கடன் வழங்குவதற்காகவும், இதரப் பணிகளுக்காகவும் வேலை வாய்ப்பு, உற்பத்தி, வருமானம் ஆகியவற்றை அதிகப்படுத்துவதற்காகவும், உணவு இதரப் பண்டங்கள் ஆகியவற்றை வழங்குவதற்காகவும் மலைவாழ் மக்கள் பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

மலைசாதி மக்களுக்குக் குறுகிய காலக்கடன், மத்தியக் காலக் கடன் இக்கூட்டுறவுச்சங்கத்தின் மூலம் வழங்கப்படுகின்றன. பயிர்க் கடன் மற்றும் வீட்டிற்குத் தேவையான கடன்கள் 4 சதவீத வட்டியில் தரப்படுகிறது. பிற மக்களுக்கு 10 சதவிகித வட்டியில் கடன் வழங்கப்படுகிறது. மத்திய காலக்கடன் மூலம் கறவை மாடுகள் ஆடுகள் மற்றும் பன்றிகள் வாங்குதல், பட்டுப்பூச்சி வளர்த்தல் ஆகியவற்றிற்கு 50 சதவிகித கடனாகவும், 50 சதவிகிதம் மானியமாகவும் வழங்கி மலைசாதி மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு வழிசெய்யப்படுகிறது.

நியாய விலைக் கடைகள்

கல்ராயன் மலையில் கடுக்காய் அதிகம் விளைகிறது. மலைசாதி மக்கள் இவற்றை விற்கும்பொழுது இடைத்தரகர்கள் டம்ஏமாறாமல் இருக்க கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் 10 இடங்களில் நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

சின்ன கல்ராயன் மற்றும் பெரிய கல்ராயன் மலைகளில் 31,891.200 ஏக்கர் பரப்பளவிலுள்ள 3532 குடும்பங்கள், பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் பயன்பெறுகின்றனர். இச்சங்கத்திற்குத்தனிநபர்பங்குத் தொகையாக ரூ. 4,35,777, அரசுப் பங்குத்தொகை ரூ. 1,07,750, ஆக 5,43,527 ரூபாய் மொத்தப்பங்குத்தொகையாகும்.

சின்ன கல்ராயன் மலை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மணியார் குண்டத்தில் ரூ. 25,000 செலவில் கட்டப்பட்டுள்ள கிராம அங்காடி மற்றும் ரூபாய் 40,000 செலவில் கட்டப்பட்டுள்ள சத்துணவுக் கூடம் ஆகியவற்றை 18.5.84 அன்று மாவட்டத் திட்ட அலுவலர் திரு. கே.பங்க்ரேலஸ் தலைமையில், சேலம் கோட்ட வளர்ச்சி அலுவலர் திரு.நா.விவேகானந்தன் திறந்து வைத்தார். ஏர்க்காடு சட்டமன்ற உறுப்பினர் திரு.இரா. திருமன், இந்தியன் வங்கி இயக்குநர் திரு ஆ. பொன்னுதுரை, முன்னாள் ஒன்றியப் பெருந்தலைவர் திரு. ப. மூ. சாந்தானந்தம் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

கல்வி மற்றும் மருத்துவ வசதிகள்

கல்ராயன் மலையிலுள்ள மலைசாதி மக்களின் குழந்தைகள் கல்விகற்க ஆரம்பப்பள்ளி மற்றும் உயர்நிலைப்பள்ளிகள் உள்ளன. இங்கு 26 பால்வாடிகள் உள்ளன. கிராம மருந்தகம் (Rural Dispensary) அரசு மருத்துவமனை (Govt. Hospital) கால்நடை மருந்தகம் ஆகியன இங்கு நிறுவப்பட்டு, மலைசாதி மக்களுக்கும் மற்றும் கால்நடைகளுக்கும் மருத்துவவசதி செய்யப்படுள்ளது.

சமுதாய சேவைக்குழு

அமெரிக்க நாட்டு நிதியுதவியின் மூலம் கல்ராயன் மலையில் பணியாற்றி வரும் இக்குழு, 1981ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இக்குழு குறிப்பாகப் பெண்களின் மேம்பாட்டிற்காகவும், அவர்களின் பொருளாதார வசதியை உயர்த்துவதற்காகவும் பாடுபட்டுவருகிறது. திரு. வி.வி.ரெட்டி, திட்டஒருங்கிணைப்பாளர் அவர்களின் மேற்பார்வையில் அத்திட்டம் நடைபெறுகிறது. இதில் பகுதிநேர வேலையாக 7 நபர்களுக்கும், நிரந்தரப்பணியாளராக 14 நபர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இவர்களில் சென்னை ஸ்டெல்லா மேரி கல்லூரியில் நவநிர்மாபாடத்திட்டத்தில் எம்.ஏ.பட்டம் பெற்ற மூன்று பெண்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

சமூக நலக் காடுகளை ஊக்குவிக்கும் பொருட்டு 1983ஆம் ஆண்டு 500 குடும்பங்களுக்கு 7000 மரக்கன்றுகள் (Seedlings) இக்குழுவினால் இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளன.

மாதிரிகாப்பித்தோட்டம்
கருமந்துறை
பொது குறிப்புகள்

மொத்த பரப்பளவு	:	100. ஏக்டர்
நிலமாற்றம் செய்த நாள்	:	6.11.82
பணிகள் துவங்கிய நாள்	:	10.11.82
அரசு ஆணை எண்	:	எண்: 1407 நாள்: 2.6.82 வேளாண்
பள்ளமை அமைந்துள்ள கிராமம்	:	மணியார் கு
நீர்ப்பாசன வசதி	:	கிணறு-1 எண்
குடிநீர் வசதி	:	கை பம்பு 1 எண்
பணியாளர்கள்	:	1. தோட்டக்கலை [illegible] [illegible]

தோட்டக்கலை அலுவலர் [illegible]

1984ல் 6500 மரக்கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. தோட்டக்கலைத் துறையிடமிருந்து மா, தென்னை, எலுமிச்சை போன்ற கன்றுகளை மானிய விலையில் வாங்கி மலைசாதிமக்களுக்கு இக்குழு இலவசமாக வழங்கி வருகிறது.

பட்டு வளர்ப்பு

பட்டு வளர்ப்புக்கு அரசு 75 சதவிகித மானியம் தருகிறது. மீதமுள்ள 25 சதவிகிதத் தொகையைத் தொழில் செய்வோர் முதலீடு செய்ய வேண்டும். சமுதாய வேலைக்குழு மலைசாதி மக்களுக்கு உதவிடும் பொருட்டு அவர்கள் முதலீடு செய்ய வேண்டிய 25 சதவிகிதத் தொகையையும் குழுவே ஏற்றுக்கொண்டு வழங்கிவருகிறது.

மலைசாதி மக்களுக்கு இக்குழு இலவசமாக ஆட்டுக் குட்டிகளை வழங்கி வருகிறது. ஆனால் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு இது போன்ற ஒரு ஆட்டுக் குட்டியைச் சேவைக் குழுவிடம் திருப்பி ஒப்படைக்க வேண்டும். ஒப்படைக்கப்பட்ட ஆட்டுக்குட்டி மற்ற மலைசாதியினருக்கு வழங்கப்படும். 1982ஆம் ஆண்டு 150 ஆட்டுக்குட்டிகள் இத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளன.

இமயம் வென்ற இந்தியப் பெண்மணி

உலகிலேயே மிக உயர்ந்த மலையான இமயமலை மீது 1984ஆம் ஆண்டு மே திங்கள் 23ஆம்நாள் இந்தியப் பெண்மணி ஒருவர் ஏறி வெற்றி கண்டார்.

28 வயதான அந்தப் பெண்மணியின் பெயர் பச்சேந்திரிபால் என்பதாகும். உத்தரப்பிரதேச மாநிலத்தில், உத்தரகாசி மாவட்டத்தில் உள்ள நகுரி என்னும் கிராமத்தைச்சேர்ந்த இவர், ஜாம்ஷெட்பூரில் உள்ள டாடா இரும்பு உருக்கு நிறுவனத்தில், நல்வாழ்வுத்துறை,விளையாட்டுப் பிரிவு உதவியாளர் ஆவார்.

அவருடன் டார்ஜிலிங்கைச் சேர்ந்த டோர்ஜ்லாது (39 வயது) என்பவரும், நேபாள ஷெர்பா ஆங் டோர்ஜித் என்பவரும் இமயமலையை வெற்றி கொண்டனர்.

இமயமலையின் மொத்தம் 8848 மீட்டர் (29002 அடி) உயரமுள்ள 'எவரெஸ்ட்' சிகரத்தின் மீது ஏறிய 5-வது பெண்மணி என்னும் பெருமையைப் பச்சேந்திரிபால் பெறுகிறார். ஆனால், இச்சாதனையைப் புரிந்துள்ள முதலாவது இந்தியப் பெண்மணி இவர்தான்.

1975ஆம் ஆண்டில் ஜங்கோ தாபெய் என்னும் ஜப்பானியப் பெண்மணி இமயத்தில் ஏறினார். அவர்தான் இச்சிகரத்தை அடைந்த முதலாவது பெண்மணியாவார்.

அதே ஆண்டில் ஒரு சீன மலையேற்றப் பெண்கள் குழுவுடன் சென்றபுன்டாங் என்னும் திபெத்தியப் பெண்மணி இமயத்தை வெற்றி கண்டார்.

1978ல் வாண்டா ரத்கீவீட்ஸ் என்னும் போலந்து நாட்டுப்

டோர்ஜ்லாது

பெண்மணியும், 1979ல் ஹான்னலோர் ஸ்மிட்ஸ் என்னும் ஜெர்மானிய பெண்மணியும் இமயத்தின் மீது ஏறினார்கள்.

இப்போது இந்திய வீராங்கனை பச்சேந்திரிபால் இமயத்தை எட்டிப் பிடித்திருக்கிறார். இதுவரை இச்சிகரத்தில் ஏறிய பெண்களிலேயே மிகவும் இளைய பெண்மணி இவர்தான்.

பச்சேந்திரி பாலுடன் இமயத்தில் ஏறிய ஆங்டோர்ஜித் என்பவர், பிராணவாயு கருவி ஏதும் உடன் கொண்டு செல்லாமல் இந்தச் சாதனையைப் புரிந்திருக்கிறார்.

இமயமலையை எட்டிப்பிடித்த இந்தியக் குழுவினர் மற்றொரு சாதனையையும் நிகழ்த்தி இருக்கின்றனர்.

வழக்கமாக இதுவரை இந்தச் சிகரத்தின்மீது ஏறியுள்ள இந்தியர்கள் அனைவருமே, அதன் தெற்கு முகத்தில் சற்று உயரத்தில் அமைக்கப்பட்ட முகாமில் இருந்துதான் புறப்பட்டுச் சென்றனர். ஆனால் தெற்கு முகத்தில் கும் கீழே உள்ள ஒரு முகாமிலிருந்து புறப்பட்டு முழு மூச்சுடன் அச்சிகரத்தை எட்டி இருப்பது இதுவே முதல் தடவையாகும்.

இமயமலையில் அதிக அளவில் மலையேற்ற வீரர்களை அனுப்பும் நாடுகளில் இந்தியா 4வது இடத்தை வகித்து வருகிறது. இதுவரை இந்தச் சிகரத்தை எட்டிய இந்திய வீரர்களின் எண்ணிக்கை 13.

26க்கும் அதிகமான வீரர்களை அந்தச் சிகரத்திற்கு அனுப்பி உள்ள நேபாளம் முதலிடத்தில் உள்ளது. அமெரிக்கா (23 பேர்), ஜப்பான் (15 பேர்), இந்தியா (13 பேர்), ரஷ்யா (11 பேர்) ஆகியன முறையே 2வது, 3வது, 4வது, 5வது இடங்களில் உள்ளன.

பச்சேந்திரிபால்

இமயத்தை வென்ற முதல் இந்தியப் பெண்மணியான பச்சேந்திரிபாலுக்கு உத்தரப்பிரதேச முதலமைச்சர் ரூ 50 ஆயிரம் பரிசு அளித்துள்ளார்.

இமயமலையில் ஏறி வெற்றிக் கொடி நாட்டியுள்ள முதல் இந்தியப் பெண் பச்சேந்திரிக்கு மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு.கியானி ஜெயில்சிங் அவர்கள் வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார்.

''தாய்க்குலமே பெருமை படக்கூடிய மகத்தான சாதனை ஏற்படுத்தி இருக்கிறீர்கள். உங்களுக்கு இந்திய மக்கள் சார்பிலும், என் சார்பிலும் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்'' என்று அதில் அவர் குறிப்பிட்டு உள்ளார்.

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில், ''மலையேற்றத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் என் மனப்பூர்வமான பாராட்டுக்கள்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

திரு எல். கே. ஜா அவர்களைத் தலைவராகக் கொண்ட வெண்மைப் புரட்சி 2-வது திட்ட மதிப்பீட்டுக் குழு, மாண்புமிகு அவர்களை 21-6-84 அன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்தது. மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்களும், இ.ஆ.ப., அவர்களும் உடன் தலைமைச் செயலாளர் திரு கு. சொக்கலிங்கம், இ.ஆ.ப., அவர்களும் உள்ளனர்.

சென்னையில் குடிசை மாற்று வாரிய அலுவலக இணைப்புக் கட்டடமான அறிஞர் அண்ணா பவள விழா கட்டடத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 17-6-84-ல் திறந்து வைத்தார்.

மாண்புமிகு பொதுப்பணித்துறை மற்றும் வீட்டு வசதி வாரிய அமைச்சர் திரு எஸ்.ஆர். இராதா, குடிசை மாற்று வாரியத் தலைவர் திருமதி சுலோசனா சம்பத், பேராசிரியர் அண்ணாவின் துணைவியார் ராணி அம்மையார் ஆகியோர் உடன் உள்ளனர்.

மக்கள் நல்வாழ்வுத் துறையின் மகத்தான பணிகள்

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்
டாக்டர் எச். வி. ஹண்டே

85349

"கி.பி. 2000-க்குள் அனைவருக்கும் நலவாழ்வு'' அளித்தல் என்ற நோக்கத்தைத் தீவிரமாக எய்துவதே அரசின் முக்கிய நோக்கமாகும். இக்கொள்கையின் அடிப்படையில், தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக, அதிலும் குறிப்பாக கிராம மக்களின் நலனுக்காகப் பல்வேறு சுகாதார நலத் திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு செயல்படுத்தி வருகிறது.

கடந்த நான்காண்டுகளில் ஒப்புதல் அளிக்கப்பட்ட பல்வேறு சுகாதார நலத் திட்டங்கள், எய்திய சாதனைகள் ஆகியவை வருமாறு:

சுகாதாரத் துணை நிலையங்கள்

எல்லைப் பகுதிகளில் வசிக்கும் கிராம மக்களுக்கு ஆரம்பச் சுகாதாரப் பணியினை வழங்கும் நிறுவனங்களே சுகாதாரத் துணை நிலையங்கள் ஆகும். இவை, சமவெளிகளில் 5,000 மக்களுக்கு ஒன்று என்ற வீதத்திலும், பழங்குடியினர் வாழும் பகுதிகள், மலைப் பகுதிகள் ஆகியவற்றில் 3,000 மக்களுக்கு ஒன்று என்ற வீதத்திலும் அமைக்கப்படுகின்றன. சுகாதாரத் துணை நிலையங்கள் அமைக்கப்பட்டதில் எய்திய சாதனை வருமாறு:

1-4-1978ஆம் நாளன்றிருந்தவாறு	...	2964
1978-79	...	377
1979-80	...	19
1980-81	...	30
1981-82	...	442
1982-83	...	754
1983-84	...	323
(1984 ஜனவரி வரை)		
	...	4909

நடப்பாண்டு இறுதிக்குள் 5,000 சுகாதாரத் துணை நிலையங்கள் செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆரம்பச் சுகாதார நிலையங்கள்

தமிழ்நாட்டில் தற்போது செயற்பட்டு வரும் 424 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் (இவை ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக்காலத்தின்போது ஏற்படுத்தப்பட்ட [illegible] கூடுதல் ஆரம்பச் சுகாதார நிலையங்களாகும் (383 + 41). கிராம மக்களுக்குச் சிகிச்சை அளித்தல், நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், உடல்நல மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுதல் ஆகிய பணிகளைப் புரிகின்றன. முறையான ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு - அறுவைச் சிகிச்சை உதவி மருத்துவர்கள் 3 பேர் என்ற வீதத்திலும், கூடுதல் ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு அறுவைச் சிகிச்சை உதவி மருத்துவர்கள் 2 பேர் என்ற வீதத்திலும் கிராமப் பகுதிகளில் 1295 அறுவைச் சிகிச்சை உதவி மருத்துவர்கள் பணி புரிகின்றனர்.

பொதுமக்களுக்கு இந்திய மருத்துவ முறையிலும் சிகிச்சை அளிப்பதற்காக 186 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் சித்த மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆண்டொன்றுக்கு ஓர் ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு ரூ. 20,000 மதிப்புள்ள மருந்துகள் (ஆங்கில முறை) வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திற்கும் கூடுதல் ஆரம்பச் சுகாதார நிலையங்களை ஏற்படுத்துவது என்பது, சுகாதாரப் பணிகளின் கீழ், இந்தியத் தலைமை அமைச்சர் திருமதி இந்திராகாந்தியின் புதிய 20 அம்சத் திட்டத்தின் ஒரு பகுதியாக அமைகிறது. ஏழாம் திட்டக்கால இறுதிக்குள் 3,000 மக்களுக்கு ஓர் ஆரம்பச் சுகாதார நிலையம் என்ற வீதத்தில் மொத்தம் 1,409 ஆரம்பச் சுகாதார நிலையங்களை ஏற்படுத்த மதிப்பிடப்பட்டுள்ளது. இதுவும் மத்திய அரசு ஏற்கெனவே நிர்ணயித்த கோட்பாடாகும்.

424 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் 30 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் சமுதாய நல நிலையங்களாக உயர்த்தப்பட்டுள்ளன. இவை எல்லா வசதிகளுடன் கூடிய பெரிய மருத்துவமனைகளுக்கு நோயாளிகளை அனுப்பி வைக்கும் நிலையங்களாகச் செயல்படுகின்றன. இவற்றில் கூடுதலாக 24 படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதுடன் (மொத்தம் 30) மருத்துவ வல்லுநர்களைக் கொண்டு மருத்துவச் சிகிச்சை அளித்தல், மருத்துவச் சிகிச்சை, நோய்க்குறியியல் அறுவைச் சிகிச்சை வசதிகள் ஆகியவற்றிற்கும் வகை செய்யப்பட்டுள்ளது.

சிறிய சுகாதார நிலையங்கள்

சமுதாய சுகாதார வழிகாட்டித் திட்டத்திற்குப் பதிலாக, சிறிய சுகாதார நிலையங்கள் அமைக்கும் பணியும் நடைமுறைப்படுகிறது. ஒத்துழைப்பு அடிப்படையில் கிராம மக்களுக்கு விரிவான சுகாதாரப் பணிகளையும் - மருத்துவப்பணிகளையும் ஆற்ற விரும்பும் தொண்டு நிறுவனங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன. சிறிய சுகாதார நிலையம் ஒன்றிற்கு ஆண்டுக்கு 18,000ரூபாய் மொத்த செலவில் ஒவ்வொரு 5,000 மக்களுக்கும் சிறிய சுகாதார நிலையங்களை நடத்த இத்திட்டத்தில் ஊக்கமளிக்கப்படுகிறது. இத்தொகையில் 50 சதவீதத்தை (ரூ. 9,000) மாநில அரசு ஈடு செய்யும். இத்தொகை 27,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. கூடுதல் செலவை மேற்கொள்ளும் பொருட்டு பயனடைபவர்களிடமிருந்து நன்கொடை பெறுவதன்மூலம் அல்லது நிதி திரட்டுவதன் மூலம், தொண்டு நிறுவனங்கள் நிதி திரட்டவும் அனுமதிக்கப்படுகின்றன. தமிழகத்தில் இதுவரை 251 சிறிய சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன.

மகப்பேறு – குழந்தை நலப்பணிகள் நோய்த் தடுப்பூசித் திட்டம்

இம்மாநில மக்கள் தொகையில், குழந்தை பெறும் வயதிலுள்ள மகளிரும், 16 வய



திற்குக் குறைவான குழந்தைகளும் 50 சத விகிதம் பேர் உள்ளனர். மக்கள் தொகையில் பெருமளவு, பாதிக்கப்படும் இப்பிரிவினருக்கு மகப்பேறு - குழந்தை நலப் பணிகளில் அதிக முன்னுரிமை அளிப்பதே அரசின் கொள்கை யாகும். மகப்பேறு-குழந்தை நலப் பணிகளில் மகப்பேற்றிற்கு முன்னரும், மகப்பேற்றின் போதும், மகப்பேற்றிற்குப் பின்னரும் தாய் மார்களுக்குச் சிகிச்சை அளிக்கும் பணிகளும் குழந்தைகளுக்குச் சிகிச்சையளிக்கும் பணி களும் அடங்கும். மேலும் 16 வயதிற்குட் பட்ட குழந்தைகளுக்கு நோய் ஏற்படுவதை யும் இறப்புச் சதவீதத்தையும் குறைக்க இயலும்வகையில் பாலர் பள்ளி-பள்ளிச் சிறார் நல்வாழ்வுத் திட்டம் செயல்படுத்தப்படுவதும் இதில் அடங்கும்.

ஆரம்பச் சுகாதார நிலையங்கள், சுகா தாரத் துணை நிலையங்கள் (பிற்பட்ட பகுதிக்கான திட்டம்) முக்கிய - துணை நிலை யங்கள், பூவிருந்தவல்லி சுகாதாரப் பிரிவுப் பகுதியில் அரசு தொடங்கிய பிரதான துணை நிலையங்கள், மகப்பேறு நிலையங்கள், மகப் பேறு இல்லங்கள் ஆகியவற்றின் மூலம், கிராமப் பகுதிகளில் மகப்பேறு - குழந்தை நலப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நகர்ப்பகுதிகளில் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றங்கள் இப்பணிகளுக்கான பொறுப்பை ஏற்கின்றன. மாவட்டச் சுகாதார அதி காரிகள், தங்கள் அதிகார வரம்பிற்குள் அமைந்துள்ள பகுதிகளில் மகப்பேறு-குழந்தை நலப்பணிகள் முழுவதற்கும் பொறுப்பேற்கின் றனர்.

நம் மாநிலத்தில் பல்வேறு நகராட்சி களிலும் மூன்று மாநகராட்சிகளிலும் நடத் தப்படும், நகராட்சி மகப்பேறு மருத்துவ மனைகள் 372, மகப்பேறு நிலையங்கள், இல் லங்கள் 128 உள்ளன. நகராட்சிகள் மாநில நிதியிலிருந்து ¼ பகுதி மானியத்தைப் பெறு கின்றன.

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு திட்டம்.

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின்கீழ், 2 முதல் 4 வயதுவரை

யிலான குழந்தைகளுக்குச் சுகாதார நல வசதிகள் செய்து கொடுப்பதில் பொதுச் சுகாதாரத் துறை தீவிரமாகச் செயல்படு கிறது.

ஆரம்பச் சுகாதார நிலையத்தின் பொதுச் சுகாதாரக் களப் பணியாளர்கள் (ஆடவர், மகளிர்) அல்லது அவர்களுக்கு நிகரான பதவித் தரத்திலுள்ளவர்கள், சுகாதாரப் பணியாளர்கள் (ஆடவர், மகளிர்) அல்லது அவர்களுக்கு நிகரான பதவித் தரத்திலுள்ள வர்கள், மாவட்ட சுகாதார அதிகாரிகள், வட் டாரத்துணை இயக்குநர்கள் ஆகியோர் தங்கள் அதிகார வரம்பிற்குள் அமைந்துள்ள சத்துணவு வழங்கும் மையங்களில் முறையாக துப்புரவு, சுகாதாரம் வழங்குபவர்கள் தூய்மையுடன் உள்ளனரா என்றும், கண்டறி யவதற்காகச் சத்துணவு மையங்களுக்குக் குறிப் பிட்ட காலத்திற்கொருமுறை சென்று பார்வை யிடுகின்றனர். மேலும், தங்கள் கள ஆய்வின் போது, குழந்தைகள் சுகாதார மையங்களி லுள்ள குழந்தைகளைப் பரிசோதித்து அவசிய மான சுகாதார சோதனையும் மருத்துவச் சிகிச்சையும் செய்வதற்கு இயலும் வண்ணம் குழந்தைகள் சுகாதார மையங்களையும் குறிப் பிட்ட காலத்திற்கொருமுறை பார்வையிடு கின்றனர்.

கிராமப்புறக் குழந்தைகளுக்கு இலவசமாகப் பற் பொடி வழங்குதல்

குழந்தைகளுக்கான முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் செயற்பட்டு வருகின்ற மையங்களின் மூலம் கிராமப்புறக் குழந்தை களுக்கு இலவசமாகப் பற்பொடி வழங்கும் திட்டத்தை அரசு 1982 நவம்பரில் கொண்டு வந்தது. 54 இலட்சம் குழந்தைகள் பயன் பெறுகின்றனர். ஒவ்வொருவருக்கும் இத் திட்டத்தின்கீழ் மாதந்தோறும் இலவச மாக 30 கிராம் பற்பொடி வழங்கப்படுகின் றது.

"டானிடா" திட்டம்

கிராம மக்களின் சுகாதாரக் குடும்ப நலத்தை மேம்படுத்தும் நோக்குடன், டென் மார்க் அரசின் நிதியுதவியுடன் புதிய திட்டம் ஒன்று ரூ. 14.40 கோடி செலவில், 1981ஆம் ஆண்டிலிருந்து சேலம், தென்னார்க் காடு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட் டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1981-86 முதற் கொண்டு 5 ஆண்டுகளில், துணை நிலையக் கட்டடங்கள் 523, சுகாதார மேற்பார்வை யாளர் குடியிருப்பு 285, தொடக்கச் சுகாதார நிலைய மருந்தகக் கட்டடங்கள் 15, தொடக்க சுகாதார நிலையங்களில் மருத்துவ அதிகாரி களுக்கான குடியிருப்புகள் 36, மகப்பேறு வார்டுகள் 2, அறுவைச் சிகிச்சைக் கூடங்கள் 4, குழந்தைகள் சிகிச்சை வார்டு 2 கட்டு வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

கண்புரை நோய் அறுவைச் சிகிச்சை

பார்வைக் கோளாறுகளைத் தடுக்கும் பொருட்டு, அரசு மருத்துவமனைகளிலும் கண்சிகிச்சை முகாம்களிலும் கண்புரை சிகிச்சை நோய் அறுவைச் சிகிச்சைகள் செய் யப்படுகின்றன. கடந்த மூன்றாண்டுகளிலும் 1983-84ஆம் ஆண்டிலும் (1984 ஜனவரி வரையில்) நடத்தப் பெற்ற கண்புரை நோய் அறுவைச் சிகிச்சைகளின் எண்ணிக்கை வரு மாறு :

1980—81	...	52,350
1981—82	...	78,810
1982—83	..	79,641
1983—84 (ஜனவரி வரையில்)	...	60,546

விபத்து-அவசரச் சிகிச்சைத் திட்டம்

விபத்துக்களில் பாதிக்கப்படுபவர்களை விரைவில் எடுத்துச் செல்லவும், உடனடி மருத்துவச் சிகிச்சை அளிக்கவும், 1979-ல் அரசு விபத்து-அவசர சிகிச்சைத் திட்டத்தைக் கொண்டு வந்தது. இத்திட்டம் 13 மாவட் டங்களுக்கும் நீட்டிக்கப்பட்டது.

முதல்கட்டமாக 1979-80ல் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களிலும் 1981-82-ல் இரண்டாவது கட்டமாக நீலகிரி, கோயம்புத்தூர், பெரியார், திருச்சி மாவட்டங்களிலும், மூன்றாவது கட்ட மாக தென்னார்க்காடு, சேலம், மாவட்டங் களிலும், நான்காவது கட்டமாக தருமபுரி, செங்கற்பட்டு மாவட்டங்களிலும், ஐந்தாவது கட்டமாக வட ஆர்க்காடு மாவட்டத்திலும் தொடங்கப் பெற்றது.

தொழுநோய் ஒழிப்புத் திட்டம்

தொழு நோய் ஒழிப்புத் திட்டத்தை வெற்றிகரமாய் செயல்படுத்தும் மாநிலங் களில் தமிழ்நாடு முதல் மாநிலமாகும். 1980-ல் 18.06 இலட்சம் பள்ளிச் சிறார் சோதிக்கப் பட்டனர். 0.10 இலட்சம் பேருக்கு நோய் கண்டிருப்பதாக அறியப்பட்டது. 1981-ல் சோதிக்கப்பட்ட 25.27 இலட்சம் பள்ளிச் சிறார்களில் 0.12 இலட்சம் பேருக்கும், 1982-ல் சோதிக்கப்பட்ட 46.78 இலட்சம் சிறார்களில் 0.10 இலட்சம் பேருக்கும் 1983ல் சோதிக்கப்பட்ட 52.09 இலட்சம் சிறார் களில் 0.13 இலட்சம் பேருக்கும் நோய் கண்டிருப்பதாக அறியப்பட்டது.

பெரியவர்களைச் சோதித்ததில் 1980-ல் சோதனை செய்யப்பட்ட 97.6 இலட்சம் பேரில் 29,968 பேருக்கும், 1981-ல் சோதனை செய்யப்பட்ட 105.3 இலட்சம் பேர்களில் 25,475 பேருக்கும், 1982-ல் சோதிக்கப்பட்ட 132.38 இலட்சம் பேரில் 32,886 பேருக் கும், 1983 டிசம்பர் வரை சோதிக்கப்பட்ட 131.07 இலட்சம் பேர்களில் 25,797 பேருக் கும் நோய் கண்டிருப்பதாக ஆய்வு எடுத்து ரைக்கிறது.

தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தைச் செயல்படுத்தும் வகையில் ஆன செலவு விவரம் வருமாறு:

1980-81-ல் மத்திய அரசு ரூ. 7.95 இலட்சம், 1981-82-ல் ரூ. 8.99 இலட்சம்,

1982-83ல் ரூ. 5.58 இலட்சம், 1983-84ல் ரூ. 8.62 இலட்சம் செலவிட்டுள்ளது. தமிழக அரசு 1981—1984 முடிய, முறையே ரூ. 207 இலட்சம் ரூ. 238.09 இலட்சம் ரூ. 268.28 இலட்சம் ரூ. 298.70 இலட்சம் செலவிட்டுள்ளது.

காசநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம்

காசநோயைக் கட்டுப்படுத்தும் நோக்குடன், மூன்றாவது திட்டக் காலத்தில் வகுக்கப்பட்ட காசநோய் கட்டுப்பாட்டுத் திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது.

காசநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கீழ் கடந்த நான்காண்டுகளில் எய்தப்பெற்ற சாதனைகள் வருமாறு :

1980-81ல் 2,39,813 பேரும், 1981-82ல் 2,49,297 பேரும் 1982-83ல் 3,04,845 பேரும், 1983-84ல் 2,99,132 பேரும் மார்பு எக்ஸ் ஊடுகதிர் படம் எடுத்துச் சோதிக்கப்பட்டனர். சளி எடுத்துப் புதிதாகச் சோதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1980-81-ல் 1,57,048; 1981-82-ல் 1,62,038, 1982-83ல் 2,32,100, 1983-84ல், 2,88,917 ஆகும். காச நோய் உள்ளதெனப் புதிதாகக் கண்டறியப்பட்டவர்களின் எண்ணிக்கை 1980-81ல் 61,118; 1981-82ல் 70,794; 1982-83-ல் 88,820, 1983-84ல் 93437. காச நோய்த் தடுப்பு ஊசி போடப்பட்டவர்களின் எண்ணிக்கை 1980-81-ல் 13,16,407; 1981-82-ல் 13,38,230,1982-83ல் 11,98,472;1983-84ல் 11,86,728 ஆகும்.

நோய்த் தடுப்பு, நோய்த் தீர்ப்புச் சுகாதாரக் கவனிப்புப் பணிகள் வகையில் முனைப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. கடந்த நான்காண்டுகளில் எடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கைகள் வருமாறு:

1983-84-ல் மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள், வட்ட மருத்துவமனைகள் ஏனைய மருத்துவமனைகளின் படுக்கை எண்ணிக்கை 513 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. கிராமப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு மருத்துவ வசதி அளிக்க கல்லூரி இணைந்த மருத்துவ மனைகள் நீங்கலாக அரசு மருத்துவ மனைகளில் உள்ள மொத்தப் படுக்கை எண்ணிக்கை தற்போது 14,241 ஆகும். இவை தவிர 712 படுக்கைகள் காசநோய்க்கென்றே காச நோய் மருத்துவமனையிலும் மார்பு நோய்ச் சிகிச்சை மருத்துவ மனைகளிலும் உள்ளன.

கடந்த மூன்று ஆண்டுகளில் பல்வேறு அரசு மருத்துவமனைகளில் பின்வரும் தனித் துறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பல்நோய்ச் சிகிச்சைப் பிரிவுகள்	...	13
கண் நோயியல் பிரிவு	...	16
கண், மூக்கு, தொண்டை	...	7
பால்வினை நோயியல்	...	9
உணவியல் சிகிச்சைப் பிரிவு	...	5
முடநீக்கியல் சிகிச்சைப் பிரிவு	...	8
சிசு நோயியல் பிரிவு	...	20

பொதுமக்களின் பயனுக்காக, கல்லூரி இணைந்த மருத்துவமனைகளிலும் ஏனைய மருத்துவமனைகளிலும் பல்வேறு நவீன கருவிகளை அரசு வழங்கியுள்ளது.

மருத்துவக் கல்லூரி

எட்டு மருத்துவக் கல்லூரிகள், பல் மருத்துவக் கல்லூரி ஒன்று, மருத்துவக் கல்லூரிகள் இணைந்த மருத்துவமனைகள் 19, மூன்று புறநகர் மருத்துவமனைகள், கே. கே. நகரிலுள்ள புதுவாழ்வு செயற்கை உறுப்புகள் பொருத்தும் நிலையம், சென்னை சேத்துப்பட்டு, எழும்புருக்கி மார்பு நோய் மருத்துவ நிலையம், காஞ்சிபுரத்திலுள்ள அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவ மனை, கிண்டி 'கிங்' நோய்த் தடுப்பு நிறுவனம் ஆகிய நான்கு மருத்துவ நிலையங்களும் சிறு மருத்துவ நிலையங்கள் ஆறு, எட்டு மருந்தகங்கள் மருத்துவக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன.

பல்வேறு துறைகளில் தேவைப்படும் மருத்துவர்களை நியமிக்கும் பொருட்டு, மேலே குறிப்பிட்டுள்ளவாறு புதிய பாட முறையைத் தொடங்கி, தற்போதுள்ள பாடமுறையில் கூடுதல் இடத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.



பட்ட மேற்படிப்பு/பட்டப் படிப்பு

எம். டி. பொது மருத்துவம்.
எம். டி. எலும்புருக்கி மார்பு நோய்,
எம். எஸ். பொது அறுவைச் சிகிச்சை,
எம். டி. மகப்பேறு-மகளிர் நோயியல்.
எம். எஸ். விரைவீக்க இயல்.
எம். டி. எம். இரைப்பை-குடல் நோயியல்
டி. எம். இதய நோயியல்.
டி. ஜி. ஓ.
டி. ஓ.
டிசிஎச்.

சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் திறந்த இருதய அறுவைச் சிகிச்சை

சில வகை இருதய நோய்க்கு, திறந்த இருதய அறுவைச் சிகிச்சைக்கு அதிகச் செலவு பிடிக்கும் நவீன அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும். சென்னை அரசினர் மருத்துவமனையில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு இலவசமாக இச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இச் சிகிச்சை பெறுகின்றவர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து வருகிறது.

எனவே, சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் திறந்த இருதய அறுவைச் சிகிச்சையாளர்களுடன், மார்புப் பகுதிச் சிகிச்சை வசதிகள் தேவையான பணித் துறைக்கு மேலும் 80 படுக்கைகளுக்கு அனுமதியளித்ததன் மூலம் வலுப்படுத்தப்பட்டுள்ளது.

மதுரை இராஜாஜி மருத்துவ மனையில் திறந்த இருதய அறுவைச் சிகிச்சை

தற்போது திறந்த இருதய அறுவைச் சிகிச்சை நடத்துவதற்கான வசதிகள் சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் மட்டுமே இருக்கின்றன. இதுவரையில் திறந்த இருதய அறுவைச் சிகிச்சைகள் 2043 செய்யப்பட்டுள்ளன. தென் மாவட்டங்களிலுள்ளவர்களுக்கும் வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு மதுரை அரசினர் இராஜாஜி மருத்துவமனையில் திறந்த இருதய அறுவைச் சிகிச்சைப் பிரிவிற்கான பணியாளர்களுக்கும் சாதனங்களுக்கும் அரசு அனுமதி அளித்துள்ளது.

கடந்த 4 ஆண்டுகளில் தொடங்கப்பட்ட புதிய மருத்துவச் சிறப்புப் பிரிவுகளில் சில வருமாறு:—

தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் நரம்பியல் துறை:

தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் தீக்காயச் சிகிச்சைப் பிரிவு;

மதுரை, அரசினர் இராஜாஜி மருத்துவ மனையில் திறந்த இருதய அறுவைச் சிகிச்சைப் பிரிவு;

சென்னை இராயப்பேட்டை மருத்துவ மனையில் தலைக்காய சிகிச்சைப் பிரிவு;

சென்னையிலுள்ள குழந்தை நல நிறுவனம், குழந்தை நல மருத்துவமனையில் தடுப்பூசிப் பிரிவு;

சென்னையிலுள்ள குழந்தை நல நிறுவனம் - குழந்தை நல மருத்துவமனையில், குழந்தை இதயநோய் மும்முரச் சிகிச்சைப் பிரிவு.

குடிசை வாழ் மக்களுக்கு மருத்துவ உதவி

குடிசைவாழ் மக்களுக்கான மருத்துவ உதவியை மேம்படுத்தும் நோக்கத்துடன், மாநகரிலுள்ள ஒரு மருத்துவக் கல்லூரியும், மாவட்டங்களிலுள்ள ஒரு மருத்துவக்கல்லூரியும் குடிசைகளைத் தங்கள் பொறுப்பில் எடுத்துக் கொள்ளவேண்டுமென அரசு ஆணை பிறப்பித்துள்ளது. சென்னை மருத்துவக் கல்லூரியும், மதுரை மருத்துவக் கல்லூரியும் இந்தப் பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. மருத்துவக் கல்லூரி மாணவர்கள் குடிசைப்பகுதிகளுக்குச் சென்று இத்திட்டத்தின்கீழ் மக்களின் சுகாதாரத் தேவைகளை நிறைவு செய்ய வேண்டும்.

கல்லூரி இணைந்த மருத்துவ மனைகளுக்கான சாதனங்கள்

உடம்பின் உட்புறம் முழுவதையும் படம் பிடித்துக் காட்டும் கருவி:

தலையின் உட்புறத்தைப்படம் பிடித்துக் காட்டும் கருவி

அரசினர் பொது மருத்துவமனையில் அமைக்கப்பட்டுள்ள, தலையின் உட்புறத்தைப் படம் பிடித்துக் காட்டும் கருவி மக்களுக்குப்

பெரிதும் உதவுகிறது. இதுவரையில்சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் 13,497 கதிர்வீச்சுப் படங்கள் (Scans) எடுக்கப் பட்டுள்ளன.

மாவட்டப்பிரிவிலுள்ள மக்களுக்கு முதல் தரமான சிறந்த மருத்துவ உதவி அளிக்கும் பொருட்டு மதுரை, தஞ்சாவூர் மாவட்டங் களிலுள்ள மருத்துவக் கல்லூரி இணைந்த மருத்துவமனைகளுக்காக மிகவும் நவீன சாத னங்களுக்கு அனுமதி வழங்கியதுடன், மதுரை அரசினர் இராஜாஜி மருத்துவ மனைக்கு ரூ. 103 இலட்சம் செலவில் உடம்பின் உட் புறம் முழுவதையும் படம் பிடித்துக் காட்டும் கருவியும் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி - மருத்துவமனைக்கு ரூ. 41 இலட்சம் செலவில் தலையின் உட்புறத்தைப் படம் பிடித்துக் காட்டும் கருவியும் வழங்க அரசு அனுமதி அளித்துள்ளது. சென்னை அரசினர் பொது மருத்துவமனையிலுள்ள இதயநோய் இயல் துறைக்கு பரிசோதனை இதயநோய் ஆய்வுக் கூடம் (Catherisation Laboratory) அமைத்தல்.

சென்னை, அரசினர் பொது மருத்துவ மனையில் ரூ. 73.55 இலட்சம் செலவில் இரண்டாவது இதயநோய்ப் பரிசோதனை ஆய்வுக்கூடம் அமைக்க 1983-84-ல் அரசு அனுமதி அளித்துள்ளது. இச்சாதனம் விரை வில் அமைக்கப்படும்.

பிற நிறுவனங்களுக்கான சாதனங்கள்

மேலே குறிப்பிட்ட, உடம்பின் உட் புறம் முழுவதையும் படம் பிடித்துக் காட்டும் கருவிகளுடன், கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, மதுரை அரசினர் இராஜாஜி மருத்துவமனை, சென்னை அரசினர் ஸ்டேன்லி மருத்துவமனை, சென்னை கீழ்ப் பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, ஆகியவற்றிலுள்ள தீவிரச் சிகிச்சைப் பிரிவு களுக்கு 'டிஸ்லைசர்ஸ்' (Dislysers) போன்ற நவீன சாதனங்களும் கோயம்புத்தூர் மருத் துவக் கல்லூரி மருத்துவமனைக்கு இதயத் துடிப்பு அளவிடு கருவியும் வாங்கப்பட்டுள்ளன.



மேலும் இக்கால அளவில் சென்னை அரசினர் பொது மருத்துவமனைக்கு 'மருத்துவ யாக்ல ஸர்' (Medical Yazhsor) கருவியும் 'பயோஸ் டேட்டர்' (Bio - Stater) கருவியும் வாங்க அனுமதி அளிக்கப்பட்டது.

கல்லூரி இணைந்த மருத்துவமனையில் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்

கல்லூரி இணைந்த மருத்துவ மனை களுக்கு அனுமதிக்கப்பட்ட படுக்கைகளின் எண்ணிக்கை 1980-81-ல் 14265 ஆக இருந் தது. 1983-84ல், 15,212 ஆக அதிகரித்துள் ளது.

மருத்துவப் பொருட்கள் கட்டுப்பாட்டு நிருவாகம்

அரசு நிறுவனங்களில் பயன்படுத்துவதற் கெனவைக்கப்பட்டிருந்த மருந்துப் பொருட்கள் வெளியில் விற்க சிறிது சிறி தாகத் திருடப்பட்ட பல சம்பவங்களைத் தமிழ்நாடு மருந்துப் பொருட்கள் கட்டுப் பாட்டு நிருவாக நிறுவனம் கண்டுபிடித்துள் ளது. மருந்துப் பொருட்களைச் சிறிது சிறி தாகத் திருடிச் செல்வதைத் தடுக்கும் பொருட்டு அரசு புதியதொரு நடைமுறையை அறிமுகப்படுத்தியுள்ளது; இம்முறையில், அரசு நிறுவனங்களுக்கு வழங்கப்படும் மருந்து பொருட்கள் குறிப்பிட்டதொரு இலச்சினை கொண்டதாக இருக்க வேண்டும்; மருந்துப் பொருட்கள் சிறிது சிறிதாகத் திருடுபோவதை எளிதில் தடுக்க இது உதவியாக இருக்கும். இம்முறையை மேலும் கண்டிப்புள்ளதாக்க மேற்கொண்டு சட்ட முன் வடிவு ஒன்றினை அரசு அண்மையில் பேரவையில் கொணர்ந் துள்ளது. அது, சம்பந்தப்பட்ட மருந்துப் பொருட்களை உரிய காரணமின்றி வைத் திருப்பதைத் தண்டிக்கத் தக்க குற்றமாக்கு கிறது. இச்சட்ட முன்வடிவின்படி இந்த மருந்துப் பொருட்களைக் கையாளுபவர் களைக் கண்டுபிடித்து அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க மருந்துப்பொருள் ஆய் வாளர்களுக்கு அதிகாரங்கள் வழங்கக் கருதப் பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின்கீழ், வழங்கப்படும் பல்பொடி தர முள்ளதாக இருக்கிறதா என்பதைக் கண் காணிக்கும் பொறுப்பும், மாநில அரசு மருந்துப் பொருட்கள் கட்டுப்பாட்டு நிறு வனத்திடம் விடப்பட்டுள்ளது:

1980 முதல் 1984 வரை எய்திய சாதனைகள்

மருந்துப் பொருட்களின் அளவு குறை வது கண்காணிக்கப்பட்டு, பற்றாக்குறையாக உள்ள மருந்துப் பொருட்கள் பொது மக் களுக்குக் கிடைக்கும்படி செய்யப்பட்டுள்ளது.

தரமுள்ள மருந்துப் பொருட்கள்மட்டுமே பொதுமக்களுக்குக் கிடைக்கச் செய்யப்படு கிறது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு, அரசு மருத்துவமனைகள் மூலம் வழங்கப்படும் இந்த மருந்துப் பொருட்கள் உட்பட, இம்மாநிலத்தில் தயாரித்து வழங் கப்படும் மருந்துப் பொருட்கள் அனைத்தின் தரமும் இடைவிடாது கண்காணித்து வரப் படுகிறது.

மயக்க மருந்துகள் கள்ளத்தனமாக எடுத்துச் செல்லப்படுவதைச் செவ்வியமுறை யில் கட்டுப்படுத்துவதற்கு, மயக்க மருந்துகள் உபயோகப் புலனாய்வுப் பிரிவுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது.

சிகிச்சை முறையில் பயனற்றவை என்று கண்டறியப்பட்டுள்ள ஒவ்வாத நிர்ணயக் கலவை மருந்துகளும் உடல் நலனுக்கு ஊறு விளைவிக்கக் கூடிய மருந்துப் பொருட்களும் உபயோகத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளன. அவற்றின் தயாரிப்பு நிறுத்தப்பட்டுள்ளது.

மருந்துப் பொருள் தயாரிப்புத் தொழிற் சாலைகள், கணக்கில்லாத அளவிற்குப் பெருகி வருவதைக் கட்டுப்படுத்தும்பொருட்டு நிறுவனம் ஒன்றுக்கு ஆறு தொழிற்சாலைகள் என்ற அளவில், உரிமம் வழங்குவது கட்டுப் படுத்தப்பட்டுள்ளது. மருந்துப்பொருட்கள் சோதிக்கப்பட போதிய வசதிகள் இல்லை யெனில் அவற்றைத் தயாரிக்கப் புதிதாக உரிமங்கள் வழங்கப்படுவதில்லை.

மருந்துப் பொருட்கள் கட்டுப்பாட்டு நிரு வாக அலுவலர்களுக்கு 88,000 ரூபாய் விலை மதிப்புள்ள தரமான பார்வைப் புத்தகங்கள் (Reference Books) வழங்கப்பட்டுள்ளன.

குடும்ப நலத் திட்டம்

தமிழ்நாட்டில், குடும்ப நலத் திட்டம் எவ்வித கட்டாயமும் நிர்ப்பந்தமும் இன்றி தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1981-82-ஆம் ஆண்டில் குடும்பநலத் திட்ட அறுவைச் சிகிச்சை இலக்கில் 103 சதவீதச் சாதனை புரிந்து இலக்கு தாண்டப்பட்டுள்ளது. 1982-83ஆம் ஆண்டு வரையறுத்த இலக்கு 2.92 இலட்சமாகும். ஆனால், 2.70இலட்சம் அறுவைச் சிகிச்சைகள்தான் நடத்தப்பட்டுள் ளன. 1983-84ஆம் ஆண்டிற்கு 3.99 இலட் சம் என இந்திய அரசு இலக்கு வரையறுத் துள்ளது. இவ்வகையில் 4,96,780 பேருக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. லேப்ராஸ்கோப் முறையில் அறுவைச்சிகிச்சை செய்வது மக்களிடையே பெரும் ஆதரவைப் பெற்றுள்ளது. தற்போது மொத்தம் 49 லேப்ராஸ்கோப்புகள் மருத்துவமனைகளில் வைக்கப்பட்டுள்ளன. வட்ட மருத்துவமனை



களில் வைக்கும் பொருட்டு 26 லேப்ராஸ் கோப்புகள் வாங்க அரசு அனுமதி வழங்கி யுள்ளது. இவற்றைப் பயன்படுத்த போதிய அளவு மருத்துவர்களுக்குப் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது.

குடும்ப நலத் திட்டத்தின் கீழ் கடந்த நான்காண்டுகளில் எய்தியுள்ள சாதனைகள் வருமாறு:

1980-81-ல் 1,38,831 பேரும், 1981-82ல் 1,88,823 பேரும், 1982-83ல் 2,70,719 பேரும், 1983-84ல் 4,96,780 பேரும் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யப்பட் டுள்ளனர்.

1980-81ல் 32,597 பேருக்கும் 1981-82ல் 32,991 பேருக்கும் 1982-83ல் 37,261 பேருக் கும், 1983-84-ல் 55,877 பேருக்கும் கருத் தடை வளையங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு, பல்வேறு வகையிலும், தமிழ கத்தின் மக்கள் நல்வாழ்வுத் துறையின் பணிகள் வளர்ச்சி பெற்றே வருகின்றன. Health is Wealth என்னும் ஆங்கிலப் பழ மொழியின் அருமையை அறிந்து மாண்புமிகு புரட்சித் தலைவரின் அரசு - நல்வாழ்வுப் பணிகளுக்குரிய திட்டங்களை உடனுக்குடன் நிறைவேற்றிப் பெருமை பெற்று வருகிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

* வாலிபர்கள் நடமாடும் எஃகுக் கம்பிகள், அகத்திலே அருவி போல் ஆர்வம், முகத் திலே வீரக்களை, செயலிலே துடிதுப்புக் காணப்படும். தலை குனிந்து நிற்பது, பெருமூச்செறிவது, நம்மால் ஆகிற காரியமா? என்று இழுத்துப் பேசுவது ஆகிய முறைகள் அவர்களுக்குப் பிடிக் காதவை —அவர்கள் செயலாற்றும்வீரர்கள்.

மலேரியா பிணி நீக்கும் மாமருந்து!

சின்கோனாத்துறை தமிழ்நாடு அரசால் வணிக அடிப்படையில் நடத்தப்படும் ஓர் அரசுத்துறை நிறுவனமாகும். இத்துறை மலேரியா நோயினை ஒழிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் 'கொய்னா சல்பேட்' மற்றும் இதய நோய்களுக்குப் பயன்படுத்தப்படும் 'குனிடின் சல்பேட்' ஆகிய மருந்துப் பொருட்களைப் பெருமளவில் தயாரித்து வருகிறது. அது மட்டுமல்ல, மருந்து மற்றும் வாசனைத் தைலங்களையும் இத்துறை தயாரித்து வருகிறது.

தென் அமெரிக்காவிலுள்ள சர் கிளமண்ட் ஆர். மார்க்கம் என்பவர் சின்கோனாச் செடி விதைகளைக் கொண்டு வந்தார். அந்த விதைகளைக் கொண்டு, 1860ஆம் ஆண்டு இந்தியாவில் நீலகிரி மாவட்டத்தில், தொட்டபெட்டாவில் சின்கோனாப் பயிர் முதன் முதலில் சோதனை அளவில் பயிரிடப்பட்டது. இதைப் பயிரிட்டவர் உதகைத் தாவரப் பூங்காவில் அன்று காப்பாளராக இருந்த திரு மெக் அய்வர் என்பவர். திரு மெக் அய்வரால் துவக்கப்பெற்ற அந்தச் சோதனைப் பயிரிடல், சின்கோனா பயிரிட ஏற்ற கால நிலையுள்ள மற்ற இடங்களிலும் பெருமளவில் விரிவடைந்தது.

தற்போது சின்கோனா பயிரிடப்பட்ட மொத்த பரப்பு 2144.53 எக்டேர்களாகும். துறையின் வருவாயைப் பெருக்கும் பொருட்டு மருந்து மற்றும் மணம் தரும் செடிகள் பயிரிடல் மேற்கொள்ளப்பட்டது. மருந்து மற்றும் மணம் தரும் செடிகளின் மொத்த பரப்பு 1288.25 எக்டேர்களாகும்.

1980-81 முதல் 1983-84 வரையிலும் 479.50 எக்டேர்களில் சின்கோனாச் செடிகளும் 751.90 எக்டேர்களில் மருந்து மற்றும் மணம் தரும் தைலச் செடிகளும் பயிரிடப்பட்டுள்ளன. 31.450 கிலோ கொய்னாப் பொருட்கள் அரசினர் கொய்னா ஆலையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 45,547.7 கிலோ மருந்து மற்றும் மணம் தரும் தைலங்கள் நடுவட்டத்திலுள்ள அரசினர் மருந்து மற்றும் மணம் தரும் தைல ஆலையில் 1980-81 முதல் 1983-84 வரையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது தவிர 1,42,000 லிட்டர்கள் சினிபிரஷும் 6,81,595 கற்பூர வில்லைகளும் மேற்படி தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

ரூ 71.22 இலட்சம் மதிப்புள்ள கொய்னாப் பொருட்கள், வெளிநாட்டுச் சந்தையிலும், உள்நாட்டுச் சந்தையிலும் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இதைத்தவிர ரூ. 105.06 லட்சம் மதிப்புள்ள மருந்து மற்றும் மணம் தரும் தைலங்கள் விற்பனை செய்யப்பட்டன. வெளிநாட்டுச் சந்தையில் கொய்னாப் பொருட்களின் விலை சரிவினாலும், வெளிநாடுகளில் கொய்னாப் பொருட்களின் தேவை குறைந்ததாலும், மேற்படி ஆண்டுகளில் கொய்னாப் பொருட்கள் அதிக அளவு ஏற்றுமதி செய்யவில்லை.

இத்துறையின் சின்கோனா மருந்து மற்றும் மணம் தரும் செடிகள் பயிரிடவும், தொழிலாளர்கள் குடியிருப்பு முதலியன கட்டவும், மத்திய மற்றும் மாநில அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. 1980-81 முதல் 1983-84 வரையில், இத்திட்டங்கள் மூலம் செலவிடப்பட்ட தொகை ரூ. 312.55 இலட்சங்களாகும்.

கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்துடன் மருந்து மற்றும் மணம் தரும் செடிகளுக்கும் மற்றும் சின்கோனாப் பயிரில் வரும் நோய்களைத் தடுக்கவும் நோய்களைக் கட்டுப்படுத்தவும் ஒருங்கிணைந்த இரு திட்டங்கள் அமல்படுத்தி செயல்பட்டு வருகின்றன.

மேலே கூறிய திட்டங்களும் சமுதாயத்தின் பின்தங்கிய நிலையில் இருப்பவர்களுக்கு வேலை வாய்ப்பும், வீட்டு வசதியும் ஏற்படுத்திக் கொடுக்கின்றன. தற்பொழுது இத்துறையில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களில் 2000க்குமேற்பட்ட தொழிலாளர்களும், 75 பணியாளர்களும் பணியாற்றி வருகிறார்கள். மொத்தமாக எடுத்துக் கொண்டால், தற்போது 3000 தொழிலாளர்களுக்கு மேல் இத்துறையில் பணியாற்றுகிறார்கள்.

31-3-83 உடன் முடிவடையும் ஆண்டுவரை இத்துறையிலுள்ள சொத்தின் மதிப்பீடு ரூ. 11,05,40,607.25.

இத்துறையிலுள்ள பழைய வீடுகள் தொழிலாளர் நலச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள தரத்திற்கேற்றவையாக இல்லை. ஆகவே, இந்தப் பழைய வீடுகளுக்குப் பதிலாகத் தேவையான வசதிகளுடன் கூடிய புதிய தொழிலாளர் குடியிருப்புகளைப் படிப்படியாகக் கட்டித்தரத் திட்டமிடப்பட்டுள்ளது. மின்விளக்கு, கழிப்பறை, குடிநீர் முதலிய வசதிகளுடன் இப்புதிய குடியிருப்புகள் கட்டப்படுகின்றன. 1980-81 முதல் 1983-84 வரை மேற்கண்ட வசதிகளுடன் கூடிய வீடுகள் கட்ட செலவிடப்பட்ட தொகை ரூ. 39.79 இலட்சமாகும்.

அலைகடலை அடக்கும் மரக்கலம் அமைத்தோர், விண்ணில் பறக்கும் விமானம் படைத்தோர், ஆட்டாறுகளைக் கட்டுக்குக் கொண்டு வந்தோர், நீரில் நெருப்பின் சக்தியைக் கண்டறிந்தோர் அவைவரும் நம்போல் மனிதரே! அவர்களால் முடிந்தது, நம்மால் ஆகும் என்ற நினைப்பு அவர்களை ஊக்குவிக்கும் சக்தியாயிற்று.

தொழிற்துறை இயக்குநரகத்தின்கீழ் இயங்கி வந்த மாநிலப் புவியியல் பிரிவு அதன் தொடக்கத்திலிருந்து தமிழ்நாட்டில் பல கனிம ஆய்வுகளை மேற்கொண்டது.

மாநிலத்தில் பொதுத்துறை மற்றும் தனியார் துறையில் கனிமம் சார்ந்த பல தொழில்கள் அமைவதற்கு மேற்குறித்த கனிம ஆய்வுகள் ஆதாரமாக அமைந்தன. கனிமம் சார்ந்த இரு அரசு நிறுவனங்களான தமிழ்நாடு கனிம நிறுவனமும், தமிழ்நாடு சிராமிக்ஸ் நிறுவனமும் அமைவதற்கும் கனிம ஆய்வுகளே காரணமாக இருந்தன.

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம், இத்துறை இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் மேற்கொண்ட சுண்ணாம்புக்கல் ஆய்வுகள் மற்றும் மதிப்பீட்டுகளின் பயனாக, பொதுத்துறையில் இரு பெரும் சிமெண்ட் ஆலைகளை அமைத்துள்ளது.

புவியியல் சுரங்கத்துறை

மாநிலத்தில் கனிம வளர்ச்சிக்காகவும் கனிம சட்ட விதிமுறை குறைகளைக் களைந்து, கனிம வருவாயினை அதிகரிக்கும் நோக்கத்துடன் 14.4.1983 முதல் புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநரகத்தை அரசு ஏற்படுத்தியுள்ளது. 1983-84 ஆண்டுகளில் தனி இயக்குநரகத்திற்கு முன் மண்டல அளவுகளில் இயங்கி வந்த அலுவலகங்கள் ஒரு உதவி இயக்குநரைத் தலைமையாகக் கொண்டு அனைத்து மாவட்டத் தலைமை இடங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன.

புவியியல் மற்றும் சுரங்கத் துறை இயக்ககத்தின் பணிகள் இருவகைப்படும்:

1. கனிமப் படிவங்களைக் கண்டறிந்து அவைகள் பற்றி மதிப்பீடு செய்து கனிமம் சார்ந்த தொழில்கள் அமைக்கும் சாத்தியக்கூறுகள் பற்றி ஆய்வது.

2. கனிம நிர்வாகம், இப்பணியில் கனிமச் சலுகை மனுக்களைப் பரிசீலிப்பது; மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் தொழிலதிபர்களுக்கு முறையே கனிமம் சார்ந்த பணிகளில் உதவி செய்வது மற்றும் குறித்த முறையில் கனிமம் பயன்பட, அறிவுரை வழங்குவது முதலிய பணிகள் அடங்கும்.

கடந்த நான்காண்டுகளில் இத்துறை மேற்கொண்ட கனிம ஆய்



வுகளின் சாதனைகள் வருமாறு:

கோலார் தங்கச் சுரங்கங்களில் காணப்படும் தங்கம் கொண்ட சிஸ்டுவகைப் பாறைகளின் தென் தொடர்ச்சி தமிழகத்தில் காணப்படுகிறது. தர்மபுரி மாவட்டம் கிருட்டிணகிரி வட்டம், மகாராசக்கடை மற்றும் நாரளபள்ளி காப்புக் காட்டுப் பகுதிகளில் காணப்படும் மேற்குறித்த பாறை வகைகளில் தங்கம் கிடைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டன. இப்பணி இந்தியப் புவியியல் ஆய்வுக் கழகத்துடன் இணைந்து ஆற்றிய ஒன்றாகும். இப்பகுதியில் சேகரிக்கப்பட்டு சோதனையிடப்பட்ட மாதிரிகளில் ஒருடன் பாறையில் 2 கிராம் முதல் 1 கிராம் வரை தங்கம் கிடைக்க வாய்ப்புள்ளது என அறியப்பட்டது. இங்குத் துறப்பணப் பணிகள் மேற்கொள்வதற்கு முன் முறையான புவி பௌதிகம் மற்றும் புவி வேதியல் முறை ஆய்வுகளுக்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சிமெண்டஸ் நிறுவனமும் புவியியல் துறையும் இணைந்து கூட்டாக திருச்சிராப்பள்ளி மாவட்டம் குளித்தலை வட்டத்திலும், மதுரை மாவட்டம் வேடசந்தூர் வட்டத்திலும் காணப்படும் படிக வகைச் சுண்ணாம்புக் கற்களைத் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் பாளையம் அருகில் அமைக்க திட்டமிட்டுள்ள பெரிய சிமெண்ட் ஆலைக்குப் பயன்படுத்த, விரிவான ஆய்வுகள் மேற்கொண்டன. ஆய்வுப் பணியின் ஒவ்வொரு நிலையிலும் சுண்ணாம்புக்கல் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, சிமெண்ட் உற்பத்திக்குப் பொருந்தும் தன்மைகள் பற்றிச் சோதனையிடப்பட்டது. இங்கு 33 மில்லியன் டன்கள் சுண்ணாம்புக்கல் இருப்பு உள்ளதெனக் கணக்கிடப்பட்டுள்ளது. மாநில அரசு, மதுரை மாவட்டத்தில் பாளையம் அருகில் மூன்றாவது சிமெண்ட் ஆலை அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

அரசு வேண்டுகோளிற்கிணங்க, புலியூரில் அமைந்துள்ள திருவாளர்கள் செட்டிநாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் மற்றும் சங்ககிரியில் அமைந்துள்ள இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனம் இவைகளின் சுரங்கக் குத்தகைப் பகுதிகள் மற்றும் குத்தகையற்ற பகுதிகளில் காணப்படும் சுண்ணாம்புக் கல் இருப்பளவு மறு மதிப்பீடு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டம் எட்டயபுரம் வட்டத்தில் திருவாளர்கள் மதராஸ் சிமெண்ட்ஸ் நிறுவனத்தினரின் சுரங்கக் குத்தகைப் பகுதிகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் காணப்படும் சுண்ணாம்புக்

பிலிப்ஸ்

தோற்றத்தில் எல்லா பல்புகளும் ஒன்றுதான்.



ஆனால், பிலிப்ஸ் எனும்போது தரம் பளிச்சிடும்.

தரத்திற்கு உறுதி தருவது இப்பெயர். நீடித்திருக்கும் பளிச்சிடும் வெளிச்சம் தரும் பல்பினைப் பெறவும் இப்பெயர் சொன்னால் போதும். உங்கள் பணத்திற்குத் தகுந்த மதிப்பு தருவதும் இதுவே.
பிலிப்ஸ் பல்புகள். எமது பெயர் கொண்டவை உமது சோதனையில் வெல்லும்.

PEI-1264

பிலிப்ஸ் நூற்றாண்டுகளுக்கும் மேலாக இந்திய வீடுதோறும் விளங்கும் நம்பகமான பெயர்

கல் அமைப்புகள் இத்துறையினரால் ஆய்வுசெய்யப்பட்டு, சுமார் 5 மில்லியன் டன்கள் சிமெண்ட் உற்பத்திக்கேற்ற சுண்ணாம்புக் கல் காணப்படுகிறது என்று உறுதிசெய்யப்பட்டது.

1980-84ஆம் ஆண்டுகளில், இத்துறை கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை வட்டத்திலும் சேலம் மாவட்டம் நாமக்கல் வட்டத்திலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம் முசிறி, குளித்தலை வட்டங்களிலும் குறைமணிக்கற்களுக்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. கன்னியாகுமரி மாவட்டத்தில் கிரைசோபெரில் என்றவகை மணிக்கற்களுக்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு முடிவுற்றது. இங்கு பெக்மடைட் வகைப் பாறைகளில் சிதறிய நிலையில் சிறு கிரைசோபெரில் துண்டுகள் காணப்படுவதால், பொருளாதார முக்கியத்துவம் அற்ற ஒன்றாகும் என முடிவு செய்யப்பட்டது. திருச்சிராப்பள்ளி மற்றும் சேலம் மாவட்டங்களில் ஆய்வுப்பணி மீண்டும் தொடங்கப்பட உள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் 1979-1981-ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட நிலச்சரிவுகள் மனித உயிர் சொத்துக்களுக்குப் பெரும் சேதம் விளைவித்தன. புவியியல் மற்றும் சுரங்கத்துறை மற்றும் இந்தியப் புவியியல் ஆய்வுக் கழகமும் இந்நிலச் சரிவுகள் பற்றிய விரிவான ஆய்வுகள் மேற்கொண்டு நிலச்சரிவுகள் ஏற்படக் காரணங்கள் நிலச்சரிவுகள் ஏற்படாவண்ணம் தடுப்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றியும் விரிவான அறிக்கை அளித்தன.

இந்தியப் புவியியல் ஆய்வுக் கழகம் மாநிலப் புவியியல் துறை நிலச் சரிவுகள் பற்றி மேற்கொண்ட ஆய்வுகள் பின்னர் நிலச்சரிவுகளால் பொருட்சேதம் உயிர்ச்சேதம் ஏற்படுவதைத் தடுப்பதில் பெரும் பங்கு வகித்தன எனப் பாராட்டியுள்ளது.

தென்னக இருப்புப்பாதைத் துறையினரின் வேண்டுகோளிற்கிணங்க, கர்நாடக மாநிலத்தில் பாசன் - மங்களூர் இருப்புப் பாதைப் பிரிவில் நிலச்சரிவுகளால் ஏற்பட்ட சேதம் ஆராயப்பட்டு, அதைத் தடுப்பதற்கான வழிமுறைகள் சுமார் 25 கி.மீ. அளவிற்குப் பரிந்துரைக்கப்பட்டன. மேலும் தமிழ்நாட்டில் மேட்டுப்பாளையம், கர்நாடகாவில் சாம்ராசநகரம் பகுதிகளில் இருப்புப் பாதை அமைக்கும் வழிப்பாதை ஆய்வுப்பணியும் மேற்கொள்ளப்பட்டது.

இருப்புப்பாதை வழியில் அமையவிருக்கும் குகை அமைப்புகள் பற்றி விரிவான ஆய்வு செய்யப்பட்டு, பாதுகாப்பு வழிமுறைகள் வழங்கப்பட்டன. அவ்வாறே போடிநாயக்கனூர்-கம்பம் அகல இருப்புப்பாதை வழிப்பாதை ஆய்வுப்பணிகளும் மேற்கொள்ளப்பட்டு மேற்குறித்து ஆய்வு அறிக்கை தென்னக இருப்புப் பாதைத் துறையினருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இரும்பு மற்றும் எஃகுத் தொழிலில் தரம் குறைந்த இரும்புத் தாதுவைப்பயன்படுத்தி 'ஸ்பாஞ்ச் இரும்பு' உற்பத்தி செய்தல் தற்போதைய தொழில் நுட்பமாகும். இரும்புத்தாது திட எரிபொருளின் மூலம் வேதியல் குறைத்தல் முறையில் உற்பத்திசெய்யப்பட்டு உருண்டைகளாக மாற்றப்படுகின்றன. இத்துறை வடஆர்க்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலையில் காணப்படும் தரம் குறைந்த மாக்னடைட் குவார்ட்ஸைட் இரும்புத்தாதுவைப் பயன்படுத்தி 'ஸ்பாஞ்ச் இரும்பு' உற்பத்தி செய்யும் சாத்தியக் கூறுகள் பற்றி சோதனைகள் மேற்கொண்டு வருகின்றது.

கனிம நிர்வாகம்

மாவட்டத் தலைமை இடங்களில் அலுவலகங்கள் அமைக்கப்பட்ட உடன், முறையான சுரங்க ஆய்வுகள் மேற்கொண்டு முறைகேடுகள் சீர் செய்யப்பட்டதால் கனிம நிர்வாகம் முறைப்படுத்தப்பட்டது. இதனால் முறையான அறிவுப்பூர்வமான சுரங்கப் பணிகள் மேற்கொள்ள வழி வகுக்கப்பட்டது.

முறையான கால இடைவெளிகளிலும், திடீரெனவும் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டதால் சட்டத்திற்குப் புறம்பான சுரங்கப் பணிகளும், அனுமதியின்றிக் கனிமங்கள் கொண்டு செல்வதும் பெருமளவில் தடை செய்யப்பட்டு, கனிம வருவாய் கடந்த நான்கு ஆண்டுகளில் மிக அதிக அளவில் உயர்ந்துள்ளது. 1979-ஆம் ஆண்டில் ஒரு கோடி ரூபாய்க்கும் குறைவாக இருந்த கனிம வருவாய் தற்போது 2.7 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.

குறிப்பாக, சிறுவகைக் கனிமச் சுரங்கங்களின் அளவு மற்றும் அவைகளிலிருந்து கனிமங்கள் பெறக்கூடிய அளவு முதலியவை கருத்தில் கொள்ளப்பட்டது. கனிம வருவாயை உயர்த்துவதற்காக, விற்பனை விலையை நிர்ணயித்து அதன் மூலம் பல சுரங்கங்கள் ஏல விற்பனையின் கீழ்கொண்டு வருவதற்காகக் குறைந்த ஏலத்தொகை நிர்ணயம் செய்யப்பட்டது.

சிறுவகைக் கனிமங்களான ஆற்றுமணல், செங்கல், களிமண் சுட்ட கற்கள் மற்றும் சுக்கான் கல் முதலியன சட்டத்திற்குப் புறம்பான முறையில் வெட்டியெடுத்துக் கொண்டு செல்லும் ஏராளமான நடவடிக்கைகள் கண்டறியப்பட்டன. சட்டப்படி அந்நடவடிக்கைகளின் மேல் அபராதம் விதிக்கப்பட்டது.

சிப்காட்டின் சீரிய பணிகள்:

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியைத் துரிதப்படுத்தவும் பின்தங்கிய பகுதிகளைத் துரிதமாகத் தொழில்மயமாக்குவதற்கும் 1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) நிறுவப்பட்டது. தமிழ்நாட்டில் பரவலாகத் தொழில் வளர்ச்சியை முன்னேறச் செய்தலும், பின்தங்கியுள்ள பகுதிகள் தொழில் வளமடைய சிறப்பான வசதிகளை அளித்தலும் சிப்காட்டின் குறிக்கோள்களாகும்.

'சிப்காட்' நிறுவனம் தொழில் வளர்ச்சிக்கும், அதற்குரிய நிதி யுதவிக்கும் பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது—

தொழில் முனைவோர்கள் பயனடையும் வகையில் ஊக்கச் சலுகைத் திட்டங்களைச் செயல் படுத்துதல்.

இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் மறுநிதி வழங்கும் திட்டத்தின்கீழ் நடுத்தர மற்றும் பெரிய தொழில்களுக்கு நிதி யுதவி அளித்தல்.

இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சியில் பின்தங்கியுள்ள மாவட்டங்களின் தொழில் வளர்ச்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்

டுள்ள இடங்களிலுள்ள தொழில் பகுதிகளை மேம்படுத்தி நிலங்களை வழங்குதல்.

தொழில் முனைவோர்களுக்குப் பல்வேறு துணையுதவிப் பணிகள் செய்தல்.

கும்மிடிப்பூண்டித் தொழில் இணையத்தில் இதுவரை 47 தொழிற்கூடங்கள் அமைப்பதற்காக 162 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மானாமதுரை தொழில் இணையத்தில் இதுவரை 27 தொழிற்கூடங்கள் அமைப்பதற்காக 66 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இராணிப்பேட்டைத் தொழில் இணையத்தில் ஒரு தொழிற்கூடம் அமைப்பதற்கு 52 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டைத் தொழில் இணையத்தில் 6 தொழிற்கூடங்கள் அமைப்பதற்கு 30 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கடலூர் தொழில் இணையத்தில் 9 தொழிற்கூடங்கள் அமைப்பதற்கு இதுவரை 100 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

சிறப்பு மானியம்:

தமிழக அரசு அறிவித்த இணையற்ற திட்டத்தின்படி, கீழ்க்கண்ட ஐந்து தொழில்கள் தமிழகத்தில் எந்த இடத்தில் தொடங்கப்பட்டாலும் 10சதவீதம் மானியம் அல்லது முறைப்படி அமர்த்தப்படும்தொழிலாளர்ஒருவருக்கு ரூ. 20,000 (இவற்றில் எது குறைவோ அது) விகிதத்தில் ரூ. 10 இலட்சத்திற்கு மேற்படாமல் சிறப்பு மானியம் பெறத் தகுதி உடையவை ஆகும்.

1. மின் அணுத் தொழில்.

2. மருத்துவப் பொருள் தயாரித்தல் மற்றும் பட்டியலிடப்பட்ட மருந்துகளின் கலவை நிர்ணயம்.

3. மோட்டார் வாகனங்களுக்கான உபகரணங்கள் தயாரித்தல்.

4. வீடு மற்றும் தொழிற்சாலைகளுக்குச் சூரிய சக்தியைப் பயன்படுத்தும் கருவிகள் தயாரித்தல்.

5. சணல் தயாரித்தல் (ஆறு வட்டங்களில் மட்டும்)

இத்திட்டத்தின்கீழ் இதுவரை 4 தொழிற்கூடங்களுக்கு ரூ. 14 இலட்சம் மானியம் அளிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு ரூ. 6 இலட்சம் ஏற்கெனவே வழங்கப்பட்டுவிட்டது.

தடையில்லா வணிக மண்டலம்:

தமிழ்நாட்டில் மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு அருகில் ஒரு தடையில்லா வணிக மண்டலம் அமைக்க மத்திய அரசு அனுமதியளித்துள்ளது. இம்மண்டலத்தில் எந்த வசதிகள்-சலுகைகள் அளிக்கலாம் என்று முடிவு செய்ய தமிழக அரசின் தலைமைச் செயலர் தலைமையில் உயர் மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இம்மண்டலம் முதலில் 150 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டு இறுதியில் 450 ஏக்கர் பரப்பளவிற்கு விரிவாக்கப்பட முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த மண்டலம் தாம்பரம் காசநோய் மருத்துவ மனைக்கருகில் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இம்மண்டலத்தை மேம்பாடு செய்யும் பணியைத் தமிழக அரசு 'சிப்காட்' நிறுவனத்திடம் கொடுத்துள்ளது. சிப்காட் நிறுவனம் இந்தத் தடையில்லா வணிக மண்டலத்தை மேம்பாடு செய்யும் பணியை ஏற்கெனவே ஆரம்பித்துவிட்டது. அண்மையில் இம்மண்டலத்தின் பணிகளைக் கவனிக்க மத்திய அரசு வளர்ச்சி ஆணையர் ஒருவரை நியமித்துள்ளது.

வட்டியில்லா விற்பனை வரிக்கடன்:

தமிழக அரசு சர்க்கரை, சிமெண்ட், ஜவுளி, தாதுப் பொருள் மற்றும் சுரங்கத் தொழில், காய்ச்சி வடிக்கும் தொழில்கள் ஆகிய ஐந்து வகைத் தொழில்களுக்கும் வட்டியில்லா விற்பனை வரிக்கடன் வசதியை விரிவுபடுத்தியுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் இதுவரை 12 ஜவுளி தொழிற்கூடங்களுக்கு ரூ. 196 இலட்சம் உதவி அளிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு ரூ. 86 இலட்சம் ஏற்கெனவே வழங்கப்பட்டுவிட்டது.

தமிழக அரசின் மூலதன மானியம்:

தமிழக அரசு 24 வட்டங்களில் அமைக்கப்படும் சிறு தொழில்களுக்கு 15 சதவீத மானியம் அல்லது ரூ. 15 இலட்சம் (இவற்றில் எது குறைவோ அது) அளிக்கப்படும் என்று அறிவித்தது. அரசு இத்திட்டத்தைச் சிறு தொழில்களுக்கு மட்டும் அல்லாமல் நடுத்தர மற்றும் பெரிய தொழில் நிறுவனங்களுக்கும் வழங்குவதை விரிவுபடுத்தியுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் இதுவரை 25 தொழிற்கூடங்களுக்கு ரூ. 284 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில் ரூ. 81 இலட்சம் ஏற்கெனவே வழங்கப்பட்டு விட்டது.

தமிழ்நாடு உப்பு நிறுவனம் லிமிடெட்

தமிழக அரசுக்கு முற்றிலும் சொந்தமானது தமிழ்நாடு உப்பு நிறுவனம் ஆகும். இந்நிறுவனம் 1974ஆம் ஆண்டு சூலைத்திங்கள் 22ஆம் நாள் ஆரம்பிக்கப்பட்டு, 1975-ஆம் ஆண்டு பிப்ரவரி 22ஆம் நாள் இயங்கத்தொடங்கியது. இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம் உப்பு உற்பத்தி செய்வதும், உப்பைச்சார்ந்த இரசாயனப் பொருட்கள் தயாரித்தலும், உப்பு சார்ந்த துணைப் பொருள்கள் தயாரித்தலும் ஆகும்.



மிகவும் பின்தங்கிய மாவட்டமான இராமநாதபுர மாவட்டத்தில் 5,600 ஏக்கர் பரப்பில் மாரியூர் வாலிநோக்க உப்புக் கூட்டுத் திட்டம் அமைந்துள்ளது. தமிழக அரசு மாரியூர் வாலிநோக்க உப்புக் கூட்டுத் திட்டத்தினை அமல்படுத்தியதன் முக்கிய நோக்கம், வேறு எந்தத் தொழிலும் ஆரம்பிக்க முடியாததும் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளதுமான இந்த இடத்தில் வாழும் மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதே ஆகும்.

இந்நிறுவனத்திற்குத் தஞ்சாவூர் மாவட்டத்தில் சர்தார் வேதரத்தினம் உப்புத் திட்டம் எனும் பெயரில் மற்றொரு உப்புத் திட்டமும் உள்ளது. இத்திட்டம் பட்டுக்கோட்டை வட்டம் மரவக்காடு வடகாடு கிராமங்களில் 5,400 ஏக்கராப் பரப்பளவில் உருவாக்குவதற்கு நவம்பர்மாதம் 1978ஆம் ஆண்டு தமிழக அரசு உத்தரவிட்டது. இதன் திட்ட மதிப்பீடு ரூ. 120 லட்சம் ஆகும். இத்திட்டம் முன்னேற்றப் பணிகளை 1979ஆம்ஆண்டு தொடங்கியது. இத்திட்டம் உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க உருவாக்கப்பட்டது.

மாரியூர் வாலிநோக்க உப்புக் கூட்டுத் திட்டம்

இராமநாதபுரத்திலிருந்து 45 கி.மீ. தூரத்தில் அமைந்திருக்கும் இந்நிறுவனம் 1975-ஆம் ஆண்டு முதல் உப்பு உற்பத்திக்கான முன்னேற்றப் பணிகள் செய்யப்பட்டு 1976ஆம் ஆண்டு உப்பு உற்பத்திக்கான முன்னேற்றப் பணிகளை மட்டுமின்றி, உப்பு உற்பத்தியும் செய்தது. மேம்படுத்த வேண்டிய 5,600 ஏக்கராக்களில் இதுவரை 2,266 ஏக்கராக்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

இந்த உப்புத் திட்டம் 1976-ஆம் ஆண்டு உப்பு உற்பத்தியை தொடங்கியது. 1981ஆம் ஆண்டிலிருந்து இந்நிறுவனம் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய உப்பைத் தயாரித்து வருகிறது. மேலும் 1984-ஆம் ஆண்டு 60,000 மெட்ரிக் டன் அளவுள்ள தொழிற்சாலைகளுக்கு உகந்த உப்பைத் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த உப்புத் திட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட உப்பு தூத்துக்குடி ஆல்காலிக் இரசாயன மற்றும் உரத்தொழிற்சாலை, திருவாங்கூர் கொச்சின் கெமிக்கல்ஸ், கோத்தாரி (சென்னை) போன்ற மிகப் பெரிய நிறுவனங்களுக்குச் சிறந்த முறையில் விநியோகம் செய்து வருகிறது. நிறுவனத்திடம் தொழிற்சாலைக்கு ஏற்றதும் மற்றும் உணவிற்கு ஏற்றதுமான உப்பு உள்ளது. டிசம்பர் 1983 முதல் ஏப்ரல் 1984 வரையில் பெய்த அடை மழையின் காரணமாக உப்பின் தேவை அதிகரிக்கப்பட்டு வேதாரண்யம் மற்றும் தூத்துக்குடியைச் சார்ந்துள்ள வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் நிறுவனமிடத்தில் உப்பை வாங்குகிறார்கள். எனவே, காலம் தவறிய பெரும் மழையினால் உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டு அதனால் பொதுமக்களுக்கு உப்பு கிடைக்காத நிலையில் பொதுமக்களுக்கு உப்பு கிடைக்க இந்த நிறுவனம் ஒரு உன்னத சேவை செய்கிறது.

இந்நிறுவனம் ஏப்ரல் 1984 மாதத்தில் மட்டும் 8,000 மெட்ரிக் டன் அளவுள்ள உப்பை விற்பனை செய்து சாதனை புரிந்துள்ளது. மேலும் கடந்த நான்கு மாதங்களில் 15,000 மெட்ரிக் டன் மதிப்புள்ள உப்பை விற்பனை செய்துள்ளது. இந்நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்பை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அரசு ரூ. 75 லட்ச ரூபாய் செலவில் வாலிநோக்கத்தில் ஒரு சிறிய துறைமுகத்தை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக தொடக்க

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி
இலக்கை விஞ்சிய சாதனை.

இந்திய பிரதமரின் இருபதம்சத் திட்டத்தின் மூன்றாவது அம்சத்தின் ஒரு பிரிவாக, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் இடம் பெற்றுள்ளது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 1983-84ல் 32.9 இலட்சம் பேர் அரசு உதவி பெற்றுள்ளனர்.

உதவி பெற்றோரில் 9,88,323 பேர் ஆதிராவிடர் வகுப்பையும், 3,54,796 பேர் பழங்குடியையும் சேர்ந்தவர்கள். பயனுற்ற மகளிர் எண்ணிக்கை 1,87,107 ஆகும்.

மாநில வாரியாக, அரியானா (180 சதவீதம்) முதலிடத்தினையும், குஜராத் (133 சதவீதம்), கேரளம் (130 சதவீதம்), உத்தரப்பிரதேசம் தமிழகம் (123 சதவீதம்) அடுத்த இடங்களையும் (121 சதவீதம்) வகிக்கின்றன.

திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடாக ரூ. 345.76 கோடி. இலக்கு நிர்ணயம் ரூ. 407.36 கோடி. திட்டச் செலவினத்தில் தமிழகம், இமாசலப் பிரதேசம், ஆந்திரம், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகியவை இலக்கை விஞ்சியுள்ளன.

—பத்திரிக்கைத் தகவல் அலுவலகம்

வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. இத்திட்டம் 1,000 நபர்களுக்குப் பருவகால வேலைவாய்ப்பும், 50 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பும் அளித்து வருகின்றன. இந்நிறுவனம் முழு அளவிற்கு வளர்ச்சி அடையும் பொழுது 1,500 நபர்களுக்குப் பருவகால வேலைவாய்ப்பும், 200 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பும் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சர்தார் வேதரத்தினம் உப்புத் திட்டம்

இத்திட்டம் 1978-ஆம் ஆண்டு 2,800 ஏக்கரா மொத்த பரப்பில் உப்பு உற்பத்தியை முன்னேற்றப் பணிகளுடன் ஆரம்பிக்கப்பட்டது. 1982-ஆம் ஆண்டு முதல் உப்பு உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டு இதுவரை 1,600 ஏக்கர் பரப்பில் உப்பு உற்பத்தி மேம்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் 200 முதல் 300 வரையிலான நபர்களுக்குப் பருவ கால வேலைவாய்ப்பும் 20 நபர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பும் அளிக்கிறது.

புதிய திட்டங்கள்

இந்நிறுவன உப்புத் திட்டத்

தின்கீழ் ஊட்டச் சத்துணவு தயாரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மத்திய உப்பு மற்றும் கடல் இரசாயன ஆராய்ச்சி நிறுவனத்தின் கூட்டு முயற்சியுடன் ஒரு மாதிரி உப்பு உற்பத்தி செய்யும் உப்பளத்தை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் இந்த உப்புத் திட்டத்தின் அருகாமையில் அமைந்துள்ள மெக்னீசியம் உலோகத் திட்டத்திற்குத் தேவையான 36 உப்பு கழிவுநீர் (பிட்டர்ன்ஸ்) விநியோகம் செய்ய ஆராய்ந்து வருகிறது.

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் மாநில அளவில் நிதியுதவி அளிக்கும் நிறுவனங்களில் முதல் நிறுவனமாகத் தமிழ் நாட்டில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதையும், விரைவுபடுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு நிறுவன சட்டத்தின் படி 1949-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

இந்நிறுவனம் நிலம், கட்டடம், தளவாடங்கள், இயந்திரங்கள் போன்ற நிலையான சொத்துக்களை வாங்குவதற்காகத் தொழில் நிறுவனங்களுக்கு நீண்டகால, நடுத்தரக்காலக்கடன் காலம் தாழ்த்தித் தொகையினைத் திருப்பிச்செலுத்துவதற்கான ஒப்பந்தங்களுக்கு உத்தரவாதம் அளித்தல், பங்குகளை வாங்குதல் போன்றவைகள் மூலம் நிதியுதவி அளிக்கிறது. மேலும் சிறுதொழில்கள், குறுந்தொழில் துறைகளில் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதை ஊக்குவிப்பதற்கும் பெருமளவில் வேலை வாய்ப்பினை உருவாக்குவதற்கும் இந்நிறுவனம் சிறப்புத் திட்டங்களைத் தீட்டியுள்ளது. குறைந்த வட்டி விதம், கடனைத் திரும்பச் செலுத்தத் தொடங்குவதற்கு நீண்ட காலக்கெடு, குறைந்த பிணைத் தொகை போன்ற தாராளமாக எளிய நிபந்தனைகளில் இந்நிறுவனம் கடனுதவி அளிக்கிறது.

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் கடந்த 1949-ல் இருந்து 1978 வரையான 30 ஆண்டுக் காலத்தில் அளித்த உதவியினைக் காட்டிலும் 1978-83 வரையான கால கட்டத்தில் நிதியுதவ ஒப்புதல், நிதி விநியோகம் ஆகியவை போற்றத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளன.

தொழில் முனைவர்களின் தேவைகள் மாவட்ட அளவிலேயே நிறைவு செய்யப்பட வேண்டி, மண்டல, கிளை அலுவலர்களுக்கு அதிகாரங்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் 4 மண்டல அலுவலகங்கள் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி ஆகிய இடங்களில் தொடங்கப்பட்டு கடனுதவித் தொகை ரூபாய் ஒரு லட்சத்திலிருந்து ரூபாய் 2.5 லட்சம் வரை அளிக்க அதிகாரம் பிரித்து அளிக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர, ஆவணங்கள் வைத்து வருதல் மற்றும் கடன் தொகைகளை அளித்தல் சுமார் ரூபாய் 7.5 லட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், சிறு தொழில் நிறுவனங்கள் கடனுதவியினை எளிதில் பெறவும் மாவட்ட அளவிலேயே துரிதமாகக் கடனுதவி பெறவும் வழி வகை செய்யப்பட்டுள்ளது.

தொழில் முனைவோருக்கு ஆலோசனை அளிக்கும் பிரிவு சென்னையிலுள்ள தலைமையகத்தில் தொடங்கப்பட்டுள்ளது. இதன் வாயிலாகப் பல்வேறு தொழில் துறைகளுக்கு அளிக்கப்படும் உதவித் தொகைகள், ஊக்குவிப்புத் தொகைகள், மானியங்கள், மற்றும் பல்வேறு வகைப்பட்ட உதவிகள், சலுகைகள் முதலியவற்றை அறிய வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம், தொழில் முனைவோர், குறிப்பாக சிறு தொழில் முனைவோர், தொழில் தொடங்குவதற்குரிய ஊக்கத்தையும் உற்சாகத்தையும் பெற்று வருகிறார்கள்.

இந்நிறுவனம் கடந்த சில ஆண்டுகளில் சிறிய தொழில் துறைகளுக்கு மாநிலத்தில் குறிப்பிடத்தக்க அளவில் நிதியுதவி அளித்துள்ளது. 1979-80-ஆம் ஆண்டிற்குமுன் இந்நிறுவனம் சிறுதொழில் துறைக்கு அளித்த நிதியுதவி ஒப்புதல் 50 சதவீதத்திற்குக் குறைவாக இருந்தது. ஆனால் இத்துறைக்குக் கடந்த இரண்டு ஆண்டுகளில் அளிக்கப்பட்ட நிதியுதவி ஒப்புதல் தொகை 85 சதவீதத்திற்கும் மேலாக உயர்ந்து உள்ளது. 1983-84-ஆம் ஆண்டில் இந்நிறுவனம் ரூ.53.45 கோடிவரை (தற்காலிகமானது) சிறுதொழில் துறைகளுக்கு நிதியுதவி ஒப்புதல் அளித்துள்ளது. இது, இவ்வாண்டு மொத்த நிதி உதவியில் 91 சதவீதமாகும்.

தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதிகளிலுள்ள தொழில் நிறுவனங்களுக்கு, அதிலும் குறிப்பாக கிராமப் பகுதியிலுள்ள தொழில் நிறுவனங்களுக்குப் பெரும் அளவில் உதவி புரியும் நோக்கத்துடன் குறைந்த வட்டி, கடனைத் திருப்பித் தர நீண்ட காலக் கெடு, அடிப்படை நிதி உதவி முதலிய பல சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன. மேலும் 1983-84-ஆம் ஆண்டில் இந்

தொல்லையே தராத தொலைபேசிகள்!

சிற்றும் தொல்லை தராத தொலைபேசி இணைப்புகள். அடடா, எங்கே? என்று கேட்கத் தோன்றுகிறது அல்லவா? இதை விட இனிப்பான செய்தியும் உண்டு. எப்பொழுதாவது, ஏதாவது குறைகள் இருந்தால் சொல்லி அனுப்பலாம். வீடு தேடி வந்து விடுவார் ஒருவர்- உங்களைத் திருப்திப்படுத்துவதே என் நோக்கம்-என்று சொல்லிக் கொண்டு! அவர் வேறு யாரும் இல்லை. அந்த தொலைபேசி நிறுவன உரிமையாளரே!

'ஸல்யூடா மவுண்டன் டெலிஃபோன் கம்பெனி' என்ற அந்த நிறுவனம் அமெரிக்காவில வட கரோலினா மாநிலத்தில் 'ஸல்யூடா' என்ற மலையடிவாரச் சிற்றூரில் இருக்கிறது. ஊரின் மொத்த மக்கள் தொகையே 12000க்குள் தான். ஆனால் அங்கே சுமார் 1500 தொலைபேசி இணைப்புகளை இந்தச் சிறிய நிறுவனம் வழங்கி நன்கு பேணி வருகிறது. நிறுவனத்தில் உரிமையாளர் உட்பட மொத்த ஊழியர் நால்வரே. அவர்களில் ஒருவர் பகுதி நேர ஊழியர்.

புதிய இணைப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது இருப்பனவற்றைச் செம்மையாக இயக்குவது முதலான வேலைகளில் நேரடியாக ஈடுபடுவது உரிமையாளர் எட் லேலண்ட் மற்றும் அவர் மகன் காட்டர். இது ஒரு குடும்ப நிறுவனம் என்பது மட்டுமல்ல, நிறுவனத்தினர் தம் வேலை நேரம் போக எஞ்சிய பொழுதை ஊர் மக்களுடன் ஒரு குடும்பமாக இணைந்து பொது வாழ்வுப் பணிகளில் ஈடுபடுகின்றனர்.

இதையெல்லாம் விட அதிசயம்: கடந்த 48 ஆண்டுகளில் இந்த நிறுவனம் ஒரே ஒரு முறை தான் கட்டணத் தொகையை உயர்த்தியது. அதுவும் அதிகமாக இல்லை.

— அமெரிக்கத் தகவல் நிலையம்

நிறுவனம் பின்தங்கிய பகுதிகளில் உள்ள நிறுவனங்களுக்கு அளித்த நிதியுதவித் தொகை ரூ. 25.05 கோடியாகும் (தற்காலிகமானது). இந்நிறுவனம் நலிந்த பிரிவினருக்கு உதவும் வகையில் தாழ்த்தப்பட்டோர் தொழில் முனைவர்களுக்கு ஒரு சிறப்புச் சலுகைத் திட்டத்தை உருவாக்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி பெறுவோருக்குக் குறைந்த வட்டி 10.25 சதவீதமாகவும், ரூ. 25,000 வரையான கடனுக்குப் பங்குத்தொகை 5 சதவீதமாகவும் சலுகை அளிக்கப்பட்டுள்ளது.

உடல் ஊனமுற்றோருக்கான இந்நிறுவனம் 1982-83-ஆம் ஆண்டில் ஒரு சிறப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ரூ. 1 இலட்சம் வரை நிதியுதவி பெறலாம். ரூ. 25,000 வரையிலான கடனுக்குப் பங்குத் தொகை தேவையில்லை. மேலும், இத்திட்டத்தின்கீழ் இந்நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்படாத தொழில்களாயினும், சாதகமாகப் பரிசீலிக்கப்பட்டு நிதியுதவி வழங்கப்படும்.

இத்திட்டத்தின்கீழ் தொழில் நுணுக்க அனுபவம் - திறன் கொண்டவர்கள்கூட மிகுந்த சலுகையுடன் கூடிய, பங்குத் தொகையுடன் தாங்களாகவே சொந்தத் தொழில் நிறுவனங்கள் நிறுவ வாய்ப்புகள் உள்ளன. இதன்படி தொழில் முனைவோர் தங்களது பங்குத் தொகையினைக் கொண்டுவர வசதி இல்லாத நிலையில் இந்நிறுவனமே அத்தகைய தொழில் முனைவோருக்குச் சுலபக்கடன் (Soft Loan) அதாவது மிகவும் குறைந்த 1 சதவீத வட்டி விகிதத்தில் கடன் அளித்து உதவுகிறது.

'சிட்கோவின் சிறப்பான பணிகள்':

தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ), சிறுதொழில்களை வளர்ப்பதும் அவற்றுக்கு உதவுவதும் என்ற முக்கியக் குறிக்கோள்களைக் கொண்டதாக, 1970ஆம் ஆண்டில் தனியார் நிறுவனமாக நிறுவப்பட்டு, 1971-ஆம் ஆண்டில் பொதுத்துறை நிறுவனமாக மாற்றியமைக்கப்பட்டது. தமிழ் நாட்டில் சிறுதொழில்களை வளர்ப்பதும், அதன்வளர்ச்சிக்குப் பாடுபடுதலும் என்கிற பொறுப்புகளைக் கொண்ட நிறுவனமாக 'சிட்கோ' தன்னுடைய 13 ஆண்டுப் பணிகளைச் செவ்வனே நிறைவேற்றி வருகிறது.

'சிட்கோ' செயலாற்றிவரும் திட்டங்களாவன :

சிறுதொழில்களுக்கு விற்பனை வசதிகளைச் செய்து தருதல்.

தொழிற்பேட்டையில் மேம்படுத்தப்பட்ட மனைகளை வழங்குதல், தொழிற்கூடங்களைக் கட்டித்தருதல் ஆகிய அடிப்படை வசதிகளைச் சிறுதொழில்களுக்கு வழங்குதல்.

மத்திய, மாநில மூலதன மானியங்கள வழங்குதல்.

முக்கிய மூலப்பொருட்களைக் கிடைக்குமாறு செய்ய வழிவகை செய்தல்.

வட்டி இல்லாத விற்பனை வரிக்கடன் உதவி வழங்குதல்.

குறைந்த அமுத்த மின் கட்டண மானிய சலுகைகளை வழங்குதல்.

நலிந்த சிறுதொழில்களுக்கு மறுவாழ்வு அளித்தல்.

'சிட்கோ'வின் முயற்சிகளின் விளைவாக, 'முதலமைச்சர் மதிய சத்துணவுத் திட்டத்தின் கீழ்' தேவையான பெருமளவு பல்பொடியைத் தயாரிக்க ஏற்பாடு செய்து, அதனை விநியோகிக்கவும் சிட்கோவினால் முடிந்தது. தற்போது, தமிழ்நாடெங்கும் உள்ள 47 சிறுதொழில் அமைப்புகளினால் தரமான பல்பொடி தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகிறது. பல்பொடிக்குத் தேவையான இரசாயனப் பொருட்கள் தயாரிப்பில் 12 அமைப்புகளும், பல்பொடியைப் பாக்கிங் செய்யும் பொருட்கள் தயாரிப்பில் 25 அமைப்புகளும் இத்திட்டத்தினால் பயனடைந்துள்ளன. இதன் விளைவாக 1500 பேருக்கு நேரடியாக வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது.

சிட்கோவின் மற்றுமொரு குறிப்பிடத்தகுந்த பணி 'முதலமைச்சரின் மதிய சத்துணவுத் திட்டத்தின் கீழ், சேய் நலமையங்களுக்குத் தேவையான கல்வித் துணைக் கருவிகளைத் தொடர்ந்து வழங்கியதாகும். இந்த ஆண்டும் கல்வித் துணைக் கருவிகளாக ரூ. 49.10 இலட்சம் மதிப்புள்ள 8184 செட்டுகளை உற்பத்தி செய்து வழங்க முடிந்தது. இந்த உற்பத்திப் பணியில் 18 சிறுதொழில் அமைப்புகள் பங்கு பெற்றுப் பயனடைந்தன.

சிறு தொழில்களுக்குத் தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளைச் செய்து தரும் திட்டங்களின்கீழ், சிட்கோ சாதனைகள் செய்துள்ளது.

பல ஆண்டுகளாக வாடகை அடிப்படையில் இயங்கி வந்த தொழிற்கூடங்களைத் தவணை முறையில் அதில் தொழில் நடத்துபவர்களுக்கே சொந்தமாக்கித் தர வேண்டும் என்ற திட்டம் நிறைவேற்றப்பட்டு விட்டது. இந்தத் திட்டத்தில், சிட்கோவினுடைய நிர்வாகத்தின்கீழ் இயங்கி வரும் 33 தொழிற்பேட்டைகளில் உள்ள 783 தொழிற்கூடங்களும் அடங்கும்.

இதனோடு, சிட்கோ இதுகாறும் 1169 தொழிற்கூடங்களை 29 இடங்களில் (13 அரசினர் தொழிற்பேட்டை, 16 சிட்கோ தொழிற்பேட்டை) தவணை முறையில் வழங்கும்

நீரிழிவு நோய்க்குப் புது மருந்து

நீரிழிவு நோயா? கவலைப் படாதீர்கள். நீரிழிவு நோய் மற்றும் அதனால் வரும் வேறுபல தொல்லைகளிலிருந்து மக்களை விடுவிக்க இருக்கிறது. அமெரிக்காவில் அண்மையில் இதற்கான புதிய மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதன் பெயர் : க்ளிபிஸைடு (Glipizide).

நியூயார்க் மருத்துவக் கல்லூரி மற்றும் வில்கான்ஸன் மருத்துவக் கல்வி நிலையத்தில் உள்ள மருத்துவ அறிஞர்கள் அறிமுகம் செய்யும் க்ளிபிஸைடு நீரிழிவு நோயின் தொடக்க காலத்தில் இரத்த நாளங்கள் சேதப்படுவதைத் தடுக்கிறது.

'நியூ இங்லண்டு ஜர்னல் ஆஃப் மெடிஸின்' என்ற மருத்துவ இயல் இதழில் கண்டுள்ளபடி புதிய மருந்தைப் பயன்படுத்தினால் இரத்த இழப்பு தவிர்க்கப்படுவதோடு சேதப்பட்ட இரத்தக் குழாய்கள் மீண்டும் உறுதியாக வளர்கின்றன என்று மருத்துவ அறிஞர்கள் தம் மூன்றாண்டு ஆராய்ச்சியில் கண்டு தெளிந்துள்ளனர்.

புதிய மருந்தினால் இரத்த நாளங்கள் வலுவடைவதால் பார்வை இழப்பு, மாரடைப்பு, சிறுநீரகம் செயலிழத்தல் முதலான நோய்களும் தடுக்கப்படும்.

பரவலாக மக்களுக்குக் கிடைப்பதற்கு முன்னால் புதிய மருந்து மேலும் சில சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு இருக்கின்றது.

அடிப்படையில் கட்டி உள்ளது. மேலும், 983 மேம்படுத்தப்பட்ட மனைகள் பல்வேறு தொழிற் பேட்டைகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

மேற்கண்டவைகளைத் தவிர, குறிச்சி (கோயம்புத்தூர்), தூவாக்குடி (திருச்சிராப்பள்ளி), திண்டுக்கல், மாதவரம் ஆகிய இடங்களில் தொழிற்கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

ஆலத்தூரில் உள்ள (திருப்போருக்கு அருகாமையில்) மருந்துகள் தயாரிக்கும் தொழில்களுக்கெனத் தொடங்கப்பட்ட தொழிற்பேட்டையில், 11 தொழிற்கூடங்கள் முதல் கட்டமாக (First Phase) கட்டப்பட்டு வருகின்றன. இங்கு 1984 ஜூன் மாதத்திற்கு முன்பு கட்டுமானப் பணிகள் முடிவடைந்து விடும். இதைத் தவிர, 13 மேம்படுத்தப்பட்ட மனைகளும் ஒதுக்கீடு செய்யத் தயாராகின்றன. ஆலத்தூரில் தொழில் முனைவோரும் சிட்கோவும் சேர்ந்து இடும் நிதி, ரூ. 500.00 இலட்சம் ஆகும். மொத்தத்தில், 35 தொழிற்கூடங்களும், 40 மேம்படுத்தப்பட்ட மனையும் 3 கட்டங்களாக வழங்கப்பெறும். குறிப்பிட்ட தொழிலின் தொழில் பேட்டை என்ற வகையில், ஏழாவதாக, மருந்து தயாரிப்புக் என்றே இத்தொழில்பேட்டை இயங்கும்.

1974-75 முதல் 1979-80 வரையான ஆறு ஆண்டுகளில் வழங்கப்பட்ட ஒப்புதல் ஆணைகளோடு, ஒப்பிட்டுப் பார்க்கையில் கடந்த நான்கு ஆண்டுகளில் அளித்த ஒப்புதல் ஆணை மூன்று மடங்கு அதிகமாகும்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் ஆண்டுக்குச்சராசரி 1520 சிறு தொழில்களுக்கு ரூபாய் 581 இலட்சம் பெறுமான ஒப்புதல் ஆணைகள் வழங்கப்பட்டன.

மத்திய முதலீட்டு மானியத் தொகையைப் பெறுவதில், தமிழ் நாடு தொடர்ந்து முதலிடம் வகித்து வருகிறது.

மாநில முதலீட்டு மானியம் வழங்கும் திட்டத்தில் சிட்கோ ரூபாய் 151.39 இலட்சங்களை வழங்க ஒப்புதல் ஆணை வழங்கியதில், 655 சிறுதொழில்கள் பயனடைந்துள்ளன.

முக்கிய மூலப்பொருட்கள் விநியோகத் திட்டத்தைச் சிட்கோ சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது. இரும்பு, எஃகு, சுட்ட கரி, தீக்குச்சி, மெழுகு, ஈயம், துத்தநாகம், பாரபின் மெழுகு, பொட்டாசியம் குளோரேட்டு,

கோடி கோடியாகக் கொட்டிச் செலவிட்டாலும் செய்து காட்ட இயலாத காட்சியன்றோ மலைவளம். அதிலும் தமிழகத்தில் தன்னிகரில்லா வரலாற்றுச் சிறப்பிலுக்குஉள்ள சான்றுகளிலே ஒன்றுகொல்லிமலை! முகிலைத் தொட்டிழுத்து முத்தமிடும் குன்றுகள் உள்ளன —அந்தக் குன்றுகளிலே இயற்கை வளம் கொஞ்சி விளையாடுகிறது. எனினும் அது திருமாலுக்கா, அவன் மருமகனுக்கா என்று மல்லுக்கு நிற்கின்றனர் மேதைகள்!

பேட்டி ஆசிட்ஸ்போன்ற தொழில்களுக்குத் தேவையான கட்டுப்பாடுள்ள முக்கிய மூலப் பொருட்களைச் சிட்கோ கொள்முதல் செய்து, சிறுதொழில்களுக்கு வழங்குகிறது.

'டிட்கோவின்' பணிகள்

ஆலங்குளத்தில் சிமெண்ட் ஆலையையும், அரக்கோணத்தில் உருக்கு ஆலையையும் பொதுத் துறையின்கீழ் நடத்தும் நோக்குடன், 'டிட்கோ' 1965-ல் அமைக்கப்பட்டது. அதன் பின்னர் இந்திய அரசு கூட்டுத்துறைக் கொள்கையை வகுத்தபோது, கூட்டுத் துறையின்கீழ் புதிய தொழில் பிரிவுகளை ஏற்படுத்தும் பணி, டிட்கோவிடம் கொடுக்கப்பட்டது.

1-4-1977-ல் ஆலங்குளம் ஆலை, அரியலூர் ஆலை ஆகிய பொதுத்துறை நிறுவனங்கள் டிட்கோவின் கிளை நிறுவனமான டான்செம் நிறுவனத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இருந்தன. தமிழ் நாடு ஸ்டீல்ஸ் அரக்கோணம் என்னும் பொதுத்துறை நிறுவனம் டிட்கோவின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் இருந்தது.

1983-ஆம் ஆண்டில், வடார்க்காடு மாவட்டம் காட்பாடிக்கு அருகில், ஆண்டுக்கு 15,000டன் வெடி மருந்துகளைத் தயாரிக்கும் திறன் கொண்டதும் ரூபாய் 20.85 கோடி மதிப்பீட்டுச் செலவிலானதுமான வெடிமருந்துத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, தமிழ்நாடு தொழிலியல் வெடி மருந்து நிறுவனம் என்ற மற்றொரு கிளை நிறுவனம் உருவாக்கப்பட்டது.

வெடிமருந்துத் திட்டத்தின் ஓர் அங்கமாக, அத்தொழிற்சாலை வளாகத்திற்குள், டிட்டோனேட்டர்கள், டிட்டோனேட்டிங் பியூஸஸ், ரூபாய் 16.00 கோடி செலவிலும், அமோனியம் நைட்ரேட் நைட்ரிக் அமிலம் ரூ. 20.50 கோடி செலவிலும் தயாரிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்தத் தேவையான நடவடிக்கைகளைத் தமிழ் நாடு தொழிலியல் வெடிமருந்து நிறுவனம் எடுத்து வருகிறது.

1983-ல் டிட்கோவில் துணை நிறுவனமாக்கப்பட்ட தமிழ்நாடு கெமிகல் ப்ராடெக்ட்ஸ் லிமிடெட் நிறுவனம், இராமநாதபுரம் மாவட்டம் கோவிலூரிலுள்ள தனது தொழிற் பிரிவில் சோடியம் ஹைட்ரோ சல்பைட் திரவ சல்பர் டை ஆக்ஸைடு தயாரிக்கிறது.

இராமநாதபுரம் மாவட்டம் வாலிநோக்கத்தில் ரூ. 5.20 கோடி மதிப்பீட்டுச் செலவில் மெக்னீசியம் மெட்டல் திட்டம் ஒன்றைச் செயல்படுத்துவதன் மூலம், தமிழ்நாடு கெமிக்கல் பிராடெக்ட்ஸ் லிமிடெட் தனது பணிகளைப் பலதரப்படுத்தி வருகிறது.

ஆலங்குளத்திலுள்ள தமிழ் நாடு சிமெண்ட் ஆலையை ரூ. 4.07 கோடி செலவில் நவீனப்படுத்துவதற்கான திட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. மேற்சொன்னவை தவிர ரூபாய் 7.95 கோடி செலவில் மீள் உருளை ஆலைத்திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. ரூபாய் 9.6 கோடி செலவில் கல்நார் சிமெண்ட் குழாய்த் திட்டமும் டான்செம் நிறுவனத்தார் ஏற்கெனவே நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இது 1984-85-ல் உற்பத்தியைத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

டிட்கோ இதுவரை சுமார் 14,000 பேருக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. மற்ற தொழில் திட்டங்கள் அனைத்தும் நிறைவேற்றப்படுகையில் மேற்கொண்டும் சுமார் 9000 பேருக்கு டிட்கோ வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

(8-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்து உரையாற்றிய காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சி தலைவர் திரு குமரி அனந்தன் எம். எல். ஏ, தெரிவித்தார்:

"பாஸ்கர சேதுபதியால் அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டவர் விவேகானந்தர். அந்த ஞான சூரியன் திரும்பி வந்தபோது வரவேற்க வந்த சேதுபதி 'தங்கள் கால்களைத் தரையில் பதிக்க வேண்டாம். என் தலையில் கால் வையுங்கள்' என்று கேட்டுக் கொண்டாரே, அதனால் அவர் வாழ்ந்த இந்த இடத்தைத் தலைநகரம் என்று சொல்லாமல் வேறு எதைத் தலை நகரம் என்று சொல்வது?

"இது தலை நகரமாக தனி மாவட்டமாக - தலை நிமிர்ந்து நிற்கும் மாவட்டமாக இருக்கும் என்பது உறுதி"

சார் திரு ஒய். எஸ். எம். யூசுப் அவர்கள் முஸ்லீம் சமுதாயத்திற்குத் தமிழக அரசு ஆற்றிவரும் நன்மைகளைப் பட்டியல் போட்டு தெரிவித்தார். அவர் குறிப்பிட்டார்.

"இஸ்லாமிய மக்களிடையே உள்ள உலமாக்களுக்கு ரூ. 250 பென்சன் வழங்கும் திட்டம் உலகத்தில் எந்த அரசும் கொண்டு வராத திட்டம் ஆகும். இஸ்லாமியர்கள் ஆளும் நாட்டில் கூட இந்த அரிய திட்டம் இல்லை, தமிழகத்தில்தான் உள்ளது. இதனை நிறைவேற்றி வருபவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் தமிழக முதல்வர் ஆவார்."

அடுத்து உரையாற்றிய மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் தெரிவித்தார்:

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாட்டுத் தலைவர் திரு எம். பழனியாண்டி குறிப்பிட்டார்:

"உலகத்திலேயே ஓர் ஆண்டில் அதிகமான நாட்கள் மீன் கிடைக்கும் பகுதி இராமேஸ்வரம் தீவில் உள்ளது. அந்த இராமேஸ்வரம் தீவு இராமநாதபுர மாவட்டத்தில் உள்ளது என்பது சிறப்புக் குரியது. எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே என்று பாடிய தாயுமானவர் வாழ்ந்த பகுதியும் இதுதான்."

அடுத்து உரையாற்றிய அ.இ.அ.தி.மு.க. பொதுச் செயலர் திரு. ப. உ. சண்முகம் உரையாற்றுகையில், "தழைக்கட்டும் புதிய மாவட்டம்; ஒழியட்டும் வறுமை; வளரட்டும் தமிழ்" என்று கூறினார்.

அடுத்து உரையாற்றிய மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சராக இருந்ததுண்டு. இருந்தும்கூட அவராலேயே இம் மாவட்டத்தைப் பிரிக்கமுடியாத நிலை இருந்ததென்றால் அதற்குக் காரணம் அப்போதிருந்தபோட்டியுணர்வுகளும் போராட்ட உணர்வுகளுமேயாகும். அதையெல்லாம் கடந்து இப்போது இங்கே மூன்று மாவட்டங்கள் மலர்கின்றன. அதிலும் குறிப்பாக இராமநாதபுரம் அதே பெயரிலேயே மாவட்டத் தலை நகராக அமைகிறதென்றால் இதற்கெல்லாம் மூல காரணமான மாண்புமிகு முதல்வர் அவர்களை நெஞ்சார வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சேதுபதிகள் வகையறாவில் முதன் முதலில் எம்.ஏ. பட்டம் பெற்றவர் இங்கே படமாகக் காட்சிதரும் பாஸ்கர சேதுபதி.

"புதிய தொழில்கள் தொடங்க வேண்டும் என்றால் தொழிலே இல்லாத மாவட்டங்கள் வேண்டும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. இந்த மாவட்டப் பிரிவினைகள் மூலம் பெருந் தொழிலே இல்லாத மாவட்டங்கள் உருவாக வாய்ப்பிருக்கிறது. அதற்காகத்தான் நமது முதல்வர் சிறு சிறு மாவட்டங்களை உருவாக்கி - தென்னகத்திற்கே சிறந்த வழிகாட்டியாகத் திகழ்கிறார். மற்ற மாநில முதல்வர்கள் நமது புரட்சித் தலைவரைப் பின்பற்றுவார்கள் என எதிர்பார்க்கிறேன்."

அடுத்து உரையாற்றிய மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சி. அவர்கள் தெரிவித்தார்:

"இந்த இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவரே முதலமைச்சராக இருந்தும் இம் மாவட்டத்தைப் பிரிக்கமுடியாத நிலை இருந்ததென்றால் அதற்குக் காரணம் அப்போதிருந்தபோட்டியுணர்வுகளும் போராட்ட உணர்வுகளுமேயாகும். அதையெல்லாம் கடந்து இப்போது இங்கே மூன்று மாவட்டங்கள் மலர்கின்றன. அதிலும் குறிப்பாக இராமநாதபுரம் அதே பெயரிலேயே மாவட்டத் தலை நகராக அமைகிறதென்றால் இதற்கெல்லாம் மூல காரணமான மாண்புமிகு முதல்வர் அவர்களை நெஞ்சார வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சேதுபதிகள் வகையறாவில் முதன் முதலில் எம்.ஏ. பட்டம் பெற்றவர் இங்கே படமாகக் காட்சிதரும் பாஸ்கர சேதுபதி. இந்துமதத்தைப் பற்றிச சாவமும் உணர்ந்திருந்த அவர் வ. உ. சி. கப்பல் கம்பெனி துவக்கியபோது ஒரு இலட்ச ரூபாய் பங்கு கொடுத்த சிறந்த தேசிய வாதியும் ஆவார். அவர் பிறந்த மண்ணில் மாவட்டத் தலைநகரம் அமைவதை வரவேற்று வாழ்த்துகிறேன்".

அடுத்து, மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம வீரப்பன் அவர்கள் நன்றியுரை ஆற்றியபோது, "மாண்புமிகு முதல்வர் அவர்களின் ராஜதந்திர முறையிலே இந்த மாவட்டம் மலர்ந்திருக்கிறது" என்றார்.

நிகழ்ச்சியின் இறுதியில் மாண்புமிகு முதல்வர் டாக்டர்எம்.ஜி. ஆர். அவர்கள் சிறப்புரையாற்றினார். அப்போது அவர் தெரிவித்தார்;

"இராமநாதபுர மாவட்டம்

மூன்றாகப் பிரிக்கப்படவேண்டும் என்ற எண்ணம் எங்கே தோன்றியது என்பதைக் குறிப்பிட வேண்டியது எனது கடமை.

"முத்துராமலிங்கத் தேவர் பெயரில் மாவட்டம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தபோதுதான், மாவட்டத்தை 3 ஆகப் பிரிக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது.

"பிரச்சினை பூதாகாரமாக எழுந்தபோது, முன்பு ஆட்சியில் இருந்தவர்களால் இதைச் சந்திக்க முடியவில்லை. பிரித்தால் என்ன நேருமோ, வாக்குகள் கிடைக்காது போய்விடுமோ என்ற கருத்தால்தான் இத்தனை காலதாமதமாகியது என்பதைக் குறிப்பிட வேண்டியவனாக இருக்கிறேன்.

"நண்பர் ராமசாமி ஒரு குழுவினரை அழைத்து வந்தார். அவர்களில் ஆதிதிராவிடர்கள் இருந்தனர். முக்குலத்தோர் இருந்தனர்; முஸ்லீம் சமுதாயத்தினர் இருந்தனர். அவர்களிடம் நான் கலந்துரையாடினேன். சற்றுப் பொறுத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டேன். இதை, நிருவாக வசதியை மனத்தில் கொண்டு மூன்று பகுதியாகப் பிரிக்க வேண்டும் என்ற கருத்து எனக்குத் தோன்றியது. என்றாலும் அந்த முடிவை மேற்கொள்ளப் பல மாதங்கள் தேவைப்பட்டன.

ஆதிதிராவிட சமுதாயத்தவர் கோரிக்கையை எழுப்பினர். ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த தில்லையாடி வள்ளியம்மை பெயரால் ஒரு மாவட்டம் அமைய இருக்கிறது. இந்தியத் துணைக் கண்டத்திலேயே வேறு எந்த மாநிலத்திலும் உண்டோ இல்லையோ, இங்கே ஆதிதிராவிட இனப் பெண்மணியின் பெயரால் மாவட்டம் அமையப் போகிறது.

மாவட்டப் பிரிவினைகள் நிருவாக வசதிகளை முன்னிட்டு ஏற்படுகின்றன என்றாலும், மாவட்டம் வளர்ந்தாக வேண்டும். கல்வி, தொழில் ஆகியவை சிறந்தோங்க வேண்டும் என்ற அடிப்படையிலும்தான் உருவாக்கப்படுகின்றன.

மாவட்டப் பிரிவினை ஒரு ஜாதிக்காக அல்ல - ஒரு கட்சியினருக்காக அல்ல—ஒரு இனத்தவருக்காக அல்ல— மக்களுக்காக! எத்தனை ஆண்டுக் கனவு இப்போது நிறைவேறுகிறது!

முன்பு தன்னிறைவுத் திட்டம் துவக்கிச் சில காரியங்களை நாங்கள் ஆற்றி வந்தோம். சில காலத்திற்குள் வெளியேற்றப்பட்டோம்.

மறுபடி தேர்ந்தெடுக்கப்பட்டு பணிகளை ஆற்றி வருகிறோம். அதிகாரிகளும் எங்களுக்கு நல்ல வகையில் மனப்பூர்வமாக ஒத்துழைப்புத் தந்து வருகிறார்கள். அதன் காரணமாக சுலபமாகப் பணி செய்ய முடிகிறது.

எந்தத் திட்டம் மக்களுக்கு நன்மை அளிக்குமோ அப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்ற நாங்கள் முற்பட்டு வருகிறோம்.

சேது சமுத்திரத் திட்டம் குறித்து இங்கே சொல்லப்பட்டது. அது விரைவில் நிறைவேறும் என்று நம்புகிறேன்.

துணை ஜனாதிபதியாக தமிழகத்தைச் சேர்ந்தவர் வர வேண்டும் என்று சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள் குறிப்பிட்டார்கள். காலம் கனிந்து வரும் சூழ்நிலை உள்ளது. இது குறித்து நாளையே இந்தியப் பிரதமருக்குக் கடிதம் எழுதுகிறேன். அவர் இது குறித்துச் சிந்திப்பார் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.



மாவட்ட அமைப்புகளுக்காக விழாக்கள் நடத்தப்படுவது-மக்களுக்குப் பல உண்மைகள் உணர்த்தப்பட வேண்டும் என்பதற்காகத்தான்! மாவட்டத்தை சிறந்த மாவட்டமாக மாற்ற, இளைஞர்கள உதவி செய்ய வேண்டும்.

தமிழகம் கேரளத்தைப்போல் படித்தவர்கள் அதிகம் உள்ள மாநிலமாக உருவாகும் நிலை ஏற்பட வேண்டும். அதற்கு என்னால் முடிந்ததை எல்லாம் செய்வேன்-உங்கள் ஆதரவு இருக்குமானால்."

இராமநாதபுரம் மாவட்ட அமைப்புப் பணிகள் தொடக்க விழாவின் இறுதி நிகழ்ச்சியாக செல்வி சுவர்ணமுகி குழுவினரின் நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது.

மாவட்டத்திற்கு தலைநகரம் கிடைத்ததால் முகவைச் சீமை மக்கள் தலை நிமிர்ந்து காணப்படுகின்றனர் என்று சொன்னால் அது மிகையாகாது!

நிகழ்ச்சித் தொகுப்பு:
தமிழ்ப்பித்தன்

பாஸ்கர சேதுபதி

பாஸ்கர சேதுபதி உடல் நலிவுற்று, மரணப் படுக்கையில் படுத்திருந்த நேரம். அப்போது கூட அவரது கலை உணர்வு மங்கவில்லை. முல்லிப்பூந்தூரில் வாழ்ந்த முத்தையா பாகவதர் என்பவரை வரவழைத்து, யோகனத்தில் பாடும்படி கேட்டுக்கொண்டார்.

அவர் பாடினார். அவர் பாடப்பாட, இசை, மன்னரின் செவியைத் தொடத்தொட, கானத்தோடு கானமாக, கண்ணை மூடினார் பாஸ்கர சேதுபதி.

கோவையிலும் இராமநாதபுரம்

மற்றப் பாளையத்து மன்னர்கள் தமது நாட்டுக்குப் படை வீரர்கள் தேவைப்பட்டால் சேதுபதி மன்னர்களிடம் தெரிவிப்பார்களாம் சேதுபதி மன்னர்கள் உடனே படை வீரர்களை அனுப்பி வைப்பார்களாம். ஒரு முறை கொங்கு மன்னர்களுக்குப் படை வீரர்களை அனுப்பி வைத்தார் சேதுபதி. அந்தப் படையினர் கோவையில் சென்று தங்கிய பகுதி இன்றும் இராமநாதபுரம் என்ற பெயரில் வழங்கப்படுகிறது.

பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்

இராமநாதபுரம் மாவட்டமானது; காமராசர் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் என மூன்றாகப் பிரிக்கப்பட்டதல்லவா? அவற்றில் மூன்றாவதான பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தின் அமைப்புப் பணிகள் தொடக்க விழா, 17.7.'84 செவ்வாய்க் கிழமையன்று சிவகங்கையில் சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

சிவகங்கை கோட்டாட்சித் தலைவர் அலுவலகத் திடலில் அமைந்திருந்த மருதுபாண்டியர் அரங்கத்தில் அன்று காலை 9 மணியளவில், காளையார் கோயில் டி என் ராஜரத்தினம் குழுவினரின் நாதசுர இசையோடு விழா தொடங்கியது. அதைத் தொடர்ந்து கவிஞர் திரு சுப்பு ஆறுமுகம் குழுவினரின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் புகைப்படங்கள் கொண்ட கண்காட்சியை கவியோகி சுந்தானந்த பாரதியார் திறந்து வைத்தார்.

செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு நா. கிருஷ்ணபாரதி இ.ஆ.ப. வரவேற்புரையாற்றினார்.

மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர்கள் திரு.கே.எம்.ராஜமுன்மொழிய, திரு. எம்.நடராசன் வழிமொழிய தவத்திரு குன்றக்குடி அடிகளார் விழாத் தலைமையேற்றார். அவர் தமது தலைமை உரையில் -"சிவகங்கைச் சீமைக்கெனத் தனித்தனி இயல்புகள், வழிவழிப் பெருமைகள் ஏராளம் உண்டு. உக்கிரப் பெருவழுதி காலத்திய பழங் கோயிலொன்று இங்குள்ளது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உயர்தனித் தத்துவத்தைப் பாடிய கணியன் பூங்குன்றனார் பிறந்த அல்லூர் இந்த மாவட்டத்தைச் சேர்ந்ததுதான். ஒக்கூர் மாசாத்தியார், நட்புக்கு இலக்கணம் வகுத்த பிசிராந்தையார், விடுதலைப் போராட்டத்தின் முன்னோடிகளாகத் திகழ்ந்த மருதுபாண்டியர் போன்றோரைப் பெற்றுப் பெருமை கொண்டதும் இம்மாவட்டமே. முருகப் பெருமானை வழிபடு தெய்வமாக ஏற்றுக் கொண்டு ஆன்மிகத்தில் பெரும் ஈடுபாடுடைய வீரத்திருமகன் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் பெயரால் அமைகிற இந்த மாவட்டம் வரலாற்றுச் சிறப்புமிக்கதாக வளரவும், வளமெலாம் பெறவும் வாழ்த்துகிறேன்" என்று குறிப்பிட்டார்.

நிகழ்ச்சித் தொகுப்பு:
'இந்திரன்'

மாண்புமிகு ஊரக உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.திருச்சி சௌந்தரராசன் அவர்கள் விழாவைத் தொடங்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"இந்தப் பகுதி மக்களின் நீண்ட காலக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டிருக்கிறது இன்று. அதற்கு இந்த மாபெரும் கூட்டமே சாட்சி. கந்தர் சஷ்டியிலே பிறந்த தேவரால் இந்த மண் பெருமை பெற்றது. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் பிறந்தது இந்த மாவட்டத்தைச் சேர்ந்த பசும்பூண் என்ற ஊரில் என்பார்கள். அந்தப் பசும்பூணே பசும்பொன் ஆகியிருக்கவேண்டும் அங்கே பிறந்த முத்துராமலிங்கத் தேவர் தமிழிலும் ஆன்மிகத்திலும் மட்டுமல்ல; ஆங்கிலத்திலும் ஆற்றல் படைத்தவராக இருந்தார். ஒரு காலத்தில், காங்கிரஸ் கட்சியில் வெற்றிக்கெல்லாம் அவர் காரணமாக இருந்தார். சட்டமன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் ஆணித்தரமாக வாதங்களை எடுத்து வைத்தார். அந்தப் பெருமகனார் வாழ்ந்த காலத்திலே நாம் வாழ்ந்தோம்; இது நமக்குப் பெருமை. அவர் பெயரால் மாவட்டம் அமைத்துப் பெருமை கொள்கிறது மாண்புமிகு புரட்சித் தலைவர் தலைமையிலான தமிழக அரசு."

கவியோகி சுத்தானந்தபாரதியார் பேசுகையில், ''சிறுவயது முதற் கொண்டே எளிய வாழ்க்கையும் பெருகிய சிந்தனையும் கொண்டிருந்தார் முத்துராமலிங்கத்தேவர். முதல் சுதந்திரப் போராட்டம் முதலில் இந்த மண்ணிலேதான் துவங்கியது. வீரப் பெண்மணி வேலுநாச்சியார், பகைவரை வெற்றிகண்டு தனிக் கொடி ஏற்றிய கோட்டை இப்போதும் இங்கிருக்கிறது. அதில் இராணுவக் கல்லூரி ஏற்படுத்தலாம். முத்துராமலிங்கத் தேவர் இப்போதிருந்தால், நிச்சயம் நம் முதல்வர் புரட்சித்தலைவர் பக்கம்தான் இருப்பார். அவர் பெயரால் ஒரு தனி மாவட்டம் அமைவதை நான் மனமார வாழ்த்துகிறேன்'' என்று குறிப்பிட்டார்.

இதைத் தொடர்ந்து நடந்த கருத்தரங்கில்-பேராசிரியர் டாக்டர் ப.இராமன், டாக்டர் க.ப. அண்ணாமலை, செல்வி கு.மங்கையர்க்கரசி, கவிஞர் மீரா ஆகியோர் பங்கேற்றனர். அவர்கள் முறையே, வீரத்திருமகன் தேவர், தேவர்கண்ட ஆன்மீகம் மாவீரர் மருதுபாண்டியர், 'செந்தமிழ் வளர்க்கும் சிவகங்கைச்சீமை' ஆகிய தலைப்புகளின் கீழே அரிய உரை நிகழ்த்தினர்; பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் மலர்வதை வரவேற்று வாழ்த்துரைத்தனர்.

திரு. 'சோமலெ' பேசுகையில் —'இம் மாவட்டத்திலுள்ள தமிழர்கள் இலங்கைத் தமிழர்க்கும் இந்தியத் தமிழர்க்கும் பாலமாக உள்ளனர்; கடல்கடந்து வாழும் தமிழர்கள் அதிகம் உள்ள மாவட்டம் இது. இம்மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாலேதான் சீன மொழியிலும் பர்மிய மொழியி



லும் திருக்குறள் வெளியிடப்பட்டது. விவேகத்திலும் வீரத்திலும் சிறந்ததாகப் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் திகழும் என்றார்''.

காலை நிகழ்ச்சிகள் முடிவுற்ற பின், மாவட்டத் திட்ட அலுவலர் திரு. அலாவுதீன்,இ.ஆ.ப. நன்றி கூறினார்.

மாலை நிகழ்ச்சிகள்:

அன்று மாலை 3 மணியளவில், ராஜா மேல்நிலைப் பள்ளியிலிருந்து மிகப்பெரும் ஊர்வலமொன்று புறப்பட்டது. மாணவ மாணவியரும், பொது மக்களும், நாட்டுப் புறக் கலை நிகழ்ச்சிக் குழுவினரும் பங்கேற்ற இந்த ஊர்வலம் 5 மணியளவில் மருது பாண்டியர் அரங்கம் வந்து சேர்ந்தது.

திரு. ஏ.கே.சி. நடராஜன் குழுவினர் கிளாரினெட் இசையோடு நிகழ்ச்சிகள் தொடங்கின.

செய்தி, மக்கள் தொடர்புத் துறைத் துணை இயக்குநர் திரு. ஆர்.கே.கிருஷ்ணமூர்த்தி முன்மொழிய, மாவட்ட மக்கள் தொடர்பு அதிகாரி திரு. ஏ.பன்னீர் செல்வம் வழிமொழிய மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் டாக்டர் திரு கா. காளிமுத்து விழாத் தலைமை ஏற்றார்.

பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்ட அமைப்புப் பணிகள் குறித்த அறிக்கையைத் தமிழக அரசு தலைமைச் செயலர் திரு கு.சொக்கலிங்கம் இ.ஆ.ப. படித்தார்.

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு.எஸ்.டி.சோமசுந்தரம் வரவேற்புரை நிகழ்த்தியதைத் தொடர்ந்து விழாவில் பங்கேற்ற அனைத்துக் கட்சித்தலைவர்களுக்கும் விழாக் குழுவின் சார்பில் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் டாக்டர் திரு கா. காளிமுத்து தமது தலைமை யுரையில் தெரிவித்ததாவது:

''புதிதாக மூன்று மாவட்டங்கள் மலர்கின்றன; எல்லோரும் மகிழ்ச்சிக் கடலில் திளைக்கின்றீர்கள். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களால் விருதுநகர் விருது பெறுகிறது; சிவகங்கை சிறப்புக் கங்கையா



கிறது; இராமநாதபுரம் இழந்த புகழை மீண்டும் பெறுகிறது. மூவேந்தர்களுக்குப் பிறகு தனிக் கொடி போட்டு ஆண்டது சேதுபதி பரம்பரையும் சிவகங்கைப் பரம்பரையும்தான். தமிழிலக்கியத்திலே மட்டுமல்ல; ஆங்கிலப் புலமையும் பெற்றிருந்தவர் முத்துராமலிங்கத் தேவர்; ஒரு சமயம் மூன்று மணிநேரம் அவர் பேசிய ஆங்கிலத்தைப் பார்த்து, சர்.சி.பி.ராமசாமி ஐயரே வியந்து பாராட்டியதுண்டு. இப்படி விவேகத்தாலும் வீரத்தாலும் இணையற்றுத் திகழ்ந்த பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரால் அமையும் இந்த மாவட்டம் அரசின் அரவணைப்பில், வியத்தகு வளர்ச்சியை விரைவிலே காணும்.!''

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் உரைக்குப் பின், முற்போக்கு முஸ்லீம் லீக் கட்சித் தலைவர் திரு செங்கம் ஜப்பார் பேசுகையில்-''தான் பிறந்த ஐந்தாறு மாதத்திலேயே தாயைப் பறிகொடுத்த பசும்பொன் முத்துராமலிங்கத்தேவரைப் பாலூட்டி வளர்த்தவர் ஒரு முஸ்லீம் தாய் என்பதைத் தெரிவிப்பதிலே பெருமையடைகிறேன். அவர் பெயரால் மாவட்டம்காணும் மாண்புமிகு புரட்சித் தலைவருக்கு நன்றி தெரிவித்து மகிழ்கிறேன்'' என்றார்.

அவரையடுத்து - அம்பேத்கார் மக்கள் இயக்கத்தைச் சேர்ந்த, திரு நெல்லை சொல்லழகன், இந்தியக் குடியரசுக் கட்சி சார்பாகத் திரு சக்திதாசன், திராவிடர் கழகத் தலைவர் திரு.திருவாரூர் தங்கராசு, கிறிஸ்துவ ஜன நாயக முன்னணியைச் சேர்ந்த திரு.கிளமண்ட். விடுதலைப் போராட்ட வீரர்கள் சார்பில் திரு. தனுஷ்கோடி ராஜா, திரு.

மார்க்க பந்து, திரு.கூத்தக்குடி சண்முகம், திரு.செய்குத்தம்பி, திரு.உ.சுப்பிரமணியம். தொழிற் சங்கத் தலைவர் திரு.சுப்பு, ஜனதா கட்சித் தலைவர் திரு. பி.முகமது இஸ்மாயில் எம்.எல்.ஏ., திரு.எம்.பழனியாண்டி, காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு குமரி அனந்தன் எம்.எல்.ஏ. ஆகியோர் மலர்ந்த பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்திற்குத் தமது வாழ்த்துரைகளை வழங்கிப் பாராட்டினார்கள்.

முன்னாள் மத்திய அமைச்சர் திரு.ஆர்.வி.சுவாமிநாதன் பேசும்போது ''இந்த மாவட்டத்தைப் பிரிக்க நீண்ட காலத்திற்கு முன்பே முயற்சி எடுக்கப்பட்டதென்றாலும், அதை வெற்றிகரமாக நிறைவேற்றி வைத்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களை மிகவும் பாராட்டுகிறேன்'' என்றார்.

சிறு சேமிப்புத் திட்டத் துணைத் தலைவர், இலட்சிய நடிகர் திரு. எஸ்.எஸ். இராசேந்திரன், எம்.எல்.ஏ. பேசுகையில் தலைக்கு ராஜேந்திர பாண்டியன் என்று பெயரிட்டவரே பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்தான் என்றுகூறி, அவரது சிறப்பியல்புகளை விளக்கினார்.

மாண்புமிகு கூட்டுறவு மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் திரு எஸ்.திருநாவுக்கரசு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்

புதிய மாவட்ட அமைப்புப் பணி விழா ஏற்பாடுகள் வருவாய் திருவாக ஆனையர் திரு ஏ.பத்மநாபன்,இ.ஆ.ப. தலைமையில் சிறப்பாகச் செய்யப் பட்டிருந்ததைப் பாராட்டும் வகையில், அவருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தஞ்சாவூர்த் தட்டைப் பரிசளித்தார்.

வேற்றக் கழகப் பொதுச் செயலாளர் திரு. ப.உ.சண்முகம் ஆகியோரும் புதிய மாவட்டம் பற்றிப் புகழ்ந்துரைத்தனர்.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்து, தியாகி திரு.எஸ். என்.சோமையாஜுலு பேசினார். தேவரோடு நெருக்கமான நட்புக் கொண்டிருந்த அவர் முத்துராமலிங்கத் தேவரின் தெய்வ வழிபாடு, அரசியல் ஈடுபாடு, பார்வர்டு பிளாக் கட்சியின் தோற்றம், எளிமையாய் வாழ்ந்து அவர் கண்ட முன்னேற்றம் ஆகியவைபற்றி நீண்டதோர் சொற்பொழிவாற்றி எல்லோரது நெஞ்சத்தையும் தொட்டார்.

பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்ட அமைப்புப் பணிகளுக்கான அடிக்கற்களை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் திறந்து வைக்கார்.

மாவட்டப் பொதுமக்களின் சார்பில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு திரு.உ.சுப்பிரமணியம் நிலைவுச் சின்னம் வழங்க, தவத்திரு குன்றக்குடி அடிகளார் மூலமும் சிவகங்கை நகர மக்கள் சார்பிலும் பொன்னாடைகள் அணிவிக்கப்பட்டன.

''முத்துராமலிங்கத் தேவரும் காமராசரும் அமராவதி சிறையிலே ஒன்றாக இருந்தார்கள். இருவருமே கல்யாணம் செய்து கொள்ளவில்லை'' என்று தொடங்கித் தமது தேன்தமிழ் உரையைத் தெள்வுபட நிகழ்த்தினார், மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி.

காமராசர் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் ஆகிய மூன்று மாவட்ட நிகழ்ச்சிகளும் சிறப்புற நிகழ அரசு அலுவலர்களை ஊக்குவித்து அயராது உழைத்த - வருவாய்த் துறை நிர்வாக ஆணையர் திரு ஏ.பத்மநாபன், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எஸ்.குருமூர்த்தி, செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. நா. கிருஷ்ணபாரதி ஆகியோருக்கு விழாச் சிறப்புக்குப் பெரிதும் பாடுபட்டு அமைதி ஒழுங்கு காத்த காவலர்களுக்காக டி.ஐ.ஜி. திரு வீரராகவனுக்கும், அரங்குகள் அமைய உதவிய பொதுப்பணித் துறைக்

,ாகத் திரு. மல்லிகார்ஜுனனுக்கும், மின்வசதி செய்துதவிய மின்வாரிய மேற்பார்வைப் பொறியாளர் (மேற்கு) திரு.எச்.மகேஸ்வரலால், மேற்பார்வைப் பொறியாளர் (கிழக்கு) திரு.ஏ.கே.அப்துல் ஜப்பார் இருவருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கலைநுணுக்கம் அமைந்த தஞ்சாவூர்த்தட்டுக்களைப் பரிசாக வழங்கிச் சிறப்பித்தார். ஊர்வலச் சிறப்பிற்குக் காரணமான கல்வித் துறை அதிகாரிகளையும் அவர் பெரிதும் பாராட்டினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமது விழாப்பேருரையின் போது குறிப்பட்டதாவது;

''இப்படிப்பட்ட விழாக்களில் எல்லாக் கட்சிக்காரர்களும் பங்கேற்க வேண்டும்.

''காரைக்குடி அழகப்பா கல்லூரியைப் பல்கலைக் கழகம் ஆக்க வேண்டும் என்று கூறினார்கள். அண்ணா பிறந்த நாளில் இருந்து, டாக்டர் அழகப்பா பல்கலைக் கழகம் துவக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

''விழா நடைபெறுகிற 250 ஏக்கர் கொண்ட இந்த இடம் மருது பாண்டியன் நகர் என்று அழைக்கப்படும். இங்கே மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடம், நீதிமன்றம் போன்றவைகள் உருவாக்கப்படும்.

''புதிதாக அமைகிற இந்த மாவட்டத்தின் எல்லையில் எதிர்காலச் சந்ததியினர் அறிந்து கொள்ளுவதற்காக பசும்பொன் முத்து ராமலிங்கத் தேவர் திருவுருவச்சிலை வைக்கப்படும். அதனருகே 'மார்பின்' கல்லில் அவரது வரலாற்றுக் குறிப்புகள் பொறிக்கப்படும். இதேதோல், இராமநாதபுரம் மாவட்டத்தின் எல்லையில் சேதுபதி சிலை வைத்து வரலாறு குறிக்கப்படும். காமராசர் மாவட்ட எல்லையில் அவரது சிலை வைத்து வரலாறு எழுதப்படும்.

''ஒன்றே செய்க; ஒன்றும் நன்றே செய்க; நன்றும் இன்றே செய்க என்பார்கள். அந்த வகையிலேயே இந்தப் புதிய மாவட்டங்கள் மலர்கின்றன. 'பதவி வரும்போது பணிவு வர வேண்டும்' என்றொரு பாடலுக்கு நான் வாயசைத்திருக்கிறேன்... அந்த வகையிலேயே என் நடவடிக்கைகளை அமைத்துக் கொண்டிருக்கிறேன்.

''குழந்தைகள் படிப்பிலே கவனம் செலுத்தும் எண்ணம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து வருகிறது; அது நாட்டுக்கு நல்ல தல்ல.''

—இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசினார்.

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் நன்றி கூறினார்.

விழா முடிந்ததும், கலைமாமணி டாக்டர் சீர்காழி திரு. எஸ். கோவிந்தராஜன் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. அதற்குப் பின்னர் கவிஞர் கண்ணதாசன் எழுதித் தயாரித்த 'சிவகங்கைச் சீமை' திரைப்படம் திரையிடப்பட்டது.

மதுரை மாவட்டத்தில் மாண்புமிகு முதல்வர்

மதுரை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் திரு எம்.ஜி.ஆர் அவர்கள் பல்வேறு பணிகளைத் துவக்கி வைத்தார். அமைப்புக்களைத் திறந்து வைத்தார்.

ஆண்டிப் பட்டி ஊராட்சி ஒன்றியத்தில், கடமலைக்குண்டு வெள்ளிமலை 41 கிலோ மீட்டர் நீளச் சாலை அமைக்கும் பணியை மாண்புமிகு முதல்வர் துவக்கி வைத்தார்.(18.7.84.)

30 சிறு கிராமங்களை இணைப்பதாக அமையும் இந்தச் சாலை மூலம் பத்தாயிரத்திற்கும் மேலான மக்கள் பயன்பெறுவர். 2 கோடியே 66 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் இச்சாலை அமையும்.

மேற்கு மலைத்தொடர் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்படவிருக்கும் இந்தப் பணியோடு, ரூ. 8,85.000 மதிப்பீட்டில் உருவாக 12 சமுதாயக் கூடங்கள், ரூ. 1,28,000 மதிப்பீட்டில் கட்டப்பட்ட 2 பள்ளிக் கட்டடங்கள் ஆகியவற்றையும் மாண்புமிகு முதல்வர் துவக்கிவைத்தார்.

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி வி.சந்திரலேகா இ.ஆ.ப., வரவேற்புரையோடு தொடங்கிய இவ்விழாவில் தேசிய நெடுஞ்சாலைத் துறைதலைமைப் பொறியாளர் திரு. சி. இராமநாதன் பெரியகுளம் கோட்ட வளர்ச்சி அலுவலர் திரு. அ. இராமதாஸ் இருவரும் அறிக்கை படித்தனர்.

விழாத் தலைமையேற்ற மாண்புமிகு சத்துணவு-நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு ப.குழந்தைவேலு பேசுகையில் ''பிற மாநிலங்களும் மத்திய அரசும் பாராட்டுமளவில் தமிழகத்தில் ஆட்சி நடக்கிறது; புரட்சித் தலைவர் காலமே நமக்கெல்லாம் பொற்காலமாகும்'' என்றார்.

தொகுதிச் சட்டமன்ற உறுப்பினரும் சிறுசேமிப்பு ஆலோசனைக் குழு துணைத் தலைவருமான இலட்சிய நடிகர் திரு.எஸ் எஸ்.இராசேந்திரன் ''ஆண்டிப்பட்டி தொகுதி, ஆண்டவனால் கைவிடப்பட்ட தொகுதி என்பார்கள்; அப்படியே இருந்தாலும் அரசினால் இது எகதூக்கிவிடப்பட்ட பகுதியாகும்'' என்று தம் உரையில் குறிப்பிட்டார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஆர்.ஜெயராமன், இரா.முத்தையா, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எஸ்.டி.கே.ஜக்கையன் ஆகியோரைத் தொடர்ந்து பேசுகையில்-''இதற்கு முன்னால் அரசாண்டவர்கள் கைவிட்ட பணிகளையெல்லாம், எடுத்து நிறைவேற்றி முடிக்கும் சக்தி மாண்புமிகு புரட்சித் தலைவருக்கே உண்டு. வரலாறே போற்றும் அவரை யாரோ சில ஏனோதானோக்கள் திட்டுவது பற்றிக் கவலைப்படத் தேவையில்லை'' என்றார் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் டாக்டர் காளிமுத்து.

விழாப் பேருரை நிகழ்த்துகையில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதாவது:

''ஆண்டிபட்டியைத் தாய்ப் பாசத்தோடு கவனித்துவரும் மாவட்ட ஆட்சித் தலைவரை நான் பாராட்டுகிறேன்.

''சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்கு அடுத்த ஆண்டுமுதல் இலவசச் சீருடை வழங்கப்படும். 1937 முதல் அரசியலில் இருக்கும் என்னைத் தவறாக விமர்சிப்பவர்கள் ஏமாந்துபோவார்கள். இராமநாதபுரம் புதுகோட்டை மக்களுக்கு குடிநீர்வசதி செய்யக் கேரளாவிடம் தண்ணீர் கேட்டுப் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். இதற்கு ஆயிரம் கோடி ரூபாய் வரை செலவாகலாம். தண்ணீருக்குப் பதில் அரிசி தருவது குறித்தும் பேசிவருகிறோம்.

''படித்த இளைஞர்கள் ஒன்று கூடி ஒரு குழுவாக சாலைபோடுவது போன்ற பணிகளை எடுத்து நடத்த முன்வந்தால் அவர்களுக்கு அரசு உதவத் தயாராக இருக்கிறது. இப்போதெல்லாம் பெண்கள் நன்றாகப் படித்து வருகிறார்கள்; பத்தாண்டுகளில் ஆண்களெல்லாம் கூடி, பெண்களுக்குள்ள உரிமை எங்களுக்கும் வேண்டும் என்று வாதாடும் நிலைமை வந்து விடும்போலிருக்கிறது. எனவே, எல்லோரும் நன்றாகப் படிக்க வேண்டும்''.

— இவ்வாறு மாண்புமிகு முதல்வர் உரைநிகழ்த்தினார்.

விழா முடிவில் -கண்காணிப்புப் பொறியாளர் (மலைச்சாலைகள்) திரு. ர. க. ரங்கசாமி சௌரிய சக்ரா நன்றி கூறினார்.

கூட்டுறவு நூற்பாலை:

கண்டமனூர் விலக்கு அருகில் ரூ. 714 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள தேனி கூட்டுறவு நூற்பாலை மாண்புமிகு முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இதன் மூலம் சுமார்700 பேர் வேலைவாய்ப்புப் பெறுவர்

மாண்புமிகு கூட்டுறவு மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் திரு.

எஸ். திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தொழில் துறைஆணையர் மற்றும் செயலர் திரு. செல்வராஜ் இ.ஆ.ப., வரவேற்புரையாற்றினார்.

சிறுசேமிப்புத் திட்ட ஆலோசனைக் குழுத்துணைத் தலைவர், இலட்சிய நடிகர் திரு. எஸ். எஸ். இராஜேந்திரன், எம். எல். ஏ., திரு. எஸ். டி. கே. ஜக்கையன் எம். பி., ஆகியோரைத் தொடர்ந்து- மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் பேசுகையில்- ''ஏழை எளிய மக்களின் நலன் கருதி, தமிழ்நாட்டுக் கிராமங்களின் வளம் கருதியே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் திட்டங்களைத் தீட்டி வருகிறார். எந்த நல்லகாரியத்தைச் செய்தாலும் தடுப்பது, பழிசுமத்துவது என்ற நிலை நீடிக்குமானால் நாட்டில் எந்த நல்லபணிகளுமே நடக்காமல் போய்விடக் கூடும் என்பதை ,அப்படிச் செய்பவர்கள் உணரவேண்டும்'' என்றார்.

நூற்பாலையைத் திறந்து வைத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் ''இந்த ஆலை அறிஞர் அண்ணா கூட்டுறவு நூற்பாலை என அழைக்கப்படும் என்றார்.

மேலும் அவர் பேசுகையில்- ''இந்த நூற்பாலையில் அரசு வைத்துள்ள விதிதாச்சார முறைப்படிதான் ஆட்கள் வேலையில் அமர்த்தப்படுவார்கள்; இந்த வட்டார மக்களுக்கு முன்னுரிமை தரப்படும். கைத்தறி நெசவாளர்கள் அதைக் குலத்தொழிலாகக் கருதி, குழந்தைகளையும் ஈடுபடுத்திவரும் நிலை மாறவேண்டும் ;அவர்கள் நன்கு படிக்க வேண்டும் கட்சி, மதம், சாதிகளுக்கு அப்பாற்பட்ட கல்வி வளர்ச்சிக்கு நாம் முயலவேண்டும்'' என்றார்.

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் நன்றி கூறினார்.

புதிய குடியிருப்பு

தேனி தொகுதியில் புதிதாக உருவாக்கப்பட்ட 368 குடியிருப்புகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் (19.7.84) திறந்து வைத்தார்.

ரூ.58 இலட்சம் செலவில் சிறப்புற அமைக்கப்பட்டுள்ள இந்தக் குடியிருப்புத் திறப்பு விழாவிற்கு மாண்புமிகு பொதுப்பணிமற்றும் வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு எஸ். ஆர். ராதா தலைமை தாங்கினார்.

தமிழ்நாடு வீட்டுவசதிவாரியத் தலைவர் திரு. ஏ. செல்லையாத் தேவர் வரவேற்புரையாற்றினார்.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. எஸ். முத்துசாமி, சிறுசேமிப்புத் திட்ட

ஆலோசனைக் குழுத் துணைத் தலைவர் இலட்சிய நடிகர் திரு. எஸ். எஸ். ஆர். எம். எல். ஏ., திரு. வி. ஆர். ஜெயராமன், எம். எல். ஏ., திரு. இரா. முத்தையா எம். எல். ஏ., ஆகியோர் உரையாற்றினர்.

'நடிப்பிசைப்புலவர் கே. ஆர். இராமசாமி நகர்' என இந்தக் குடியிருப்புகளுக்குப் பெயரிட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''சொல்லுவது எளிது. செய்வது கடினம்; வாய்ச்சொல் வீரனாக இருக்க நான் தயாரில்லை; முடியும் என்றால் சொல்வேன்: நினைத்ததை முடித்துக்காட்டுவேன்.

''விவசாயிகளுக்குக் கட்டணமின்றி மின்சாரம் வழங்கமுடியுமா என்பதைப் பற்றி இரவுபகலாகச் சிந்தித்து வருகிறோம். 1977 முதல் 1984 வரை, இந்த அரசு 59,328 வீடுகளைக் கட்டியிருக்கிறது.

''அடுத்த ஆண்டு அண்ணா பிறந்த நாளில் -செப்டம்பர்15ம் நாள் மீண்டும் மது விலக்குஅமல் படுத்தப்படும்''.

—இவ்வாறு மாண்புமிகு முதல்வர்பேசினார.

பெரியார் கால்வாய்

தேனி அருகே உள்ள தாடிச்சேரியில் சமமட்டக் கால்வாய் ஒன்றைத் திறந்து வைத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் அக்கால்வாய்க்குப் 'பெரியார் கால்வாய்' என்று பெயரிட்டார்.

மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு. ஓய். எஸ். எம். யூசுப் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு வி. ஆர். ஜெயராமன் எம். எல். ஏ. வரவேற்புரையாற்றினார்.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து, திரு. இரா. முத்தையா எம். எல். ஏ. திரு. ஆர். டி. கோபாலன், எம். எல். ஏ., திரு. எஸ். டி. கே. ஜக்கையன் எம். பி., ஆகியோர் உரையாற்றிய பின்னர், தலைமைப் பொறியாளர் திரு. டி. கே. விசுவநாதன் திட்ட விவர அறிக்கை படித்தார்.

கால்வாயைத் திறந்துவைத்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''இந்தக் கால்வாய் கட்டப்பட்டதன் மூலம் ஏழாயிரம் எட்டாயிரம் டன் அரிசி உற்பத்தி அதிகரிக்கும். அத்துடன், எத்தனையோ பேருக்கு வேலையும் கிடைக்கும்.

''என் மனம் தளராத வரையில், நீங்கள் பதவியில் வைத்திருக்கும் வரையில் நான் உங்களுக்காக உழைப்பவன். நாங்கள் திட்டங்களை ஓட்டுகளுக்காகப் போடுவதில்லை. பின் சந்ததியினரை நினைத்தே போடுகிறோம்'' —இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசினார்.

—ராஜ-ி

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

சேலத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் சேலம் விஜய ராகவாச்சாரியார், பெருந்தலைவர் காமராஜர் ஆகியோரின் திருவுருவச் சிலைகளை, 30.7.1984 அன்று மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

விழாவிற்கு, மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்கள் தலைமை தாங்கினார்கள். மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்டனர்.

எம். ஜி. இராமச்சந்திரன்
முதலமைச்சர்

புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை-600 009

நாள் 13-8-1984

விடுதலைத் திருநாளி செய்தி

நம் தாய்த் திருநாடு அடிமைத் தளைகளை உடைத்தெறிந்து சுதந்திரம் பெற்ற 38-வது ஆண்டுவிழா இன்று கொண்டாடப்படுகிறது. இத்திருநாளையொட்டி அனைவருக்கும் என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் தாய் நாட்டின் விடுதலைக் கனவு நனவாகிட தங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தையும் காணிக்கையாக்கிய தியாகச் செம்மல்களுக்கு நமது அஞ்சலியைச் செலுத்துவது நம்முடைய கடமையாகும். விடுதலை பெற்ற 37 ஆண்டுகளில் பல சோதனைகளை வென்று அனைத்துத் துறைகளிலும் சாதனை புரிந்து உலகில் வலிமையுடைய நாடுகளிலொன்றாக இன்று இந்தியா உயர்ந்து நிற்கிறது. எல்லாவகையிலும் இன்றுள்ள சூழ்நிலை சற்று கவலை ஏற்படுத்துவதாக உள்ளது. மதம், மொழி, இனம், சாதி இவற்றின் பெயரால் வெறியுணர்வை வளர்ப்போர், அரசியல் கட்சிமாச்சரியங்களின் காரணமாக வதந்திகளை, அவதூறுகளை அள்ளிவீசி அமைதியைக் கெடுப்போர், எவ்விதக் காரணமுமின்றி எப்போது பார்த்தாலும் தொல்லை தருவதையே தொழிலாகக் கொள்வோர் ஜனநாயகத்திற்கும், சுதந்திரத்திற்கும் எந்நாளும் நஞ்சுகளாகி துக்கமாட்டார்கள் என்பதை மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

"தனித்தனியே நமக்குள்ள விருப்பு-வெறுப்பு, உரிமை, சலுகை இவையெல்லாம் நாடு வாழவேண்டுமென்ற பொதுக் கடமைக்குத் தனை செய்வதாக அமைய வேண்டும்" என்ற அமரர் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவாக்கையே இன்று நாம் அனைவருக்கும் நினைவூட்டக் கடமைப்பட்டுள்ளோம்.



தீய சக்திகளும், பிளவு சக்திகளும், சீர்குலைவு மதியினரும் இன்று ஜனநாயகப் போர்வையில் உலா வந்துகொண்டிருப்பதால் விடுதலையினையும், மக்களாட்சித் தத்துவ அமைப்பையும் நாம் இரட்டிப்பு விழிப்போடு காத்து-நிற்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

சுதந்திரத்தின் பகைவர்கள், முன்னேற்றத்தின் விரோதிகள் நமக்குள்ளேயும் இருக்க முடியுமென்பதையே கடந்த 37 ஆண்டுகால சுதந்திர இந்தியாவின் வரலாறு ஒரு பாடமாக நிற்கு காட்டியுள்ளது. இதனை உணர்ந்து ஆக்க சக்திகளின் இலட்சியப் பயணம் இடையறாது தொடர்ந்து நடந்திடவும், அழிவு சக்திகள் அடையாளம் காணப்பெற்று அகற்றப்படவும் நாம் எச்சரிக்கையுடன் பொறுப்பான பணியில் நமது கடமையைப் புரிந்திட முன்வர வேண்டும்.

தற்சார்புள்ள, முற்போக்கான, பேதமில்லாத, சமத்துவ இந்தியாவை-வலிமையுடைய, வீறுகொண்ட தாயகத்தைத் உருவாக்கிக் காத்திட அனைவரும் ஒரணியில் திரளுவோம் என நாட்டுப்பற்றுமிக்க நல்ல உள்ளங்களை அழைக்கிறேன்.

வாழிய செந்தமிழ்! வாழிய நற்றமிழர்!!

வாழிய பாரத மணித் திருநாடு!!!

வாழிய அண்ணா நாமம்!

(எம்.ஜி. இராமச்சந்திரன்)

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2015
ரக்தாக்ஷி
மலர் : 15 இதழ் : 4
16-8-1984

சுதந்திரம்

ஓர் வரப்பிரசாதம், ஒரு வாய்ப்பு

37 ஆண்டுகளுக்கு முன்னர் நமது அடிமைத் தளைகளைக்களைந்து, சுதந்திர நாடுகளின் குழாமில் சேர்ந்தோம்.

அதன் பிறகு வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் விரைவான முன்னேற்றம் கண்டோம்.

* இன்று நமது விவசாயிகள் நாட்டின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் போதிய உணவு தானியங்களை விளைவிக்கிறார்கள்.

தொழில் துறை உற்பத்தியில், உலக நாடுகளிடையே பெருமை வாய்ந்த ஓர் இடத்தைப் பெற்றிருக்கிறோம்.

அனைவருக்கும் சமூக மற்றும் பொருளாதார நீதி கிடைத்திட நாம் தொடர்ந்து மேற்கொண்டுவரும் முயற்சியின் பிரதான அங்கமாகும் புதிய 20-அம்ச திட்டம்.

நமது இலக்கை எட்டுவதற்குப் பாடுபடுவதன் வாயிலாகத்தான் உள்நாட்டு, வெளிநாட்டு அபாயங்களிலிருந்து நமது சுதந்திரத்தையும், ஒருமைப்பாட்டையும் காப்பாற்றிக்கொள்ள முடியும்.

கடினமாக உழைப்போம், ஒன்றுபட்டு முனைவோம் என்று உறுதி பூண்டு 38-வது சுதந்திர ஆண்டில் அடியெடுத்து வைப்போம். நாம் போற்றும் லட்சியத்தை எட்டுவதற்கு அது ஒன்றுதான் வழி.

தி 54 84

எனக்குத்தான் தெரியும். ஏதோ மக்களுடைய ஆதரவால் எனக்குக் கிடைப்பது இவர்களுக்கு யாருடைய ஆதரவினால் கிடைக்க வேண்டும் என்கிற நினைப்பை எனது உள்ளத்திலே தேக்கிய போது எனக்குக் கிடைத்த பதில் 'உன்னை எதற்காகத்தேர்ந்தெடுத்துக்கிறேன்' என்று ஒவ்வொரு ஆணும் பெண்ணும் என்னைக் கேள்வி கேட்பதுபோல் உள்ளது.

அன்று சொன்னோம்! இன்று செய்கிறோம்!

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர்.

இந்த நிகழ்ச்சியைப் பற்றி எவ்வளவோ துல்லியமாக விளக்கமாக புள்ளிவிவரங்களோடு எடுத்துரைத்தார்கள். முதலில் நாம் சொல்ல விரும்புவது இந்த வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கட்டப்பட்ட 1248 என்கிற கணக்கை நீங்கள் ஒருவகையிலே எண்ணிப் பார்த்தால் நாம் எப்படி வளர வேண்டுமோ அதே போல் 1 இன்னொன்று சேர்த்தால் 2, இன்னொரு 2ஐச் சேர்த்தால் 4, இன்னொரு நான்கைச் சேர்த்தால் 8-1248. குடும்பம் வளமாக வாழ-வளமாகப்பெருகிவரவேண்டும் என்பதுபோல் எண்ணிக்கையும் அமைந்துள்ளது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். 45, 40, 35, 30 என்று மாதந்தோறும் கொடுப்பதை அறுதியிட்டு அந்த வசதியினைக் கொஞ்சம் கொஞ்சம் கூடுதலாகப் பணத்தைச் செலுத்தி இந்தத் திட்டம் தோன்றிய விதம் உண்மையிலேயே எனக்கு வியப்பாக உள்ளது.

ஒரு அம்மையார் கண்ணீர் வடித்து, தாய்மார்களைக் கூட அழைத்துவந்து ஒரு மனுவைக் கொடுத்தபோது மேடையிலேயே நான் படித்துப் பார்த்தேன். இங்கே வாழ முடியவில்லை எந்த வசதியும் இல்லை - கழிப்பிடங்கள் இல்லை - விளக்கு இல்லை-தண்ணீர் இல்லை -குடிசைக்குப் பாதுகாப்பும் இல்லை. குடிசையில் இடவசதியும் இல்லை என்று எழுதப்பட்டிருந்தது அந்த மனுவில்!

அட்டை சொல்லும் செய்தி

நான் அதைப் படித்துப் பார்த்தேன். எனது வாழ்வில் நான் எப்படி இருந்தேன் என்பதைக் கொஞ்சம் நினைத்துப் பார்த்தேன், இந்த நேரத்தில்! 18 ரூபாய் வாடகைக்கு ஒரு வீட்டில் குடியிருந்தேன். அப்போது வாடகை ரொம்ப அதிகம். 18 கூட கொடுக்க முடியாத நிலை. ஒரு கூடம், ஒரு ரூம், ஒரு சமையல் கூடம். அதில்தான் நான் 19 ஆண்டுகளாக வாழ்ந்து கொண்டிருந்தேன். அதையும் நினைத்துப் பார்த்து, அந்தத் தாய் எழுதிக் கொடுத்த மனுவையும் நினைத்து எப்படியெல்லாம் கற்பனை செய்தேன்-வருத்தப்பட்டேன் என்பது

'உனக்கு வாக்கு அளித்து முதலமைச்சராக ஆக்கியிருக்கிறோமே தமிழகத்திற்கு, நீ தான் அந்தப் பொறுப்பை ஏற்கவேண்டும்! நீங்கள் தான் எங்களுக்குச் செய்து தர வேண்டும்' என்று சொல்கின்றபதில் என் உள்ளத்தில் ஊடுருவிப் பாய்ந்ததன் விளைவாக அப்போதே நான் சொன்னேன், இங்கே வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று. 1982லே சொன்னேன். 1984லே முடிந்து, இந்தக் கட்டடங்கள் யார் யாருக்குச் சொந்தமாக்கப்பட வேண்டுமோ அவர்களுக்கெல்லாம் உரிமையாக்கப்படுகின்ற நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது.

இங்கே எனது அருமைச் சகோதரர் மாண்புமிகு எஸ்.ஆர்.ராதா அவர்கள் திரைப்படங்களிலே என்னென்ன சொன்னேனோ அதையெல்லாம் செய்து வந்துள்ளேன் என்று சொன்னார். அதில் கொஞ்சமும் சந்தேகமே இல்லை.

என் வாழ்வில் நான் கண்ட கஷ்டங்கள், நான் அனுபவித்த துன்பங்கள், வேதனைகள் போன்று

தானே இந்நாட்டிலுள்ள அத்தனை பேருக்கும் நிலைமை இருக்கும். அதிலும் வறுமைக் கோட்டிற்குக் கீழே வேலையே இல்லாமல் இருக்கின்றவர்களுக்கு அவர் நிலைமை எப்படி இருக்கும் என்ற எண்ணத்தை மனத்தில் தேக்கித்தான் நான் நடித்த படங்களிலே எல்லாம் கொள்கைகளைச் சொல்லும்போது ஆர்வத்தோடும் சொன்னேன்; அழுத்தமாகவும் சொன்னேன். மக்களிடம் மனத்தில் பதியும்படியும் சொன்னேன். மக்கள் அதைச் சிந்திக்க வேண்டிய நிலையைச் சொன்னேன். ஆனால் ஒரு சிலர் சிந்திக்கத் தவறிவிட்டார்கள்.

சினிமாக்காரன் என்று என்னை நினைத்தார்களே தவிர இந்த மக்களின் தேவையை நினைத்து உண்மையான நிலைமையை இந்த எம்.ஜி.ஆர். சொல்கின்றான் என்று யாரும் எண்ணவில்லை, கேலி பேசினார்கள்.

2 கோடி ரூபாய் செலவு செய்தால் இந்த 2 கோடி ரூபாய் அரசின் பணம் என்று வந்தாலும் உங்கள் பணம் என்று வந்தாலும் நீங்கள் வாடகை கொடுப்பது போல் கொடுத்து வந்து சில ஆண்டுகளுக்குப் பிறகு இது உங்களுக்குச் சொந்தமாக்கப்பட இருக்கிறது என்பதை இங்கே குறிப்பிட்டாக வேண்டும். அதேசமயம் ரூ.30,35,40, 45 என்று கொடுத்தாலும் அரசு ஒவ்வொரு ஆண்டிலும் எவ்வளவு உங்களுக்காகக் கொடுக்கிறது என்பதை இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

மாதம் ஒன்றுக்கு 1248 வீடுகளுக்கு 30,35,40,45 என்று கொடுக்கின்றீர்களே அந்தப் பணம் போக, 83, 616 ரூபாய்களைத் தமிழக அரசு வீட்டுவசதி வாரியம் உங்களுக்காகக் கொடுக்கப்போகிறது, மானியமாக. இதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். முழுப் பணமும் நீங்கள் கடடப்போவதில்லை. நீங்கள் கட்ட வேண்டிய பணத்தின் ஒரு தொகையை அரசு உங்கள் வரிப்பணத்திலிருந்து உங்கள் கடனை - சுமையைக் குறிப்பாக வீட்டைக் கட்டிக் கொடுத்து ஓரளவுக்குத் தேவையான பணத்தை வாங்கிக் கொண்டு 83,616 ரூபாய்களை மாதம் ஒன்றுக்குத் தமிழக அரசு இந்தத் தொகையை வீட்டு வசதி வாரியத்துக்குக் கொடுத்தாக வேண்டும். அப்படியானால் உங்களுக்காக வீடு கட்டிக் கொடுத்து நீங்கள் 45, 40, 35, 30 கொடுக்கின்றீர்களே அதுமட்டுமல்லாது நீங்கள் கொடுக்க வேண்டிய பணம் 50 அல்லது 60 என்று இருந்தால் 30ஐ நீங்கள் கொடுக்க வேண்டும் மீதியை அரசு கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையில் இந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டு உள்ளன.

அப்படி நீங்கள் பணம் கொடுத்தால் அது எங்கே போகும்? இந்த வீட்டு வசதி வாரியம் எங்கே கடன் வாங்குகிறதோ அவர்களுக்குத் திருப்பித் தரப்படும். அதேபோல் நீங்கள் தருகின்ற பணத்தில் இருந்து இதுபோன்ற குடியிருப்புகள் தமிழகம் முழுவதும் எங்கெங்கே மற்றவர்களுக்கு வீடு இல்லாமல் கஷ்டப்படுகின்றார்களோ இதேபோல புதிய வீடுகள் கட்டிக் கொடுக்க நீங்கள் கொடுக்கின்ற பணம் மீண்டும் அதற்குப் பயன்படுத்தப்படும் என்பதையும் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்; மனத்தில் பதிய வைத்துக் கொள்ளவேண்டும்.

எப்படிப்பட்ட குடிசையிலிருந்து சிறிய வீடு ஆனாலும் ஒரு கல் கட்டடத்தில் ஆபத்தில்லாத ஒரு இடத்தில் வசதியான இடத்தில் - பாதுகாப்பான இடத்தில் உங்களுக்காக இடம் தரப்பட்டிருக்கின்றதோ - ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதோ அதேபோல் இன்னும் லட்சக்கணக்கான மக்கள் குடிசையில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள். வீடே இல்லாமல் இருக்கின்றார்கள். நீங்கள் 30, 40 என்று கொடுக்கின்ற ரூபாய்கள் அங்கே போய்ச் சேரும்போது அவர்கள் மீண்டும் கடன் வாங்கியோ அல்லது மானியம் பெற்றோ, அரசிடம் பெற்றுக் கொண்டோ அவர்கள் இது போன்ற குடியிருப்புக்களை ஆயிரக்கணக்கில் அல்லது லட்சக்கணக்கில் மற்றவர்களுக்குக் கட்டிக் கொடுக்க வேண்டியிருக்கிறது.

இது முன்பிருந்த ஆட்சியால் கொண்டு வந்த வசதியான தீப்பிடிக்காத வீடுகள் என்று அளவிலே தொடங்கப்பட்ட திட்டம்; எங்கள் ஆட்சிக் காலத்தில் இது நடந்து கொண்டிருந்தாலும் சென்னைக்கு மட்டும் தான் என்ற அளவில் அவர்கள் இந்தத் திட்டத்தைத் தீட்டியிருந்தார்கள் நாம் ஆட்சிக்கு வந்தபிறகுதான் உங்களது ஆட்சி இங்கே நடைபெறுகிறது என்ற நிலைமையில் தான்-இது சென்னைக்கு மாத்திரம் உரிமை உள்ளதுபோல், தமிழகத்தில் எங்கெங்கே வாழ்கிறார்களோ அந்த மக்கள் அனைவருக்கும் கிடைத்தாகவேண்டும் என்று பரவலாக்கினோம்; தேர்தல் நேரத்தில் வாக்குகள் பெறுவதற்காக அல்ல. மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமையை நாம் செய்ய வேண்டும் என்பதற்காக இதைப் போன்ற செயல்களைச் செய்து கொண்டிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, குடிசை மாற்று வாரியம் என்று ஒன்று இருக்கிறது. ஒரு குடிசையை வீடாக மாற்ற வேண்டும் என்கிற அதுவும் சென்னைக்கு மட்டும் தான் என்று வைத்திருந்தார்கள். நான் அதை மாற்றி, தமிழகம் முழுவதற்கும் குடிசை மாற்று வாரியம் அந்தப் பணியை மேற்கொள்ள வேண்டும் என்று உத்தரவிட்டு



அந்த வசதி வாய்ப்பும் ஏற்பாடு செய்துதர வேண்டும் என்று சொல்லி இருக்கின்றேன். நடந்து கொண்டு இருக்கின்றது.

இவைகளையெல்லாம் ஏன் சொல்கிறேன் என்றால் 'நாடோடிமன்ன 'னில் அமைச்சரவை இல்லை-அதில் ஒரு மன்னன்-நாடோடி மன்னன் என்னைப்போல். எனக்கு ஊரும் உறவும் கிடையாது. மக்களுக்குத் தொண்டு செய்யவேண்டும் என விரும்பிய ஒரு நாடோடிக்கு மன்னனாக இருக்கும் வாய்ப்புக் கிடைக்கிறது. ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். ஒரு பணக்காரர் எழுந்து எல்லோருக்கும் வீடு கட்டிக் கொடுப்போம் என்று சொல்கின்றீர்களே குடிசைகளை என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்பார். அதற்கு தேவையில்லாத காரணத்தால் குடிசைகள் கொளுத்தப்படும் என்று நான் பதில் கூறினேன்.

மாணவர்களைப் பற்றிக் கேட்பார்கள். மாணவர்கள் படித்து முடித்து வேலை கேட்கும்வரை அந்தப் பொறுப்பை அரசாங்கம் ஏற்கும் என்று அதில் சொல்லி இருக்கின்றேன். ஆரம்பக் கட்டத்தில் சத்துணவு கொடுக்கின்றோம். 10 வயது வரை கொடுத்து வருகிறோம். செப்டம்பர் 15 அண்ணா பிறந்த நாளிலிருந்து 15 வயது வரையுள்ள – படிக்கும் குழந்தைகளுக்குச் சத்துணவு கொடுக்கப்பட இருக்கிறது. அது மட்டுமல்ல; வயது முதிர்ந்தவர்கள், இங்கே இப்பொழுது உதவித் தொகை கொடுத்தோமே அப்படிப்பட்டவர்களுக்கு, சேலையும் வேட்டிகளும் கொடுக்கும் திட்டத்தைப் போல் அந்த மாணவர்களுக்குச் சீருடை வழங்கப்படும் என்று நான் சொல்லி இருக்கின்றேன். அந்தத் திட்டத்தில் வேலை தேடித் தரும் அலுவலகத்தில் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள்.

வேறு எங்கும் பணி செய்யாதவர்கள் எத்தனை பேர்கள் என்று கணக்கு எடுத்து மாதம் ஒன்றுக்கு அவர்களுக்கு 50ரூபாய் கொடுக்க வேண்டும் என்ற திட்டத்தைக் கொண்டு வந்தோம். மக்கள் வரிப் பணத்திலிருந்து ஏறக்குறைய 400 கோடிரூபாய்க்கு மேலே ஒரு ஆண்டுக்கு நாம் செலவு செய்கிறோம் கல்விக்காக. அப்படி இருந்தும், படித்து

வெளியே வருபவர்களை என்ன வேலை செய்யப் போகிறீர்கள் என்று கேட்டால் தெரியாத அளவில்தான் இது கல்வியா? அல்லது நாளை வீணாக்கும் விளையாட்டுக் கூடமா என்ற கேள்வி எழுகிறது.

படித்தவன் புத்திசாலியாகிறான் என்று சொன்னால் மட்டும் போதாது. தன்னை வாழ வைத்துக் கொள்கிற தகுதியுள்ளவனாக வெளியே வருகிறான் - தொழில் பயின்றவனாக வருகிறான் என்கிற உரிமை-தகுதி இருக்க வேண்டும். அதற்கு வேலை வாய்ப்பு தயாராக இருக்க வேண்டும். ஐந்து ஆண்டுக் காலத்தில் முடியுமா, மூன்றாண்டுக்காலத்தில் முடியுமா என்ற திட்டத்தை எப்படி நிறைவேற்றுவது என்ற எண்ணம் கொண்டு, இடைக்காலத்தில் அவர்களுக்கு 50 ரூபாய் கொடுக்கப்படும் என்று சொன்னேன். இப்பொழுது அந்தப் புள்ளி விவரங்களைச் சரியாக எடுத்து வந்து கொண்டிருக்கிறோம்.

அண்ணா அவர்களுடைய பிறந்த நாள் விழாவின்போது இதைப் பற்றிய ஒரு புதிய அறிவிப்பு வரும் என்பதை மட்டும் இங்கே நான் சூசகமாகச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். இந்தக் காலத்தில் 50 ரூபாய் போதாது. ஆகவே அதைப் பற்றி ஏற்பாடு செய்யப்பட இருக்கிறது - இந்த ஆட்சி செய்யும் என்றும் உறுதி கூறிக் கொள்கிறேன். அந்தப் படத்தில் நான் சொன்ன திட்டம் ஓரளவுக்கு நிறைவேறும். பள்ளிக் கூடத்தில் படித்துப் பட்டம் பெற்று வேலையில்லாமல் இருந்தால், வேலை கிடைக்கும் வரையில் அரசு பொறுப்பு ஏற்கவேண்டும் என்று அங்கே சொன்னேனே? அதனுடைய ஒரு பகுதிதான் 50 ரூபாய்.

அரசினுடைய வேலை, உடனடியாக யாருக்கு என்ன தேவையோ அதைச் செய்து கொடுக்க வேண்டும். உங்களுக்குத் தற்காலிகமாகப் பயன்படுவது எதிர்காலத்தில் நன்கு பயன்பட இருக்கிறது. மக்கள் தரும் வரிப் பணத்திலிருந்து நமக்குச் சம்பளம் கொடுக்கிறார்கள். ஆகவே மக்களுக்குத் தொண்டு செய்கிறோமே தவிர மக்கள் எஜமானர்கள் அல்ல என்ற வகையில் அரசு அலுவலர்களும் மற்றவர்களும் அந்தப் பணியைச் செய்தால்தான் நிலைமை சீர்படும்; எந்தத் திட்டமும் நிறைவேறும். அந்த வகையில்தான் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றியவர்கள் தங்களுக்குச் சம்பளம் கிடைத்தது என்பதற்காக மட்டுமல்லாமல், சமுதாயம் வாழ வேண்டும் என்பதற்காகச் செய்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லி, வீட்டு வசதி வாரியத் தலைவர் அவர்களையும் அவர்களுடன் ஒத்துழைத்த அலுவலர்கள், பணியாளர்கள் அனைவரையும் பாராட்டுவதோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களையும் பாராட்டி அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்துகிறேன். அண்ணா நாமம் வாழ்க!

(சேலம் மாவட்டம்-பள்ளிப்பாளையத்தில் கிராமப்புற மக்களுக்குத் தவணை முறை வீட்டு வசதித் திட்டத்தை 31-7-'84-ல் தொடங்கி வைத்து ஆற்றிய உரையிலிருந்து.)



ஏர்க்காட்டில் தொலைக் காட்சி அஞ்சல் நிலையம்

ஜூலைத் திங்கள் 30-ஆம் நாள் 'மலைவளம் நிறைந்த ஏர்க்காடு புதுப் பொலிவு பெற்று விளங்கியது. அந்தப் பகுதி மக்களிடம் ஆர்வ அலை பொங்கி வழிந்தது. அங்கே தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தொடங்கி வைக்கிறார்கள் என்னும் செய்திதான் மக்களுக்கு மகிழ்ச்சியை உருவாக்கியது.

எங்குப் பார்த்தாலும் வரவேற்பு வளைவுகள். பற்பல திட்டங்களை உருவாக்கி மக்களுக்கு நன்மை செய்து வரும் மாண்புமிகு முதல்வருக்குப் பாராட்டு வாசகங்கள் நிறைந்த-பதாதைகள் தோரணங்கள்;வண்ணக்கொடிகள் இப்படியாக ஊரே எழில்கோலத்துடன் காட்சியளித்தது.

சீருடை அணிந்த பள்ளிக் குழந்தைகள் சிரித்த முகத்துடனும் சின்னஞ்சிறு கைகளில் வண்ணக் கொடிகளுடனும் நின்றவாறு முதல்வரை வரவேற்கக் காத்திருந்தனர். பல்லாயிரக் கணக்கான குழந்தைகள் பேரார்வத்துடன் நின்ற காட்சி, பார்ப்பவர்களைப் பரவசப்படுத்தியது. பிஞ்சுகளின் நெஞ்சங்களில் தமிழக முதல்வர் வேரூன்றி நிற்கிறார் என்பதை - அவர்களின் பேரார்வம் உறுதிப்படுத்தியது.

தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையத்தின் அருகே, 'சேலத்து மக்கள் தொலைக்காட்சி காணும் கோலத்தைத் தந்த குணக் குன்றே வருக! வருக!'' என்று எழுதி வைக்கப் பெற்றிருந்த வாசகம் அனைவரையும் கவர்ந்தது.

பகல் 12 மணி அளவில் மாண்புமிகு மத்திய வெளி உறவு மாநிலங்கள் அவை அமைச்சர் திரு ஏ. ஏ. ரகீம் அவர்கள் ரிப்பனைக் கத்தரித்து நிலையத்தைத் தொடங்கி வைக்க,மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி. ஆர். அவர்கள் குத்து விளக்கேற்றி வைத்தார்.

அதன் பின்னர், ஒளிபரப்பு நிலையத் தொடக்க விழா ஏர்க்காடு நகரியத் திரை அரங்கில் நடைபெற்றது. அரசுக் கலைஞர் நாமகிரிப் பேட்டை கிருஷ்ணன் குழுவினரின் நாயன இசையுடன் விழா தொடக்கமாகியது.

சென்னை தொலைக்காட்சி நிலைய இயக்குநர் திரு ஆர். எஸ். சவுடேகர் வரவேற்புரை ஆற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''ஏர்க்காடு - சேலம், மக்களுக்கு இந்த நாள் மகிழ்ச்சி தரக் கூடிய திருநாள். ஒருமைப்பாட்டின் காரணமாக நாம் நமது மகிழ்ச்சியைப் பங்கிட்டுக்கொள்ள முடிகிறது. ஒருமைப்பாட்டு உணர்வும் நாம் அனைவரும் ஒரே நாட்டைச் சேர்ந்தவர்கள் என்ற நினைவும் நமக்கு வேண்டும்.''

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஆர். வரதராஜலு, இ.ஆ.ப ஏர்க்காடு நகரியக் குழுவின் தலைவர் - உறுப்பினர்களின் சார்பாக வரவேற்புப் பேசுகையில், ''சாதனைகள் பல புரிந்து சரித்திரம் படைத்தவரே! ஏர்க்காடு வளர, பல இலட்சங்கள் ஈந்தவரே! கண்ணீர் துடைக்கும் பன்னீர் மலர்ச்சரமே'' என்று மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் புகழ்மாலை சூட்டினார்.

மாண்புமிகு மத்திய வெளி உறவு மாநிலங்கள் அவை அமைச்சர் அவர்களை, ஏர்க்காடு நகரியத்தின் சார்பில் அதன் தலைவர் திரு வள்ளியப்பன் வரவேற்புப் பேசுகையில், "இந்தத் தொலைக்காட்சி நிலையம் இங்கு அமைக்கப்பட்டிருப்பது ஏர்க்காடு மக்களுக்கு ஊக்கம் தரும் செயலாகும்'' என்று குறிப்பிட்டார்.

அடுத்து, உரையாற்றிய அகில இந்திய வானொலியின் தென் மண்டலத் துணை இயக்குநர் திரு டி. எஸ். வாசன், "மாண்புமிகு முதல்வர் அவர்களும் மைய அமைச்சர் ரகீம் அவர்களும் உதவி செய்திருக்காவிட்டால் இந்த நிலையம் குறித்த காலத்தில் செயல்பட்டிருக்க முடியாது என்பதை - நான் ஒரு பொறியாளன் என்ற நிலையிலிருந்து சொல்லிக் கொள்கிறேன்!

''செய்தி, சமூக ஒற்றுமை, ஒருமைப்பாடு, தேசிய உணர்வு ஆகியவற்றிற்கு தொலைக்காட்சி முக்கியமானதாகத் திகழ்கிறது'' என்றார்

அடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் திரு சி. பழனியப்பன் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்:

''1990-ல் 5 இலட்சம் கிராமத்து மக்களுக்கு தொலைக்காட்சி வசதி கிடைக்க வேண்டும் என மைய அரசு திட்டமிட்டு வருகிறது. இந்தியாவில் 1127 மொழிகள் பேசப்படுகின்றன. அவற்றில் 14 மொழிகள் தேசிய மொழிகள் ஆகும். அந்தந்த மாநிலப் பகுதிகளில் - மாநில மொழி நிகழ்ச்சிகள் தொலைக்காட்சியில் அதிக அளவில் இடம் பெற வேண்டும். இங்கு உருவாகியுள்ள நிலையத்தில் தமிழுக்கு முதலிடம் கிடைக்க-மைய அரசு வழி வகை செய்ய வேண்டும்.''

அடுத்து ராசிபுரம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு தேவராஜுலு தெரிவித்தார்.

''இந்த நிலையத்தை நாம் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். குழந்தைகளுக்குக் கல்வி தரும் வகையில் இது பயன்படுத்தப்படவேண்டும். தாழ்த்தப்பட்டவர்கள் வாழும் பகுதியில் அரசுச் செலவில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வைக்கப் பெற வேண்டும். பள்ளிகளிலும் அவை இடம் பெற வேண்டும். தற்போது 50 கிலோ மீட்டர் வரைதான்தெரியும்என்கிறார்கள். ஏறக்குறைய சேலத்தைச் சுற்றி 100 மைல் சுற்றளவில் தெரிவதற்கு ஆவனசெய்ய வேண்டும்''

அடுத்து, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு ஆர். டி. பார்த்தசாரதி உரையாற்றுகையில் குறிப்பிட்டார்:

'இந்தியாவின் முன்னேற்றத்திற்காகத்தான் இத்தகைய தொலைக் காட்சி நிலையங்கள் உருவாக்கப்படுகின்றன. ஆக்க வேலையில் நாம் ஈடுபட வேண்டும் என்பதற்காகத்தான் தொலைக் காட்சி நிலையம் அமைக்கப்படுகின்றன.''

அடுத்து, மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் உரையாற்றும்போது தெரிவித்தார்:

''சேலம் மாவட்டம் இன்று புதிய விஞ்ஞானப் பேற்றைப் பெறுகிறது. விஞ்ஞானம் நமக்களித்த மகத்தான பொருள்-அற்புதமான சாதனம் தொலைக் காட்சி ஆகும்.

'அகில உலகச் சேதிகளை விரைவில் தெரிந்து கொள்ளவும், நேரில் காணவும் இது பயன்படும். கிராம மக்கள் பயன்பெற, தொலைக் காட்சி நிலையம் வந்திருப்பதற்கு வாயார மனமார வாழ்த்துகிறேன்.'

''பாரிஸ் நகரில் தொலைக் காட்சி மூலம் மக்களுக்கு அற்புத மான போதனைகளைச் செய்கின்றனர். லண்டன் தொலைக் காட்சியில் உடற்பயிற்சி குறித்து விளக்கம் செய்கின்றனர். அமெரிக்க நாட்டில் விஞ்ஞானச் செய்திகளை மாணவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் ஒளிபரப்புகின்றனர்.

''இளைஞர் நெஞ்சில் ஆக்க உணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்தத் தொலைக் காட்சி நிலையம் பயன்படும் என நம்புகிறேன்.''

அடுத்து மைய அரசின் வெளி உறவு மாநிலங்கள் அவை அமைச்சர் திரு ஏ. ஏ. ரகீம் அவர்கள் தமிழில் உரையாற்றி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தி விட்டார். அவர் தமது உரையில் தெரிவித்தார்.

''நான் தமிழில் பேசுவது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கலாம். நான் கேரளாவில் படித்துக் கொண்டிருந்தபோது சுதந்திரப் போராட்டத்தில் சடுபட்டதால் கேரளத்தை விட்டு வெளியேற்றப்பட்டேன். அப்போது சென்னையில் வந்து இரண்டு ஆண்டு கல்லூரியில் படித்தேன். அப்போது நான் தமிழைக் கற்றுக் கொண்டேன். தமிழ் இனிமையான மொழி. படிப்பதற்கு - பேசுவதற்குச் சுவையான மொழி.

''இந்தத் தொலைக்காட்சி நிலையம் இந்தப் பகுதி மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது. ஏழை, எளிய மக்கள் இதன் மூலம் பயன் பெறுவார்கள். நல்ல பொழுதுபோக்கு வசதி இதன் மூலம் கிடைக்கும். உலகம் அனைத்திலுமுள்ள நிகழ்ச்சிகள் இந்தத் தொலைக் காட்சி மூலம் கிடைக்க வழி உள்ளது. தமிழ்நாடு, சினிமா, நாட்டியம், கலை ஆகியவை சிறந்த மாநிலம் ஆகும். கல்வி, கலை முன்னேற்றத்திற்கு இந்த நிலையம் உதவும்.

'1985-க்குள் 120 தொலைக் காட்சி ஒளிபரப்பு நிலையங்களை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் இன்று ஏர்க்காட்டில் உருவாக்கப்பட்டுள்ள இந்நிலையத்தின் மூலம் ஏராளமான மக்கள் பயன்பெறுவர். **இதனை அமைக்கும் பணியில் தமிழக முதல்வர் முனைப்புடன் செயலாற்றி வந்தார். தமிழ்நாடு அவரது சீரிய தலைமையின் கீழ் முன்னேற்றம் அடைந்து வருகிறது.**

ஏர்க்காடு தொலைக் காட்சி நிலையம் சில தகவல்கள்

இந்த நிலையம் ஏர்க்காட்டில் அமைக்கப்பட்டுள்ளது குறைதிறன்சக்தி கொண்ட தொலைக்காட்சி நிலையம் ஆகும். இந்தியநாட்டின் மூன்றாவது நிலையம் ஆகும் இது. லேடீஸ் சீட் என்று சொல்லப்படும் புகழ்பெற்ற பகுதியில் இது அமைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள ட்ரான்ஸ்மீட்டர் 100 வாட்ஸ் திறன் கொண்டது; 11 சானல்கள் கொண்டது. கோபுரத்தின் உயரம் 100 அடி. இதன் மூலம் 50 கிலோமீட்டர் தொலைவுக்கு ஒளிபரப்புக் கிடைக்கும். இதில் பயன்படுத்தப்பட்டுள்ள சாதனங்கள் அனைத்தும் இந்தியாவில் தயாரித்ததாகும்.

சாடலைட் மூலம் டெல்லி [illegible] நிகழ்ச்சி [illegible] மாலைகளாக, நாகலக்கி, பெருமாமலை, தோப்பூர், அச்சங்குட்டிபட்டி, மல்லபுரம், தும்மநூர், வாழப்பாடி, மல்லூர், நாமக்கல்மேடு, கடையம்பட்டி, [illegible] பெறுகின்றன.

ஒவ்வொரு நாளும் மாலை 6 மணியிலிருந்து 11.30 மணி வரையிலும் தொலைக் காட்சி ஒளிபரப்பாகும். ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 9.30 மணியிலிருந்து 12.30 மணி வரையிலும்- பின்னர் பிற்பகல் 2 மணியிலிருந்து 6 மணி வரையிலும் ஒளிபரப்பு நிகழும். இரண்டாம் சனிக்கிழமைகளில் காலை [illegible] முதல் 12.30 வரையிலும், [illegible] ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 9.30 முதல் மாலை 6 மணி வரையிலும் ஒளிபரப்பு நிகழும்.

இந்தத் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையத்திற்குரிய இடத்தைத் தமிழ்நாடு அரசு இலவசமாக அளித்துள்ளது.

'உலகத்தில் விஞ்ஞான வளர்ச்சியில் நமது இந்தியா 3வது இடத்தைப் பெற்றுள்ளது. நமது தலைவர் இந்திரா காந்திதான் இதற்கு காரணம். இந்தியா வளரும் நாடு இங்கு சில பிரச்சினைகள்உண்டு. இது உலகத்தில் எல்லா இடத்திலும் உண்டு. இந்த நாட்டை முன்னேற்றம் அடையச் செய்வதற்கு நாம் ஜாதி, மதம் கடந்து பணிபுரிய வேண்டும்.

''இந்திராவின் ஆட்சிக்கு நண்பர்-தமிழக முதல்வர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் மிகவும் உதவியாக உள்ளார். தமிழகத்தில் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையம் அமைப்பதற்குச் சில பகுதிகளில் இடங்கள் அளித்துள்ளார். **சில பகுதிகளில்கட்டடமும் கட்டிக் கொடுத்துள்ளார் தமிழக முதல்வர்.** அவருக்கு நன்றி.''

அடுத்து மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமது தலைமை உரையில் தெரிவித்ததாவது:

''ஏர்க்காட்டில் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையம் தொடங்கப்பட்டிருக்கிறது என்பது மிகச்சிறந்த காரியம் என்பது மட்டுமல்ல, இவ்வளவு விரைவில் அது நடைபெறுவதற்காக பிரதமர், மற்றும் அவரது உதவியாளர்கள், நிபுணர்கள் அத்தனை பேரையும், பாராட்டி, அவர்களுக்கு நன்றி கூறக்கடமைப்பட்டிருக்கிறேன்.

"இங்கே வழிநெடுக சிறு குழந்தைகள் ஆர்வத்துடனும் கொடிகளுடனும் நின்றவாறு எங்களை வாழ்த்திவரவேற்றார்கள். அந்தப் பிஞ்சு உள்ளங்களில் என்ன ஆசை நிரம்பி , பெருகி வழிந்தோடியிருக்கும் என்பதை ஒரு கணம் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

"பெரியவர்களான நாம் சமூக சமுதாய நிலைமைக்கு ஏற்றபடி வாழ நம்மைப் பழக்கப்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால் குழந்தைகளுக்குப் புதிய அனுபவங்கள் ஏற்படுகின்றன. இவர்களது எதிர்காலம் நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இளைய தலைமுறை முதிய தலைமுறையை விட முற்போக்குச் சமுதாயமாகச் செய்ய-துணிவுள்ளவர்களாக குழந்தைகள் வளர்க்கப் பெற - நாம் ஆவன செய்ய வேண்டும்.

"வசதி உள்ளவர்கள் எல்லாம் தொலைக்காட்சி பார்க்கலாம். ஆனால் நிலையம் இல்லாமல் யாரால்தான் பார்க்க முடியும்? நாம் எப்படி இருக்க வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்வதற்கு இதுபோன்ற தொலைக்காட்சி அஞ்சல் நிலையங்கள் நிறையத் தேவை என்று கருதுகிறேன்.

"சேலம் மாவட்டத்திற்கு நான் என்னென்ன நன்மைகள் செய்தேன் என்று, முன்னர் பேசிய வர்கள் குறிப்பிட்டார்கள். இன்னமும் செய்ய வேண்டியிருக்கிறது. மலைவாழ் பகுதிமக்கள் இனம் எந்த அளவு முன்னேற வேண்டும் என்பது பற்றி டெல்லி செல்லும்போது பிரதமர் தனியாக ஒரு கூட்டம் கூட்டிப் பேசினார். மற்ற எந்த மாநிலமும் கொடுக்க முடியாத புள்ளி விவரங்களை நம்மால் மட்டும்தான் கொடுக்க முடிந்தது. உழைக்கின்ற திறமைவாய்ந்த-கடமை உணர்வு மிக்க நமது அரசு அலுவலர்களின் உதவியால்தான் இது முடிந்தது.

"இந்திராவின் அரசுக்கு ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று மைய அமைச்சர் அவர்கள் இங்கு குறிப்பிட்டார்கள். ஒத்துழைப்புத் தருவதில் நான் பின்வாங்கியது இல்லை. பின் வாங்கவும் மாட்டேன்.

"சத்துணவுத் திட்டம், தன்னிறைவுத் திட்டம் போன்றவற்றை நிறைவேற்றத் தொடங்கியவுடன் இங்குள்ள சிலர் எதிர்த்தார்கள். அண்ணா பிறந்தநாள் முதல் 15 வயதுடைய குழந்தைகளுக்கும் சத்துணவு வழங்க இருக்கிறோம்.

"இந்தத் திட்டத்தைப் பிரதமர் பாராட்டினார். மற்ற மாநில முதல்வர்களையும் இந்தத் திட்டத்தைச் செயலாற்ற வழிவகை காணும்படி கேட்டுக் கொண்டார். பள்ளியில் தொழில் கல்வியைக் கொண்டுவரும் திட்டத்தை அவர் அறிந்து, பாராட்டினார். இந்தியத் துணைக்கண்டம் முழுதுக்கும் ஒரே மாதிரி பாடத் திட்டம் இருக்க வேண்டும் என்று நான் சொன்னேன். அனைத்து மாநிலங்களும் இதனைப் பரிசீலிப்பது நல்லது எனப் பிரதமர் குறிப்பிட்டார். தமிழகத்தில் வேறு கட்சி ஆளுகிறது என்று எண்ணாமல், நாம் நல்ல யோசனைகளைச் சொன்னால் அதை ஆதரிப்பவர் நமது பிரதமர் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

"இந்த நிலையம் 10 கிலோவாட் சக்தி கொண்ட நிலையமாக உயர்த்தப்பட வேண்டும் என்று மைய அமைச்சரின் மூலமாக பிரதமருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''இளைஞர்கள் கல்வி கற்பதுடன் உடற்பயிற்சி செய்யவும் பழக வேண்டும். அதற்கு இந்தத் தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் பயன்படும். குழந்தைகள்-இளைஞர்கள்-உடலைப் பேணிப் பாதுகாக்கப் பழக வேண்டும். எதிர்காலச் சந்ததிக்கு இது செல்வமாக அமையும்.

''ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கொள்கையுடன் நாம் இணைந்து வாழ முடியும் என்ற நம்பிக்கை உண்டு. அதற்கு தொலைக் காட்சி நிலையம் பயன்படும் என்று நம்புகிறேன். அண்ணா, நேரு-அண்ணல் காந்தி ஆகியோரின் கொள்கைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும் தொலைக்காட்சி நிலையம். நாடு ஒன்றுபட்டு வாழ வேண்டும் அதற்கு தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் பயன்பட வேண்டும் என வாழ்த்துகிறேன்.''

நிகழ்ச்சித் தொகுப்பு :
சுந்தர்

உலகம் வியக்கும் ஒலிம்பிக் பந்தயம்

உலகம் மிக்க ஆவலுடன் எதிர்பார்த்த 23-வது ஒலிம்பிக் பந்தயம், அமெரிக்காவில் உள்ள லாஸ் ஏஞ்சலீஸ் நகரில் 1984 ஜூலைத் திங்கள் 29-ஆம் நாள் கோலாகலமாகத் தொடங்கியது.

* அமெரிக்காவைச் சேர்ந்த நீக்ரோ விளையாட்டு வீரர் ரோபர் ஜான்சன் ஒலிம்பிக் தீபத்தை ஏற்றி வைத்தார்.

* 'வரவேற்பு' எனப் பன்மொழிகளில் எழுதப்பெற்ற பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட வண்ண பலூன்கள் வானில் மிதந்தன. வெண்மேகக் கூட்டம்போல் ஆயிரக் கணக்கான வெண் புறாக்கள் விண்ணில் பறந்தன. அவற்றைக் கண்ணாரக் கண்டவர்கள் மெய்மறந்தனர்.

* எழிச்சிமிகு ஒலிம்பிக் பந்தயத்தில் 141 நாடுகளைச் சேர்ந்த சுமார் 10 ஆயிரம் வீரர்களும், வீராங்கனைகளும் கலந்து கொண்டனர்.

* வரவேற்புக் கீதம்—அமெரிக்க நாட்டுத் தேசிய கீதம்—ஒலிம்பிக் பந்தயக் குறிக்கோள் பற்றிய பாட்டு ஆகியவை இன்னிசையோடு ஒலித்தன.



லாஸ் ஏஞ்சலீஸ் நகரின் ஒரு தோற்றம்.

* முதலில் கிரேக்க நாட்டினர் அணிவகுத்துச் சென்றனர். அதைத் தொடர்ந்து வீரர்கள், வீராங்கனைகள் பெருமிதத்துடன் தங்கள் நாட்டுத் தேசியக் கொடியை ஏந்திக் கொண்டு சென்றனர். இந்தியக் குழுவில் ஹாக்கிக் கேப்டன் திரு ஜாபர் இக்பால் இந்தியக் கொடியை ஏந்திச் சென்றார். அணிவகுப்பு நிகழ்ச்சியில் இறுதியாகச் சென்றது அமெரிக்கக் குழு.

* அணி வகுப்புக்குப் பின், லாஸ் ஏஞ்சலீஸ் ஒலிம்பிக் குழுத் தலைவர் திரு உபராந்தும், சர்வதேச ஒலிம்பிக் தலைவர் திரு சமராஞ்சும் உரையாடினர். பின்னர் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ரீகன் அவர்கள், 'நவீன யுகத்தின் ஒலிம்பிக் விழாவைக் கொண்டாடும் வண்ணம் இந்த ஒலிம்பிக் விளையாட்டுகளைத் தொடங்கி வைக்கிறேன்' என்று கூறிப் போட்டிகளைத் தொடங்கி வைத்தார்.

* 1952-ஆம் ஆண்டு ஒலிம்பிக் பந்தயங்கள் அமெரிக்காவில் நடந்தது. 32 ஆண்டுகள் கழித்து

தற்போது மீண்டும் அங்கு ஒலிம்பிக் நடைபெறுகிறது.

• ஒலிம்பிக் பந்தயத்துக்கு அதிக அளவில் விளையாட்டு வீரர்களையும் வீராங்கனைகளையும் அனுப்பியுள்ள நாடு அமெரிக்கா (573 பேர்) அதற்கு அடுத்தபடி கனடா (488 பேர்), மேற்கு ஜெர்மனி (443 பேர்).

• ஒலிம்பிக் பந்தயச் செய்திகளைச் சேகரிப்பதற்கென, உலகம் முழுவதிலுமிருந்து 10,000 நிருபர்கள் வந்துள்ளனர்.

• மொத்தம் 220 விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொள்ளும் விளையாட்டு வீரர்கள் 7,800 பேர்.

• ஒலிம்பிக் பந்தயத்தை ஒளிபரப்பும் உரிமையை அமெரிக்கத் தொலைக் காட்சி நிறுவனம் மொத்தமாக 250 கோடி ரூபாய் கொடுத்து வாங்கியிருக்கிறது.

• ஒலிம்பிக் பந்தயத்தில் விளையாடும் வீரர்களுக்குச் சிறப்பான உணவு வகைகள் வழங்கப்படுகின்றன. அவர்களுக்கு நாள்தோறும் வழங்குவதற்கு 20 இலட்சம் ஐஸ் கிரீம்களும், 6 இலட்சம் ஆப்பிள்களும் வாங்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு உணவு தயாரித்துப் பரிமாறும் பணியில் மட்டும் 3000 சமையல்காரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். போட்டி நடக்கும் 16 நாட்களுக்கும் மொத்தம் 12 இலட்சம் டன் உணவு தயாரிக்கத் தேவையான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.



லாஸ்ஏஞ்சலீஸ் ஒலிம்பிக் போட்டியையொட்டி இந்திய அரசு வெளியிட்டுள்ள சிறப்புத் தபால் தலைகள்

• ஒலிம்பிக்கில் வழங்கப்படும் பதக்கங்களின் தரம் மற்றும் அதன் மதிப்பு எவ்வளவு என்று தெரியுமா?

முதல் பரிசாக வழங்கப்படும் தங்கப் பதக்கம் 24 காரட்டில் செய்யப்படுகிறது. அதன் எடை 6.5 கிராம் அல்லது அதன் எடையில் 5.2 சதவீதமாகும். வெள்ளி மூலாம் பூசப்பட்டுள்ள அந்தத் தங்கப்பதக்கத்தின் அடக்க விலை 130 டாலர் (1 டாலர் என்பது சுமார் 11 ரூபாய்) தங்கத்தின் விலையைப் பொறுத்தும் அதன் மதிப்பு மாறுகிறது.

எனினும் வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களின் உலோகம் சுத்தமானது. அதன் மதிப்பு உறுதி செய்யப்படவில்லை. மொத்தம் 1454 பதக்கங்கள் இந்த ஒலிம்பிக்கில் வழங்கப்படுகின்றன.



மாமல்லபுரத்தில் ஒரு விழா!

மாமல்லபுரத்தில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் கட்டப்பட்ட கடற்கரைச் சுற்றுலா வளாகக் குடில்கள், நீச்சல் குளம், உணவகம் ஆகியவற்றை மாண்புமிகு நிதி - வருவாய்த்துறை அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் திறந்து வைத்தார்.

கடற்கரைச் சுற்றுலா வளாகத்தில் - ரூ. 9 இலட்சம் செலவில் கட்டப்பட்ட 18 ஒரு நபர் அறைகள், ரூ. 10 இலட்சத்து 60 ஆயிரம் செலவில் கட்டப்பட்ட 10 குளிர்பதன வசதி செய்யப்பட்ட அறைகள், ரூ. 9 இலட்சம் செலவில் கட்டப்பட்ட உணவகம், ரூ.8 இலட்சத்து 60 ஆயிரம் செலவில் கட்டப்பட்ட நீச்சல் குளம் ஆகியவற்றைத் திறந்து வைக்கும் இவ்விழா 22.7.84 அன்று சிறப்புற நடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த சித்தனேந்தல் நடராசன் நாதசுர இசை நிகழ்ச்சியோடு விழா தொடங்கியது.

மாண்புமிகு செய்தி-சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் விழாத் தலைமை ஏற்றார்.

இங்கிலாந்து, சைப்ரஸ், ஜெர்மன், பெல்ஜியம், அயர்லாந்து போன்ற பல வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் வருகைதந்து சிறப்பித்த இந்த விழாவில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. பாலசுப்பிரமணியம் எம்.எல்.ஏ. வரவேற்புரையாற்றினார்.

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.டி.ஆர்.சீனிவாசன், திரு. ஆனூர் செகதீசன் எம்.எல்.ஏ., திரு.இரா.மோகனரங்கம் எம்.பி., அயர்லாந்து சுற்றுலாப் பயணிகளில் ஒருவரான மெர்ல், மேற்கு ஜெர்மனி சுற்றுலாப் பயணிகளில் ஒருவரான ஜூலியன் எல்டன்பர்க், சுற்றுலாத் துறைச் செயலர் திரு இரா. திருபாகரன் இ.ஆ.ப. ஆகியோர் உரையாற்றினர்.

அயல்நாட்டுப் பயணிகள், தமது பேச்சினிடையே-''மாமல்லபுரம் பகுதிக்கு எங்களைப் போன்ற சுற்றுலாப் பயணிகள் ஏராளமாக வருவதன் மூலம், இந்த வட்டாரத்திலுள்ள மக்கள் வாழ்வு வளம்பெறும்; எங்களால் என்றும் மறக்க முடியாத இந்த இடத்திலேயே நீண்டநாள் தங்கிவிட மாட்டோமா என்கிற ஏக்கம் எங்கள் எல்லோருக்குமே உண்டு'' என்றெல்லாம் குறிப்பிட்டார்கள்.

மாண்புமிகு செய்தி-சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் தனது தலைமை உரையில் குறிப்பிட்டதாவது:

''மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பின், தமிழ்நாட்டில், சுற்றுலாத் துறை வியக்தகும் அளவிலே வளர்ச்சி பெற்றுள்ளது. சில ஆண்டுகளுக்குமுன்னால், மாமல்லபுரத்தைப் பொறுத்தவரை, ஆறு கோடி ரூபாய் அளவில் மாஸ்டர் பிளான் ஒன்று தயாரித்து மத்திய அரசுக்கு அனுப்பினோம்; அனுமதிக்காகக் காத்திருக்கிறோம்.

''தமிழக அரசு மட்டும் மாமல்லபுரம் விரிவாக்கப் பணிகளுக்காக இந்த ஆறாண்டுகளில் ரூ. 80 இலட்சம் ஒதுக்கிப் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்போது 35 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

''இங்கே உருவாக்கப்பட்டு வரும் அருங்காட்சியகத்தில் -பண்டைத் தமிழகத்தின் சுமார் மூவா

யிரம் ஆண்டுக் கால வரலாறு 47 வகைச் சிற்பங்களாலே விளக்கப் படவிருக்கிறது. கடற்கரைக் கோயிலை முக்கியமாக வைத்து ஒலி-ஒளி காட்சியமைக்க மத்திய அரசு ஒத்துக்கொண்டும், மாநில அரசு நிதி ஒதுக்கியும்கூட, மத்திய அரசின் ஓர் அங்கமாக உள்ள தொல்பொருள் ஆய்வுத்துறை ஏனோ அதற்கு முட்டுக்கட்டை போட்டுவருகிறது.

''ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சுற்றுலாத்துறைக்கு 343 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் 137 கோடி ரூபாய் மத்திய சுற்றுலாத்துறை ஊழியர்களுக்குச் சம்பளமாகவும், 41.4 கோடி ரூபாய் நட்சத்திர ஓட்டல்கள் கட்டவும் போய்விடுகிறது. மீதமுள்ளதுதான் மாநிலச் சுற்றுலாத்துறைக்கு என்ற நிலை இருக்கிறது. சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கென மாநில அரசுக்கு மத்திய அரசு அடிப்படை வசதிகளைச் செய்துதர வேண்டும்; அல்லது இவ்வகையில் மாநில அரசு சிறப்புறச் செயல்பட மத்திய அரசு மானியமாகவோ கடனாகவோ அடிப்படை வளர்ச்சிக்களுக்கென நிதியுதவி செய்யவேண்டும்.

''சுற்றுலாப் பயணிகள் வரும் தனி விமானம் சென்னையிலும் இறங்கவேண்டும் என்று ஐந்தாண்டுக் காலமாகக் கேட்டுவருகிறோம். இப்போது அந்த விமானம் திருவனந்தபுரத்திலும், கோவாவிலும் இறங்கும் என்று தெரிவித்திருக்கிறார்கள். முதன் முதல் 'மாஸ்டர் பிளானை'த் தந்த தமிழகத்தில் அந்த விமானம் இறங்குவதுபற்றி 'இன்டர் நேஷனல்' விமான நிலையம் மறுபரிசீலனை செய்யவேண்டும்.''

—இவ்வாறு மாண்புமிகு செய்தி சுற்றுலாத்துறை அமைச்சர் பேசினார்.

புதிய கட்டடங்களைத்திறந்து வைத்து மாண்புமிகு நிதி-வருவாய்த்துறை அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் பேசியதாவது:

''இந்தியாவிலேயே சுற்றுலாத் துறையில் தமிழ்நாடுதான் மேம்பட்டு விளங்குகிறது. அமெரிக்காவிலோ வேறெங்குமோ முந்நூறு நானூறு ஆண்டுகளுக்கு முந்திய சிற்பங்கள் ஓவியங்கள் இல்லை; இங்கேதான் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியவைகளையும் பாதுகாத்து வருகிறோம்.

''இந்தியாவிலேயே சிற்பங்களைச் செய்யத்தக்க அழுத்தமான கருங்கற்கள் நம்நாட்டில் தான் கிடைக்கின்றன. அவை இங்கிருந்து ஜப்பானுக்கும் சீனாவுக்கும் கூட ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

''இந்தியாவிற்குச் செலாவணி ஈட்டித் தருவதில் நான்காவது இடத்தை வகிக்கிறது சுற்றுலாத் துறை.

''உலகிலேயே குளிக்கக்கூடிய நீர்வீழ்ச்சியான குற்றாலம் தமிழ் நாட்டிலேதான் இருக்கிறது. நயகாரா, ஜோக் நீர்வீழ்ச்சிகளெல்லாம் பார்க்கக்கூடியவைகளே! பார்ப்பதற்கே அங்கெல்லாம் பணம் வசூலிக்கிறார்கள்! மிகப்பெரிய அழகிய கடற்கரைகளில் 45 மைல் நீள சென்னைக் கடற்கரை இரண்டாவது இடம் வகிக்கிறது. இந்த மிக நீண்ட மணல் வெளியில் தொழிற்சாலைகள் தொடங்க அனுமதிக்கக் கூடாது; அதனால் மிக அருமையான கடற்கரையின் அழகு பாதிக்கப்பட்டுவிடும்''.

—இவ்வாறு உரையாற்றிய மாண்புமிகு நிதி - வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், 7 பேருக்கு முதியோர் உதவித் தொகையும், 12 பேருக்கு வீட்டு மனைப்பட்டாவும் வழங்கினார்.

சுற்றுலாத்துறை நிர்வாகஇயக்குநர் திரு.கோவிந்தன் நன்றி யுரை ஆற்றினார்.

விழா முடிந்தபின் - சென்னை சித்ரா குழுவினரின் நடனநிகழ்ச்சி நடைபெற்றது.

-இல. இராசேந்திரன்

மீனவர்களுக்குக் கடன் உதவி!

பட்டினத்தார் மீனவர் கூட்டுறவுச் சங்கப் பெருமக்களுக்கு இந்தியன் வங்கி கடனுதவி வழங்கும் விழா (2.8.84) சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

சென்னை - திருவொற்றியூரிலுள்ள பட்டினத்தார் கோயிலருகேயுள்ள எம்.ஆர்.எஃப். சங்கக் கட்டடத்தில் நடைபெற்ற இந்த விழாவில் மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வீட்டுவசதி வாரிய அமைச்சர் திரு.எஸ்.ஆர். இராதா மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் திரு.கே.கலைமணி இருவரும் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

பட்டினத்தார் மீனவர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு.கே. குப்பன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், இந்தியன் வங்கியின் இராயபுரம் கிளை மேலாளர் திரு.வி.தேவப்பன் வரவேற்புரையாற்றினார்.

வங்கியின் நிர்வாக இயக்குநர் திரு.எம்.வள்ளிநாயகம், மண்டல மேலாளர் திரு.எம்.எஸ்.கந்தப்பன், முன்னாள் சட்டமன்றஉறுப்பினர் திரு.லம்பராஜ் ஆகியோர், கடன் வழங்குவதன் குறிக்கோள்-அதைச் செம்மையுறச் செலவிடும் விதம் ஆகியவை பற்றி உரையாற்றினர்.

இதைத் தொடர்ந்து -வங்கிச் சிப்பந்திகளில் ஆண்களும் பெண்களுமாக ஐவரைக் கொண்ட குழு ஒன்று இந்தியன் வங்கி கடனுதவி பற்றிய இசைப் பாடலொன்றைப் பாடியது. இசைக் கருவிகளோடு நடந்த அந்தக் குறைந்த நேர இசை நிகழ்ச்சி எல்லோரையும் மகிழ்வுறச் செய்தது.

அமைச்சர்கள் உரை:

இதன் பின், கடன் வழங்கி உரையாற்றுகையில் மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் திரு. கே. கலைமணி பேசியதாவது:

''1969ல், இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களால் வங்கிகளெல்லாம் தேசியமயமாக்கப்பட்ட பிறகு - வசதி படைத்தோர் மட்டுமல்ல; வசதியற்றோரும் வங்கிகளின் மூலம் கடனுதவி பெற முடியும் என்ற நிலைமை ஏற்பட்டது.

''வலை வாங்குவதற்காகவும், கூட்டுமரத்திற்காகவும், சிறிய மீன் வியாபாரத்திற்காகவும் என்று மிகுந்த ஆர்வத்தோடு இன்று கடன் பெறுகிற நீங்கள், இதைத் திருப்பிச் செலுத்துவதிலும் ஆர்வம் காட்டவேண்டும். அப்போதுதான் வங்கியானாலும் அரசானாலும் இன்னும் அதிக அளவில் கடனளிக்கும் ஆர்வம் காட்டும்; உங்கள் தொழிலும் சிறக்கும்.

''மீனவ சமுதாய முன்னேற்றத்திற்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆற்றிவரும் பணிகள்-உதவிகள் அளவற்றவைகளாகும். மீனவ மகளிருக்கென்று தனிக் கூட்டுறவுச் சங்கம் உண்டாக்கிய பெருமை அவருடையது.

மீனவ சமுதாய மகளிருக்குக் கடன் வழங்கியும், தையல் எந்திரங்கள் அளித்தும் சிறப்புரையாற்றுகையில் மாண்புமிகு பொதுப் பணித்துறை மற்றும் வீட்டுவசதி வாரிய அமைச்சர் திரு.எஸ்.ஆர். இராதா குறிப்பிட்டதாவது:

''மீனவர்கள் ஒவ்வொருவரும் கூட்டுறவுச் சங்கத்திலே உறுப்பினராக வேண்டும்; இந்தச் சங்கம் நன்முறையில் இயங்கஒத்துழைக்க வேண்டும். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள், மீனவ சமுதாயத்தினர் நலனில் கொண்டுள்ள அக்கறை காரணமாகவே இத்துறைக்கெனத் தனியொரு அமைச்சரையே நியமித்திருக்கிறார்கள்.

''வாங்கிய கடனைத் திருப்பித் தராதே எனச் சிலர் பேசிவரும் காரணத்தால்தான், தவறாமல் திருப்பிச் செலுத்தவேண்டும் என்று சிலர் இங்கே பேசவேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆனால், செய்த உதவிக்கு நன்றி காட்டுவதில் மீனவ சமுதாயம் மேலானது என்பதை நான் அறிவேன். மீனவர்கள் கூட்டுறவுச் சங்கம் வைத்து, இந்த அரசு தனியே அவர்களுக்கு வீடுகட்டித்

தருகிறது. இந்தியன் வங்கி, இவர்கள் வீடுகட்டக் கூட கடனுதவி செய்யலாம்'' என்று உரை நிகழ்த்திய மாண்புமிகு பொதுப்பணி மற்றும் வீட்டுவசதி வாரியத் துறை அமைச்சர், கடனுதவியளிக்கும் வங்கிக்கும் அதன் நிர்வாகத்தினர்க்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

கடன் விவரம்:

இவ்விழாவில்-இந்தியன் வங்கி, மாண்புமிகு அமைச்சர்கள் மூலம் அளித்த கடன் பற்றிய விவரம் வருமாறு:

185 மீனவர்களுக்கு, ஆயிரம் ரூபாய் வீதம் வலை வாங்க வழங்கப்பட்ட மொத்தக் கடன் ஒரு இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் ஆகும்.

மீன் சில்லறை வியாபாரம் செய்ய ரூ. 500 வீதம் 55 மீனவப் பெண்மணிகளுக்கு அளித்த மொத்தக் கடன் ரூ.27 ஆயிரத்து ஐந்நூறு.

பத்துப் பெண்களுக்குத் தையல் எந்திரம் அளித்த வகையில் ஆயிரம் ரூபாய் வீதம் பத்தாயிரம் ரூபாய்.

ஆக மொத்தத்தில், இரண்டு லட்சத்து 22 ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் மீனவ சமுதாயத்தினர்க்கு கடனாக வழங்கப்பட்டது.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கு இந்தியன் வங்கி நிர்வாகிகள் மூலமும், பட்டினத்தார் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தார் மூலமும் கைத்தறியாடைகளும் மாலைகளும்அணிவிக்கப்பட்டன.

—பி.எல்.ஆர்.

மாநகராட்சியின் மணியான விழாக்கள்!

நீ. வே. பாலு
மக்கள் தொடர்பு அலுவலர்,
சென்னை மாநகராட்சி.

ஜூலை 23, 1984 மாநகராட்சியின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய நன்னாளாகும். அன்றுதான் மாநகராட்சியின் முப்பெரும் விழாவும், குக்ஸ் சாலைப் பாலத் திறப்பு விழாவும் நடைபெற்றன.

முதன் முதலாக உள்ளாட்சித் துறைப் பொறுப்பை ஏற்றிருக்கும் மாண்புமிகு அமைச்சர் திரு ஆர். சௌந்தரராசன் அவர்கள் இவ்விழாவில் பங்கேற்க வந்தார்.

முதலில் முப்பெரும் விழாவில் பங்கேற்ற அமைச்சர், மாநகராட்சி விளையாட்டை, விளையாட்டாக எடுத்துக்கொள்ளாமல் கவனத்தோடு பேணிக்காத்து மக்களிடையே இதைப்பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த முயல்வதைப் பாராட்டினார்.

மாண்புமிகு தமிழக முதல்வரின் விளையாட்டார்வத்தையும் அதுவளர அவர் காட்டும் அக்கறையையும் அமைச்சர் விளக்கிப் பேசினார். சென்னை மாநகராட்சி அலுவலர்களின் புதிய விளையாட்டரங்கத் திறப்பு விழா, சென்னை. மாநகராட்சி உடல் பயிற்சிக் கூடத்தின் கூடுதல் விளையாட்டரங்கக் கால்கோள் விழா, சென்னை மாநகராட்சி வாகை சூடிய விளையாட்டு வீரர்களுக்குப் பரிசு வழங்கு விழா ஆகிய மூன்றும் ஒருங்கிணைந்து முத்தமிழ் போல இனித்த விழாதான், முப்பெரும் விளையாட்டு விழா.

இவ்விழாவிற்கு மாநகராட்சித் தனி அலுவலர் திரு. கி. சந்திரசூடன், இ.ஆ.ப. தலைமை தாங்கினார். திருமதி சாந்த ஷீலா நாயர், இ.ஆ.ப. வரவேற்புரை வழங்கினார். மாநகராட்சி விளையாட்டுத் துறைக்கும், பூங்காக்களுக்கும் ரூ. 53.28 இலட்சம் செலவிடுகிறது. பூங்காக்களுக்கும், தோட்டங்களுக்கும் ரூ. 39.99 இலட்சம் செலவிடுகிறது. விளையாட்டுத் திடல்கள் முன்னேற்றத்திற்காக ரூ. 10 இலட்சமும், விளையாட்டு நிகழ்ச்சிகளுக்கு ஆக ரூ. 2 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் மாநகராட்சி, விளையாட்டில் ஆர்வம் உள்ள பொதுமக்களுக்காகக் கால்பந்து, மட்டைப்பந்து, கூடைப்பந்து, வாலிபால், பளு தூக்குதல் முதலியவற்றில் பயிற்சி முகாம்களை ரூ. 10,000 செலவில் நடத்தியது.

இதில்பங்கு பெற்றவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மாநகராட்சியில் சிறந்து விளங்கும் விளையாட்டு வீரர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. உடற் பயிற்சித் திறன், கபடி, கோக்கோ போன்ற விளையாட்டுகளில் தேர்ச்சிக்கும் சுழற் கேடயங்கள் வழங்கப்பட்டன. தென்சென்னை துணை ஆணையாளர் திரு. ஜகார்த்தன், இ.ஆ.ப. அறிக்கை வாசித்தார். வடசென்னை துணை ஆணையாளர் திரு கோ. இராம கிருஷ்ணன் நன்றி நவின்றார்.

விழா முடிந்த கையோடு அமைச்சர் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது குக்ஸ் சாலைப் பாலத்திறப்பு விழாவிற்கு விரைந்தார். இவ்விழாவில் மக்கள் வெள்ளம்போல் திரண்டிருந்தார்கள். மாநகராட்சி ஆணையர் வரவேற்புரை நிகழ்த்தினார். தனி அலுவலர் தலைமை தாங்கினார். தமிழகச் சட்ட மேலவை அரசு கொறடா திரு. ஜேப்பியார், சட்டமேலவை உறுப்பினர் திரு. இ. மதுசூதனன் மற்றும் பெரம்பூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு. சு. பாலன் முதலியோர்பங்கு பெற்றனர்.

பாலத்தைத்திறந்து வைத்த மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் மாநகராட்சியை, அது ஆற்றிவரும் பெரும் பணிக்காக மனமாரப் பாராட்டினார். நடப்பாண்டில் மாநகராட்சி ரூ. 18.24 கோடி செலவில் சாலைப்பணிகள் ஆற்றும் என்று அறிவித்தார்.

சாலைகளைப் புதுப்பிக்க ரூ. 8.31 கோடியும், பாலங்கள் கட்ட ரூ. 1.32 கோடியும், பெருந்தெருக்களுக்கு ரூ. 2.95 கோடியும் உட்புறச்சாலைகளுக்கு ரூ. 4.10 கோடியும், தனியார் தெருக்களுக்கு ரூ. 1.20 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளன என்றார்.

குக்ஸ் பாலம் 31 இலட்சம் செலவில் 3 ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்டது. காலதாமதத்திற்குக் காரணம் சிமெண்டு உரிய நேரத்தில் கிடைக்காததே என்றார். தமிழக அரசு தொகுதி பேதம் பாராட்டாது எக்கட்சியினரின் தொகுதியாக இருந்தாலும் மக்களின் தேவைகளை அறிந்து பணியாற்றுகிறது. அதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது குக்ஸ் பாலம் என்றார்.

குக்ஸ்சாலைப் பாலம் பழைய குறுகலான பழுதடைந்த பாலத்தைப் புதுப்பித்துப் பெரியதாகக் கட்டப்பட்டது. இது நான்கு வழி வாகனப் போக்குவரத்துக்கு ஏற்றபடி அமைக்கப்பட்டுள்ளது. இருபுறமும் 2 மீட்டர் நடைபாதைகளைக் கொண்டது. வெள்ளக் காலங்களில் வெள்ளம் தடைபடாமல் ஓடுவதற்கு ஏற்றவாறு பாலத்தின்கீழ் உள்ள நீர்வழி உயர்த்தப்பட்டுள்ளது. நீர்வழியின் அகலம் 15.23 மீட்டர், உயரம் 3.6 மீட்டர்.

இப்பாலம் பெரம்பூரையும் அயனாவரத்தையும், புரசவாக்கத்தையும், ஓட்டேரியையும் இணைக்கும் முக்கிய இணைப்புப் பாலமாகும். மக்கள் மகிழ்ச்சியோடு இப்பாலத் திறப்புப் பணியில் உற்சாகம் பொங்கக் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் கலந்து கொண்டனர். இதிலிருந்தே இப்பாலத்தை எவ்வளவு தூரம் வரவேற்கிறார்கள் என்பதையும் புரிந்து கொள்ள முடிந்தது. இப்பாலம் மாநகராட்சியின் அரிய சேவைக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டு.

நியாய விலைக் கடைகளில் தேங்காய் எண்ணெய்!

மைய அரசு நியாய விலைக் கடைகளில பொது விநியோகத் திட்டத்தின்கீழ், இதுவரையிலும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் பாமோலின், சோயாபீன் எண்ணெய் மற்றும் சூரியகாந்தி எண்ணெய் ஆகியவற்றை வழங்கி வருகிறது.

தற்போது மைய அரசு பொது விநியோக முறையில் தேங்காய் எண்ணெயினை உணவுப் பண்டங்களுக்குப் பயன்படுத்திவரும் பகுதிகளில் வழங்குவதற்கு என்று மேற்படி எண்ணெய் ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்தத் தேங்காய் எண்ணெய் ஒரு கிலோ கிராம் எடை கொண்ட பாக்கெட்டுகளாக வருகின்றது. இந்த எண்ணெய் சென்னை நகரம், கோவை நகரம் மற்றும் நீலகிரி மாவட்டங்களில வழங்குவதற்கு அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

ஒரு குடும்பத்துக்கு (குடும்ப அட்டை ஒன்றுக்கு) ஒரு கிலோ பாமோலின் எண்ணெயோ சூரியகாந்தி எண்ணெயோ அல்லது தேவைப்படுவோர், தேங்காய் எண்ணெயோ, எது வேண்டுமோ அதில் ஒரு கிலோ வாங்கிக் கொள்ளலாம்.

சென்னை நகரத்தில் பாலிதீன் உறைகளில் அடைக்கப்பட்ட ஒரு கிலோ எண்ணெயின் விலை ரூ. 24.50 என்றும் பாலிதீன் புட்டிகளில் அடைக்கப்பட்ட எண்ணெயின் விலை ஒரு கிலோ ரூ. 26- என்றும் அரசு நிர்ணயித்துள்ளது. கோவை நகரம் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் இந்த எண்ணெயின் விலை போக்குவரத்துக்கான செலவினத்துக்காக 35 காசு கூடுதலாகும்.

தற்போது இந்த எண்ணெய் நியாயவிலைக் கடைகளில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இரண்டே போதும்!

தேசிய ஒருமைப்பாடு மற்றும் மக்கள் தொகைக் கல்வி எனும் கருத்தரங்கு ஆகஸ்டுத் திங்கள் 2 முதல் 5 முடிய சென்னை இராஜாஜி மண்டபத்தில் சிறப்பாக நடந்தது.

மத்திய அரசு தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறையின் கள விளம்பரப் பிரிவு, பாடல் மற்றும் நாடகப் பிரிவு ஆகியவையும், தமிழக அரசும் இணைந்து இக் கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்திருந்தன.

கருத்தரங்கை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசுகையில், ''குடும்ப நலத் திட்டத்தில் இந்தியாவிலேயே தமிழகம் முன்னணியில் உள்ளது, என்றாலும், இத்திட்டத்தின் குறிக்கோள்கள் பாமரமக்களை ஈர்க்க வேண்டும்'' என்று கருத்து தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்:

''இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெற்றுக் கொள்வதில்லை எனத் தாய்மார்கள் சபதம் எடுத்துக் கொள்ள வேண்டும். நடப்பு ஆண்டில் குழந்தைகள் இறப்பு விகிதம் ஆயிரத்துக்குப் பத்தாக உள்ளது. சர்வதேச சுகாதார நிறுவனத்தின் வேண்டுகோளின்படி இதனை ஒன்பதாகக் குறைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. நவீன மருத்துவ வசதிகள் காரணமாகக் குழந்தைகள் இறப்பு விகிதம் குறைக்கப்பட்டுள்ளது.''

இந்தக் கருத்தரங்கிற்குத் தலைமை தாங்கிய தமிழக அரசின் இரண்டாம் செயலாளர் திரு. டி. வி. அந்தோணி இ.ஆ.ப. அவர்கள் பேசுகையில், ''ஒரு குழந்தையை நான்கு வயது வரை வளர்க்க ஒரு தாய் 500 நாட்கள் இரவில் தனது தூக்கத்தைத் தியாகம் செய்ய வேண்டியுள்ளது. இரண்டு குழந்தைகளோடு நிறுத்திக் கொண்டால், ஆரோக்கியமுள்ள தாயை அந்தக் குழந்தைகளுக்கு அளிக்க முடியும்'' என்றார்.

சிறப்புரையாற்றிய மக்கள் நல்வாழ்வுத் துறைச் செயலர் திரு டி. முருகராஜ் இ.ஆ.ப., அவர்கள் பேசுகையில், ''திட்டமிட்ட குடும்பத்தின் மூலம்தான் தனி நபர் வருமானத்தை அதிகரிக்க முடியும். மக்கள் தொகை வளர்ந்து கொண்டே சென்றால் உலக நாடுகளில் நமது நாடு பின்தங்கி விடும்'' என்றார்.

ஒற்றுமை வேறு ஒருமைப்பாடு வேறு

4-8-'84 அன்று தேசிய ஒருமைப்பாட்டுத் தினம் கொண்டாடப்பட்டது.

மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் சிறப்புரையாற்றுகையில் தெரிவித்த கருத்துக்களாவன:

''ஒற்றுமை என்பது வேறு; ஒருமைப்பாடு என்பது வேறு. முதலில் ஒற்றுமை வேண்டும். ஒற்றுமை வந்தால் ஒருமைப்பாடு தானாக வந்துவிடும்.

''உலகத்துக்கே ஒற்றுமையை, ஒருமைப்பாட்டைச் சொல்லித் தந்தவன் தமிழன். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்!' 'உலகமெலாம் உணர்ந்தோதற்கரியவன் என்றெல்லாம் உலகை வைத்தே எழுதினார்கள் புலவர்கள். ஒருமைப்பாட்டைப் பற்றிப் பாரதி பாடாத பாட்டு உண்டா? எனவே பாரதி வழி நடப்போம்.

''அழகிய பூந்தோட்டம். பன்னிறமலர்கள் அங்கே உள்ளன. ரோஜா, முல்லை, சாமந்தி பூவகையிலே சேராத 'மருக்கொழுந்தும்' அங்கே உண்டு. எல்லாம் சேர்ந்ததுதான் பூந்தோட்டம்; மல்லிகைத் தோட்டம் என்று யாரும் சொல்வதில்லை. எனவே எல்லா மலர்களும் சேர்ந்த அதைப் பூந்தோட்டம் என்று அழைக்கப் போகிறோமா? அல்லது மல்லிகைத் தோட்டம் என்று அழைக்கப் போகிறோமா?''

அன்று நடந்த விழாவில் கள விளம்பர இணை இயக்குநர் திரு தேவிதாஸ் வாரியார், செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு சி. என். கிருஷ்ணபாரதி, இ.ஆ.ப., திரு எச். இராமகிருஷ்ணன், திரு டி. ஆஞ்சநேயலு, திரு எஸ். எம். கிருஷ்ணன், டாக்டர் ஏ.ஆர். பாஜி, டாக்டர் நஞ்சுண்டராவ், தமிழ் வளர்ச்சி தமிழ்ப் பண்பாட்டுத் துறைச் செயலர் டாக்டர் அவ்வை நடராசன், திரு டி.வி. ஆனந்தன், திருமதி அரசு மணிமேகலை, திரு சு. சமுத்திரம் ஆகியோர் பேசினர்.

கவின்மிகு கலை நிகழ்ச்சிகளோடு நான்கு நாட்கள் நடந்த இக் கருத்தரங்கு கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தூட்டியது.

—பி. வி. கிரி

மீனவர்களுக்கு இலவச வீடுகள்



கும்மிடிப்பூண்டித் தொகுதி, ஆரம்பாக்கம் கிராமத்தில் தமிழக அரசு 7 லட்சத்து 50 ஆயிரம் செலவில் இலவசமாகக் கட்டித் தந்துள்ள மீனவர் குடியிருப்பை மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு க.கலைமணி அவர்கள் 29.7.84 அன்று திறந்து வைத்தார். மீன்பிடித் தொழிலில் சடுபட்டிருந்தபோது உயிரிழந்த இரண்டு மீனவர்களின் குடும்பங்களுக்கு அரசு வழங்கும் நிவாரண உதவியான 5 ஆயிரம் ரூபாய் நிதி உதவியையும் அமைச்சர் வழங்கினார்.

மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு க.கலைமணி அவர்கள் கும்மிடிப்பூண்டி தொகுதியில் பலவேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் தண்டலச்சேரியில் கட்டி முடிக்கப்பட்ட பள்ளிக்கட்டடத்தையும், பழைய கும்மிடிப்பூண்டிச் சத்துணவுக் கூடத்தையும், ஆரம்பாக்கத்தில் சத்துணவுக் கூடத்தையும், சகுவார் பாளையத்தில் பள்ளிக் கட்டடத்தையும் அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். ஆரம்பாக்கத்தில் இலவச வீட்டு மனைப்பட்டாக்களையும் வழங்கினார்.

ஆரம்பாக்கம் மீனவ கிராமத்தில் ஒரு வீட்டுக்கு 10 ஆயிரம் ரூபாய் செலவில், 75 வீடுகளை இலவசமாகத் தமிழக அரசு கட்டித் தந்துள்ளது. இந்த மீனவர் குடியிருப்பை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

விழாவுக்குச் சட்டமன்ற உறுப்பினர் திரு முனிரத்தினம் தலைமை வகித்தார். குடிசை மாற்று வாரிய உறுப்பினர் திரு.ஜெ. பாலன் சிறப்புரையாற்றினார். மீன்வளத் துறை துணை இயக்குநர் திரு சண்முகாநந்தம் வரவேற்புரையாற்றினார். உதவி இயக்குநர் திரு சண்முகம் நன்றி தெரிவித்தார்.

நலிந்த மீனவர்கள் மீன்பிடிச் சாதனங்கள் வாங்கவும், ஏழை ஆதிதிராவிட மக்கள் கறவை மாடுகளும், ஆடுகளும் வாங்கியும் தங்கள் வாழ்வை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் மதுராந்தகம் பகுதியில் மீன்வளத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு.க.கலைமணி அவர்கள் 30.7.84 அன்று ஒரே நாளில் 9 லட்சத்து 8 ஆயிரம் ரூபாயைக் கடனாக வழங்கினார்.

மதுராந்தகம் தொகுதியில் அமைந்துள்ளதும் கடலோர மீனவர் கிராமமுமான பெரிய குப்பத்தில் நலிந்த மீனவர்கள் 100 பேருக்கு ஆளுக்கு 5 ஆயிரம் ரூபாய் கறவா வங்கிக் கடன் வழங்கப்பட்டது. அதே வங்கி மூலம் ஆடு வளர்க்க நெடுமரம் காலனியைச் சேர்ந்த ஆதிதிராவிட மக்கள் 25 பேருக்கும், கடலூர் கிராமத்தைச் சேர்ந்த 12 பேருக்கும் ஆளுக்கு 4 ஆயிரம் ரூபாய் வீதம் கடன் வழங்கப்பட்டது.

பின்னர் சீக்கினாங்குப்பத்தில் ஆடு வளர்க்க 40 பேருக்குத் தலா 4 ஆயிரத்து 500 வீதம் ஆடு வாங்கவும், மாடு வாங்கி வளர்க்க 32 பேருக்கு 2 ஆயிரத்து 500 வீதமும் கடன் வழங்கப்பட்டது.

மொத்தம் 9 லட்சத்து 8 ஆயிரம் ரூபாய் ஆகும். இக்கடன் உதவிகளை மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு க.கலைமணி அவர்கள் வழங்கினார்.

அடுத்து கிரல்வாடியிலும், இறுநன்னாரியிலும் சத்துணவு மையக் கட்டடங்களைத் திறந்து வைத்து உரையாற்றினார்.

இவ்விழாக்களுக்குச் சட்டப் பேரவை உறுப்பினர் திரு எஸ்.டி.உக்கம்சந்த் தலைமை வகித்தார்.

திருச்சியில் தொலைக்காட்சி அஞ்சல் நிலையம்

அந்த அழகிய பந்தலில் ஆடவர், மகளிர், குழந்தைகள் எனக் குழுமியிருக்கின்றனர். தங்கள் ஊருக்குத் தொலைக்காட்சி வரப் போகிறது என்ற குதூகலமும் மகிழ்ச்சியும் அவர்கள் முகத்தில் தெரிகிறது.

ஆம். 10.7.'84 அன்று திருச்சியில் தொலைக்காட்சி அஞ்சல் நிலையத் தொடக்கவிழா கோலாகலமாக நடந்தது.

நாட்டு மக்களில் குறைந்தபட்சம் 70 சதவீதம் பேருக்குத் தொலைக்காட்சி வசதி ஏற்படுத்தித்தரும் வகையில் தொலைக்காட்சி விரிவாக்கத் திட்டம் ஒன்றினை அரசுமேற்கொண்டுள்ளது. இதன்கீழ் நாடு முழுவதிலும் 126 குறைந்த சக்தி தொலைக்காட்சி அஞ்சல் நிலையங்களும், 26 உயர் சக்தி தொலைக்காட்சி ஒளிபரப்பிகளும் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதில் 34 குறைந்த சக்தி தொலைக்காட்சி அஞ்சல் நிலையங்கள் தென் மாநிலங்களில் அமைக்கப்படுகின்றன. இதில் 6 நிலையங்கள் தமிழ்நாட்டில் ஏற்படுத்தப்படுகின்றன. இவை திருச்சி, வேலூர், சேலம், கும்பகோணம், கோயம்புத்தூர், நெய்வேலி ஆகிய இடங்களில் உருவாக்கப்படுகின்றன.

இந்த நிலையங்களுக்கான அனைத்துச் சாதனங்களும் உள் நாட்டிலேயே தயாரிக்கப்பட்டவைகளாகும். இந்தச் சாதனங்களின் மூலம் வண்ண ஒளிபரப்பும் செய்ய இயலும்.

அந்த வகையில் முதன் முதலாகத் திருச்சியில் இந்தத் தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதற்கான 100 வாட் டி.வி டிரான்ஸ்மிட்டர் பெல் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தொலைக்காட்சி நிலைய ஒளிபரப்பினை அஞ்சல் செய்வதற்கு, திருச்சி ஒத்தக்கடை அருகே பாரதிதாசன் சாலையில் உள்ள அகில இந்திய வானொலி - திருச்சிராப்பள்ளி நிலைய வளாகத்தில் 110 அடி உயரமுள்ள அஞ்சல் கோபுரமொன்று அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் தில்லியிலிருந்து ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகள் 'இன்சாட் 1-பி' செயற்கைக் கோளின் மூலம் அஞ்சல் செய்யப்படும். இந்த ஒளிபரப்பினை சேனல் 9ல் பொதுமக்கள் பார்க்கலாம். இந்த ஒளிபரப்பு, திருச்சிராப்பள்ளி அதனைச் சுற்றிலும் 25 கிலோ மீட்டர் சுற்றளவுக்குத் தெரியும்.

திருச்சிராப்பள்ளி தொலைக்காட்சி அஞ்சல் நிலையத்திலிருந்து பின்வரும் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகும்.

நாள்தோறும் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகும் நேரம்: மாலை 6.00 மணி முதல் இரவு 11.30 வரை. ஞாயிற்றுக்கிழமைகளில் கூடுதல் ஒளிபரப்பு: காலை 9.30 மணிமுதல் நண்பகல் 12.30மணி வரை, பிற்பகல் 2.00 மணிமுதல் மாலை 6.00 மணி வரை. (பின்பு வழக்கமான ஒளிபரப்பு உண்டு). இரண்டாவது சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரை. 4-வது ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 6.00 மணி வரை.

தமிழ்நாட்டிற்கென கொடைக்கானலில் 10 கிலோ வாட் உயர் சக்தி டி.வி.டிரான்ஸ்மிட்டர் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. இது கொடைக்கானல் மலையில் கடல் மட்டத்திலிருந்து 2172 மீட்டர் உயரத்தில் நிறுவப்படுகிறது. இதற்கான டிரான்ஸ்மிட்டர் கொடைக்கானல் வந்து சேர்ந்துவிட்டது. ஒளிபரப்புக்கென 150 மீட்டர் உயரமுள்ள அஞ்சல் கோபுரம் அமைக்கப்பட்டு வருகிறது. இந்தத்தொலைக்காட்சி நிலையத்திற்கான கட்டடப் பணிகள் நிறைவுபெறும் தறுவாயில் உள்ளன. இப்பணிகள் முடிவடைந்து ஒளிபரப்பு அஞ்சல் தொடங்கப்படுவதற்கு இடையில், இந்தக் கட்டடத்தின் மீது 15 மீட்டர் உயரமுள்ள குறைந்த சக்தி 'ஆண்டனா பேனல்ஸ்' அமைக்கப்பட்டு வருகிறது.

இந்த டிரான்ஸ்மிட்டர் செயல்படத் தொடங்கும்பொழுது சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தின் நிகழ்ச்சிகளை அஞ்சல் செய்யும். அதுவரை புதுதில்லி நிகழ்ச்சிகள் 'இன்சாட் 1-பி' செயற்கைக் கோளின் உதவியுடன் அஞ்சல் செய்யப்படும். இந்த இடைக்கால ஒளிபரப்பு 40 கிலோமீட்டர் தூரம் வரை தெரியும். நிலையான வசதிகளுடன் செய்யப்படும் ஒளிபரப்பானது 180 கிலோ மீட்டர் வரை தெரியும்.

அன்று நடந்த இந்த இனிய விழாவுக்கு மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் தலைமை வகித்தார். அப்போது அவர் பேசுகையில் குறிப்பிட்டார்.

''தமிழ்நாட்டில் மொத்தம் 10 இடங்களில் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள் அமைக்க உதவும்படி மத்திய அரசை, தமிழக அரசு வற்புறுத்தியுள்ளது. ஆனால், மத்திய அரசு தமிழ் நாட்டில் 6 இடங்களில் மட்டுமே தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையம் அமைக்க அனுமதி தந்துள்ளது.

''இங்கு டெல்லியில் இருந்து ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகளை மக்கள் பார்க்கிறார்கள். அது போல சென்னையில் உள்ள தொலைக்காட்சி நிலையம் தயாரித்து வழங்கும் நிகழ்ச்சிகளையும் தொலைக்காட்சியில் பார்க்க, மத்திய அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். தபால்-தந்தி கோபுரங்கள் (மைக்ரோ வேவ் டவர்) எங்கெல்லாம் போகிறதோ, அந்தக் கோபுரங்கள் வழியாகச் சென்னைத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்க ஏற்பாடு செய்ய வேண்டும்''.

மாண்புமிகு இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் தொலைக்காட்சி அஞ்சல் நிலையத்தைத் தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசுகையில்—

''தமிழ்நாட்டின் மையப் பகுதியான திருச்சியில் தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் தொடங்கப்படுவது எல்லா வகையிலும் பொருத்தம் ஆகும். திருச்சி பகுதி கலையிலும், கலாச்சாரத்திலும், இசையிலும் முக்கிய இடம் வகிக்கிறது.

''தொலைக்காட்சி வசதி அமைப்புக்கு நிதி ஒதுக்குவதில் தமிழ் நாடு புறக்கணிக்கப்படுவதாகத் தெரிவித்தார்கள். 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொலைக்காட்சிக்குக் கூடுதல் நிதி ஒதுக்கிப் பரவலாக தொலைக்காட்சி அஞ்சல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

''தமிழ்நாட்டில் தற்போது சென்னை, திருச்சி தவிர மேலும் 6 இடங்களில் தொலைக்காட்சி அஞ்சல் நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் தமிழ்நாட்டில் உள்ள மக்களில் 86 சதவீதம் பேர் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்க முடியும். மேலும் 14 சதவீத மக்களும் பார்க்க அடுத்த ஐந்தாண்டுத் திட்ட முடிவுக்குள் ஏற்பாடு செய்து கொடுக்கப்படும்.

''டெல்லியிலிருந்து ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகள்தான் திருச்சியில் பார்க்க முடியும். சென்னை நிகழ்ச்சிகளையும் பார்க்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இங்கு அமைச்சர் ஆர். எம். வீரப்பன் அவர்கள் வேண்டுகோள்

தமிழ் நாட்டில் தொலைக்காட்சி அஞ்சல் நிலையங்கள்

ஆறாவது திட்டத்தில் மிக விரைவுத் திட்டமாக எடுத்துக் கொண்டு தொலைக்காட்சித் தொடர்பை அதிகரிக்கும் வகையில் கொடைக்கானலில் உயர் சக்தி கொண்ட தொலைக்காட்சி அஞ்சல் நிலையமும், மேலும் கீழ்க்கண்ட 6 இடங்களில் குறை திறன் கொண்ட தொலைக்காட்சி அஞ்சல் நிலையமும் அமைக்க மத்திய அரசு முடிவெடுத்தது. அவை:

1. திருச்சி, 2. சேலம்-ஏர்க்காடு, 3. வேலூர், (கழிஞ்சூர்), 4. கோயம்புத்தூர் 5. கும்பகோணம், 6. நெய்வேலி.

சேலம் :

ஏர்க்காடு மலையில் 'லேடீஸ் சீட்' பகுதியில் புறம்போக்கு இடத்தில் 4 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, வானொலி பொறியியல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் தொலைக்காட்சி நிலையம் அமைப்பதற்குத் தேவைப்படும் கட்டடம் வானொலித்துறையால் கட்டி முடிக்கப்பட்டு, தொலைக்காட்சி டிரான்ஸ்மிட்டர் அமைப்புப் பணியும் முடிவுற்று இவ்வாண்டு அக்டோபருக்குள் துவக்கப்படும்.

கோயம்புத்தூர் :

கோயம்புத்தூரில் குறைந்த சக்தியுள்ள தொலைக்காட்சி டிரான்ஸ்மிட்டர் நிலையத்தை அமைக்க, கோவை சிறைச்சாலை வளாகத்தினுள் ஒரு ஏக்கர் நிலத்தை இலவசமாக வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. கட்டடப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

வேலூர் :

வேலூரை அடுத்த கழிஞ்சூர் கிராமத்தில் தேசிய நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான 80 சென்ட் நிலத்தையும், இதில் உள்ள கட்டடத்தையும், குறைந்த சக்தி கொண்ட தொலைக்காட்சி நிலையம் அமைப்பதற்கு வானொலி பொறியியல் துறைக்கு வழங்குவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான ஆணை 22.2.84ல் பிறப்பிக்கப்பட்டது. பணிகள் நடைபெற்று வருகின்றன. 1984 இறுதிக்குள் தொலைக்காட்சி நிலையம் செயல்படத் துவங்கும்.

கும்பகோணம்:

தஞ்சை மாவட்டம், கும்பகோணத்தில் மத்தியப் பகுதியில் கற்பகம் விடுதியின் மேல் தளத்தையும், விடுதியில் இருக்கும் இட அறைகளையும் வாடகைக்கு எடுத்துக் கொள்ள வானொலித்துறை ஒப்புக் கொண்டு இதற்கான ஒப்பந்தம் செய்து கொள்ளும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நெய்வேலி:

தென்னார்க்காடு மாவட்டம் நெய்வேலியில், நெய்வேலி நிலக்கரிச் சுரங்கக் கழகத்திற்குச் சொந்தமான இடத்தில், இதற்கான இடமும் கட்டடமும் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணிகள் அண்மையில் துவக்கப்பட்டுள்ளன.

தொலைக்காட்சி அஞ்சல் நிலையங்களுக்கான இடங்களையும், கட்டடங்களையும் உடனடியாகத் தருவதில் தமிழ்நாடு முதல் மாநிலமாகத் திகழ்கிறது.

இயற்கையின் இணையற்ற பரிசு!

கால்நடைகள் இறைவன் நமக்கு அளித்த வரப்பிரசாதம். கிராமப்புற வாழ்க்கையில், கால்நடைகளின் உதவியின்றி எந்தத் தொழிலையும் நாம் கற்பனை செய்துகூடப் பார்க்க இயலாது.

இலட்சக்கணக்கானவர்களுக்குப் பாலையும், நாட்டுக்கு உணவையும், போக்குவரத்துக்கும், தோல் பொருட்களுக்குக் கச்சாத் தோலையும் கால்நடைகள் வழங்குகின்றன. ஆயினும், இன்றைய தேதிவரை, கால்நடைகளை வளர்க்கும் விதம் குறித்து சரிவர அறிவதில் எவரும் அக்கறை காட்டவில்லை.

சமுதாயத்தில் மனிதனின் சொத்தாகவும், தகுதியின் சின்னமாகவும் கால்நடைகள் கருதப்பட்டன. காலம் காலமாக மனித நாகரிகத்தின் ஒரு அங்கமாகக் கால்நடைகள் இருந்து வருகின்றன. இப்போதுகூட, கிராமப்புறத் தேவைகளைக் கால்நடைகள்தாம் தீர்த்து வைக்கின்றன.

தானம் கொடுத்த மாட்டைப் பல்லைப்பிடித்துப் பார்ப்பது என்பதுபோல, இயற்கையின் பரிசைத் தவறாகப் பயன்படுத்துவது மனிதனின் வழக்கமாக உள்ளது. இதுபோலவே, கடினமான பணிகளுக்கும் இரக்கமின்றிக் கால்நடைகள் பயன்படுத்தப்படுகின்றன.

காளைகளுக்கு லாடம் அடிக்கும் கொடூரமான முறை இன்றளவும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. கடினமான சாலைகளில் செல்வதனால், குளம்புகள் தேயாமலிருக்க இந்த ஏற்பாடு. குளம்புகளில் அடிக்கப்படும் லாடங்கள் சரியான வடிவில், ஆணி வைத்து அடிக்கப்பட வேண்டும்.

தவறான முறையில் லாடம் பொருத்துவதனால், பிராணிகள் சொல்லொணா துன்பத்துக்கு ஆளாகி, மெல்ல மெல்ல நடக்கும் சக்தியை இழக்கின்றன. உரிமம் பெற்றவர்கள் மட்டுமே இப்பணியைமேற்கொள்ள வேண்டும் என்று நிபந்தனை விதிக்க வேண்டிய தருணம்வந்துவிட்டது.

குறைபாடுகளுடன் கூடிய ஏர் மற்றும் வண்டிகள் கால்நடைகளை மேலும் துன்பத்தில் ஆழ்த்துகின்றன. தாங்கு கட்டைகள் இவற்றின் கழுத்தைப் பதம் பார்த்து, ஆற்ற இயலாத காயங்கள் ஏற்படுகின்றன.

சாட்டையால் அடித்தல், ஊசியால் குத்துதல், வாலை முறுக்குதல் போன்ற இரக்கமற்ற செய்கைகள் மூலம் பணியில் ஈடுபடஇவை அல்லல்படுத்துப்படுகின்றன. கொடூரமான முறையில் கால்நடைகளைக் காயடிப்பதும் நடைபெறுகின்றன. இறைச்சிக்கான கால்நடைகள்கூட இதற்கு விதிவிலக்கல்ல. உணவும், நீரும், ஓய்வுமின்றி, நடையாய் நடத்திக் கொண்டுவரப்பட்டு, இவை கொல்லப்படும் கதையைக் கேட்டால் கரையாத மனமும் கரையும்.

பிராணிகளை நேசிப்போர், கால்நடைகளை இம்சிக்காமல் பயன்படுத்தும் முறைகள் குறித்து விவசாயிகளின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டும். மேம்படுத்தப்பட்ட ஏர் மற்றும் நவீன விவசாயக் கருவிகள் கால்நடைகளின் கழுத்துக்களைக் காப்பாற்றவல்லவை.

கால்நடைகள் சிரமமின்றி வண்டி இழுக்க ஏதுவாக, மாட்டு வண்டிகளும் தக்க முறையில் வடிவமைக்கப்படுகின்றன. அடிமாடுகளை வெட்டுமுன்பாக வலி தெரியாத துப்பாக்கி ரவைகளின் மூலம் தூங்க வைத்து, பின்னர் இறைச்சிக்கும், தோலுக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

கால்நடைகள் மனித இனத்திற்குச் செல்வம் போன்றவை. வாழும்போது, குழந்தைகளுக்குச் சத்தான பாலைத் தருவதுடன், பண்ணை வேலைகளையும் இவை செய்கின்றன். இறந்த பின்னர், இவற்றின் தோல் பலவகைகளில் நமக்குப் பயன்தருகின்றது. இவற்றின் கொம்புகளைக்கூட சீப்பு செய்யவும், இதர கலைப்பொருட்கள் செய்யவும் பயன்படுத்தலாம். இவற்றைச் சரிவரப் பேணுவது நமது கடமை. செல்வமாக மட்டுமின்றி, சொந்தக் குழந்தைகள் போல், கால்நடைகளைப் பாவித்து, நடத்த நாம் உறுதி பூணுவோம்!

—இந்திய அரசு பத்திரிகைத் தகவல் அலுவலகம்.

விடுத்தார். அந்தக் கோரிக்கை நியாயமான கோரிக்கைதான். அவர் கேட்டது போல தபால்-தந்திக் கோபுரங்கள் (டவர்)வழியாக இணைப்புக் கொடுத்து சென்னை நிகழ்ச்சிகளைத் திருச்சியில் ஒளிபரப்ப சம்பந்தப்பட்ட அமைச்சர், அதிகாரிகளிடம் பேசி ஆவன செய்கிறேன்.

''தமிழ்நாட்டில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை வண்ணத்தில் ஒளிபரப்ப நடமாடும் கலர் டெலிவிஷன் நிலையம் (ஓ.பி. வேன்) தேவை என்று அமைச்சர் ஆர்.எம். வீரப்பன் அவர்கள், கேட்டார். இந்த விஷயத்தில் தமிழ்நாட்டை எக்காரணம் கொண்டும் ஒதுக்கி விடவில்லை. காஷ்மீர், அசாம், மிஜோராம், ராஜஸ்தான் போன்ற எல்லையோர மாநிலங்களுக்கு முதலில் முன்னுரிமை வழங்கி இருக்கிறோம். அதைத் தொடர்ந்து தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கும் அந்தத் திட்டம் விரைவுபடுத்தப்படும்'' என்றார்.

விழாத் தொடக்கத்தில் சென்னைத் தொலைக்காட்சி நிலைய இயக்குநர் திரு சவுடேகர் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். தலைமைப் பொறியாளர் திரு எம்.ஐ.சூரியநாராயணா, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு விசுவநாதன் இ.ஆ.ப., நாடாளுமன்ற உறுப்பினர் திரு துரை செபாஸ்டியன், திருச்சி வானொலி நிலைய இயக்குநர் திரு சுப்பிரமணியம் ஆகியோர் தொலைக்காட்சியின் அவசியம் குறித்துப் பேசினர்.

விழா முடிவில் நாதஸ்வரம், கரக ஆட்டம், நையாண்டிமேளம் முதலான நிகழ்ச்சிகள் நடந்தன.

நிகழ்ச்சித் தொகுப்பு :

—பி. வி. கிரி

'சிறுவாணி'

கோவையிலிருந்து பழம்பெரும் மூதூர் பேரூர் செல்லும் வழியில், ஆலந்துறை என்ற பழம்பதியைக் கடந்து சென்றால், பெரியாறு ஒன்று குறுக்கில் வரும். அதைக் கடந்தால் மலையும் காடும் சூழ்ந்த மனமகிழ்ட்டும் எழிலை நாம் காணலாம். இவ்வெழில் சூழ்ந்த கானகத்தே அமைந்துள்ள சாலை வழியில் கடந்து சென்று குன்றுகள் பல கடந்து சென்றால், கேரள மாநிலத்தின் எல்லையிலே சிறுவாணி எனும் ஆறு ஓடும். இவ்வாறு ஓடி கேரள மாநிலத்தில் பரவி, பவானியில் கலக்கும் நிலை. கொங்குத் தமிழ்ச் சீமையாம் கோவை மாநகரத்திற்குத் தீராத குடிநீர்ப் பிரச்னை இருந்த காலம் உண்டு.

இக்குடிநீர்ப் பிரச்னையை கோவையி அகற்றுவதற்குக் லிருந்து 32 கி.மீ. தொலைவில் ஓடிக் கொண்டிருக்கும் சிறுவாணி ஆற்று நீரைப் பயன்படுத்தத் தமிழக அரசு முடிவுசெய்து, அந்த ஆறு ஓடும் பகுதி கேரள மாநிலத்தின் ஒருபகுதியாக இருந்ததால், கேரள மாநிலத்தினுடைய ஒப்புதலுடன் அணை ஒன்றினைக் கட்டி, நீரினைத் தேக்கி, தேங்கியிருக்கும் நீரைக் குகைப்பாதை வழியாகக் கோவைக்குக் கொண்டு வந்து குடிநீர் வழங்கத் திட்டம் காணப்பட்டது.

தமிழக அரசின் எண்ணத்தை-திட்டத்தைக் கேரள அரசும் ஒப்புக்கொண்டு, அந்த ஒப்புதலோடு அணை கட்டுகின்ற பணி துவக்கப்பட்டது. அணை கட்டுவதற்கான திட்டமும், மதிப்பீடும் தயாரிக்கப்பட்டுகேரள அரசிற்கு, நிதியினைத் தமிழக அரசு தருவதென்றும், அந்த நிதியைக் கொண்டு கேரள மாநில எல்லையில் சிறுவாணி ஆற்றின் இரண்டு மலைக்கு இடையே ஒரு அணையை எழுப்புவது என்றும், தமிழக அரசும், கேரள அரசும் நல்லெண்ணத்தின் அடையாளமாய், கூட்டுறவின் மேம்பாடாய் இத்திட்டத்தை

பி. சுப்பையா

செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
கோயம்புத்தூர் மாவட்டம்.

நிறைவேற்றித் தந்திட, கோவை மாநகர மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்திட முனைந்து சிறுவாணித் திட்டம் உருவாக்கித் தரப்பட்டிருக்கிறது.

இத்திட்டம் புவிஈர்ப்பு அணை நீர் எடுப்புக் கோப்பு, குகைப் பாதை, முழு அளவு நீர் சுத்திகரிப்பு நிலையம், சுத்தநீர்த்தேக்கம், முன் வலிமையூட்டப்பட்ட கற்காரை நீர்கொணரும் குழாய், ஆற்றின் குறுக்காகப் பாலங்கள், அழுத்த முறிப்புத் தொட்டிகள், பிரதான நீர்த் தேக்கத் தொட்டி, விநியோக மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள், மற்றும் வார்ப்பு இரும்புக் குழாய், கல்நார்க் குழாய், பி.வி.சி. குழாய் அடங்கிய நீர் பகிர்மாண அமைப்பு ஆகிய அனைத்துப் பொதுச் சுகாதாரப் பொறியியல் சிறப்பியல்களும் ஒருங்கே அமையப்பெற்ற ஒரே திட்டமாகச் சிறுவாணித் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

இது தமிழகத்திலேயே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் எடுத்துக்கொள்ளப்பட்ட மிகப் பெரிய திட்டமாகும்.

இத்திட்டத்தின்படி கேரள மாநில எல்லையிலுள்ள சிறுவாணி ஆற்றில் 650 மில்லியன் கனஅடி நீர் கொள்ளளவு கொண்டதாகவும், 22.47 சதுர கி.மீ. நீர்ப்பிடிப்புப் பகுதியைக் கொண்டதாகவும், அணையின் நீளம் 224 மீ. உள்ளதாயும், அதிகப்படியான அணையின் உயரம் 55 மீ. உள்ளதாயும், மூன்று நீர் வழிந்தோடும் பகுதியின் நீளம் 45.4 மீ. உள்ளதாயும், அணை திறப்பு பகுதி 2 மீட்டர் உள்ளதாயும், அணையின் மேல்மட்டம் 883 மீ. 881.5 மீ. முழுஅளவு நீர்மட்டம் 871.5 மீ. உள்ளதாயும், உச்சக் கட்ட வெள்ளநீர் வெளியேற்றம் 15,300 கன அடி வினாடிக்கு உள்ளதாயும், இவ்வணை உருவாக்கப்பட்டிருக்கிறது.

இவ்வணையை உருவாக்குவ



தற்கு ஆரம்பக் கட்ட மதிப்பீடு ரூ. 1,556 லட்சம் ஆகும். இதன் திருத்திய மதிப்பீடு ரூ. 2,203.25 லட்சமாகும். இச்சிறுவாணி அணையில் தேக்கப்படுகின்றநீரை குகைப்பாதை வழியாகத் தமிழக எல்லையில் அமைந்துள்ள ஆனையாற்றில் விடப்பட்டு, பின்னர் நீர் எடுக்கும் அமைப்புக்களின் மூலம் தமிழக எல்லையிலுள்ள சிறுவாணி மலையடிவாரத்தில் முழு அளவு தண்ணீர் சுத்திகரிக்கப்படுகிறது. 6 அடிக்கு 7 அடி வீதம் அளவும், 1·55 கி.மீ. நீளமும் கொண்டதாகக் குகைப் பாதை அமைக்கப்பட்டிருக்கிறது. ஆறு மீட்டர் விட்டம், 23 மீ உயரம், கொண்ட நீர் எழுப்புக் கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது.

800 மி.மீ. அளவுள்ள நான்கு நீர் உச்சக் குழாய்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. 1.4 மீ உயரம் 12 மீ. நீளம் கொண்ட நீர் எடுக்கும் சிற்றணையும், 3 மீ. விட்டமுள்ள நீர் சேகரிக்கும் தொட்டியும் அமைக்கப் பட்டுள்ளது.

முழு அளவு சுத்திகரிப்பு நிலையம் இருக்கிறது. 16.2மீ×23.4மீ அளவில் அமைக்கப்பட்ட காற்று கலக்கும் அறையும், 14×24 மீ அளவில் அமைக்கப்பட்டுள்ள ரசாயன அறையும், 4.5 மீ விட்டத்தில் அமைக்கப்படவிருக்கும் பிரித்தெடுக்கும் அறையும், 64×24 மீ. அளவில் அமைக்கப்பட்டு உள்ள வடிகட்டும் அறையும், 16 வடிகையும் அமைக்கப்பட்டுள்ளது. 45 லட்சம் லிட்டர் கொள்ளளவுடைய 2 அறைகளைக் கொண்ட சுத்தநீர்த் தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டிருக்கிறது.

1000 மி.மீ. விட்டமுள்ள முன் வலிமையூட்டப்பட்ட கற்காரைக் குழாய் 31.33 கி.மீ. நீளத்திற்கு அமைக்கப்பட்டு கோவை மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள பாரதிப் பூங்காவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள முக்கிய நீர்த்தேக்கத் தொட்டியுடன் இணைக்கப்பட்டு நீர் கொண்டுவரப்படுகிறது. 38 லட்சம் லிட்டர் கொள்ளளவு உள்ள பாரதிப்பூங்கா நீர்த் தேக்கத் தொட்டி, 28 லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள இரத்தினசபாபதிபுரம் நீர்த்தேக்கத் தொட்டி, 11 லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள டாடாபாத் நீர்த்தேக்கத் தொட்டி, 20 லட்சம் கொள்ளளவுள்ள சித்தாபுதூர் நீர்த்தேக்கத்தொட்டி, 27 லட்சம் கொள்ளளவுள்ள வ.உ.சி பூங்கா நீர்த்தேக்கத்தொட்டி 20 லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள சாந்திப்பூங்கா நீர்த்தேக்கத் தொட்டி, 9 லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள வைசியாள் தெரு நீர்த் தேக்கத் தொட்டி, 14 லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள நகர்மன்றம் நீர்த்தேக்கத் தொட்டி, 24 லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள புலியகுளம் நீர்த்தேக்கத்தொட்டி ஆகிய தொட்டிகளின் மூலம் கோவை மாநகரின் பல்வேறு பகுதிகளுக்கும் சுற்றியுள்ள நகரப்பகுதிகளுக்கும், குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. இத்தொட்டிகளிலிருந்து குடிநீரை விநியோகிப்பதற்காகக் கோவை மாவட்டத்தில் 143.3 கி.மீ. மாநகராட்சி உடன் இணைக்கப்பட்ட சிங்கநல்லூர், கணபதி பகுதிகள், 105.5 கி.மீ. மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள சங்கனூர், தெலுங்குப்பாளையம் 51.40கி.மீ. கோவை நகரத்தைச் சுற்றியுள்ள குறிச்சி, குனியமுத்தூர் ஆகிய பகுதிகளில் 61 கி.மீ. ஆகமொத்தம் 362.5 கி.மீ. புகிர்மாணக் குழாய் அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் திட்டத்தின் மூலம் கோவை மாநகரத்தைச் சேர்ந்த 7 லட்சம் பேர், கோவை மாநகரத்துடன் இணைக்கப்பட்ட சிங்கநல்லூர், கணபதி, குனியமுத்தூர், சங்கனூர், தெலுங்குப்பாளையம், பாலரங்கநாதபுரம், கோவை ஊரகம், பகுதிகளில் வாழும் 3.41 லட்சம் பேர், கோவை நகரத்தைச் சுற்றியுள்ள கவுண்டம்பாளையம், குனூர் குறிச்சி, குனியமுத்தூர் பகுதியிலுள்ள 65 குடியிருப்புகளில் உள்ள 1.97 லட்சம் பேர் ஆக மொத்தம் 12,38,000 பேர் இத்திட்டத்தினால் பயன்பெறுகிறார்கள்.

இது தவிர மருதமலை, பாரதியார் பல்கலைக் கழகம், போத்தனூர், புகையிலை நிலையம், விவசாயப் பல்கலைக் கழகம், சூலூர் விமானப் படைத்தளம், ஆகிய நிறுவனங்களுக்குச் சிறுவாணித் திட்டத்தில் இருந்து நீர் வழங்கப்படுகிறது. சிறுவாணி அணையைக் கட்டி முடிப்பதற்கு திருத்திய மதிப்பீடு ரூ. 2,200.25 லட்சம் என அரசு ஏற்றுக் கொண்டு நிதியினை ஒதுக்கீடு செய்தது. இணைக்கப்பட்ட பகுதிகளுக்குக் குடிநீர் விநியோகிக்க ரூ. 465 லட்சமும், ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பகுதிகளுக்குக் குடிநீர் வழங்க ரூ. 212.92 லட்சமும், கோவை நகரத்தைச் சுற்றியுள்ள நகரங்களுக்குக் குடிநீர் வழங்க ரூ.95.65 லட்சமும் நிறுவனங்களுக்குக் குடிநீர் வழங்க முதலீட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 21.46 லட்சமும், வழியோரத்திலுள்ள 65 குடியிருப்புகளுக்கு ரூ. 59.58 லட்சமும் ஆகமொத்தம் ரூ. 3054.86 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மே'84 வரை ரூ.2,614.09 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

கேரள மாநில அரசின் பொறுப்பில் தமிழக அரசு நிதி ஒதுக்கீடு செய்து சிறுவாணி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டு வந்த அணை முற்றுப் பெற்று திறப்பு விழாவை எதிர்நோக்கியிருக்கிறது.

குகை வெளிப்பகுதிக்கும், நீர் எடுக்கும் சிற்றணைக்கும் இடைப்பட்ட நீர்மட்ட வித்தியாசத்தைப் பயன்படுத்தி 3,000 கிலோவாட் மின்உற்பத்தித் திறன் கொண்ட சிறிய நீர் மின்நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. 21 பேரூராட்சிகள், 476 கிராமங்கள் குடிநீர் பெறுகின்ற வகையில் உலக வங்கியின் கடன் உதவியுடன் 36 கோடி ரூபாய் செலவில் மற்றொரு திட்டம் அமைக்கப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

மலைமுகடுகளிலிருந்து பாய்ந்து வரும் நீர் ஊற்றுக்கள் ஒன்றாகி, சிறுவாணியில் குதித்தோடி, பவானியில் கலக்கும் நிலையை மாற்றி, குடிநீருக்காக ஏக்கப் பெருமூச்சு விட்ட மக்களெல்லாம் மகிழ்கின்ற வகையில் சிறுவாணி கோவை மக்களை வாழவைக்கும் ஓர் அரிய ''வாணி''யாக உருப்பெற்று நிற்கிறது.

மலையும், வனமும், ஒன்று சேர்ந்த எழில்மிகு மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியிலிருந்து மழைநீரின் ஊற்றாய், தெள்ளியதேனாய், பருகச் சுவைக்கும் இளநீராய், சுவைபெருக்கி சிறுவாணி புகழ் சேர்த்து நிற்கிறது. இரு மாநிலத்தின் நல்லெண்ணத்திற்கும். கூட்டுறவிற்கும் ஒரு எடுத்துக்காட்டாய், இத்திட்டம் பொலிவுற்று நிற்கிறது.

குடும்ப நலத் திட்டம் சிறப்பாகச் செயல்பட...

"மக்கள் அடிப்படையில் மாநிலங்களுக்கு நிதியுதவியைப் பகிர்ந்து அளிக்கும்போது, குடும்ப நலத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தும் மாநிலங்களுக்குப் பாதிப்பு ஏற்படாமல் பார்த்துக் கொள்வதோடு, தாராள நிதியுதவி அளிக்க வேண்டும்" என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் கூறிய கருத்தை, மாண்புமிகு மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு சங்கரானந்த் அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்.

மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநலக் குழுக்களின் 3 நாள் கூட்டு மாநாடு அண்மையில் புதுடெல்லியில் நடைபெற்றது.

தமிழகத்தின் சார்பில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் மாநாட்டில் கலந்து கொண்டார். அப்போது அவர் பேசுகையில் குறிப்பிட்டார்:

1983-84ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் 3 லட்சத்து 90 ஆயிரம் பேருக்குக் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும் என்று குறியளவு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் தமிழ்நாட்டில் 4 லட்சத்து 90 ஆயிரம் பேருக்குக் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

பிரதமரின் 20 அம்சத்திட்டத்தில் 13-வது அம்சமாகக் குடும்பக் கட்டுப்பாடு இடம் பெற்று உள்ளது. இதனைத் தீவிரமாக அமல்படுத்தும் மாநிலங்கள் தண்டிக்கப்படக் கூடாது. மாறாக, தீவிரமாக அமல் செய்யத் தவறிய மாநிலங்கள் அதற்கான விலையைத் தரட்டும் என்றும் கூறினார்.

குடும்பக் கட்டுப்பாட்டைத் தீவிரமாகச் செயல்படுத்தும் மாநிலங்கள் தண்டிக்கப்படக் கூடாது என்ற மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கருத்தை, கூட்டத்திற்குத் தலைமை வகித்த மாண்புமிகு மத்திய சுகாதார அமைச்சர் திரு பி. சங்கரானந்த் அவர்கள் ஆதரித்தார்.

குடும்ப நல அறுவைச் சிகிச்சை: தமிழகம் முதலிடம்!

தமிழ்நாட்டில் வருகிற 1984-85ஆம் ஆண்டில் 7 லட்சம் பேருக்குக் குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை நடத்த குறியீடு நிர்ணயிக்கப்பட்டது.

கடந்த ஆண்டில் 4 லட்சம் பேருக்குக் குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை நடத்தக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு இருந்தாலும், அதைவிட அதிகமாகவே மொத்தம் 5 லட்சம் பேருக்கு அந்த அறுவைச் சிகிச்சை நடத்தி முடிக்கப்பட்டது. அந்த அறுவைச் சிகிச்சையில், தமிழக அரசு முதல் இடம் பெற்று இருக்கிறது.

நடப்பு ஆண்டில் குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சையைத் தீவிரப்படுத்துவதற்காக ஊக்கத் தொகை அதிகரிக்கப்படுகிறது.

ஒரு அறுவைச் சிகிச்சைக்கு டாக்டருக்கும், நர்சுக்கும் சேர்த்து இதுவரை 10 ரூபாய் மட்டும் கொடுக்கப்பட்டது. இனிமேல் அந்தத் தொகை 25 ரூபாயாக உயர்த்தப்படுகிறது. இதில் கீழ்நிலை ஊழியர்களும் பயன் அடைவார்கள்.

அறுவைச் சிகிச்சைக்கு ஆள் சேர்ப்பவருக்கு இதுவரை ஒரு நபருக்கு 10 ரூபாய் மட்டும் கொடுக்கப்பட்டது. இனிமேல் எல்லாச் செலவும் உள்பட ஒரு நபருக்கு 50 ரூபாய் வீதம் கொடுக்கப்படும்.

[27-7-84 அன்று தலைமைச் செயலர் திரு. கு. சொக்கலிங்கம் இ. ஆ. ப. அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்த கருத்துக்களிலிருந்து]

திருச்சியில் 8-7-1984 அன்று நடந்த குழந்தை பெறா உறுதி மொழி ஏற்பு விழாவில் 1983-84ஆம் ஆண்டில் திருச்சி மாவட்டத்தில் குடும்ப நல விளம்பரப் பணிகளைச் சிறப்பாகச் செய்த மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் திரு மா. விசுவநாதன் அவர்களுக்கு, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ஆர். சௌந்தரராசன் அவர்கள் தங்கப் பதக்கம் வழங்கினார்.

கிழக்குக் கடற்கரை ஓரத்தில் ஓர் ஆராய்ச்சி மையம்

அ. ராமையா

பறங்கிப்பேட்டை கடற்கரைச் சாலையில் கடல் வாழ் உயிரின ஆராய்ச்சி மையம் ஒன்று உள்ளது.

1952ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலுள்ள விலங்கியல் துறைப் பேராசிரியராக இருந்த திரு ஆர். வி.சேஷய்யா என்பவரால் கடல் வாழ் உயிரின ஆராய்ச்சிக் கூடம் தொடங்கப்பட்டது.

1954ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழக வெள்ளி விழாவின்போது இந்த ஆராய்ச்சிக் கூடத்திற்குத் தமிழ்நாடு அரசு ஒரு லட்ச ரூபாய் நன்கொடை வழங்கியுள்ளது. 1963ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் பல்கலைக் கழக மானியக் குழு இந்த ஆராய்ச்சிக் கூடத்தை உயர் நிலை ஆய்வு மையமாக உயர்த்தியது. இம்மையத்திற்குத் தேவையான நிதி உதவியையும் பல்கலைக் கழக மானியக் குழு கொடுத்தது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலுள்ள விலங்கியல் துறையில் இருந்து 1963ஆம் ஆண்டு தனியாகப் பிரிக்கப்பட்டு, கடல் வாழ் உயிரினத்துறை எனப் பெயரிடப்பட்டது.

1970ஆம் ஆண்டு வரை இத்துறையின் இயக்குனராக திரு ஆர். வி.சேஷய்யா இருந்து வந்தார். அதன் பிறகு டாக்டர் ஆர். நடராஜன் இதன் இயக்குநராகப் பொறுப்பேற்றார்.

இந்த ஆராய்ச்சி மையத்தில் 86 மாணவர்கள் எம்.எஸ்.சி. வகுப்பிலும், ஆறு மாணவர்கள் எம்.பி.எல். வகுப்பிலும், 46 மாணவர்கள் பி.ச்.டி. வகுப்பிலும் படிக்கிறார்கள்.

இந்த மையத்தில் நான்கு பேராசிரியர்களும், எட்டு இணை ஆசிரியர்களும், ஆறு துணை ஆசிரியர்களும், அறுபது உதவியாளர்களும் பணியாற்றுகின்றனர்.

இம்மையத்தில் பணிபுரிபவர்களுக்குத் தனிவீடுகளும், இங்குப் படிப்பவர்களுக்குத் தனி விடுதியும் உள்ளன.

1961ஆம் ஆண்டு டாக்டர் தேஷ்முக் பல்கலைக் கழக மானியக் குழுவின் தலைவராக இருந்த போது இம்மையத்திற்குப் போதிய நிதி உதவியைச் செய்தார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் இணை வேந்தர் காலஞ் சென்ற ராஜா சர். முத்தையா செட்டியார் இம்மையத்தை வளர்க்க வேண்டும்என்ற விருப்பத்திற்கு இணங்க இத்துறை வளர்ந்துள்ளது.

இங்கு நடக்கும் ஆராய்ச்சிகள் ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

முதல் பிரிவு

மீன் இறால் மற்றும் 'கிளிஞ்சல் வகைகள், மனிதனுக்கு உணவு மற்றும் பலவகைகளில் உபயோகமாக இருக்கும் மீன் வகைகளின் இனப் பெருக்கம், அவைகளின் உணவு வகைகள், அவைகளை தன்மையும், மற்றும் அதில் வாழும் உயிரினங்களை எவ்வாறு பாதிக்கிறது என அறிதல்.

மூன்றாம் பிரிவு: கடல்நீரைக் கடற்கரை மண்ணில் பாய்ச்சி காய்கறி மற்றும் சோளம், கம்பு வளர்க்க முடியுமா எனக் கண்டறிதல்.

நான்காம் பிரிவு: மீன் வகைகளின் முட்டை குஞ்சுகள், இவைகளை இம்மையத்திலுள்ள சோதனைக் கூடத்திலேயே பொறித்து வளர்த்து, அவைகளை நீர்நிலைகளில் தேக்கி முழு வளர்ச்சி அடைந்த உடன் விற்பனை செய்வதுபற்றி ஆராய்தல். தமிழ்நாடு மீன் வளர்ப்புத் துறையினரால் இங்கு இறால் வளர்ப்புப் பண்ணைகள் நிறுவப்பட்டுள்ளன. இந்தப் பண்ணைகளை சேர்ந்த நீர்த் தேக்கங்களில் இந்த ஆராய்ச்சிகள் மேலும் அதிக அளவில் விரிவுபடுத்தப்படும்

ஐந்தாம் பிரிவு: கடல் சூழ் நிலையில் இருக்கும் நுண்ணுயிர்களைப் பற்றிய ஆராய்ச்சி அவைகளினால் ஏற்படும் நன்மைகள், அவற்றால் ஏற்படும் தீமைகள், நுண்ணுயிரில் இருந்து வெளிப்படும் இரசாயனம் மனித இனத்திற்கு மருந்துகளாகப் பயன்படுத்த முடியுமா என்பதுபற்றி ஆராய்ச்சி நடத்துதல்.

இதைத் தவிர இருபது மீனவர்களுக்கு இறால் வளர்ப்பு பற்றி எட்டு வார காலப் பயிற்சிதரப் படுகிறது. இம்மையத்தைச் சேர்ந்த பேராசிரியர்களும், ஆராய்ச்சி மாணவர்களும் ஒன்று சேர்ந்து மீனவர்களுக்குப் பயிற்சி அளிக்கின்றனர்.

மீனவ சமுதாய வளர்ச்சிப் பணியின்கீழ் இது நடைபெறுகிறது. இப்பயிற்சியின்போது மாதம் ஒன்றுக்கு ரூ. 100 வீதம் அரசு மானியம் அளிக்கிறது.

தற்போது இம்மையத்தில் மீனவர்களுக்கு மூன்றாவது பயிற்சி அளிக்கப்படுகிறது. இம்மையத்திற்குப் பல்கலைக் கழக மானியக் குழு ரூபாய் ஐம்பது இலட்சம் கொடுத்துள்ளது.

1974-ஆம் ஆண்டில் இருந்து ஆண்டுதோறும் ஆகிற நிரந்தரச் செலவுத் தொகையினை மானியமாகத் தமிழக அரசு கொடுத்து வருகிறது.

இம்மையத்திலிருந்து 500 ஆய்வுக் கட்டுரைகளும், 60 டாக்டர் பட்டத்திற்கானஆய்வுத் தொகுப்புகளும் இந்நிலையத்தால் அனுப்பப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

ஐந்து ஆண்டுத் திட்டத்தின் கீழ் இம்மையத்தின் வளர்ச்சித் திட்டங்களுக்குப் பல்கலைக் கழக மானியக்குழு நிதி உதவி வழங்கி வருகிறது.

ஐக்கிய நாடுகளின் உணவு விவசாயக் கழகத்தைச் சேர்ந்த மீன் வளர்ப்பு நிபுணரான டாக்டர் கரீம் என்பவர் இம்மையத்தைப் பார்வையிட்டு, மீன் வளர்ப்புப் பண்ணைகள் அமைப்பதற்கு உரிய ஆலோசனைகளைக் கூறியுள்ளார்.

இந்நிலையத்திற்குப் பல ஆராய்ச்சி வல்லுநர்களும் ரஷ்யா, அமெரிக்கா, ஜெர்மன் ஜப்பான், பிரான்ஸ் ஆகிய நாடுகளிலுள்ள, அறிஞர் பெருமக்கள் பலர் வந்து, சிறப்பு சொற்பொழிவு ஆற்றி விவாதமும் நடத்தி உள்ளனர்.

இதன் மூலம் இம்மையத்தின் ஆய்வுகள் நம்நாட்டிலும், வெளி நாட்டிலும் நன்றாக அறியப்பட்டுள்ளன. இம்மையத்தைப் பற்றி அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு எஸ். வி. சிட்டிபாபு,பறங்கிப் பேட்டை மேல்நிலைப் பள்ளிவிஞ்ஞானக் கூடத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு பேசும்போது, ''பள்ளிகளில் படிக்கும் மாணவர்களை இம்மையத்திற்கு அழைத்து சென்று காண்பித்தால் தான் அவர்களின் அறிவியல் அறிவு வளர வழியேற்படும்'' என்றார்.

இந்த ஆராய்ச்சி மையத்தில் 400-க்கும் மேற்பட்டவர்கள் எம். எஸ். சி. படித்துப் பட்டம் பெற்றுள்ளனர். இங்குள்ள ஆராய்ச்சி மாணவர்கள் பிச்சாவரம் காடுகளிலும், சதுப்பு நிலத்திலும் ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

இம்மையத்தால் பறங்கிப் பேட்டைக்குப் பெருமையும், பலருக்கு வேலைவாய்ப்பும் கிடைத்துள்ளது.

கிழக்குக் கடற்கரை ஓரத்தில் இம்மாதிரியான ஆராய்ச்சி மையம் இதுவரை நிறுவப்படவில்லை. இங்கு நடக்கும் உயர் நிலை ஆய்வுகள் தமிழ்நாட்டிற்கும், நமது நாட்டிற்கும்பெருமை சேர்க்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.



மேதகு ஆளுநர் திரு எஸ்.எல்.குரானா அவர்கள் அண்ணாமலை பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு எஸ். வி. சிட்டிபாபு, கடல்வாழ் உயிரின இயக்குநர் டாக்டர் ஆர் நடராஜன் ஆகியோர் ஆராய்ச்சி நிலையத்தைப் பார்வையிடுகின்றனர்.

கலை இலக்கிய வளர்ச்சிக்கு புதிய மன்றம்

பாவேந்தர் பாரதிதாசன் மக்கள் கலை இலக்கிய மன்றம்' ஜூலைத் திங்கள் 5ஆம் நாளன்று தொடங்கப் பெற்றது.

சென்னை தேவநேயப் பாவாணர் மாவட்ட மத்திய நூலகத்தில் நடைபெற்ற தொடக்கவிழாவிற்கு மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் தலைமை தாங்கினார். மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் தொடக்கி வைத்தார்.

டாக்டர் சு. பாலச்சந்திரன் அனைவரையும் வரவேற்றுப் பேசியபோது மன்றத்தின் தோற்றத்திற்குரிய காரணத்தைத் தெளிவாக்கினார். அவர் குறிப்பிட்டார்:

''தேசத்திற்காகப் பாடிய மக்கள் கவிஞரின் பாடல்களை நகரத்தில் மட்டுமின்றி, கிராமங்களில் பரப்புவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது இந்த மன்றம்.''

மாண்புமிகு கல்வி அமைச்சர் தமது உரையில் தெரிவித்தவாது:

''பாவேந்தரின் பாடல்கள் தமிழ்நாடு முழுவதும் பாடப்பட வேண்டும். ஆயிரக் கணக்கான மேடைகளில் பாடப்பட வேண்டும். அவற்றைக் கேட்பதன் மூலம் மொழி உணர்வு, இன உணர்வு பெற்று, எளிய நிலையில் உள்ள தமிழ்ச் சமுதாயம் வீறுகொண்ட வலிமை கொண்ட சமுதாயமாக மாறவேண்டும்.

''தமிழ்மொழியை உயர்தனிச் செம்மொழி என்கிறோம். மொழி பற்றி, கலாச்சாரம் பற்றி ஒவ்வொரு தமிழ் மகனும் தெரிந்திருக்க வேண்டும். இதுபோன்ற விழாக்கள் எல்லாம் மக்களின் நன்மைக்காகத்தான் நடத்தப் பெறுகின்றன என்பதை நாம் சுட்டிக் காட்ட வேண்டும்.

''பாவேந்தர் நினைத்த காரியங்களைச் செயலாக்குவதற்கு நாம் உதவ வேண்டும். ஒரு கவிஞன், எந்த ராகத்தில் பாடப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் ஒரு பாடலை எழுதினானோ, அதே ராகத்தில்தான் பாடகர் பாடவேண்டும். பாரதிதாசனின் பாடல்கள் மக்கள் மத்தியில் நன்கு பரவ வேண்டும்.''

வாழ்த்துரை வழங்கிய திரு சிலம்பொலி அ.செல்லப்பன் பாவேந்தரின் கவிதைச் சிறப்பை-காட்சி அமைப்பை வியந்து போற்றினார். அவர் தெரிவித்தார்:

''பாவேந்தர் தமது குடும்ப விளக்கில் படுக்கையறைக் காட்சி ஒன்றைக் காட்டுகிறார். அதில் உள்ள தம்பதிகள் நாட்டு நலனுக்காக நாம் ஏதாவது செய்ய வேண்டும் என்ற முடிவுக்கு வருகிறார்கள். இதுதான் பாத்திரப்படைப்பின் சிறப்பு.''

அடுத்து உரையாற்றிய மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் குறிப்பிட்டார்:

''ஒரு மொழி நீண்ட காலம் வாழ்கிறது என்னும்போது அதற்குச் சிறந்த இலக்கியங்கள் வேண்டும் என்பது முக்கியம். அது இயற்றமிழாயினும் சரி, இசைத் தமிழாயினும் சரி, நாடகத் தமிழ் ஆயினும் சரி.

''அச்சுக்கலை வருவதற்கு முன்பே தமிழில் கவிதைகள் தோன்றி வாய்மொழியாகவே இருந்திருக்கின்றன. நினைவில் வைத்துக் கொள்ளும் வகையில் அவை அமைந்திருக்கின்றன. தொல்காப்பியம் - திருக்குறள் - மற்றும் சங்க இலக்கியங்கள் - இராமாயணம் ஆகியவற்றின் செய்யுள்கள் நினைவில் இருப்பதற்கு அவற்றின் கவிதை அமைப்புத்தான் காரணம். முன்தோன்றி மூத்த தமிழ் என்றும், இலக்கியங்கள் உள்ள தமிழ் என்றும் நாம் சொல்வதற்குக் கவிதைகள்தான் சான்றாகத் திகழ்கின்றன. அத்தகைய கவிதைகள் ஆசிரியர்கள் மூலம், வாய்மொழியாகச் சொல்லப்பட்டு, வாய் மொழியாகவே கற்றுக் கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன.

''இப்போது புதுக்கவிதை முளைத்திருக்கிறது. உரை நடையாகவும் இல்லை; கவிதையாகவும் இல்லை. காலத்திற்கேற்ற வாறு உதித்திருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால் நீண்ட காலத்திற்கு நிலைத்து நிற்கிற கவிதையாக இது இருக்க முடியாது.

''மொழியைக் காக்கும் தெய்வங்களாக இருக்கின்ற ஆற்றல் மிக்க கவிஞர்கள் - புலவர்கள் நல்ல கவிதைகளை - பாடல்களைத் தந்து சென்றிருக்கிறார்கள். இந்த 20ஆம் நூற்றாண்டின் சிறந்த கவிஞராக பாவேந்தர் - புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் விளங்குகிறார்.

''புலவர்கள் என்றால் பாடவும் வரும் என்ற காலம் இருந்தது. அவர்கள் எல்லாம் இசையோடு தமிழ் வளர்த்தார்கள். அதனால்தான் தமிழ் இசைத் தமிழ் என்று பெயர் பெற்றது. இசை நடுநாயகமாக அமைக்கப்பட்டது. இன்று தமிழர்களே தமிழிசையைக் கற்றுக் கொண்டு வருகிறார்களா என்பதே கேள்விக் குறியாக இருக்கிறது.

''தமிழாசிரியர்கள் இசை அறிவு பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்ற ஒரு விதியை உருவாக்க முடியுமா என்பதை நாம் பார்க்க வேண்டும். அப்படி இயலாது என்றால் அத்தகையவர்களுக்குச் சம்பளத்தை அதிகப்படுத்தியாவது அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும்.

''பாரதிதாசன் தாமே பாடிக் காண்பிப்பார் - மாறான இசை அமைப்பைக் கேட்டுவிட்டால் கோபம் கொள்வார். சேலத்தில் இன்ப இரவு என்ற ஒரு இசை நிகழ்ச்சியைச் சொந்தச் செலவில் நடத்திக் கடன்பட்டவர் பாரதிதாசன் என்றால் இசை மீது அவருக்கு இருந்த நாட்டம் நமக்குப் புரியும்.

''தமிழை வளர்க்கும் முயற்சியில் ஈடுபடும் நாம் இசையோடு வளர்க்க வேண்டும். உலகில் வேறு எந்த மொழிக்கும் இந்த ஆற்றல் இல்லை, இல்லை, இல்லை.

''பாவேந்தரின் பாடலை மட்டும்தான் பாடுவது என்ற வர்ணாச்சிரம உணர்வு வந்துவிடக் கூடாது. பாவேந்தரின் பாடல்களை மட்டுமின்றி, வள்ளலார் பாடல், பாரதியார் பாடல், திருவாசகம், தேவாரம் ஆகியவையும் இந்த மன்றத்தில் பாடப்பட வேண்டும்.

''அருணகிரிநாதரின் திருப்புகழ் தாள லயத்துடன் உருவாக்கப்பட்டது. இசை அறிவுடன்-தாள ஞானத்துடன் பாடல் எழுதிய அருணகிரியாருக்கு இணையாக வேறொரு புலவர் தமிழில் கிடையாது.

''கருத்தை எடுத்துச் சொல்வதற்குச் சிறப்பான வாயிலாகத் திகழ்கிறது. அதைவிடச் சிறப்பானது நாடகம் ஆகும். இவற்றைக் கொண்டு மொழியை வளர்க்க முனைய வேண்டும்.

சினிமாவில் கூட இலக்கிய நயத்துடன் பாடல் எழுதியவர் கண்ணதாசன். அவருக்குப் பிறகு யார் யாரோ பாடல் எழுதலாம், இப்போதும் கூட எழுதுகிறார்கள். நான் ஒன்று சொல்கிறேன் நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இப்பொழுது வருகின்ற பாடல்கள் எல்லாம், கண்ணதாசனின் பாடல் போல காலத்தை வென்று நிற்கக் கூடியதல்ல

''பழைய வழக்கங்களை மாற்றாது பின்பற்றுவது போல பழைய இசைகளை விடாது கடைப்பிடிக்க வேண்டும் இசை வாணர்கள்.

''இசை எது என்று தெரியாமல் திண்டாடித் தவிக்கின்ற தமிழர்களுக்குத் தெளிவு ஊட்டுவதற்கு இந்த மன்றம் பயன்படும் என்று கருதுகிறேன். தமிழ் வளரட்டும்! தமிழினம் வளரட்டும்! தமிழ்ச் சமுதாயம் வெற்றிக்குரியதாக மாறட்டும்''.

பாவேந்தர் பாரதிதாசன் மக்கள் கலை இலக்கிய மன்றத்துக் கலைஞர்கள் நடத்திட்ட இன்னிசை நிகழ்ச்சி அனைவரையும் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைக்கச் செய்தது.

நிகழ்ச்சித் தொகுப்பு:
தமிழ்ப்பித்தன்.

இந்தியத் தொழில் முதலீட்டுக் கழக ஒதுக்கீடு அதிகரிப்பு

இந்தியத் தொழில் முதலீட்டுக் கழகம் (Industrial Finance Corporation of India) தமிழ்நாட்டுக்கு ஒதுக்குகிற முதலீட்டு உதவியை அதிகரித்துள்ளது. தமிழ்நாடு கார்ப்பரேஷனின் மொத்த முதலீட்டில் 8.8 சதவிகிதம் பெறுகிறது. முதலீடு பெறுவதில் இந்தியாவில் நான்காவது இடத்தைத் தமிழ்நாடு வகிக்கிறது.

தமிழ்நாடு, இந்தியாவில் மக்கள் தொகை அதிகமுள்ள ஏழாவது மாநிலமாகவும் நிலப்பரப்பில் 13வது பெரிய மாநிலமாகவும் இருந்த போதிலும், அதற்குப் போதிய நிதி முதலீடுகளைக் கழகம் வழங்குகிறது. மின் உற்பத்தி தடையின்றி இருந்தால் தமிழ்நாட்டில் தொழில் நடவடிக்கை அதிகரிக்கும். அதன் மூலம் தமிழ்நாடு மேலும் அதிக முதலீடு உதவிகளைப் பெற முடியும்.

1981-82ம் ஆண்டு ஜூன் மாதம் வரை மொத்தம் 189 கோடி ரூபாய் வரை தமிழ்நாட்டுக்கு வழங்கப்பட்டுள்ளது. 1982-[illegible] 25.81 கோடி ரூபாயும், [illegible] 34 திட்டங்களுக்கு [illegible] முதலீடு உதவி அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டுக்கு அளிக்கப்படுகிற உதவியில் 64 சதவிகித உதவி தனியார் நிறுவனங்களுக்கும், பொதுத்துறைக்கு 13சதவிகிதமும், கூட்டுறவுத் தொழில்களுக்கு 23 சதவிகிதமும் போய்ச் சேர்கிறது.

தொழிற்சாலைகளை நவீனப்படுத்துவதற்கு இந்தியத் தொழில் முதலீட்டுக் கழகம் அதிக உதவி அளிக்க முன் வந்துள்ளது. உள்நாட்டில் தொழில் நுட்பம் வளர தேவையான ஆராய்ச்சிகளுக்கு ஊக்கமும் சலுகைகளும் அளிக்க ஏழு வளர்ச்சித் திட்டங்களை இயற்றியுள்ளது. இதற்கு இதுவரை 101.47 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாடு, பாண்டிச்சேரி பகுதிகளைக் கவனிக்கும் தமிழ்நாடு தொழில் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனை அமைப்பு (சிட்காட்) 3.43 இலட்சம் ரூபாய் உதவி பெற்றுள்ளது.

புதிதாகத் தொழில் தொடங்குபவர்களுக்கு வட்டியில்லாக் கடன் உதவியும், நிர்வாகத்துறையின் பயிற்சி அளிக்கும் திட்டங்களுக்கு உதவியும் இக்கழகம் அளித்து வருகிறது. வங்கி மற்றும் அது சார்ந்த துறைகளில் ஆராய்ச்சி நடத்த சென்னைப் பல்கலைக் கழகத்தில் உள்ள வணிகவியல் துறைக்குத் தொழில் முதலீட்டுக் கழகம் உதவுகிறது.

—19-7-84 அன்று, இந்தியத் தொழில் முதலீட்டுக் கழகத்தின் தலைவர் திரு. டி.என். தவார் செய்தியாளர்களிடம் தெரிவித்த கருத்துக்களிலிருந்து.

வளர்ந்து வரும் வண்ணக் கைத்தறி

மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்
திரு. எஸ். திருநாவுக்கரசு

இந்தியப் பிரதமர் அறிவித்துள்ள புதிய 20 அம்சப் பொருளாதாரத் திட்டம் கைத்தறி வளர்ச்சிக்கு வேண்டிய வழிவகைகளுக்கும் தொழில்நுட்ப மேம்பாட்டிற்கும் வகை செய்துள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களின் தலைமையில் அமைந்துள்ள நம் தமிழக அரசும் தொடர்ந்து கைத்தறித் தொழிலுக்கு முன்னுரிமையை அளித்து வருகின்றது. கைத்தறித் தொழிலுக்காக ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மாநில அரசு ரூ.27.82 கோடி செலவிட்டது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இச்செலவு ரூ. 84.58 கோடி அளவிற்கு உயர்ந்துள்ளது. மேலும் மாநில அரசு 'மாஸ்டர் வீவர்ஸ்' பிடியிலுள்ள ஏழை நெசவாளர்களை விடுவித்து அவர்களைக் கூட்டுறவுத் துறையின் கீழ் கொண்டுவரத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள 5.56 இலட்சம் கைத்தறிகளில் 2.40 இலட்சம் கைத்தறிகள் 1980ல் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டு வரப்பட்டு செயல்பட்டு வந்தது. இது 41 சதவிகிதம் ஆகும். தேசிய குறியீடான 60 சதவிகிதத்துக்குப் பதில் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள் 67சதவிகிதம் அளவிற்குக் கைத்தறிகளைக் கூட்டுறவின்கீழ் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது.

1979-80ஆம் ஆண்டில் இருந்த 1052 ஆரம்ப நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 31.3.1984ல் 1556 ஆக உயர்ந்துள்ளது. தமிழக முதல்வராக மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்பேற்ற பின், மொத்தம் 504 புதிய நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இதில் சொந்தத்தில் தறியில்லாத நெசவாளர்களுக்கு 113 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் அடங்கும்.

மூலப்பொருட்கள் வழங்குதல்:

நமது மாநிலத்தில் உள்ள 12 கூட்டுறவு நூற்பாலைகள், கூட்டுறவு அமைப்பின்கீழ் உள்ள நெசவாளர்களுக்குத் தேவைப்படும் நூலினை வழங்கத் தேவையான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. அதிக அளவில் கைத்தறிகளைக் கூட்டுறவு அமைப்பின்கீழ் கடந்த ஐந்தாண்டுகளில் கொண்டு வந்ததால் ஏற்பட்ட அதிகப்படியான நூல் தேவையைப் பூர்த்தி செய்தது. தற்போது இயங்கி வரும் நூற்பாலைகளில் 5 கூட்டுறவு நூற்பாலைகளை விரிவாக்கவும், புதிய நூற்பாலைகளை ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி சேலம், வேலூர், தென்னார்க்காடு, பேட்டை மற்றும் பெரியார் மாவட்ட நூற்பாலைகள் ஒவ்வொன்றின் திறனையும் 12,500 கதிர்கள் அதிகமாக்க விரிவாக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் 5 புதிய கூட்டுறவு நூற்பாலைகள் புதுக்கோட்டை (அறந்தாங்கி), தருமபுரி (ஊத்தங்கரை), மதுரை (தேனி), திருநெல்வேலி (எட்டயபுரம்) மற்றும் இராமநாதபுரம் (கமுதி) ஆகிய மாவட்டங்களில் நிறுவ ரூ.37.53 கோடி மூலதனச் செலவில் திட்டமிடப்பட்டு ஆரம்ப வேலைகள் செயல்படுத்தப்பட்டுவருகின்றன. புதிய ஆலைகளை அமைப்பதால் 2,800 பேர்களுக்கும், ஏற்கெனவே இயங்கி வரும் ஆலைகளை விரிவாக்கத்திட்டம் செயல்படுத்தியதனால் கூடுதலாக 1960 பேருக்கும் வேலை வாய்ப்புக்கு வழிவகை செய்கிறது.

1980-ஆம் ஆண்டு ரூ.70.00 கோடியாக இருந்த உற்பத்தி மற்றும் விற்பனைக்கான இந்திய ரிசர்வ் வங்கியின் நிதியுதவி (தற்பொழுது தேசிய வேளாண்மை மற்றும் அரசு வளர்ச்சி வங்கி) ரூ. 103.58 கோடி அளவில் 1983-84ல் உயர்ந்துள்ளது. 1984-85 ஆண்டிற்காக ரூ.104.70 கோடி அளவிற்கு உயர்த்தும் உச்ச இலக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவ்வுதவி சலுகை வட்டி வீதத்தில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், கோ-ஆப்டெக்சிற்கும் நடைமுறை மூலதனமாக வழங்கப்பட்டுள்ளது.

கைத்தறியின் புதிய தயாரிப்புகளையும், புதிய வடிவமைப்புகளையும் உருவாக்குவதற்கும் ஏற்ற வகையில் கோ-ஆப்டெக்ஸ் இதுவரை மதுரை, திருச்சி, சேலம், கோவை மற்றும் கடையநல்லூர் ஆகிய இடங்களில் 5 வடிவமைப்புப் பணி நிலையங்களை அமைத்துள்ளது. இதற்காக அரசு ரூ.17.50 இலட்சம் நிதியுதவி வழங்கியுள்ளது. மேற்கண்ட நிலையங்கள் ஆண்டுக்கு 1,100 புதிய வடிவமைப்புகளை உருவாக்கி அவற்றை ஆரம்ப நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கி வருகின்றன. மேற்படி வடிவமைப்புகள் மூலம் ஆண்டொன்றுகு ரூ. 8 கோடி அளவிற்கு உற்பத்தி பெருகி உள்ளது.



விற்பனை வசதி:

ஆரம்பக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி செய்யும் துணிகளை விற்பனை செய்ய 'கோ-ஆப்டெக்ஸ்' பெருமளவில் உதவி செய்து வருகின்றது. ஆரம்ப நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நிலுவைத் தொகையைக் கொடுக்கவும், மற்றும் துணிநூல் கொள்முதல் செய்யவும் 1982-83 நிதியாண்டில் ரூ. 11.00 கோடி அளவிற்கு வழிவகைக் கடனாக அரசு 'கோ.ர-ஆப்டெக்ஸ்'சிற்கு அளித்துள்ளது. 1979-80ஆம் ஆண்டில் ரூ. 29.00 கோடியாக இருந்த விற்பனை 1983-84ல் ரூ. 88.85 கோடியாக உயர்ந்துள்ளது. 1984-85ஆம் ஆண்டிற்கான விற்பனை இலக்கு ரூ. 100-கோடியாக நிர்ணயிக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திருத்தியமைக்கப்பட்ட நெசவாளர் பயிற்சித் திட்டத்தின் கீழ் 1979-80ல் இருந்து 1983-84 முடிய 39,972 நெசவாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு உள்ளது. 1984-85ஆம் நிதியாண்டில் ரூ. 3.60 இலட்சம் இத்திட்டத்திற்கு கெசச் செலவிட்டு 14,400 நெசவாளர் பயிற்சி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கைத்தறிகளை நவீனப்படுத்தும் திட்டத்தி கீழ் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல தரமான கைத்தறித் துணிகளை உற்பத்தி செய்ய ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டம் 1980-81 முதல் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் நவீன தொழில் நுட்பங்களைக் கொண்டு தரமான துணிகளை உற்பத்தி செய்து வருகின்றது.

1980-81 முதல் 1983 வரை ரூ. 70 இலட்சம் செலவிடப்பட்டு 21047 தறிகள் நவீனப்படுத்தப்பட்டுள்ளன. இத்தொகை மத்திய மாநில அரசுகள் சம பங்காக நிதியுதவி அளித்துள்ளன. 1984-85ஆம் நிதியாண்டிற்கு ரூ.21.00 இலட்சம் இத்திட்டத்தின்கீழ் 6000 தறிகளை நவீனப்படுத்த நிதியுதவி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

நலத்திட்டங்கள்:

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்குத் தமிழ்நாடு அரசு ஆயுள் காப்பீட்டுத் திட்டத்துடன் கூடிய சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகின்றது. 1977-78ம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்ட நெசவாளர்களின் எண்ணிக்கை 60,500. இது 31.3.1984ல் 88,500 ஆக உயர்ந்துள்ளது.

ஏழைகள் மீது இரக்கம் கொண்ட மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் விருப்பப்படி தமிழ்நாடு அரசு 1.3.80 லிருந்து ஆயுள் காப்பீட்டுத் தொகையை ரூ. 500 லிருந்து ரூ. 3,000ஆக உயர்த்தி உள்ளது. இத்திட்டத்தின்படி சந்தாதாரர் இறந்துவிட்டால் அவருடைய வாரிசுதாரருக்குக் காப்பீட்டுத் தொகையாக ரூ. 3,000 ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடம் இருந்து பெற்றுத் தரப்படுகிறது. இது தவிர அவர்களுடைய கணக்கில் சேர்ந்த தொகை 7 சதவித வட்டியுடன் வழங்கப்படும்.

நெசவாளர் வீட்டு வசதித் திட்டம்:

தமிழ்நாடு அரசு நெசவாளர் வீட்டு வசதித்திட்டத்தைப் புதுப்பித்து வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவியுடன் மாநில அரசு மானியத் தொகையுடனும், கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள நெசவாளர் உறுப்பினர்களுக்காக 1979-80ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் 5,000 வீடுகள் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளன. அதில் 3396 வீடுகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு இதுவரை 2075 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. 1321 வீடுகள் கட்டி முடிக்க திட்டமிடப்பட்டு பல்வேறு கட்டுமான நிலையிலுள்ளன.

1.7.1982 முதல் ''ஹட்கோ'' நிறுவனம் ஒரு வீட்டிற்கு ரூ.8000 லிருந்து ரூ.12,000 கடனில் ''ஹட்கோ'' நிறுவனம் ஒரு வீட்டிற்கு ரூ. 9,000 வரை கடனாக கொடுக்கிறது. மாநில அரசு உதவித் தொகையாக ரூ. 1,000 ஒரு வீட்டிற்குக் கொடுத்து வருகிறது. மீதி ரூ. 1300 பயனடைவோர் செலுத்த வேண்டும்.

சற்றே சிந்தியுங்கள். ஓய்வும், பொழுதுபோக்கும் உங்கள் மனைவிக்கும் தேவை.

உங்கள் வாழ்க்கைத் துணையைக் கேளுங்கள். அவர் வாழ்க்கைத் துணைவரைப் பற்றி உங்கள் மனைவிக்கும் கூட அன்றாட அலலல்களிலிருந்து விடுதலையே இல்லாமல் இருந்தால் அவர் வாழ்க்கை சலிப்படையக் கூடும். இதைத் தவிர்க்க, உங்கள் மனைவியின் பொழுது போக்கிற்காக ஒரு டிவியை வாங்குங்களேன். தினமும் டிவியில் கண்டுகளிக்க சினிமா, ஒலியும் ஒளியும், நாடகம் போன்ற எத்தனையோ சுவாரஸ்யமான நிகழ்ச்சிகள். உங்கள் அன்பு மனைவிக்கு இதைவிட சிறந்த அன்பளிப்பு வேறு ஏதேனும் உண்டோ? இவ்விடம் சந்தேகம் ஏன்? வேண்டுமானால் டிவி வைத்திருக்கும் உங்கள் பக்கத்து வீட்டுக்காரரைக் கேளுங்களேன் ஒருவேளை டிவியை இன்றே வாங்க இன்னும் பல முக்கிய காரணங்களை உங்களால் அறிந்து கொள்ளமுடியும்

இப்போது, நீங்கள் எந்த டிவியையும் வாங்கும் முன் அது நம்பகமானதா என்று உறுதிசெய்து கொள்ளுங்கள். அதில் தெள்ளத்தெளிவான படத்தோற்றத்திற்கு நீங்கள் தனி முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். செய்தி வாசிப்பவரின் கண் இமைகள் கூட அதில் துல்லியமாகத் தெரிய வேண்டும். அதாவது சாலிடெரில் தெரிவதுபோல்! அனுகிடுவீர் சாலிடெர் வைத்திருப்பவரை. அறிந்திடுவீர் அதன் தம் சிறப்பம்சங்களை. அப்போது தெரியும் உங்களுக்கு எதனால் சாலிடெரே அனைவராலும் விரும்பப் படும் டிவி என்று! சாலிடெர் வானம் மாடெல்களிலும் கூட டீலக்ஸ் அம்சங்களான விசிஆர் (VCR) மற்றும் பிக்அப் கனெக்ஷன்கள் அமைந்துள்ளன.



விற்பனைக்கு விடுப்பேர் :
டிஜிவிஷன் எலக்ட்ரானிக்ஸ் (பி) லிட்.
44, சி.பி. ராமசாமி ஐயர் சாலை
அபிராமபுரம், சென்னை 600 018

சாலிடெர்

-தொல்லையில்லாத் தொலைக்காட்சி

தமிழ்நாட்டில் எரிசக்தி

எஸ்.எஸ்.விஜயராகவன் B.A.,
இணைச் செயலாளர்,
திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை,
தமிழ்நாடு அரசு.

"எங்கெங்கு காணினும் சக்தியடா'' என்று பாவேந்தர் பாரதிதாசன் பொழிந்த கவிப் பெருமழையில் முதல்துளி. எங்கும் எதிலும், இயங்குகிற ஒவ்வொரு அணுவிலும் சக்தி பயன்படுத்தப் படுகிறது. அடுப்படியிலிருந்து தொடங்கி விவசாயம், சிறு தொழில்கள், பெரிய பெரிய ஆலைகள் வரை அனைத்துத் துறைகளுக்கும் சக்தி தேவைப் படுகிறது.

நாகரிகம் வளர வளர உற்பத்தி முறைகள் பெருகப் பெருகச் சக்தியின் தேவையும் அதிகரித்து வருகிறது. புயல் வேகத்தில் பெருகி வரும் சக்தி தேவைகளைப் பூர்த்தி செய்ய புழக்கத்தில் உள்ள நிலக்கரி, பெட்ரோல், டீசல், எண்ணெய் வகைகள், நீர், அனல் மின்சாரம் ஆகிய சக்தி மூலங்களை மட்டும் நம்பியிருப்பது கூடாது என்பது நிரூபணமாகி வருகிறது. மேலும் இயற்கை எண்ணெய் மூலங் களும் மின்சக்தி மூலங்களும் வெகுவாக வளங்குன்றி வரு கின்றன. இந்தச் சூழ்நிலையில் நம் முன்னே நிற்கும் எரிசக்தி தேவைகளை எவ்வாறு பூர்த்தி செய்யப் போகிறோம்?

அனைத்து வல்லமையும் பொருந்திய அறிவியல் வளர்ச்சி இக்கேள்விக் குறியை நிமிர்த்து கிறது. ஆம்! எரிசக்தி பிரச்னையைத் தீர்க்க ஓர் இரு முனை யுக்தி கண்டுபிடிக்கப்பட் டுள்ளது. ஒன்று, ஏற்கெனவே பயன்படுத்தப்பட்டு வரும் சக்தியை எவ்வாறு சேமிப்பது. அதாவது, குறைந்த எரிசக்தியைச் சிக்கனமாகப் பயன்படுத்தி அதிகப் பலன் பெற வழிவகை களைக் கண்டறிதல், மற்றொன்று காற்று வீசை, சூரிய சக்தி ஆகிய வற்றைப் பயன்படுத்தி இயங் கும் சாதனங்களை அமைத்து அவ்வகைச் சக்தியைப் பெருக்கு வது; சாணம், மனிதக் கழிவு மற்றும் பிற கழிவுகளிலிருந்து எரிசக்தியைப் பெருக்குவது; இவ் விருமுனை யுக்தியின் மூலம் நடப் பாண்டிலும் ஏழாவது திட்ட காலத்திலும் நம்முடைய எரி சக்தி பிரச்னைகளைத் தீர்க்க பெருத்த வாய்ப்புள்ளது.

சக்தி சேமிப்பு:

புழக்கத்திலுள்ள சக்தி மூலங் களைத் திறம்படக் கையாள் வதன் மூலம் பெருவாரியாகச் சக்தி சேமிக்கப்படுகிறது. அடுப் பெரிக்கப் பயன்படும் விறகு போன்ற எரி பொருட்களைச் சேமிக்க ஆற்றல் மிக்க அடுப்பு வகைகள் அமைக்கப்படுகின்றன.

'பிரியாக்னி' போன்ற அடுப் பைப் பயன்படுத்தும்போது கணிசமான அளவு எரிபொருள் சேமிக்கப்படுகிறது. விவசாயத் துறையில் நீர் இறைக்கும் எந்தி ரங்களில் ஏற்கெனவே பயன்படுத் தப்பட்டு வரும் கீழ்த் திறப்பு (புட் வால்வு) மாற்றியமைக்கப் படும்போது எந்திரத்தின் இறைக் கும் திறன் கூடுதலாவதுடன் மின்சக்தியும் 15-20 சதவீதம் மிச்சப்படுகிறது.

10 வட்சம் நீரிறைக்கும் எந் திரங்கள் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டில், அனைத்து எந்தி ரங்களிலும் வலைமையிக்க இந்தப் புதுவகைக் கீழ்த் திறப்பை அமைக்கும் போது ஒரு எந்தி ரத்துக்கு 240 யூனிட்டுகள் என்ற கணக்கில் கோடிக் கணக்கான யூனிட் மின்சாரம் ஆண்டுதோ றும் சேமிக்கப்படும். எனவே, புதுவகை கீழ்த் திறப்பை விவ சாய நீர் இறைக்கும் எந்திரங் களில் பொருத்த முயற்சி எடுக் கப்பட்டு வருகிறது.

ஏற்கெனவே, 1983-84-ஆம் ஆண்டில் சோதனை முறை யில் செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்குளத்தூர் ஒன்றியத் தில் 200 பம்பு செட்டுகளிலும், கோவை மாவட்டம் சர்க்கார் சாமக்குளம் ஒன்றியத்தில் 200 பம்பு செட்டுகளிலும் இப்புது வகைப் புட்வால்வை அமைக்க அரசு மானியம் வழங்கியுள்ளது. மேலும், விவசாயத் துறையில் பல்வேறு பணிகளையும் விரை வாகவும் திறம்படவும் செய்யும் வகையில் உழுதல், பாத்திகட்டு தல், கதிரறுத்தல், சுமைதூக்கல் ஆகிய பல்வேறு பணிகளுக்கும் பயன்படக்கூடிய எருதுகள் இழுக்கும் டிராக்டரான 'ட்ராபி கல்டர்' மானிய விலையில் முற் போக்கு விவசாயிகளுக்கு அளிக்கவும் அரசு ஒப்புதல் அளித் துள்ளது. இதன் மூலம் மனித சக்தியும் கால்நடை ஆற்றலும் கணிசமாகச் சேமிக்கப்படும் என் பது உறுதி.

ஆலைகளிலும் தொழிற்சாலை களிலும் பயன்படுத்தப்படும் சக்தியைச் சேமிக்க வழிவகைகள் ஆய்வு செய்யப்படுகின்றன. "தேசிய உற்பத்தித் திறன் வாரி யம்'' ''இந்தியப் பொறியியல் தொழிற்சாலைகளின் குழுமம்'' போன்ற நிறுவனங்களுடன் கலந் தாலோசித்து 100 பெரிய தொழில் நிறுவனங்களில் ''எரி சக்தி தணிக்கை'' என்றொரு திட்டத்தை மேற்கொள்ள உத் தேசிக்கப்பட்டு மின்வாரியத் துடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருகிறது.

ஆலைகளிலும், தொழிற் சாலைகளிலும் முக்கிய பொருள் உற்பத்தியிடனே அவ் வாலைகளுக்குத் தேவையான சக்தியையும் உற்பத்தி செய்து கொள்ளும் திட்டம் (Cogeneration of Power) ஆய்வு செய்யப்பட்டு இரண்டு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் இத்திட்டம் நடப் பாண்டில் செயல்படுத்தப்படும்.

புதிய சக்தி மூலங்கள்:

சூரிய சக்தி மூலம் செயல்படும் சமையல் அடுப்புகள் பிரபலப்

படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வடுப்புகளை மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தும் வகையில் செய்முறைத் திட்டங்கள் மூலம் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் எடுத்துச் செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசின் உதவியுடன், மாநில அரசு கணிசமான தொகையை இதற்காக ஒதுக்கியுள்ளது.

சூரிய சக்தி மூலம் கொதி நீர்க் கலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தைச் சேர்ந்த பால்வள நிறுவனங்களிலும், பால் பதனிடும் நிலையங்களிலும், தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி ஆலையில் சாயம் ஏற்றும் பிரிவுகளிலும், மாணவ, மாணவியர் விடுதிகளிலும் நிறுவப்பட்டு வருகிறது. மேலும், இந்தச் சாதனங்களை மருத்துவ விடுதிகளிலும் ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும், மகப்பேறு மருத்துவ மனைகளிலும் நிறுவ ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

சூரிய சக்தியைப் பயன்படுத்தி தொலைதூரத்திலுள்ள மலைப் பகுதிகளிலுள்ள கிராமங்களுக்கு மின்சார வசதி செய்யப்பட்டுள்ளது. கடந்த 1983-84 நிதியாண்டில் கல்ராயன் மலையைச் சேர்ந்த 5 கிராமங்களில் சூரிய சக்தியை மின் சக்தியாக மாற்றி மின்வசதி செய்து தர, போட்டோ வோல்டேக் அமைவுகள் நிறுவப்பட்டு உள்ளன. அவை மிகவும் சிறப்பாகச் செயல்படுகின்றன. இதே முறையில் மேலும் 20 கிராங்களுக்கு மின்வசதி செய்து தர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. போட்டோ வோல்டேக் அமைவுகள் மூலம் கிராமிய மின்வசதி செய்யும்முறை இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் முதன் முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் நீர் இறைக்கும் காற்றாலைகளை நிறுவ மத்திய அரசு கணிசமான அளவு மானியம் வழங்குகிறது. மாற்று எரிசக்தி மூலங்களுக்கான குழு தமிழ்நாட்டில் 30 காற்றாலைகளை நீர்ப்பாசனத்திற்காகச் செயல்விளக்க முறையில் நிறுவ உதவியுள்ளது. இந்தக் காற்றாலைகளைப் பெருவாரியாக விவசாயிகள் மத்தியில் எடுத்துச் செல்லத் தகுந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

எரிசாண வாயு தயாரிக்கும் திட்டம் வெகுவாக மக்கள் மத்தியில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. எரிசாண வாயு தயாரிக்கும் எந்திரத்தை நிறுவத் தேவையான கடனுதவியும் மானியமும் வழங்கப்படுகின்றன. தேசிய எரிசாண வாயு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 1983-84ஆம் ஆண்டுக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 5000-ஐ எளிதில் எட்டிவிட முடிந்தது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறைந்தது 35,000 எரிசாண வாயு அமைவுகளை நிறுவிடத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. மனிதக் கழிவு மற்றும் பிற கழிவுப் பொருட்களிலிருந்து எரிசக்தி உற்பத்தி செய்யும் சாத்தியக்கூறுகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

சக்தி சேமிப்புச் சாதனங்களையும், புதிய வகை சக்தி மூலங்களை, சூரிய சக்தி, காற்று விசை போன்றவற்றைக் கொண்டு இயங்கும் சாதனங்களைத் தயாரிப்பவர்களுக்கும் நிறுவுவோருக்கும் மத்திய அரசு பல சலுகைகளை வழங்கியுள்ளது. இந்தச் சலுகைகள் பற்றிய விளக்கங்கள் அடங்கிய சிறு தொகுப்பு ஒன்று அமைக்க நிறுவனங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. இதில் ஆர்வம் காட்டும் நிறுவனங்களுக்குத் தேவையான கடன் வசதி, அத்தகைய கடன்களை வழங்கும் நிதி நிறுவனங்களுக்குப் போதுமான மறுநிதி வசதியும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களில் எரிசக்தி தேவைகளைக் கண்டறிந்து அவற்றைப் பூர்த்தி செய்யும் வகையில் ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித் திட்டம் என்றொரு திட்டம் மத்திய திட்டக் குழுவால் பரிந்துரை செய்யப்பட்டு, அத்திட்டம் சோதனை ரீதியாகத் தமிழ்நாட்டில் இரண்டு ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்படுகிறது. செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள காட்டாங்குளத்தூரும், கோவை மாவட்டத்திலுள்ள சர்க்கார் சாமக்குளமும் இதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இந்த ஒன்றியங்களில் முதல் கட்டமாக, மக்களின் எரிசக்தித்தேவைகள் கணக்கெடுக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பூர்த்திசெய்யும் முகத்தான் சூரிய அடுப்புகளைப் பரப்புதல், புகையற்ற அடுப்புகளை அமைத்துத் தருதல் 'பிரியாக்கினி' என்ற ஆற்றல் மிக்க அடுப்புகளை வழங்குதல், நீர் இறைக்கும் காற்றாலைகள் நிறுவுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நடப்பு நிதி ஆண்டில் மேலும் 5 ஒன்றியங்களில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட இருக்கிறது. இவ்வாறாக தமிழ் நாட்டில் அனைத்து ஒன்றியங்களிலும் இத்திட்டம் விரிவாக்கப்படும்போது மக்களின் எரிசக்தி தேவை முழுமையாகப் பூர்த்தி செய்யப்படும். மேலும் ஒன்றியங்களின் தேவைகளைக் கவனித்துக் கொள்ளும் வகையில் 'எரிசக்தி மையங்கள்' ஒவ்வொரு ஒன்றியத்திலும் நிறுவ முயற்சி மேற்கொள்ளப்படும்.

ஆராய்ச்சியும் மேம்படுத்தலும்:

புதுவகை சக்தி மூலங்களைப் போதுமான அளவு பயன்படுத்துவதற்கேற்ற சாதனங்களை அமைப்பதில் தொடர்ந்து முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. இதில் இந்தியத் தொழில் நுட்ப நிறுவனம் (I.I.T.) அண்ணா பல்கலைக் கழகம், முருகப்பா பாலிடெக்னிக், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஆகிய தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களும் தொழிற்சாலைகளின் ஒருங்கிணைந்த சங்கங்களும் மிகுந்த முன் முயற்சியுடன் பல ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றன. சூரிய சக்தியை ஆக்கபூர்வமான பணிகளுக்குப் பயன்படுத்தும் முயற்சிக்குக் காற்றாலைகளை நிறுவி மின்சாரம் தயாரிக்கும் முயற்சிக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது.

இவ்வாறாகப் பெருகி வரும் எரிசக்தி தேவையைப் பூர்த்தி செய்ய அரசு தகுந்த தீர்க்க தரிசனத்துடன் செயல்பட்டு வருகிறது.

'ப்ரியாக்னி' அடுப்பு



ஏழைகளின் குடிதண்ணீர்ப் பிரச்சினையைப் போக்கிட..

வட ஆர்க்காடு மாவட்டம் வந்தவாசி அருகே தெள்ளார் மேல்நிலைப் பள்ளித் திடலில் கூட்டுக் குடிநீர்த் திட்ட அடிக்கல் நாட்டு விழா 27.7.84 அன்று நடைபெற்றது.

விழாவிற்கு வந்திருந்தோரை குடிநீர் வடிகால் வாரியத் தலைமைப் பொறியாளர் திரு அ. பொன்னம்பலம் வரவேற்றார்.

விழாவிற்குத் தலைமை வகித்து குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் திரு ஏ.எம். இரகுநாதன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

வடஆர்க்காடு மாவட்டத்தில் குடிநீர்த் திட்டச் செலவிற்காக ரூ.160 இலட்சம் உலக பாங்க் உதவியுடன் செயல்படுத்தப்பட உள்ளது. எல்லாச் சட்டமன்றத் தொகுதிகளிலும் யார், யார் என்று பாராமல் செயல்பட்டு வருகின்றோம்.

வட ஆர்க்காடு மாவட்டம் வந்தவாசியை அடுத்த தேசூர் தெள்ளார் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டிப் பேருரையாற்றிப் பேசுகையில், மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் பேசியதாவது;

''இந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டுவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். நாங்கள் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வைக்கும் விழாவாக இது இருப்பது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். இந்தக் குடிநீர்த் திட்ட நிகழ்ச்சியைத் தடுக்கச் சிலர் முயற்சித்தனர். நிகழ்ச்சி இன்று நடைபெறுமா என்ற நிலை இருந்தது.

''குடிநீர்த் தண்ணீர் கொடுப்பதைக் கூடவா தடுக்க முயற்சிப்பது? அப்படிப்பட்ட முயற்சியில் ஈடுபட்டார்கள், முந்தைய ஆட்சியில் தமிழ்நாட்டில் அமைக்கப்பட்ட குடிநீர்த் தொட்டிகள் 1,406 தான். ஆனால் 1977ஆம் ஆண்டு வாக்கில் ஆட்சிக்கு வந்த பிறகு நாங்கள் அமைத்தது 5,037 குடிநீர்த் தொட்டிகள். வட ஆர்க்காடு மாவட்டத்தில் மட்டும் எடுத்துக் கொண்டால் முந்தைய ஆட்சியினர் அமைத்த குடிநீர்த் திட்டப் பணிகள் 66 மட்டும்தான், ஆனால் எங்களது ஆட்சியில் அமைக்கப்பட்டது 249. இப்படி குடிநீர்த் திட்டப்பணிகளை அமைத்த எங்களைப் பார்த்து ஒன்றுமே செய்யவில்லை என்கிறார்கள்.

''நீண்ட தொலைநோக்கோடு வருங்கால நிலைமையை எண்ணிப் பார்த்துத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம். வயது வந்த ஒவ்வொருவரும் தொழிற்கல்வியைக் கற்றாக வேண்டும். இந்த வகையில்தான் தொழில் கல்வித் திட்டத்தைக் கொண்டு வருகிறோம். அடுத்த ஆண்டு சட்டமன்றத்தில் வைத்து ஏப்ரல் முதல் தொழிற் கல்வித் திட்டம் குழந்தைகளுக்கு (4 வயது, 5 வயது) விளையாட்டுப் போல சொல்லித்தரத் திட்டம் கொண்டு வரப்படும். அண்மையில் நடந்த தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் தொழில் கல்வி பற்றி விளக்கிப் பேசினேன். பிரதமர் இந்திரா காந்தியும் இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தார். மற்ற மாநிலங்களும் பரிசீலிக்க வேண்டும் என்று பிரதமர் கேட்டுக் கொண்டார். தொழிற் கல்வி பயின்றால்தான் நாடு முன்னேறும்.

''சத்துணவுத் திட்டம் செப்டம்பர் 15ல் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் முதல் 15 வயது வரை படிக்கும் மாணவர்களுக்கும் விரிவாக்கப்படும். இதன் மூலம் 30 ஆயிரம் பேர்கட்குப் புதிதாக வேலைவாய்ப்பு கிடைக்கும். கூடுதலாக அரசுக்கு ரூ.40 கோடி செலவாகும். நான் உயிரோடு இருக்கும்வரை இத்திட்டத்தை நிறைவேற்றியே தீருவேன்.

''இன்று நிறைவேற்றப்படும் திட்டத்தில் 38 கிலோ மீட்டர்

செய்யாற்றை வென்றான் கிராமத்தில்...!

* இந்த ஆண்டு வட ஆர்க்காடு மாவட்டத்தில் 1.25 இலட்சம் டன் நெல் கொள்முதல் செய்து அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது.
* **36** ஊராட்சி ஒன்றியங்களில் தன்னிறைவுத் திட்டப் பணிகளுக்காக ரூ. 15.84 கோடி செலவிடப்பட்டுள்ளது.
* **2,632** ஆழ் துளைக் கிணறுகள் ஒரே ஆண்டில் போடப்பட்டுள்ளது.

அளக்காவூர், பெரணமல்லூர் மற்றும் தென்னார் ஒன்றியங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லாமல் நரம்புச் சிலந்தி என்ற நோய் மூலம் பாதிக்கப்பட்டும், சென்ற ஆண்டில் கடும் வறட்சி ஏற்பட்டு குடிக்க நீரின்றித் தவித்த 88 கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காக ரூ 257 கோடி மதிப்பீட்டில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் வகுக்கப்பட்டது.

நிலத்தடி நீர், தேவைக்கேற்ப கிடைக்காத தாலும், வேறு நல்ல நீர் ஆதாரம் அருகில் இல்லாததாலும் செய்யாற்றைவென்றான் கிராமத்தினருகில், செய்யாறு நதியில் [illegible] ஊற்றுக் கிணறுகள் அமைக்கப்பட்டு, 90 குதிரை சக்தியுள்ள நீரேற்றிகள் மூலம் தேசூர்-தென்னார் சாலை வழியாக 38 கி.மீ தூரத்திற்குப் பதிக்கப் படவுள்ள குழாய் மூலம், 10,000 லிட்டர் முதல் 15 இலட்சம் லிட்டர் வரை கொள்ளளவுள்ள 41 மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டி, இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினால் பயன்படும் 88 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கப்படும்.

இந்த கிராமங்களின் தற்போதைய மக்கட் தொகை 56,000. 2016 ஆண்டில் எதிர்பார்க்கப் படும் மக்கட்தொகையான 76,000 பேருக்கு தலைக்கு நாளொன்றுக்கு 40 லிட்டர் வீதம் பயன்தரும் வகையில் திட்டம் படவுள்ளது.

இந்த கிராமங்களுக்கு அதிக அளவில் கிடைக்கும் குடிநீர் நாளொன்றுக்கு 26.73 இலட்சம் லிட்டர் ஆகும். இந்த கிராமங்களில் இ.பி. 2016ல் எதிர்பார்க்கப்படும் மக்கட் தொகைக்கேற்ப மேற்சொன்ன மேல் நிலைத் தொட்டிகளும் அதற்கான பகிர்மானக் குழாய்களும், பொதுக்குழாய்களும் அமைக்கப்பட்டு குடிநீர் விநியோகிக்கப்படும்.

தேசூர் பேரூராட்சிக்குத் தேவையான உச்சகட்டக் குடிநீர் நாளொன்றுக்கு 6.66 இலட்சம் லிட்டர் வழங்குவதற்கு இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை முடிப்பதற்கு [illegible] இலட்சமும், ஆண்டு தோறும் [illegible] ரூ 3.5 இலட்சமும் செலவாகும். இத்திட்டத்தினால் செலவாகும் தொகை [illegible] ரூ. 442 ஆகும்.

இத்திட்டம் உடனடியாகக் கையெடுத்துக்கொள்ளப்பட்டு இரண்டு ஆண்டுக் காலத்திற்குள் முடித்து [illegible] கொண்டுவரப்படும்.

தூரம் தண்ணீர் கொண்டு வந்து கொடுக்கிறோம் என்றால் இன்றைய பிரச்சினைகளை மட்டும் சமாளிப்பதற்கு அல்ல. குறைந்தது 15 அல்லது 20 ஆண்டுகளுக்குப் பிறகு உள்ள நிலமையை யோசித்துத் திட்டங்கள் தீட்டப் படுகின்றன.

''ஊட்டி ஏரியில் தண்ணீர் இருந்தும் ஊட்டி நகரில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டது. அதற்குக் காரணம் அங்குபோடப் பட்டுள்ள தண்ணீர்க் குழாய்கள் சிறியவை. 50 ஆண்டுகளுக்கு முன்னர் போடப்பட்டவை. அதில் வரும் தண்ணீர் போதுமானதாக இல்லை. இந்தக் குறையைப் போக்க இந்த அரசுதான் நடவடிக்கை எடுத்தது.

"கர்நாடக மாநிலத்தில் ஏழை கட்கு இலவசமாக மின்சாரம் வழங்கப்படுகின்றது. அதேபோல் தமிழ்நாட்டில் உள்ள ஏழை விவசாயிகட்கு மின்சாரம் வழங்க தீவிரமாக ஆலோசித்து வருகிறோம். செப்டம்பர் 15ல் அண்ணா பிறந்த நாள் அன்று அதற்கான அறிவிப்பை வெளியிடுவோம்.

''தமிழ்நாட்டில் பிளஸ் 2 தேர்வில் பெண்கள் அதிகமாகத் தேறியிருக்கிறார்கள். இந்த நிலை நீடித்தால் தற்பொழுது பெண்களுக்குச் சம உரிமை வேண்டும் என்று பேசப்படுவது மாறி, ஆண்கள் சம உரிமைக்காகப் போராட வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டுவிடும். நான் என்றும் தாய்மார்களுக்கு ஆதரவாகப் பேசுபவன். இன்று இளைஞர்கட்காகப் பேச வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

''முதியோர்கட்கு உதவித் தொகையும், வேட்டி, சேலையும், வழங்கப்பட்டு வருகின்றன. அப்படி உங்கள் ஊரில் யாருக்கா வது வழங்கவில்லையென்றால் ஆட்சித் தலைவரிடம் மனு கொடுத்து அரசுக்கு அனுப்புங்கள். நடவடிக்கை எடுக்கப்பட்டு உதவி வழங்கப்படும்.

"இன்று அடிக்கல் நாட்டப்படும் குடிதண்ணீர்த் திட்டம் இரண்டு ஆண்டுகளில் நிறைவேற்றப்படும் என்று சொன்னார்கள். அதை 1½ ஆண்டுகளுக்குள் நிறைவேற்றி முடிக்க வேண்டும் எனக் குடிநீர் வடிகால் வாரியத் தலைவரைக் கேட்டுக் கொள்கின்றேன்.''

வடஆர்க்காடுமாவட்ட ஆட்சித் தலைவர் திரு நா.நாராயணன், இ.ஆ.ப., திரு சி. குப்புசாமி, எம்.எல்.ஏ., திரு பி.எம்.வெங்கடேசன், எம்.எல்.ஏ., திரு என். குலசேகரப்பாண்டியன், எம். எம்.ஏ., திரு சி.சண்முகம் எம். எல்.ஏ., திரு ஏ.எம்.சேதுராமன் எம். எல்.ஏ., திரு பி.அன்பழகன், எம்.எல்.ஏ. ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

விழா இறுதியில் சமூக நலத் துறை சார்பில் 3 சக்கர வண்டிகளை மாண்புமிகு முதல்வர் 27 பேருக்கு வழங்கினார்.

திட்ட அமைப்புப் பிரிவுத் தலைமைப் பொறியாளர் திரு வெங்கடாச்சலம் நன்றி கூறினார்.

—அ. மருதவிநாயகம்

வன்னியாகுமரி மாவட்டத்தின் தலைநகரமான நாகர்கோவிலில் சுயம்ரியாதைக் கொள்கைகளுக்குப் பெயர்போன கோட்டாறு பகுதியில் தந்தை பெரியார் நூற்றாண்டு நினைவுத் தூண் திறப்பு விழா ஜூலை 18ஆம் நாளன்று மாலையில் மாண்புமிகு தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி திரு ஜி.ஆர். எட்மண்ட் அவர்கள் தலைமையில் சிறப்புற நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எல்.கே.திரிபாதி இ.ஆ.ப., தமிழிலும் பின்னர் ஆங்கிலத்திலும் வரவேற்புரை ஆற்றி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார். அவர் தமது உரையில் குறிப்பிட்டார்:

"பெரியார் சீர்திருத்தக் கருத்துக்களைச் சமுதாயத்திற்குச் சொல்லி அதில் வெற்றியும் பெற்றவர்.''

அடுத்து, விளக்க உரை ஆற்றிய செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு நா. கிருஷ்ணபாரதி இ.ஆ.ப. தெரிவித்தார்:

''பல நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் - பெரியார் அவர்களின் புரட்சிமிக்க - எழுச்சிமிக்க கொள்கைகளின்படி மக்கள் நடக்க வேண்டும் என்பதற்காக இந்தத் தூண் நிறுவப்படுகிறது.

"பெரியார் நூற்றாண்டு விழா தொடங்கிய மறு ஆண்டே பெரியார் மாவட்டம் தோற்றம் ஆகியது.

"பெரியார் ஒலி-ஒளிக் காட்சிகள் பல மாவட்டத் தலைநகரங்களில் நடத்தப்பட்டன.

'பெரியார் புரட்சிமொழி' என்னும் நூலை அரசு வெளியிட்டது.

''கேரளத்திலும் அவருக்கு நினைவுச் சின்னம் அமைக்க ஏற்பாடு நடைபெற்று வருகிறது. இடம் தேர்வு செய்யப்பட்டு விட்டது. கேரள அரசும் ஒப்புதல் தந்துவிட்டது.

"தந்தை பெரியார் விரும்பிய-ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தை அமைக்க அரசு எல்லா முயற்சிகளையும் செய்து வருகிறது.''

தமிழ்நாடு அரசின் மாண்புமிகு சிறப்புப் பிரதிநிதி திரு.ஜி.ஆர். எட்மண்ட் அவர்கள் தலைமை உரையின்போது குறிப்பிட்டார்:

"இந்திய அரசியலில் மட்டுமல்ல உலக அரசியலிலேயே எதையும் துணிச்சலாக எடுத்துரைக்கும் ஆற்றல் பெற்றிருந்த தலைவர், பெரியார் ஒருவர்தான்!

"தமிழ்ச் சமுதாயத்தைத் தலை நிமிர்ந்து வாழவைத்தவர் பெரியார். இந்த உணர்வு நீடித்திருக்க வேண்டும்-நிலைத்திருக்க வேண்டும் என்ற முறையில் அரசு பணி ஆற்றி வருகிறது. இந்தத் தூண் திறப்பு விழாவின் மூலம் மக்கள் தன்மான உணர்வு பெறுவர் என்று எண்ணி, இத்தகைய முயற்சிகளை உருவாக்கி வருகிறார் தமிழக முதல்வர்.''

அடுத்து உரையாற்றிய குமரி மாவட்ட சட்டமன்ற உறுப்பினர் திரு எஸ்.முத்துகிருஷ்ணன் குறிப்பிட்டார்:

"கலப்புத் திருமணம் தமிழகத்தில் நடைபெறுவதற்குப் பெரியார்தான் மூல காரணம். அவரது கருத்துக்கள் எடுத்துச்சொல்லப்பட்ட பிறகுதான் கலப்புத் திருமணம் தமிழகத்தில் பெருகியுள்ளது.''

அடுத்து, திரு எம்.இராசகோபாலன் உரையாற்றுகையில்,

''நாட்டில் ஜாதி வித்தியாச உணர்வுகளைப் பார்த்துப் பெரியார் துடித்து எழுந்தார். புத்தரின் துடிப்பு ஆட்சியிலிருந்து அவரை அகல வைத்தது. பெரியாரின் துடிப்பு அவரது படிப்புக்குத் தடைபோட்டுவிட்டது'' என்று கூறினார்.

திரு ஏ.பி.சனார்த்தனம் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

''சாக்ரடீஸ், புத்தர், வள்ளுவர் ஆகியோரின் கருத்துக்களைப் போல் தந்தை பெரியாரின் தத்துவங்களும் உலகம் உள்ளளவும் ஒலித்துக்கொண்டே இருக்கும்.

"ஆங்கிலநாட்டில் எத்தனையோ அறிஞர்கள் தோன்றியிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் அறைக்குள்ளே சொற்பொழிவாற்றியவர்கள். பொதுமக்களின் முன் பேசியது கிடையாது. ஆனால் தந்தை பெரியார் இலட்சக்கணக்கான மக்களின் முன் எழுச்சிமிக்க கருத்துக்களை வெளியிட்டு வந்தார்."

அடுத்து திருவாரூர் திரு கே. தங்கராசு உரையாற்றுகையில், "தந்தை பெரியார் அவர்களின் எழுத்துச் சீர்திருத்தத்தை மைய அரசே ஏற்றுக் கொண்டுவிட்டது. பெரியார், தடிகொண்டு அடித்துத் தன் கருத்தை எவரிடத்திலும் திணித்தவர் அல்லர். அவர் நடத்திய போராட்டங்கள் - அரசுச் சொத்துக்கு எந்தச் சேதத்தையும் ஏற்படுத்தியதில்லை! Demonstration ஆக நடத்தினார்; Agitation ஆக நடத்தவில்லை" என்று கூறினார்.

தந்தை பெரியார் நூற்றாண்டு நினைவுத் தூணைத் திறந்து வைத்து, மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேருரையாற்றினார். அவர் பேசத் தொடங்கிய பதினைந்து நிமிடங்களுக்குள் மழைபெய்யத் தொடங்கியது. மக்கள் சிறிதும் பொருட்படுத்தாமல் நாவலரின் உரையைச் செவிமடுத்தார்கள். எழுச்சிமிக்க கருத்துக்களைத் தமிழ்ச் சமுதாயத்துக்குத் தந்த தந்தை பெரியார் அவர்களின் நினைவுத்தூண் திறப்பு விழாவிற்கு இயற்கையே பன்னீர் தெளித்தது போல இருந்தது.

நாவலர் தமது உரையில் தெரிவித்ததாவது:

"பெரியார் நூற்றாண்டை ஒட்டி மாவட்டத் தலை நகரங்களில் பெரியாரின் கொள்கை முழக்கங்கள் பொறிக்கப்பட்டுள்ள நினைவுத்தூண் நிறுவ வேண்டும் என்று திட்டமிடப்பட்டு, இதுவரை சென்னையைத் தவிர, ஏனைய இடங்களில் நிறுவப்பட்டுள்ளது. இங்கு நிறுவப்பட்டிருப்பது 15 வது தூண் ஆகும். 16வது தூண் சென்னையில் 95 அடி உயரத்தில் நாட்டப்படும். புதிய மாவட்டங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் உருவாக்கி வருவதால், எதிர்காலத்தில் இன்னும் 6 அல்லது 7 தூண்கள் நிறுவப்பட வேண்டியுள்ளது.

"புலவர், வீரர், தீரர், மதிப்பிற்குரிய சான்றோர் பெயரை எழுதி நடுகல் நடுவது தமிழர் நாகரிகம் ஆகும். நமது நாகரிகம் உலக நாகரிகத்தில் எல்லாம் தலை சிறந்ததாகும்.

"485 கோடி மக்கள் உலகத்தில் வாழ்கிறார்கள். ஒரு சிலர் தான் சமுதாயத்தினால் நினைவில் வைத்துக் கொள்ளப்படுகின்றனர். புத்தர், மகாவீரர், ஏசுநாதர், நபிகள் நாயகம், வள்ளுவர், காந்தியடிகள் போன்ற ஒரு சிலர் தான் மக்களின் உள்ளங்களில் இடம் பெற்றவர்களாக உள்ளனர். அத்கைய மேலோர் பட்டியலில் தந்தை பெரியாரும் இடம் பெறுகிறார்.

"பெரியாரின் பொன் மொழிகள் என்றும் நின்று நிலவ வேண்டும் என்ற முறையில் இந்தக் கற்றூண் நடப்படுகிறது. இது கால்றால் கொடாது; கரையான் இதனை அரிக்காது; பெருவெள்ளத்தால் இது கொள்ளப்படாது; வெயிலும் ஒன்றும் செய்யாது.

இந்த நினைவுச் சின்னத்தின் உச்சியில் சுடர் ஏந்துவதுபோல் பொறிக்கப்பட்டுள்ளது. பகுத்தறிவுச் சுடரைப் பெரியார் ஏற்றுவதை அது குறிக்கிறது. சுடர் ஒன்றுதான் விரியும், பரவும், பெருகும். ஐம்பூதங்களில் இது ஒன்று தான் பெருகக்கூடியது. ஒரு லிட்டர் நீரை வைத்திருந்தால் அது 2 விட்டர் நீர் ஆகாது. ஆனால் சுடர் அப்படி அல்ல.

"பெரியாரின் கொள்கைமுறை அண்ணாவின் செயல்முறை ஆகியவைதான் எங்கள் அரசின் நடைமுறை என்று ஒருமுறை குறிப்பிட்டார் முதல்வர் புரட்சித் தலைவர். தந்தை பெரியாரின் கொள்கைப்படி ஜாதி வேற்றுமைகளை ஒழித்து வருகிறார். விதவை மணங்களை ஆதரித்து வருகிறார். அதற்கு நிதி உதவி தருகிறார். கலப்புத் திருமணத்தை ஆதரித்து வருகிறார்.

"தந்தைபெரியார் - பகுத்தறிவைப் போதித்து வந்த போதிலும், தாம் சொல்வதையே நம்ப வேண்டும் என்று மக்களிடம் வற்புறுத்தியதில்லை. உன்னையே நீ எண்ணிப்பார் என்று தான் சொன்னார். அந்த மொழிதான் அவர் மிகப் பெரும் சிந்தனையாளர் என்பதை உலகுக்கு எடுத்துரைத்தது"

செய்தி மக்கள் தொடர்புத் துறை துணை இயக்குநர் திரு. வெ. நாமதேவன், நன்றி நவிலும் போது, "நாகர்கோவிலில் உருவாக்கப்பட்டுள்ள பெரியார் நினைவுத் தூணைப் பாதுகாக்கும் பொறுப்பை இங்குள்ள ஸ்டேட் பேங்க் கிளை மேற்கொண்டுள்ளது. இதுபோன்று ஏனைய மாவட்டங்களிலும் யாராவது பொறுப்பேற்றுக் கொள்ள முன் வந்தால் அதை நாங்கள் வரவேற்கத்தயாராக உள்ளோம்" என்று குறிப்பிட்டார்.

நேசமணி போக்குவரத்துக் கழகத்தைச்சேர்ந்த 'ராகமாலிகா' குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி பொது மக்களைப் பெரிதும் கவர்ந்தது.

நிகழ்ச்சித் தொகுப்பு :
—எஸ். எஸ். சுந்தரம்

சேதுபதி பூமியின் சிறப்புச் செய்திகள்

கிழவன் சேதுபதி

சேதுபதிகள் ஆண்டநாடு சேது நாடு என வழங்கப் பெற்றது. 78 பாளையங்கள் அந்நாட்டில் இருந்தன. அவற்றின் தலைவனாகப் புகழ் ஒளி வீசித் திகழ்ந்தார் கிழவன் சேதுபதி. சேர்த்தூர், சிவகாசி, புதுக்கோட்டை, தென்காசி, அனைத்தும் சேது நாட்டிற்குள் ஒரு காலத்தில் இருந்தன.

முகவை

இராமநாதபுரத்திற்கு முகவை என்று ஒரு பெயர் உண்டு. முகவாய் எனச் சொல்லப்பட்டு, பின் அது முகவை எனப்பட்டதாகச் சிலர் குறிப்பிடுகின்றனர். மோகூர் என்ற பெயர் முகவூர் எனத் திரிந்து, பின்னர் முகவை என ஆகியது என்றும் சிலர் கருதுகின்றனர்.

கண்மாய்ப் பெருமை

பொதுவாக ஆறுகள் எல்லாம் கடலில் தான் போய் விழும். ஆனால் வைகை ஆறு, இராமநாதபுரம் பெரிய கண்மாயில் போய் விழுகிறது. இந்தப் பகுதியில் எப்போதாவது மழை பெய்யும் என்ற நிலை! ஆகவே தப்பித் தவறிப் பெய்யும் மழை நீரைத் தேக்கி வைக்க இராமநாதபுரம் மாவட்டத்தில் பெரிய பெரிய கண்மாய்கள் உண்டு. கண்மாய் என்பதே இராமநாதபுர மாவட்டத்தில் மட்டும் பயன்படுத்தப்படும் சொல் ஆகும்.

கடல்பகுதி நிறைந்த மாவட்டம்

இன்று உருவாக்கப்பட்டுள்ள இராமநாதபுரம் பகுதியில், கடல் முற்றிலும் அமைந்திருக்கிறது.

பாஸ்கர சேதுபதியின் நாட்குறிப்பு

சேதுபதி மரபைச் சேர்ந்த பாஸ்கர சேதுபதி - ஆங்கிலம் அறிந்தவர். அவரது நாட்குறிப்பு சென்னை ஆவணக் காப்பகத்தில் உள்ளது.

சேதுபதிகள்

ராஜ ராஜ சோழன் ஈழத்தை வென்று தாயகம் திரும்பிய போது இந்தப் பகுதியினை-சேதுவைக் காவல் காப்பதற்காகப் பிரதிநிதியை நியமித்தான். அந்தப் பிரதிநிதி சேதுகாவலர் என்று வழங்கப்பட்டார். பின்னர் அவர்கள் சேதுபதிகள் எனச் சொல்லப்பட்டனர்.



பல்லக்கு சுமந்தார் சேதுபதி

பெரும்புலவர் கம்பனுக்கு அடப்பக்காரனாக விளங்கினான் சோழ மன்னன்; அயர்ந்து தூங்கிய புலவர் ஒருவருக்கு, கவரி வீசினான் சோழ மன்னன். புலவர் அமர்ந்து வந்த முத்துப் பல்லக்கைச் சுமந்து வந்தார் சேதுபதி மன்னர் ஒருவர்.

விவேகாநந்தர் நினைவுச் சின்னம்

சமயப் பிரச்சாரம் செய்வதற்கு அமெரிக்கா சென்று வந்த விவேகாநந்தர் பாம்பனில் வந்து இறங்கினார். அவர் இறங்கிய இடத்தில் ஒரு நினைவுச்சின்னத்தை ஏற்படுத்தியுள்ளார் பாஸ்கர சேதுபதி.

சீதக்காதி

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த கீழக் கரையில் வாழ்ந்த வள்ளல் சீதக்காதி கடல் வாணிபம் செய்து வந்தவர். இந்தியாவில் மட்டுமல்ல-சீனத்திற்கும் பொருள் விற்பனை செய்திருக்கிறார்.

இஸ்லாமியரான சீதக்காதி வள்ளல் - இராமநாதபுரத்தை ஆண்டு வந்த கிழவன் சேதுபதிக்கு ஆலோசகராக இருந்திருக்கிறார். அதன் காரணமாக அவர், சேதுபதியின் அமைச்சராக இருந்தார் என்று சிலர் கருதுகின்றனர்.

ஔரங்கசீப்பின் அரண்மனையில் சீதக்காதிக்கு வேலை கிடைத்தது. அதனை வேண்டாம் எனச் சொல்லி அவர் இராமநாதபுரத்தில் அமர்ந்துவிட்டார்.

இராமநாதபுர மாவட்ட அமைப்பு விழா சொற்பொழிவிலிருந்து தொகுக்கப் பெற்றது.)

தொகுப்பு : த. பி

முல்லீமுக்கு உதவிய சேதுபதி

முல்லீம் மாணவர் ஒருவர் லண்டனுக்குச் சென்று பார்-அட்லா படிப்பதற்கு சேதுபதி மன்னர் ஒருவர் உதவி செய்துள்ளார்.

பொன்தேங்காய் தந்த சேதுபதி

1646 முதல் 1672 வரை இராமநாதபுரத்தை ஆண்ட திருமலை சேதுபதியைக் குறித்து அமிர்த கவிராயர் என்னும் புலவர் ஒரு துறைக்கோவை ஒன்றினைப் பாடினார். அதன் ஒவ்வொரு பாடலுக்கும் ஒரு பொன்தேங்காயை கவிராயருக்கு அளித்தார் சேதுபதி.

எம்முனையிலிருந்து ஒளி பரப்பினாலும்..

இந்தியாவில் தொலைக்காட்சி 1960ஆம் ஆண்டு துவக்கத்தில் வந்தது. முதல் முதலாக இந்தியத் தலைநகரமான டெல்லியில் தொலைக்காட்சி நிலையம் தொடங்கப்பட்டது. 1980ஆம் ஆண்டு சென்னையிலும்தற்போது வடஆர்க்காடு மாவட்டத்திலும் அமைந்துள்ளது. இங்கு அமைந்துள்ளது 76வது தொலைக்காட்சி நிலையம் ஆகும்.

வானவெளியில் வலம் வந்து கொண்டிருக்கும் செயற்கைக் கோள் இன்சாட் பி-1 தான் டெல்லி தொலைக்காட்சி ஒளி பரப்பை வேலூரில் அமைந்துள்ள தொலைக்காட்சிக்குத் தெரிவிக்கிறது.

அகில உலகச் செய்திகளையும், நிகழ்ச்சிகளையும் இதுநாள் வரை செய்தித்தாள்மூலமும் வானொலி மூலமும் படித்தும் கேட்டும் வந்துள்ளோம். ஆனால் இன்று அத்தகைய நிகழ்ச்சிகளை உலகின் எம்முனையிலிருந்து ஒளிபரப்பினாலும் மறுநொடியிலேயே கண்டு ரசித்து வருகிறோம்.

வடஆர்க்காடு மாவட்ட மக்களின் குறை நீங்கும் வகையில் தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் தொடங்கி வைக்கப்படுகிறது. வேலூர் தொலைக்காட்சி அஞ்சல் நிலையத் தொடக்க விழா அண்ணா கலையரங்கில் 27.7.84 அன்று தொடங்கியது.

சென்னைத் தொலைக்காட்சி இயக்குநர் திரு சவுடேகர் வரவேற்புரை நிகழ்த்தினார். தென்மண்டல வானொலி தொலைக்காட்சித் தலைமைப் பொறியாளர் திரு எம்.ஐ. சூரியநாராயணா, தமிழகத்தில் தொலைக்காட்சி ஆற்ற இருக்கும் பணிகள் பற்றி விளக்க உரையாற்றினார். பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஏ.எம்.வேலு தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் வேலூரில் அமைக்கப்பட்டதற்கு நன்றி தெரிவித்தார்.

மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு எம்.விஜய சாரதி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''கிராம மக்கள் கண்டுகளிக்க எளிதான சாதனம் தொலைக்காட்சியாகும். தமிழக அரசு 50 தொலைக்காட்சிப் பெட்டிகளை ஆதிதிராவிட நலத்துறை மூலம் (தீண்டாமை ஒழிப்பு) வடஆர்க்காடு, செங்கல்பட்டு, சென்னை ஆகியபகுதிகளில் உள்ள ஆதிதிராவிட மக்களுக்குப் பயன் பெறும் வகையில் இலவசமாக வழங்க உள்ளது''

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு ஆர். சௌந்தரராசன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"இந்த ஒளிபரப்பு பொழுது போக்குக் காட்சி அல்ல, நேரடியாகப்பார்த்து உணர்வதுபோன்ற உணர்வை ஏற்படுத்தும். படிப்பு அறிவுஇல்லாதவர்கள் இந்த ஒளி பரப்பு மூலம் பார்த்துப் பயன் அடைவார்கள்''

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமை உரையாற்றுகையில்—

"வேலூர் தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் எனப் பெயர் வைத்து இதைத் தொடங்கிவைக்கும் பணி இன்று நடைபெறுகிறது. இந்தப் பகுதி மக்களுக்கு நம் மாநிலச் செய்திகளுடன் வெளி மாநில வெளிநாட்டுச் செய்திகளை எடுத்துச் சொல்லவும், வெளி மாநில, மற்றும் வெளி நாட்டுக் கலை, அரசியல், பண்பாடு இவைகளைக் குக்கிராமத்திற்கு எடுத்துச் சொல்கிற வகையில் இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைக்க வந்துள்ள மைய அமைச்சருக்கு அமைச்சரவை சார்பிலும், தமிழக மக்கள் சார்பிலும் ,என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"ஒரு செய்தி மக்களிடம் பரவினால் என்ன ஆகும் என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். நல்ல செய்திகள் விரைவாகச் செல்வதில்லை. தவறான செய்திகள் விரைவாகப் பரவி விடுகின்றன. தவறான செய்திகளைத் தடுத்து நிறுத்தவும், உண்மைச் செய்திகளை மக்களுக்குத் தெரியப்படுத்தவும் வேண்டும். தங்கள் வாழ்வைப் பற்றி மக்களுக்கு உணர்த்த வேண்டும்.

"நாட்டு நடப்பு, எதிர்கால முன்னேற்றத்துக்கான வழி ஆகியவற்றை வானொலி மூலம் கேட்க முடிகிறது. ஆனால் நேரடியாக பார்த்துத் தெரிந்து கொள்வது தொலைக்காட்சி மூலம் தான். வெளியிலுள்ள மக்கள் நிகழ்ச்சிகளைப் பார்த்து அதைப் பயன்படுத்தி அதன் மூலம் தங்களை எப்படி உயர்த்திக்கொள்ளலாம் என்பதற்கு உதவும் சக்திமிகு சாதனமாகத் தொலைக்காட்சி உள்ளது.

"தென்மாநிலங்களுக்கு 27 அஞ்சல் நிலையங்களை ஒதுக்கி அதில் தமிழகத்திற்கு 6தொலைக்காட்சி அஞ்சல் நிலையத்திற்கும், கொடைக்கானலில் அமையும் சக்தி வாய்ந்த நிலையத்திற்கும் அனுமதி அளித்த மைய அரசிற்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

"தேசிய வளர்ச்சிக் கவுன்சிலில் பேசும்பொழுது நான் கூறிய கருத்தை இங்கு மீண்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எந்த மாநிலத்தில் செய்திகள் ஒளிபரப்பப்பட்டாலும் அந்த மாநில மக்களுக்குத் தெரியும் வகையில் அவர்கள் பேசும்மொழியில் ஒளிபரப்ப வேண்டும். உண்மையை மக்களுக்கு எடுத்துக் கூறுவதாகவும், வரதட்சணைக் கொடுமை, வர்க்கபேதம், சாதி, மதபேதம் இவைகளைத் தகர்த்தெறியும் கருத்துக்களைக் கொண்ட நாடகம், பேச்சு இவைகளை அந்தந்த மாநில மொழிகளில் வெளியிட்டால் சாதாரண மக்கள் அறிந்துகொள்ள முடியும்.

"மக்கள் அறியமுடியாத மொழியில் வெளியிட்டால் நிகழ்ச்சிகளினால் பலனிருக்காது. மக்கள் கருத்தாக இதைச் சொல்லுகிறேன். இதை வற்புறுத்திச்

> தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தமிழ் மற்றும் மாநில மொழிகளில் ஒளி பரப்பவேண்டும்.
>
> —மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர்.

முதன் முதலில் ஒரே ஒரு சேனலில் வந்த தொலைக்காட்சி நாளடைவில் நவீனமயமாக்கப்பட்டு 'மல்டி சேனல்' ஆனது. கறுப்பு வெள்ளையாக மட்டும் இருந்த தொலைக்காட்சி, நாட்கள் செல்லச் செல்ல ''வண்ணத்தில்'' கிடைத்தது.



கிராமப்புற இளைஞர் பயிற்சித் திட்டம்

1984-85 ஆம் ஆண்டில் புதுக்கோட்டை மாவட்டத்தில் கிராமப்புற இளைஞர்களை பயிற்சித் திட்டத்தின் கீழ் 250 பேர்களுக்கு ரூ. 8,85,500 செலவில் பயிற்சி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது இதில் 221 பேர்கள் ஆதிதிராவிட இளைஞர்களாக இருப்பார்கள்.

பயிற்சி முடிப்பதற்கு இவ்வாண்டில் ரூ. 1,160,500 மதிப்புள்ள தொழில் கருவிகளை இலவசமாக வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இது தவிர 2,351 பேர்களுக்கு சிறுதொழில்கள் துவக்கவும், சிறு கடைகள் மற்றும் சிறு பண்ணைகள் அமைத்துவும் ரூ 41.54 லட்சம் வங்கிகளிடம் கடனாகப் பெற்று வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ. 20.60 லட்சம் அரசு மானியமாக இருக்கும்.

இருந்து 25 கி.மீ. சுற்றுவட்டாரத்தில் தொழில் வசதி இருக்கவேண்டும் என்பதாகும். ஒரு குடும்பத்தில் ஒரு பயனாளி மட்டும் பயிற்சி பெறலாம். ஆதிதிராவிட, கிறிஸ்தவர், அருந்தியர், பள்ளர் ஆகியோர் மட்டுமே இதில் பயனடைய முடியும். இதனால் வேலை வாய்ப்பு 14 இலட்சம் மக்கள் ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி பெறுவார்கள் என்பதாகும்.

வேலூர் மாவட்டச் செய்தி

வேலை நிறுத்தம்

மத்திய அரசின் 6வது ஊதியக் குழுவை இறக்கி சட்டம் கொண்டு வரவேண்டி அனைத்தும் திட்டத்தில் வேலூர் மாவட்ட ஊழியர்கள் ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்தனர். வேலூரில் அரசு கிளை அலுவலகங்கள் மூடப்பட்டு ஊழியர்கள் கலந்து கொண்டனர். வேலூரில் 100 வாரிசுகளுக்கு வேலை வழங்கப்பட்டு இருக்கும் தகவலும் அலைமோதுகிறது. இந்நிலையத்தில் வேலை செய்ய விரும்பாத வேலை நிறுத்தம் செய்த ஊழியர்கள் மக்களை உரிமை கோரி வேலையில் இணையுமாறு "ஸ்டிரைக்" முடியும் என்கிறார்.

"காலையில் இரையுடன் கூடிய" உடற்பயிற்சி பற்றிய பாடம் தமிழ் நாடு முழுவதுமுள்ள இளைஞர்க் கற்று ஒடுங்கிய வளர முடியும். கல்லூரிகளுக்கு செல்லும் இளைஞர்களிடத்தில் சாதனம் இருக்க முடியாது. குறுக்கு சிறந்த முறையில் வளர்ச்சிகள் இருக்கும் பாதை முறையில் செல்லுவதே இதுவே சரியான எதிர்காலச் சந்ததிக்கு நலனாகும். கடலையாகும். மேலும் மக்களை இதுவே மூலம் மக்களை வாழ்வுக்கு ஒரு ஒரு ஒரு, ஒரு 40

செல்லவும் அதுதானாகச் செல்லவும் கடமையாகிறோம்.

செலவு ரூபாய் எண்ணற்ற உலகை "மக்களுக்கு முடியும்" என்கிறார்.

செலவுக்காகவே நிலையத்தை ஒரு நிலையத்தை உருவாக்கி மாவட்டத்தில் மாவட்டம் மத்திய எரிபொருள் மத்திய எரிபொருள் அமைச்சர் திரு பி. சிவசங்கரன் செலுத்தினார். "தமிழக முதலமைச்சர் கூறிய - வலியுறுத்திய கருத்தை ஏற்று மாநில செலுத்தினார்கள் நிலையத்தில் கலந்து கொண்டு மாவட்டத்தில் எரிபொருள் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையம் ஆண்டுதோறும் ஒரு கோடி ரூபாய் வருமானம் ஈட்டும் என்று கூறினார்.

செலுத்தினார்கள் நிலையத்தை சாத்தூர் 87 கிலோமீட்டர் மக்கள் செலுத்தினார்கள் நிலையத்தை திருமங்கலம் கலந்து கொண்டார்கள் செலுத்தினார்கள் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து வரும் செலுத்தினார்கள் வரவேற்றார் செல்லும் "என்றார்.

—அ. மருதி

சேலத்தில் புதிய பேருந்து நிலையக் கால்கோள் விழா

சேலம் மத்திய பேருந்து நிலைய கால்கோள் விழா, 101 சத்துணவு மையக் கூடங்கள், டேனிடா திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள 101 துணை சுகாதார நிலையங்கள் திறப்பு விழா அனைத்தும் ஜூலை 30ஆம் நாள் பிற்பகல் - அச்சுவாலேரிப் பகுதியில் நடைபெற்றது.

வரவேற்புரை ஆற்றியமாவட்ட ஆட்சித் தலைவர் திரு இரா.வரதராஜலு இ.ஆ.ப. "அச்சுவாலேரிப்பகுதியில் அமையவிருக்கும் இந்தப் பேருந்து நிலையம்-மிகப் பெரும் முயற்சியின் பயனாக நமக்குக் கிடைத்துள்ளது" என்று குறிப்பிட்டார்.

"பொதுமக்கள் படும் பல்வேறு இடர்ப்பாடுகளைப் போக்குவதில் நமது முதல்வர் அவர்கள் பெரும் கவனம் செலுத்தி வருகிறார். இங்கு 24.62 ஏக்கர் பரப்பளவில் அமையவிருக்கும் பேருந்துநிலையம்-ஒருமாதிரிப் பேருந்து நிலையமாக விளங்கி-தமிழ்நாட்டுக்கே சிறப்புத் தேடித் தரப்போகிறது" என்று தெரிவித்தார் சட்டமன்ற உறுப்பினர் திரு சேலம் எம். ஆறுமுகம்.

நாடாளுமன்ற உறுப்பினர் திரு சி. பழனியப்பன் தெரிவித்ததாவது:

"இந்தப் பேருந்து நிலையத்தையமைப்பதற்கு எத்தனையோ தடைக்கற்கள் ஏற்பட்டன என்பது பலருக்கும் தெரியும். அவற்றைக் கடந்து-அவற்றை எல்லாம் உடைத்தெறிந்த முதல்வர் கூர்வாளாகச் செயல்பட்டுள்ளதற்காகப் புகழ்மாலை சூட்டுகிறேன். ரயில்வே நிலையங்களில் உள்ள வசதிகள் போல-உருவாகிவரும் பேருந்து நிலையத்திலும் வசதிகள் செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்".

அடுத்து உரையாற்றிய சட்டமன்ற உறுப்பினர் திரு ஜி. கிருஷ்ணராஜ் குறிப்பிட்டதாவது:

"இந்த இடத்தில் பேருந்து நிலையம் அமைக்கப்படக்கூடாது என்று வியாபார சங்கங்கள் கேட்டுக்கொண்டபோதிலும்-தனியார் பலர் இடையூறு ஏற்படுத்திய போதிலும் அவற்றைப் பொருட்படுத்தாது பேருந்து நிலையம் அமைக்க முன்வந்த அரசைப் பாராட்டுகிறேன். இந்தப்பேருந்து நிலையத்திற்கு அறிஞர் அண்ணா பவள விழா நினைவுப் பேருந்து நிலையம் என்று பெயர் வைக்க வேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன்."

மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி, அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்:

"பொதுமக்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து தரு

வதில் நமது முதல்வர் அவர்களுக்கு ஈடு இணை எவரும் இல்லை. அந்த வகையில்தான் மிகப் பெரிய பேருந்து நிலையத்தைச் சேலத்தில் அமைக்க வழி வகை கண்டிருக்கிறார்''.

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு இரா. அருணாசலம் அவர்கள் தமது உரையில் தெரிவித்தார்:

''தமிழக நகர்ப்புறங்களில் புதிய பேருந்து நிலையங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. அவை நவீன மயமாக்கப்பட வேண்டும் என்பதில் தமிழக முதல்வர் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறார்''.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு எச்.வி. ஹண்டே அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்:

''அகில இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில் சத்துணவு இலாகாவை நமது முதல்வர் துவக்கி நடத்தி வருகிறார். இதனைப் பிற மாநிலங்களும் பாராட்டுகின்றன.

''மாண்புமிகு முதல்வர் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் கடந்த 6, 7 ஆண்டுகளில் 6100 மையத் துணை சுகாதார நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. 5000 மக்களுக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற முறையில் 1985க்குள் பல நிலையங்கள் உருவாக்கப்பட உள்ளன. இந்திரா காந்தி அவர்களின் 20 அம்சத் திட்டத்தின் 15வது அம்சத்தைத் தமிழகம் மட்டும்தான் சிறப்பாக நிறைவேற்றி வருகிறது என்பதைச் சொல்ல வேண்டும்.''

அடுத்து உரையாற்றிய மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ஆர். சவுந்தரராசன் அவர்கள் தெரிவித்தார்:

''பசியால் வாடுவதற்குக் காரணம் தலைவிதி என்று சொல்லி வந்தார்கள்! விதியை யாரால் என்ன செய்ய முடியும் என்றும் கேட்டுவந்தார்கள். விதியை மதியால் வெல்லலாம் என்று சிலர் சொன்னார்கள். அதை எப்படி வெல்வது என்று யாரும் வழி முறையைச் சொல்லவில்லை. பசியால் வாடும் குழந்தைக்குச் சத்துணவு வழங்கி-அந்த விதியை மாற்றியுள்ளார் தமிழக முதல்வர்''

விழாவுக்குத் தலைமை வகித்த மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்:

''இங்கு பேருந்து நிலையம் வரவேண்டும் என்று பல்லாண்டுகளாக முயற்சி நடைபெற்று வருகிறது. இதனை உருவாக்க நகராட்சிக்கு வசதி இல்லை என்பதால் - அண்ணா போக்குவரத்துக் கழகமே செய்து கொள்ளலாம் என்று முதல்வர் அவர்கள் ஆணையிட்டதால் இன்று இந்த அடிக்கல் நாட்டுவிழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த நிலையத்தின் மூலம் சேலத்தில் ஒரு புத்தொளி ஏற்படுவது உறுதி. தற்போது இருக்கும் பேருந்து நிலையம், நகரப் பேருந்து நிலையமாக இயங்கும். இந்த நிலையம் சேலத்து மக்களுக்கு மட்டுமல்ல, பக்கத்திலிருந்து வரும் மக்களுக்கும் பயன்படும்.

"புரட்சித் தலைவர் அவர்கள் அரசை ஏற்றுக்கொண்டபோது 4000 பேருந்துகள் ஓப்படைக்கப்பட்டிருந்தன. தற்போது 8500 பேருந்துகள் அரசினால் இயக்கப்பட்டு வருகின்றன. புதிதாக 30 ஆயிரம் பேருக்குக் கூடுதலாக வேலை கொடுக்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் முன்பு 200 பேருந்துகள் ஓடிக்கொண்டிருந்தன. தற்போது 648 பேருந்துகள் இயங்கிவருகின்றன. கிராமப் புறத்துமக்கள் நன்மைபெறுவதற்காக இந்த அரசு எல்லா வகையான திட்டங்களையும் செயல்படுத்தி வருகின்றது.

''பேருந்து நிலையங்களை அமைப்பதற்காகவே ஒரு கார்ப்பரேஷனை உருவாக்கலாமா என்ற திட்டம் அரசிடம் உள்ளது.

''போக்குவரத்துத் தொழிலாளர்களின் குழந்தைகளின் நலனை முன்னிட்டுப் போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் பொறியியல் கல்லூரி ஒன்றைத் தொடங்குவதற்குப் புரட்சித் தலைவர் ஆணையிட்டுள்ளார்.

''கடந்த 4 ஆண்டுக்காலமாகப் போக்குவரத்துக் கழகங்களில் எந்தவிதமான வேலை நிறுத்தமும் நடைபெறாதவாறு, அவற்றைச் சுமுகமான முறையில் தீர்த்து வைத்துள்ளார் தமிழக முதல்வர்.''

அடுத்து உரையாற்றிய மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் தெரிவித்தார்:

''இந்த அச்சுவான் ஏரிப் பகுதி காட்டிலாகாவால் கையகப்படுத்தப்பட்டுவிட்டது. அதனை மீண்டும் திரும்பப் பெற்றிருப்பது என்பது சாதாரண காரியமல்ல. ஆறு அமர யோசித்துத் திட்டங்களை வெளியிட்டு அதன்பின் பந்தயக் குதிரைவேகத்தில் செயல்படுவது புரட்சித் தலைவரின் அரசு என்றுதான் சொல்லவேண்டும்.

''அரசியல்வாதி அடுத்த தேர்தலை நினைக்கிறான். சிந்தனையாளன் அடுத்த தலைமுறைபற்றி எண்ணிப்பார்க்கிறான் என்பார்கள். தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அரசியல்வாதி மட்டுமல்ல, சிந்தனாவாதியாகவும் திகழ்கிறார்''

ஆராரோ ஆரிரரோ என்று தாய்மார்கள் தாலாட்டுப் பாடுகிறார்கள். இது வெறும் பாட்டு என்று கருதிவிடக் கூடாது! இதில் ஒரு தத்துவமே அடங்கியிருக்கிறது.

முந்திய பிறவியில் இவர் யார், யாரோ, இனி வரும் பிறவியில் யார் ஆவாரோ என்று கேட்கிறார்கள் தாய்மார்கள்!

நாக்கால் ஆட்டிப் பாடுவது தாலாட்டு. தால் என்றால் தொங்குதல் என்று பொருள் தொங்குகின்ற காரணத்தால் தான் மாங்கல்யம் தாலி என்று வழங்கப்படுகிறது.

இரசாயனபுர மாவட்ட அமைப்புப் பணிகள் தொடக்க விழா விகழ்ச்சியிலிருந்து

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் பேருந்து நிலையத்திற்குக் கால் கோள் நாட்டி, சத்துணவு மையக் கூடங்கள், துணைச் சுகாதார நிலையங்கள் ஆகியவற்றைத் திறந்து வைத்துப் பேருரையாற்றினார். அப்போது அவர் தெரிவித்தார்.

''மக்களின் பிரதிநிதியாகஇருந்து தங்கள் உள்ளத்தின் எண்ணங்களை ஆக்க பூர்வமாகச் செயல்படுத்தும்போதுதான் திருப்தி ஏற்படுகிறது. சில நல்ல காரியங்களைச் செய்யும் போது பலர் பழிசுமத்துவார்கள். அதுபற்றிக் கவலைப்படக் கூடாது. நாம் போகிற பாதை நேர்மையான பாதை என்றால் பிறருக்குப் பயப்பட வேண்டிய தேவை இல்லை.

''தற்போது 101 கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இவை உருவாவதற்கு எத்தனை பேர்வேலை பார்த்திருப்பர்? லட்சக்கணக்கான பேர்களுக்கு வேலை வாய்ப்பளித்தோம் என்று சட்டமன்றத்தில் நான் சொன்னேன் என்றாலும் வேலை கொடுக்கவில்லை என்று திருப்பித் திருப்பிச் சொல்கிறார்கள் சிலர். எங்கள் பணிகளில் தயவு செய்து குறை இருந்தால் சொல்லுங்கள் - ஆனால் நாங்கள் எதுவும் செய்யவில்லை என்று மட்டும் சொல்லாதீர்கள்! நமக்கு மனச்சாட்சி உண்டு. அதைத்தான் நாம் கடவுள் என்கிறோம்.

''நான் சிரித்தால் தமிழகத்தின் 4½ கோடி மக்களும் சிரிப்பார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பழனியப்பன் இங்கே குறிப்பிட்டார். நாம் சிரித்தால் மக்கள் சிரிப்பார்கள். நாம் அழுதால் மக்கள் அழமாட்டார்கள் என்று ஒரு ஆங்கிலப் பழமொழி உண்டு.

''நாட்டில் போராட்டங்கள் வரும்போது - பிரச்சினைகள் உருவாகும்போது எல்லாம் பேருந்துகளைத்தான் இலக்கு வைக்கிறார்கள் போராட்டக்காரர்கள். இது தேவையா?

''சத்துணவுத் திட்டத்தின் மூலம் மக்களைச் சோம்பேறியாக்க வில்லை - பிச்சைக்காரர்களாக்க வில்லை என்பதைச் சிலர் இப்போதுதான் உணர்ந்திருக்கிறார்கள். இந்தத் திட்டம் தேவையற்றது என்று சொன்னவர்கள் கூட இனி வரும் தேர்தலில் எங்களைத் தேர்ந்தெடுத்தால் நாங்களும் இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து செயலாற்றுவோம் என்று சொல்லத் தொடங்கியுள்ளனர்.

''நாங்கள் யாரை நம்பி திட்டங்களில் முதலீடு செய்கிறோம்? மக்களை நம்பி! உலக வங்கிகளிடம் கடன் வாங்கி! பேருந்துக் கட்டணத்தை உயர்த்த வேண்டிய சூழ்நிலை நமக்கு ஏற்பட்டுள்ளது. பேருந்துக் கட்டணத்தை உயர்த்தினால் தான் ரூ. 200 கோடி கடன் தர முடியும் என்று உலக வங்கியினர் தெரிவித்திருக்கிறார்கள். அதனால் நாங்கள் விரும்பாவிட்டாலும் கட்டண உயர்வைக் கொண்டு வரவேண்டியவர்களாக உள்ளோம். அதிலும் தமிழகத்தில் சென்னை நகரில் மட்டும் பேருந்துக் கட்டணத்தை உயர்த்தத் திட்டமிட்டுள்ளோம்.



''படிக்கும்போதே தொழிற்கல்வி கற்க வேண்டும். படித்து விட்டு ஏதோ வேலை பார்க்க வேண்டும் என்ற எண்ணத்துடன் செயலாற்றுவதில் பயன் என்ன? மாணவன் படித்து விட்டு வெளியில் வரும்போது இந்தத் தொழிலுக்குச் சொந்தக்காரன் என்ற முறையில் வெளிவர வேண்டும்.

''அரசு திட்டமிடும்போது உடனடிப் பயனளிக்கும் திட்டங்கள்-எதிர்காலத்திற்கு ஏற்ற வகையில் சில திட்டங்கள் என்று திட்டமிட வேண்டும்.

சத்துணவுத் திட்டத்தின் மூலம் தாய்மார்கள் - குறிப்பாக விதவைகளுக்கு வேலை வாய்ப்பளிக்கப்படுகிறது.

''மாணவர்கள் போராட்டங்களில் ஈடுபட்டு, பேருந்தில் கல் எறிகிறார்கள். பேருந்துகள் என்ன பாவம் செய்தன? பயணிகள் என்ன குற்றம் செய்தார்கள்? யாருடைய பொருள் நாசம் ஆகிறது? பெரியவர்கள் கொடுத்த வரிப்பணம் இங்கே பாழாகின்றது! ஓட்டுநரும் மனிதன்தான். நடத்துநரும் மனிதன்தான்! அவர்கள் அடிபட்டால், அவர்களது குடும்பம் என்ன ஆகும்?

''உன்னைத் துன்பப்படுத்திக் கொண்டு மற்றவர்களை இன்பப்படுத்து என்றார் மகாத்மா காந்தியடிகள். பலர் தன்னை இன்பப்படுத்திப் பிறரைத் துன்பப்படுத்தி வருகிறார்கள். ஏதாவது ஒரு சிறிய தகராறு என்றால் கூட எதிரியை அழித்துவிட வேண்டும் என்று நினைப்பது எப்படி நியாயமானதாகும்!

''போக்குவரத்துத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு புதிய கல்லூரி ஒன்று உருவாகிவரும் திட்டத்தைப் போக்குவரத்துத்துறை அமைச்சர் இங்கே குறிப்பிட்டார். அந்தக் கல்லூரிக்குப் பணம் தரும் தொழிலாளர்களை நான் தெய்வமாகக் கருதுகிறேன்.

''சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு இருக்க வேண்டும். அதுபோல் பெரும்பான்மையினருக்கும் பாதுகாப்பு இருக்க வேண்டும். இருவரும் ஒத்துப்போனால் தான் ஜனநாயகம் வெற்றி பெற முடியும்!''

இறுதியில் அண்ணா போக்குவாத்துக்கழக நிர்வாக இயக்குநர் திரு டி. பாலகிருஷ்ணன் நன்றி நவின்றார்.

—எஸ். எஸ்.

கல்லூரிக் கல்வித் துறை

சென்னை-600 006.

அறிவிக்கை

ஆரம்ப மற்றும் உயர்நிலைப் பள்ளிக்கூட ஆசிரியர் குழந்தைகளுக்கான மாநில உபகாரச் சம்பளங்கள் 1984—85 திட்டம்.

அங்கீகாரம் பெற்ற (1) ஆரம்ப, முன் ஆரம்ப, நடுத்தர, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிக்கூடங்களிலும், (2) உடல் ஊனமுற்றோர் கல்வி நிறுவனங்களிலும், பயிற்சி பள்ளிக் கூடங்களிலும் பணியாற்றும் ஆசிரியர்கள் குழந்தைகள் மற்றும் (3) பாதுகாப்பு அமைச்சகத்தால் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களில் பணியாற்றும் சிவிலியன் ஆசிரியர்கள் குழந்தைகளுக்கு உபகாரச் சம்பளங்களை தொடர்ந்து வழங்க தமிழ்நாடு அரசு தீர்மானித்திருக்கிறது என்பது பொது மக்களின் தகவலுக்கு அறிவிக்கப்படுகிறது.

2 தகுதி :

தகுதிக்கான முக்கிய நிபந்தனைகளாவன:—

1. மார்ச்சு/ஏப்ரல் 1984-ல்/நடைபெற்ற எஸ். எஸ். எல். சி. (10-ம் வகுப்பு புதிய பாடத் திட்டம்)/மெட்ரிகுலேஷன்/ஆங்கிலோ-இந்திய உயர்நிலைப் பள்ளித் தேர்வு/தொழில் நுட்ப உயர்நிலைப்பள்ளி இறுதியாண்டுத் தேர்வில் விண்ணப்பதாரர் 60 சதம் மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.

2. 1984 மார்ச்சு/ஏப்ரலில் நடைபெற்ற மேல்நிலைக் கல்வித் தேர்வில் (பிளஸ் 2) முதல் வகுப்பு அல்லது மொத்தத்தில் 60 சதம் மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.

3. 1984 ஏப்ரல்/மே மாதத்தில் நடைபெற்ற பட்டப் படிப்புத் தேர்வில் முதல் வகுப்பு அல்லது மொத்தத்தில் 60 சதம் மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.

4. 1984 ஏப்ரல்/மே மாதத்தில் நடைபெற்ற முதுகலைப் பட்டப் படிப்பில் முதல் வகுப்பு அல்லது மொத்தத்தில் 60 சதம் மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.

5. மாலைக் கல்லூரிகள் அல்லது அஞ்சல் வழிக் கல்வி மூலம் பயின்று வரும் மாணவர்கள் தற்போதுள்ள விதிகளின்படி தகுதி அற்றவராவார்கள். இருப்பினும் இது விஷயமாக அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மாலை நேரக் கல்லூரிகள்/அஞ்சல் வழிக் கல்வியில் சேர்ந்துள்ள மாணவர்களும் தங்களது விண்ணப்பத்தை, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்வதற்காக நிர்ணயிக்கப்பட்ட கடைசி தேதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும். ஆனால், அவர்களது விண்ணப்பங்கள் இது சம்பந்தமாக அரசாங்கத்திடமிருந்து தகுந்த உத்தரவுகளைப் பெற்ற பிறகே பரிசீலிக்கப்படும்.

6. மேற்கண்ட தேர்வுகளில் (மேற்கண்ட பாராக்களில் குறிப்பிடப்பட்டுள்ள) தேர்ச்சி பெற்ற தமிழ்நாட்டில் உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவராவார்கள்.

7. உபகாரச் சம்பளம் பெற விரும்பும் மாணவர்கள் நிர்ணயிக்கப்பட்ட கடைசித் தேதிக்குள் கல்வி நிலையங்களில் இடம்பெற முடியாமல் போனால், விண்ணப்பங்களால் பூர்த்தி செய்து, தேவையான சான்றுகளுடன் இந்த இயக்கத்திற்கு, நிர்ணயிக்கப்பட்ட முடிவுத் தேதிக்குள் அனுப்பி வைக்கலாம். கல்வி நிலையங்களில் இடம் பெற்ற பிறகு, சேர்ந்ததற்கான தகவலைத் தெரிவிக்கலாம்.

8. **1984-க்கு முன் நடந்த தேர்வுகளில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதி அற்றவராவார்கள்.**

9. 1983, டிசம்பரில் நடைபெற்ற இந்தியன் பள்ளிக்கூடச் சான்றிதழ்த் தேர்வில் Indian School Certificate Examination) தேர்ச்சி பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

10. ஆய்வு அலுவலர்கள் அல்லது நிர்வாக சம்பந்தமான பதவிகளில் உள்ள இதர அலுவலர்கள் குழந்தைகள் விண்ணப்பிக்கத் தகுதி அற்றவராவார்கள்.

3. **சரியான மற்றும் முழுமையான தகவலுடன் (முழு நீள) வெள்ளைத்தாள்களில் கையினால் தெளிவாக எழுதப்பட்ட, அல்லது டைப் செய்யப்பட்ட விண்ணங்பங்களைப் பின் வரும் படிவத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.**

பள்ளிக்கூட ஆசிரியர்களின் **குழந்தைகளுக்கான மாநில உபகாரச் சம்பளங்கள்**
1984—85-**க்கான திட்டம்.**

விண்ணப்பப் படிவம்

பெயரும் பிறந்த தேதியும் (விண்ணப்பத்தின் முதல் பக்கத்தில் மேல் கோடியில் சமீபத்தில் எடுக்கப்பட்ட ஒரு பாஸ்போர்ட் அளவு போட்டோ ஒட்டப்பட வேண்டும்) ...

நாடு இனம் ...

முழு அஞ்சல் முகவரி (நிரந்தர முகவரி)...

பெற்றோர்களின் பெயர் ...

(அ) தகப்பனார் ...
தொழில் (முழு விவரங்கள் தரவும்)
வருமானம் (ஏப்ரல் 83 முதல் மார்ச் 84 வரை) ...

(ஆ) தாயார் ...
தொழில் (முழு விவரங்கள் தரவும்)
வருமானம் (ஏப்ரல் 83 முதல் மார்ச் 84 வரை)

1983-84ம் ஆண்டின் மொத்த ஆண்டு வருமானம்: ...

(அ) தகப்பனாரின் ஆண்டு வருமானம்:

(ஆ) தாயாரின் ஆண்டு வருமானம் ...

(இ) இதர வகைகளிலிருந்து வருமானம்:

பெற்றோர்கள் பணிபுரியும் பள்ளிக் கூடத்தின் பெயர்:

(அ) தந்தை ...

(ஆ) தாயார் ...

விண்ணப்பத்தாரரின் பாஸ்போர்ட் அளவு போட்டோவை இங்கே ஒட்ட வேண்டும்.

7. (அ) மார்ச்/ஏப்ரல் 1984, டிசம்பர் 1983-இல் தேர்ச்சி பெற்ற தேர்வுகள் போர்டு/பல்கலைக்கழகப் பெயர், பதிவு எண், பெறப்பட்ட மதிப்பெண்கள், மொத்த மதிப்பெண்கள் முதலிய விவரங்களுடன் மதிப்பெண்களின் சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) ...

(ஆ) தேர்ச்சி பெற்ற பள்ளிக்கூடம்/கல்லூரியின் பெயர்(இருக்கும் இடத்தின் பெயர் மற்றும் மாவட்டத்தின் பெயருடன்) ...

8. மாணவர் வேறு எந்த ஒரு உபகாரச் சம்பளம் பெறுகின்றாரா அப்படி இருந்தால், அது பற்றிய 1984-85-க்கான முழு விவரங்களையும் தரவும்: ...

9. 1984-85-ல் பயின்று வரும் மேல்நிலைப் பள்ளிக்கூடம் / கல்லூரியின் பெயர், பயிலும் பாடத் திட்டத்தின் பெயர் மற்றும் சேர்ந்த தேதி ...

தலைமை ஆசிரியர் **விண்ணப்பதாரரின் கையொப்பம்**
தலைமை ஆசிரியை **தேதியுடன்.**
முதல்வர் கையொப்பம்.

4. அங்கீகரிக்கப்பட்ட முன் - ஆரம்ப (Pre-Primary) ஆரம்ப, நடுத்தர உயர் நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிக்கூடத்தில் இந்த மாணவரின் தகப்பனார்/தாயார் ஆசிரியராகப் பணிபுரிகிறார் என்பதற்கு, தகுந்த முத்திரையுடன் கூடிய நிறுவனத் தலைவரிடமிருந்து பெற்ற ஒரு சான்றிதழையும் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.

5. (அ) விண்ணப்பத்துடன் மதிப்பெண்களின் சான்று பெற்ற உண்மை நகலை இணைக்க வேண்டும்.

(ஆ) பட்டப்படிப்பு/முதுகலைப் பட்டப்படிப்பு சம்பந்தப்பட்ட அனைத்து செமஸ்டர் தேர்வுகளின் மதிப்பெண்களின் சான்று பெற்ற உண்மை நகலையும் இணைக்க வேண்டும்.

6. உபகாரச் சம்பளத்திற்காக விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்களில் மொத்த சதவிகித மதிப்பெண்களின் மூலம் நிர்ணயிக்கப்படும் திறமை மற்றும் வருமான (Merit-Cum-Means) அடிப்படையில்,தேர்ந்தெடுப்பு செய்யப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர்களின் 1983-84-ம் வருடத்திற்கான வருட வருமானம் ரூ. 6,000-க்குக் குறைவாக உள்ள மாணவர்களுக்குப் பண உதவி அளிக்கப்படும். இதர (அதாவது ரூ. 6,000-க்கு மேல் வருமானமுள்ள) மாணவர்களுக்குத் திறமைச் சான்றிதழும் மற்றும் கருத்தளவான பரிசு ரூ. 100 மட்டும் வழங்கப்படும்.

7. இந்த இயக்கத்தில் இருந்து விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டா.

8. இந்த அலுவலகத்தில் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளக் கடைசித் தேதி:

(அ) மேல்நிலைப் பள்ளிக்கூடங்கள் மற்றும் பாலிடெக்னிக்குகளில் பயிலும் மாணவர்கள் சம்பந்தப்பட்ட விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளக் கடைசித் தேதி: 15-9-1984 ஆகும்.

(ஆ) பட்டப்படிப்பு,முதுகலைப் பட்டப்படிப்பு மற்றும் தொழிற் படிப்பில் பயிலும் மாணவர்கள் (அதாவது கலை, அறிவியல்,மருத்துவம்,பொறியியல், விவசாயம் மற்றும் இதர தொழிற் கல்லூரிகள்) சம்பந்தப்பட்ட பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்வதற்கான கடைசித் தேதி 30-9-1984 ஆகும்.

9. மேற்கண்ட கடைசித் தேதிகளுக்குப் பிறகு பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

10. உபகாரச் சம்பளங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே அவர்களது தேர்வு பற்றி அறிவிக்கப்படும்.

11. 1982-83 ஆம் ஆண்டில், பொதுத் தேர்வுகளில் 10 ஆம் வகுப்பில் (எஸ். எஸ். எல். சி.) 500-க்கு 443-க்குக் குறையாமலும், 12-வது வகுப்பில் (மேல் நிலைப்பள்ளி) 1,200-க்கு 1003க்குக் குறையாமலும் மதிப்பெண்கள் பெற்றவர்கள் மட்டுமே உபகாரச் சம்பளத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்பதுமாணவர்களுக்குத் தகவலுக்காகத் தெரிவிக்கப்படுகிறது.

கல்லூரிக்கல்வி இயக்குநர்

தேதி: 3 – 7 – 1984
சென்னை – 600 006.

இருபெருந் தலைவர்களுக்கு

திருஉருவச் சிலைகள்!

சேலம் லட்சுமிப் பெருமாள் கோவில் அருகில் ஜூலை 30ஆம் நாள் இரவு 7 மணியளவில் பெருந் தலைவர் காமராஜர் - சேலம் விஜயராகவாச்சாரியார் திருவுருவச் சிலைகள் திறப்பு விழா, மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

நாயனவேந்தர் நாமகிரிப் பேட்டை திரு கிருஷ்ணன் அவர்கள் குழுவினரின் இன்னிசையுடன் நிகழ்ச்சி தொடக்கமாகியது.

விழாவுக்கு வருகை புரிந்தோரை செய்தி - மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு நா. கிருஷ்ணபாரதி இ.ஆ.ப வரவேற்றார்.

இந்திய தேசிய காங்கிரஸின் மாநிலப் பொருளாளர் திரு. எம். இராமசாமி உடையார் உரையாற்றுகையில், "ஒழுக்கத்தைப் போதித்த இரு பெரும் தலைவர்களின் திருவுருவச் சிலைகள் நமக்கு எதிர்காலத்தில் ஒழுக்கத்தைப் போதித்து உன்னதம் பெறுவதற்குப் பயன்படும்" என்றார்.

அடுத்து உரையாற்றிய அ.இ.அ.தி.மு.க. பொதுச் செயலாளர் திரு ப. உ. சண்முகம் அவர்கள், "நான் திருவண்ணாமலை நகர மன்றத் தலைவராக இருந்த போது காமராஜர் அவர்களுக்கு வரவேற்பளித்தேன். 'நான்என்ன மந்திரியா, எதற்காக எனக்கு வரவேற்புத் தருகிறாய்' என்று கேட்டார். அவர் ஒரு தமிழர்-சிறந்த உழைப்பாளி என்பதற்காக அந்த வரவேற்பை நான் அளித்தேன்" என்று குறிப்பிட்டார்.

அடுத்து உரையாற்றிய திரு ஜி. கிருஷ்ணராஜ் எம். எல். ஏ. "மாற்றான் தோட்டத்து மலரையும் மதிக்க வேண்டும் என்று அண்ணா அவர்கள் குறிப்பிட்ட தற்கிணங்க இன்று விஜயராகவாச்சாரியார் - காமராஜர் ஆகிய காங்கிரஸ் தலைவர்களின் சிலையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைக்கிறார்கள்" என்று தெரிவித்தார்.

அடுத்து, திரு சி. பழனியப்பன் எம். பி. உரையாற்றுகையில், "இரு பெருந்தலைவர்களுக்குச் சிலை எடுத்துள்ள இந்தச் சர்க்காரை நான் பாராட்டுகிறேன்" என்றார்.

அடுத்து, திரு எம். ஆறுமுகம் எம். எல். ஏ. உரையாற்றுகையில், "உயிரோடு இருப்பவர்களின் சிலையைத் திறந்துவைக்க மாட்டேன் என்று சொல்லி வந்த பண்டித நேரு அவர்களே, சென்னை அண்ணா சாலையில் உருவாக்கப்பட்ட காமராஜர் சிலையை அவர் வாழ்ந்த காலத்திலேயே திறந்து வைத்தார் என்றால் காமராஜரின் பெருமை சொல்லத் தரமன்று. அதே போல் விடுதலைப் போராட்டத்தில் வழக்கறிஞர் தொழிலையே தூக்கி எறிந்து விட்டுப் போராட்டத்தில் கலந்து கொண்டார் விஜயராகவாச்சாரியார். இந்த இருவருக்கும் இங்கே சிலை எடுக்கப்படுவது வெகு பொருத்தம்" என்று தெரிவித்தார்.

அடுத்து உரையாற்றிய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு எச்.வி. ஹண்டே குறிப்பிட்டார்:

"1852-ல் பிறந்த grand old man of India என்றழைக்கப்பெற்ற சேலம் விஜயராகவாச்சாரியார் 92 ஆண்டுகள் இந்த நாட்டுக்குச் சேவை செய்திருக்கிறார். 1855-ல் நடைபெற்ற முதல் இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார். 1895-ல் எம்.எல்.சி. யாக இருந்திருக்கிறார். சேலம் கொடுத்து வைத்த நகரம். பல பெரிய மனிதர்களை உலகுக்குத் தந்திருக்கிறது. ராஜாஜி போன்ற பெருமக்கள் இங்குதான் கோன்றியுள்ளார்கள்.

அடுத்து, சட்டமன்ற மேலவைத் தலைவர் டாக்டர் சிலம்புச் செல்வர் தமது தலைமை உரையில் தெரிவித்ததாவது:

"இந்திய காங்கிரஸ் மகா சபையில் முதல்முதல் தலைமை வகித்தவர் சி. விஜயராகவாச்சாரியார். கடைசித் தலைவர் காமராஜர். 1920-ல் நாகபுரியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் தலைமை ஏற்று அவர் வாசித்த தீர்மானம்தான் நாட்டை மாற்றியது. பதவியில் இருப்பவர்கள் பதவியை விட்டு விலக வேண்டும் என்ற தீர்மானம்தான் அது.



"முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்கும் விரோதம் ஊட்டி, கலவரத்தை ஏற்படுத்தி விட்டார் என்று அவர் மீது கிரிமினல் குற்றச்சாட்டு தொடரப்பட்டது. அதன் காரணமாக 10 ஆண்டுக் கடுங்காவல் தண்டனை அவருக்கு வழங்கப்பட்டது. அதனை எதிர்த்து, தாம் நிரபராதி என்பதைத் நிரூபித்து, விடுதலை பெற்றதுடன், வழக்கில் இணைக்கப்பட்டிருந்த வேறு எட்டுப் பேர்களுக்கும் விடுதலை வாங்கித் தந்தார். அதுமட்டுமல்ல, தன் மீது அபாண்டமான குற்றச்சாட்டுக் கூறியதற்காக மானநட்ட ஈடு வழக்குத் தொடர்ந்து 10 ஆயிர ரூபாய் பெற்றார்.

"இங்கே கற்சிலைகள் திறக்கப்படவில்லை. தேசத்தின் சரித்திர உருவங்கள் திறக்கப்படுகிறார்கள்"

சிலம்புச் செல்வர் தாம் சென்னைக்குப் புறப்பட வேண்டியிருப்பதால் - 'நான் மேடையில் இருக்கும்போதே சிலைகளைத் திறந்து விட்டால் அவற்றைத் தரிசித்துக் கிளம்புவேன்' என்ற வேண்டுகோளை மாண்புமிகு முதல்வரிடம் தெரிவிக்கவே, உடனே மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிலைகளைத் திறந்து வைத்தார்.

பின்னர், திரு. மு. க. மதுஇன்மாயில் எம்.எல்.ஏ., உரையாற்றுகையில் கூறினார்:

"ஒருவர் மெத்தப் படித்த மேதை; மற்றொருவர் படிக்காத மேதை. இருவரும் நாட்டு விடுதலையில் முனைப்பாக ஈடுபட்டு அரசியலில் செயலாற்றியவர்கள்."

பின்னர் திரு குமரி அனந்தன் எம். எல். ஏ. உரையாற்றுகையில் தெரிவித்தார்;

"இருவரின் பிறந்த ஊரும் சேலம் இல்லை. ஆனால் இருவரும் நிலையாக நிற்கும் இடம் சேலம். தாங்கள் இறந்த பின்னும் மக்களின் நெஞ்சங்களில் வாழ்பவர்கள்தான் அமரர் ஆவர்.

"விஜயராகவாச்சாரியார் தமது 12வது வயதிலே படிப்பைத் தொடங்குகிறார், காமராஜர் தமது 12வது வயதிலே படிப்பை நிறுத்துகிறார்.

"விஜயராகவாச்சாரியாரின் தலைமையில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில்தான், 'வந்தே மாதரம்' பாடல் ஒலித்தது.

"பொன் விளைந்த களத்தூரில் பிறந்த விஜயராகவாச்சாரியார் மதுராந்தகத்தில் படித்தார். சேலத்தில் வழக்கறிஞர் தொழில் பார்த்தார்.

"பூப்பெய்திய பின்னர்தான் பெண்கள் மணம் செய்து கொள்ள வேண்டும் என்று ஸாரதா சாஸ்திரியார் கொண்டு வந்த தீர்மானத்தை விஜயராகவாச்சாரியார் ஆதரித்தார்."

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் விஜயராகவாச்சாரியாரின் பேரருமான திரு ஆர். டி. பார்த்தசாரதி நன்றியுரை கூறும்போது, "இந்த நாளைப் பொன்னாளாகக் கருத வேண்டும். எந்த அரசும் சாதித்திருக்க முடியாத காரியத்தை இந்த அரசு செய்திருக்கிறது. இளைய சமுதாயத்தினர் தியாகச் செயல்களைச் செய்ய இது போன்ற விழாக்கள் பயன்படும்" என்று குறிப்பிட்டார்.

சிலம்புச்செல்வர் தமது தலைமைப் பொறுப்பை மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்களிடம் ஒப்படைத்துச் சென்றார். அதன்பின்னர், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"அந்த நாளில் மிகச்சிறந்த வழக்கறிஞராக விளங்கியவர் விஜயராகவாச்சாரியார். ராஜாஜி அவர்களைத் தமது சீடராக ஏற்றுக் கொண்டார் அவர். உன்னதமான உள்ளம் உடைய அவர் இளைய தலைமுறையினருக்கு வழிகாட்டிய தலைவராகத் திகழ்ந்தார்.

"விஜயராகவாச்சாரியார் தமது கருத்துக்களைத் தேசத் தலைவர்களுக்கெல்லாம் கடிதத்தின் மூலம் விடாது எழுதி வந்திருக்கிறார். படேல், கோகலே போன்ற அனைவருடனும் கடிதத் தொடர்பு வைத்திருந்திருக்கிறார். சுயராஜ்யம் என்ற தத்துவத்தை உருவாக்கி வளர்த்த ஒப்பற்ற தலைவர் அவர்.

"காங்கிரஸ் தலைவர் வரதராஜுலு வீட்டில் நடைபெற்ற ஒரு விழாவின்போது அங்கிருந்த குருப்போட்டோ ஒன்றைக் காண்பித்தார் காமராஜர். அதிலே தந்தை பெரியாரின் அருகில் காமராஜர் இருந்தார். அதைப் பார்த்த பெரியார், "அப்ப நீ நம்ம ஆளு! உன்னை ஆதரிப்பது எனது கடமை" என்று சொல்லி, அன்று முதல் காமராஜரை ஆதரித்துப் பேசினார்; பச்சைத் தமிழர் என்று பாராட்டுரை வழங்கினார்."

விழாப் பேருரை ஆற்றிய மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். தெரிவித்தார்:

"ஒரு உண்மையை நாம் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு மனிதனும் உயிரோடு இருக்கும்பொழுது பாராட்டப்படுவதை விட மறைந்த பின் எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின் மக்களால் பாராட்டப்படுவதுதான் முக்கியம். புகழ்பெற்ற தலைவர்கள் மக்களுக்காக மாபெரும் சேவை செய்திருக்கிறார்கள்.

படிப்பு எனப்படுவது பி.ஏ., எம்.ஏ. பட்டம் பெறுவது மட்டுமல்ல - தங்களை உலகுக்குச் சொந்தக்காரர்களாக ஆக்கிக் கொள்வதற்குத்தான் காமராஜர் படித்தார். இங்கே அவர் கடவுள் போல நின்று கொண்டிருக்கிறார்.

'மறைந்த தலைவர்களை மதிப்பது வேறு; அவரது கொள்கைகளை ஏற்றுக் கொள்வது என்பது வேறு. இங்கே இந்தச் சிலை வைப்பது பற்றிப் பிரச்சினைகள் எழுந்தன. அரசு அதனைச் சுமுகமான முறையிலே தீர்த்து-தனது சொந்தச் செலவிலே பெருந் தலைவர்களுக்குச் சிலை எடுத்துள்ளது.

"இப்போது நாட்டில் அரசு போடும் ஆணைகளை எதிர்த்துப் போராட்டம் நடத்தப் பெறுகிறது. எதற்கெடுத்தாலும் போராட்டம் என்றால் அது போராட்டமாக இருக்காது, ஆங்கிலத்தில் சொல்வார்களே Bore என்று, அந்த 'போர்' ஆட்டமாகத்தான் அது முடியும். இந்த நிலை, நாட்டின் எதிர்காலத்துக்கு நல்லதல்ல.

"நான் ஏன் பிறந்தேன்" என்று ஒரு முறை கட்டுரை எழுதினேன்; பலர் கேலி செய்தார்கள். ஒரு மனிதன், தான் பிறருக்குப் பயன்படும்படி என்னென்ன காரியங்கள் செய்தேன் என்று எண்ணிப் பார்க்க அவனையே இந்தக் கேள்வியைக் கேட்டுக் கொள்ள வேண்டும். நாம் ஒவ்வொருவரும் இந்தக் கேள்வியைக் கேட்டுக் கொள்ள வேண்டும்.

"அவரவர் மதத்துக்குரிய கோட்பாடுகளின்படி வாழ்க்கை நடத்துகிறார்களா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இங்குச் சிலையாக உள்ள தலைவர்கள், தாங்கள் பிறந்த காரணத்தை இந்த உலகுக்குச் சொல்லிச் சென்றிருக்கிறார்கள்.

"இந்த நாட்டிற்குப் பூரண சுதந்தரம் கிடைப்பதற்காக ஒத்துழையாமை இயக்கம் நடத்த வேண்டும் என்ற யோசனையைத் தெரிவித்திருக்கிறார் விஜயராகவாச்சாரியார்.

"அத்தனை கட்சிக்காரர்களும் இங்கு வந்து கலந்து கொள்வது பெரியவர்களைப் பாராட்டுவதற்காகவே தவிர, எங்களைப் போற்றிக்கொள்வதற்கு அல்ல. மறைந்த தலைவர்கள் எந்தவிதப் பிரதிபிரயோசனமும் எதிர்பாராது பணியாற்றியவர்கள்! இந்த இடத்தில் எதிர்காலத்தில் நமக்குச் சிலை வைக்கப்படும் என்று விஜயராகவாச்சாரியார் கற்பனையாவது செய்திருப்பாரா?

"புகழை நாம் தேடிப் போகக் கூடாது. புகழ் நம்மைத் தேடி வரவேண்டும். உள்ளத்தில் தோன்றுகின்றவற்றை எல்லாம் செய்யக் கூடாது. மக்களுக்கு எது பயனுடையதாக இருக்குமோ அதைச் செய்யவேண்டும்".

மாண்புமிகு முதல்வரின் உரைக்குப் பின்னர், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இரா. வரதராஜலு இ.ஆ.ப. நன்றி தெரிவித்தார்.

— த.பி.

புதுக்கோட்டையில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சிப் பணிகள்

புதுக்கோட்டை மாவட்ட ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1984-85ஆம் ஆண்டுக்கான திட்டம், இம் மாவட்டத்திலுள்ள 13 ஊராட்சி ஒன்றியங்களுக்குமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மொத்த நிதி இலக்கு ரூ. 104 லட்சங்கள். இந்தத் தொகைக்கான அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் மாவட்டத்திலுள்ள 13 ஊராட்சி ஒன்றியங்களுக்கும், ஒரு ஊராட்சி ஒன்றியத்துக்கு ரூ. 3 லட்சம் வீதம் செலவிடப்படும்.

ஒரு ஊராட்சி ஒன்றியத்துக்கு 600 குடும்பங்கள் வீதம் மொத்தம் 13 ஊராட்சி ஒன்றியங்களுக்கு 7,800 குடும்பங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் புதியதாக இவ்வாண்டுக்கு 2,292 பால் மாடுகள் மற்றும் 1,252 ஆட்டுமந்தைகளும் வழங்கப்பட உள்ளன. மேலும் 15 பன்றி வளர்ப்பும் இவ்வாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. மற்றும் உழவு மாடுகள் வழங்குதல், மாட்டு வண்டி வழங்குதல், சிறு தொழில்கள் நடத்துதல் ஆகியவற்றின் கீழ் 4,235 குடும்பங்கள் பயன்பெற உள்ளன. ஆகஸ்டுத் திங்கள் முடிய ரூ. 9 லட்சங்கள் மானியமாக வழங்கப்பட்டுள்ளன. 337 குடும்பங்கள் நிதி உதவி பெற்றுள்ளன.

யார் காவல்?

நோய்களிலிருந்தும் பூச்சிகளிலிருந்தும் பயிர்களைக் காத்து விளைச்சலை அதிகமாக்க சிலந்திப் பூச்சிகளின் துணையை நாடுகிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

பயிர்களைத் தாக்கும் பூச்சிகளைச் சிலந்திகள் எப்படிக் [illegible]கின்றன என்பதை ஆரா[illegible]தற்காக விவசாய விஞ்ஞா[illegible]கள் எலுமிச்சைத் தோ[illegible] 130 வகை சிலந்திகளின் நடவடிக்கைகளை மிகவும் நெருக்கமாகக் கண்காணித்தனர்.

பருத்திப் பயிர்களை நாசம் செய்யும் புழுக்களைச் சில வகைச் சிலந்திகள் கொன்று விடுகின்றன. எலுமிச்சை இனத்தைச் சேர்ந்த பழ வகைகளைத் தாக்கும் சில பூச்சிகளை வேறு வகை சிலந்திகள் அழித்து விடுகின்றன.

சிலந்திப் பட்டாளத்தை முதலில் வயல்வெளிகளில் ஏவி விட்டால் பூச்சி தொல்லி மருந்தைத் தெளிப்பதைத் தவிர்க்கலாம், அல்லது தள்ளிப் போடலாம் என்று விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

இதற்காக எந்த வகைச் சிலந்திகளை அதிகமாக வளர்க்கலாம் என்றும் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். அதற்குத் தகுந்த சூழலை உருவாக்கவும் முனைகின்றனர், அமெரிக்க விஞ்ஞானிகள்!

அச்சிடும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

85341

அண்ணா கூட்டுறவு நூற்பாலை
ஆண்டிப்பட்டி, மதுரை மாவட்டம்-626 512.

18-7-1984 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர், அவர்களால் திறந்து வைக்கப்பட்டது என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இது தமிழகத்தில் நிறுவப்பட்டுள்ள முதல்
பருத்தி விவசாயிகள் ஆலை.

பருத்தி விவசாயிகளே!

ஆலையில் பங்கு மூலதனம் எடுத்து,பருத்தி விவசாய மேம்பாட்டிற்கும், விற்பனைக்கும் புதுப்பாதை அமைத்திடுவீர்!

சமூக, பொருளாதாரத் தொழில் ரீதியாகப் பின்தங்கியுள்ள ஆண்டிபட்டி பகுதியின் கூட்டுறவுத் தொழில் வளர்ச்சிக்குக் கூடித் துணை நிற்பீர்!

நெசவாளர்களே!

எங்கள் அண்ணா கூட்டுறவு நூற்பாலையில் தயாராகும் தரமான 40ம் எண் சிட்டம் மற்றும் கோன் நூல் வாங்கிப் பயன் பெறுவீர்.

கி. ராஜமாணிக்கம், எம்.ஏ.,
மாவட்ட வருவாய் அலுவலர்/
நிர்வாக இயக்குநர்

வி. சந்திரலேகா, இ.ஆ.ப.
மாவட்ட ஆட்சித் தலைவர்/
தலைவர்